# அறுவகை இலக்கணம்

ழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

UG5265
R007E04
UG 5265

வண்ணச்சரபம்

**தவத்திரு தண்டபாணி சுவாமிகள்**

இயற்றிய

# அறுவகை இலக்கணம்


பதிப்பும் உரையும்

**புலவர். ப. வெ. நாகராசன்**

ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்



தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ISBN – 81–7090–175–8

தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு: 139

திருவள்ளுவர் ஆண்டு 2022 வைகாசி, சூன் 91

நூல் : அறுவகை இலக்கணம்

பதிப்பாசிரியர் : புலவர் ப.வெ. நாகராசன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : ரூ. 100/ –

அச்சு : கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்
அண்ணாமலைநகர். 608 002.

# உள்ளுறை


1. அணிந்துரை v

2. பதிப்பு முன்னுரை ix

3. சுருக்கக் குறியீட்டு விளக்கம் xxxi

4. அறுவகை இலக்கணம் மூலமும் உரையும்

   1. பாயிரம் 1

   2. எழுத்திலக்கணம் 7

   3. சொல்லிலக்கணம் 124

   4. பொருளிலக்கணம் 190

   5. யாப்பிலக்கணம் 259

   6. அணியிலக்கணம் 375

   7. புலமையிலக்கணம் 438

5. சாத்துகவிகள் 543

6. நூற்பா முதற்குறிப்பு அகராதி 560

7. மேற்கோள் இலக்கண நூற்பா அகராதி 573

8. மேற்கோள் இலக்கியப் பாவகராதி 579

9. பிழையும் திருத்தமும் 587

முனைவர். சி. பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்-613 005

# அணிந்துரை

வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் சென்ற நூற்றாண்டின் தமிழ்ப் பெருமக்களுள் தலைசிறந்தவராவார். முருகபத்திக்கு அவர் செய்துவந்த தொண்டைவிடத் தமிழ் மொழிக்கு அவர் ஊட்டிய வாழ்வும் வளமும் உயர்ந்து நின்றன எனலாம். அவர் புலவர் புராணம், அறுவகை இலக்கணம், ஏழாமிலக்கணம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம் எனத் தொடரும் பல புதிய நூல்களைத் தாமே இயற்றியும் தம்கைப்படவே ஓலைச் சுவடிகளில் எழுதிவைத்தும் பாடஞ்சொல்லியும் வெளியிட்டு, தமிழ்மொழியை வளம்பெறச்செய்தனர்.

அறுவகை இலக்கணம் என்னும் இவ் விலக்கண நூல் ஊ தம் தமிழிலக்கிய இலக்கணப் பயிற்சிக்கு மிகச்சிறந்த எடு காட்டாகத் திகழ்வதாகும். இரு பதிப்புகளைக் கண்ட இ இன்று உரையுடன் வெளிவருவது பெரிதும் வரவேற்ச ஒன்றாகும்.

தமிழிலக்கண வரலாற்றில் சுவாமிகளுக்குத் த சிறப்பிடம் அமையுமாறு இந்நூல் திகழ்கிறது. பாக்களிலும் சந்தப்பாக்களிலும் பெரிதும் ஈடுபா சுவாமிகள் முறையான இலக்கண நூல்களை திருப்பது தமிழர் செய்த தவப்பயனே எனலா

இவ் விலக்கணம் இன்றைய மொழி வளர் யமையாது வேண்டும் செய்திகளைத் தாங்கியு அறிஞர் பலரின் சாத்துகவிகள் காட்டுகின்ற

'அறம்பிழை படாவிதத்து அறுவகை இ
'மெய்வைத்த நாவினன் மேதகு முனத்

'தொல்காப் பியன்ஆம் தூய்மை யாளனும்
அறைந்த இலக்கணம் ஐவகை தம்முள்
மறைந்தன குறைந்தன மாநிலத்து இந்நாட்கு
இன்றி யமையாது இருக்க வேண்டுந'

என்றும் பலவாறு ஆசிரியரைப் பற்றியும், நூலைப் பற்றியும் விதந்தோதப்படுவது சிறந்த அறிமுகங்களாகும்.

தமிழ்மொழியின் மிக நெடும் பண்டைய வரலாற்றில் இடம்பெறும் அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைத் தொடர்ந்து காக்கைபாடினியம், யாப்பருங்கலம், காரிகை, பாட்டியல் நூல்கள், அகப்பொருள், அணி நூல்கள் எனப் பல இலக்கண நூல்கள் தோன்றின. அவையனைத்தும் தமிழ் மொழியின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களின் அமைதிபற்றியே சிந்தித்தன. சுவாமிகளோ இவற்றுடன் புலமையிலக்கணம் என்னும் இலக்கணத்தையும் உடன் இணைத்துத் தமிழிலக்கணம் என்பது அறுவகைப்பட்டது எனத் துணிந்து கூறுகிறார். அவரது துணிவு தமிழிலக்கண இயல்களை மேலும் விரிவுபடுத்தத் தூண்டுகோலாய் அமையும் என்றால் அது மிகையாகாது.

ஆறாவது இலக்கணமாக விளங்கும் 'புலமை இலக்கணம்' ஒரு வரலாறு போல் காணப்படும் சிறப்புடையதாம். சுவாமிகளின் புலவர் புராணம் தோன்றியிராவிடின் தமிழ்ப் புலவர் பலரின் வரலாறுகளும் மறைந்தொழிந்த தமிழ்நூல்கள் போலவே மறைந்திருக்கும். புலவர் புராணத்தின் பிழிவை இலக்கணமாக்கி இவ்வியலில் அவர் புகுத்தியிருப்பது தமிழ் மொழிக்கு ஒரு புதுவரவாகும். இவ்வரவு பிறமொழிகளுக்கும் ஒரு சிறந்த தூண்டுகோலாய் - எடுத்துக்காட்டாய்த் திகழும் சிறப்புடையதாம்.

ஏற்கெனவே பல நூல்களில் விதந்தோதப்பட்ட ஐவகை இலக்கணங்களும் சுவாமிகளின் கைபட்டுப் பல்வேறு வகையில் தெளிவுபெற்றிருப்பதை இந்நூலுள் காணலாம். எழுத்துகளின் வரிவடிவை இன்றைய அறிவியற்பயிற்சிக்கு ஏற்பச் சொற்சித்திரமாக்கி வடித்துத்தந்துள்ளமை சிறந்த தெளிவுக்கு அடையாளமாகும்.

ஐகாரத்தை எழுதும் முறைபற்றியும், ஒலிக்கும் முறை பற்றியும் அவர் விளக்கியிருப்பது நுட்பமாகப் பாராட்டத் தக்கதாகும்.

'ஊகாரத்து இரண்டாம் எழுத்துஎனத் துவக்கி
வலத்தில் நீட்டாது வளைத்துஇடங் கொணர்ந்து
கீழுற இருதரம் மேல்நோக்கி வளைத்தல்
ஐகாரம்; நுனிநா அடிப்பல் உட்புறத்து
ஒன்றத் துருத்தியில் உயர்ந்துகீழ் அடங்கி
ஒலிக்கும் என்பது உணர்ந்தோர் இயல்பே' -1:11

இவ்வாறே பிற இலக்கண நூல்களில் காணப்படாத நுண்ணிய செய்திகளையும் ஒவ்வோர் இயலிலும் விளக்கியிருப்பது நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாம்.

சுவாமிகளின் தமிழ்ப்பற்றுக்கு அளவில்லை. தமிழறியாத் தெய்வம் ஒன்று இருந்தால் அது பேயைவிடத் தாழ்ந்தது என்று துணிந்து கூறுகிறார்.

தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதுஎனில்
அஃதுஉணர் அலகையில் தாழ்வுஎனல் அறமே -6:30

இந்நூற்பாவுக்கு இவ்வுரையாசிரியர் தரும் விளக்கம் ஒன்றே அவர்தம் புலமையை வியப்பதற்குப் போதுமானதாகும்.

'தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் இலது என்பதே உண்மை; அதனால்தான் உளது எனில் என்றார். முன் நூற்பாவில் தமிழறிவற்ற வேந்தனைத் தாழ்த்திக்கூறிய இவர் இதில் தெய்வத்திற்கே தமிழுணர்ச்சி இல்லாதிருக்குமானால் அது பேயைவிட இழிந்ததே எனக் கூறுகிறார். இந்நூலாசிரியரின் தாய்மொழிப்பற்று இவற்றால் குன்றிலிட்ட விளக்காய் வெளிப்படுகிறது.

'தமிழ்மொழி, தன்னை நன்கு கற்றால் மனிதர்களையே தேவர்களின் தேவராகச் செய்துவிடும் என்பார் இவர்.

'அத்தனையொத்துத் தவத்தோர்பலர்க்கும் அரசன்என்னும் வித்தகப் பேர்பெற்று வீறார் பொதியையில் மேயமுனி முத்தம்ஒப்பாள் அருளாற்செய்தது ஆம்தமிழ் மூதுலகத்து எத்தகவோரையும் தேவர்தம் தேவர் எனச்செய்யுமே' (தமிழ் அலங்காரம் 96). இவ்வாறு கூறுவதாலேயே தமிழ்ச் சுவை அறியாத் தெய்வம் இருக்கமுடியாது எனத் தெளிவாகிறது' (-பக்.461)

இத்தகு அரிய நூலுக்கு மரபு வழுவாமல் புத்துரை எழுதிப் பதிப்பித்திருக்கும் புலவர் ப. வெ. நாகராசன் அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன். தமது வடமொழிப்புலமை, தத்துவ சமய நூற்புலமை ஆகியவற்றுடன் தமிழ்ப் புலமையைக் குழைத்து அவர் செய்திருக்கின்ற இவ்வுரை பல்லாற்றானும் சிறந்து விளங்குகின்றமையை இந்நூலை ஓதுவார் அனைவரும் உணர்வர். இவ்வுரையாசிரியர், இயல்பாகவே கௌமார மடத்தின் தொடர்பும் ஈடுபாடும் கொண்ட சிறப்பால் மிகுந்த ஈடுபாட்டுடனும் உழைப்புடனும் இவ்வுரையைச் செம்மையாக்கி யுள்ளார். நூலுடன் இணைந்த அகராதிகள், சாத்துகவிகள் முதலியன இந்நூலை மேலும் பொலிவு பெறச் செய்கின்றன என்றால் அது மிகையாகாது.

இவ்வுரையாசிரியர் தமக்குத் தெளிவில்லாதவிடத்தில் நேர்மையாக (சான்று: புலமையிலக்கணம்: 139) 'இந்நூற்பாவில் இடம்பெற்ற வரலாறு விளங்கவில்லை' என வெளிப் படுத்தி, அவ்விடங்களிலெல்லாம் பிறரை ஆய்வு செய்யத்தூண்டி யிருப்பது சிறந்த பதிப்பறமாகப் பாராட்டத்தகுவதாம்.

இப்பெரிய நூலைத் தமிழ்மொழியின் வாழ்வும் வளமும் கருதித் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுவதில் பூரிப்படைகிறது என்றால் அது முற்றிலும் தகுவதாகும். தமிழ்ப் பெருமக்களும் இந்நூலை வரவேற்று ஆய்வர் என நம்புகிறேன்.

27-10-1990 சி. பாலசுப்பிரமணியன்,

# பதிப்பு முன்னுரை

**தமிழ் இலக்கண வளர்ச்சி**

தமிழின் இலக்கணம் மிகத் தொன்மையான ஒன்றாகும் தமிழில் இலக்கணம் என்றால் மொழி அமைப்பை மட்டும் கூறுதல் ஆகாது. மொழியோடு நூல்களின் வடிவம், நுதல் பொருள், மக்கள் வாழ்வு ஆகிய அனைத்துமே இலக்கணத்தில் ஆராயப்படும். "தமிழ் மொழியில் இலக்கணம் என்பது மொழியை மாத்திரம் ஆராய்வதாக அன்றி அம்மொழியினாலான இலக்கியம், அவ்விலக்கியத்தின் பொருள், வடிவம் ஆகியனவற்றையெல்லாம் ஆராயும் ஒரு நெறியாக அமைந்த(து)"[1] என்னும் அ.சண்முகதாஸ் அவர்களின்கருத்துஓர் அடிப்படை உண்மையாகும். எனவேதான் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று இயல்களாக ஆராயப்பட்டது.

தொல்காப்பியச் செய்யுளியலுக்கு இணையாகக் காக்கை பாடினியாரின் யாப்புமரபு ஒன்றும் பண்டைக் காலத்தில் வழக்கில் இருந்திருக்கவேண்டும். இந்த யாப்புநெறி நாளடைவில் மிகச் சிறப்பாக வளர்ந்து பாக்கள் இனங்களோடு பல்கிப் பொலிவடைந்த காலத்தில் யாப்பிலக்கணம் தனியே விரிவடைந்து தமிழ் இலக்கணம் நான்கு கூறுகளை உடையதாயிற்று. இந்த நான்கும் பெரும்பாலும் தமிழிற்கே உரிய இலக்கணத்தை ஆராய்தலாம். வீரசோழியத்தின் வடமொழி வழிப்பட்ட யாப்பியல், இலக்கியம் கண்டு இயம்பப்பெற்ற இலக்கணச் செந்நெறியன்மையின் அதனைக் கருத்தில் கொள்ள வேண்டுவதின்று.

அகப்புறத்துறைச் செய்திகளைச் சிறுசிறு வரலாற்றுத் துணுக்குகளோடு சேர்த்துப்பாடும் சங்கத் தனிப்பாடல்கள் கீழ்க் கணக்கு நூல்களாகவும் காப்பியங்களாகவும் மலர்ந்தன. சமய உண்மைகளும் நீண்ட கதைகளும் பாடுபொருளாயின.

---

1. தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - அ. சண்முகதாஸ் பக். 31

இதனால் படைப்பாளிக்கு அதிகச் சுதந்திரம் கிடைத்தது. இலக்கியத்தில் புதிய உத்திகள் தோன்றின. தொல்காப்பிய உவமவியலுக்குள் இவை அடங்கவில்லை. எனவே இவற்றை ஆராயத் தனியாக ஓர் இயல் தேவைப்பட்டது. அப்போது ஏற்பட்ட வடமொழியின் கூட்டுறவும் துணைக்காரணமாகத் தண்டியலங்காரம் பிறந்தது. தமிழில் அணியிலக்கணம் என்னும் ஐந்தாவது அதிகாரம் முகிழ்த்தது. இப்பிரிவை அனைத்து மொழிகளுக்கும் பொதுவான ஒன்று எனக் கொள்வதில் தவறில்லை.

தமக்கெனக் கட்டுக்கோப்பான வடிவமைப்பைப் பெற்ற சிற்றிலக்கிய வகைகள் தமிழில் தோன்றியபோது பாட்டியல் நூல்கள் பிறப்பெடுத்தன. பாட்டியல் நூல்களிலும் இலக்கியம் கண்டு இலக்கணம் வகுக்காமல் சில கற்பனைகள் கலந்துவிட்டதென்பது உண்மையே. எனினும் பாட்டியலில் வடமொழிச் செல்வாக்குக் குறைவே. ஆனால், கோதுமையை இறக்குமதி செய்யும்போது பார்த்தீனியக் களையும் சேர்ந்து இறங்கி விடுவதைப் போலத் தேவையற்ற ‘பொருத்தவியல்’ என்னும் ஒன்று அணியியலோடு சேர்ந்துவந்து பாட்டியலில் ஒட்டிக் கொண்டது. பாட்டியலும் பொருத்தவியலும் யாப்பிலக்கணத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றன. இதுவே மூன்றிலக்கணம் ஐந்திலக்கணமாக விரிந்த வளர்ச்சியின் வகை.

**புலமை இலக்கணம் ஏன்?**

மிகப் பிற்பட்ட காலத்தில் தமிழக வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. தமிழ்ப் பண்பாட்டையும், கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வந்த தமிழ் மன்னர்களின் ஆட்சி மறைந்தது. வடமொழி மட்டுமன்று; இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியேயிருந்து வந்த பல மொழிகளும் தமிழை ஒவ்வொரு வகையில் பாதித்தன. சான்றோனாதலும் இறைவன் திருவடியை யடைதலுமே கல்விப்பயன் என்னும் நிலைமாறிக் கல்வியும் ஒரு தொழிலாகிவிட்டது. ‘‘வயிற்றின் கொடுமையால் நாழி அரிசிக்கே பாட்டிசைத்துப் போய்விற்கும்’ அவல நிலையைப் பல புலவர்களின் வரலாற்றில் காணலாம். சில சமயங்களில் தமிழ் படித்தவன் ‘‘தடமுலை வேசையராகப்

பிறக்காமல் தையலர்பால் சந்து நடக்கக் கற்காமல் சனியான தமிழ் படித்துத் தொலைத்தோமே'' என ஏங்கியதும் உண்டு.

சமுதாயத்தில் தமிழறிந்து போற்றும் தலைமையில்லை; தரமான தமிழ்க் கல்விக்குத் தக்க மதிப்பில்லை. அப்போதும் சில சமயநிறுவனங்கள் சிறந்த தமிழ்ப்பணி யாற்றிவந்தன. ஆனால், பொதுவாக இலக்கியங்கள் என்னும் நினைவாலன்றிச் சமயச் சார்புடையனவாகவே பெரும்பாலும் அவை செயற் பட்டன. இது இயல்பானதே.

எனவேதான் தமிழ்ப்புலவன் அரசன், சிற்றரசன், பெரு நிலக்கிழார் என விளங்கிய செல்வர்களை அண்டி வாழவேண் டியவன் ஆனான். பெரும்பாலும் அவர்கள் எளியோரை வாட்டி, வலியோரை வாழ்த்தி, அதிகாரத்திற்கு அடிவருடி, விளம்பரத் திற்கு அறம்புரிந்து, பகட்டாக வாழ்பவர்களாகவும், தன்னை எப்போதும் நான்குபேர் புகழ்ந்துகொண்டே இருக்கவேண்டும் என ஆசைப்படுபவர்களாகவும் இருந்தனர். இவர்களைச் சார்ந்திருந்த புலமைக் கும்பலும் இத்தகையோரை எவ்வளவு உயர்த்திப் புகழமுடியுமோ அவ்வளவும் புகழ்ந்து பாடித்தீர்த் தது. உண்மைக்கும்இவர்கள் கூற்றுக்கும் சற்றும் தொடர்பே இருக்கவில்லை. அகப்பொருளின் "பொய் பாராட்டல்'' என்னும் துறை இவர்களுக்கே மெய்யாகப் பொருந்தும். இது மட்டுமன்று. சமுதாயப் பொறுப்புணர்ச்சியோ கடமையோ இல்லாததால் இச்செல்வர்களில் பெரும்பாலோர் இன்பத் துறையில் மிக எளியராக இருந்தனர். இவர்களைப் பற்றிய இலக்கியமும் காமக் களஞ்சியமாக இருந்ததில் வியப்பேது?

இதனால்தான் இத்தகையவர்களைப் பாட்டுடைத் தலை வராகக்கொண்டு பாடிய புலவர்களைத் தரமிக்க பல சான் றோர் இகழ்ந்தனர். அவர்கள் இகழ்ந்ததற்குக் காரணம் மனிதனைப் பாடினர் என்பது அல்ல; பொய்யையும் இழிவை யும் பாடினர் என்பதேயாகும். மனிதர்களைப் புகழ்ந்த சங்கப் புலவர்கள் எப்போதும் மதிக்கப்படுகின்றனர். மனிதர்களையே ஆசானாகவோ அடியாராகவோ போற்றிய சமயப் புலவர் களும் பெருமையாகப் பேசப்படுகின்றனர். ஆனால் ஊதியம்

கருதி உயர்வற்றவர்களை வானளாவப் புகழ்ந்தும், வரம்பு மீறிய காமச்சுவை நாறவும் பாடிப் பிழைப்பை நடத்திவந்த புலவர்களே பழிக்கப்பட்டனர். தமிழ்ப்புலவனின் மதிப்பு சமூகத்தில் குறைந்துவிட்டது.

ஒரு புலவன் மற்றொரு புலவனைக் கண்டால் இவன் எங்கே நமக்குப் போட்டியாக வந்துவிடுவானோ என அஞ்சினான். இவ்வச்சம் பகையாக உருக்கொண்டது. இப்போட்டி, அறிவுசார்ந்த புலமைப்போட்டியாக இல்லாமல் வயிற்றுப் பாட்டுப் பிரச்சினையாக இருந்ததால் பகைமை உணர்ச்சி ஆழங்காற்பட்டது. ஓர் அறிஞன் மற்றொருவனின் அறிவாற்றலை மதிக்காமல் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவனை மட்டம்தட்டவே முனைந்தான். இது புலமைக் காய்ச்சல் எனவும் பெருமையாகக் கூறப்பட்டது. எப்படியோ ஒரு பணக்காரனின் அல்லது சில செல்வர்களின் தயவைச் சம்பாதித்து வாழும் ஒருசாரார் – தொழில்முறைக் கவிஞர் எனப் பெருமையாகச் சொல்வோமே – புலவர்களாகத் திரிந்தனர்.

இன்னொரு சாரார் வாழ்க்கைப் பிரச்சினைகள் இல்லாமலோ அல்லது அவற்றைப்பற்றிக் கவலைப்படாமலோ அமைதியாகத் தத்துவ ஆராய்ச்சியிலும் தோத்திரங்களிலும் இலக்கணக் கடாவிடைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களால் சமுதாயத்திற்குத் தீமைகள் ஏதுமில்லை எனினும் சாமானிய மானவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு இவர்களால் உடனடிப் பயன்களும் இருக்கவில்லை. இத்தகைய அறிஞர்கள் ஓரளவு சமுதாயத்தை விட்டு விலகியே நின்றனர் எனலாம்.

அந்நாளைய தமிழ்ப்புலவர்களிலே விசித்திரமான ஒரு மூன்றாம் பிரிவினரும் இருந்தனர். இவர்களைப் புலவர் இளங்குமரன் அவர்கள் "வடமொழியும் தமிழும் தனித்தனி மொழிகள் அல்ல, ஒருமொழி என்னும் மயக்க உணர்வுடன், வடமொழியே தமிழ்மொழி மூலம் என்னும் மாறுபட்ட உணர்வும் கொண்டவர்கள்[1]" என்பார்.

---

1 இலக்கண வரலாறு - புலவர் இரா. இளங்குமரன், பக். 361

இவ்வாறு முச்சந்தியிலே உழன்று கொண்டிருந்த தமிழ்ப் புலவர்களுக்குத் தமிழ்மொழியின் தொன்மை, புனிதத் தன்மை தனித்தியங்கும் ஆற்றல் ஆகியவற்றை எடுத்துக்காட்டி, புலவர் களுக்குள் இணக்கம் ஏற்பட வேண்டும் என அறிவுறுத்தி ஒரு நல்லவையில் கூறமுடியாதபடி ஆபாசமாகக் கொட்டுதல் தரமன்று எனத் தெளிவுறுத்தித் தமிழ்ப்புலவர்களைச் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு மடைமாற்றம் செய்தாக வேண்டிய வரலாற்று இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது. காலத்தின் இக் கட்டாயம்தான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் புலமை இலக்கணம்.

புலமைஇலக்கணம் புகல்வது என்ன?

தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதுஎனின்
வெகுளியற்று இருப்போன் வெறும்புல வோனே. (705)

தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதுஎனில்
அஃதுஉணர் அலகையில் தாழ்வுஎனல் அறமே. (672)

அருமை யறியான் அவையிடைப் புகுந்து
பெருமைபா ராட்டலும் ஏனையும் பிழையே. (692)

காகப் புள்ளென இனத்தொடு கலவாது
ஞாளிபோற் பகைக்கும் நாவலர் பலரே. (680)

காமக் கடலே கதிஎனக் கருதிப்
போவார் புலமையில் புண்ணியம் இன்றே. (687)

கால வேற்றுமை கருதாப் புலவன்
சிலனே எனினும் சிறுமை யினனே. (693)

தமிழ்க்கும் தனக்கும் சார்தரு நெறிக்கும்
தன்இனத் தினர்க்கும் தவறுஉறா வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத் தாமே. (747)

புலமைஇலக்கணத்தில் இடம் பெற்றுள்ள இந்த ஏழு நூற்பாக்களை ஓரளவு இவ்வியலின் சாரம் எனலாம். இந்

நூலாசிரியருக்கு 43 ஆண்டுகள் இளையவராகிய மகாகவி பாரதியாரும் தம் சின்னச்சங்கரன் கதையில் அன்றைய புலவர் களின் நிலையையும், வேறு பல இடங்களில் புலவர்கள் ஒழுக வேண்டியவற்றையும் தெளிவாகக் கூறுகிறார். இவ்விருவரும் ஒரே கருத்தை வேறுவேறு கோணங்களில் தருகின்றனர். சுவாமி களிடம் சமய உணர்வும் பாரதியாரிடம் சமுதாய உணர்வும் விஞ்சி நின்றதே இவ்வேறுபாட்டிற்குக் காரணம். இவையே புலமை இலக்கணம் தோன்றிய சூழலும், நுதலும் பொருளும் ஆம். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்த வந்தது குறிஞ்சிப் பாட்டு; தமிழனுக்குத் தமிழ் அறிவுறுத்த எழுந்தது புலமைஇலக்கணம். இதனை மொழியின்வளர்ச்சி எனலாமா என்பது சிந்தனைக்குரியது.

**இந்நூல் அதிகம் பரவாத காரணம்**

பழைய மரபிலேயே காலூன்றி இப்புலமை இலக்கணத் தைப் படைத்தும், தம் சாத்திர தோத்திர நூல்களில் பலவாறு கூறியும் சுவாமிகள் தம் கருத்தைப் பரப்ப முயன்றார். ஆனால் அவர் அதில் மிகப் பெருமளவு வெற்றியடைய இயலவில்லை. இவ்வியலாமை சுவாமிகளின் குறையன்று. பாரதியாருக்கு வாய்த்த நாட்டு விடுதலை இயக்கம் போன்ற ஓர் உணர்ச்சி மிக்க சார்பு சுவாமிகளுக்கு அமையவில்லை. சுவாமிகளுடைய கருத்துகளை அறிவுபூர்வமாக அணுகி, அவற்றைச் சமுதாயத் திற்கு ஆக்கபூர்வமாக அறிமுகப்படுத்தும் ஓர் இயக்கமும் அமையவில்லை. சுவாமிகளின் அரிய சிந்தனைகள் ஆய்விற்கும் பயன்பாட்டிற்கும் உரியவையாக அல்லாமல் பொருளுணர்ச்சி யற்ற வெறும் பாராயணச் சடங்கிற்குரியனவாய்க் கருதப் பட்டு, அதிகம் பரவாமல் போனமை தமிழினத்தின் தவக் குறையேபோலும். ஆனால் இப்போது சிரவைக் கவுமார மடாலயமும், பேரூர் சாந்தலிங்கஅடிகளார் திருமடமும் சுவாமி களுடைய நூல்களைச் சமயஇலக்கியமாக மட்டுமன்றிச் சமுதாய நோக்கிலும் ஆராய்ந்து வெளிப்படுத்தும் அரிய பணியில் ஈடுபட்டுள்ளன.

**எழுத்தின் வரிவடிவம் காட்டுதல்**

இவ்வாறு காலத்தின் கட்டாயத்தால் இன்றியமை யாததாகிவிட்ட புலமையிலக்கணத்தோடு விரிந்த அறுவகை

இலக்கணம் மற்றொரு வகையிலும் சிறப்புடையதாகத் திகழ்கிறது. அனைத்துத் தமிழ் எழுத்துகளின் வரிவடிவையும் இந்நூல் நன்கு விளக்குகிறது.

எழுத்துகளின் வரிவடிவை உணராதவர் ஒரு நூலையும் படிக்க இயலாது. எனவே எழுத்தானியன்ற நூலில் "எழுத்துகளின் வரிவடிவைக் கூறுவதால் பயனேதுமில்லை" எனச் சிலர் கொன்னே மேம்போக்காகக் கருதலாம். நூலாசிரியரும் இதனை அறியாதார் அல்லர். அதனால்தான்,

"உருவும் ஓசையும் உணராற்கு ஒருநூற்
பயனும் எய்தாப் பண்புநன் குணர்ந்தும்
தொடங்கிய துறைக்காச் சொல்முறை முன்பின்
பிறழா வண்ணம் பேசுதும் பிரித்தே" (6)

என முதலில் தெளிவாக்கிவிட்டு எழுத்தின் வரிவடிவத்தை விளக்கத் தொடங்குகிறார்.

இச்செயலை, "புதுமையாகத் திகழ்வதுடன், எழுத்துவடிவக் காப்பாக என்றும் போற்றிக்கொள்ள வாய்ப்பதுமாம்[1]" எனப் பாராட்டும் அறிஞர் இளங்குமரன் அவர்கள், "இம்முயற்சியில் தொல்காப்பியர் ஊன்றியிருப்பின் வடிவம், அதன் மாற்றம் பற்றிப் பலப்பலரும் பலப்பல பேசும் ஒருநிலை தோன்றியிருக்கவே முடியாதுபோயிருக்கும் என்பது தெளிவாம்[2]" என உணர்ச்சியோடு அங்கலாய்க்கிறார்.

ஆனால் ஒருவகையில் இதுவும் இன்றியமையாமையின் விளைவே எனலாம். பண்டைக் காலத்தில் நேராக எழுதுபவர்களும் படிப்பவர்களும் குறைவு. அக்காலத்தில் படித்தவர்களுக்குக் கூடச் சுவடி எழுதித் தருவதற்கென்றே வேறு சிலர் இருந்தனர் என்பதைச் சுவடியியலார் அறிவர். இப்போது கிடைக்கக் கூடிய சுவடிகளில் தொன்மையானவை என மதிக்கப்பெறும் 17-ஆம் நூற்றாண்டுச் சுவடிகளையே சிலர் எழுதப் பலர் படித்

1. இலக்கண வரலாறு - புலவர் இரா. இளங்குமரன், பக்.425
2. மேலது — பக்கம் 426

தனர் என்றால் தொல்காப்பியர் காலநிலை எப்படி இருந்திருக்கும்? அறிஞர் திரு.அ. சண்முகதாஸ் அவர்களின் கணிப்பு, "எமது பழைய தமிழ் இலக்கணகாரர் எழுத்துக்களின் பௌதிக வடிவம் பற்றி அவ்வளவு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. சாசன வழக்குகளுக்கு முக்கிய இடம் வழங்கிய வீரசோழிய இலக்கணகாரரே சாசனங்களில் நூற்றாண்டுகள் தோறும் மாற்றமடைந்து வந்த தமிழ் வரிவடிவங்கள் பற்றிக் குறிப்பிட்டாரில்லை. தமிழ் இலக்கணகாரர் வரிவடிவம் பற்றி விளக்கம் கொடுக்காததற்கு ஒரு காரணம் உண்டு. அஃதாவது அந்நாட்களிலே வாசிப்பவர்கள் குறைவாகவே இருந்தனர். "கூறுதல்", "மொழிதல்" என்பனவே எமது மரபாக இருந்ததென்பதற்கு எம் பண்டைய இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆனால் வீரமாமுனிவருடைய காலத்திலோ அச்சுயந்திரம் தமிழ்நாட்டிலே செல்வாக்குப்பெற்றகாரணத்தால்வாசிப்பவர்களுடைய தொகை தமிழ் நாட்டிலே அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணத்தினால் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிய சிந்தனை அவசியமாயிற்று. வீரமாமுனிவர் இக்கால கட்டத்திலேயே தமிழ் எழுத்துக்களின் வடிவமாற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றினார்"[1] என்பதாகும்.

தமிழ் எழுத்துகள்அனைத்திற்கும் தம் காலத்தில் வழங்கிய வரிவடிவத்தைத் தெளிவாகக் காட்டிய சுவாமிகள் அன்று ஆங்காங்கு வழக்கிலிருந்த ஒரு சில வரிவடிவங்களையும் எடுத்துக்காட்டி அவை தவறானவை என்கிறார். வீரமாமுனிவரால் செய்யப்பெற்றதாகக் கருதப்படும் எழுத்துச் சீர்திருத்தத்தை 48,49-ஆம் நூற்பாக்களில் ஏற்றுக் கொள்கிறார். 49 – ஆவது நூற்பா ஒரு பாராட்டாகவே அமைந்துள்ளது.

அரைமாத்திரை ஒலிக்கும் மெய்யெழுத்தைக்காட்டுவதற்காக இடப்படும் தலைப்புள்ளியை எகர ஒகரமாகிய-ஒருமாத்திரை உடைய-உயிர் எழுத்துகளுக்கு இடுதல் சற்றும் பொருத்தமற்ற குறியீடு என்பது இவர் வாதம். ஆனால் தமிழ் அச்சுநூல்களிலேயே தலைப்புள்ளி பெற்ற எகர ஒகரங்களைப் பார்க்கலாம்.

---

1. தமிழ்மொழி இலக்கண இயல்புகள்-அ. சண்முகதாஸ்,பக்.114

காட்டு-சென்னைக் கல்விச்சங்கத்திற்காக திரு.தாண்டவராய முதலியார் அவர்களால் 1839-இல் பதிப்பிக்கப்பெற்ற சேந்தன் திவாகரம். இப் பொருத்தமற்ற குறியீட்டை மாற்றியமைத்த தையே 49-ஆம் நூற்பா சிறப்பாகப் பாராட்டுகிறது.

அகர முதல் ஔகார இறுதியான எழுத்துகளுக்கேயன்றிக் கணக்கில் பயன்படும் அலகெழுத்துகள், எழுத்துச் சுருக்கத்தின் பொருட்டு ஆளப்படும் கூட்டெழுத்துகள், குறிப்பெழுத்துகள் ஆகியவற்றின் வரிவடிவங்களையும் இந்நூலின் எழுத்திலக்கணம் எடுத்துக்காட்டுகிறது. இதுவும் இவ் வறுவகைஇலக்கணத்திற்கே சிறப்பாக உரியதாகும்.

**பொருள்இலக்கணப் புதுமை**

ஐந்திலக்கணங்களைத் தனித்தனியே கூறும் முதல்நூலாகிய வீரசோழியமே பொருள் இலக்கணத்தில் அகம், புறம் என்னும் பண்டைய நிலையைவிட்டு விலகிவிட்டது.அடுத்த பெருநூலாம் இலக்கணவிளக்கமும்தொல்காப்பியவழியையேபின்பற்றினாலும் புறத்திணையை மிகவும் சுருக்கிவிட்டது. தமிழில் அகப்பொருள் இலக்கணம் மலர்ந்த அளவு இலக்கிய ரீதியாகவோ இலக்கண வகையிலோ புறத்திணை வளம் பெறவில்லை என்பதுண்மை. இதன் காரணத்தை ஆராய்தல் ஈண்டு வேண்டற்பாலதன்று.

இலக்கண விளக்கத்தைத் தொடர்ந்து தோன்றிய தொன்னூல் விளக்கம் அகப்பொருள், புறப்பொருள் என்பதற்கு முற்றிலும் புதுவகையாக விளக்கம் தருகிறது. அகப்பொருளுக் குரிய மரபு வழிப்பட்ட உரிப்பொருளையே சுட்டாத இந்நூலில் ஒரு நூற்பாவின் பகுதியாகிய ஆறு அடிகளில் புறத்திணை ஏழும் கூறி முடிக்கப்பட்டு விடுகின்றன. இந்நூலையடுத்து வந்த முத்துவீரியத்திலோ பொருளதிகாரத்தின் அகவொழுக்க இயலில் எட்டு நூற்பாக்களில் புறத்திணைகளின் அறிமுகம் மட்டுமே காணக் கிடக்கிறது.

இவ்வாறு பல்வேறு கருத்துகளுக்கிடமாயமைந்த பொருளதி காரம் இவரால் அகம், புறம், அகப்புறம் என மூன்றாகப்

பகுக்கப்படுகிறது. அகப்பொருளில் குறிப்பிடத்தக்க அளவு பெரிய மாற்றங்கள் இல்லை என ஒருவாறு கொள்ளலாம். ஆனால் எல்லோரும் அகப்பொருளில் கொள்ளும் குறிஞ்சி முதலிய ஐவகை நிலப்பாகு பாட்டை இவர் புறப்பொருளில் வேண்டுவர். இவர் காட்டும் புறப்பொருள் முற்றிலும் வேறானது. இவரே மற்றோரிடத்தில், "அகப்பொருள் காமம்; புறப்பொருள் சமர் என்று அறைந்துள்ளார்; யாமும் அறுவகை இலக்கணத்து ஒருவா சொற்றுளம்; உணர்வது கடனே"[1] என்கிறார். அகப்புறம் என்பது ஓரளவு தத்துவக் கொள்கை -களாக உள்ளன.

### அணியிலக்கணத்தன்மை

இவ்வாறே தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம் ஆகிய தனி அணியிலக்கண நூல்களுக்குப் பிறகு தோன்றிய இவ்வறுவகை இலக்கணம் அவற்றைப் போல அணிகளைப் பட்டியலிட்டுக் காட்டவில்லை "அணிஎனல் புலவோன் அறிவள வாமே"[2] என்பது இவர் கொள்கை. இப்பகுதியில் உவமையணி ஒன்றே இடம் பெற்றுள்ளது. அதுவும் உவமானம், உவமேயம், பொதுப்பண்பு, உருபு ஆகிய மரபு வழியில் விளக்கப்படாமல் உவமான சங்கிரகங்களின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. இவருடைய அணியிலக்கணமும் ஒரு புதிய பார்வையே. சற்றேறக்குறையத் தொல்காப்பிய உவமையியல் போலவும் அமைந்துள்ளது எனக்கொள்ளவும் இடமுண்டு.

### அறுவகை இலக்கணம் ஒரு முதல்நூல்

புலமை இலக்கணம் என ஒரு புத்திலக்கணத்தையே படைத்துக்கொள்ளல், எழுத்திலக்கணத்தில் வரிவடிவை நுழைத்தல், பொருள் இலக்கணத்தின் புதுமை ஆகிய பெருமாற்றங்களாலும் சொல், யாப்பு, அணி இலக்கணங்களிலும் புதுவழி கண்டுள்ளதாலும் இது பழைய நூல்களில் பயின்றுள்ள நூற்பாக்களையே மாற்றியமைத்தும் அல்லது அப்படியே எடுத்தாண்டும்

---

1. ஏழாமிலக்கணம் 258
2. மேலது 283

சிற்சில வேறுபாடுகளை மாத்திரம் பெற்று விளங்கும் ஒரு வழிநூலாகாமை தெளிவு. வேறு இலக்கண நூல்களிலிருந்து ஒரே ஒரு நூற்பாக்கூட எடுத்து இவரால் தம் நூலுள் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பது கருதத்தக்கது. எனவே தான் பொதுப்பாயிரத்தில், "இவ்விலக்கண நூல் முன்னோர் மொழியைப் பெருக்கிக் குறுக்கி மொழிவதன்றே" எனத் துணிவாகக் கூற இயலுகிறது. இவ்வறுவகை இலக்கணம் இலக்கியம் படைக்க விழைபவர்களுக்கு ஏற்ற கருவியாக விளங்கவேண்டும் என்னும் கருத்திலேயே யாக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது நூலின் பல பகுதிகளால் விளங்குகிறது. இதனால் தான் போலும் சிறப்புப்பாயிரத்தில் இந் நூலாசிரியர் "கவிராசர் செல்வம் ஆகும் நவநூல்" என்கிறார். இந் நூல் கால இடையீட்டால் மொழியிலும் இலக்கணச் சிந்தனைகளிலும் நேர்ந்துள்ள மாற்றங்களைப் பதிவுசெய்து காட்டுகின்ற ஒரு பதிவேடு எனில் அமையும்.

நூலின் அறிமுகத்தை இத்துடன் முடித்துக்கொண்டு அடுத்து நூலாசிரியரைப் பற்றி இன்றியமையாத சிலவற்றைச் சிந்திப்போம்.

**வண்ணச்சரபர் வரலாறு**

இந்நூலாசிரியராகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் காலம் இடம் பற்றி ஆய்ந்து கூறவேண்டிய அவசியமில்லை. தாமே தம் தன்வரலாறாகிய "குருபரதத்துவ" நூலில், "ஆறினில் கேது; ஏழிடத்தினில் உடுபதி; எட்டில் வாதிடும் குரவர் இருவரும்; நவத்தில் மால்சனி எல்லவன் குளிகன்; தீதில்நாள் அத்தம்; திதிதச மியதாம்; தினம்திரம்; தேதி பன் னாறே," "மாதமும் கரும்பாம்பு உறையுளும் தோன்றும்" "யான் வந்ததாம் மீன இலக்கினம்;"; "வயங்கும் அங்கிசத்து லக்கினம் வில்;"; "கலி நாலாயிரத் தொன்பான் நூற்றின் நாற்பத்தினொன்று ஆண்டே"[1] என விளக்கமாகக் கூறுகிறார். இக் காலக்குறிப்புகளிலிருந்து இவர் 22.11.1839 அன்று (விகாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினாறாம் நாள் சனிக்கிழமை,)

1. குருபரதத்துவம்—பிரயோக விநோதச் சருக்கம் 6. 7, 8,

பிற்பகல் 2.20 மணி வாக்கில் பிறந்தவர் என மிகத் துல்லிய மாகக் கூறலாம்.

பிறந்த ஊர் திருநெல்வேலி, தந்தையார் செந்தில்நாயகம் பிள்ளை, தாயார் பெயர் பேச்சிமுத்தம்மை. பெற்றோர்களால் இவருக்குச் சூட்டப்பெற்ற இயற்பெயர் சங்கரலிங்கம் என்ப தாகும். இவருக்குத் தமிழ்ப்புலமை கருவிலேயே திருவாய் வாய்த்தது. தன் ஒன்பதாம் அகவையிலேயே தென்காசியை அடுத்த சுரண்டை என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள பூமி காத்தாள் என்னும் அம்மனைப் பற்றி,

"அமுதம் கடையும்நாள் ஆலம் வெடித்துத்
திமுதமெனத் தீயெரித்துச சென்றது - அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத் தைப்பிடித்துக்
காத்ததனால் பூமிகாத் தாள்"

என்னும் வெண்பாவை இயற்றினார். அன்றிலிருந்து இவர் நடுநாட்டின் திருவாமாத்தூரில் குருவருளில் கலந்த விளம்பி வருடம் ஆனி மாதம் இருபத்து மூன்றாம் நாள் செவ்வாய்க் கிழமை (5.7.1898) முடிய ஐம்பதாண்டுக் காலத்தில் நூறா யிரம் கவிதைகளுக்கு மேல் பொழிந்து தள்ளினார். தாம் இயற்றிய பாடல்களைத் தாமே நன்றாகச் செப்பம் செய்யப் பெற்ற ஓலைச்சுவடிகளில் அழகாக எழுதி வைத்துள்ளார். இறைவன் மீது கொண்ட ஊடலால் தாமே தன் படைப்புகளில் பாதியை அனலிலும் புனலிலும் இட்டு அழித்துவிட்டார் எஞ்சிய சுவடிகள் இன்று இச்சுவாமிகளின் உபதேச பரம்பரை யைச் சேர்ந்த சிரவையாதீனத்தில் பேணிக் காக்கப்பட்டு வருகின்றன.

### இயற்றிய நூல்கள்

இவரால் இயற்றப்பெற்ற நூல்களுள் புலவர் புராணம் அருணகிரிநாதர் புராணம் ஆகிய வாழ்க்கை வரலாற்றுக் காப்பியங்களும், குருபரதத்துவம் என்னும் தன்வரலாற்றுக்

காப்பியமும், அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம் வண்ணத்தியல்பு என்னும் மூன்று இலக்கண நூல்களும், முசுகுந்த நாடகம் என்னும் இசைநாடகமும், முத்தமிழ்ப் பாமாலை என்னும் புதுமைப்படைப்பும், திருவாமாத்தூர்ப் புராணமாகிய தலபுராணமும், ஏழாயிரப் பிரபந்தம் என்னும் துதிப்பனுவலும் தமிழின் சிறப்புணர்த்தும் தமிழ் அலங்காரம்என்னும் சிற்றிலக்கியமும் நானிலைச் சதகம், கௌமார முறைமை, கௌமார லகரி, கௌமார வினோதம், கௌமார தீபம், தியானாநுபூதி ஞானவந்தாதி, சதகஉந்தி, பிரணவாநுபூதி முதலிய சாத்திர நூல்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன ஆகும். இவரால் இயற்றப்பெற்ற பிள்ளைத்தமிழ்கள் ஐந்து; கலம்பகங்கள் ஆறு; அந்தாதி வகைகள் பலப்பல; உலாவும் கோவையும் ஒவ்வொன்று.

இவரால் இயற்றப்பெற்ற திருச்செந்தூர்க் கோவை பிற ஐந்திணைக் கோவைகளைப் போலத் துறைவகையாகத் தொகுக்கப்படாமல், தொல்காப்பியநெறி பற்றிக் கூற்றுவகையாகத்தொகுக்கப்பட்டுள்ளது என்பதும் இதில் செந்தில்நாதனே கிளவித்தலைவனாகவும் உள்ளான் என்பதும் சிறப்பாகக் கருதப் படவேண்டிய செய்தியாகும். இப் பதிப்பாசிரியனின் அறிவுக் கெட்டியவரை இவ்வாறு அமைந்த ஐந்திணைக் கோவைநூல் இது ஒன்றுதான்.

இவர் மொத்தம் பனிரெண்டு வண்ணங்களையும், நூற்றுக்கும் மேற்பட்ட வகுப்புகளையும், எண்ணற்ற திருப்புகழ்ப் பாக்களையும் இயற்றியுள்ளார். சந்த இலக்கியத்தில் இவர் அருணகிரிநாதருக்கு இணையானவராகவே விளங்குகிறார்.

இவருடைய நூல்களில் ஏறக்குறைய பாதிதான் பதிப்பாகியுள்ளன. எனினும் அவை பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களில், பல்வேறு வடிவங்களில் பதிப்பானமையின் ஒரே சீராக இல்லை. அதனால் இப்போது கிடைக்கின்ற ஐம்பதினாயிரம் பாடல்களையும், ஒரே சீரான பதிப்புகளாகச் சுமார் 40

தொகுதிகளில் வெளியிடும் அரிய பணிக்குச் சிரவையாதீனம் திட்டமிட்டு ஆவன செய்துவருகிறது.

**சமயக் கொள்கை**

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் முருகப்பெருமானை வழிபடுகடவுளாகக் கொண்ட கௌமாரர். தத்துவரீதியில் மெய்கண்டாரின் சைவசித்தாந்தத்தைப் பெரும்பான்மையும் சங்கரரின் அத்வைதத்தைச் சில இடங்களிலும் ஏற்றுக்கொள் பவர். சூரியன், சிவபெருமான், சக்தி, திருமால், விநாயகன் முருகன் என்னும் அறுசமய வடிவங்களும் ஒரே பரம் பொருளின் பல்வேறு பண்புகளை உருவகப் படுத்தும் கற்பனைகள் என்பதும் இவற்றுள் எதனை வழிபட்டாலும் அவ் வழிபாட்டை ஏற்றுப் பயன்தரும் பரம்பொருள் ஒன்றே என்பதும், அப்பரம் பொருள் பெயரோ வடிவமோ இல்லாத ஒன்று என்பதும் இவருடைய அடிப்படைக் கொள்கை ஆகும். ஒரே தெய்வ உபாசனையில் உறுதியாக நின்றால்தான் சமரசம், சமயாதீதம் ஆகியநெறிகள் தாமே இயல்பாக வரும் எனப் பல சாத்திர நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார்.

**வேறுபெயர்களும் காரணங்களும்**

வண்ணம், வகுப்பு, திருப்புகழ் ஆகிய சந்தப்பாடல்களை மிகச் சிறப்பாக இயற்றுவதில் இணையற்று விளங்கியதால் இவர் ''வண்ணச்சரபம்'', ''திருப்புகழ்ச் சுவாமிகள்'' எனவும், முருகப்பெருமானின் அடியாராக விளங்கியமையின் ''முருக தாசர்'' எனவும், உடல் முழுவதும் திருநீறு பூசி, காவிச் சிற்றாடை அணிந்து, விரிந்த தலைமுடி, உருத்திராக்க மாலை கைத்தண்டம் ஆகியவற்றோடு தோற்றமளித்ததால் ''தண்டபாணிசுவாமிகள்'' எனவும் வழங்கப்பட்டார்.

**தொடர்புடைய புலவர் பெருமக்கள்**

வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் பிள்ளையவர்கள், பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர், காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார், வெண்பாப்புலி பிச்சுவையர், ஞான சித்தர்,

புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், தேவகோட்டை வன்றொண்டன் செட்டியார், சங்கரதாச சுவாமிகள் ஆகிய பெரும்புலவர்களோடு வண்ணச்சரபம் சுவாமிகள் தொடர்பு கொண்டிருந்தார் எனத் தெரியவருகிறது.

**சீடர்கள்**

வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முனிவர், கோபாலசமுத்திரம் சண்முகதாச பிள்ளை (மருகர்), சித்திரபுத்திர பிள்ளை (தம்பி), உரத்தூர் சின்னுரெட்டியார், தி. மு. செந்தினாயகம் பிள்ளை (மகன்), நெல்லை அருணாசலத் தொண்டைமான், கழுகுமலை இராமகிருஷ்ண பிள்ளை, ஊற்றுமலை கந்தசாமிப் புலவர், சோழவந்தான் கந்தசுவாமி சாமிகள் முதலியோர் இவரிடம் தமிழ் பயின்றதாகத் தெரிகிறது. இவர்களுள் சிலர் இவர்பால் சந்த இலக்கணம் மட்டும் கற்றனர் என்றும் அறியப் படுகிறது.

**உபதேச பரம்பரை**

இவர்பால் மந்திரோபதேசம் பெற்ற அடியவர்களுள் தலைசிறந்தவர் சிரவை யாதீனத்தாபகர் திருவருட்பெருந்திரு. இராமானந்த சுவாமிகள் ஆவார்கள். இச் சுவாமிகளின் தலைமாணாக்கரும் கொங்குநாட்டுக் கச்சியப்ப முனிவர் எனப் படுபவருமாகிய அருட்பெருந்திரு. சிரவை. கந்தசாமிசுவாமிகள் இவ் வாதீனத்தின் இரண்டாம் பட்டத்தை அலங்கரித்தவர் ஆவார்கள. இப்போதைய சிரவை யாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள் அவர்களும், திருப்பேரூராதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களும் இந்தக் கந்தசாமி சுவாமிகளின் திருக்கண்ணோக்கம் பெற்ற சீடர்களே. இந்த ஞானபரம்பரையால்தான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சிறப்பு தமிழ்கூறு நல்லுலகை வந்தடைகிறது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தன் வரலாற்றைக் குருபரதத்துவம் எனப் பாடியுள்ளார். அவர் மகனார் திரு. செந்தினாயகம் பிள்ளையவர்கள் சற்று விரித்து ஸ்ரீதண்டபாணி விஜயம் எனப் பாடியுள்ளார். இவை பதிப்பாகியுள்ளன. இக்

காப்பியத்தின் உரைநடைச்சுருக்கம் 1964-இல் திருவாமாத்தூர்க் கௌமார சபையாரால் "தண்டபாணி சுவாமிகள் வரலாறு" என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இவ் வாசிரியரின் வாழ்க்கை வரலாற்றை மேற்கண்ட நூல்களில் பரக்கக் காண லாமாதலின் ஈண்டு அது விரிக்கப்பெறவில்லை.

இந் நூலுக்கு உரைகாணுங்கால் இருந்த நிலையில் ஆண்டுக் கூறப்பட்டதில் இன்று இரண்டு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை ஈண்டுத் தெரிவிக்கும் கடப்பாடுடையேன்.

முதலாவது 305-ஆம் பக்கத்தில் வருடப்பதிகம் பற்றிய செய்தியில் அந்நாற்சுவடி திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தில் இருப்பதாக எழுதினேன். இப்போது அம்மடால யத்திலிருந்த சுவடிகள் யாவும் சிறப்பாகப் பாதுகாக்கப்படுவதற் காகவும் நல்ல பதிப்புகளாக வெளியிடப்படுவதற்காகவும் கோவை சிரவையாதீனத்தில் பேணப்பட்டு வருகின்றன. சுவடி எண் முதலியனவற்றில் மாற்றமில்லை.

இரண்டாவது 317-ஆம் பக்கத்தில் வண்ணத்தியல்பு நூலுக்கு இதுவரை உரை காணப்படவில்லை எனக் குறிப்பிட் டுள்ளேன். ஆனால் இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் இந்நூலுக்கு ஒரு தெளிவுரை வரைந்து 1987-இல் வெளியிட்டுள்ளார்கள்.

**முற்பதிப்புகள்**

இவ்வறுவகை இலக்கணம் மூலம்மட்டும் ஏழாமிலக்கண மூலத்தோடு சேர்த்து நூலாசிரியர் காலத்திலேயே அஷ்டாவ தானம் பூவை. கல்யாணசுந்தர முதலியார் அவர்களைக் கொண்டு தஞ்சாவூர் ஷாப்பு ப.வெ. வெங்கட்டராம ராஜா அவர்களால் 1893-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. எனினும் அதன் படிகள் இன்று கண்ணால் காணவும் கிடைத்தற் கரியன ஆயின.

எனவே திருப்பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராம சாமி அடிகளார் அவர்கள் தவத்திரு சாந்தலிங்க அடிகளார்

தமிழ்க்கல்லூரியின் வெள்ளிவிழா நினைவாக 1978-ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளியிட்டருளினார். இப்பதிப்பு வந்தபிறகுதான் இத்தகைய அருமையானதோர் தமிழிலக்கண நூல் உள்ள தென்பதை இன்றைய தமிழாய்வாளர் பெயரளவிலேனும் அறிய வாய்ப்பேற்பட்டது.

இப்பதிப்பு வரலாறு

இந்நூலாசிரியரின் பெயரரின் மூத்த மைந்தராகிய சுவடிக் கலைஞர் புலவர் தி.மு. சங்கரலிங்கம் அவர்கள் 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின்மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதினார். அதனுள் இதுவரை வெளியாகாமலிருக்கும் ஏழா மிலக்கணத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பதிப்பிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு அப்பணியில் என்னை ஈடுபடுத்தலாம் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இக்கடிதத்தினைக் கண்ட முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர். வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் என்பால் கையெழுத்துப்படியாக உள்ள அறுவகையிலக்கணம். ஏழா மிலக்கணம் ஆகிய இரண்டையும் கவனமாகப் பரிசீலித்தார். அறுவகை இலக்கணத்திற்கும் உரை இல்லாமலிருப்பதால் ஏழா மிலக்கணத்திற்குமுன் இதனைக் குறிப்புரையோடு பதிப்பிக்க விரும்பினார். நான் இந்நூல்களோடு முன்பே பழக்கப்பட்டவன் என்பதாலும் மடாலயத்தில் மாணவர்களுக்கு இவற்றைப் பாடங் கூறியவன் என்பதாலும் இவ்வுரைப் பதிப்புப் பணியை என்பால் ஒப்படைத்தார்.மேலும்நூலாசிரியராகிய சுவாமிகளின் கைப்பட எழுதப் பெற்ற ஓலைச்சுவடியைத்தான் மூலப்படியாகக் கொள்ளவேண்டுமென்றும் மற்ற பதிப்புகளையோ அல்லது என் கையெழுத்துப்படியையோ சார்ந்திருக்கலாகாது எனவும் ஆணையிட்டார். அவ்வாணையின் வண்ணம் திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்திலிருந்து அறுவகையிலக்கணம், ஏழா மிலக்கணம் ஆகிய இருசுவடிகளும் 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் என்னால் பெற்று வரப்பெற்றன.

அறுவகையிலக்கண நூற்பாக்கள் மூலச் சுவடியிலிருந்தவாறு செப்பம் செய்து கொள்ளப்பட்டன. 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முதல் 14 நூற்பாக்களுக்கான 'உரை, மாதிரிக்காக மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு அனுப்பப் பெற்று ஒப்புதல் பெறப்பட்டது. உரைப்பணி ஓலைச்சுவடித் துறையின் எனது வழக்கமான பணிகளோடு நடைபெற்றுவந்தது.

1983-ஆம் ஆண்டு ஜுன் மாதம் இந்நூலாசிரிய சுவாமிகளின் பெயரரும் இந்நூலைத் தம் தந்தையாரிடம் முறையாகப் பாடம் கேட்டவரும் திருவாமாத்தூர்க் கவுமார மடாலயத்தின் தலைவருமாகிய தவத்திரு. முருகதாச அடிகள் தஞ்சைக்கு வந்து நான்கு நாள்கள் தங்கியிருந்து அன்றுவரை எழுதப் பட்டிருந்த 510 நூற்பாக்களின் உரையை ஆழமாகப் படித்துப் பார்த்தார். உரை தெளிவாகவும் தாம் பாடம் கேட்டமுறைக்கு மாறுபாடில்லாமலும் இருப்பதாகக் கருத்துத் தெரிவித்து மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கும் கடிதம்எழுதினார். இறுதியில் தட்டச்சுச் செய்யப்பெற்ற "அறுவகை இலக்கணம்" 1984-ஆம் ஆண்டுமார்ச்சுத் திங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பெற்றது.

தமிழ்ப் பல்கலைக்கழக விதிகளின் படி இந்நூல் 1987-ஆம் ஆண்டு ஜுன் மாதம் கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வர் பேரா. பி. விருத்தாசலம் அவர்களால் நுண்ணாய்வு செய்யப் பட்டது. அண்ணாமலை நகர் கே.பி.டி. அச்சகத்தாரால் அச்சடிக்கப்பட்டு இப்பொழுது வெளியாகிறது.

**இப்பதிப்பு முறை**

முன்பே குறிப்பிடப்பெற்றவாறு இப்பதிப்பிற்கு நூலாசிரியர் தம் திருக்கரத்தால் எழுதியருளிய மூலப்படியே ஆதாரம் ஆகும். எனவே இதில் பாடபேதம் என்பதற்கே இடமில்லை. இப் பதிப்பின் நூற்பாக்களுக்கும் பேரூர்ப்பதிப்பிற்கும் மிகச் சில இடங்களில் வேறுபாடுகள் காணப்படும். அத்தகைய இடங்களில் பேரூர்ப் பதிப்பின் பாடங்கள் மூலபாடங்களன்மையின் அவை

பாட வேறுபாடுகளாகக் கொள்ளப்பெறா. வண்ணச்சரபம் சுவாமிகளின் நூல்களில் பாடபேதம் தோன்ற வாய்ப்பே இல்லை என்பது மகிழ்ச்சிக்குரியது.

இப்பதிப்பு பெரும்பாலும் நூற்பா, பொழிப்புரை, வேண்டுமிடங்களில் விளக்கம், இன்றியமையாதபோது எடுத்துக்காட்டு என்ற போக்கில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கோள் இலக்கியங்களுள் இந்நூலாசிரியரின் படைப்புகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. இலக்கண ஆசிரியராக மட்டுமன்றி இலக்கியப் படைப்பாளியாகவும் தனித்த தத்துவக் கொள்கைகளை உடைய ஒரு சமயாசாரியராகவும் விளங்கும் வண்ணச் சரபம் சுவாமிகளின் பல கருத்துகளையும் அறிமுகம் செய்வதும் இதன் நோக்கமாகும்.

நூலுக்கு உரைகாணும்போது புத்தகம் அளவில் பெருத்து விடக் கூடாது என்னும உணர்வுடனேயே எழுதப்பட்டது. இந்நூல் பிற இலக்கணங்களோடு முரண்படும் இடங்களிலும் இவராகப் புதியனவாகக் கூறும் இடங்களிலும் மட்டும் சற்று விரிவான விளக்கங்கள் தரப்பெறறுள்ளன. பிற இடங்களிலெல்லாம் சுருக்கமான பொழிப்புரை மட்டுமே உள்ளது. உரையில் எடுத்தாளப் பெற்ற இலககண நூற்பாக்கள், இலக்கியப்பாக்கள் ஆகியவற்றை உரைநடையைப் போலத் தொடர்ச்சியாக அளிததிருப்பதுவும் பக்கங்கள் பல்காமைப் பொருட்டே. யாப்பிலக்கணத்தில் மட்டும் செய்யுள்கள் இன்றியமையாமை கருதி அவற்றிற்குரிய அடி அமைப்புடன் காட்டப்பெற்றுள்ளன.

எழுத்திலக்கணத்தில் கூட்டெழுத்து, (குறிப்பெழுத்து என்பனவற்றிற்கெல்லாம் இந்நூலில் குறிப்பிட்டுள்ளபடி வரிவடிவத்தை இப் பதிப்பில் காட்டியிருக்க வேண்டும். தவிர்க்கவியலாத சில காரணங்களால் அஃது இயலாமற் போயிற்று. இறைவன் திருவருளால் அடுத்த பதிப்பில் இக் குறைகள் தவிர்க்கப்படும் என நம்புகிறேன்.

நூலை அடுத்து இதன் சாத்துகவிகள் (பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகர நிரல், மேற்கோள்

இலக்கண நூற்பா அகரநிரல், மேற்கோள் இலக்கியப்பா அகரநிரல் ஆகியன இடம்பெற்றுள்ளன. இப் பதிப்பைக் கண்ணுறும் அறிஞர்கள் இதன் நிறைகுறைகளைத் தெரிவித்தால் அடுத்த பதிப்பு இன்னமும் செம்மையாக அமையப் பேருதவியாக இருக்கும்.

**நன்றியுரை**

ஏழாமிலக்கணத்தை வெளியிடவேண்டும் எனக் கேட்டுக் கொண்ட சுவடிக்கலைஞர் புலவர் திரு. தி. மு. சங்கரலிங்கம் அவர்களே இப்பதிப்பிற்கு முதற்காரணமாவார். இந்நூலின் முதல் 510 நூற்பா உரையைக் கவனமாகப் பரிசீலித்துப் பாராட்டிய தவத்திரு முருகதாச அடிகளும் இப்பதிப்பில் பேரார்வம் கொண்டிருந்தார். இப்பதிப்பிற்குப் பயன்படுத்திக் கொள்ளத் திருவாமாத்தூர் மடாலயத்திலிருந்து அறுவகையிலக்கண, ஏழாமிலக்கண மூல ஏட்டுச் சுவடிகளைக் கொடுத்துதவியதும் இவர்களே. இவ்வுரைப் பதிப்பு வெளியாகும் இன்று இவர்கள் இருவரும் நம்மிடையே இல்லை.குருவருளில் இரண்டறக்கலந்து விட்ட அவர்களை நன்றியுடன் நினைத்து வணங்குகிறேன்.

இவ் வுரைப்பதிப்புப் பணியை எனக்கு அளித்தும், இதன் மாதிரிப்பகுதியைக் கண்ணுற்றுத் தக்க அறிவுரைகள் வழங்கியும், பணி முடியும்வரை இடைவிடாது விசாரித்து ஊக்கமளித்தும் வந்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கு முதலில் என்னுடைய உளமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் அரிய அணிந்துரையுடன் இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்குகின்ற மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இப்பணியில் ஈடுபட்டிருந்தபோது தொடர்ந்து எனக்கு ஊக்கமளித்துவந்த முன்னாள் சுவடிப்புலத்தலைவர் பேரா கே. எம்.வேங்கடராமையா அவர்களுக்கு என் நன்றியைப் பணிவுடன் உரித்தாக்குகிறேன்.

ஓலைச்சுவடித்துறைத்தலைவர் முனைவர் திரு. த. கோ. பரமசிவம் அவர்கள் இப்பதிப்பில் மிக்க ஆர்வங்காட்டி வந்தார்கள். அவருக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

நூலை நுண்ணாய்வு செய்த பேரா. பி. விருத்தாசலம் அவர்களுக்கும், பதிப்புத்துறையின் முன்னாள் தலைவர் திரு கோவை. இளஞ்சேரன் அவர்களுக்கும், இந்நாள் தலைவர் புலவர் சி. இளங்கோவன் அவர்களுக்கும் நன்றி.

எழுத்திலக்கணத்தில் கூட்டெழுத்து, குறிப்பெழுத்து பற்றிய என் ஐயங்களைக் களைந்ததோடு, பலவற்றிற்கு வரிவடிவம் காட்டியுதவிய சிரவையாதீனச் சுவடிக்கலைஞர் திரு. இரா. கிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி.

இந்நூல் முழுவதையும் தட்டச்சுப்படிகளை ஊன்றிப் படித்துத் திருத்திக்கொடுத்ததோடு, அச்சக மெய்ப்புகளைத் திருத்துவதிலும் உதவிய திருமதி பாரதி கோபாலகிருட்டிணன் அவர்களுக்கு என் நல்வாழ்த்துகள்.

இந்த நூலை நன்றாக அச்சிட்டு, அழகாக அமைத்துக் கொடுத்த அண்ணாமலை நகர் கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் அச்சகத்தாருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் ஆர்வலர்கள் எல்லோரும் இந்நூலைப் பார்த்து இதன் நிறைகுறைகளை எடுத்துரைக்க வேண்டுகிறேன்.

ப.வெ. நாகராசன்.

தஞ்சாவூர்,
29.10.1990.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். அகத்.,சரு. | — | அகத்தியர் சருக்கம் |
| அ.ச.ஞா. | — | பேரா. அ.ச. ஞானசம்பந்தன் |
| அத். | — | அத்தியாயம் |
| அருட். | — | அருட்பேறடைந்த சருக்கம் |
| அருணகிரி. | — | அருணகிரிநாதர் புராணம் |
| அருணகிரி. வில்லி. | | அருணகிரிநாதர் புராணம், வில்லிபுத்தூராழ்வார் வாதச் சருக்கம் |
| அலங். | — | அலங்காரம் |
| அறிவுத். | — | அறிவுத்தன்மைப்புலவர் சருக்கம் |
| அறுவகை. | — | அறுவகை இலக்கணம் |
| ஆரணியம். | — | ஆரணிய காண்டம் |
| இலக்.விளக். | — | இலக்கண விளக்கம் |
| இலாவண. | — | இலாவண காண்டம் |
| இளம். | — | இளம்பூரணம் |
| இறை. களவியல். | — | இறையனார் களவியலுரை |
| உவமா. சங்கிரகம் | — | உவமான சங்கிரகம் |
| உற்பத்தி. | — | உற்பத்தி காண்டம் |
| எழுத்து. | — | எழுத்ததிகாரம் |
| ஏழாம். | — | ஏழாம் இலக்கணம் |
| ஐங்குறு. | — | ஐங்குறுநூறு |
| ஒட்டக். | — | ஒட்டக்கூத்தர் சருக்கம் |
| கங்கைப். | — | கங்கைப்படலம் |
| கச்சியப்பர். | — | கச்சியப்பர் சருக்கம் |
| கந்த. | — | கந்தபுராணம் |

| | | |
|---|---|---|
| கந்தசாமிப். | — | கந்தசாமிப்புலவர் சருக்கம் |
| கம்பர். | — | கம்பராமாயணம் |
| கலித். | — | கலித்தொகை |
| காளமேகப். | — | காளமேகப்புலவர் சருக்கம் |
| குமரகுரு. | — | குமரகுருபரர் சருக்கம் |
| குமாரதேவர். | — | குமாரதேவர் சருக்கம் |
| குருபர. | — | குருபரதத்துவம் |
| குறள். | — | திருக்குறள் |
| குறுந். | — | குறுந்தொகை |
| கைவல்யம். | — | கைவல்ய நவநீதம் |
| சிதம்பரப். | — | சிதம்பரப் பாட்டியல் |
| சிற.பா. | — | சிறப்புப் பாயிரம் |
| சுந்தர. | — | சுந்தர காண்டம் |
| சூடாமணி. | — | சூடாமணி நிகண்டு |
| செய்யுள். | — | செய்யுளியல் |
| சென்னைச். | — | சென்னைச் சருக்கம் |
| சேரமான் பெருமாள். | — | சேரமான்பெருமாள் சருக்கம் |
| சொல். | — | சொல்லதிகாரம் |
| தண்டி. | — | தண்டியலங்காரம் |
| தண்டி. பொருள். | — | தண்டியலங்காரம்- பொருளணி இயல் |
| தத். விளக்கப். | — | தத்துவ விளக்கப் படலம் |
| தமிழ் அலங். | — | தமிழலங்காரம் |
| திருநாகைக்காரோணப். | — | திருநாகைக்காரோணப் புராணம் |
| திருவாமாத்தூர்ப். | — | திருவாமாத்தூர்ப் புராணம் |
| திருவிடை. மும்மணி. | — | திருவிடைமருதூர் மும்மணிக் கோவை |

| | | |
|---|---|---|
| திருவிளை. இசைவாது. | — | திருவிளையாடற் புராணம் - இசைவாது வென்ற படலம் |
| திவ்யப். | — | திவ்வியப்பிரபந்தம் |
| திவாகரம். | — | திவாகர நிகண்டு |
| தேவா. | — | தேவாரம் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நச்., நச்சர். | — | நச்சினார்க்கினியர் |
| நாட்டுக். | — | நாட்டுக்கோட்டைச் சருக்கம் |
| நால். நான். மாலை | — | நால்வர் நான்மணி மாலை |
| நாலடி. | — | நாலடியார் |
| நான்மணிக். | — | நான்மணிக் கடிகை |
| நானிலைச். | — | நானிலைச் சதகம் |
| பகழிக். | — | பகழிக்கூத்தர் சருக்கம் |
| பரிமே. | — | பரிமேலழகர் உரை |
| பலதெய்வப். | — | பலதெய்வப்புலவர் சருக்கம் |
| பழனித். | — | பழனித்திருவாயிரம் |
| பன்னிரு பாட். | — | பன்னிரு பாட்டியல் |
| பாரதி. | — | பாரதியார் கவிதைகள் |
| பால. | — | பாலகாண்டம் |
| பிங்கலந்தை. | — | பிங்கலந்தை நிகண்டு |
| பிரப. திரட்டு | — | பிரபந்தத் திரட்டு |
| பிரபு. | — | பிரபுதேவர் வந்தகதி |
| பிரபுலிங்க. | — | பிரபுலிங்க லீலை |
| புலவர். | — | புலவர்புராணம் |
| புலவர். அருணகிரி | — | ,, அருணகிரிநாதர் சருக்கம் |
| புலவர். கம்பர். | — | ,, கம்பர் சருக்கம் |
| புலவர். வில்லி. | — | ,, வில்லிபுத்தூரார் சருக்கம் |
| புறப். மாலை. | — | புறப்பொருள் வெண்பாமாலை |

| | |
|---|---|
| புறம். | — புறநானூறு |
| பெரிய. | — பெரிய புராணம் |
| பேரா. | — பேராசிரியம் |
| பேரா. சித்தி. | — பேரானந்த சித்தியார் |
| பொதியா. | — பொதியாசலச் சருக்கம் |
| பொதுப். | — பொதுப்பாயிரம் |
| பொய்யா. | — பொய்யாமொழிப்புலவர் சருக்கம் |
| பொருத்த. | — பொருத்தவியல் |
| பொருள். | — பொருளதிகாரம் |
| போர்ச். | — போர்ச் சருக்கம் |
| போற்றித். | — போற்றித் திருவகவல் |
| மநுநெறித். | — மநுநெறித் திருநூல் |
| முதலா. | — முதலாயிரம் |
| முருகு. | — திருமுருகாற்றுப்படை |
| முனிவர். | — சிவஞான முனிவர் |
| மூன்றாழ்வார். | — மூன்றாழ்வார் சருக்கம் |
| மெய்ப்பொருள். | — மெய்ப்பொருள் நாயனார் புராணம் |
| யா. காரிகை. | — யாப்பருங்கலக்காரிகை |
| யா.வி., யா. விருத்தி | — யாப்பருங்கல விருத்தி |
| யுத்த. | — யுத்த காண்டம் |
| வசை., வசைகவி. | — வசைகவியாண்டான் சருக்கம் |
| வாரணாவதச். | — வாரணாவதச் சருக்கம் |
| வில்லி. | — வில்லி பாரதம் |
| வீரசோ. | — வீரசோழியம் |
| வெ.அந்தாதி | — வெண்பா அந்தாதி |
| வெண்பாப். | — வெண்பாப் பாட்டியல் |

# அறுவகை இலக்கணம்

## பொதுப்பாயிரம்

### காப்பு

1. ஐந்தே இலக்கணம்என்று ஆயிரம்பேர் கூறல்கண்டும்
செந்தேன்என்று ஆறுவிதம் செப்புவிப்பது—எம்தேகத்து
உள்ளும் புறம்பும் ஒளிரும் ஒருபொருட்சீர்[1]
விள்ளும்[2] குருபாத மே. (1)

### அதிகாரி இலக்கணம்

2. பொன்னோங்கற் கோவும்[3] பொதியைப்
பிரானும்[4] புகழ்முருகோன்
நல்நோன்பு[5] நோற்கும் பயனே
புலமைநலம் எனத்தேர்ந்து
எல்நோக்கித்[6] தெண்டன் இடுவாருக்கு
ஆம்இவ் விலக்கணநூல்
முன்னோர் மொழியைப் பெருக்கிக்
குறுக்கி மொழிவதன்றே. (2)

---

1 ஒப்பற்ற பரம் பொருளின் பெருமையை
2 உபதேசிக்கும்
3 பொன்மலையின் தலைவராகிய சிவபெருமான்
4 அகத்தியர்
5 சிறந்த வழிபாடு
6 சூரியனைப் பார்த்து. (அறுசமயத்தினரும் சூரியனை வழிபடுவர். எனவே இங்ஙனம் கூறினார்)

## நூலின் தன்மை

3. கடலின் மீன்பெயர் நுளையர்[1]வாய் மொழியெனல்
கடுக்கும்
திடம்[2]நி லாவிய செழுந்தமிழ்ப் புலவரைச் சேர்வார்
புடவி[3] மேற்கொளும் அறுவகை இலக்கணப் புதுநூல்
படஅ ராஉறழ்[4] சமணரைப் புகழ்ந்துளார்
பகையே (3)

## வகையும் துணையும்

4. எழுத்து சொல்பொருள் யாப்புஅணி எனத்திகழ்
இவற்றுடன் இவைதம்மாற்
பழுத்து மாமணம் கமழ்தரு புலமையும்
பகர்வது குறித்துள்ளேன்,
வழுத்தும் மங்கலம் அறியநீ யென்னது
வாக்கில்வந்து அருள்இன்னே;[5]
கொழுத்து உலாவிய வரிஉடல் பூரம்மேல்[6]
கொண்டுள குலமாதே. (4)

## நுவன்ற காரணம்

செந்தமிழ்க் கிரியோன்[7] தினந்தொறும் வழிபடும்
கந்தனைக் கதிர்வேற் கரத்துடன் மயில்மேற்

---

1 பரதவர், மீனவர்.
2 உறுதி.
3 உலகம்.
4 படம் விரிக்கும் பாம்பைப் போன்ற. (பல இலக்கண நூல்களை இயற்றிய சமணர்கள் அவற்றுள் தம் சமயக் கொள்கைகளைத் திணித்தமை பற்றி இவ்வாறு கூறினார்)
5 இப்பொழுதே.
6 பூரான். இதனைக் கலைமகளின் ஊர்தியாகச் சொல்வர்.
7 அகத்தியர்.

கருதிய தவமும், கருணையிற் சிறந்த
சுருதியிற்[1] பழகிய தொண்டர்தம் துணைத்தாள்
மலர்தரு துகள்முதல் வயங்கும் மாண்பொருள்
சிலபெறும் தெளிவும், சீரிய புலவோர்
கவிக்கடல் அமுதுஉணும் களிப்பும், கதிர்முன்
குவித்தகை யுடன்தொழும் குழுவினர்[2] உறவும்
புன்தலைச் சமணரைப் புலைத்தொழிற் புத்தரை
வென்றுஅகம் குளிர்சீர் விரும்பும் பகையும்.
உறுவதால் திகழ்துணிவு ஒன்றால்
அறுவகை இலக்கணம் அறையலுற் றனமே. (5)

**நூற்பயன்**

தனதன தனத்தன தன்தானா

6. முதிர்தமிழ் முனிக்கு[3] ஒரு துணைபோல்வார்
முருகுஅவிழ் கடுக்கையன்[4] உறவுஆவார்
விதிர்தரும் அயிற்[5]குகன் அருள்சேர்வார்
வினைஎனும் இருட்பிணி அறவாழ்வார்
கதிர்நடு விழுப்பொருள் அதைநேர்வார்[6]
கலிமுழுது ஒழித்துஅகம் மகிழ்கூர்வார்
அதிர்தொனி அணிக்கவி தருசீர்ஆர்
அறுவகை இலக்கணம் அறிவாரே. (6)

---

1 சுருதி-வேதம். இருக்கு முதலிய வேதங்கள் கொலை வேள்விகளை விதித்தலின் அவை கருணையற்றவை என்றும், 'ஒன்றாக நல்லது கொல்லாமை' எனப் புகட்டும் திருக்குறளே தலைசிறந்த வேதம் என்றும் இவ்வாசிரியர் பல இடங்களில் கூறியுள்ளார். இது பற்றியே இங்கும் கருணையிற் சிறந்த சுருதி எனச் சிறப்பித்தார். இது திருக்குறள்.

2 சூரியனை வணங்கும் அறுசமயத்தினர்

3 அகத்தியர்

4 மணம் பரப்புகின்ற கொன்றை மலர்களைச் சூடும் சிவ பெருமான்

5 பகைவர்களுக்கு அச்சத்தைத் தருகின்ற வேலை ஏந்தும்

6 இந்து சமயத்தினர் பெரும்பாலோர் பரம்பொருளின் திருவடிவைச் சூரிய மண்டலத்திருத்தித் தியானிப்பர். அதை நினைந்து கூறியது.

# சிறப்புப் பாயிரம்

## ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும்.

1. மன்னுபுகழ் நெல்லைநகர் வாழ்முருக தாசன்எனப்
பன்னுதண்ட பாணிப் பரதேசி – உன்னும்
குறுமுனிவன் தன்அருளால் கூறும்இந்த நூற்பேர்
அறுவகையி லக்கணம்ஆ மே. (7)

## அரங்கும் கொள்வாரும்

2. ஆறு வகைஎன்று இலக்கணம் பாடி அரியதமிழ்த்
தேறுநர் போற்றுஉரு மாமலைக் கோவில்[1]முன்
செப்பியதால்
வீறு சமய நெறிஆறு உடையமெய் வேதமொழி
கூறும் அவர்கள்எல் லாம்இக ழாதுகைக்
கொள்வதுஉண்டே. (8)

## மறுத்தற்கு அரியவர்

3. மூவிரண்டு எழுத்தே[2] மொழியும் பண்பால்
அத்தொகை இலக்கணம் அமைவுறப் பாடிப்
பூமலர் சோலைப் பொதியமால் வரைக்கோன்
தொண்டர்மெய்ப் புகழ்இடை துலங்க வைத்தமை[3]
வம்பு[4]என மற்றையர் மறுப்பினும் வடிவேற்
சண்முகன் அடியார் தமக்குஆம் அன்றே. (9)

---

1 திருநெல்வேலியில் உள்ள குறுக்குத்துறைக் கோயில்.

2 சடாக்கரம் எனப்படும் ஆறெழுத்தருமறை.

3 புலவர்களை அகத்தியரின் அடியார்கள் எனக்குறிப்பது இவ்வாசிரியர் வழக்கம். இதுபற்றியே புலவர் புராணத்தில் பொதியாசலப்படலத்தை முதற்கண் வைத்தார். இந்நூலில் ஆங்காங்கும்,புலமை இலக்கண மரபியல்பில் பல புலவர்களைப் பற்றித் தொகுத்தும் புலவர் பெருமை கூறப்பட்டுள்ளது.

4 முறையற்ற செயல் என்பதே பொருள். மற்றையர் வம்பு என மறுப்பினும் அடியார் தமக்கு இந்நூல் ஆம் என்பது முடிபு.

## நூலின் தன்மையும் செய்யுள் தொகையும்

4. தவராசர் புவிராசர் எனப்பெயர்மாத்
திரம்புனைந்துஅத் தன்மை கொள்ளார்க்கு
அவமானம் பெருக்கிஅந்தப் பெயர்க்குஉரிய
குணம்கொள்வார்க்கு அழியாக் கீர்த்தி
சிவலோகம் மட்டும்நிற்கச் செய்யவல்ல
கவிராசர் செல்வம் ஆகும்
நவநூல்[1]ஒன்று எழுநூற்றுஎண் பத்துஆறு
சூத்திரத்தால் நவின்றிட் டேனே. (10)

## நூலாசிரியர் தகுதி

5. எண்ணரிய கவிப்புலவர்க்கு இனியது ஆம்இவ்
விலக்கணநூல் பகுப்புஆறும் இயம்பும் முன்னம்
வண்ணம்முதல் பலபாடல் கடலில், ஆற்றில்,
வாவியில், செந் தீயில்இட்டேன்;[2] மற்றும்
பன்னூல்
விண்ணறிய மண்அறிய உலகத் தூடு
விளங்கவைத்தேன் நலங்கருதி;[3] வேந்தர்
போல்வார்
தண்ணளிஇல் லாத்துறவோர் கெடுபாட் டுள்ளார்
தன்மைஎல்லாம் அறிந்துஅறிந்தும் சலிப்புஉற்
றேனே. (11)

---

1 புதுமையான இலக்கணம்

2 இந்நூலாசிரியர் மொத்தம் நூறாயிரம் பாடல்களுக்குமேல் இயற்றினார். அவற்றுள் சற்றேறக் குறையப் பாதியை அவரே நீரிலும் நெருப்பிலும் இட்டு அழித்து விட்டார். அதுவே இங்குக் குறிக்கப் படுகிறது.

3 அவ்வாறு அழித்தவை போக மீதம் 49,722 பாடல்கள் அவருடைய சொந்தக் கையெழுத்திலேயே ஓலைச் சுவடிகளாக இன்று உள்ளன. இதில் சுமார் 60 விழுக்காடு பாடல்களே அச்சேறியுள்ளன.

## ஆக்கியோன் துணிபு

6. வேற்றுமையும் அல்வழியும் பொருந்தாது
தன்னளவில் விளங்கும் செஞ்சொல்
சாற்றும், ஒளி வழியும்[1] நல்கும் ஆறுவகை
இலக்கணத்தைத் தாழ்வுஎன் போர்கள்
கூற்றுவன்தென் புலத்துஏகிக் கொடியநரகு
இடை,அமிழ்ந்து குலைவார் அன்றி
மாற்றுஉரைத்தற்கு அரியசெம்பொன் வரைஅனைய
குகன்அருட்சீர் மருவி டாரே. (12)

பாயிரம் முற்றிற்று

1 மெய்யறிவுநெறி இங்கு ஒளிவழி எனக் குறிப்பிடப்படுகிறது. இலக்கண நூல்கள் வேற்றுமைப் புணர்ச்சி அல்லாதனவற்றை அல்வழி எனக் குறிப்பிடும். அச்சொல்லிற்கு இவர் 'இருட்டு வழி' எனப் பொருள் கூறி, என் நூலில் அல்வழி இல்லை; ஆனால் இது ஒளிவழியைக் காட்டும் என்கிறார்.

# அறுவகையிலக்கணம்

## 1. எழுத்திலக்கணம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐவகையாகப் பகுக்கப்பட்டு விளங்கும் அவற்றுடன் இந்நூலாசிரியர் புதியன புகுதலாகப் புலமை என்னுமொன்றையும் இணைத்து ஆறுவகையாகக் கூறத்தொடங்கி முதற்கண் தமிழ் எழுத்தினது இலக்கணம் கூறப்புகுகிறார். இம்முதற்பகுதி உருவோசை இயல்பு, நிலையியல்பு,புணர்ச்சியியல்பு என்னும் மூன்று இயல்களை உடையது.

### I. உருவோசை இயல்பு

தமிழ் எழுத்துகளின் உருவத்தினது மற்றும் ஒலியினது இயல்பினைக் கூறுவதால் இவ்வியல் இப்பெயர்த்தாயிற்று. இயல்பு என்ற சொல்லுக்கு இலக்கணம் என்பது பொருள். ''ஆயர்மகளிர் இயல்பு உரைத்து'' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர், ''ஆயர் மகளிரை வரைந்து கொள்ளும் இலக்கணத்தை அறிவித்து'' என உரை கூறுவதால் இஃது அறியப்படும். (முல்லைக்கலி 11:22). தமிழ் எழுத்துகளின் என்பதை அதிகாரத்தாற் பெற்றாம். இயல்பினைக் கூறும் நூற்பகுதியை இயல்பு என்றது ஆகுபெயர். இவ்வியல்பு தொகை, வகை என்னும் இரண்டு உட்பிரிவுகளை உடையது.

#### 1. தொகை

எழுத்துகளைப் பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறுவதால் இப்பிரிவு இப்பெயர் பெற்றது. அன்றியும் அவை இத்துணைய எனத் தொகை கூறப்பட்டதால் இப்பெயரமைந்தது என்றும் ஆம். இதன் தலைச்சூத்திரம் தற்சிறப்புப் பாயிரம் ஆகும்.

**1. தமிழ்ப்பெயர் முதுகலை தன்னைச் சுட்டிய**
**பெரியோர் மலர்த்தாட் பிரசஞ் சூடி**
**யான்சொலத் துவக்கும் இருமூன்று இலக்கணத்து**
**எழுத்திலக் கணம்முன் இயம்புவன் சிறிதே.**

தமிழ் என்னும் பெயரை உடைய தொன்மையான மொழியின் தன்மையை விளக்கிக் காட்டிய மேலோர்களின் திருவடிகளை வணங்கி யான் கூறப்புகும் இவ்வறுவகையிலக்கணத்துள் முதற்கண் எழுத்தினது இலக்கணத்தைச் சிறிதளவு சொல்வேன் என்றவாறு.

''தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப் பாகும்''

ஆதலின் இந்நூற்பா எழுத்திலக்கணத்தின் தற்சிறப்புப்பாயிரம் ஆயிற்று.

இலக்கண ஆசிரியர்களை மட்டும் பிரித்துக் கூறாது முதுகலை தன்னைச் சுட்டிய பெரியோர் என்றதனானே இலக்கணத்தால் நேரிடையாகப் பெறாதனவற்றையும் சான்றோர் இலக்கியத்தாற் காட்டிய குறிப்புகளை உட்கொண்டு யான் கூறுவன் என்றாராயிற்று. இவ்வாறு உரைக்காமல், ''முதுகலை என்பதனைக் கலையின் இலக்கணத்திற்கு ஆகுபெயராக்கி அதனை விளக்கிய பெரியோர் எனக் கொண்டாலென்னையோ'' என்னின் அங்ஙனங்கொண்டால் அஃது இந்நூற் பொதுப் பாயிரத்துட் கூறப்பட்ட ''முன்னோர் மொழியைப் பெருக்கிக் குறுக்கி மொழிவதன்றே'' என்பதனோடு முரணுதலின் உரையன்று என்க.

''கூட்டும் குறிப்பும் குணிக்கரும் விதமே''[1]

''இவ்வாறு உளகூட் டெழுத்தெலாம் மொழியில்
அடங்கா ஆதலின் அறைகிலம்''[2]

''பல்வகைக் குறிப்பும் பகர்ந்திடல் அரிதே''[3]

---

1 அறுவகை. 4
2 அறுவகை. 42
3 அறுவகை. 46

என்றெல்லாம் பின்னர்க் கூறி எழுத்தைப் பற்றி எத்துணை சொல்ல இயலுமோ அத்துணையும் முற்றக் கூறி முடித்தேன் அல்லேன்; நூற்பயிற்சிக்கு இன்றியமையாதனவற்றை மாத்திரம் கூறா நின்றேன் என்பார் 'இயம்புவன் சிறிதே' என்றார். இவரே பிறிதோரிடத்தில் இக்கருத்தே பற்றி,

"எழுத்தியல் தொகையில் ஏற்றம் நாடில்
அவைபுணர் இயல்பே; அல்லவை யாவும்
பிறர்வியப்பு அவாவிப் பெரிது வேழம்பர்
ஆதியர் கற்கும் அணிச்சமர் போல்வ".[1]

என்றமை காண்க.

இனி எழுத்துகளின் வகை கூறப்படும் (1)

**2. உயிர்என்று ஆய்தம் என்று ஒற்றுஎன்று உயிர்மெய்என்று
அலகுஎன்று கூட்டுஎன்று அறுவகை எழுத்தும்
அன்றிக் குறிப்புஎன்று அவைசில உளவே.**

இந்நூற்பா எழுத்துகளை ஆறுவகையாகவும் ஏழுவகை யாகவும் பிரித்துரைக்கிறது.

உயிரெழுத்து, ஆய்தஎழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் யெழுத்து, அலகெழுத்து, கூட்டெழுத்து என்னும் அறுவகையாக வும், இவற்றுடன் குறிப்பெழுத்து ஒன்றையுங்கூட்ட ஏழுவகை யாகவும் எழுத்துகள் வகைப்படுத்தப்படும் என்றவாறு.

தனித்தியங்கும் தலைமை பற்றி உயிர்எழுத்து முதலிலும், அவற்றொடு இணைத்து வழங்கப்படுதல் பற்றி ஆய்தம் அடுத் தும் கூறப்பட்டன. உயிரின் துணையின்றி உச்சரிக்கமுடியாத மெய்யெழுத்து மூன்றாவதாகவும், இவ்விருவகை எழுத்துகளின் புணர்ப்பாதலின் உயிர்மெய் அடுத்தும் இடம் பெற்றன. அல கெழுத்துகள் பெரும்பாலும் இயற்றமிழில் பயன்படாமல் கணி தத்திலே மட்டும் பயன்படுவதால் அவை பின்னர் வந்தன. கூட் டெழுத்துகள் தனி ஒலியற்ற வெறும் வரிவடிவேயாதலின்

---

1 ஏழாம். நூன்முகப்பு. 1

ஆறாவதாகக் கூறப்பட்டன. சிலவற்றைக் குறிக்க மட்டுமே பயன்படுவதாகவும், இலக்கிய ஆட்சியோ தனிஒலியோ அற்ற தாகவும், பெரும்பயன்தராதனவாகவும் உள்ளமை கருதிக் குறிப்பெழுத்துகள் ஈற்றில் தள்ளப்பட்டன. இதுபற்றியே முற் கூறிய ஆறுவகையோடு இவையும் வழங்கப்படுகின்றன எனப் பிரித்துக் காட்டினார்.

தொல்காப்பியர் முதலிய அனைத்து இலக்கணிகளும் கொள் ளும் முதல் சார்பு என்னும் பிரிவை இந்நூலாசிரியர் கொள்ள வில்லை. எனினும் ஆய்தத்தை உயிருக்கும் மெய்க்கும் இடையே வைத்துக்கூறிய அதனானே இவர் வீரசோழியம், நேமிநாதம் ஆகிய இரண்டினையும் ஒட்டி முதல் எழுத்துகள் முப்பத் தொன்று என்னும் கொள்கையை உடையவர் எனலாம்.

“ஆயுத எழுத்து ஒன்று என்னாதவர்களும் ஐயும் ஔவும் தோயும் மாத்திரை இரண்டாச் சொல்பவர்களும் போன்றுள்ள பேய் உணர்வினர் எல்லோரும்”[1] என்னும் இவர் வாக்கால் இஃது உறுதியாகிறது.

இவர் அலகு, கூட்டு, குறிப்பு எனும் மூவகை எழுத்துகளைப் பற்றிப் புதியனவாகக் கூறலால் எழக்கூடிய தடைகளை எண்ணி முன்னோர் நால்வகை எழுத்தே கொண்டமைக்குக் காரணம் அடுத்த சூத்திரத்தால் கூறுகிறார். (2)

**3. இருநிலத்து யாம்உணர் எழுத்துஇனம் ஏழில்**
**நால்வகை எழுத்தே நலிலும் மற்றைய**
**மூவிதப் பொறிகளின் முதல்எனக் கருதி**
**அவ்வாறு ஓது மவர்சிலர் உளரே.**

உலகியலின் அன்றாட வாழ்க்கையில் நாம் அறிந்து பயன் படுத்துவன ஆகிய ஏழ்வகை எழுத்துகளுள் உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய் என்னும் நான்கே அலகு, கூட்டு, குறிப்பு ஆகிய மற்ற மூவகை எழுத்துகளுக்கும் முதலாயமைந்த கார ணத்தால் எழுத்துகளையே அந்நால்வகைய என்று சிலர் கூறி யுள்ளனர் என்றவாறு,

---

1 புல.புரா.அகத்.சரு. 29.

பலர் ஏழுவகையான எழுத்துகளை அறிந்து வாழ்க்கையில் பயன்படுத்துகின்றனர். எழுத்துக்கு இலக்கணம் வகுக்கும் ஆசிரியர்கள் மிகமிகச் சிலரே என்பதால் "அவர் சிலர் உளரே" என்றார். இங்குச் சிலர் என்பதற்கு இலக்கண ஆசிரியருட் சிலர் எனப் பொருள் கொள்ளாமல் எழுத்தறிவுடைய மக்களுட் சிலர் எனக் கோடல் வேண்டும்.

இந்நூற்பா பிறர்கோள் கூறல். இவ்வாசிரியருக்கும் அக் கொள்கை உடன்பாடே என்பது பிற்கூறப்பட்ட இவருடைய சூத்திரங்களாலேயே தெற்றென விளங்கும்.

"நால்வகை எழுத்தின் நலந்திகழ் ஒலியே
மற்றைய மூன்று வகையெழுத் தொலியில்
சிற்சில புணர்ந்து நின்றகீர் தெரிவீர்"[1]

"உயிர்வகை ஈராறு ஒற்றுஈ ரொன்பான்
இவற்றின் புணர்ச்சி இருநூற் றீரெட்டு
ஆய்தம் ஒன்றுஇவண் ஆய நால்வகை
எழுத்தும்"[2] என்பவை அவை.

இனி இவ்வெழுவகை எழுத்துகளின் எண்ணிக்கை கூறு கிறார். (3)

**4. ஆவி ஈராறு ஆய்தம் ஒன்றுஉடல்**
**அறுமூன்று உயிர்மெய் யாம்இவை இருநூற்று**
**ஒருபதிற் றாறுஅல குடைமை நால்வகை**
**கூட்டும் குறிப்பும் குணிக்கரும் விதமே.**

உயிர் எழுத்துகள் அகரம் முதல் ஔகாரம் வரையாகிய பனிரண்டாகும்; ஆய்த எழுத்து ,ஒன்றே; மெய் எழுத்துகள் க் முதல் ன் முடிய உள்ள பதினெட்டாகும்; உயிர்மெய் எழுத்து கள் ககரமுதல் னௌகாரமீறாகிய இருநூற்றுப் பதினாறு

---

1 அறுவகை. 59

2 வண்ணத்தியல்பு 1

ஆகும். அலகு கீழ், நடு, மேல், அளவு என நால்வகைப்படும்; கூட்டு, குறிப்பு எழுத்துகள் இத்துணை என்று வரையறுத்துக் கூற முடியாதனவாகும் என்றவாறு.

உயிர் முதலிய எழுத்துகள் எவையெவை என்பதை இலக்கண மரபாற் பெற்றாம். அலகெழுத்துகள் இத்துணை எனக் கூறாது நால்வகை எனக் கூறியது பின்னால் ஒவ்வோர் வகையிலும் பற்பல வரிவடிவங்கள் கூறப்படுதல் பற்றியாகும்.

அடுத்து எழுத்தெனப்படுவது வரிவடிவம், ஒலிவடிவம் ஆகிய இரண்டினையும் உடையது என்பது கூறப்படும். (4)

**5. எழுத்தெனல் வடிவுடன் ஓசையும் உடைத்துஅவற்று**
**உருஇயல்பு அனைத்தும் உணர்வார் சிற்சிலர்;**
**ஒலிஇயல்பு உலகோர் உரைக்கும் மாற்றம்ஒவ்**
**வொன்றிற் சிற்சில ஒளிர்தரும் அன்றே.**

எழுத்தெனப்படுவது தனக்கென ஒரு வரிவடிவத்தையும் ஓர் ஒலி வடிவத்தையும் உடையது; எழுதப்படிக்கத் தெரிந்தவர்ளாகிய சிலர் வரி வடிவத்தை முற்றும் அறிவர். மக்களின் பேச்சுமொழி ஒவ்வொன்றிலும் சில எழுத்துகளின் ஒலி வடிவம் விளங்கும் என்றவாறு.

மக்கள் தொகையில் சிறு பகுதியினரே கல்விக்கண் படைத்து எழுத்தின் வரி வடிவத்தை உணரும் திறமுடையராதல் பற்றிச் சிற்சிலர் என்றார். கல்லாமாக்களுக்கும் ஒலி வடிவம் புலப்படு மாதலின் அனைவரையும் உள்ளடக்கி உலகோர் என்றார். இஃது உயர்ந்தோர் மாட்டன்று.

ஒவ்வொரு வார்த்தையிலும் அதன் பகுதியாகிய எழுத்து கள் மட்டும் ஒலித்தலினாலும், தமிழிற் பெரும்பாலும் ஐந் தெழுத்தின் மிக்குடைய தனிச் சொல் இன்மையானும் சிற்சில ஒளிர்தரும் என்றார். ஒவ்வொன்றில் என்புழி முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

எழுத்துகளின் தொகையை இவ்வாறு முடித்து இவ்வுட் பிரிவின் இறுதி நூற்பாவில் வகைகளைக் கூறத் தோற்றுவாய் செய்து கொள்கிறார். (5)

6. **உருவும் ஓசையும் உணராற்கு ஒருநூற்**
**பயனும் எய்தாப் பண்புநன்கு உணர்ந்தும்**
**தொடங்கிய துறைக்காச் சொல்முறை முன்பின்**
**பிறழா வண்ணம் பேசுதும் பிரித்தே.**

எழுத்துகளின் வரி, ஒலி வடிவங்களை அறிய மாட்டாதாற்கு எந்த இலக்கணமும் பயன்தராது என்னும் உண்மையை யாம் தெளிவாக அறிந்துளோமாயினும் அவற்றின் இலக்கணம் கூறு வான் புக்கதால் முன் உரைத்த முறை பிறழாதே அவற்றை வகைப்படுத்திக் கூறுவாம் என்றவாறு.

எழுத்தின் வடிவங்களை அறியாதவன் அவற்றானியன்ற நூல்களைக் கற்றுப் பயனடைதல் ஏலாது; அங்ஙனமின்றிக் கற்றோனுக்கு எழுத்தின் வரி, ஒலி வடிவங்களைக் கூறல் மிகை. எனவே இவ்விரு காரணங்களானும் எழுத்துகளின் வரி, ஒலி வடிவு பற்றி நூல் செய்தல் பயனற்றதே. இது பற்றியே சிவஞான முனிவரும், "சொல்லதிகாரம் போலப் பெரும்பயன் படாமை கருதி எழுத்திற்கு உரை செய்யாதொழிந்தமையின்"[1] என்றார்.

வரிவடிவம் அறிந்தவனே கற்க முடியும்; கற்றவனே வரி வடிவம் அறிவான் என்றால் ஒன்றினை ஒன்று பற்றுதல் என் னுங் குற்றம் தோன்றுகிறது. எனினும் இலக்கணச் செய்கை கட்கு ஒரோவிடங்களில் இன்றியமையாததாயிருப்பதாலும், ஒன்றைக் கூறத்தொடங்கிய பிறகு அதனோடு தொடர்புடை யனவற்றைக் கூறலே முறையாதலாலும் கூறுவேன் என்றாரா யிற்று.

ஒரு நூற்பயனும் எய்தாஎன்புழி உம்மையை ஒன்றிற்கு மாற்றுக. சொல்முறை முன்பின் பிறழா வண்ணம் என்பதை இரட்டுற மொழிதலாக்கி, முன் பாயிரத்தே

1. தொல். சூத்திரவிருத்தி. நூன்மரபு.

"எழுத்து சொற்பொருள் யாப்பணிஎனத்திகழ்
இவற்றுடன் இவைதம்மாற்
பழுத்து மாமணம் கமழ்தரு புலமையும்
பகர்வது குறித்துள்ளேன்"[1]

எனக் கூறியது பின்னர் இவ்விடத்திற் பிறழா வண்ணம் எனவும், உயிர் முதலாகக் கூறப்பட்ட வரிசைமுறை தப்பாது எனவுங் கொள்க. அற்றேல் இங்கு முறை பிறழாது கூறுவேன் என்பதற்குத் தக்க காரணமின்மை அறிக. உணர்ந்தும் என்ற உம்மையும், "முற்கூறியசொல் பிறழா வண்ணம் பேசவேண்டிய கடப்பாடுடையேனாதலின் பேசுதும்" என்பதற்கே வந்தது. இது நுதலிப்புகுதல். (6)

**தொகை முற்றிற்று.**

## 2. வகை

இப்பிரிவில் எழுத்துகளின் வரிவடிவம், ஒலி, உச்சரிப்பு முயற்சி என்பன கூறப்படும். இப்பிரிவு உயிர்எழுத்து, ஆய்த எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, அலகெழுத்து, கூட்டெழுத்து, குறிப்பெழுத்து, புரையெழுத்து, அறியுங்குறிப்பு என ஒன்பது சிறு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### 1. உயிர் எழுத்து

நிறுத்த முறையானே முதற்கண் உயிர் எழுத்துகளைப் பற்றிய சூத்திரம் கூறத்தொடங்கி முதல் நூற்பாவில் அகர ஆகாரங்களை எடுத்துக்கொள்கிறார்.

**7. கிளிமுகம் போலச் சுழித்துக் கீழ்க்கொணர்ந்து
இடப்பால் நீட்டி மேல்வளைத்து இடைவெளி
அமைதர வலத்துஈர்த்து அம்முகம் அடங்க
மேல்ஈர்த்து அம்முறை கீழும் ஈர்த்தல்**

---

[1] அறுவகை. பொதுப்பாயிரம் 4.

**அகரக் குறியாம்; ஆன்இளங் கன்றிற்கு**
**இரங்கலில் மூலத்து எழுகால் துணைக்கொடு**
**சிறிது வாய் திறந்து ஒலிக்கும்; அக்குறியின்**
**ஈற்றின் வரைநுனி இலங்க வலந்தொட்டு**
**இடம்வரை சுழித்தல் ஆகாரத்து இயல்பாம்;**
**அவண்எழுந்து இருமடங் காம்அதன் தொனியே.**

கிளியின் முகம் போன்று ஒரு சிறிய வளையமிட்டுக் கீழே இறக்கி அக்கோட்டை இடக்கைப்புறமாக இழுத்து மேல்நோக்கி வளைத்து இடைவெளியமையும் வண்ணம் மீட்டும் வலப்புறம் கொணர்ந்து முதலில் வரைந்த வளையமளவு மேலும், அதே அளவு கீழும் செங்குத்துக்கோடு வரைதல் அகரத்தின் வரிவடிவ மாகும். அகரம் பசு தன் இளமையையுடைய கன்றிற்கு இரங்கு வதைப் போன்ற ஓசையையுடையது. மூலாதாரத்தில் எழும் காற்றின் துணைகொண்டு வாயைச் சிறிது திறப்பதால் இவ் வெழுத்து பிறக்கும். இவ்வாறு எழுதப்பட்டஅகர வரிவடிவத்தின் இறுதிப்பகுதியில் உள்ள நேர்கோட்டில் இருந்து வலமிருந்து இடமாகச் சுழித்தால் ஆகாரத்தின் உருவம் வரும். இவ் வெழுத்தும் மூலாதாரத்திலேயே தோன்றி அகரத்தைவிட இருமடங்கு ஒலிக்கும் என்றவாறு.

ஆகாரம் இரு மடங்கு ஒலிக்கும் என்பதால் அருத்தாபத்தி யாக அகரம் ஒரு பங்கு ஒலிக்கும் என்பது பெற்றாம். குறில், நெடில், மாத்திரை என்பன பற்றி அடுத்த இயலாகிய நிலை இயல்பில் கூறப்படும்.

தொல்காப்பியர் எழுத்துகளின் பிறப்புணர்த்தும் பொழுது கொப்பூழிலேயிருந்து மேல்நோக்கி எழுங்காற்று தோன்றி, அது தலை, மிடறு, நெஞ்சு ஆகிய மூவிடங்களில் நிலைபெற்று, எட்டு உறுப்புகளின் முயற்சியால் பிறக்கும் என்கிறார்.[1] அவ் வாறு மிடற்றில் நிலைபெற்ற காற்றின் துணையால் உயிர் எழுத்துகள் தோன்றும் என்பதுவும் அவர் கோட்பாடு[2].

---

1 தொல். எழுத்து. 83
2 தொல். எழுத்து. 84

நன்னூல் முதலிய பிற இலக்கணங்கள் யாவும் இக்கருத்தையே அரண் செய்கின்றன.

ஆயின் இந்நூலாசிரியர் மூலாதாரத்தில் தோன்றும் காற்றால் அகரம் பிறக்கும் என்கிறார். மொழி இலக்கண நூலார் செவிப்புலனால் கேட்கப்படும் எழுத்தின் தூல வடிவத்திற்கே இலக்கணங் கூறுவர். ஆனால் சமய நூல்கள் வாக்கைப் பரா, பஸ்யந்தி, மத்யமா, வைகரீ என நான்காகப் பகுக்கின்றன. செவிப்புலனுக்குப் பொருளாவது இவற்றுள் இறுதியாக அமைந்த வைகரியே ஆகும். இஃது இளம்பூரணரால் "புறத்து இசைப்பதன் முன்னர் அகத்து இசைக்கும் வளியிசையை அம் மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்று நிலை உளதாகக் கூறு மஃது ஆமாறு அறிந்து கொள்க"[1] என்றும், நச்சினார்க்கினியரால் "உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரை கூட்டிக் கோடலும், மூலாதாரம் முதலாகக் காற்று எழுமாறு கூறலும் வேதத்திற்கு உளதென்று இவ்வாசிரியர் கூறி அம்மதம் பற்றி அவர் கொள்வதோர் பயன் இன்றென்றலின்"[2] எனவும் சுட்டப்பட்டுள்ளது. பரா, பஸ்யந்தி, மத்யமா ஆகிய மூன்றும் நுண்ணெழுத்துகளும், வைகரீ தூல எழுத்தும் ஆம். முதல் மூன்றும் செவிப்புலனுக்குரிய பொருள்கள் ஆகமாட்டா; எனினும் தூல எழுத்து தோன்றக்காரணங்களாம்.

"அக்ஷரம் பரமோ நாத: ஸப்த ப்ரஹ்மேதி கத்யதே
மூலாதார கதா ஸக்தி: ஸ்வாதாரா பிந்து ரூபிணீ
தஸ்யாமுத்பத்யதே நாத: ஸூக்ஷ்மபீஜா திவாங்குர:
தாம்பஸ்யந்தீம் விதுர்விஸ்வம்யயாபஸ்யந்தியோகின:
ஹ்ருதயே வ்யஜ்யதே கோஷோகர்ஜத்பர்ஜன்யஸந்நிப:
தத்ரஸ்திதா ஸூரேஸான மத்யமேத்யபிதீயதே
ப்ராணேனச ஸ்வராக்யேனப்ரதிதாவைகரீ புன:
ஸாகாபல்லவரூபேண தால்வாதிஸ்தான கட்டநாத்

1 இளம். தொல். எழுத்து. 103

2 நச். தொல். எழுத்து. 102

அகாராதி க்ஷகாராந்தான்யக்ஷராணி ஸமீரயேத்
அக்ஷரேப்ய: பதானிஸ்யு பதேப்யோ வாக்யஸம்பவ:''[1]

(நாதம் அழிவற்றதும் மேலானதும் ஆகும்; அது சப்தப்பிரம்மம் எனவும் கூறப்படும். மூலாதாரத்தை அடைந்த சக்தி அதையே ஆதாரமாகக் கொண்டு பிந்து வடிவத்துடன் விளங்கும். அச் சக்தியில் நாதம் தோன்றுகிறது. நுண்ணிய விதையினின்று முளை தோன்றுவதைப் போன்று நாதத்திலிருந்து 'பரா' தோன்றுகிறது. யோகிகள் அதனால் உலகைக் காண்பதால் அதனைப் 'பஸ்யந்தி' என்கின்றனர். (பஸ்யந்தி-ஞானத்தால் உணர்தல்) அதிலிருந்து மத்திமை என்னும் வாக்கு உண்டாகிறது. மத்திமை எனப்படும் அது இதயத்தின் கண் இடி முழக்கம் போல் தோன்றுகிறது. அந்த மத்திமை என்னும் வாக்கு ஒலி வடிவாய்ப் பிராணன் என்னும் காற்றோடு வாயினின்றும் வெளிப்படுவதால் வைகரீ எனப்படுகிறது. (வைகரீ-ஒலி உடையது) இவ்வைகரீ கழுத்து முதலிய இடங்களைத் தாக்குவதால் அகரம் முதல் க்ஷகரம் ஈறான எழுத்துகள் தெளிவாக வெளிப் படுகின்றன. எழுத்துகளால் சொற்களும் சொற்களால் வாக்கியங்களும் உண்டாகின்றன)

''உரைதரில்ஒண் களம்முதலாம் இடத்துஇயங்கு பிராணன்
உருத்தரிக்கப் படுந்தூல எழுத்துடைமை யதனால்
விரைதரும்அம் செவிவிடயம் ஆகிக்கேட் பவர்க்கு
வேளாண்மை செய்வதுவை கரியெனநூல் இயம்பும்.''[2]

''இயங்கும்உயிர் விருத்திஇல தாய்ப்புத்தி தன்னில்
எழுத்துஅனுசந் தானமொடு முன்னம்உணர் பொருட்குத்
தியங்கல்அரும் வாசகமாம் மத்திமை;ஒண் மயிலின்
சினைப்புனலின் எழுத்துஉருசந் தானம்இலாது அகத்தே
பயின்றிடலின் விசேடமறு பொருளுடைய தாகும்
பைசந்தி; நீங்கும்பல் சத்தியுடைத் தாகி

1 யோகசிகோபநிஷத் அத். 3 செய்யுள் 2-6
2 சிவப்பிரகாச விகாசம் 170

முயங்கலுறும் உணர்விடையே நிற்பதுசூக் குமையும்
முறைபிறழாது இவையொன்றற்கு ஒன்றுகா
ரணமாம்"[1]

"மத்திமையே புறவிருத்தி யல்ல; அக விருத்தி,"[2]

சமய நூலாசிரியர்களின் இக்கருத்திற்கிணங்க இவ்வாசிரியர், "மூலத்து எழும்கால்" என்றார். கற்றதனாலாய பயன் சமய வாழ்வே என்னும் கொள்கையர் ஆதலின் இவ்வாறுரைத்தார். இது பற்றியே முன் அதிகாரி இலக்கணத்தும்,

"நன்நோன்பு நோற்கும் பயனே புலமை
நலம் எனத்தேர்ந்து
எல்நோக்கித் தெண்டன் இடுவாருக் காம்இவ்
விலக்கண நூல்"

என்று தெளிவுறுத்தப்பட்டது இது. "பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல்" என்ற உத்தி.

இச் சூத்திரத்துள் மிடறு ஆகிய நிலைக்களன் சுட்டப் படாமல் அங்காத்தலாகிய முயற்சிமட்டும் கூறப்பட்டுள்ளது.(7)

இ, ஈ

8. களம்வரை அகரம் ஆம்எனக் காட்டி
இடம்சுழித்து இடைவெளி நடுக்கொடு தலையைச்
சுற்றி வலத்தில் துகள்அற நிறுவல்
இகரம்; ஈகாரம் நிலைவரை ஒன்றுஇட்டு
அதன்தலை பற்றி வலத்துஓர் வரைஇழுத்து
அவ்வரை நடுவொன்று அடுத்ததிற் காட்டி
அதன்இரு கண்போன்று அருகிற் சுழித்தல்;
இவ்விரு பொறியும் எழில்நகைப் பந்தி
பாதியும் முற்றும் படர்ஒளி பரப்பத்
தொனிப்பவென்று உணர்வார் சொல்வது முறையே.

---

1 சிவப்பிரகாச விகாசம் 171
2 ,, ,, 172

(கிளிமுகத்தின்) கழுத்தளவும் அகரவரிவடிவே போல் வரைந்து, இடதுபுறமாக வளைத்து நடுவே இடைவெளி இருக்குமாறு, (கிளியின்) தலையைச் சுற்றி வலது பக்கமாகக் கொணர்ந்து நிறுத்துதல் இகரத்தின் வரிவடிவம் ஆகும். ஒரு செங்குத்துக்கோடு வரைந்து கொண்டு அதன் மேல்நுனியி லிருந்து வலப்புறமாக ஒரு படுக்கைக்கோடு போட வேண்டும் அக் கிடைவரையின் நடுவில் முதற் செங்குத்துக் கோட்டிற்கு இணையாக அதே அளவில் மற்றொன்று வரைய வேண்டும். இரண்டாவது செங்குத்துக் கோட்டின் இரு புறங்களிலும் அதன் கண்களைப் போன்று இரு சிறு வட்டங்களைச் சுழித்தால் அமைவது ஈகாரத்தின் வரிவடிவம் ஆகும். இகர ஈகாரங்கள் முறையே பல்வரிசை பாதி வெளிப்படுவதாலும், முற்றும் வெளிப்படுவதாலும் ஒலிக்கப்படுகின்றன என்று அறிஞர் கூறுவது சரியே என்றவாறு.

முற்சூத்திரத்தில் "கிளிமுகம்போல" என்றதன் தொடர்பு பற்றிக்களம், தலை என்னும் ஈரிடங்களிலும் அது கொள்ளப் பட்டது.

இங்கு "நகைப்பந்தி படர்ஒளி பரப்ப" என்றதால் அங்காத் தல் பெறப்பட்டது. எனினும்,

"அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய"[1]
முயற்சி கூறப்படவில்லை (8)

உ, ஊ

9. சுழியில் வலம்கீழ்ப் பற்றி இடத்திற்
சிறிதுஇழுத்து அகரத்து அடியெனக் கீழா
வளைத்த வரையை வலப்புறம் நீட்டல்
உகரம்; ஊகாரம் சுழித்தலை இடமேற்
பற்றி வலமாப் பண்புஉற வளைத்து
மேற்கொடு கூனற் பனையென முறையிற்
காட்டிக் கிடைவரை நடுவொரு நிலைவரை
அளவில் ஈர்த்த அக்கரம் புணரில்.
இவ்விரண்டு எழுத்தும் இலங்குஇதழ் பொருந்தாக்

1 தொல். எழுத்து. 86; நன்னூல் 77

குவிதலிற் குறுகலும் நீடலும் கொண்டு
தொனிக்கும் என்பது தொல்லோர் தொடர்பே.

முதலில் சுழித்து அதனை வலப்புறமாகக் கீழே கொண்டு வந்து அகரத்தைஎழுதத்தொடங்கியதுபோல் கீழ்க் கொணர்ந்த அந்தக் கோட்டை வலப்புறமாக நீட்டினால் அது உகரத்தின் வரிவடிவம் ஆகும். ஒரு சுழியை இடது மேற்புறமாகத் தொடங்கி, வலப்புறம் நன்கு வளைத்துப் பிறகு வளைந்த பனம்பாளையின் உருவத்தைப் போற்காட்டி அதன் படுக்கைக் கோட்டின் நடுவே ஒரு செங்குத்துக்கோடு அளவாக இழுத்த எழுத்து வடிவம் (எகரம்) முற்கூறப்பட்ட உகர வரிவடிவத்தின் மீது சேர்ந்தால் ஊகாரம் ஆகும். உ,ஊ என்னும் இவ்விரு எழுத்துகளும் உதடுகள் ஒன்றோடொன்று பொருந்திக் குவிவ தால் முறையே குற்றோசையும் நெட்டோசையும் பெற்று ஒலிக் கும் என்று பண்டைய நூலாசிரியர் நுவல்வர் என்றவாறு.

“உ ஊ ஒ ஓ ஔவென விசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்”[1]

என்ற தொல்லோர் கருத்து அப்படியே கூறப்பட்டது. (9)

எ, ஏ

10. மேல்உறச் சுழித்த வாக்கில் வலம்ஈர்த்து
அவ்வரை நடுவொரு காலிற் கீழ்வரை
அமைத்தல் எகரம்; அதன்ஈறு பற்றி
இடத்தில் நீட்டில் ஏகாரம் ஆகும்.
இவ்விரு பொறிகளும் நாநுனி கீழ்ப்பல்
உள்அருகு ஒன்றக் கடிதுவாய் திறந்து
குறுகியும் பெருகியும் தொனிக்கும் அன்றே.

மேற்புறமாகச் சுழித்தபடியே வலப்புறமாக நேர்கோடு வரைந்து அதனிடையே ஒரு காலைப் போலச் செங்குத்துக் கோடு போட்டால் அது எகரத்தின் வரிவடிவமாம். அச் செங் குத்துக் கோட்டின் கீழ்முனையிலிருந்து இடப்புறம் சற்றே

1 தொல். எழுத்து. 87

நீட்டினால் அது ஏகாரம் ஆகும். எகர ஏகாரமாகிய இவ்விரு எழுத்துகளும் நாக்கின்நுனி கிழ்ப்பல்வரிசையின் உட்புறமாகப் பொருந்த வேகமாக வாயைத் திறப்பதால் முறையே குறிலாகவும், நெடிலாகவும் ஒலிக்கும் என்றவாறு.

இகர ஈகாரத்தில் கூறப்படாத முயற்சி இந்நூற்பாவுள் கூறப்பட்டது. தொல்காப்பியரும், நன்னூலாரும், "அண்பல் முதல்நா விளிம்புறல்"[1] என்னும் தொடரையே பொதுவாக ஆண்டுள்ளனர். தொல்காப்பிய உரையில் இளம்பூரணர், "பல்லினது அணியவிடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலை உடைய"[2] என்கிறார். நச்சினார்க்கினியர் "அண்பல்" என்னும் சொற்கு அதையே உரையாக எழுதி "நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமான பல் என்று அதற்கோர் பெயராயிற்று"[3] என்று விசேட உரை வகுத்தார். இவ்விருவர் உரையானும் நாவிளிம்பால் அணுகப்படும் பல்வரிசை மேலா கிழா என்பது விளங்கவில்லை. நன்னூல் விருத்தி "அண்பல்லை அடி நா விளிம்பு பொருந்த"[4] என உரை வகுக்கிறது. ஆறுமுக நாவலர் தம் காண்டிகையில் "மேல்வாய்ப் பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்த"[5] என்கிறார். அண்பல் என்ற சொற்றொடர் இங்கு "நாவிளிம்பால் அணுகப்படும் பல்" என விரித்துக்காட்டப்படுகிறது. இது நச்சினார்க்கினியரின் அணுகுமுறையே. இந்நூலாசிரியர் முந்தையோர் கண்ட முறையில் அடிநாவைக் கொள்ளாது நுனிநா கிழ்ப்பல் வரிசையை உட்புறமாகப் பொருந்த இகர ஈகாரங்கள் பிறக்கும் என்கிறார். இது முந்தையவற்றைவிடத் தெளிவாக உள்ளது. (10)

ஐ

**11. ஊகாரத்து இரண்டாம் எழுத்துஎனத் துவக்கி**
**வலத்தில் நீட்டாது வளைத்துஇடங் கொணர்ந்து**

---

1 தொல்.எழுத்து. 86; நன்னூல் 77
2 இளம்.தொல்.எழுத்து.86
3 நச்சர்.தொல்.எழுத்து. 86
4 நன்னூல் விருத்தி 77
5 நாவலர்.நன்னூல் காண்டிகை 77

கீழுற இருதரம் மேல்நோக்கி வளைத்தல்
ஐகாரம்; நுனிநா அடிப்பல் உட்புறத்து
ஒன்றத் துருத்தியில் உயர்ந்துகீழ் அடங்கி
ஒலிக்கும் என்பது உணர்ந்தோர் இயல்பே.

ஊகாரத்தின் இரண்டாவது எழுத்தைப் போன்று (ஊ) எழுதத் தொடங்கி வலப்புறம் நீட்டாமல் இடப்புறமாக வளைத்துக் கொண்டுவந்து அதன்கீழ் இருமுறை மேல் நோக்கிய வளையங்களை வரைதல் ஐகாரம் ஆகும். நாவின் நுனி கீழ்ப்பல்லின் உட்புறம் பொருந்த அப் பல்வரிசை காற்றடிக்கும் துருத்தியைப் போல ஒரு முறை மேலேறிக் கீழிறங்கினால் ஐகாரம் ஒலிக்கும் என்பர் அறிஞர் என்றவாறு.

இந்நூற்பாவில் ஐகாரத்தின் பிறப்புக்குக் கீழ்ப்பல்வரிசை மேலேறிக் கீழிறங்கவேண்டும் என்ற முயற்சி தெளிவாக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி வேறுபாட்டாலேயே எகர ஏகாரங்களினின்றும் ஐகாரத்தின் ஒலி வேறுபடுதல் வெளிப்படை. (11)

ஒ, ஓ

12. சுழித்துமேற் கொடுவலத்து இடம்பட வளைத்துஉட்
புக்கு வளைநுனி காட்டக் கீழ்ப்பிரித்து
அவ்வழி வளைத்தே அளவில்மேற் கொண்டு
அதுமுதல் மேழியாம் என்றுஇடம் சாய்த்து
எழுதுவது ஒகரம்; ஆகாரத்து ஈறு
புணரில் ஓகாரம்; குவிந்தும் குவியா
உதடும் திறந்தும் திறவா வாயும்
திகழ்தரத் தொனிப்பன சிறுத்தும் பெருத்துமே.

ஒரு சுழியிட்டுக்கொண்டு அதை மேலேற்றி வலப்புறமாகக் கொண்டுசென்று உள்ளே வளைத்து வளைவு தெரியும் படியாகக் கீழ்ப்பக்கமாகப் பிரித்து அங்கே முதல் சுழியின் அளவும் மேலேற்றி அங்கிருந்து கொழுமுனையைப் போல் இடப்புறம் சாய்த்து எழுத ஒகரம் ஆகும். இவ்வரிவடிவத்தின் இறுதியில் ஆகாரவடிவின் இறுதிப் பகுதியைச் சேர்க்க ஓகாரம் ஆம். உதடுகள் முற்றிலும் குவியாமல் ஓரளவே குவிய, வாய்

முழுவதும் திறவாமல் சற்றே திறப்பதால் ஒகர ஓகாரங்கள் முறையே குறிலும் நெடிலுமாகப் பிறக்கும் என்றவாறு.

உகர ஊகாரங்கள் வாய் முற்றிலும் மூடப்பட்டு இதழ்கள் நன்கு குவிவதால் தோன்றுகின்றன. ஆனால் ஒகர, ஓகாரங்கள் இதழ்கள் முற்றும் குவியாமற் சற்றே அகன்றிருக்க, வாயைக் கொஞ்சம் திறப்பதால் ஒலிக்கின்றன. இம்முயற்சி வேறுபாடு இந்நூலில் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. (12)

**ஔ**

**13. ஒகரமும் ஊகாரத்து இரண்டாம் எழுத்தும்**
**புணரில் ஔகாரம்; சிறிதுவாய் திறந்து**
**கீழ்இதழ் வளைதர மேற்பல் பொருந்த**
**மெல்லெனக் காட்டும் வியன்தொனி யுடைத்தே**

ஒகர வடிவமும் ஊகாரத்தின் இரண்டாம் எழுத்தும் (ள) சேர்ந்தால் ஔகாரம் ஆகும். வாய் சற்றே திறந்து, கீழ்உதடுகள் வளைந்து, மேற்பல்லுடன் பொருந்தினால் ஔகாரம் பிறக்கும். இது மென்மையாக ஒலிக்கின்ற ஒரு தனி எழுத்து ஆகும் என்றவாறு.

ஔகாரம் தனக்கென வேறொரு இனத்தைப் பெற்றிராததால் அது இனமில்லாத தனி எழுத்து என்பதனைக் காட்ட 'வியன்தொனி' என்றார். தொல்காப்பியம், நன்னூல் இரண்டுமே ஔகாரத்தை நெடிலாகக் கொண்டுள்ளன.[1] ஆனால் இவர் இவ்வெழுத்து குறில், நெடில் இரண்டிற்கும் இடைப்பட்டதென்றும், ஒன்றரை மாத்திரையளவு உடையது என்றும் கருதுகிறார். இக்கொள்கை

"ஐ ஔ என்பவை குறில்நெடில் நடுஆம்;
இவற்றின் ஒன்றொன்று ஒன்றரை மாத்திரை;
இவைநெடில் தாம்என்று இயம்புநர் சிலரே"[2]

---

1 தொல். எழுத்து. 4, நன்னூல் 65
2 அறுவகை. 60

என இந்நூலிலும்,

"அருந்தமிழ்ச் சந்தத்து ஐயும் ஔவும்
ஈற்றிற் குறளாய் இடையினும் முதலினும்
குறிலொடு ஒற்றுஎனவும் குலாஅய்ச் சிறிதும்
நெடில்எனல் இன்றி நிகழும் அன்றே"[1]

என வேறிடத்தும் இவரால் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தை வலியுறுத்தவே இந்நூற்பாவுள் "மெல்லெனக் காட்டும் வியன் தொனி உடைத்தே" என விதந்து கூறினார். (13)

## 2. ஆய்த எழுத்து (ஃ)

**14. உயிர்எழுத்து உரைத்தனம், உரித்த தேங்காய்க்
கண்போல் முச்சுழி கவினுறக் காட்டல்
ஆய்தம்; துணைஇழந்து அலமரும் காக்கை
குளறலில் மிடற்றில் குமுறொலி தருமே.**

இதுகாறும் உயிர்எழுத்துகளின் வரிவடிவத்தைக் கூறினோம். (இனி மற்றவற்றைக் கூறப்புகுவோம் என்பது பொருள் எச்சம்.) உரித்த தேங்காயிற் காணப்படும் கண்களைப்போன்று மூன்று சுழிகளை வரைந்து காட்டுதல் ஆய்த எழுத்தின் வரி வடிவம் ஆகும். அது தன் இணைப்பறவையைப் பிரிந்து வருந்தும் காகம் துன்புற்றுக் கரைதலைப்போன்று கழுத்தில் குமுறுகின்ற ஓசையை உடையது என்றவாறு.

சார்பெழுத்துகளின் பிறப்புணர்த்தும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு[2] இளம்பூரணர் உரைத்த உரையின் வழியே பவணந்திமுனிவர்,

"ஆய்தக்கு இடம்தலை, அங்கா முயற்சி"[3]

என்றார். ஆனால் நச்சினார்க்கினியர் முற்கூறப்பட்ட தொல்காப்பிய நூற்பா உரையில், "ஆய்தம் தனக்குப் பொருந்தின நெஞ்சுவளியால் பிறக்கும்"[4] என்கிறார். இவ்வாறு ஆய்தம்

---

1 வண்ணத்தியல்பு 2   3 நன்னூல் 87
2 தொல். எழுத்து. 101   4 நச்சர். தொல்.எழுத்து. 101

பிறக்கும் இடம் பற்றித் தலை, நெஞ்சு என இருவேறு கருத்து கள் நிலவுகின்றன. ஆயின் இந்நூலாசிரியர் அவ்விரண்டிற்கும் மாறாக ஆய்தம் கழுத்தில் தோன்றும் என்றுரைக்கிறார். இவ் வேறுபாட்டின் காரணம் சிந்திக்கத் தக்கதாம்.

ஆய்த எழுத்து தன் பிறப்பாலும் தன்மையாலும் இடையின மெய்யெழுத்தைப் போன்றது என்பது இந்நூலாசிரியர் கொள்கை. இதனை இவர் இரு இடங்களில் தெளிவாக்கியுள் ளார்.

"ஆய்தம் இடையினத் தொற்றுப் போலுமே"[1]

"இடையினத் தொற்றோடு உறழும் ஆய்தமே"[2]

"ஆவி யிடைமை இடம் மிடறு ஆகும்"[3] என்னும் நன்னூற் சூத்திரத்தைப் பின்பற்றி இவ்வாசிரியரும் இடையின மெய் யெழுத்துக்களுக்குக் கழுத்தைப் பிறப்பிடமாகக் கூறுகிறார். யகரத்தைப்பற்றிக் கூறுங்கால்

"நுனிநா மேற்புறம் அடிப்பல் உட்புறத்து
ஒன்றக் களம்தரு காற்றுணை பற்றி
இகரம் சார்ந்துஒலி தருமெனல் இயல்பே"[4]

என்பதால் இது பெறப்படுகிறது.

எழுத்துகளை இனம் பிரிக்குங்கால்
"தானம் முயற்சி அளவு பொருள் வடிவு
ஆனஒன்று ஆதிஓர் புடையொப்பு இனமே"[5]

என்னும் நெறிபற்றிப் பிரித்தலே தக்கதாம். இம்முறையில் இடையின மெய்கள் பற்றியும் ஆய்தம் பற்றியும் ஒரு சிறிது ஒப்பிட்டு நோக்குவாம்.

யரலவழள என்னும் இடையின மெய்கள் ஆறில் ரழலள ஆகிய நான்கும் நாநுனி மேல்அண்ணத்தின் தொடர்பினால் பிறக்கின்றன.[6] யகரம் அடிநா கீழ்அண்ணத்தைப் பொருந்தத்

---

1 அறுவகை. 92
2 வண்ணத்தியல்பு 3
3 நன்னூல் 75
4 அறுவகை. 28
5 நன்னூல் 72
6 தொல். எழுத்து. 95, 96

தோன்றுகிறது.[1] ஆக இடையின மெய்களுள் ஐந்தெழுத்துகள் நாக்கு, அண்ணம் தொடர்பு பெற்றே ஒலிக்கின்றன. இளம் பூரணர் "இங்கு நின்று நெடுங்கணக்கு முறைமைவிட்டு நாவதி காரம் பட்டது கண்டு கூறுகின்றதென உணர்க"[2] எனக்கூறுவ தால் தொல்காப்பியர் பிறப்பியலில் தகர நகரங்களுக்குப் பிறகு ற, ன, ர, ழ, ல, ள என்ற முறையில் கூறிய முறை வைப்பின் சிறப்பு தெற்றென விளங்குகிறது. இவற்றால் இடை யின மெய்களில் பெரும்பாலானவை நாவதிகாரம்பட்டவை என் பதுவெள்ளிடைமலை, நன்னூலார் ஆய்தத்திற்கு அங்காத்தலை மட்டுமே முயற்சியாகக் கூறினார்.[3] தொல்காப்பியர் அதுவும் கூறினாரில்லை. ஆனால் இளம்பூரணர்தான் சார்பெழுத்து களின் பிறப்புணர்த்தும் நூற்பா உரையில், "ஆய்தத்திற்குக் குற்றெழுத்துஞ் சார்பே எனினும் தலைவளியாற் பிறத்தலின் உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்பது கொள்க"[4] என்று கூறுகிறார். ஆசிரியர் தொல்காப் பியனார் யாண்டும் ஆய்தம் தலைவளியான் தோன்றும் எனக் கூறவேயில்லை. மேலும் நன்னூல்

"ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி"[5]

எனக்கூறினும் அங்காத்தலால் மட்டும் ஆய்தவொலி தோன்றா தென்பதை உச்சரித்துப் பார்த்துக்கொள்ளலாம். அடிநா மேலேறி மேல்வரிசைப் பற்களின் இருமுனைகளோடும் பொருந்துவதாலேயே ஆய்தவொலி உண்டாகிறது. அஃது, எஃகு போன்ற சொற்களைத் தெளிவாக உச்சரித்துப் பார்க்கின் இம் முயற்சிதெற்றென விளங்கும். இதனால் ஆய்தம் நாவும் அண்ண மும் கொள்ளும் தொடர்பால் தோன்றும் இடையின எழுத்து களுக்கு இனம் எனப்பட்டது.

நாவும் அண்ணமும் பொருந்துதலாகிய முயற்சி, அரை மாத்திரையாகிய அளவு ஆகிய இரண்டாலும் ஒப்புமையுடைய இவ்விரண்டிற்கும் மிடற்றெழுவளியே காரணமாதல் வேண்டும்

1 தொல். எழுத்து. 99
2 இளம். தொல். எழுத்து 94
3 நன்னூல் 87
4 இளம். தொல். எழுத்து. 101
5 நன்னூல் 87

என்ற கருத்தான் இவ்வாறு இவ்வாசிரியர் முந்துநூல்களோடு முரண்படக் கூறினார். இது இலக்கண வரலாற்றில் தர்க்கரீதியாக வளர்ந்த கருத்துவளர்ச்சியாகும். இவை போன்றவைபற்றியன்றோ முன்னால் பாயிரத்திலேயே, ''முன்னோர் மொழியைப் பெருக்கிக் குறுக்கி மொழிவதன்றே''[1] என்றார். இவர் ஆய்தம் ''மெய்போலும்'' என்றாரன்றி ''மெய்யே'' எனக் கொள்ளவில்லை. இது மெய்யெழுத்துகளைப்பற்றி,

> ''உயிர்ஒலி பிறழ்தற்கு ஆதரம் ஆகி
> அதனொடு கூடின் தொனிப்பது ஆகி
> **ஆய்தம் என்கைக்கு அண்ணி தாகிக்**
> கிடக்கும் என்றே கிளத்தினர் புலவோர்''[2]

என இவர் கூறியதால் தெளிவாகிறது. தொல்காப்பியரும் ''குறியதன் முன்னர்'' என்னும் நூற்பாவில் ஆய்தப்புள்ளி என்றே குறிப்பிடுகிறார்.[3] இளம்பூரணர் இதன் உரையில் ''புள்ளி என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பாற்படுத்துக் கொள்க''[4] என்றும், நச்சினார்க்கினியர் ''ஆய்தப்புள்ளி - ஆய்தமாகிய ஒற்று''[5] என்றும் உரைக்கின்றனர்.

ஆய்தம் பற்றிய இந்நூலாசிரியர் கருத்து இந்நூல் 92ஆம் நூற்பா உரையில் மேலும் கூறப்படும்.

இனி அடுத்து நிறுத்தமுறையானே மெய்யெழுத்துகள் கூறப்பெறும்.

(14)

## 3. மெய் எழுத்து

**15. ஒற்றின் சிரந்தொறும் ஒன்றா ஒருசுழி**
**வைத்து வரைதரில் மருட்டா; அன்றெனில்**
**அகரம் சார்உயிர் மெய்எனப் பிறழும்;**
**அதனால் அவற்றின் வடிவே அறைகுதும்;**
**அவற்றின் தொனிதொறும் ஆவியும் உடலும்**

---

1 அறுவகை. பாயிரம் 2
2 அறுவகை. 16
3 தொல். எழுத்து. 38
4 இளம். தொல். எழுத்து. 38
5 நச்சர். தொல். எழுத்து. 39

**தொனிக்கும் இயல்பே தோம்அறக் கலந்து**
**மிளிர்தரும் ஆயினும் விளம்பும் காலை**
**இவற்றின் ஒலிமுன் எழும்ஆ தலின்இப்**
**பொறிகளின் ஒலியெனப் புகலல் நன்றே.**

மெய்யெழுத்துகளின் மேல் அவற்றைத் தொடாமல் தனியாக ஒரு சுழியிட்டு எழுதின் அது மயங்கவைக்காது.(அதாவது வேறு எழுத்தாக உணரப்படாமல் 'ஒற்றாகவே கருதப்படும்.) அங்ஙனம் மேற்சுழி இல்லெனில் அகரத்தோடு கூடிய அந்த மெய்யின் உயிர்மெய் எழுத்தின் வடிவமாகும். எனவே அகரம் சேர்ந்த ஒலிவடிவிற்குரிய வரிவடிவையே இந்நூலுள் உரைப்போம். உயிர்மெய் எழுத்துகளின் ஒலி ஒவ்வொன்றிலும் உயிர், மெய் ஆகிய இரண்டும் தம்முள் நன்கு கலந்து விளங்கும், என்றாலும் உச்சரிக்கும் பொழுது மெய்யின் ஒலி முற்படுதலின் உயிர்மெய் எழுத்து மெய்யெழுத்தின் ஒலியை உடையது எனல் தக்கதாம் என்றவாறு.

மெய்யெழுத்து தன் மேற்புள்ளியை இழந்து ககரம் முதலிய வடிவம் பெறுவதில்லை. ஆனால் ககரம் முதலிய அகர உயிர்மெய்களே புள்ளியேற்று மெய்களாகின்றன. இது "எழுதிக்காட்டுமிடத்துக் ககரம் முதலியன உயிர்பெற்று நின்ற வடிவாக எழுதிப் பின்னர்த் தனிமெய்யாக்குதற்குப் புள்ளியிட்டுக் காட்டு கின்றவாக்கான்"...[1]என நச்சினார்க்கினியரால் தெளிவாக்கப்படுகிறது.

"மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே"[2] என்னும் நூற்பாவும் அதன் உரையில் உரையாசிரியர், "மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கும் என்றமையால் அக் கூட்டம் பாலும் நீரும் போல உடன் கலந்ததன்றி விரல்நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறு நின்று கலந்தனவல்ல என்பது பெறுதும்"[3] என்றதும் இங்கு கருதத்தக்கதாம். (15)

1 நச்சர். தொல். எழுத்து. 46
2 தொல். எழுத்து. 18
3 இளம் தொல். எழுத்து. 18

16. ஒற்றிற்கு ஒருசுழி உயரக் காட்டியும்
பிறர்செவி யறியப் பேச ஒண்ணா
இயல்பினது ஆகி இதயத்து அவிர்ந்து
பொறியினம் விளையும் பூமி ஆகி
உயிரொலி பிறழ்தற்கு ஆதரம் ஆகி
அதனொடு கூடின் தொனிப்பது ஆகி
ஆய்தம் என்கைக்கு அண்ணிது ஆகிக்
கிடக்கும் என்றே கிளத்தினர் புலவோர்.

வரிவடிவில் மேற்புள்ளியிட்டுத் தனியாகக் காட்டப்பெறினும் (உயிரின் துணை இன்றிப்) பிறர் கேட்குமாறு உச்சரிக்க முடியாதனவாகவும், ஆனால் உள்ளத்தே உணரப்படுவனவாகவும், உயிர்மெய் எழுத்துகள் தோன்றும் நிலமாகவும், உயிர் ஒலிகள் தம்மேல் ஏறி ஒலிக்க இடந்தரும் அடிப்படையாகவும், உயிரோடு சேர்ந்தால் மட்டுமே ஒலிக்கப் படுவனவாகவும், ஆய்தத்தின் சில தன்மைகளைப் பெற்றிருப்பதால் அதனோடு ஒருபுடையொப்புமை உடையனவாகவும் மெய்யெழுத்துகள் இருக்கும் என்பர் அறிஞர் என்றவாறு.

தனி வரிவடிவம் இருப்பினும் ஒலித்தல் இயலாது என வற்புறுத்த இந்நூற்பாவுள் மேற்சுழி அநுவதிக்கப்பட்டது. மெய்யெழுத்துகள் என்பதனை அதிகாரத்தாற் பெற்றாம். ஆய்தம், மெய் ஒற்றுமைகள் முன் 14 ஆம் நூற்பாவில் உரைக்கப் பட்டன. மேலும் 92ஆம் நூற்பாவிலும் உரைக்கப்படும். மெய்யெழுத்திற்கு இயக்கம் இன்மையின் கிடக்கும் என்றார். (16)

17. ஆய்தமும் ஒற்றும் அறிந்தவாறு உரைத்தனம்;
தனித்தனி ஒவ்வோர் ஒற்றும் உயிர்களில்
நிரைபெறப் புணர்ந்தமை நிகழ்த்தி அதன்அதன்
தொனிவரும் உழையும் சொல்லுதும் துணிந்தே.

ஆய்தம், மெய்யெழுத்துகள் பற்றித் தெரிந்தவாறு கூறினோம். இனித் தனித்தனியாக ஒவ்வொரு ஒற்றும் உயிரோடு கூடிப்பெறும் வரிவடிவங்களையும், அவை பிறக்குமிடங்களையும் உறுதியாகச் சொல்வோம் என்றவாறு.

''உயிர்களில் புணர்ந்தமை நிரைபெற நீகழ்த்தி'' எனக் கூட்டுக. இந்நூற்பாவுள் உரைத்தாம் என்றல், நுதலிப்புகுதல் ஆகிய இரு உத்திகளும் கையாளப்பட்டன, ஆய்தமும் ஒற்றும் ஒருபுடையொப்புமை உடையன எனும் தன் கருத்தை வலியுறுத்தவே ஆய்தத்திற்குப் பின் தனியே உரைத்தாம் எனக் கூறாது ஈண்டு இரண்டிற்கும் பொதுவாக்கி உரைத்தார். எம் உள்ளத்தே சற்றும் ஐயம் இன்மையின் மயக்கமின்றித் தெளிவாகக் கூறுவோம் என்பார் துணிந்தே என்றார். (17)

## 4. உயிர்மெய் எழுத்து

### ககர வருக்கம்

18. இருசுழி எழுதா ஈகாரத்து ஈறு
பற்றி, இடவரை அடிசுழி யாதுஅதன்
இடம்சிறிது இடம்பட மேல்நோக்கி வலமா
நடுவளைத்து, அவ்விரு வரைக்குறுக் கேற்றி
மேல்வரை யளவிற் கொணர்ந்து கீழ்ஒரு
தோட்டியில் வளைக்கில் ககரம்; அதன்வலம்
முற்பகர் குறிஉறில் காஆம்; முடியில்
பிறைகவிழ்த் தாலென எழுதில் கிகரம்ஆம்;
அப்பிறை வலம்நுனி சுழிக்கில் கீஆம்;
ஈற்றுச் சிறுவளை வதனைப் பெருக்கி
இடமாத் தலைவரை கொணரிற் குகரம்ஆம்;
அவ்வளை வதனைக் கீழுற நிமிர்த்து, அது
தொட்டுமேற் கொண்டு வலத்துஒரு சிறுவளைவு
இட்டுஅவண் நீட்டில் கூஆம்; ஒகரம்
போலக் கொணர்ந்துஉட் புகுதாது கீழ்இழுத்து
இட்டகொம்பு ஒன்றுமுன் இசையிற் கெகரம்ஆம்;
அக்கொம்பு ஈற்றின்மேற் சுழிக்கிற் கேஆம்;
இணைக்கொம்பு ஒன்றோடொன்று இசைவுற எழுதிய
பின்னுறிற் கைஆம்; கெக்கே இரண்டினும்
காஎனும் எழுத்தின் பிற்குறி அணையின்
கொக்கோ ஆகும்; கெகரத்து ஈற்றில்
ஔகா ரத்துஇரண் டாம்எழுத்து அணையில்
கௌஎனத் திகழும்; கழறிவை முற்றும்
அடிநாக் கொடுமிடறு அடைத்துஒலிப் பனவே.

இரு சுழிகள் வரையப் பெறாத ஈகாரத்தின் (ா) கடைசிப் பகுதியை இடப்புறம் உள்ள செங்குத்துக் கோட்டின் நேர்கீழே சுழிக்காமல், அதற்கும் சற்று இடப்புறம் கொணர்ந்து மேலேற்றி வலமாக மையத்தில் வளைத்து, முன் வரைந்த இரு குத்துக் கோடுகளுக்கும் குறுக்காகச் செலுத்தி, மேல்கோடுவரை கொண்டு வந்து அதன் கீழ் ஓர் அங்குசம் போல் வளைத்தால் ககரத்தின் வரிவடிவம் ஆகும். அக்ககரத்தின் வலப்பக்கத்தே முற்சொன்ன அடையாளம் (சுழியற்ற ஈகாரம் ஆகிய கால்) சேர்ந்தால் கா ஆகும். தலையில் பிறைச் சந்திரனைத் தலை கீழாக எழுதினால் கிகர வடிவம் ஆகும். அந்தப் பிறையின் வலது நுனியில் ஒரு சுழியிடுவதால் கீகாரம் தோன்றும். ககரத்தின் கடைசியில் (அங்குசம் போல் எழுதுகின்ற) சிறிய வளைவைப் பெரிதாக்கி இடப்புறம் எழுத்தின் உச்சி வரை கொண்டு வந்தால் குகரம் ஆகும். அவ்வளைவைக்(ககரத்தின் ஈற்று வளைவை) கீழே வரும்படி நேராக்கி, அங்கிருந்து வலப்புறமாக ஒரு சிறு சுழி வரைந்து அங்கே (படுக்கைக்கோடாக) நீட்டினால் அது கூகாரத்தின் வரிவடிவம் ஆகும். ஒகரம் எழுதத்தொடங்குவது போல் கொண்டு வந்து (மேல் காவடி வரைந்த பிறகு) உள்ளே புகாது கீழே இழுக்கும் குறி கொம்பு எனப்படும்; இத்தகைய ஒரு கொம்பு ககரத்திற்கு இடப்புறம் சேர்ந்தால் கெ ஆகும். கொம்பின் மேற்பகுதியிலும் (கீழே உள்ளதைப் போன்றே) சுழித்த குறி (இடப்புறம்) அணைந்தால் கே தோன்றும். இரு கொம்புகள் ஒன்றோடொன்று பொருந்தும்படி எழுதிய குறிக்குப் பிறகு ககரம் சேர்ந்தால் கை ஆகும். கெ, கே ஆகிய இரு எழுத்துகளுக்குப்பிறகு காவின் இரண்டாம் குறி (கால்) சேர்ந்தால் அவை முறையே கொ, கோ ஆகும். கெகரத்திற்குப் பிறகு ஔகார வடிவத்தின் இரண்டாவது எழுத்து (ளகரம்) பொருந்தினால் கௌ ஆகும். ககர வர்க்கம் எனப்படும் இவ்வெழுத்துகள் யாவும் அடிநாக்கால் தொண்டையை அடைப்பதால் ஒலிப்பனவாகும் என்றவாறு.

இரு ஒற்றைக் கொம்புகளை அருகருகே எழுதி ஐ உயிர் ஏறிய மெய்யெழுத்தைக் காட்டும் வடிவமே பழைய கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றுள் காணப் படுகின்றது. கெ=கை. இவ்விரு கொம்புகளும் இணைந்தே

நாம் இன்று பயன்படுத்தும் 'ை' என்ற குறி தோன்றியது. இது இந்நூலாசிரியர் காலத்திலேயே வழக்கத்திற்கு வந்துவிட்டது. இவரும் தம் கைப்பட எழுதிய சுவடிகளில் இதனையே பயன் படுத்தியுள்ளார். எனவே தான் "இணைக்கொம்பு ஒன்றோ டொன்று இசைவுற" என்றார்.

''ககார ஙகாரம் முதல்நா அண்ணம்''[1] என்பது தொல்காப் பியம். உரையாசிரியர்களும் நன்னூலாரும்[2] ககரமும்ஙகரமும் நாவின் அடியும் அண்ணத்தின் அடியும் பொருந்தப் பிறக்கும் என்றே பொருள் கண்டனர். அண்ணத்தின் அடிப்பகுதி என அவர்கள் கொண்ட இடத்தையே இவ்வாசிரியர் மிடற்றின் மேற்பகுதி என உரைக்கிறார். இவ்வேறுபாட்டால் பெரிய மாறுபாடு இன்மை உணர்க. (18)

ஙகர வருக்கம்

19. கோஎனும் எழுத்தின் மூன்றாம் குறியின்
ஈற்று வரையைக் குறைத்து, திற் கூகரத்து
ஈறுஉறப் பொருத்தி, மேல்வரை பொருந்தா
வண்ணம்மேல் நீட்டல் ஙகரம் ஆகும்;
அங்நிலை வரைஇடம் கிக்கீ அணிபிறை
மருவிடில் ஙிகர ஙீகாரம் விளங்கும்;
அவ்வரை அடிதொட்டு அகர ஆகாரத்து
ஈறு கூட்டில் ஙுங்ஙூ இயங்கும்;
ஙாவொடு ஙெங்ஙே ஆதிய பிறவும்
காவொடு கெக்கே ஆதிய போல்வ;
அடிநா உள்நாத் தொடும்ஒலி யினவே.

கோ என்ற எழுத்தின் மூன்றாவது சின்னத்தின் (ா)கடைசி குத்துக்கோட்டைப் பாதியாகக் குறைத்து அவ்வடிவத்தோடு கூ என்ற எழுத்தின் இறுதியைச் சேர்த்து அதன் நுனியை நேராக மேலே நீட்டினால் ஙகரம் ஆகும்; அவ்வாறு கடைசியாக வரையப் பெற்ற குத்துக்கோட்டின் இடப்புறம் கி,கீ என்பவை

1 தொல். எழுத்து, 89.
2 நன்னூல் 79,

பெறுவன போன்ற பிறைகளைச் சேர்த்தால் ஙி,ஙீ தோன்றும்; கடைசிக் கோட்டின் அடிப்பகுதியோடு அகர ஆகாரங்கள் பெறும் ஈற்றுக் குறியைச் சேர்த்தால் முறையே ஙு,ஙூ வரும்; ஙா, ஙெ, ஙே முதலிய மற்றவை கா, கெ, கே போன்றனவே. நாக்கின் அடிப்பாகம் மேல்அண்ணத்தில் உள்ள சிறுநாக்கைத் தொடுவதால் இவ்வொலி பிறக்கிறது என்றவாறு.

இந்நூற்பாவுள் ஆதியபிற என்றது ஙை, ஙொ, ஙோ, ஙௌ என்பனவற்றையாம்.

தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் பிறப்பிடத்தையே இவர் வேறு வாய்பாட்டால் குறிப்பிடுகிறார்.

பொதுவாக உயிர்மெய் எழுத்துகளின் நெடிலுக்குச் சாரியை சேர்க்கும் மரபு இல்லை. இந்நூலாசிரியர் புதியன புகுத லாகக் கரம், காரம் எனும் இரு எழுத்துச் சாரியைகளையும் புணர்த்துக் கூகரம், ஙீகாரம் என ஆண்டிருக்கிறார். இப்புதிய சொல்லாட்சி இவ்வுரையிலும் கைக்கொள்ளப்பட்டுள்ளது. (19)

**சகரவருக்கம்**

**20. ஈற்றின் வளைவுஒன்று இன்றெனில் சகரம்**
**சகரம் ஆம்; அதன் ஈற்றுக் கிடைவரை**
**நடுஒரு சிறுவரை கீழ்நோக்கி நாட்டில்**
**சுகரம் ஆம்; அது தொட்டு வலம்சுழித்துக்**
**குகரத்து ஈறுஎன நிறுவிற் சூஆம்;**
**சாசி சீயொடு செகரம் ஆதிய**
**காகி கீயொடு கெகரம் போல்வன.**
**இவற்றின் தொனிநடு நாவில்நின் றெழும்கால்**
**துணைக்கொடு வரும்எனச் சொல்வது கடனே.**

சகரத்தின் கடைசியில் எழுதப்படுகின்ற (அங்குசம் போன்ற) வளைவு ஒன்று இல்லாவிடின் அதுவே சகரத்தின் வரிவடிவாம். சகரத்தின் கடைசிப் படுக்கைக் கோட்டின் நடுவே கீழ் நோக்கிய ஒரு சிறிய கோடு வரையப்பட்டால் சு என்ற எழுத்து ஆகும். அச்சிறுகோட்டை வலமாகச் சுழித்துக்

குகரம் போல முடித்தால் சூகாரம் ஆம். சா, சி, சீ, செ முதலியன கா, கி, கீ, கெ முதலியன போன்றே வரையப்படும். சகரத்தின் ஒலி நடு நாவிலிருந்து (மார்பில் இருந்து) வருகின்ற காற்றின் துணையைக் கொண்டு பிறக்கும் என்றவாறு.

இந்நூற்பாவுள் ஆதிய என்றது சே,சை, சொ, சோ, சௌ என்பனவற்றை.

தொனி நின்று கால் துணைக்கொடு வரும் என்க. நாவில் நின்று எழும் காற்று அன்று. உரையுள் நன்னூலார் மதம் பற்றி மார்பு வருவித்துக் கொள்ளப்பட்டது. இச்சூத்திரத்தில் முயற்சி கூறப்படவில்லை. எனினும் "சகார ஞகாரம் இடைநா வண்ணம்"[1] என்பதே இவர்க்கும் கருத்தாம். இது ஞகர வருக்கம் கூறும் அடுத்த நூற்பாவால் தெரிய வரும். (20)

## ஞகர வருக்கம்

**21.** **எகரத்து ஈற்றினில் சூஎனும் எழுத்தின்**
**ஈறுஉறு மாயின் ஞகரம் தோன்றும்;**
**சிச்சீ என்னும் பொறிகளின் பிறைகள்**
**மிகைபடக் கூனி இப்பொறி நடுநிலை**
**வரைமிசை நிற்பின் ஞிஞ்ஞீ வயங்கும்;**
**ஈற்றைமேற் கொணராது அகரமொத்து எழுதிக்**
**கீழ்இழா இடத்தே ஞுகரம் ஆகும்;**
**நதன்ஈறு பற்றி வலத்துஊர்த்து அவ்வரை**
**நடுஒரு தூண்பொரும் நல்வரை எழுதின்**
**ஞூகாரம்; ஞாவொடு ஞெஞ்ஞே ஆதிய**
**நாவொடு நெங்நே முதலிய பொறிகளின்**
**நிலைபெறீஇக் கிடப்பன. நீள்நா முற்புறம்**
**அண்ணா ஒன்றுறும் அவற்றின் தொனிக்கே.**

எகர வடிவத்தின் கடைசியில் சூகாரத்தின் இறுதிப்பகுதி இணையுமாயின் ஞகரம் ஆகும். சி, சீ. என்னும் எழுத்துகளின்

1 தொல். எழுத்து. 90

பிறைகள் சற்று அதிகமாக வளைந்து இவ்வெழுத்தின் (ஞ) டுவிலுள்ள குத்துக்கோட்டின் மேல் பொருந்தினால் ஞி, ஞீ தோன்றும். இதன் (ஞ) கடைசிப் பகுதியை மேல் பக்கமாகக் கொண்டுவராமல் அகரம் போல் வரைந்து கீழ்ப்புறம் இழுக் காமல் நிறுத்தின் அது ஞுகரம் ஆம். அவ்வடிவின் (ஞு) வலத்தே இழுத்து அக்கோட்டின் நடுவே கம்பத்தைப் போன்ற ஒரு நேர்கோடு (கீழாக) வரைந்தால் ஞூ ஆகும். ஞா, ஞெ, ஞே முதலியன ஙா, ஙெ, ஙே முதலிய எழுத்துகளின் குறிகளையே பெற்றுக் கிடக்கும். நீண்ட நாவின் முற்பகுதியும் மேல் அண்ண மும் பொருந்துவதால் இதன் ஒலி பிறக்கும் என்றவாறு.

இந்நூற்பாவுள் ஆதிய என்றது ஞை, ஞொ, ஞோ, ஞௌ ஆகிய நான்கு உயிர் மெய்களையாம்.

ஞி, ஞீ என்ற இகர ஈகாரக் குறிகள் எழுத்திற்குள் அடங்கியதாக இருத்தல் வேண்டுமென்பது இவர் கொள்கை. நல்வரை என்றது சாய்வற்ற நேர்கோட்டை. கீழ் என்பது வருவித்துரைக்கப்பட்டது.

"அ, ஆ எ ஒவ்வொடு ஆகும் ஞம்முதல்"[1] எனினும் மிகச் சிறுபான்மை ஞிமிறு என இகரம் பெற்றுவரினும் ஞகர வருக்க உயிர்மெய் அதிகமாக ஆளப்படாமையின் நிலைபெறீஇக் கிடப்பன என்றார்.

பிறப்புணர்த்துங்காலைத் தொல்காப்பியர் முழு நாவை யுங் கருத்தில் கொண்டு, "சகர ஞகாரம் இடைநா அண்ணம்"[2] என்றார். இவர் வாய்க்கு வெளியே நீளும் நாவைக் கருத்திற் கொண்டு அதன் முற்பகுதி என்றார். இதற்காகவே நாவிற்கு நீள் என்னும் அடை புணர்த்து வினைத்தொகையாக்கினார். இந்நூற்பாவுள் கூறப்பட்ட அண்ணத்தைச் சகரத்திற்கும் கொள்க. (21)

---

1 நன்னூல் 105
2 தொல். எழுத்து. 90

டகர வருக்கம்

22. நிலைவரை அடிதொட்டு அதன்இரு பங்கு
வலத்தில் நீட்டட் டகரம் ஆகும்; அக்
கிடைவரை நடுமேல் இடந்தொட்டு வலமாச்
சிறிது வளைத்து ஓர் தோட்டியிற் குறுக்காய்க்
கீழ்உற இழுப்பினும் அதன்தலை ஞீகர
மீக்குறி இடினும் டிட்டீ விளங்கும்;
முதல்வரை நடுவலம் தொட்டுஅடி அழியாது
ஒருகொம்பு எழுதினும் அதன்ஈ றளவில்
சுழிப்பினும் டுட்டூ ஒளிரும்; டாவொடு
டெமுதற் பிறவும் ஞாவொடு ஞெமுதற்
பிறவே போல்வன; நாநுனி அண்ணாத்
தொட்டுக் கீழ்வரத் தொனிப்பன ஆமே.

ஒரு செங்குத்துக்கோடு வரைந்துகொண்டு அதன் அடிப் பாகத்திலிருந்து வலப்புறமாக அக்கோட்டின் இரு மடங்கு நீளமுள்ள கோடு எழுதப்பட்டால் டகரம் ஆகும். அப்படுக் கைக்கோட்டின் நடுவே மேல்புறம் இடமிருந்து வலமாகக் கொஞ்சம் வளைத்து அங்குசம் போல அதைக் குறுக்கே வெட் டும்படி வரைந்தால் டி என்ற வடிவாம். படுக்கைக் கோட்டின் மீது ஞீகாரத்தின் மேல் சின்னத்தைச் சேர்த்தால் டீ ஆகும். முதலில் போடப்பட்ட செங்குத்துக்கோட்டின் நடுவில் வலப் புறம் தொடங்கிக் கோட்டின் அடிப்பாகத்தைத் தொடாமல் ஒரு கொம்பு வரைவதாலும், அவ்வாறு வரையப்பட்ட கொம்பின் கடைசியில் ஒரு சுழியைச் சேர்ப்பதாலும் முறையே டுகர டூகாரங்கள் தோன்றும். டா, டெ முதலிய பிற எழுத்துகள் யாவும் ஞா, ஞெ போன்றனவேயாகும். நாவின் நுனி அண் ணத்தோடு பொருந்திய பிறகு கீழே இறங்கினால் இவ்வொலி பிறக்கும் என்றவாறு.

இந்நூற்பாவில் டெ முதற் பிற எனக்குறிக்கப்பட்டவை டே, டை, டொ, டோ, டௌ என்றவைகளையாம்.

"டகர ணகாரம் நுனிநா அண்ணம்"[1] என்ற கருத்தே இது. ஆனால் நுனி அண்ணத்தைத் தொட்ட நாவின் நுனி அதை நீங்கிக் கீழே வந்த பிறகுதான் ஒலி பிறக்கிறது. இதனை உச்சரித்துப் பார்த்துக் கொள்ளலாம். இந்த நுட்பம் தெளிவாக இந்நூற்பாவுள் குறிக்கப்பட்டுள்ளது. (22)

**ணகர வருக்கம்**

**23.** **குறுகிய இரட்டைக் கொம்புஈறு எகரம்**
**பொருந்த ணகரம் பொலிதரும்; ஞகரம்**
**புணர்ந்துஅவ் வொருமுச் சுழியையும் முறையிற்**
**சுற்றி நடுச்சுழி மேல்வர ணூஆம்:**
**ஞிஞீ மேற்குறி ணவ்வொடு அம்முறையில்**
**சேர்தர ணிண்ணீ திகழ்தரும்; ஞுண்ஞூ**
**ணெண்ணே ணைஎனும் எழுத்தினம் ஞுஞ்ஞூ**
**ஞெஞ்ஞே ஞைஎனல் போலும் நிலையின;**
**உகரத்து அடியினைச் சிறிதுமேல் வலம்கொணர்ந்து**
**அதனொடு ணகரம் பொருத்த ணூஆம்;**
**ணொண்ணோ இரண்டும் கொம்புஇயல் வழாஅ**
**இருகுறி உடைத்தாய்ப் பிற்குறி ணுவாக்**
**கிடக்கும்;இப் பகுதியில் கிளர்தொனி எழுங்கால்**
**நுனிநா அடிப்புறம் அண்ணாத் தொட்டுத்**
**தடவும் என்று உரைப்பது தக்கோர் மரபே.**

நெருக்கி எழுதப்பட்ட இரட்டைக்கொம்பின் (ை) இறுதியில் எகரம் இணைந்தால் ணகரம் ஆகும். (இரட்டைக்கொம்பின் ஈற்றில்) ஞகரம் சேர்த்து அதனால் உண்டான மூன்று சுழிகளையும் வலமாகச் சுற்றி இடைச் சுழியின் மேல் வரை வரைந்தால் ணா தோன்றும். ஞி, ஞீ என்பனவற்றின் மேற் பிறைகள் அவ்வாறே கூடின் முறையே ணி, ணீ உண்டாகும். ணு, ணூ, ணெ, ணே, ணை என்பவை முறையே ஞு, ஞூ ஞெ, ஞே, ஞை போன்றவையேயாம். உகரத்தின் கீழ்ப்பகுதியைக் கொஞ்சம் வலப்புறமாக மேலேற்றி அதனுடன்

1 தொல். எழுத்து. 91

ணகரத்தை இணைத்து எழுதினால் ணே ஆகும். ணெ, ணே என்ற இரு எழுத்துகளும் குறில் நெடிலுக்கு உரிய கொம்புகள் மாறாமல் இரண்டு குறிகளை உடையனவாகவும், இரண்டாவது குறி ணுவின் வடிவமாகவும் இருக்கும், இந்த ணகரவருக்க எழுத்துகளுக்கு உரிய ஒலி உண்டாகும் போது நுனிநாவின் கீழ்ப்பகுதி அண்ணத்தைப் பொருந்தித் தடவும் என்று கூறுதல் இலக்கணம் அறிந்த சான்றோர்களின் வழக்கமாம் என்றவாறு.

தொல்காப்பியமும் நன்னூலும் நுனிநாவும் அண்ணமும் பொருந்த ட, ண பிறக்கும் என்கின்றன.[1] இங்கே வருடுதல் கூறப்படவில்லை. ஆனால் ரகரழகரத்தைப் பற்றி இந்நூல்கள் "நுனிநா அணரி அண்ணம் வருட ரகர ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்"[2] எனவும், "அண்ணம் நுனிநா வருட ரழவரும்"[3] எனவும் கூறுகின்றன. ணகரத்தை உச்சரித்துப் பார்த்தால் வருடுதல் தெரிகிறது. ணகரத்திற்கும் ரகரழகரங்களுக்கும் ஒலி வேற்றுமை எவ்வாறு உண்டாகிறது? ணகரத்தைக் கூறும்போது நாக்கு மடிந்து அடிப்பகுதி மேல்அண்ணத்தை வருடுகிறது. மற்ற இரு எழுத்துகளுக்கும் நேராக-அதாவது நாவின் மேற்பகுதி வருடுகிறது. இந்த வேறுபாடு நுனிநா அடிப்புறம் அண்ணாத்தொட்டு என மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நுனிநாவின் மேற்புறம், கீழ்ப்புறம் எனப்பிரித்துக் காட்டும் முதல் இலக்கணநூல் இதுவே.

தடவுதல் முன்னூல்களிற் சொல்லப்படாததாலும், நாவின் அடிப்பகுதி எனப்புதிய பாகுபாடு கைக்கொள்ளப்பட்டதாலும் புதுமை என்பதால் மட்டுமே புறக்கணித்து விடாமல், சரியான தாயின் ஏற்றுக்கொள்ளும் சான்றாண்மை உடையவர் ஏற்பர் என்ற கருத்தில் தக்கோர் மரபே என்றார். (23)

### தகர வருக்கம்

**24. சகரத்து ஈற்று வரையினைக் குறுக்கிக்
கீழுற இழுக்கில் தகரம் ஆகும்;**

---

1 தொல். எழுத்து. 91 நன்னூல் 78 3 நன்னூல் 83

2 தொல். எழுத்து. 95

அவ்வரை இடம்சாய்த்து அதனொடு ஞுண்ஞூப்
பிற்குறி இசைக்கில் துகரமும் தூவும்
துலங்கும்; மற்றைய பொறி எலாம் முதற்சொல்
வருக்கம் போலும் நிலைகொடு வயங்கும்.
மேற்பல் உட்புறத்து அடியின் நாஒன்ற
ஒலிப்பன வாம்என்று உரைத்திடத் தகுமே.

சகர உயிர்மெய்யின் கடைசியில் வரையும் கோட்டைச் சிறியதாக்கிக் கீழே இழுத்தால் தகரத்தின் வரிவடிவம் ஆகும். கீழே இழுக்கும் கோட்டை இடப்புறமாக வளைத்து அதனுடன் ஞுகர ஞூகாரங்களுக்குரிய ஈற்றுச் சின்னத்தைப் பொருத்தினால் முறையே துகர தூகாரம் தோன்றும். (தகர வருக்கத்தின்) பிற உயிர்மெய் வடிவங்கள் எல்லாம் இந்நூற்பா முதலில் சொல்லப்பட்ட சகர வருக்கத்தின் வரி வடிவக் குறிகளையே பெறும். மேற்பல்லின் உட்பாகத்தில் நாக்கின் நுனி சென்று பொருந்தினால் தகர வருக்க உயிர் மெய்கள் ஒலிக்கும் என்றவாறு

மற்றைய என்றது தா, தி, தீ, தெ, தே, தை, தொ, தோ தௌ என்பனவற்றை. (24)

### ஙகர வருக்கம்

25. ஙகரத்து ஈற்று நிலைவரை யுடன்அதன்
அடிதொடும் இடத்துக் கிடைவரை தவிரவும்
நகரம் தோன்றும்; நாமுதற் பிறஞா
முதலின போன்றே மொழிதரும் நிலையின.
தகரந் தோன்றிய தானத்து உட்புறம்
மெல்லென் நுனிநாத் தொடும்ஒலி யினவே.

ஙகர வரிவடிவின் கடைசியில்உள்ள குத்துக்கோடும், அதன் அடிப்புறமிருந்து (வலப்புறம் வரும்) படுக்கைக்கோடும் நீக்கப்பட்டு விட்டால் ந எனும் எழுத்து ஆகும். நா முதல் நௌ வரையான மற்ற உயிர்மெய்யெழுத்துகள் பதினொன்றும் ஞா. முதலியவற்றின் துணைக்குறிகளையே பெறும். தகரம் தோன்றும் இடத்திற்கும் சற்று உட்பக்கமாக (மேற்பல்லின்

உட்புறம்) நா நுனி மென்மையாகத் தொடுவதால் நகரவோசை பிறக்கிறது என்றவாறு.

"அண்ணம் நண்ணிய பல்முதன் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத் தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்"[1] என்ற நூற்பாவிற்குப் "பல்லின் அடியில் தகாரமும் அதன் மருங்கில் நகாரமும் பிறக்கும் என நிரல் நிறைவகையாற் பொருள் கொள்ளினும் பொருந்தும்[2] எனப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் கருதுகிறார். இவ்வாசிரியர் அவ்வாறே தகரம் தோன்றும் இடத்தைவிடச் சற்று உள்ளே தள்ளி நகரம் தோன்றும்என்கிறார். அழுத்தமாக நுனிநா ஒன்றினால் தகாரமும் மெதுவாகப் பொருந்தினால் நகாரமும் தோன்றும் என்னும் வேறுபாடும் இதில் கூறப்பட்டது. (25)

### பகர வருக்கம்

**26. டகரத்து ஈற்று வரையினைக் குறைத்து**
**வலத்தும் ஓர்நிலை வரைஇடில் பகரம்;**
**மூன்றுதொட்டு ஆறு வரையினும் நகர**
**வருக்கத்து அவ்வத் தொகைஎழுத்து உறுகுறி**
**பொருந்தும்; பாவொடு பெகரம் ஆதிய**
**தகர வருக்கத் தன்மையிற் பிறங்கும்;**
**மொழிதரு தொனிஇதழ் மூடித் திறக்குமே.**

ட என்ற எழுத்தின் இரண்டாவதான படுக்கைக் கோட்டின் நீளத்தைக் குறைத்து அதன் வலப்பாகத்தே ஒரு குத்துக்கோடு வரைந்தால் பகரம் ஆகும். பி என்னும் மூன்றாவது முதல் பூ என்னும் ஆறாவது உயிர்மெய் வரை உள்ளவை நி முதல் நூ வரை எழுதப்படுவது போலவே எழுதப்படும். பா, பெ முதலிய மற்ற பகர வருக்க உயிர்மெய்கள் (தா, தெ முதலிய) தகரவருக்க எழுத்துகளின் துணைக்குறிகளையே பெற்று விளங்கும். உதடுகள் (ஒருமுறை) மூடித்திறந்தால் இதன் ஒலி பிறக்கும் என்றவாறு.

---

1 தொல். எழுத். 93

2 தொல். நன்னூல்-எழுத்ததிகாரம் பக். 113

வலத்தும் என்ற எச்ச உம்மை டகர எழுத்திலேயே இடப் புறம் உள்ள குத்துக்கோட்டைக் கருதியது ஆகும். பெகரம் ஆதிய என்றது பே, பை, பொ, போ, பௌ என்னும் உயிர் மெய்களையாம். (26)

மகர வருக்கம்

27. பகரத்து ஈற்று வரையினைக் குறைத்துஇடம்
வளைத்துக் கிடைவரை பொருந்த நாட்டில்
மகரம் ஆம்; அதன் ஈறுதொட்டு அதன்மேல்
ஞிஞ்ஞீ உறுகுறி பொருந்திடில் மிம்மீ;
அவ்விடம் தொட்டே அதன்கீழ் இடமாச்
சுற்றிமேல் நிறுவில் முகரம் தோன்றும்;
அவ்வீறு சுழிக்கின் மூகாரம் ஆகும்;
மாவொடு மெகரம் ஆதிய யாவும்
முற்பகர் இனமே போலும் குறிப்பின;
தொனியும்அவ் வாறே தோன்றிச் சிறிது
பேதம் ஆகி மெல்லெனப் பிறக்குமே.

ப என்ற எழுத்தின் கடைசி நேர்கோட்டின் உயரத்தைக் குறைத்து இடப்புறமாக வளைத்துக் கொண்டு வந்து படுக் கைக் கோட்டைத் தொட்டால் மகர வரிவடிவம் ஆகும். மக ரத்தின் ஈற்றில் அதன்மேல் ஞி, ஞீ என்பனவற்றிற்குரிய பிறை களைச் சேர்த்தால் முறையே மி, மீ ஆகும். (வளைத்துக் கொணர்ந்து அடிக்கோட்டொடு பொருத்திய) அவ்விடத்தி லிருந்தே அவ்வளைவிற்குக் கீழ் இடப்புறமாகச் சுழித்து (அவ் வடிவம் முழுவதையும்) சுற்றி மேலே கொண்டுவந்து முடித் தால் அது மு என்ற எழுத்து ஆகும். இவ் வளைகோட்டின் கடைசியில் சுழித்தால் மூகாரம் தோன்றும். மா, மெ முதலிய மற்றவை எல்லாம் (இந்நூற்பாவுக்கு) முன் கூறப்பட்ட பகர வருக்கத்தைப் போன்ற குறிகளையே பெறும். இதன் ஒலியும் பகரவொலியைப் போன்றே பிறந்து அதனினும் சற்று வேறு பட்டு மென்மையாகப் பிறக்கும் என்றவாறு.

தொனியும் என்பதிலுள்ள எச்ச உம்மை வரிவடிவத்தைக் கருதியது. மகரம் மெல்லெனப் பிறக்கும் என்றதால் அருத்தா

பத்தியாகப் பகரம் வல்லெனப் பிறக்கும் என்பது பெறப்பட்டது. மெகரம் ஆதி என்றது மே, மை, மொ, மோ, மௌ ஆகிய உயிர்மெய்களையாம். (27)

### யகர வருக்கம்

**28. பகர எழுத்தின் முதல்நிலை வரைவலத்து
இடம்சிறிது ஒடுங்க நடுஒரு நிலைவரை
அவ்விரு வரைகளின் அளவில் காட்ட
யகரம் தோன்றும்: யாமுதல் யௌவரை
பாமுதல் பௌவரை நிகழ்வதின் நிற்பன.
நுனிநா மேற்புறம் அடிப்பல் உட்புறத்து
ஒன்றக் களம்தரு கால்துணை பற்றி
இகரஞ் சார்ந்துஒலி தரும்எனல் இயல்பே.**

பகரத்தின் முதல் செங்குத்துக் கோட்டிற்கு வலப்பக்கமாகவும், இடதுபுறப்பகுதி வலப்பகுதியைவிடச் சற்றுக் குறுகியதாக இருக்கும் படியும், (ப வடிவில் உள்ளனவாகிய) இரு கோடுகளின் உயரத்திற்குச் சமமாகவும் அவற்றின் நடுவே ஒரு கோடு வரையப்படின் அது யகர வரிவடிவம் ஆகும். யா முதல் யௌ வரையான உயிர்மெய்கள் அனைத்தும் பா முதல் பௌ வரை போன்றே விளங்கும். நுனிநாவின் மேற்பகுதி அடிப்பற்களின் உட்புறம் பொருந்த, மிடற்றுவளியின் துணை கொண்டு இகரத்தோடு சார்புற்று யகரம் பிறக்கும் என்றவாறு.

''அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும்''[1] என்ற தொல்காப்பியத்தின் இளம்பூரணர் உரையைத் தழுவிப் பவணந்தியார், ''அடிநா வடியண முறயத் தோன்றும்''[2] என்கிறார். ஆனால் இலக்கண விளக்கமுடையார் முற்குறித்த தொல்காப்பிய நூற்பாவின் நச்சினார்க்கினியர் உரையை அடியொற்றி, ''அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற்றடைய யகாரமும்'' என்றே சூத்திரஞ் செய்து அதன் உரையையும் நச்சரைப்

---

1 தொல். எழுத்து. 99

2 நன்னூல் 82

போன்றே வகுத்து நன்னூற் சூத்திரத்தை மறுக்கிறார்.[1] இவ்வாசிரியர்கள் ஐவரும் யகரத்தின் பிறப்பிற்கு அடிநாவையும் மேல் அண்ணத்தையுமே முயலிடமாக்கினர். ஆயின் இந்நூலாசிரியர் இக்குழப்பத்தை யொழித்துத் தெளிவேற்படுத்த வேண்டி நாவின் நுனியையும் அடிப்பற்களையும் வைத்துக் காட்டுகிறார். நாவின் நுனி உட்புறம் கீழாக வளைந்து அதன் மேற்புறம் அடிப்பல்வரிசையின் உட்புறம் பொருந்துவதால் யகரம் பிறப்பதை உச்சரித்து உணர்ந்து கொள்ளலாம். இவர் நாவின் மேற்பகுதி கீழ்ப்பகுதி எனப் புதியதாகப் பாகுபாடு செய்து கொண்டதால் இது எளிமையாயிற்று.

"அகரத்து இம்பர் யகரப் புள்ளியும் ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"[2] "அம்முன் இகரம் யகரம் என்றிவை எய்தின் ஐஒத்து இசைக்கும்"[3] "இகர யகரம் இறுதி விரவும்"[4] என்ற நூற்பாக்கள் யகரத்தின் இகரச் சார்பினை மறைமுகமாகக் காட்டுகின்றன; இந்நூல் நேராகக் கூறுகிறது. ஆராயுமிடத்து இதில் புதுமையோ அன்றி முரணோ இன்மை தெளிவாகும். (28)

ரகர வருக்கம்

**29. யாஎனும் எழுத்தின் இரண்டாம் குறியே**
**ரகரம்ஆகும்; நிந்நீ உறுகுறி**
**பொருந்த ரிகர ரீகாரம் தோன்றும்;**
**ரகர ஈற்றின் நிலைவரை நடுவலந்**
**தொட்டு ஞாறு புணரினும், அதன்நுனி**
**சுழிப்பினும் ருகர ரூகாரம் ஒளிர்தரும்;**
**ராவொடு ரெகரம் ஆதிய யாவும்**
**முன்முறை பிறழா வண்ணம் கிடக்கும்.**
**நுனிநா அண்ணா மெல்லெனத் தொட்டுப்**
**பின்னுறத் தடவில் பிறங்கொலி யினவே.**

யா என்ற எழுத்தின் இரண்டாவது சின்னமே (கால்) ரகர வரிவடிவம் ஆகும். நி, நீ போன்ற பிறைகளோடு சேர்ந்தால்

---

1 இலக். விளக். 12
2 தொல். எழுத்து. 56
3 நன்னூல் 125
4 தொல். எழுத்து. 58

முறையே ரிகரமும் ரீகாரமும் ஆகும். ரகரத்தின் கடைசிக் குத்துக்கோட்டின் நடுவில் வலப்புறத்தில் இருந்து ஞ என்ற எழுத்தின் இறுதி வளைகோடு பொருந்தினாலும், அவ்வளை கோட்டின் நுனியில் சுழித்தாலும் முறையே ரு, ரூ தோன்றும். ரா, ரெ முதலியன யாவும் முன் நூற்பாவில் (யகர வருக்கம். கூறப்பட்டபடியே சற்றும் மாற்றமின்றி இருக்கும். நாநுனி அண்ணத்தை மெதுவாகத் தொட்டு அண்ணம் பின்னேபோகும் படி (நாவை முன்பக்கமாகத்) தடவுவதால் ரகரம் பிறக்கிறது என்றவாறு.

ஓலைச்சுவடி, செப்பேடு, கல்வெட்டு ஆகியவற்றுள் ரகரமும் உயிர்மெய் நெடிலைக் காட்டும் காலும் (ா) ஒரே மாதிரி எழுதப்பெறும். நாம் இப்போது பயன்படுத்தும் ரகர வரிவடிவம் கிரந்த எழுத்தின் திரிபு ஆகும். இதுபற்றியே இந்நூற்பாவுள் கால் ரகரமாகக் கூறப்பட்டது. இதில் ரெகரம் ஆதிய என்றது ரே, ரை, ரொ, ரோ, ரௌ என்பனவற்றை. (29)

### லகர வருக்கம்

30. ரௌஎனும் பொறியின் கடைக்குறி யதன்முற்
பகுதி காட்டி அதன்ஈறு பற்றி
வலமா மேலுற வளைத்திடல் லகரம்;
அவ்வளை வதன்வலத்து அடிதொட்டுக் கீழ்க்
கொணர்ந்து
அதன்வலந் தொட்டு நுந்நூப் பிற்குறி
பொருத்த லுகர லூகாரம் பொலிதரும்;
ஊயெழுத்து இயல்பே லீகாரம் மன்னும்;
லாகாரம் லிகர லீகாரம் லெகர
லேகாரம் லொகர லோகாரம் லௌஎனும்
எட்டும் யகரத்து இனம்என இசைவுறும்.
நாநுனி அண்ணா முன்னோக்கித் தடவும்
ஒலியின வாகும்என்று உரைத்திடல் முறையே.

ரௌ என்ற எழுத்தின் ஈற்று அடையாளத்தின் (ள) முற்பாதியை வரைந்துகொண்டு அதன் கடைசியிலிருந்து வலமாக மேல்நோக்கி வளைத்தால் அது லகரத்தின் வரிவடிவம் ஆகும்.

அவ்வளைவில் வலப்புறம் கீழிருந்து நு, நூ என்பனவற்றிற் குரிய இறுதிப்பகுதியைச் சேர்த்தால் முறையே லு, லூ தோன்றும். லீயின் வடிவம் ணீயின் வடிவத்தைப் போன்ற தேயாம். லா லி, லீ, லெ, லே, லொ, லோ, லௌ என்னும் எட்டு உயிர்மெய்களும் யகரவருக்கத்தின் அவ்வவ்வுயிர்மெய் களைப் போன்றே விளங்கும். நாவின்நுனி அண்ணத்தை முன் நோக்கித் தடவுவதால் இவ்வொலி பிறக்கும் என்றவாறு.

''நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற ஆவயின் அண்ணம் ஒற்றவும்'' [1] எனத் தொல்காப்பியரும், ''அண்பல் முதலும் அண்ணமும் முறையின் நாவிளிம்பு வீங்கி ஒற்றவும்''[2] என நன்னூலாரும் மேல்நோக்கி வளைவதால் நாவின் ஓரங்கள் சற்றுப் பருத்தலைக் குறிப்பிட்டனர். இந்நூற்பா நாவின் விளிம்பைப் பற்றிக் கூறாமல் நுனிநா அண்ணத்தை முன்னோக் தடவலகரம் தோன்றும் என்கிறது. அண்ணத்தை முன்னோக்கித் தடவும் என்றதால் மேல்நோக்கி வளைந்து பின்னால் ஒற்றியது தானே பெறப்படுகிறது. ஒற்றினாலேயே லகரம் பிறக்கும் என முன்னூல்கள் இரண்டும் கூறினும் தடவினால் தான் லகரவோசை தோன்றுமென்பதை உச்சரித்துப் பார்த்து உணரலாம். (30)

**வகா வருக்கம்**

**31. பகரத் தலைநிலை வரைச்போய்ச் சுழியுறில்**
**வகரம் தோன்றும்; மற்றைய பதினோர்**
**எழுத்தும் அவ்வாறு இசைவுறில் இவையாம்;**
**மேற்பல் நுனிஅடி இதழில் பொருந்தத்**
**தொனிப்பன வாம்எனச் சொல்வது துணிவே.**

பகரத்தின் ஆரம்பத்திலுள்ள நேர்கோட்டிற்குப் பதிலாக ஒரு சுழி வரையப்பட்டால் அது வகரத்தின் வரிவடிவம் ஆகும். மற்ற பதினோர் உயிர்மெய்களும் பகரவருக்கத்தின் குறிகளை அப்படியே பெறும். மேல் வரிசைப் பற்களின் நுனி கீழ்உதட்டில் பொருந்தினால் வகரம் பிறக்கும் என்றவாறு.(31)

---

1 தொல். எழுத்து. 96
2 நன்னூல் 84

### ழகர வருக்கம்

**32. மகரத்து ஈற்றைத் தொட்டுச் சிறிது**
**கீழ்இழுத்து அதன்வலம் தோட்டி இசைக்க**
**ழகரம் தோன்றும்; ழாமுதற் பிறஎலாம்**
**மாமுதற் பிறவே போல மன்னும்.**
**நாவளைந்து உள்வாங்கு ஒலியின வாமே.**

ம என்ற வரிவடிவின் கடைசி வளைவைச் சற்றுக் கீழே நீட்டி அதன் வலப்புறம் ஒரு அங்குச வடிவத்தைப் பொருத்தினால் ழகர வரிவடிவம் ஆகும். ழா முதலிய பிற உயிர்மெய்கள் அனைத்தும் மா போன்றனவற்றைப் போன்றே விளங்கும். நா மேற்புறமாக நன்றாக உள்வாங்கி வளைந்து அண்ணத்தைத். தடவுவதால் ழகர ஒலி பிறக்கும் என்றவாறு.

ரகர ழகரங்கள் இரண்டும் நுனிநா அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கின்றன. ஆனால் ரகரத்திற்கு வளைவதை விட அதிகமாக நா உட்புறம் வளைந்து ழகரத்தைத் தோற்றுவிக்கிறது மேலும் ரகரத்திற்கு மென்மையாகவும் ழகரத்திற்குச் சற்று அழுத்தமாகவும் அது அண்ணத்தோடு பொருந்துகிறது. இந்நுட்பமான வேறுபாடுகளைக் காட்டவே ரகரப்பிறப்பில் ''மெல்லெனத் தொட்டு'' எனவும் இங்கு ''உள்வாங்கு'' எனவும் உரைத்தார். இந்நூற்பாவை 29 ஆம் சூத்திரத்தோடு மாட்டேற்றிக் கொள்க. அருத்தாபத்தியால் ரகரத்திற்கு நா வளைவு சற்று வெளிப்புறமானது என்பதுவும், ளகரம் அழுந்தி ஒன்றப் பிறக்கும் என்பதுவும் பெறப்பட்டன. இந்நூற்பாவில் இடம் பெறாத அண்ணமும் வருடலும் அந்நூற்பாவிலிருந்து பெறப்பட்டன. (32)

### ளகர வருக்கம்

**33. ஒளஎனும் எழுத்துஎம் மெய்யொடு புணரினும்**
**தொடரும்ஈற்று எழுத்தே ளகரம் ஆகும்;**
**ஊக்குறி பொருந்தி ளூயெனல் விளங்கும்;**
**மற்றைய எழுத்தோர் பத்தும் ரகர**
**வருக்கம் போன்றே மன்னுநீஇக் கிடக்கும்;**

**அண்ணா அடியில் நுனிநா அடிதொட்டு**
**ஒலிப்பன வாம்என்று உரைத்திடல் உரித்தே.**

ஔகார உயிர் ஏறிய அனைத்து உயிர்மெய்களின் வடிவத்திலும் கடைசியில் வரையப்படும் எழுத்தே ளகரம் ஆகும். ஊகாரம் பெறும் சின்னத்தைப் பெற்று ஊ என்ற எழுத்து விளங்கும். மற்ற பத்து உயிர்மெய்களும் ரகர வருக்கத்திற்குரிய குறிகளையே பெற்றிருக்கும். அண்ணத்தின் அடிப்பகுதியில் நுனிநாவின் அடிப்பாகம் பொருந்தி வருடுவதால் இவை ஒலிக்கின்றன என்றவாறு.

நாவிளிம்பு வீங்கி ஒற்றுதல் லகரத்திற்கும், வருடுதல் ளகரத்திற்கும் உரிய சிறப்பு முயற்சி என்பது தொல்காப்பியர், பவணந்தியார் கருத்தாம்.[1] இவ்வாசிரியர் வருடுதலைப் பொதுவாக்கி நா நுனியின் மேற்புறம் மேல் அண்ணத்தை வருட லகரம் தோன்றும் எனவும், நா வளைந்து அதன் கீழ்ப்புறம் அடி அண்ணத்தை வருட ளகரம் பிறக்கும் எனவும் தெளிவாக்குகிறார். முன்னூல்கள் மெய்யெழுத்துகளுக்கு மட்டுமே பிறப்புணர்த்தின. இவர் உயிர்மெய்கள் அனைத்திற்கும் பொதுவாகக் கூறுகின்றார். ல, ள மெய்களை மட்டுமன்றி அவ்வருக்க உயிர்மெய்களையும் உச்சரித்துப் பார்த்தால் வருடுதல் பொதுவென்பதும், பொருந்தும் பகுதிகளே சிறப்பென்பதும் தெற்றென விளங்கும். இந்நூற்பாவுரையுள் வருடுதல் என்ற தொழில் முப்பதாம் சூத்திரத்திலிருந்து வருவித்துக் கொள்ளப்பட்டது. (33)

### றகர வருக்கம்

**34. கீழ்நோக்கி இருவளைவு ஒன்றொடொன்று இட்டு**
**வலத்துள வரையைக் கீழுற இழுத்திட**
**றகரம் தோன்றும்; அவ்வரை அளவில்**
**தொட்டுக் குகரத்து ஈறு காட்ட**
**றுஎனல் விளங்கும்; றெகர றேகாரத்து**
**இதுசேர்ந்து ஈருரு வாகச் செய்யும்;**
**றிகரம் ஆதி றைவரை ஏழும்**

1 தொல். எழுத்து. 96, நன்னூல் 84

**றௌவும் தகர வருக்கம் போன்றே**
**அமைவுறும் குறியின; அண்ணா வதனை**
**நுனிநாப் பின்னர் நோக்கித் தடவ**
**உருமி போலும் ஒலிதரும் அன்றே.**

ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும்படி கீழ் நோக்கிய இரண்டு வளைவுகளையிட்டு வலப்புறம் உள்ள கோட்டைக் கீழே இழுத்தால் றகர வடிவம் ஆம். (வலப்புறத்தில் உள்ள) அக்கோட்டில் தொடங்கிக் குகரம் போல் முடித்தால் று தோன்றும். றுகரம், றூகாரம் ஆகிய இரண்டினும் இந்நெடிற்குறியே இடம் பெற்று இரண்டு குறிகளை உடைய வரிவடிவமாகும். (ஒகர ஓகாரம் ஏறிய கொ, ளோ போன்ற பிற உயிர்மெய்களைப் போல் மூன்று குறிகளைப் பெறா). றிகரம் முதல் றைகாரம் வரையான ஏழும், றௌவும் தகர உயிர்மெய்களைப் போன்றே எழுதப்படும் குறிகளை உடையன. நா நுனி அண்ணத்தைப் பின்னோக்கித் தடவுவதால் உருமிமேளத்தைப் போன்ற ஓசையோடு றகரம் பிறக்கும் என்றவாறு.

உருமியை ஒருமுறை தடவினால் முதல் ஒலி எழுவதுடன் நின்றுவிடாமல் தோல் அதிர்வு தொடர்ந்து சற்றுநேரம் ஒலித்துக் கொண்டே இருக்கும். றகர ஓசையும் இப்பெற்றியதா தலைக் காற்று, குற்றம் போன்றவைகளை உச்சரித்து அறிந்து கொள்ளலாம். இடையின ரகரத்திற்கும், ஈற்று னகரத்திற்கும் இதற்கும் உள்ள தலையாய வேறுபாடு இத்தொடரொலியே. (34)

### னகர வருக்கம்

**35. குறுகிய ஒற்றைக் கொம்புடன் எகரம்**
**பொருந்த னகரம் பொலிதரும். மற்றைப்**
**பதினோ ரெழுத்தும் ணகர வருக்கத்து**
**இயல்பே விளங்கும்; இவற்றின் தொனியால்**
**முன்நா அண்ணா முட்டும் அன்றே.**

முற்பாதி வடிவத்தை மட்டும் உடைய ஒற்றைக் கொம்புடன் (ெ) எகர வடிவம் இணைந்தால் னகரம் தோன்றும். இவ்வருக்கத்தின் மற்ற உயிர்மெய்கள் பதினொன்றும் னகர உயிர்மெய்க் குறிகளையே பெறும். நாநுனி அண்ணத்தைப் பொருந்துவதால் னகர ஒலி தோன்றும் என்றவாறு.

இவ்வீற்று னகரம் தமிழ்மொழி ஒன்றைத் தவிர வேறு எம்மொழியிலும் இல்லை. இதனைக்காட்டவே முன்நா அண்ணா முட்ட னகரம் பிறக்கும் எனக் கூறாமல் தமிழில் உள்ள னகரத்தை உச்சரித்தால் முன்நா அண்ணா முட்டும் என்று மாற்றிக் கூறினார்.

இனித் தொடர்ந்து நிறுத்த முறையானே அலகெழுத்து கூறப்படும். (35)

## 5. அலகெழுத்துகள்

**36. உயிர்மெய் எழுத்தும் உரைக்குமாறு உரைத்தனம்;**
**அலகினைக் கீழ்என நடுஎன மேல்என**
**அளவுஎனப் பிரித்துஅவ் வாறே அவற்றின்**
**உருவுடன் ஒலியும் உரைக்குதும் முறையே.**

உயிர்மெய்யெழுத்துகளை எந்த அளவு உரைக்க இயலுமோ அந்த அளவு கூறினோம். இனி நிறுத்த முறையானே அலகெழுத்துகளைக் கீழ், நடு, மேல், அளவு என நான்கு பகுப்பாக்கி அம்முறைமையிலேயே அவற்றின் வரிவடிவத்தோடு பெயரையும் கூறுவாம் என்றவாறு.

நூற்பா 'ஒலி' என்றே குறிப்பினும் அலகுக்குறியீடுகள் ஒலிக் குறியீடுகளாக அன்றிச் சொற்குறியீடுகளாகவே இருத்தலின் உரையில் பெயர் என்று கூறப்பட்டது. கீழ் முந்திரி (1/102400) முதல் முந்திரி (1/320) வரை உள்ள பின்னங்கள் கீழ் அலகு என்றும் முந்திரி முதல் ஒன்றுவரை உள்ள பின்னங்கள் நடு அலகு என்றும், ஒன்றிற்கு மேற்பட்ட முழு எண்கள் மேல் அலகு என்றும், முகத்தலளவை பற்றிய எண் வடிவங்கள் அளவலகு என்றும் பிரித்துக் கொள்ளப்பட்டன.

அலகெழுத்துகளை இங்ஙனம் பகுத்துக் கொண்ட ஆசிரியர் அவற்றை விரித்துக் கூறத்தொடங்கி நிறுத்த முறையானே முதற்கண் கீழலகை எடுத்துக் கொள்கிறார். 36

### கீழ் அலகு

**37. ணவ்வே முந்திரி; டஅரைக் காணி;**
**நிலைவரை ஒன்றே காணி ஆகும்;**
**தவ்வே மா; அதன் ஈற்றைக் குறைத்து**
**வலப்புறம் நீட்டல் இருமா ஆகும்;**
**கூவொடு சூவும் மும்மா நான்மா;**
**எகரமும் ளகரமும் கால்அரை; உகரத்து**
**ஈற்றைக் குறைத்துஒரு ரகரம் பொருத்தில்**
**முக்கால் எனப்படும்; அரைமா அரைக்கால்**
**ஆதிய பிறவும் அலகு நிலையில்**
**பிறழா இயல்பிற் பிறங்கும் ஆதலின்**
**கிளத்திலம்; இவைதாம் கீழ்அலகு உறுப்பே.**

ணகரம் கீழ்முந்திரியின் (1/102400) குறியீடாகும். டகரம் கீழ் அரைக்காணியைக் (1/51200) குறிக்கும். ஒரு தனி செங்குத்துக்கோடு (1) கீழ்க்காணியைச் (1/25600) சுட்டும். தகரம் கீழ்மாவின்(1/6400) குறியாம். தகரத்தின் கடைசிப் பகுதியாகிய கீழ்க் கோட்டின் நீளத்தைக் குறைத்து வலப்புறம் நீட்டினால் கீழ் இருமா (1/3200) எனப்படும்.

கூ, சூ ஆகியன முறையே கீழ்மும்மா (3/6400), கீழ்நான்மா (1/1600) என்பனவற்றைச் சுட்டும். எகர ளகர வடிவங்கள் முறையே கீழ்க்கால் (1/1280), கீழரை (1/640) ஆம். உகர வடிவின் படுக்கைக் கோட்டின் நீளத்தைப் பாதியாக்கி அத்துடன் ரகரத்தை இணைத்தால் கீழ்முக்கால் (3/1280) எனப்படும். கீழ்அரைமா(1/12800) கீழ்அரைக்கால்(1/2560) என்பன போன்ற பிற பின்னங்கள் அவ்வவற்றிற்குரிய குறியீடுகளை இணைத்து எழுதுவதால் பெறப்படுகின்றன. எனவே கூறாதனவற்றை உய்த்து உணர்ந்துகொள்ளலாம். ஆதலின்ஈண்டுத் தனித்தனியே கூறிற்றிலம். கீழ் அலகின் குறியீடுகள் இவைகளே என்றவாறு.

நூற்பாவில் முந்திரி முதலிய ஒவ்வொரு பின்னத்திலும் கீழ் என்னும் சொல் இடம் பெறாவிடினும் கீழலகு அதிகாரப்பட்டமையின் உரையில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆசிரியர் கருத்தும் அதுவேயாதல் அடுத்த நூற்பாவில் அவர் கீழ்முக்கால் என்பதால் தெளிவாகிறது.

இவ்வாசிரியர் கீழலகுகட்கும் நடுவலகுகட்கும் தனித்தனி குறியீடுகளைக் கூறுகிறார். எனினும் கீஎன்ற எழுத்திற்குப்பின் நடுவலகுக் குறியீட்டை வரைந்து அது கீழலகு எனப் பிரித்துக் காட்டும் வழக்கமும் நடைமுறையில் இருந்ததாகத் தெரிகிறது. தமிழ் முறைக் கணிதப்பயிற்சி முற்றிலும் வழக்கொழிந்தமையின் பெரும்பான்மையான அலகின் பெயரும் குறியீடும் நின்று நிலவாதொழிந்தன. (37)

### நடு அலகு

38. கீழ்முக் காலொடு ருகரத்து ஈறு
பொருந்தில் முந்திரி; ரகரத்து ஈற்றைக்
குறைத்து மேலுற வலமா வளைக்கில்
அரைக்கா ணிக்குறி யாகும்; முந்திரியில்
கிடைவரை முதற்கொடு தள்ளிற் காணி;
சுவ்வே அரைமா; கூஎனும் எழுத்தின்
ஈற்றுக் கிடைவரை தள்ளிமேல் வலமா
வளைக்கில் முக்காணி; பகரமே ஒருமா;
முற்பகர் முக்கால் ஈற்று நிலைவரை
தொட்டிட மேலா வளைத்துஓர் வரையினும்
ஒன்றாது அவ்வரைக் குறுக்கா வலங்கொடு
தொடுத்துஓர் நிலைவரை மேல்இடல் அரைக்கால்;
வகரமும் இகரமும் ளுகரமும் கால்அரை
முக்கால் எனப்படும்; அன்றிச் சிற்சில
கூட்டெழுத் தாகிக் குலவும் ஆதலின்
நவின்றிலம்; இவைதாம் நடுவலகு உறுப்பே.

முன்நூற்பாவில் கூறப்பட்ட கீழ்முக்கால் குறியுடன் ருகர ஈறு பொருந்தினால் முந்திரியின் (1/320) குறியீடு ஆகும். ரகரத்தின் கடைசிக் குத்துக்கோட்டில் பாதியிலிருந்து வலப்

புறம் மேலாக வளைத்தால் அது அரைக்காணியின் (1/160) சின்னம் ஆகும். முந்திரியில் படுக்கைக்கோடு முதலாக உள்ள பகுதிகளை நீக்கிவிட்ட வடிவம் காணி (1/80)ஆகும். சுகரமே அரைமாவின் ( 1/40) குறியீடாம். கூ எனும் எழுத்தின் கடைசிப் படுக்கைக் கோட்டை நீக்கி மேற்புறம் வலமாக வளைத்தால் முக்காணி (3/80) ஆகும். பகர வடிவே ஒரு மாவின் (1/20) அடையாளமாம். முன் கூறப்பட்ட கீழ்முக்காற் குறியீட்டின் கடைசிக் குத்துக்கோட்டைத் தொடும்படி மேற்புறம் வளைத்து ஒரு கோட்டிலும் பொருந்தாது அக்கோட்டின் குறுக்கே வலப்பக்கம் கொணர்ந்து மேலே ஒரு குத்துக் கோட்டை வரைவதால்பெறப்படும் வடிவம் அரைக்காலின்(1/8) சின்னம் ஆகும். வகர இகர ளுகரங்கள் முறையே கால்(1/4) அரை (1/2) முக்கால் (3/4) எனப்படும். இவையேயன்றி வேறு சில கூட்டெழுத்துகளாகவும் குறிக்கப்படும்.ஆதலால் ஒவ்வொன் றையும் தனித்தனியே எடுத்துக் கூறவில்லை. இன்றியமையாத நடுவலகுக் குறியீடுகள் இவையே என்றவாறு.

கீழ்முக்கால் எனத் தெளிவாக்க முற்பகர் முக்கால் என் றார்.

இவ்வரி வடிவங்களைத் தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடி நிலையம் 1951 ஆம் ஆண்டு வெளியிட்ட ''ஆஸ்தான கோலாஹலம்'' என்ற நூலில் காணலாம். (38)

### மேல் அலகு

**39.** **ககரமும் உகரமும் ஒன்றுஇரண்டு ஆகும்;**
**ஙகரத்து ஈற்று நிலைவரை தள்ளில்**
**மூன்றாம்; சகரத்து ஈறுதொட்டு ஒருநிலை**
**வரைமேல் நோக்கி நிறுவிடில் நாலாம்;**
**ருகரத்து ஈற்றைக் கொம்பென வளைக்கில்**
**ஐந்தாம்; தகரத்து ஈற்றைக் குறைத்துஒரு**
**ரகரம் பொருத்திடில் ஆறாம்; எகரமும்**
**அகரமும் ஏழு, எட்டு ஆகும்; ககரத்து**
**ஈறுதொட்டு ஒரு சிறுகொம்பென வளைக்கில்**
**ஒன்பது ஆகும்; ஐகா ரத்தின்**

**கீழ்உறு பகுதியைத் தனிப்படக் காட்டில்**
**பத்துஎன விளங்கும்; றகர முதல் வளைவு**
**உடனொரு ரகரம் பொருத்த நூறாம்;**
**சுகரத்து ஈற்றைச் சிறிதுஇடம் மேலா**
**வளைத்துச் சூஎன நிறுவல் ஆயிரம்.**
**இவற்றின் புணர்ப்பால் இயங்குவ பிறவால்**
**விளம்பிலம். இவைதாம் மேல்அலகு உறுப்பே.**

ககர உகர வடிவங்கள் முறையே ஒன்றும் இரண்டும் ஆகும். ஙகரத்தின் கடைசியில் உள்ள குத்துக் கோட்டை நீக்கி விட்ட வடிவம் மூன்றாம்.சகரத்தின் ஈற்றில் ஒரு மேல் நோக்கிய நேர்கோடு வரைந்தால் அது நான்கின் குறியீடாம். ருகரத்தின் கடைசி வளைகோட்டைக் கொம்பு போல் வளைத்தால் ஐந்து ஆகும். தகர வரிவடிவின் ஈற்றிலுள்ள கீழ்நோக்கிய வரையை விட்டு விட்டு ஒரு ரகரத்தை (அதாவது இன்றைய கால் ா) சேர்த்தால் ஆறு எனப்படும்.எகர அகரங்கள் முறையேஏழையும் எட்டையும் குறிக்கும். க என்னும் எழுத்தின் இறுதிப் பகுதி யிலிருந்து ஒரு சிறு கொம்புபோல் வளைத்தால் அது ஒன்ப தாம். ஐகாரத்தின் அடிப்பாதியை மட்டும் தனியாகக் காட்டி னால் பத்தின் குறியீடு தோன்றும். றகரத்தின் முதல் வளை வோடு ஒரு ரகரம் (ா) பொருந்த வரும் குறியீடு நூறு ஆகும் சுகரத்தின் கடைசிப் பகுதியைச் சற்றே இடப்புறமாக மேல் வளைத்துச் சூ போல எழுதினால் ஆயிரமாம். மற்ற எண்கள் யாவும் இவற்றின் சேர்க்கையால் தோன்றுவன. எனவே தனித் தனியே கூறிற்றிலம். மேல் அலகுக்குரிய உறுப்புகள் இத் துணையே என்றவாறு.

க,உ,ங,ச,ரு,சா, எ,அ,கூ,ய,ள,சூ என்னும் குறியீடுகள் முறையே 1,2,3,4,5,6,7,8,9,10,100,1000 என்பனவாகும். தானங்களைக் கொண்டு இலக்கத்தின் மதிப்பைக் குறிப்பிடும் இன்றைய முறை பழங்காலத்தே தமிழில் இல்லை. உதாரண மாக 4321 என எழுதி இதனை நான்காயிரத்து முந்நூற்று இருபத்து ஒன்று எனப் படிக்கிறோம். பழைய தமிழ் முறைப் படி இது சசூஙளஉயக என்றே எழுதப்படவேண்டும். எனினும்

பிற்காலத்தே இதனை ௬ ௨ க எனவும் சுருக்கி எழுதத் தொடங்கிவிட்டனர். (39)

அளவலகு

40. ளகரத்து ஈறு தொட்டுமேல் இடமா
வளைத்துஅவ் வரைக்குறுக் கேற்றி நாலின்
ஈறுஉறப் பொருத்தல் ஆழாக்கு எனப்படும்;
ஞகரம் தானே உழக்குஎன ஒளிர்தரும்;
வகரத்து ஈற்று நிலைவரை தள்ளில்
நாழி யாகும்; பகரமே குறுணி;
முந்திரி யீற்றை மேற்சுற் றாது
னுகரத்து ஈறுஎன நிறுவில் பதக்குஆம்;
தகரம் தூணி; ளகர மேகலம்;
பின்னும் சிலகூட்டு எழுத்துஎனப் பிறங்கும்
ஆதலின் இவைதாம் அளவலகு உறுப்பே.

ளகரத்தின் கடைசியிலிருந்து இடப்புறம் மேலாக வளைத்து அங்கிருந்து குறுக்காகப் படுக்கைக் கோடிட்டு சகரத்தின் இறுதி நிலைக்கோடு வரைந்தால் பெறப்படும் வடிவம் ஆழாக்கின் குறியீடாம். ஞகரம் உழக்கைச் சுட்டும். வகர வடிவத்தின் குத்துக்கோடு இல்லாவிடில் அது நாழியைக் குறிக்கும். பகரம் குறுணி ஆகும். முந்திரியின் இறுதிப் பகுதியை மேலே சுற்றாமல் னுகரம்போல முடித்தால் அது பதக்கின் குறியீடு ஆகும். தூணியைக் குறிப்பிடும் சின்னம் தகரம் ஆம். ளகரம் கலம் எனப்படும். இவற்றைத் தவிர வேறு சில அளவலகுகள் கூட்டெழுத்துகளாக இருத்தலின் விரித்து உரைத்தோமில்லை. அளவலகுகளின் முக்கியமான உறுப்புகள் இத்துணையே என்றவாறு.

2 ஆழாக்கு 1 உழக்கு; 2 உழக் 1 உரி; 2 உரி 1 நாழி; 8 நாழி 1 குறுணி; 2 குறுணி 1 பதக்கு; 2 பதக்கு 1 தூணி; 3 தூணி 1 கலம் என்பது பழைய முகத்தலளவை வாய்பாடாகும். இதில் நாழி என்பது ஏறக்குறைய ஒரு படி என்பர் (உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்றது கொண்டு இதனைக் கால் படி என்பாரும் உளர்.) (40)

41. அலகுஉறுப்பு உரைத்தனம்; அவற்றின் அணிநிலை
பற்பல விதமாப் பகர்துலை நிறைநிலை
இந்நூல் நாப்பண் இயம்புதல் இயல்பல
ஆதலின் விரித்திலம். அறைகுதும் கூட்டே.

இவ்வாறு அலகு உறுப்புகளைக் கூறினோம். அவற்றின் இயைபுடைய அலகுகளாக நிறுத்தலளவின் அலகுகளும் உள் ளன. அவைகள் பல்வேறு விதமாகக் கூறப்படுகின்றன. அவை களையெல்லாம் மொழி இலக்கணமாகிய இந்நூலில் விரித் துரைத்தல் பொருந்தாது. எனவே அத்தகைய அலகுகள் அனைத் தையும் விரித்துரைக்காமல் கூட்டெழுத்துகளைக் கூறத் தொடங்குவோம் என்றவாறு. (41)

## 6. கூட்டெழுத்துகள்

42. அகரத்து ஈறுதொட்டு அதன்இடம் சுழித்து
வலங்கொணர்ந்து அதனொடுநாழிஎன் எழுத்தைப்
பொருத்தில் ஆகஎன்று ஆயிற்று என்றும்,
நகரத் தலைபுணர் இகரம்இக்கு என்றும்,
ககரத் தகரத்து ஈற்றினை இரட்டித்து
ஒற்றெழுத்து அவற்றொடு கூடிற்று என்றும்,
ஐகா ரத்தின்முற் பகுதிமட் டெழுதி,
ஈறு தொட்டு வலத்துஓர் கிடைவரை
இழுக்கில்நெல் என்றும், சகரத்து ஈற்றுஒரு
லிகரம் கூட்டில் சங்கிலி என்றும்
இவ்வாறு உளகூட் டெழுத்துஎலாம் மொழியில்
அடங்கா; ஆதலின் அறைகிலம்; ஆயினும்
கூடும்நாண் மிகலாற், குலவுஅலகு உறுப்பூடு
அயல்போன்று உளசில அகற்றிடற்கு அரியன
அவ்வியல்பு உரைக்குதும் அறிந்த வாறே.

அகரத்தின் கடைசிப் பகுதியிலிருந்து இடப்புறம் சுழித்து வலமாகக் கொண்டு வந்து அவ்வடிவத்துடன் நாழியின் குறி யீட்டை (நிலைவரை நீங்கிய வகரம்) இணைத்தால் அது ஆக எனப்படிக்கப்படும். நகரத்தைத் தொடங்கி அதன் கீழ்க் கோட்டிலிருந்து சுழியுறற் இகரம் வரையப்பட்டால் இக்கு

என்று ஆகும். ககரம், தகரம் ஆகிய ஈரெழுத்துகளின் கடைசிப் பகுதியை மட்டும் இருமுறை எழுதினால் அது தன் இன மெய் கூடிய க்க, த்த என்ற கூட்டெழுத்துகளாம். ஐகாரத்தின் மேற்பாதியை மட்டும் வரைந்து அதன் ஈற்றில் ஓர் படுக்கைக் கோடு கிழித்தால் நெல் எனப்படும். சகரத்தோடு தொடர்ந்து லிகரத்தை எழுதினால் அது சங்கிலி ஆகும். இவ்வாறு பற்பல கூட்டெழுத்துகள் உள்ளன. அவை சொல்லின் முடிவுறா. எனவே அனைத்தும் சொன்னோமில்லை. என்றாலும் கூறாமல் விடவும் நாண உணர்ச்சி இடந்தராததால் தள்ளிவிடமுடியாதனவாக அலகுகளின் உறுப்புகளுடன் வேறானவை போன்று விளங்கும் சிலவற்றை யாமறிந்த வண்ணம் கூறுவாம் என்றவாறு.

இவர் இரண்டு எழுத்துகள் தம் ஒலி மாறாமல் கூடுவதே கூட்டெழுத்து எனக் கொள்ளவில்லை. ஒரு சொல்லாகப்படிக் கப்பெறும் வரிவடிவங்கள் அனைத்தையும் கூட்டெழுத்து என் கிறார். அதனால்தான் க்க, த்த என்பனவற்றோடு நெல், சங் கிலி போன்றனவும் இங்கு கூறப்பெற்றன. சம்யுக்தாட்சரம் இவர் சொல்லும் கூட்டெழுத்தின் ஒரு பகுதியாக மட்டும் அமைகிறது.

1951 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தால் வெளியிடப்பட்ட ஆஸ்தான கோலாஹலம் என்ற தமிழ்க் கணித நூல் வேறொரு குறியீட்டை இக்கு என வழங்கு கிறது. இவர் சற்று வேறுபட்ட ஒரு வடிவத்தைக் குறிக்கி றார். இது மாவட்டத்திற்கு மாவட்டம் ஏற்படும் வேறுபாடா கலாம். (42)

43. **ஒருமா எழுதி அதன்ஈறு பற்றிக்**
**காணியின் உருவம் காட்டும்மா காணியும்**
**இரண்டு மூன்று நாலெனும் இவற்றின்**
**ஈற்றில் மாஇசைத்து இருமா மும்மா**
**நான்மா எனலும், மூன்றின் ஈறு**
**ணிகரத்து ஈறு பொருந்திடின் மூன்று**
**மாகாணி எனலும், எகரத்து ஈற்றை**

**இடம்மேற் சுழித்துஅவ் வரைக்குறுக் கேற்றிக்**
**கூகரத்து ஈறு காட்டிக் கீழ்இடம்**
**வளைத்து மேற்கொணர் கோடியும், கீகரத்து**
**ஈற்றில் நாழி இசைத்துக் கீழ்எனும்**
**பொறியும், அவ் வெழுத்தின் மேற்குறி அதனை**
**எகரமீது ஏற்றிஅவ் வெழுத்தின் ஈற்றை**
**இடமாய்ச் சகரத்து ஈறுஎன எழுதிய**
**சோடும், உகர ரிகரம் தோய்தரும்**
**உரியும், மீ ஈற்றில் கீழ்ஈறு ஒன்றிய**
**மரக்காலும், மும்மாப் போலும்முக் குறுணியும்**
**நெல்எனும் கூட்டின் ஈற்றுக் கிடைவரை**
**தள்ளிஅவ் வீறு தொட்டுமேல் வலமாக்**
**கொண்டுஇடம் சுழித்த கோட்டையும், அன்றிக்**
**கீழ்அரைக் காலொடு, மூவுழக்கு ஆதிய**
**பொருந்தாக் கூட்டுப் பொறிகளும் உளவே.**

ஒரு மாவின் குறியீட்டை வரைந்து (ப) அதன் கடைசி, யிலிருந்தே தொடர்ந்து காணியின் சின்னத்தை இணைத்தால் மாகாணி (1/16) ஆகும். இரண்டு (உ), மூன்று (ந) நான்கு (ச) என்பவைகளுடன் மாவைச் சேர்த்து எழுதி னால் அவை முறையே இருமா (1/10) மும்மா (3/20) நான்மா (1/5) ஆகும். மூன்றோடு (ந) ணிகரத்தின் பிறையைச் சேர்த்தால் மூன்று மாகாணி (3/16) எனப்படும். எகரத்தின் குத்துக்கோட்டின் இறுதியில் இடப்புறமாக மேலே சுழித்து அங்கிருந்து முதற்கோட்டின் குறுக்கே படுக்கைக் கோடிட்டு அதன் கீழ் இடப்புறம் வளைத்து மேலே கொண்டு வந்தால் கோடி ஆகும். கீ என்ற எழுத்தின் மேற்பிறையோடு நாழியைக் கூட்டினால் கீழ் முந்திரி முதலியனவற்றில் வரும் கீழ் எனும் குறியீடாம். கோடியின் மேற்குறியை எகரத் தின் மேல் சேர்த்து, எகரத்தின் ஈற்றில் சகரத்தின் ஈறு போல் வரைந்தால் சோடு எனப்படும். உகரமும் ரிகர மும் சேர்த்து எழுதப்பட்டால் உரி ஆகும். மீயன்னா வுடன் கீழ் என்னும் குறியைச் சேர்க்க மரக்கால் ஆகும். மும்மா போன்றே மூன்றையும் குறுணியையும் சேர்த்து

எழுதினால் முக்குறுணி ஆம். நெல்லின் படுக்கைக் கோட்டை நீக்கி, அங்கிருந்து மேற்புறம் வலமாகக் கொணர்ந்து இடப் புறம் சுழித்தால் கோட்டை ஆகும். இவைகளேயன்றிக் கீழ் அரைக்காலொடு (கீழ் என்ற குறியையிட்டு நடு அலகுக்கு உரிய அரைக்காலை வரைதல் மூவுழக்கு போன்ற மேல் அலகுக்குரிய மூன்றுடன் அவ்வலகுக்கு உரிய உழக்கைச் சேர்த்து வரைதல் போன்ற சில பொருந்தாத கூட்டெழுத்து களும் வழக்கில் உள்ளன என்றவாறு.

இந்நூற்பாவில் கீழ்க்குறியோடு நடு அலகுக்கு உரிய அரைக் காலைச் சேர்த்து எழுதிக் கீழ் அரைக்கால் (1/2560) என்பதைப் பொருந்தாக் கூட்டு என்பதற்குக் காரணம் 37 ஆம் சூத்திரத்தில் கீழ் அரைக்காலுக்குத் தெளிவான வேறு வடிவம் காட்டப் பட்டிருப்பதே போலும். இவ்வாறே மூன்று உழக்கு என்னும் குறியீடுகளை இணைத்து மூவுழக்காக்கலும் பொருந்தாது என் கிறார். ஏன்எனில் உழக்கின் குறியீடு ளுகரம். நடு அலகில் ளுகரம் முக்கால் ஆகும். எனவே மூவுழக்கு என்பதை நளு என எழுதினால் அது மூன்றேமுக்கால் எனவும் படிக்கப்படலாம். ஒரே குறியீடு இருவகையாக மயங்கவைத்தலின் மூவுழக்கிற்கு இதை நீக்கினார்.

பொதுவாக இவ்வாசிரியர் கீழ், நடு அலகுகட்குத் தனித் தனிக் குறியீடுகளை வேண்டுகிறார். ஆனால் அவ்வாறு தனித் தனியே கொள்ளாது நடுவலகுக் குறிகளையே கீழ் என்னும் குறியிட்டுப் பயன்படுத்தும் வழக்கத்தையும் காண்கிறோம். இப்பழக்கத்தை இவர் விரும்பவில்லை எனத் தோன்றுகிறது.

(43)

**44. "இகரத்து ஈற்றுஒரு லகரம் கூட்டி,**
**அதன்ஈறு தொட்டுக் கீழ்ஓர் வரைஇழுத்து,**
**இடம்சுழித்து, அவ்வரைக் குறுக்கா வலங்கொடு**
**முக்காணி ஈறு பொருந்தக் காட்டிடல்**
**இலக்கம் ஆகும்என்று இசைவுறல் இனிது" எனல்**
**போலும் பல்பொறி புதியன வரினும்**
**அலகுணர் மாக்கள் அகற்றார் அன்றே.**

இகர லகரங்களைச் சேர்த்து எழுதி அதன் கடைசியிலிருந்து ஒரு கீழ்க்கோடிட்டு அதை இடப்புறம் சுழித்து முன் வரைந்த குத்துக்கோட்டின் குறுக்காக வலப்பக்கம் நீட்டி முக்காணிக் குறியீட்டின் ஈற்றுப் பகுதியைச் சேர்த்தால் இலட்சம் என்று ஏற்கலாம் என்பது போன்ற புதிய கூட்டெழுத்துகள் வழக்கில் வந்தாலும் அறிந்தவர்கள் அவற்றை மறுக்க மாட்டார்கள் என்றவாறு.

நூறாயிரம் எனலே தமிழ் வழக்கு, லக்ஷ என்ற வடசொல் தமிழில் இலக்கம் எனத் தத்பவமாயிற்று. இதற்கும் ஒரு குறியீட்டை ஏற்றுக் கொள்ளும் போது நடைமுறையில் வந்து விட்டால் எதையுமே ஏற்க வேண்டியதுதான் என்ற பொருள் தொனிக்கிறது. (44)

45. **கூட்டெழுத்து ஒருவாறு உரைத்தனம்; சிறிதுஇனிக்**
**குறிப்பெழுத்து இயங்கும் கொள்கைகூ றுதுமே.**

கூட்டெழுத்துகளைப் பற்றி ஓரளவு சொன்னோம். இனி அடுத்துக் குறிப்பெழுத்துகள் எவ்வாறு ங்குஶரிகின்றன என்பதைக் கொஞ்சம் சொல்வாம் என்றவாறு.

இந்நூற்பாவில் இப்பிரிவை நிறைவு செய்து அடுத்த பிரிவாகிய குறிப்பெழுத்துகளுக்குத் தோற்றுவாய் செய்து கொள்கிறார். (45)

## 7. குறிப்பெழுத்துகள்

ஒரு சொல்லாகப் படிக்கப்படும் குறியீடுகள் அனைத்தையும் இவர் கூட்டெழுத்துகள் என்றார். இனி அவ்வாறு படிக்கப் படாமல் வெறும் குறியீடுகளாக மட்டும் பயன்படும் சிலவற்றை இதில் கூறுகிறார். இன்று பயன்படுத்தப்பெறும் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி போன்றனவற்றையும் இதில் அடக்கலாம். குறிப்பெழுத்து என்பதில் எழுத்து என்ற சொல் எழுதப்படுவது என்ற அளவில் மட்டும் நின்றது. அதாவது இதற்கு ஒலிவடிவம் இல்லை. இதனைக் குறிப்பு எழுத்துகள் என்பதைவிடக் குறியீடுகள் எனலேசாலப் பொருத்தமாம்.

46\. நாழி போலும் விநாயகச் சுழிஎழுத்து
ஆதியும் அந்தமும் காட்டும்; கிடைவரை
நடுஓர் நிலைவரை புணர்ந்தது ஆய
அன்னத் தாட்குறி அயத்தமை காட்டும்;
இடம்சுழித்து ஈற்றை வலம்உறச் சாய்க்கின்
இக்குஎன உணர்த்தும்; இதன்எ னைக்குறி
இதுவும்என்று உணர்த்தும்; இவ்வாறு உள்ள
பல்வகைக் குறிப்பும் பகர்ந்திடல் அரிதே.

நாழியின் குறியீட்டைப்போல் அமைந்த (குத்துக் கோடற்ற வகரம்) பிள்ளையார் சுழி ஒரு பொருளின் தொடக்கத்தையும் முடிவையும் காட்டும். ஒரு படுக்கைக் கோட்டின் குறுக்கே குத்துக்கோடு வெட்டுவதாகிய அம்சபாதம் (+ இன்றைய கூட்டல் குறி) உரிய இடத்தில் ஒன்றை எழுத மறந்துவிட்டதைக்காட்டும். இடது புறமாக ஒரு சுழியிட்டுக் கொண்டு அதன் மேல் வலப்புறமாகச் சாய்த்து வரைந்தால் அது இக்கு என்பதற்குரிய குறிப்பாம். இதனையே மாற்றி எழுதினால் – அதாவது வலப்புறமாக ஒரு சுழியிட்டுக் கொண்டு அதன் மேல் இடப்புறமாகச் சாய்த்தால்-அது இதுவும் என்பதன் குறியீடாம். இவ்வாறு பற்பல குறிப்புகள் உள்ளன. அனைத்தையும் கூறி முடித்தல் என்பது இயலாது என்றவாறு.

முன் நாற்பத்திரண்டாம் நூற்பாவில் கூறப்பட்ட "றகரத் தலை புணர் இகரம்" ஆகிய இக்கு ஒரு பெயர்ச் சொல்லுடன் நான்கன் உருபு சேர்ந்துள்ளதைக் குறிக்கும். எனவே இவர் கொள்கைப்படி அது கூட்டு எழுத்தாயிற்று. இங்கு கூறப்படும் இக்கு என்றும் குறியீட்டின் பொருள் விளங்கவில்லை. (46)

47\. ஓர்ஒலி கலைதொறும் ஒவ்வோர் வடிவுஉடைத்து;
ஆதலில் பொறிஇனம் அனைத்தும் குறிப்பே.

ஓர் ஒலிவடிவத்திற்கு வரிவடிவம் கொடுக்கப்படும் பொழுது ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு விதமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் எழுத்து வடிவங்கள் அனைத்

துமே ஒன்றை உணர்த்துவதற்காக ஏற்பட்ட குறியீடுகளே ஆகும் என்றவாறு.

அகர ஒலியின் வரிவடிவமாகத் தமிழில் அ என்னும் குறியீட்டைப் பயன்படுத்துகிறோம் இதே அகரத்தின் வரிவடிவமாகத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தேவநாகரி, கிரந்தம் ஆகியவற்றுள் வேறுவேறு குறியீடுகளை வழங்குகின்றனர். ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு விதமாக எழுதப்படும் வரிவடிவங்கள் யாவும் ஓர் அகரவொலியைக் குறிக்க எழுந்தனவே. இதனால் எல்லா மொழிகளிலுமுள்ள எல்லா எழுத்துகளும் குறிப்பெழுத்துகளே என்றார்.

இக் கொள்கையினால் தான் போலும் இவர் கூட்டெழுத்து குறிப்பெழுத்து என்பனவற்றிற்குத் தெளிவான வரையறை கூறவில்லை. (47)

**48.** **அகர ஒகரம் ஆதிய சிலபொறி**
**ஈறு தொட்டுச் சகரத்து ஈறுஎன**
**எழுதி ஆஓ முதலியன எனலும்,**
**ரகரத்து ஈற்றினை ஏகா ரத்துஈறு**
**ஆமெனக் காட்டலும், தகர நகரம்**
**ஆதியின் ஈறுஇடம் சாய்த்தலும், அவற்றின்**
**தலைமிசை ஒன்றாக் கிடைவரை காட்டலும்,**
**இகரத்து ஈற்றினைச் சுழித்துஈ எனலும்,**
**அகரத்து ஆதிதொட்டு இடம்கீழ்க் கொணர்ந்துஅரை**
**ஆகும்என்று இசைத்தலும், ககரத்து ஈற்றுஒரு**
**கணபதிச் சுழியிட்டு ஆய்தம் என்கையும்,**
**கெகரம் கொகரம் ஆதிய தாமே**
**கேகோ ஆதிய ஆம்எனக் கிளத்தலும்,**
**போல்வன பிறவும் புரையின வாமே.**

அ, ஒ போன்ற சில உயிர்க் குறில்களின் கடைசியிலிருந்து சகரத்தின் ஈற்றுப் பகுதியைப் போல் வரைந்த வடிவை ஆ, ஓ எனல், ரகரத்தில் இரண்டாவது குத்துக் கோட்டின் கீழ் ஏகாரத்திற்குப் போல் சிறிய சாய்வுக்கோடு இழுத்தல், தகரம்

நகரம் போன்றவைகளின் கடைசிப் பகுதியை மேலிருந்து கீழாக இழுக்காமல் இடப்புறமாக நீட்டல், அவைகளின் தலை மேல் தொடாதவாறு ஒரு படுக்கைக்கோடு போடுதல், இகர வடிவத்தின் கடைசியிலேயே ஒரு சிறு சுழியிட்டு அவ்வரி வடிவை ஈ எனல், அகரத்தின் ஆரம்பம் ஆகிய வட்டத்தில் இருந்து இடப்புறம் கீழாகக் கொண்டு வந்த வரிவடிவத்தை அரை எனல், ககரத்தோடு சேர்த்து ஒரு பிள்ளையார் சுழியை வரைந்து அதை ஆய்த எழுத்து எனல், ஒற்றைக் கொம்போடு கூடிய கெ, கொ ஆகியவைகளே தாம் இருக்கும் இடத்தால் கே, கோ என நெடிலாக உணரப்படும் எனல் ஆகியனவும் இவற்றைப் போன்ற பிறவும் தவறான எழுத்துகளாகும் என்ற வாறு.

ஆ, ஓ என எழுதப்பட வேண்டியவற்றைச் சிலர் இவ்வாறும் எழுதியிருக்கலாம். இந்த வடிவம் சில செப்பேடுகளிலும் உள் ளது.

முன்பு ரகரம் வெறும் காலாகத்தான் எழுதப்பெறும். எல் லாச் சுவடிகளிலும் அவ்வடிவத்தையே காண்கிறோம். காலிற் கும் ரகரத்திற்கும் வேறுபாடு தெரியவேண்டிப் பிற்காலத்தி லேயே ரகரத்திற்கு இன்றைய வடிவம் கொடுக்கப்பட்டது.

த, ற, ந ஆகியவற்றின் கடைசிப்பகுதி மேலிருந்து கீழாகத் தான் இருக்க வேண்டும் என்பது இவர் கொள்கை. ஆனால் பலர் அதை வலமிருந்து இடமாக எழுதினார்கள்; இன்றும் எழுதுகிறார்கள்.

“தகர றகரத்தின் தலை ஒன்றாக்கிடைவரை” பற்றிக் கூறுவது சரியாக விளங்கவில்லை. ரகர நெடிலுக்குச் சிலர் இரு கால்களை வரைந்து அவை இரண்டும் சேர்ந்ததே ஓர் எழுத்து எனக்காட்ட அவற்றின் மேல் ஒரு கோடு வரைவதுண்டு. தகர றகரத்தின் மேல் கோடு வர வேண்டிய அவசியம் தெரியவில்லை.

இகர வடிவத்தின் ஈற்றிலேயே ஒரு சிறு சுழியிட்டு ஈஎனல் சுவடி, செப்பேடு ஆகிய இரண்டிலும் பயின்று வந்துள்ளது. அகரத்தின் முற்பாதியை மட்டும் எழுதி அதை அரை என்

பதை இவ்வுரையாசிரியன் கண்டதில்லை. நூலாசிரியர் காலத்தே ஒரு சிலர் அவ்வாறு வழங்கி வந்திருக்கலாம். இஃரத்தை அரை எனலே பெரும்பான்மை.

ககரத்திற்குப் பிறகு விநாயகர் சுழியிட்டு ஆய்தம் எனலும் புதுமையாக உள்ளது.

முற்காலத்தில் தமிழில் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்புகள் தனித்தனியே இருக்கவில்லை. ஒற்றைக் கொம்பு மட்டுமே இருந்தது. கொல் என்று எழுதப்பட்டிருந்தால் அதைத் கோல் என்றும் படிக்கலாம். இடம் நோக்கியே எழுத்து குறிலா அல்லது நெடிலா எனத் தீர்மானிக்க வேண்டும். பழஞ்சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் மூன்றிலும் இதைக் காணலாம்

இந்நூலாசிரியர் இங்கு பட்டியல் போட்டுக் காட்டிய வற்றை எல்லாம் தவறானவை என்கிறார். இவற்றுள் சில எழுத்து வளர்ச்சிக்கு முற்பட்டவை; சில பழக்கத்தால் அமைந் தவை. சில எழுத்து வடிவமைப்பு மாற்றங்கள் வீரமாமுனிவ ரால் செய்யப்பட்டனவாக அறிகிறோம். (48)

**49. எகர ஒகர உயிர்மிசை ஒற்றின்**
**புள்ளி வைத்தமை பொறாஅது ஒருவினர்**
**வாழி என்றே வழுத்துதும் யாமே.**

எகர ஒகரங்களாகிய உயிரெழுத்துகளின் தலையில்-அவை குறில்கள் எனச்சுட்ட-மெய்யெழுத்துகளுக்கே உரிய புள்ளிவைக் கும் பழக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் மாற்றி விட்டவர்கள் வாழ்க என யாம் வாழ்த்துகிறோம் என்றவாறு.

முன்பு எ,ஏ,ஒ,ஓ என்பன முறையே எ̇, எ. ஒ̇, ஒ, என எழுதப்பட்டு வந்தன. தலையில் உள்ள புள்ளி ஓசையின் மாத் திரைக் குறைவைக்காட்டும். மெய்எழுத்திற்கே அதாவது அரை மாத்திரை ஒலிக்கும் எழுத்திற்கே-உரிய புள்ளியைத் தனியே இயங்கும் ஆற்றல் உள்ளதும் ஒரு மாத்திரை ஒலிப்பதுமாகிய உயிரெழுத்துகளின் மேல் இடுதல் தவறு என்கிறார் இவர். இத்த

வற்றைத் திருத்தியவர்களை வாழ்த்துகிறார். இம்மாற்றம் வீரமாமுனிவரால் செய்யப்பெற்றதாகத் தெரிகிறது. (49)

**50. உகரம் சார்தர ஒற்றுஒலி எழலும்,**
**நால்வகை எழுத்தில் துணைஒலிப் புணர்ச்சியும்**
**சிறார்தம் நிமித்தம் செறிந்தன வாமே.**

மெய்யெழுத்துகளை உகரத்தோடு சேர்த்துச் சொல்லலும், உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்னும் நான்குவகையான எழுத்துகளுடனும் எழுத்துச் சாரியைகளைக் கூட்டி உரைத்தலும் சிறுவர்களுக்குப் போதிப்பதற்காக ஏற்பட்ட வழக்கமாம் என்றவாறு.

க், ங், ச் போன்ற மெய்யெழுத்துகளைச் சிறு குழந்தைகள் இக்கு, இங்கு, இச்சு என்றே கூறுவர். அக்குழவிகளுக்கு எழுத்து அறிவிக்கும் பெற்றோரும், ஆசிரியரும் அவர்கள் எளிதில் உணரும் பொருட்டுத் தாமும் சிலநாள் வரை அவ்வாறே உச்சரிப்பர்.

ஆனா, காவன்னா, அக்கன்னா என அவர்களுக்காகவே துணை ஒலிகள் புணர்க்கப்படுகின்றன. அவர்கள் வளரவளர மெய்யெழுத்தின் உகரமும்,மற்ற எழுத்தின் துணை ஒலியும் தாமே நீங்கி விடும். (50)

**51. உகரத்து உறுசுழி நீண்டு காட்டல்**
**ஆதிய அணிசில அறியும் குறிப்பே**

உகரத்தை எழுதுங்கால் அதன் சுழியைப் பெரிதாக வரைதல் போன்ற அழகுகள் சில செய்தியை அறிவிக்கும் குறிப்புகள் ஆகும் என்றவாறு.

உகரம், நாழி, பிள்ளையார் சுழி இம்மூன்றும் ஒரே வடிவம். நாழியை விநாயகர் சுழியிலிருந்து இடம் நோக்கி எளிதில் பிரித்தறியலாம். ஆனால் உகரம் சில இடங்களில் மயங்க வைக்கும். உதாரணமாக உத்தியிடை என ஓரேடு தொடங்குவதாக வைத்துக் கொள்வோம். இதில் முதல் எழுத்து உகரமா அல்லது விநாயகர் சுழியா என மயக்கம் வரலாம். ததி என்

றாலும் பொருள் உண்டே. இதை அவ்வரி முழுவதும் படித்தே தீர்மானிக்க வேண்டும். இவ்வாறின்றி உகரத்தை எழுதும் போதே சுழியைப் பெரியதாகப் போட்டு விட்டால் மயக்கமே வராதல்லவா? மயக்கமின்மையே இங்கு அணி ஆயிற்று. சிலர் கையெழுத்தில் அ,சு;ன,ள,ை;த,ந;டா,பி ஆகியன ஒரே மாதிரி இருந்து மயங்க வைக்கும். இவ்வாறு குழம்பச் செய்யாமல் எழுதுவது ஓர் அழகாதலின் அணி எனப்பட்டது. (51)

**52. உயிர்மெய் வருக்கத்து ஒன்றோடொன்று ஒப்பிட்டு**
**அறைந்தமை ஒற்றுஉறழ் அதன்அதன் அகரம்**
**நின்றமை பற்றிஎன்று உணர்வது நெறியே.**

எழுத்துகளின் வரிவடிவைச் சொல்லியபோது உயிர்மெய் எழுத்தை உவமையாக்கிக் கூறிய இடங்களில் எல்லாம் அம் மெய்யின் மீது அகரம் ஊர்ந்த உயிர்மெய் வடிவை மனதிற் கொண்டு கூறப்பட்டது என அறியப்பட வேண்டும் என்றவாறு.

''ணவ்வே முந்திரி, டஅரைக்காணி'' போன்ற இந்நூல் நூற்பாக்களுக்கு இது விளக்கமாக அமைகிறது. அங்கு ண, ட என்றவை அகரச்சாரியை பெற்ற மெய்கள் அன்று; உயிர்மெய் களேயாகும் என்கிறார். (52)

**53. அலகுஇனத்து இம்மி ஆதிய கீழும்**
**சங்கம் ஆதிய மேலும் தள்ளிடல்**
**உருவிலா ஓசை யாம்என உணர்ந்தே.**

கீழ் அலகுகளில் இம்மி முதலிய மிகமிகச் சிறிய பின்னங் களையும் மேல் அலகுகளில் சங்கம் போன்ற மிகமிகப் பெரிய எண்களையும் அவை தமக்கெனத் தனியான வரிவடிவங்களற்ற வெறும் ஓசைகள் ஆதலின் இங்கு கூறப்படவில்லை என்றவாறு.

இம்மி = 1/1025000; சங்கம் = கோடாகோடி $10^{14}$ (53)

**54. ஒன்பது பத்தைத் தொண்ணூறு என்பதும்**
**அத்தொகை நூற்றைத் தொள்ளா யிரமென்று**
**அறைவதும் பழமை யாமெனல் வழக்கே.**

ஒன்பது பத்துகளின் தொகுப்பைத் தொண்ணூறு என்றும் ஒன்பது நூறுகளின் சேர்க்கையைத் தொள்ளாயிரம் என்றும் கூறுதல் தொன்றுதொட்ட மரபாகும் என்றவாறு.

எண்களைப் பற்றிய வரிவடிவங்கள் முன்னே கூறப்பட்டன. அத்தொடர்பு பற்றியே இந்நூற்பாவை இங்கு வைத்தார் போலும். இது எழுத்திலக்கணத்தோடு தொடர்பற்ற செய்தியாகும். (54)

**55. ஆயிரம் சூகாரம் ஆதல் போலும்**
**திரிவுவந்து ஒன்றிலும் திருத்திடல் அரிதே.**

சுகரத்து ஈற்றைச் சிறிது இடமேலாய் வளைத்துச் சூவென நிறுவ வேண்டிய ஆயிரத்தின் வரிவடிவை (இந்நூல் 39) வாளா சூ என எழுதுதல் போன்ற மாற்றங்கள் காலப்போக்கில் ஏற்பட்டுவிடினும் அவற்றை மாற்ற முடியாது என்றவாறு.

இதனால் பொதுமக்களால் பரவலாக வழங்கப்படும் பொழுது மொழியின் வரிவடிவத்தில் மாற்றங்கள் நேர்வது இயல்பே என்றும் அவை தவிர்க்க முடியாதனவும் ஆகும் என்றும் கூறப்பட்டன. (55)

**56. சுழிஇலா ஒற்றும், சொல்லிய நிலையில்**
**பிறழ்குறிப் பொறியும் பெரிதுடைத்து உலகு; அவை**
**கண்டுஉணர்ந்து கோடல் கற்றோர் கடனே.**

மெய்யெழுத்துகளுக்கு மேல் புள்ளியில்லாமல் எழுதுதல், இந்நூலில் முன்னால் கூறப்பட்ட வரிவடிவங்களிலிருந்து வேறுபட்ட வடிவங்களைச் சில எழுத்துகள் பெறுதல் போன்ற வித்யாசங்கள் நிரம்ப உண்டு. அவைகளை உலக வழக்கத்தைப் பார்த்து தெரிந்துகொள்ளுதல் அறிஞர்களுக்குக் கடமையாகும் என்றவாறு.

பனையோலைகளில் எழுதும்போது மெய்யெழுத்துகளுக்கு மேற்புள்ளி வைக்க மாட்டார்கள். சுவடியைப் படிப்பவர்களே இது ஒற்று, இது உயிர்மெய் என இடம் நோக்கித் தெளிய வேண்டும். மேலும் எழுதுபவர் கைப்பழக்கத்தால் சில எழுத்து

வடிவங்கள் வேறுபடும். இத்தகைய வேறுபாடுகளை எல்லாம் அநுபவத்தால்தான் அறிந்து கொள்ள முடியும். (56)

**57. மற்றொரு கலிஎன மாறுபடும் எழுத்தை**
**வைத்தவன் உள்ளக் குறிப்புஎனல் வழக்கே.**

இது தமிழ் எழுத்துத்தானோ அல்லது வேறுமொழியோ என்று மயங்கும்படி ஓர் எழுத்து இருந்தால் அதை எழுதியவனுடைய உள்ளக்குறிப்பு என்று கொள்வதே மரபாகும் என்றவாறு.

மற்றவர்கள் அறிந்துகொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் மறைமொழியாக எழுதப்படும் வரிவடிவம் பற்றியது இந் நூற்பா. இத்தகைய சங்கேதக் குறியீடுகளை அவற்றை எழுதினவனே அறிவான்; மற்றையர் அறியார். எனவே இது அவன் உள்ளக்குறிப்பு ஆயிற்று. (57)

**58. கலைமுதல் எழுத்தே ஆம்எனல் காணும்**
**சீரியர் மகிழ்வான் தெரிந்த வண்ணம்**
**உருவுடன் ஒலியும் உரைத்தனம்; அவற்றின்**
**நிலையிவண் ஆம்என நிகழ்த்துதும் நினைத்தே.**

மொழிக்கு அடிப்படையாக உள்ளவை எழுத்துகளே என உணர்ந்துள்ள சான்றோர்கள் உவகை கொள்வதற்காக எமக்குத்தெரிந்த அளவு அவற்றின் வரிவடிவங்களையும் ஒலிகளையும் கூறினாம். இனித் தொடர்ந்து அவ்வெழுத்துகளின் ஒலி நிலை, இயங்குநிலை, இனநிலை போன்றவை இவ்வாறாகும் என்று ஆராய்ந்து கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் எழுத்திலக்கணத்தின் முதல் இயல்பாகிய உருவோசை இயல்பு நிறைவு செய்யப்பட்டு இரண்டாவதாகிய நிலை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்டது. (58)

**உருவோசை இயல்பு முற்றிற்று**

## II. நிலை இயல்பு

### தோற்றுவாய்

எழுத்துகளின் அளவு, இயங்கும் நிலை, இனம், தெய்வம், தனி எழுத்தின் பொருள் ஆகியன இப்பிரிவில் உரைக்கப்படும்.

**59. நால்வகை எழுத்தின் நலம்திகழ் ஒலியே**
**மற்றைய மூன்று வகைஎழுத்து ஒலியில்**
**சிற்சில புணர்ந்து நின்றசீர் தெரிவீர்;**
**இந்நிலை இயல்பையும் இதயக் கண்கொடு**
**நுண்ணிதின் நோக்கிடல் நும்கடன் ஆமே.**

(உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய் என்ற) நால்வகை எழுத்துகளின் ஓசையே (அலகு, கூட்டு, குறிப்பு என்ற) மற்ற மூவகை எழுத்துகளின் ஒலியில் சில சேர்ந்து விளங்குவதை அறிவீர்கள். (அவ்வறிவு பெற்ற நீங்கள்) இங்கே கூறப்புகுந்த நிலை இயல்பையும் உள்ளமாகிய கண்களைக் கொண்டு நுட்பமாக ஆராய வேண்டுவது உங்கள் கடமையாகும் என்றவாறு.

நால்வகை எழுத்தின் ஒலி 'நலந்திகழ் ஒலி' எனச் சிறப்பிக்கப் பட்டதாலும், மற்றைய என்ற சொல் மொழிமாற்றுப் பொருளில் பயன்படுத்தப்பட்டதாலும் ஏனைய மூன்றுவித எழுத்துகளின் சிறப்பின்மை வலியுறுத்தப்பட்டது. இதயக்கண் என்றது ஈண்டு அறிவை நோக்கி நின்றது. அன்றியும் விருப்பத்தோடு நுட்பமாக ஆராய்ந்து எனினும் ஆம்.

நிலை இயல்பின் இத்தலைச் சூத்திரத்தால் மேல்வரும் எழுத்திலக்கணப் பகுதிகளிலெல்லாம் உயிர் முதலிய நான்கெழுத்துகளுக்கே சிறப்பாக இலக்கணம் உரைக்கப்படும் என்பதைப் பெற வைத்தார். (59)

### 1. ஒலிநிலை

**60. அகரமும் இகரமும் உகரமும் எகரமும்**
**ஒகரமும் றில்; இவை ஒவ்வோர் மாத்திரை;**
**ஆ, ஈ, ஊ, ஏ, ஔனும் ஐந்தும்**

**நெடில்; இவை ஒன்றற்கு இரண்டு மாத்திரை;**
**ஐஔ என்பவை குறில்நெடில் நடுஆம்;**
**இவற்றின் ஒன்றொன்று ஒன்றரை மாத்திரை;**
**இவைநெடில் தாம்என்று இயம்புநர் சிலரே.**

அ,இ,உ,எ,ஒ ஆகிய ஐந்தும் குறில்களாகும். இவை ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை ஒலிக்கும். ஆ,ஈ,ஊ,ஏ,ஓ என்னும் ஐந்தும் நெடில்கள் எனப்படும். இவற்றிற்குரிய மாத்திரை இரண்டு ஆகும். ஐ, ஔ என்ற ஈரெழுத்துகளும் ஒன்றரை மாத்திரை பெற்றுக் குறிலுக்கும் நெடிலுக்கும் இடைப்பட்டனவாக ஒலிக்கும். இவ்விரண்டையும் நெடில்களாகவே சிலர் கொள்வர் என்றவாறு.

ஐ,ஔ பற்றிய இவர் கொள்கை முன் பதின்மூன்றாம் நூற்பாவில் கூறப்பட்டது. தொல்காப்பியமும் நன்னூலும் இவற்றை நெடிலாகக் கூறினும் தன் பெயர் உணர்த்தும் ஓரிடம் தவிர வேறெங்கும் நெடிலாக ஒலிப்பதில்லை. (தற்போது தன்பெயர் உணர்த்தும் போதும் முழு நெடிலாக உச்சரிக்கப்படுவதில்லை என்பது கண்கூடு) ''ஐஔ அளவு ஒன்றரை''[1] ''ஒன்றரையாகும் ஐஔ''[2] ''அளபெடை தனி இரண்டு அல்வழி ஐஔ உள தாம் ஒன்றரை''[3] என இவர்க்கு முந்தைய இலக்கணிகளும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர்.

ஐ,ஔ ஆகிய ஈரெழுத்துகளுக்கு வாளா நெடில் எனப் பெயரிட்டு ஐ முதல் இடை, கடை மூவிடங்களிலும், ஔ மொழி முதலிலும் குறுகும் எனக்கூறி முறையே ஐகார ஔகாரக்குறுக்கம் எனக்கூறுவதால் பெறும்பயன் உண்டோ? எழுத்துச் சாரியைகளைப்பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர் மிகத்தெளிவாக, ''கரமும் கானும் நெட்டெழுத்து இலவே''[4] என விதி வகுத்து, ''ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும்''[5] என்பதால் இத் தனியெழுத்துகளையே அவரும் தூய நெடிலாகக் கருத

1 நேமிநாதம் 5
2 வீரசோழியம் 5
3 அவிநயம் – யா.வி.2 மேற்கோள்
4 தொல். எழுத்து. 136
5 தொல். எழுத்து. 138

வில்லை என்பது வெள்ளிடைமலை. நன்னூலாரும் இவரையே அடியொற்றினார்.[1]

செய்யுளில்தான் ஓர் எழுத்தின் துல்லியமான அளவு செவ்வனே வெளிப்படும். எனவேதான் யாப்பியலார், "ஒன்று இரண்டு ஒரு மூன்று ஒன்றரை அரைகால் என்றனர் பொழுது இவை இடைநொடி அளவே"[2] எனத் தெளிவாக வரையறை செய்து கொண்டனர். இது பற்றியே இந்நூலாசிரியரும் வேறோரிடத்தில், "அருந்தமிழ்ச் சந்தத்து ஐயும் ஔவும் ஈற்றில் குறளாய், இடையினும் முதலினும் குறிலொடு ஒற்று எனவும் குலாஅய்ச், சிறிதும் நெடில் எனல் இன்றி நிகழும் அன்றே"[3] என்றார்.

இந்நூற்பாவுள் "நெடில்தாம் என்று இயம்புனர் சிலரே" என்றது பிறர்கோள் கூறல். (60)

**61. குறிலிற் பாதி போலும் ஆய்தமும்**
**ஒற்றும் தனித்தனி அரைமாத் திரையே.**

குற்றெழுத்தில் அரையளவு ஒலிக்கும் ஆய்தமும் மெய்யெழுத்துகளும் ஒவ்வொன்றும் அரை அரை மாத்திரை அலகு பெறும் என்றவாறு. (61)

**62. ஒற்றொடு உயிர்கலந்து உயிர்மெய் ஆயினும்**
**அவைஉயிர் ஒலியளவு ஆகும்மாத் திரையே.**

மெய்யெழுத்தின் மீது உயிர் ஊர்ந்து உயிர்மெய்யான காலையும் அது உயிரெழுத்துக் குரிய மாத்திரையை மட்டுமே பெறும் என்றவாறு. (62)

**63. இவைபுணர்ந்து ஒலிக்கும் இயல்பே கூட்டின்**
**மற்றைய எழுத்தின் மாத்திரை தோன்றுமே.**

குற்றுயிர், நெட்டுயிர், ஐ,ஔ ஆகிய நடுஉயிர், ஆய்தம், ஒற்று, உயிர்மெய் ஆகிய இவ்வெழுத்துகளின் மாத்திரைகளைக்

---

1 நன்னூல் 126
2 யா.விருத்தி 2 மேற்கோள்
3 வண்ணத்தியல்பு 2

கூட்டினால் (சுட்டெழுத்து, அளபெடை போன்ற) மற்ற எழுத்துகளுக்குரிய மாத்திரை புலப்படும் என்றவாறு.

மெய்மேல் உயிர் ஏறிய உயிர்மெய் அவ்வுயிரின் மாத்திரையைப் பெறுகிறது. ஓர் இனமெய்யுடன் அதே இன உயிர்மெய் சேர்ந்த க்க, ய்ய, ன்ன போன்றவை எவ்வாறு அலகிடப்பட வேண்டும் என்பதனையும், உயிர், ஒற்று அளபெடைகளின் மாத்திரை அளவுகளையும் இந்நூற்பா கூறுகிறது. க்க போன்றவை $1\frac{1}{2}$ மாத்திரை; ஈஇ போன்றவை 3மாத்திரை; இலங்ங்கு போன்ற மெய்யளபெடை 1 மாத்திரை என்று கொள்க.

யாப்பில் பல இடங்களில் ஒற்றுக்கள் அலகிடப்படாததால் க்க போன்ற புணர்எழுத்துகளின் மாத்திரை உரைக்க வேண்டுவதேனோவெனில், சீர்தளை பற்றி வராமல் மாத்திரை பற்றி வரும் விருத்தங்களும் தமிழில் பெருமளவில் வழங்கி வருவதால் கூற வேண்டுமென்க. இரட்டையாசிரிய விருத்தம் இதற்கு உதாரணமாம். (63)

**64. ஒலிநிலை அளவாம் மாத்திரை உரைத்தனம்;**
**இயங்கும் நிலைசிறிது இயம்புதும் அன்றே.**

எழுத்துகளின் ஒலி அளவைக் கூறினோம். இனி அவற்றின் இயக்கத்தைச் சற்றே கூறுவாம் என்றபடி.

இந்நூற்பாவால் ஒலிநிலையை முற்றுவித்து அடுத்த இயங்கு நிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்கிறார். (64)

## 2. இயங்கு நிலை

**65. வாய்திற என்கைக்கு ஆஎன்று உலகோர்**
**பகர்வதுஉற்று உணரில் பல்வகை எழுத்தும்**
**அதனால் தோன்றல்என்று அறிதல்மிக்கு எளிதாம்**
**அன்றியும் உலகத்து அனைத்து எழுத்தினுக்கும்**
**அகரம் முதல்என்று அறைந்ததுஎம் மறையே.**

உலகத்தில் பலரும் "வாயைத்திற" என்னும் பொருளில் "ஆஎனச்சொல் எனக் கூறுவதை நோக்கினால் எழுத்துகள்

அனைத்தும் அகரத்தால் தோன்றுகின்றன என்பதை எளிதில் உணர முடியும். மேலும் தமிழின் சிறப்புமறையாகிய திருக்குறள்'' "அகர முதல எழுத்தெல்லாம்''[1] எனக் கூறியுள்ளது என்றவாறு.

உலகத்தோர் கூற்றாகிய காட்சி அளவையானும், திருக்குறள் ஆகிய நூல் அளவையானும் தன்கோள் நிலைநாட்டப்பட்டது. வடமொழி வேதம் பொதுவும் திருக்குறள் தமிழர்க்குச் சிறப்பும் ஆகும் என வலியுறுத்த எம்மறை எனக்கூறப்பட்டது. (65)

**66. அகரப் பிறப்பே இகரமும் உகரமும்**
**என்கைக்கு உறுதுணை எழில்முகக் குறியே.**

அகர இகர உகர வரிவடிவங்களின் முதலில் வரையப்படும் கிளிமுகம் போன்ற சுழியே இ,உ ஆகியஇரண்டும் அகரத்தைப் போன்ற பிறப்பையே உடையன என்பதை உணர்த்தும் என்றவாறு.

அகரவடிவங்கூறும் 7 ஆம் நூற்பாவில் கிளிமுகம் என்றதை இங்கு எழில்முகம் என்றார். "கிளிமுகம்போலச் சுழித்து''[2] என்று அங்கே கூறி இகரத்தில், "களம்வரை அகரம் ஆம் எனக்காட்டி''[3] என்று உகர வடிவில், "சுழியில் வலங்கீழ்ப்பற்றி''[4] என்றதோடு ஒப்பிட்டு நோக்கினால் இப்பொருள் விளங்கும்.

இனி இவ்வாறன்றி எழில்முகம் என்பதற்கு உச்சரிப்பவரின் முகம் என்றோ அல்லது வாய் என்றோ பொருள் கொள்ளலாகாதோ எனின், அங்ஙனம் கொள்ளின் அங்காத்தலால் மட்டும் தோன்றும் அகரத்தோற்றம், இதழ்களின் விரிவினால் பிறக்கும் இகரத்தோற்றம், உதடுகளின் குவிதலினால் உண்டாகும் உகரத்தோற்றம் என்னும் இவற்றிடை ஒற்றுமை இன்மையால் அஃதுரையன்று என்க. (66)

---

1 திருக்குறள் 1 3 அறுவகை. 8
2 அறுவகை. 7 4 அறுவகை. 9

**67. அகரமும் இகரமும் அணைவுறின் எகரமே.**

அகரம் இகரம் ஆகிய இவ்விரண்டு எழுத்துகளும் கூடினால் எகரம் ஆகும் என்றவாறு.

"அகர இகரம் ஐகாரம் ஆகும்"[1] "அகர உகரம் ஔகாரம் ஆகும்"[2] "அகரத்து இம்பர் யகரப் புள்ளியும் ஐஎன் நெடுஞ் சினை மெய்பெறத் தோன்றும்"[3] என்பன தொல்காப்பியம் இச்சூத்திரங்களுள் இவை தள்ளப்படற்குரிய போலி எழுத்து கள் எனத்தொல்காப்பியர் கூறவேயில்லை. இஃது உரையாசிரி யர்களாக வலிந்து கூறியதேயாகும். இளம்பூரணரும், நச்சி னார்க்கினியரும் காட்டுகின்ற ஐவனம், அஇவனம்; ஔவை அஉவை போன்றன வெறும் மேற்கோள்களாகவன்றி இலக், கிய வழக்கிலோ அன்றி உலக வழக்கிலோ எங்கும் ஆட்சியிற் காண்கிறோம் இல்லை. ஆனால் அய்யம், ஐயம் என்றும் அவுடதம், ஔடதம் என்றும் யகரவகரங்கள் பெற்ற சொற்கள் பலவற்றைக் காண்கிறோம். எனவே பண்டைய உரையாசிரியர் களின் அணுகுமுறையை விட இம்மூன்று சூத்திரங்களையும் ஒருங்கிணைத்துப் பொருள் கொள்ளும் சிவஞானமுனிவருடைய உரையே[4] இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் உரைக்கும் சீரிய முறையாகும்.

இவ்விலக்கண ஆசிரியர், "எகரமாவது அகரக்கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து இசைத்து நரமடங்கல் போல் நிற்ப தொன்று ஆகலானும், ஒகரமாவது அகரக்கூறும் உகரக்கூறும் தம்முள் ஒத்து இசைத்து அவ்வாறு நிற்பதொன்றாகலானும்"[9] என்னும் வடமொழி மரபு பற்றிய சிவஞானமுனிவரைப் பின் பற்றி இச்சூத்திரம் செய்தார்.

தமிழ் எகரம் அகர இகரத்தின் கூட்டமா என்பது ஆய்விற் குரியது. (67)

---

1 தொல். எழுத்து. 54
2 தொல். எழுத்து. 55
3 தொல். எழுத்து. 56
4 தொல். சூத்திர விருத்தி
5 தொல். சூத்திர விருத்தி

**68. அகரமும் உகரமும் ஒளன்று ஆமே.**

அகரம் உகரம் ஆகிய ஈரெழுத்துகளும் கூடினால் ஒகரத்தைப் போன்று ஒலிக்கும் என்றவாறு.

முன்நூற்பாவில் எகரமே எனத்தெளிவாகக் கூறிய ஆசிரியர் இங்கே 'ஒளன்றுஆகும்' என வேறுவாய்பட்டால் கூறுகிறார். முன்நூற்பா உரையிலேயே இவ்விணைப்புப் பற்றிய கருத்துகளும் கூறப்பட்டன.

தமிழ் ஒகரம் அகரஉகரக் கலப்பாகும் என்பதும் ஆய்வுக்குரியதே. (68)

**69. பதினோ ராவதுஒற்று அகரத்து ஒன்றி**
**ஐகாரம் ஆகும்என்று அறிதல்மிக்கு எளிதே.**

யகரமெய் அகரத்துடன் சேர்ந்து ஐகாரம் ஆகும் என்பதை மிக எளிதில் யாரும் உணர்ந்து கொள்ளலாம் என்றவாறு.

அய்யம்-ஐயம், அய்வனம்-ஐவனம் எனவரும். (69)

**70. அகரத்து ஈர்ஏ ழாவதுஒற்று ஒன்றி**
**ஔகாரம் ஆதல் அறிவுளார் அறிந்தும்**
**அப்பொறிக் குறியில் பதினா றாவது ஒற்று**
**ஏதோ நிமித்தத்து இசைத்ததுஒர் வியனே.**

அகரத்தோடு வகரமெய் கூடி ஔகாரம் தோன்றுவதைப் புலவர் உணர்ந்திருந்தும், ஔகாரத்தின் வரிவடிவில் எக்காரணம் பற்றியோ ளகரத்தைச் சேர்த்தது ஒரு விந்தையான செயல் ஆகும் என்றவாறு.

அவ்வை-ஔவை, வவ்வல்-வௌவல் என வரும். ஔகாரத்தின் வரிவடிவில் ளகர வடிவம் ஏனோ சேர்ந்தது என்கிறார். எழுத்துகளின் வரிவடிவத்திற்கும் ஒலிவடிவத்திற்கும் ஏதாவது ஒப்புமை காண விழையும் இவர் போக்கு 66 ஆம் நூற்பாவிலுங் கண்டோம். அடுத்த நூற்பாவிலும் இது புலப்படும். (70)

**71. ஒளகா ரத்தின் கடைக்குறி பற்றி**
**ஊகாரம் அதனூடு உற்றது என்பார்.**
**அம்முறை என்நூற்கு ஆகாது அன்றே.**

ஒளகார வரிவடிவின் ஈற்றில் ஊகாரத்தில் உள்ள ளகர வடிவம் இடம் பெற்றிருப்பதால் ஒளகாரத்தில் ஊகாரம் இணைந்துள்ளது என்று சிலர் சொல்வர். அக்கொள்கை என்னால் செய்யப்படும் இந்த இலக்கணத்திற்கு ஏற்புடையது அல்ல என்றவாறு. அன்றே-அசைநிலை.

ஒளகாரத்தில் ஊகாரம் இருப்பதாக நூல் செய்தவர் யார் என விளங்கவில்லை. ஒளகாரத்தை ஒன்றரை மாத்திரையுடைய நடுவுயிராகக் கொள்ளுமிந்நூல் அதற்குள் இரண்டு மாத்திரையுள்ள நெடில் உள்ளது என்றால் மறுக்க வேண்டியது இயல்பே. (71)

**72. ஆய்தமோடு ஒற்றும் பிணமே போல்வன**
**ஆதலின் இயக்கம் அறைந்திலம் ஆயினும்**
**அகரச் சார்பே ஆம்எனில் தகுமே.**

ஆய்தமும் மெய்யும் உயிரற்றவை ஆகும். எனவே அவற்றின் இயக்கத்தைத் தனியே கூறவில்லை. என்றாலும் அவை அகரச்சார்பு உடையன எனக் கொள்ளலாம் என்றவாறு.

65 ஆம் நூற்பாக்கருத்தோடு தொடர்புடையது இது. (72)

**73. அகரம் பதினெட்டு ஒற்றினும் அணைந்து**
**க,ங,ச,ஞ, ட, ண, முதற் பிறவும் ஆமே.**

க் முதல் ன் வரையான பதினெட்டு மெய்களின் மீதும் அகரம் ஊர்ந்து முறையே ககர முதல் னகரமீறாகிய உயிர்மெய்களாகும் என்றவாறு. (73)

**74. ஆஎழுத்து ஒற்றினத்து அணையும் காலை**
**கா, ஙா, சா, ஞா ஆதிய கவினுமே.**

க் முதல் ன் வரையான ஒற்றெழுத்துகளின் மீது ஆகாரம்

ஊர்ந்து முறையே கா முதல் னா ஈறாகிய பதினெட்டு உயிர் மெய் தோன்றும் என்றவாறு. (74)

75. **இகரம் ஒற்றினத்து இசையும் ஆயின்**
**கிகர னிகரம் ஆதிய கிளருமே.**

க் முதல் ன் வரையான பதினெட்டு மெய்களின் மேல் இகரம் ஊர்ந்து முறையே கி முதல் னி ஈறாகிய உயிர்மெய் தோன்றும் என்றாறு. (75)

76. **ஈகாரம் ஒற்றுத் தொறும்போய் இசைதலின்**
**கீ, னீ தொட்டு னீவரை வருமே.**

க் முதல் ன் வரையான மெய்களின் மேல் ஈகாரம் ஊர்வ தால் முறையே கீ முதல் னீ ஈறாகிய பதினெட்டு உயிர்மெய் யும் தோன்றும் என்றவாறு. (76)

77. **உகரம் ஒற்றுஇனத்து உறுமேல் குகரம்**
**னுகரம் ஆதி னுவ்வரை ஒளிருமே.**

க் முதல் ன் வரையான பதினெட்டு மெய்களின் மேல் உகரம் ஊர்ந்தால் முறையே குகரம் முதல் னுகரம் ஈறாகிய உயிர்மெய் தோன்றும் என்றவாறு. (77)

78. **ஊ, ஒற்று இனத்துஉறின் கூநூ ஆதி**
**னூ வரை வரும்என நுவல்வது முறையே.**

க் முதல் ன் வரையான பதினெட்டு மெய்களின் மேல் ஊகாரம் ஊர்ந்தால் முறையே கூ முதல் னூ வரையான உயிர்மெய் தோன்றும் என்றவாறு. (78)

79. **எகரப் பொறிஒற்று இனத்துஉறில் கெகர**
**னெகரம் ஆதி னெவ்வரை நிகழுமே.**

க் முதல் ன் வரையான பதினெட்டு மெய்களின் மேல் எகரம் ஊர்ந்தால் முறையே கெ முதல் னெ வரையான உயிர் மெய் தோன்றும் என்றவாறு. (79)

**80. ஏ, ஒற் றிடையுறில் கேநே தொட்டு**
**னேவரை வரும்என நிகழ்த்திடல் முறையே.**

ஏகாரஉயிர் க் முதலிய பதினெட்டு மெய்களோடும் சேர்ந் தால் முறையே கே முதல் னே வரையான உயிர்மெய் தோன் றும் என்றவாறு. (80)

**81. ஒற்றோடு ஐயெழுத்து உறுமேல் கைமுதல்**
**ஆகி, னை ஈறாம் அறுமூன்று அவ்விருமே.**

ஐகான் க் முதலிய பதினெட்டு மெய்களோடும் கூடினால் முறையே கை முதல் னை வரையான உயிர்மெய் தோன்றும் என்றவாறு. (81)

**82. ஒற்றுத் தொறும்போய் ஒகரம் புகலால்**
**கொகர னொகரம் ஆதிய குலவுமே.**

ஒகரம் பதினெட்டு மெய்களோடும் கூடினால் முறையே கொ முதல் னொ வரையான உயிர்மெய் தோன்றும் என்ற வாறு. (82)

**83. மெய்களில் ஓஉறில் கோ, னோ ஆதிய**
**பொறிமு வாறும் பொலியும் அன்றே.**

ஓகாரம் மெய்களோடு கூடினால் முறையே கோ முதல் னோ ஈறான பதினெட்டு உயிர்மெய்யும் தோன்றும் என்ற வாறு. (83)

**84. ஔஎனும் உயிர்தான் அறுமூன்று உடல்கொடு**
**கௌவ்வே முதலா னௌவ்வரை காட்டுமே.**

ஔகார உயிர் பதினெட்டு மெய்களொடும்பொருந்தினால் முறையே கௌ முதல் னௌ ஈறாகிய உயிர்மெய் தோன்றும் என்றவாறு. (84)

**85. மற்றைமு வகைஎழுத்து ஒலிவரு மாறே**
**இயக்கமும் ஆம்என்று இயம்பிடல் மரபே.**

(எழுவகை எழுத்துகளுள் இதுவரை கூறப்பட்ட உயிர் ஆய்தம், மெய், உயிர்மெய் என்னும் நால்வகை நீங்கிய) மற்றையதான அலகு, கூட்டு, குறிப்பு என்னும் மூவகை எழுத்துகளுக்குரிய இயக்கம் அதனதன் ஒலிக்குரிய இயக்கமேயாகும் என்றவாறு.

கீழ் முந்திரிக்குரிய அலகெழுத்து ணகரம். ஆனால் அது ணகரமாகக் கூறப்படாமல் முந்திரி என்றே சொல்லப்பெறும். எனவே ணகர வரிவடிவம் அலகெழுத்தாக வருங்கால் அதன் ஒலி முந்திரி ஆகும். முந்திரி என்னும் தொடர் மொழியின் ஒலியே இதன் இயக்கமும் ஆகும். கூட்டு, குறிப்பிற்கும் இவ்வாறே கொள்க. (85)

**86. இயங்கு நிலையிவண் இயம்பினம்; இனநிலை**
**அறிந்த வாறே அறைகுதும் அன்றே.**

எழுத்துகள் இயங்குமாற்றை இதுகாறும் எடுத்துரைத்தோம். இனி அவைகளின் இனப்பாகுபாடுபற்றி யாம் உணர்ந்த அளவுகூறுவாம் என்றபடி.

இந்நூற்பாவால் இயங்கு நிலையை முடித்து இனநிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்கிறார். (86)

## 3. இனநிலை

**87. உயிர்ஈ ராறும் பொதுவினம் ஆமே.**

பன்னிரண்டு உயிரெழுத்துகளும் பொது இனம் ஆம் என்றவாறு.

உயிர்களுள் தனித்தனிக் குறில் நெடில்களை தமக்கினம் என்றும், தமக்கெனத் தனிக் குறிலற்ற ஐகான் ஔகான் இரண்டற்கும் முறையே இகர உகரங்களை இனமாகவும் கொள்ளலே பண்டைய மரபு. இவர் புதியன புகுதலாகப் பொதுவினம் என்ற இப்பாகுபாட்டை வேண்டுகிறார். உபாத்தியாயர் இன்னம் ஒரு படி மேலே சென்று தம் நூலில், "உயிர் முதல் முப்பதும் ஒன்றுஒன்றற்கு இனம்"[10] என்கிறார்.

10. முத்துவீரியம். எழுத்து.20

இவ்வாறான புதிய இனப்பாகுபாடுகளால் பெறப்படும் பயன் யாதென விளங்கவில்லை. (87)

**88. ஒற்றுஇனம் உயிர்மெய் இனத்தோடு உறுமே.**

மெய்எழுத்துகள் உயிர்மெய்யின் இனத்தையே பெறும் என்றவாறு.

பழைய நூல்கள் ஒற்றுகளை மூவினமாக்கி அவற்றையே உயிர்மெய் பெறும் என்கின்றன. இவர் அம்முறையைத் தலை கீழாக மாற்றுகிறார். இவர் மெய்களைச் சற்றும் இயக்கமற்ற சவங்களாகவே கோடலால் அனைத்து இலக்கணங்களையும் உயிர்மெய்யின்மேல் ஏற்றியே கூறுகிறார். உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்தையும் முதல் எனக் கொள்ளும் அறிவியற் கொள்கையோடிசைந்த தமிழ் இலக்கண மரபிற்கு இத்தகைய அணுகுமுறை ஒத்ததா என்பது ஆய்வுக்குரியது. (88)

**89. க,ச,ட, த,ப,றஎன் இருமூன்று எழுத்தும்அவ்
வருக்கமும் வல்லினம் ஆம்எனல் வழக்கே.**

க,ச,ட,த,ப,ற, ஆகிய ஆறு எழுத்துகளையும் இந்த ஆறு வருக்கத்தைச் சேர்ந்த மற்ற உயிர்மெய் எழுத்துகளையும் வல்லினம் எனக்கூறுதல் மரபாகும் என்றவாறு. (89)

**90. ங,ஞ,ண, ந,ம,னஎன் எழுத்துஒர் ஆறும்
அவற்றின் பகுதியும் மெல்லினம் ஆமே.**

ங,ஞ,ண,ந,ம,ன ஆகிய ஆறு எழுத்துகளும்,இந்த ஆறு வருக் கத்தைச் சேர்ந்த மற்ற உயிர்மெய் எழுத்துகளும் மெல்லினம் ஆகும் என்றவாறு. (90)

**91. ய,ர,ல, வ,ழள, என் எழுத்துஇரு மூன்றும்
அவ்வப் பகுதியும் இடையினம் ஆமே.**

ய,ர,ல,வ,ழ,ள ஆகிய ஆறு எழுத்துகளும், இந்த ஆறு வருக்கத்தைச் சேர்ந்த மற்ற உயிர்மெய் எழுத்துகளும் இடை யினம் ஆகும் என்றவாறு. (91)

**92. ஆய்தம் இடையினத்து ஒற்றுப் போலுமே.**

அஃகேனம் இடையின மெய்யோடு ஓரினமாக வைத்து எண்ணப்படும் என்றவாறு.

பிறக்கின்ற இடத்தானும், புள்ளி என்ற பெயரானும், அரை மாத்திரையாகிய அளவானும் ஆய்தம் இடையின மெய்யின் இனமாதல் இந்நூல் 14 ஆம் நூற்பாவுரையில் உரைக்கப்பட்டது. ஈண்டு இது பற்றி மேலும் சில உண்மைகளைக் காண்போம்.

"தனிநிலை ஒற்று இவைதாம் அலகு இலவே அளபெடை அல்லாக்காலையான"[1] என்னும் நூற்பா உரையுள் அளபெழும் மெய்கள் எவையெவை என்பதை "ஙஞணநமன வயளல ஆய்தம் ஈரிடத்து அளபெழும்ஒரோவழியான"[2] என்னும் மேற்கோட் சூத்திரம் குறிக்கிறது. மெல்லின எழுத்துகள் ஆறும் இடையினத்தில் ய,ல,வ,ள என்ற நான்கும் அளபெழும் மெய்களாம். (இவற்றோடு ஆய்தமும் அளபெடுக்கும்) இப்பத்துள் மெல்லினம் ஆறும் "மூக்கின் வளியிசை யாக்புறத் தோன்றுகின்றன"[3] எனவே மிடற்றுவளியாற்தோன்றும்ஆய்தத்திற்கு இவை இனம் ஆகா.இது பற்றியே இம்மேற்கோள்சூத்திர ஆசிரியர் வ,ய,ல,ளவை அடுத்து அதனோடொத்த ஆய்தத்தைச் செம்மையான முறைமை பற்றி நிறுத்தினார். ஒற்றைப்போல் ஆய்தமும் அளபெடுப்பதாலும், அந்நிலையிலும் அது இடையின மெய்யொத்து விளங்குதலாலும் அதனை இடையின ஒற்றுக்கு இணையாகக் கூறலாம்.

மற்றொன்றும் காண்க. ளகர வகர ஈற்றுச் சொற்கள் தகரமுதன் மொழிகளோடு புணருங்காலை தம் லகர ளகரங்கள் முறையேறகரமாகவும் டகரமாகவும் திரிதலே அன்றிஆய்தமாகவும் திரிகின்றன[4]. கல் + தீது = கஃறீது எனவும், முள் + தீது = முஃடீது எனவும் வருகின்றன. சுட்டு முதலாகிய வகர ஈறு வன்கணம் வந்தால் அல்வழிப்புணர்ச்சியில் வகரம் ஆய்தமாய்த்

1 யா. விருத்தி 3
2 யா. 3 விருத்தி மேற்கோள்
3 தொல். எழுத்து 100
4 தொல். எழுத்து. 369. 399

திரிந்து முடிகிறது.[1] அவ் + கடிய = அஃகடிய; இவ் + தீய = இஃதீய; உவ்+பெரிய=உஃபெரிய எனவரும் எனப்படுகிறது. (இவ்வழக்கு நச்சினார்க்கினியர் காலத்திலேயே அருகிவிட்ட துண்மையே[2].)மேற்கூறப்பட்ட மூன்று விதிகளிலும் ஆய்தமாகத் திரிபவை ல,வ,ள என்ற இடையின மெய்களே என்பது நோக்கத் தக்கது. ஆய்தம் அவற்றிற்கு இனமாதல் பற்றியன்றோ திரிபுநேர்கிறது.

மிடற்றெழு வளியால் மேவிய பிறப்பும்
நாவோடு அண்ணத் தொடர்புஉறு முயற்சியும்
லளவ மெய்யீறு தனிநிலை யாகச்
சிற்சில புணர்வில் திரிதரல் உண்மையும்
ஆயுங் காலை அருந்தமிழ் எழுத்தில்
ஆய்தம் இடையினத்து ஒற்றுப் போலுமே.

இது நூற்பாவை விரித்த உரைச்சூத்திரம். (92)

**93. அலகுஆதி மூன்றும் பிறழ்தரும் இனமே.**

அலகு, கூட்டு, குறிப்பு ஆகிய மூவகை எழுத்துகளும் மாறு கின்ற இனத்தைச் சேர்ந்தனவாகும் என்றவாறு.

ண என்பது கீழ் முந்திரியைக் குறிக்கும் எழுத்து. உ என்பது இரண்டின் குறியீடு. இவைகள் ண, உ எனப்படிக்கப்பட்டால் முறையே மெல்லினமும் (இவர் கொள்கைப்படி) பொது வினமும் ஆகும். ஆனால் முந்திரி, இரண்டு எனவே தொடர் மொழிகளாகப் படிக்கப்படும். இவற்றுள் பல இனங்களும் கலந்து வருதல் கண்கூடு.

தனிஎழுத்திற்கன்றித் தொடர்மொழிகளுக்கு இனம் கூற வேண்டியது இல்லையெனினும் இவர் வரிவடிவு கொண்டு ஏழ் வகை எழுத்துகள் கொண்டமையின் இந்நூற்பா இன்றியமை யாததாயிற்று. (93)

---

1 தொல். எழுத்து. 380
2 நச். தொல். எழுத்து. 383

**94. வல்லினம் ஆணே மெல்லினம் பெண்ணே**
**இடையினம் அலியே என்பா ரிடைசிலர்**
**குறில்நெடில் நடுவினைக் கூறலும் உளதே.**

வல்லினம் ஆண்பாலாம். மெல்லினம் பெண்பாலாம். இடையினம் அலிப்பாலாம். இவையே பெரும்பாலோர் கொள்கை. ஆனால் சிலர் குறில், நெடில், நடுவை முறையே ஆண், பெண். அலியெனக் கூறலுமுண்டு என்றவாறு.

நடு என்றது ஒன்றரை மாத்திரை பெறும் ஐகான் ஔகான் ஆகிய இரண்டினை.

பாட்டியல் நூல்களிற் கூறப்படுகின்ற எழுத்துகளின் பால், தெய்வம் பற்றிய செய்திகளையும் இவர் ஒருதலைமொழிதலாக எழுத்ததிகாரத்திலேயே கூறிவிடுகிறார். பாட்டியல் நூல்கள் அனைத்துமே, ''எண்ணும் குறில் ஆண்; இயைந்த நெடில் எல்லாம் பெண்ணாகும்; ஒற்று ஆய்தம் பேடாகும்''[1] என்ற கருத்தையே கூறுகின்றன. (பார்க்க: பன்னிரு பாட்டியல் எழுத்தியல் 45 முதல் 53 வரை; இலக்கண விளக்கம் 773; சுவாமிநாதம் 174; சிதம்பரப் பாட்டியல் பொருத்தவியல் 41; நவநீதப்பாட்டியல்-பொருத்தவியல் 7; முத்துவீரியம் 1031; பொருத்த விளக்கம் 20, 21, 22.) தொன்னூல் விளக்கம். ''பால் எனக் குறில் ஆண் நெடில் பெண் மற்று உயிர் ஆண் உயிர்மெய் பெண் என்மரும் உளரே அவைதம் பாவியல் கெடினுமாம்; மற்றவை அலியே''[2] என இரு கொள்கைகளையும், பொருத்த விளக்கம் ''ஆவியீராறும் அடங்கன் மெய்யும் ஆண்பெண் என்ன அறைநரும் உளரே''[3] எனப் பிறர்கோள் கூறும் சூத்திரத்தையும் கூறுகின்றன. ஆனால் இவை எவற்றிலும் இவர் தன் கோளாகக் கூறும் வல்லினம், மெல்லினம், இடையினம் முறையே ஆண் பெண் அலியாகக் கூறப்படவில்லை. பிறர் கோளாகக் கூறப்பட்டதிலும் எந்த நூலும் நடுவெழுத்து என இவரால் கூறப்பட்ட ஐகார ஔகாரங்களை அலி எழுத்துகள்

1 வெண்பாப் பாட்டியல் 7
2 தொன்னூல் விளக்கம் 289
3 பொருத்த விளக்கம் 23

என்னவில்லை. இந்நூற்பாவின் பல கருத்துகள் இவருடைய சொந்தக் கொள்கைகளாகும். அடுத்துத் தெய்வம் பற்றிய கொள்கையிலும் இவர் முந்து நூல்களினின்றும் முரண்படுவதைத் தெளிவாகக் காணலாம். (94)

**95. இனநிலை கூறினம்; எழுத்துத் தோறும்
தெய்வ நிலைஉள செப்புதும் சிறிதே.**

இதுகாறும் எழுத்துகளின் இனநிலை கூறினாம். இனி ஒவ்வொரு எழுத்திலும் நிலைத்து விளங்குகின்ற தெய்வங்களைப் பற்றிச் சிறிது கூறுவாம் என்றவாறு.

இந்த இறுதிச் சூத்திரத்தால் இன நிலையை முற்றுவித்து அடுத்த தெய்வநிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்கிறார்.

எழுத்துகளைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்தி நோக்குகையில் மற்ற பாட்டியல் நூல்களுக்கும் இவருக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உள்ளது. பிற நூல்கள் எந்த எந்த எழுத்து எந்த எந்தத் தெய்வத்தால் பிறப்பிக்கப்பட்டன எனக் கூறுகின்றன. ''முந்நான்கு உயிரும் முதல்வன் படைத்தான்''[1] ''மூவாறு உடம்பும் படைத்தனரே''[2] ''மூவாறு ஒற்றும் கருதிச் செய்தார்''[3] என்பனவற்றால் இது தெளிவாகிறது. (மேலும் காண்க: வெண்பாப் பாட்டியல்11; பன்னிரு பாட்டியல் 4; இலக்கண விளக்கம் 778; சுவாமி நாதீயம் 175. தொன்னூல் விளக்கம் பொருத்த விளக்கம் ஆகிய இரண்டும் முறையே கிருத்தவ, இசுலாமிய நூலாதலின் தெய்வம் பற்றிக்கூறப்படவில்லை.)

ஆனால் இவர் தெய்வங்கள் எழுத்துகளைப் படைத்ததாகக் கொள்ளாமல் அவற்றுள் நிலைபெற்றிருப்பதாகக் கூறுகிறார். எனவேதான் எழுத்துத்தோறும் உள தெய்வ நிலை எனக் கொண்டு கூட்டப்பட்டது. இவர் கோட்பாடு பீஜாட்

1 பன்னிரு பாட்டியல் 8
2 நவநீதப் பாட்டியல் 11
3 சிதம்பரப் பாட்டியல் 21

சரங்களைக் கொள்ளும் மந்திர சாத்திரத்தோடு தொடர்புடையதாகும். (95)

## 4. தெய்வநிலை

96. அகரஆ காரத்து அயனொடு கலைமகள்;
இகரஈ காரத்து அரியுடன் எழில்திரு;
உகரஊ காரத்து அரன்உமை; எகர
ஏகா ரத்தில்ம யேச்சுரன் யாமளை;
ஒகரஓ காரத்து ஈசன்ம னோன்மணி
நிலைஇய பண்புணர் நெறிஎளிது அலவே.

அகர ஆகாரங்களில் முறையே பிரமனும் நாமகளும், இ,ஈ எனும் இவற்றில் திருமாலும் திருமகளும், உகரஊகாரங்களில் முறையே சிவபெருமானும் உமையம்மையும், எ,ஏ எனும் இவற்றுள் மகேச்சுரனும் யாமளையும்,ஒகர ஓகாரங்களில் முறையே ஈசனும் மனோன்மணியும் நிலைபெற்றுள்ளனர். ஆனால் இதனை உணர்ந்து கொள்வது எளிதானது அன்று என்றவாறு.

மந்திரம் பலகோடி முறை விதி வழுவாது செபிக்கப்பட்டு அது கைவரப்பெற்றால்தான் (சித்தி) அதன் வடிவம் விளங்கும் என்னும் மாந்திரிகக் கொள்கை பற்றி உணர் நெறி எளிது அல என்றார். எழுத்துகளின் தெய்வநிலை பற்றிய இவர் கருத்துகள் பிற பாட்டியல் நூலுடையாருடன் அடிப்படையிலேயே வேறுபடுதலால் அவற்றோடு ஒப்புநோக்கப்படவில்லை. (96)

97. ஐகா ரத்தில் அயில்வேற் குருபரன்
ஒளகா ரத்தில் அவன்துணை உறுமே.

ஐகாரத்தில் முருகக் கடவுளும், ஒளகாரத்தில் அவனுக்கு மூத்த விநாயகரும் நிலைபெற்றுள்ளனர் என்றவாறு. (97)

98. ஆய்தத்து அருக்கன் ஆதிமுச் சுடரும்
பொலிதரும் என்னப் புகலல் ஆகுமே.

அஃகேனத்தில் சூரியன், சந்திரன், தீக்கடவுள் ஆகிய மூன்று சுடர்த் தெய்வங்களும் விளங்குவர் என்று கூறலாம் என்றவாறு. (98)

**99. ஒற்றினந் தோறும் உருவொடு தோன்றாத்**
**தெய்வம் புகும்எனம் செப்பிடல் முறையே.**

மெய்யெழுத்துகளில்எல்லாம் வடிவம்அற்ற அருவநிலையிலுள்ள தெய்வம் புகுந்து நிலைத்துள்ளது எனலாம் என்றவாறு. (99)

**100. உயிர்மெய் ஆதியில் உரைக்கஅரும் பேதத்து**
**அளவுஇல்பல் தெய்வம் அண்ணுறும் அன்றே.**

உயிர்மெய் முதலிய மற்றவகை எழுத்துகளுள் பிரித்துக் கூற முடியாதபடி கணக்கற்று விளங்குகின்ற பல தெய்வங்கள் பொருந்தி நிலைத்து வாழும் என்றவாறு.

உயிர்மெய் ஆதி என்றது அலகு, கூட்டு, குறிப்பு எழுத்துகளை. (100)

**101. தெய்வப் பெயரின் சிரத்துஉறும் எழுத்தே**
**அவ்வக் கடவுள் அணிநிலை யாம்என்று**
**இயம்பும் மாற்றமும் இனிதாம் அன்றே.**

தெய்வத்தின் இயற்பெயரின் முதல் எழுத்தே அக்கடவுள் நன்கு நிலைபெற்று ஒளிரும் எழுத்தாம் எனச் சொல்லப்படும் அந்நெறியும் கொள்ளத்தக்கதேயாம் என்றவாறு.

இதுவும் மந்திர சாத்திரத்தைத் தழுவியதே. கணபதி, துர்க்கை, சண்முகர், சம்பு, காளி என்னும் தெய்வங்கட்கு மந்திர நூலார் முறையே கம், தும், ஷம், சம், கம் என்பனவற்றைப் பீஜமாகக் கொள்ளுதல் காண்க. (101)

**102. தெய்வ நிலைஇவண் செப்பினம்; எழுத்தின்**
**தன்மை நிலையினைச் சாற்றுதும் சற்றே.**

எழுத்துகளின் தெய்வநிலையை இவ்வாறு கூறினாம். இனி அவற்றின் தன்மைகளைச் சிறிது கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் தெய்வநிலை முற்றுவிக்கப்பெற்றுத் தொடர்கின்ற தன்மைநிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (102)

## 5. தன்மைநிலை

**103. அகரம் சேய்மைப் பொருளினைச் சுட்டி,**
**உடைமை காட்டும் இடைநிலை யாகி,**
**ஏனைப் பொருள்விளைத்து. ஒவ்வோர் இடத்து**
**மிகுதி காட்டும்; அவ்வூர் என்பதும்,**
**பைய நாகம் என்பதும், அசைவன்**
**என்பதும், அகோரம் என்பதும் நிரைநிரை**
**உதாரணம் ஆகும் உற்றுஉணர் வார்க்கே.**

அகர எழுத்து தூரத்தில் உள்ள பொருள்களைச் சுட்டும் சேய்மைச் சுட்டு, உடைமைப்பொருளைக் காட்டும் இடைநிலை, அன்மைப் பொருளைக் காட்டும் முதல்நிலை, மிகுதியைக் காட்டும் முதல்நிலை என்று வரும். அவ்வூர், பைய நாகம், அசைவன், அகோரம் என்பன முறையே இவற்றிற்கு உதாரணம் ஆகும் என்றவாறு.

இயலுமிடங்களில் எல்லாம் நூற்பாவிலேயே எடுத்துக் காட்டுகளையும் அமைத்துவிடுவது இவ்விலக்கணத்தின் தனிச் சிறப்பாகும். இதனால் நூலாசிரியரின் கோட்பாட்டைத் தெளிவாக அறிந்து கொள்வது எளிதாகிறது. பையை உடைய நாகம் – பைய நாகம் என்புழி உடைமைப் பொருளிலும், சைவன் அல்லாதவன் அசைவன் என அன்மைப் பொருளிலும், கோரத்தில் மிக்கது அகோரம் என மிகுதிப் பொருளிலும் வந்தன. (103)

**104. ஆஎனல் வினாவாம்; அதாஎனல் உதாரணம்.**

ஆ என்பது வினாப் பொருளில் வரும். அதா என்ற சொல் உதாரணமாகும் என்றவாறு.

அது+ஆ=அதா, அதுவா. (104)

**105. இகரம் அணித்துஆம் பொருளினைச் சுட்டி**
**உடைமை காட்டும் கடைநிலை ஆகும்;**
**இப்பணம் கண்ணி எனும்இவை உதாரணம்.**

இகரம் அருகில் உள்ள பொருள்களைச் சுட்டும் அண்மைச் சுட்டு ஆகவும், உடைமைப் பொருளைக் காட்டும் ஈற்றுநிலை ஆகவும் வரும். முறையே இப்பணம், கண்ணி என்பன எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

கண்களை உடையவள் கண்ணி என உடைமைப் பொருளில் வந்தது. (105)

**106. உகரம்ஓர் பொருளின் நடுநிலைச் சுட்டாம்**
**உவ்விடம் என்பது உதாரணம் ஆமே.**

உகரம் மிகவும் அண்மையோ அன்றி மிகவும் சேய்மையோ அல்லாமல் இடைப்பட்டுள்ள பொருள்களைச் சுட்டும். உவ்விடம் என்பது எடுத்துக்காட்டு ஆகும் என்றவாறு. (106)

**107. எகரம் முதல்நின்று பொதுப்படச் சுட்டி**
**ஐயம் தீர்வான் வினவல் ஆகும்;**
**எத்தெய்வம் மேலாம் எனும்சொல் உதாரணம்.**

எகரம் முதல்நிலையிலிருந்து பொதுவாக ஒருபொருளைக் குறிப்பிட்டு அப்பொருளின் எதாவது ஒரு தன்மையைப் பற்றி ஏற்படும் சந்தேகத்தைக் கேட்கும் கேள்வியாகும். எத்தெய்வம் மேலாம் என்ற வினாவிலுள்ள எத்தெய்வம் என்னும் சொல் எடுத்துக்காட்டு ஆகும் என்றவாறு.

ஒரு பொருளை முழுதும் ஐயுறாமல் அதன் ஏகதேசத்தை மட்டும் ஐயுற்று வினவுங்கால் எகரம் வரும் என்க. எத்தெய்வம் என்புழி அத்தெய்வத்தின் தன்மைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிறிதொரு தெய்வத்துடன் ஒப்பிடப்படுகிறது. முழுத் தன்மையில் ஐயம் வந்தால் ஆகாரம் பெற்று தெய்வமா என வரும். (107)

**108. ஏகாரம் ஒருவர்க் உணர்த்தும் குறியாம்,**
**உறுதி காட்டும் கருவி ஆகிப்**
**பெயருடன் இருவிதத்து அணைந்து விளியாம்;**
**அங்குபோ காதே; என்சொல் மெய்யே;**
**ஏகுகா; குருவே எனும்நான்கு உதாரணம்.**

ஏகாரம் (எதிரில்உள்ள) ஒருவருக்கு (ஒருசெயலைச் செய்ய வேண்டாம்) என அறிவிக்கும் (எதிர்மறை ஏவல்) விகுதியாகவும், ஒன்றைப் பிறவற்றினின்று பிரித்தோ அன்றிப் பிரிக்காமலோ உறுதிப்படுத்தும் விகுதியாகவும், ஒரு பெயர்ச் சொல்லுடன் முன்னும் பின்னும் இணைந்து விளிப்பொருள் தருவதாகவும் வரும். அங்கு போகாதே, என் சொல் மெய்யே, ஏ குகா, குருவே என்ற நான்கும் முறையே இவைகட்கு உதாரணங்களாம் என்றவாறு.

பொதுவாக ஏகாரம் எதிர்மறை ஏவல் விகுதியாகவே வரும். ஒரு செயலால் நேரும் பின்விளைவை உணர்த்தியே எதிர்மறை ஏவல் உரைக்கப்படுகிறது. நூற்பாவிலேயே இடம் பெற்ற எடுத்துக்காட்டிற்கிசைய இக்கருத்துகளை யுளங்கொண்டு உரையுள் சில சொற்கள் வருவித்துக் கொள்ளப்பட்டன.

என் சொல் மெய்யே என்புழி மெய் என்பதற்கு முதன்மை அளித்தால் தேற்றேகாரமாகவும், பொய்யன்று எனக் கொண் டால் பிரிநிலையும் ஆம். இரண்டின் பயனும் உறுதிப் படுத்த லேயாதலின் இவர் ஒன்றே கூறினார்.

ஏ குகா போன்ற இடங்களில் ஏ என்பதனை இவ்வாசிரி யர் ஒரு சொல்லாகவே கருதுகிறார். இது "ஏஎனல் ஆதிய விளிச்சொல் ஆமே"[1] என்பதனால் நன்கு தெளிவாகிறது.

(108)

**109 ஐகாரம் ஒருபெயர் ஈற்றிற் புணர்ந்து**
**மற்றும்ஓர் சொல்லின் வரவு நோக்கும்;**
**குமரனை என்று கூறிடல் தாரணம்.**

---

1 அறுவகை. 221

ஐ என்ற எழுத்து ஒரு பெயர்ச்சொல்லின் இறுதியில் கூடி (இரண்டன் உருபாகித்) தன் பொருள் முடிவதற்குப் பிறிதொரு (வினைச்) சொல்லை அவாவி நிற்கும். குமரனை என்பது எடுத்துக்காட்டாம் என்றவாறு. (109)

**110. ஓஎனல் வினாவோடு எதிர்மறை உணர்த்தும்;**
**உறவோ என்கை உதாரணம் ஆமே.**

ஓகாரம் வினாப் பொருளிலும், எதிர்மறையாகவும் வரும். உறவோ என்ற சொல்இதற்கு எடுத்துக்காட்டாம் என்றவாறு.

உறவோ என்ற சொல் உறவினரா என்ற பொருளில் வினாவாகத்தான் வருகிறது. ஆனால் இதுவே, "சுட்டு மறை நேர் ஏவல் வினாதல் உற்றது உரைத்தல் உறுவது கூறல் இன மொழி எனும் எண் இறையுள்"1 இறைப்பொருள் பயக்கும் விடையாக அமைந்து "உறவல்லர்" என்னும் எதிர்மறைப் பொருள் தருகிறது. இதனைத் தெளிவாக்கவே இந்நூலாசிரியர் இரண்டிற்கும் ஒரே சொல்லை எடுத்துக் காட்டினார். (110)

**111. குகரமும், கைஎனும் எழுத்தும், மை காரமும்**
**மோஎனும் பொறியும் மொழிஈற்று விகுதியாம்;**
**அதுக்குச் செய்கை, உண்மை, கேண்மோ**
**என்னும்நான் மொழியும் இலங்குஉதா ரணமே.**

கு, கை, மை, மோ ஆகிய நான்கெழுத்துகளும் ஒரு சொல்லின் இறுதியில் வருகின்ற விகுதிகள் ஆகும். அதுக்குச் செய்கை, உண்மை, கேண்மோ என்னும் நான்கு சொற்களும் எடுத்துக் காட்டுகளாகும் என்றவாறு.

103 முதல் 110 வரையான 9 நூற்பாக்களில் உயிரெழுத்துகளைப் பற்றிக் கூறி முடித்து இதில் உயிர்மெய்களிற் சிலவற்றைக் கூறினார். இவற்றுள் கு என்பது நான்கன் உருபு.

---

1 நன்னூல் 386

கை தொழிற்பெயர் விகுதி. மை பண்புப்பெயர் விகுதி. மோ முன்னிலையசை. (111)

**112. ஆய்தமும் ஒற்றும் ஙகரமும் டகரமும்**
**ணகரமும் ரகரமும் லகரமும் ழகரமும்**
**ளகரமும் றகரமும் னகரமும் மொழிமுன்**
**நில்லா என்று நிகழ்த்திடல் மரபே.**

ஆய்தம், மெய்யெழுத்துகள், ங, ட, ண, ர, ல, ழ, ள, ற,ன ஆகிய ஒன்பது வர்க்க உயிர்மெய் ஆகியன ஒரு சொல்லின் முதல்நிலையாக நிற்கப் பெறா என்றவாறு.

இங்கு கூறப்படாத க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகிய ஒன்பது வர்க்கங்களும் பொதுவகையான் மொழிமுதல் ஆகும் எனக் கொள்ளவேண்டுமேயன்றி இவ் வர்க்கத்தைச் சேர்ந்த நூற்றெட்டு உயிர்மெய்களும் முதலாம் எனக் கொள்ளலா காது. இந்நூற்பா ''பன்னீ ருயிரும் கதந பமஎனும் ஆவைந்து எழுத்தொடு சவஞய உளப்பட அவ்வொன் பான்உயிர் மெய் யும் மொழிமுதல்''[1] என்றதைப் போன்று பொதுவிதி கூறுவ தாகும். சிறப்பு விதிகள் இந்நூலில் கூறப்படவில்லை. நிகழ்த் திடல் மரபே என்றதனால் புதியன புகுதலாகச் சில சொற்கள் நூல் வழக்கிலும் இடம் பெற்றுவிட்டால், ''கடிசொல் லில்லைக் காலத்துப் படினே''[2] என்னும் விதி பற்றித் தக்க வற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது உணர்த்தப்பட் டது. இது ''கால வேற்றுமை கருதாப் புலவன் சீலனே யெனி னும் சிறுமை யினனே''[3] ''உலகர்தம் வாய்பா டொருங்கு நீத்தலும் சேர்த்தலும் புலமைச் சீர்க்குஇழி வாமே''[4] என இவரே இந்நூலிற் கூறுவதால் தெளிவாகிறது. (112)

**113. ஏனைய எழுத்தின் குணம்எலாம் பொதிய**
**மால்வரைக் குவட்டின் வாழும்மா முனிவன்**
**சீரடி மறவார் தெரிதற் பால;**

---

1 இலக். விளக்கம். 26
2 தொல். சொல். 452
3 அறுவகை. 693
4 ,, 748

ஆயினும் விரித்துஈண்டு அறிந்த மட்டும்
நுவலினும் பெருத்து நூல்எழில் குன்றும்
ஆதலின் விடுத்துஇனி அவற்றின் புணர்ச்சி
இயல்பு கூறுதும் ஏன்றமாத் திரமே.

இங்கே கூறப்படாத பிற எழுத்துகளின் இயல்புகள் அனைத்தும் புலவர்களால் அறியப்படவேண்டியதே ஆகும். எனினும் அனைத்தையும் ஒவ்வொன்றாக விரித்துத் தெரிந்த அளவு இங்கே கூறப்புகின் இந்நூல் மிக விரிந்து கவினழியும். எனவே தனி எழுத்துகளின் தன்மைநிலையை இத்துடன் நிறைவுசெய்து அடுத்து அவற்றின் புணர்ச்சி விதிகளைப் பற்றி இயன்ற மட்டும் கூறுவாம் என்றவாறு.

தமிழ்ப் புலவர்களை அகத்தியரின் அடியார்கள் எனக் குறிப்பிடுவது இவர் வழக்கம். இதனை இவரால் இயற்றப் பெற்ற புலவர் புராணத்தில் பரவலாகக் காணலாம்.

இந் நூற்பாவால் எழுத்திலக்கணத்தின் இரண்டாம் பிரிவாகிய நிலை இயல்பை முற்றுவித்து மூன்றாம் இயல்பாகிய புணர்ச்சி இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்கிறார். (113)

நிலை இயல்பு முற்றிற்று.

## III புணர்ச்சி இயல்பு

இந்நூலாசிரியர் புணரும் இரு சொற்களையும் நிலைமொழி வருமொழி என வகுத்துக்கொண்டு புணர்ச்சிவிதிகளைக் கூறுவதில்லை. இரண்டு சொற்கள் தாம் புணருங்காற் பெறும் மாற்றங்கள் மெய்ம்மயக்க விதி முறைகளாலேயே என்பதனால் இவர் நிலைமொழியின் ஈற்றெழுத்தையும், வருமொழியின் முதல் எழுத்தையும் கொண்டு கூறப்படும் இலக்கணம் எழுத்திலக்கணமே எனக் கருதி இங்கே வைத்தார். தொல்காப்பியத்தும் புணரியல் எழுத்ததிகாரத்தே இடம் பெற்றது. நன்னூலார் தான் பதவியல் எனத் தனிப் பாகுபாடு செய்து புணர்ச்சி விதிகளை எழுத்திலக்கணத்தினின்றும் பிரித்துள்ளார்.

இப்பிரிவில் புணர்ச்சி விதிகளோடு ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், முற்றியலுகரம், மகரக் குறுக்கம், வடமொழிச் சந்திகள் ஆகியனவும் கூறப்படுகின்றன.

**114. சுட்டுஎழுத் திடைஎவ் வுயிர்வந்து ஒன்றினும்**
**வகரஒற்று இடைக்கொடுஅவ் வுயிர்மெய் ஆகும்;**
**அவ்வானை இவ்விரும்பு உவ்வெழுத்து எவ்வோலை**
**என்னும்நான் மாற்றத்து இயல்பே விளங்கும்.**

சுட்டெழுத்துகளோடு எந்த உயிரெழுத்து வந்து புணர்ந்தாலும் வகர மெய் இடையில் தோன்றுவதோடு உயிரும் வகரவர்க்க உயிர்மெய்யாகத் திரியும். அவ்வானை, இவ்விரும்பு, உவ்வெழுத்து, எவ்வோலை என்ற நான்காலும் இவ்விலக்கணம் தெளிவாக விளங்கும் என்றவாறு.

முன் இவரால் ''எகரம் முதல்நின்று பொதுப்படச் சுட்டி ஐயம் தீர்வான் வினவலாகும்''[1] என வினாச் சுட்டாகக் கொள்ளப்பட்டதால் இங்கும் எகரம் சுட்டுப் பெயருடனேயே ஆளப்பட்டது. அ + ஆனை; இ + இரும்பு; உ + எழுத்து; எ + ஒலை என்பனவற்றுள் வகரமெய் தோன்றியதோடு ஆ, இ,எ,ஒ என்னும் உயிர்கள் முறையே வா, வி, வெ,வோ எனத் திரிந்தமை காண்க.

இவ்வாசிரியரால் இயற்றப்பெற்ற ''ஏழாமிலக்கணம்'' என்ற நூலின் எட்டாவது நூற்பா இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.(114)

**115. உயிர்மெய்ப் பொறிமுன் உறுமொழிச் சுட்டில்**
**அவ்அவ் வருக்கத்து ஒற்றுஇடை தோன்றும்;**
**அக்கோன் இங்நகர் எவ்வேல் எனவே.**

உயிர்மெய் எழுத்துகள் வந்து சுட்டெழுத்துகளோடு புணருங்கால் அவ்வுயிர்மெய்யின் வருக்கத்து மெய்எழுத்து இடையில் தோன்றும். அக்கோன், இந்நகர், எவ்வேல் என்பன உதாரணங்களாம் என்றவாறு.

---

1 அறுவகை. 107

அகர இகர எகரச் சுட்டுகளுடன் ககர,நகர,வகர வருக்க உயிர்மெய்கள் புணர முறையே க்,ந்,வ் இடையில் தோன்றின. உரையிற் கோடலாக உப்பையன் போன்ற உகரச் சுட்டையும் கொள்க.

இங்கு ஏழாம் இலக்கணம் பத்தாம் நூற்பா காண்க.(115)

**116. இருபால் விகுதிகள் சுட்டில் அகரம்**
**ஒற்றுஇன்றி வகரமாய் அணைதலும் வாய்பாடு;**
**அவன்இவள் எவர்எனல் உதாரணம் ஆமே.**

ஆண்பால், பெண்பால், இவ்விரண்டிற்கும் பொதுவான பலர்பால் என்னும் இவற்றின் விகுதிகள் ஆகிய அன், அள்,அர் என்பவை சுட்டெழுத்துகளுடன் புணர்வழி (உயிரெழுத்துப் புணர்ச்சியில் இடையில் தோன்றும்) மெய்யெழுத்து வராமல் அகரம் வகரமாகத் திரியும். அவன், இவள், எவர் என்ற மூன்றும் எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

இருபால் என்ற சொல்லை இரட்டுற மொழிதலாக்கிப் பலர்பாலும் உரைக்கப்பட்டது.இருபால்-ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டு என்பது ஒன்று; இருபால் விகுதி-இருபாலுக்கும் பொதுவான பலர்பால் விகுதி. உதாரணம் நோக்கின் இதன் இன்றியமையாமை விளங்கும் அ + அன் என்பதாகக் காண்க. (116)

**117. ஆஊ ஔனும் எழுத்துஒரு மூன்றும்**
**பின்வரும் உயிர்களை வகரஒற்று உட்புகச்**
**செய்வன; உதாரணம் ஆவாளி எனலும்,**
**ஊவிட்டான் எனலும், ஔவென்றான் எனலுமே.**

ஆ, ஊ, ஔ ஆகிய மூன்று நெடில்களோடு உயிர்எழுத்துகள் சேர்ந்தால் வகர ஒற்று இடையே தோன்றும். ஆவாளி, ஊவிட்டான், ஔவென்றான் என்பன இதற்கு எடுத்துக்காட்டு களாம் என்றவாறு.

ஆ + ஆளி = ஆவாளி; ஊ + இட்டான் = ஊவிட்டான் (துன்பம் தாளாது அனுங்கினான்); ஓ + என்றான் = ஓவென்றான்.

ஏழாமிலக்கணம் 11 ம் நூற்பா இத்துடன் தொடர் புடையது. (117)

**118. ஈஏ எனும்இரு பொறியும் பின்வரும்**
**உயிர்களை யகர வருக்கம் ஆக்கும்;**
**ஈயல்ல எனலும், ஏயிருளா எனலும்**
**தகும்உதா ரணம்எனச் சாற்றல் இயல்பே.**

ஈ,ஏ ஆகிய இரு நெடில்களின்பின் உயிர்எழுத்துகள் அணையுங்கால் அவ்வுயிரெழுத்துகள் யகரவருக்கமாகத் திரியும். ஈயல்ல, ஏயிருளா என்பவை உதாரணமாம் என்றவாறு.

ஈ + அல்ல = ஈயல்ல. ஏ + இருளா = ஏயிருளா (விளி)

ஏழாமிலக்கணம் நூற்பா 12 காண்க. (118)

**119. ஐஔ இரண்டும் அணைதரும் மொழிக்கண்**
**யவமெய் யொலியெனத் திகழ நிற்பன;**
**கையனும் ஐயனும் ஔவையும் உதாரணம்.**

ஐகார ஔகாரங்கள் இரண்டும் தாம் வருகின்ற சொற்களில் முறையே யகர வகர மெய்யெழுத்தின் ஒலியை உடையதாக விளங்கும். கையன், ஐயன், ஔவை என்பன இதற்கான எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

கையன்-கய்யன், ஐயன் - அய்யன், ஔவை - அவ்வை என யகர வகர ஒலிகளோடு உச்சரிக்கப்படுதல் காண்க. இவ்வுச்சரிப் பொற்றுமை பற்றியே இவை போலியாயின.

"அம்முன் இகரம் யகரம் என்று இலவ எய்தின் ஐஒத்து இசைக்கும்; அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔவோரன்ன"[1] என்றார் பவணந்தியாரும். (119)

**120. ஒகரத் துடனஉயிர் மிகைபட ஒன்றா;**
**ஒன்றினும் அகரத்து இயல்பே ஒளிர்தரும்;**
**ஒவ்வெழுத்து எனும்சொல் உதாரணம் ஆமே.**

ஒகர உயிர் (அதிகமாக மொழியிற்றில் வருதலின்மையின்) பிற உயிர்களுடன் பெரும்பாலும் புணராது. அங்ஙனம் ஒரோ வழிப் புணரினும் அகரத்திற்குரிய இலக்கணத்தைப் பெற்று வரும். ஒவ்வெழுத்து என்பது இதற்கு எடுத்துக்காட்டாம் என்றவாறு.

அகரத்தியல்பு முன், "வகரவொற்று இடைக்கொடு அவ்வுயிர் மெய் ஆகும்"[2] என உரைக்கப்பட்டது. அவ்விதி பற்றி இங்கு ஒ + எழுத்து ஒவ்வெழுத்தாயிற்று.

இவ்வியல்பின் முதல் ஏழு சூத்திரங்களான் நிலைமொழி ஈறு உயிராக இருக்கும் சிலவற்றின் புணர்ச்சிவிதிகள் கூறப் பட்டன. (120)

**121. ஒருபொறிப் பின்னே உறும்ஆய்தம் தன்பின்**
**வல்லுயிர் மெய்யே வருமாறு நிற்கும்;**
**எ∴கம், அ∴து, க∴சுஎனல் உதாரணம்.**

ஒரு சொல்லில் இரண்டாவது எழுத்தாக அஃகேனம் நிற் பின் அதனைஅடுத்து வல்லினத்தைச் சேர்ந்த உயிர்மெய் மட்டுமே (மூன்றாமெழுத்தாக) வரப்பெறும். எஃகம், அஃது கஃசு என்பன இதற்கு எடுத்துக்காட்டாம் என்றவாறு.

"ஆய்தம் தானே குறியதன் கீழ்த்தாய் வலியதன் மேல் வந்து இயலும் என்ப"[3] என்றபடி தனிமொழியில் எப்போதும்

1 நன்னூல் 125
2 அறுவகை. 114
3 யா. விருத்தி 2 மேற்கோள்

குறிலை அடுத்தே வரும். ஆய்தத்தை அடுத்துவரும் எழுத்து எப்போதுமே வல்லினம் தான். எனவே இந்நூற்பாவிற்கு ''ஓர் எழுத்தின்பின் ஆய்தம்வரின் அதனையடுத்து வல்லினம் மட்டும் வரும்.இரண்டெழுத்துக்குப் பின் வந்தால் வேறினமும் வரலாம்'' எனப்பொருள் கொள்ளக்கூடாது. இருபஃது – இது தனிமொழி யன்று. (121)

**122. கசத பவமெய் ஐந்தும் தம்பின்**
**தம்உயிர் மெய்யே வருமாறு அவிர்தரும்;**
**பக்கமும், அச்சமும், முத்தியும், கப்பலும்,**
**கொவ்வையும் நிரைநிரை குலவுஉதா ரணமே.**

க,ச,த, ப, வ ஆகிய ஐந்து மெய்யெழுத்துகளும் தம்மை அடுத்துத்தம் வருக்கத்தைச் சேர்ந்த உயிர்மெய்களே வரப் பெறும். பக்கம், அச்சம், முத்தி, கப்பல், கொவ்வை என்பன முறையே இதற்கு எடுத்துக்காட்டு ஆகும் என்றவாறு.

இந்நூற்பா உடனிலை மெய்ம்மயக்கைக் கூறுகிறது. தம் உயிர்மெய்யே என்ற ஏகாரத்தால் பிற வாரா என விலக்கப் பட்டன.

முன்னூல்கள் தம்மோடு தாமே மயங்குவன க,ச,த,ப ஆகிய நான்கே என்றன. இவ்வாசிரியர், ''தன்ஒழி மெய்ம்முன் யவ் வரின் இகரம் துன்னும் என்று துணிநருள்''[1] ஒருவராதலின் ''கசதபவொழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம்மயக்குடனிலை''[2] 'வம்முன்யவ்வே''[3] என்னும் விதிகளை அறிந்தே புறக் கணித்தார். உரையாசிரியர்கள் காட்டும் அவ்யாழ், தெவ்யாது போன்றன இவர் ஏற்காதவை. அவ்வியாழ், தெவ்வுயாது எனவே நிற்றல் வேண்டும் என்பது இவர் கோட்பாடு. ''வகர ஈற்றில் கசதப ஞநவரின் உகரச் சாரியை நடுக்கொடு புணரும்; ...... வல்லுயிர் விபத்தியில் தெவ்வுக் கொலையென மிகலும் ஆகும்; தன் உயிர் வருங்கால் செவ்வேந்து எனல் போன்று இயல்பா நிற்கும் ................ஏனைய வல்லோர் இசைப்பிற்

---

1 நன்னூல் 206
2 ,, 110
3 நன்னூல் 111

கொளலாம்; சிறியார் துணிந்தவன் செப்புதல் பிழையே'' என் பவர் இவர்.[1] (122)

**123. ரழஒற்றுத் தம்உயிர் மெய்யே தழுவா;**
**வந்திசேய் உளன்எனின் வரும்உதா ரணமே.**

ரகர ழகர மெய்கள் இரண்டும் தம் வருக்க உயிர்மெய்களு டன் மயங்கா. மலடிக்கு மகன் இருக்கிறான் என்றால் இதற்கும் எடுத்துக் காட்டு உளதாகும் என்றவாறு.

இல்லாதவைகளைக் காட்டுதல் இயலாது என்பதை வேறு வாய்பாட்டாற் கூறினார்.

இந்நூற்பாவில் இடம் பெற்ற ரகரம் பிறிதோரிடத்தில் இவரால் உலக வழக்கு நோக்கி, ''அவற்றிடை ரகரம் சிறுபால் விர்ரென எறிந்தான், சர்ரெனச் சென்றது என வருமே''[2] எனத் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளது. (123)

**124. யரழஒற் றுக்கள் அவற்றின் பின்னர்**
**ஒற்றும் சிற்சில புணர நிற்பன;**
**மெய்ம்மறை, நிவிர்த்தி, புகழ்ச்சிமூன்று உதாரணம்.**

ய, ர, ழ ஆகிய மூன்று மெய்களும் தம்மை அடுத்தும் சில ஒற்றுகள் மயங்கி வருமாறு விளங்கும். மெய்ம்முறை, நிவிர்த்தி, புகழ்ச்சி ஆகிய மூன்று சொற்கள் இதற்கு எடுத்துக் காட்டாம் என்றவாறு.

சிற்சில ஒற்று என்புழி ஒரே சொல்லில் இரு மெய்கள் ய, ர, ழவின்பின் வரும் எனலாகாது. பதினெட்டு மெய்களுள் சிலவே புணர நிற்பன எனக் கோடல் வேண்டும். அவை க, ச, த, ப, ங, ஞ, ந, ம என்னும் எட்டு மெய்களே என்பதைத் தொல்காப்பியர், ''யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக் கசதப ஙஞநம ஈரொற்று ஆகும்.''[3] எனத் தெளிவாக்கியுள்ளார். (124)

---

1 ஏழாம். இலக். 98
2 ,, ,, 68
3 தொல். எழுத்து. 48

**125. டறஒற் றின்பின்அவ் வினத்தொடு கசப**
**உயிர்மெய் புணரும்; கோட்டையும், கட்கமும்,**
**வெட்சியும், திட்பமும், கற்றா, நற்குறி,**
**புற்சுனை, அற்பம் என்பவும் இருவிதத்து**
**உதாரணம் ஆம்என்று உரைப்பார் புலவோர்.**

ட, ற ஆகிய இரண்டு மெய்களைஅடுத்து அவ்வினத்தோடு க, ச, ப ஆகிய மூன்று வருக்க உயர்மெய்களும் மயங்கி வரும். கோட்டை, கற்றா என்பனவும் கட்கம், வெட்சி, திட்பம், நற்குறி, புற்சுனை, அற்பம் ஆகியனவும் எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

சூத்திர விதிமுறைக்கேற்ப உதாரணச் சொற்கள் முறை மாற்றி உரையில் காட்டப்பட்டன. கட்கம், அற்பம் முதலிய வடசொற்கள் பெருமளவில் தமிழ் இலக்கிய வழக்கில் இடம் பெற்றுவிட்டதால் இவ்வாசிரியர் அவைகளையும் ஈண்டுக் காட்டினார். மட்கலம், பற்பல போன்ற தமிழ் மொழிகளும் காண்க. (125)

**126. ஙகரவொற் றின்பின்அவ் வினத்தொடு ககர**
**உயிர்மெய் தோன்றும்; இங்ஙனம் எனலும்**
**கங்கைஎன்று உரைப்பதும் கவின்உதா ரணமே.**

ஙகர மெய்யைஅடுத்து அவ்வின உயிர்மெய்யும், ககர வருக்க உயிர்மெய்யும் மயங்கப்பெறும். இங்ஙனம், கங்கை என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு. (126)

**127. ஞகரமெய்ப் பின்அவ் வினத்தொடு சகர**
**உயிர்மெய் ஒன்றும்; உதாரணம் உரைக்கில்**
**எஞ்ஞான்று எனலும் தஞ்சம்என் றிடலுமே.**

ஞகர ஒற்றையடுத்து ஞ, ச ஆகிய இரு வருக்க உயிர்மெய்கள் மயங்கி வரும். எஞ்ஞான்று, தஞ்சம் என்பன உதாரணமாம் என்றவாறு.

"ஞநமுன் தம்மினம் யகரமொடு ஆகும்"[1] என்ற விதியில் இருந்து 122 ஆம் நூற்பா உரையுள் கூறப்பட்ட காரணம் பற்றி யகரத்தை நீக்கினார். "உரிஞ்சுஎனும் மொழியை உரிஞ் எனக் குறைத்து .......... உழல்வது பிழை; அவை சொல் நயம் உணரார் தோய்தற் பாலவே"[2] என்னும் இவர் கருத்து ஈண்டு நோக்கற்பாலது. (127)

**128. ணகர உடற்பின் அதனொடு கசடப**
**ஞமவத் தோன்றும் உயிர்மெய் யாயே;**
**பண்ணை எண்கு புண்சேர் பிண்டம்**
**பண்புவண் ஞானம் பண்மறை தண்வான்**
**என்னும் சொற்கள் இயல்உதா ரணமே.**

ணகர மெய்யைஅடுத்து ண, க, ச, ட, ப, ஞ, ம, வ ஆகிய எட்டு வருக்க உயிர்மெய்கள் மயங்கி வரும். பண்ணை, எண்கு, புண்சேர், பண்டம், பண்பு, வண்ஞானம், பண்மறை, தண்வான் என்பன இதற்கேற்ற எடுத்துக் காட்டுகளாம் என்ற வாறு.

தொல்காப்பியரும்,[3] பவணந்தியாரும் இவ்வெட்டு உயிர் மெய்களுடன் யகரத்தையும் சேர்த்துரைப்பர். "ணனமுன் இனம்கச ஞபமய வவ்வரும்"[4] என்பது நன்னூல். இவ்வாசிரி யர் யகரத்தை விட்டு விட்டார்.

இவர் "யகரம் ஒழிந்த ஈற்று ஒற்று எதனொடும் யகர உயிர் மெய்வரில் இகரம் இடைதோன்றும்"[5] எனும் கொள்கையர் ஆதலின் இங்கனம் செய்தார். எனினும் இகரஞ் சார்ந்த ஓசை இவருக்குப் பிடிக்கவில்லை என்பது "ஐந்துயிர்க் குறிலினும் யகர உயிர்மெய்யின் முந்துவ புணரில் வகர ஒற்றுடன் அதன் இகரமும் நடுவரும்: எவ்வாறென்னில் அவ்வியமன்னே, இவ் வியானையே, எவ்வியுகமே, உவ்வியூகமே, ஒவ்வியோகாதனமே எனச் சிறு பால வண்டமிழ்ச் சுவைதேர் மாந்தர்கைப்பனவே"[6] என்றநூற்பாவால் தெரிகிறது. (128)

---

1 நன்னூல் 112
2 ஏழா. இலக். 67
3 தொல். எழுத்து. 26
4 நன்னூல் 114
5 ஏழா. இலக். 70
6 ஏழா. இலக். 9

**129. நகர ஒற்றுடன் அவ்வுயிர் மெய்யும்**
**தகர உயிர்மெய்யும் சார்வதே தகுதி;**
**எந்நா, கந்தன் எனும்இரண்டு உதாரணம்.**

நகர மெய்யைத் தொடர்ந்து அதே உயிர்மெய்யும், தகர வருக்க உயிர்மெய்யும் மயங்கி வருவதே சிறப்பாகும். எந்நா, கந்தன் ஆகிய இரு சொற்களும் இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

''ஞநமுன் தம்மினம் யகரமொ டாகும்''[1] எனினும் பொருந் யாது போன்ற புணர்ச்சிகளை இவர் ஏற்காததால்- யகரத்தை அது சிறந்ததன்று என்பார்-ஏகாரம் கொடுத்துச் சார்வதே தகுதி என்றார் இது பற்றி முன்பே கூறப்பட்டது. இதனை இறந்தது விலக்கலாகக் கொள்க. (129)

**130. மகர ஒற்றுடன் அதன்உயிர் மெய்யும்,**
**பகர வகர உயிர்மெய்யும் புணரும்;**
**செம்மையும் கும்பனும் சேதம்வராது எனலும்**
**உதாரணம் ஆம்என்று உணர்வது முறையே.**

மகர மெய்யைஅடுத்து ம, ப, வ ஆகிய மூவருக்கத்தைச் சேர்ந்த உயிர்மெய் எழுத்துகள் மயங்கப் பெறும். செம்மை, கும்பன், சேதம் வராது என்பன உதாரணங்களாம் என்றவாறு.

இங்கும், ''மம்முன் பயவ மயங்கும் என்ப''[2] எனும் விதியில் இருந்து யகரம் விலக்கப்பட்டது. கலம்+யாது=கலம்யாது எனலன்றி இவர் கலமியாது என்றே வேண்டுவர். இவ்வாசிரியர் ''யகரம் ஒழிந்த ஈற்றுஒற்று எதனொடும் யகரவுயிர் மெய்வரில் இகரம் இடை தோன்றும்''[3] எனக் கொள்பவர். (130)

**131. ணகர உடலுடன் அவ்வுயிர் மெய்யும்**
**கசபற ஞமவவ் வருக்கத் துயிர்மெயும்**

---

1 நன்னூல் 112
2 ,, 115
3 ஏழா. இலக். 70

**வருவன; உதாரணம் புன்னை, வன்கண்மை,
நின்சூல், இன்பம், குன்று; முன்ஞானம்,
பொன்மணி, பின்வரல் எனும்இவை யாமே.**

னகர ஒற்றைத் தொடர்ந்து ன,க,ச,ப,ற,ஞ,ம,வ ஆகிய எட்டு வருக்கத்தைச் சேர்ந்த உயிர்மெய்கள் வந்து மயங்கும். இதற்கு எடுத்துக்காட்டு புன்னை, வன்கண்மை, நின்சூல், இன்பம், குன்று, முன்ஞானம், பொன்மணி, பின்வரல் என்னும் சொற்களாம் என்றவாறு.

''னனமுன் இனம் கச ஞபமய வவ்வரும்''[1] என்ற விதியிருந்தும் முன் நூற்பாவில் கூறப்பட்ட காரணத்தாலேயே யகரம் நீக்கப்பட்டது. (131)

**132. யகர ஒற்றொடு அவ்வுயிர் மெய்யும்
கசதப நமவ எனும்ஏழ் வருக்கத்து
உயிர்மெயும் இசைவுறும்; மெய்யன், பொய்கை,
செய்சால், பெய்தான், எய்போர், பொய்நா,
நொய்மா, நெய்வோன் எனும்சொற்கள் உதாரணம்.**

யகர மெய்யின்முன் ய,க,ச,த,ப,ந,ம,வ ஆகிய எட்டு வருக்க உயிர்மெய்களும் வந்து மயங்கும். மெய்யன், பொய்கை, செய்சால், பெய்தாள், எய்போர், பொய்நா, நொய்மா, நெய்வோன் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

பவணந்தியார், ''யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்''[2] என்றார். அப்பத்தினுள் இவர் ஞ,ங ஆகிய இரண்டினையும் புறக்கணித்தார். ஙகர மெய்யே வேய்ங்குழல் என்பது போன்று யகரத்துடன் மயங்குதலின் உயிர்மெய் கூறும் இந்நூற்பாவுள் அது விலக்கப்பட்டது. யகரமெய்முன் ஞகர உயிர்மெய் வருதலை இவர் இந்நூல் 150 ஆவது நூற்பாவில் உரைப்பதால் அதனையும் இங்கு மயக்கவிதியாக நாம் உரையிற் கொள்ள வேண்டும். (132)

---

1 நன்னூல் 114 2 நன்னூல் 116

133. ரகர மெய்யுடன் கசதப ஞநமவக்கு
உரிய உயிர்மெய் ஒன்றித் திகழும்;
வளர்கை, உயர்சீர், குளிர்தாள், அவர்போல்,
ஊர்ஞாளி, ஓர்நாரி, நேர்மாரன், நீர்வாரி
என்பவை உதாரணம் இனிதுஉணர் வார்க்கே.

ரகர ஒற்றுடன் க,ச,த,ப,ஞ,ந,ம,வ ஆகிய எட்டு வருக்க உயிர்மெய்யும் மயங்கும். வளர்கை, உயர்சீர், குளிர்தாள், அவர்போல், ஊர்ஞாளி, ஓர்நாரி, நேர்மாரன், நீர்வாரி என்னும் சொற்கள் எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

நன்னூலார் மொழிமுதல் பத்துங் கொண்டார்.[1] இவர் ங,ய என்னும் இரண்டையும் விலக்கினார். ஙகரத்தை விலக்கிய காரணம் முன் நூற்பாவிலும், யகரம் நீக்கப்பட்டது நூற்று முப்பதாம் நூற்பாவிலும் கூறப்பட்டன. "ரழ ஒற்றுத் தம் உயிர்மெய்யே தழுவா[2]" என ரகரம் முன்னே விலக்கப்படினும் இவரால் பிறிதோரிடத்தில் மன்பதை வழக்கு நோக்கி "அவற்றிடை ரகரம் சிறுபால் விர்ரென எறிந்தான், சர்ரெனச் சென்றது எனவருமே"[3] எனத் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளது. (133)

134. லகரமெய் யுடன்அதுட் புகும்உயிர் மெய்யும்
கசபவக்கு உட்புகும் உயிர்மெயும் கவின்தரும்;
சொல்லல், பல்கனி, வெல்சேந்தன், நவில்பா,
செல்வம் என்னும் ஐம்மொழி உதாரணம்.

லகர ஒற்றுடன் ல,க,ச,ப,வ என்னும் ஐந்து வருக்க உயிர் மெய்கள் மயங்கும். சொல்லல், பல்கனி, வெல்சேந்தன், நவில்பா, செல்வம் என்பன இதற்கு உதாரணங்களாம் என்ற வாறு.

"லளமுன் கசப வயவொன் றும்மே"[4] என்ற விதியில் முற் கூறப்பட்ட காரணம்பற்றி யகரம் விலக்கப்பட்டது. (134)

---

1 நன்னூல் 116
2 அறுவகை. 123
3 ஏழா. இலக், 68
4 நன்னூல் 117

**135. மகர ஒற்றும் ரகரமெய் போன்று**
**கசதப ஞநமவக்கு ஆன உயிர்மெய்**
**முன்னர் அவிர்தரும்; மொழிஉதா ரணங்கள்**
**ஆழ்கடல், வாழ்சுரர், ஏழ்திரை, வீழ்பனி,**
**அகழ்ஞாலம், திகழ்நாகம், பிறழ்மணி, இகழ்வோன்**
**என்பவை தாம்என்று இசைத்திடல் இயல்பே.**

ழகரஒற்றும் ரகரமெய்யைப் போன்று தன்முன் தான் மயங்காது. அது க,ச,த,ப,ஞ,ந,ம,வ என்னும் எட்டு உயிர்மெய்களுடன் மயங்கும். ஆழ்கடல், வாழ்சுரர், ஏழ்திரை, வீழ்பனி, அகழ்ஞாலம், திகழ்நாகம், பிறழ்மணி, இகழ்வோன் என்பன எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

''யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்''[1] என்றதில் முற்கூறிய காரணம் பற்றி ங,ய ஆகிய இரண்டும் விலக்கப்பட்டன. ''ஐம்மூன்றதாம் உடல் வன்மைபின் வந்திடில் ஆறொடைந்தாம் மெய்ம் மாண்பதாம்; நவ்வரின் முன் அழிந்து பின் மிக்க ணவ்வாம்''[2] என்பது வீரசோழிய விதி.இதன் படி ஏழ்+திரை=ஏடிரை ஆகும். ஆனால் இவர், ''ழகர ஈற்றொடு வல்லுயிர் புணர்கால் விபத்தியின் மிக்கே விளங்கும்;......... ஒற்றுமையின் மிகாமை பலவாம்.........ஆயினும் சிலகால் தமிழ்க்கடல் எனல் போல் மிகுதலும் பாழ்ங்குடி எனல்போல் மெல்லொற்று இடைவருமாறும் இயைந்த தொல் வழக்கே''[3] எனவிதி வகுத்துஇயல்பாகவே கொள்கிறார். அதே போல ழகர முன் நகரம் வந்து ணவாகத் திரியும் என்ற சிறப்பு விதியும் இவரால் கூறப்படவில்லை. எனவேதான் திகழ்நாகம் எடுத்துக் காட்டப்பட்டது. (135)

**136. ளகர மெய்யும் லகரமெய் கடுத்து**
**தானும் கசபவ மெய்களும் பருகும்**
**உயிர்மெய்கள் முன்னர் ஒளிரும்; உதாரணம்**
**கொள்ளையும், வெள்கலும், அவள்சாடை எனலும்,**
**இவள்பார்வை என்கையும், கள்வன்என் றலுமே.**

---

1 நன்னூல் 116
2 வீரசோ. 18
3 ஏழாம். இலக். 99

எகர மெய்யுடன் - லகரவொற்றே போன்று - தன் இன உயிர்மெய்யும், க,ச,ப,வ, ஆகிய நால்வருக்க உயிர்மெய் களும் மயங்கும். கொள்ளை, வெள்கல், அவள்சாடை இவள்பார்வை, கள்வன் என்பன உதாரணங்கள் ஆம் என்ற வாறு.

இவர் கொள்கைப்படி இங்கும் யகரம் கைவிடப்பட்டது. (136)

**137. பின்னர்ஓர் உயிர்மெய் வருமாறு அவிர்வன**
**கசட தபற ஙஞநவ மெய்கள்;**
**கொக்கும், கச்சியும், வட்டும், பத்தியும்,**
**அப்பும், கொற்றியும், கொங்கும், பஞ்சும்,**
**நந்தும், செவ்வியும் நவில்உதா ரணமே.**

க,ச,ட,த,ப,ற,ங,ஞ,ந,வ ஆகிய பத்து மெய்களும் தம்மை யடுத்து வேறொரு உயிர்மெய் எழுத்து வருமாறு விளங்கும். கொக்கு, கச்சி, வட்டு, பத்தி, அப்பு, கொற்றி, கொங்கு, பஞ்சு நந்து, செவ்வி என்பன இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆம் என்ற வாறு.

அறுவகை இலக்கணம் 122,125,126,127, 129 ஆகிய நூற் பாக்களில் இச்சூத்திரப்பொருள் முன்பே கூறப்பட்டுவிட்டது. இதே நூல் 128,130,131,132,133,134,135,136 ஆகிய நூற்பாக் களில் தம்பின் வேறு உயிர்மெய் பெற்று வருகின்ற ண,ம,ன ய,ர,ல,ழ,ள என்ற மெய்களைக் காட்டியவர் தொகுத்துக் கூறும் இந்த சூத்திரத்தில் அந்த எட்டு மெய்களையும் விட்டு விட்டார். இதற்கான காரணமும், இச்சூத்திரத்தால் பெறப் படுவதோர் பயனும் விளங்கவில்லை. (137)

**138. ணமன யரல ழளமெய் எட்டும்**
**மொழிஈற்று அவிர்தரும்; முறைபயில் உதாரணம்**
**கண்கனம் பொன்செய் அவர்நிழல் புகழ்மகள்**
**அன்ன மாற்றம் அளவில உளவே.**

ண்,ம்,ன்,ய்,ர்,ல்,ழ்,ள் ஆகிய எட்டு மெய்யெழுத்துகளும் மொழிக்கு ஈறாகும். முறையே கண், கனம், பொன், செய், அவர், நிழல், புகழ் மகள் என்னும் சொற்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

"ஆவி, ஞணநம னயரல வழளமெய், சாயும் உகரம் நாலாறும் ஈறே"[1] என்ற கொள்கையிலிருந்து இவர் வேறுபடு கிறார். நன்னூல் காட்டும் 11 மெய்களில் இவர் இந்நூற்பா வில் ஞ,ந,வ ஆகிய மூன்றையும் நீக்கி எட்டு மெய்களைத் தொகையொடு முற்றும்மை கொடுத்துக் கூறுகிறார். ஏழாமிலக் கணத்தின் "உரிஞ்சு எனும் மொழியை உரிஞ்எனக் குறைத்தும் வென்எனும் சொல்லொடு வெரின்எனும் அவற்றை வெந்என வெரிந்எனத் திரித்தும், பொருநர் என்னும் மாற்றத்து இயைந்த நர்விகுதியை அர் எனப்பிரித்துப் பொருந் என்று ஒரு பதம் உண்டு என உரைத்தும் உழல்வது பிழை; அவை சொல் நயம் உணரார் தோய்தற் பாலவே"[2] என்னும் நூற்பாவால் இவர் ஞகர, நகரங்களைத் தள்ளிய காரணம் தெளிவாகிறது. ஆனால் வகரம் இங்கு ஏன் நீக்கப்பட்டது? இவரே அங்கு, "மெய்பதி னெட்டிடை ணமனயரல வழளஎன் ஒன்பதும் சொல்லீற்று வருவன"[3] என எண் குறிப்பிட்டு நூற்பாச் செய்து தெவ்+ எளிஞன்=தெவ்வெளிஞன் என உதாரணமும் காட்டுகிறார்.

இவ்வாறு ஒரே ஆசிரியரால் இயற்றப்பெற்ற இவ்விரு நூல்களும் இக் கொள்கையில் முரண்படுகின்றன. இவ்விரண்டி னுள் வகர ஈற்றை ஏற்றுக்கொள்வதே அமைவுடைத்தாம்.

(138)

**138.** **மாற்றத்து ஈற்றில் வரும்ஒற்றுள் ஆறுடன்**
**எவ்வுயிர் வரினும்அவ் வவ்வுயிர் மெய்ஆம்;**
**பெண்ணரசி, தம்மறிவு, நின்னிகல், பொய்யுறவு,**
**கல்லெறிதல், புள்ளொலி என்பவை உதாரணம்.**

---

1 நன்னூல் 107
2 ஏழா. இலக். 67
8 " 66

சொல்லின் இறுதியில் வரும் மெய்களுள் ண,ம,ன,ய,ல,ள ஆகிய ஆறின் முன்னும் உயிரெழுத்துமுதற்சொல் வந்து புணர்ந்தால் வரும் உயிர் நிலைமெய்யைச் சேர்ந்த உயிர்மெய் ஆகும். பெண்ணரசி, தம்மறிவு, நின்னிகல், பொய்யுறவு, கல்லெறிதல், புள்ளொலி என்பன எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

''தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்''[1] என்று நன்னூல் மெய்கள் இரட்டும் இடத்தைத் தெளிவாகப் பாகுபாடு செய்து காட்டுகிறது. இது இவரால் ஏழாமிலக்கணத்தில் ''குற்றெழுத்து ஒன்றை முற்கொடு திகழ்ப அல்லா தனவாய் இணைக்குறில் நெட்டெழுத்து ஆகியவற்றொடு திகழ்ஈற்று ஒற்றினம் இரட்டா வண்ணம் இயல்பாப் புணர்பகதிரழ கென்னக்காயே மென்னக் கோவி லினிதெனக் கூறுவ போன்றே''[2] எனக் கூறப்பட்டுள்ளது.

முன் நூற்பாவில் ஒன்பது மெய்களுள் வகரத்தை விடுத்து எட்டே கொண்டமையின் தன்னொடு தான் மயங்கா ரகர ழகரங்களை விடுத்து ஆறு என்றார். எனினும் வகர ஈற்றையும் இவர் ஏற்றுக் கொண்டமை முன் நிறுவப் பட்டதாதலின் தெவ்வரசன் போல வகரமும் இரட்டும் எனக் கொள்க. (139)

**140. மொழிஈற்று அவிர்தரும் ஒற்றுஇனத்து இரண்டு**
**பின்வரும் உயிரைஉட் கொண்டுஉயிர் மெய்யாம்;**
**அவரிடம் என்பதும், தமிழுணர்வு என்பதும்**
**அவற்றின் உதாரணம் ஆம்எனத் தகுமே.**

மொழியின் இறுதிநிலையாகநிற்கும் மெய்களுள் (ர்,ழ் என்ற) இரண்டும் உயிர்முதல்மொழியோடு புணருங்கால் இயல்புப்புணர்ச்சியாம். அவரிடம், தமிழுணர்வு என்பன இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

---

1 நன்னூல் 205     2 ஏழா. இலக். 69

இதுவே உறுதியான விதியெனினும் பேச்சு வழக்கு நோக்கி ரகரமெய் இரட்டுதலை, "ரகரம்சிறுபால் விர்ரென எறிந்தான் சர்ரெனச் சென்றது என வருமே"[1] எனத்தழுவிக் கொள்கிறார். (140)

**141. தகர உயிர்மெய் ணனஒற்று உடன்வரின்**
**தான்திரிதல் ஒன்று, அவை தம்மையுந் திரித்தல்ஒன்று**
**ஆகும் இருவகைத்து; உதாரணம் அறைகெனின்**
**மண்டலம், என்றாய் என்பவும் கட்டன்மை**
**பொற்றாளம் என்பவும் போல்வன உளவே.**

ண்,ன் ஆகிய மெய்களின்முன் தகர உயிர்மெய் வந்து புணர்ந்தால் அவ்வுயிர்மெய் திரிதல், நின்ற மெய்யையும் திரித்தல் ஆகிய இரண்டுவகை விகாரங்களுள் ஒன்று நிகழும். மண்டலம், என்றாய், கட்டன்மை, பொற்றாளம் என்பவை இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

"ணனவல் லினம்வரட் டறவும், பிறவரின் இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு"[2] என்பது நன்னூல். மொழிமுதலாகும் க,ச,த,பக்களுள் தகர முதல்மொழிக்கு மட்டும் இங்கு விதி கூறப்பட்டதால் எஞ்சிய க,ச, பக்கள் இயல்பாம் எனப் பெறப்பட்டது. இக்கருத்து, "ணகரம் ஈற்றுஉறு மொழிப்பின் கசப வரின்இரு வழியினும் இயல்பாம்...... சேட்கற் பகம் எனக் கவட்சுற்று எனல்போல் விபத்தியில் சிறுபால்திரித லும் உளவே"[3] என்பதால் அறியப்படுகிறது. "னலமுன் றனவும் ணனமுன் டணவும் ஆகும் தநக்கள் ஆயுங் காலே"[4] என்றதூஉம் இது. மண்+தலம்=மண்டலம்; என்+தாய்=என்றாய்; கன்+தன்மை=கட்டன்மை; பொன்+தாளம்=பொற்றாளம். (141)

**142. உயிர்மெய்த் தகரம் ளளஒற்று உடன்வரின்**
**தானும் கெட்டுஅவை தம்மையும் கெடுத்து**
**வேறுஉயிர்மெய் தனித்தும்மெய் முற்கொடும் வரச்செயும்;**

---

1 ஏழா. இலக். 68
2 நன்னூல் 209
3 ஏழா. இலக். 72
3 நன்னூல் 237

**இகறான் என்பதும், அவடாய் என்பதும்,**
**புற்றோல், எட்டுணி என்பவும் உதாரணம்.**

நிலைமொழியீற்று லகர ளகர மெய் முன் வருமொழி முதல் ஆகிய தகரம் புணருங்கால் அவ்வுயிர்மெய்யும் கெடுவதுடன், ஈற்றுமெய்யையும் கெடுத்துத் தகரமல்லாத வேறு உயிர்மெய்கள் (ற,ட) தனியாகவும் ஒற்றடுத்தும் வரும். இகறான், அவடாய், புற்றோல், எட்டுணி என்பன இதற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

இகல்+தான்=இகறான்; அவள்+தாய்=அவடாய்;

இவற்றுள் ல,ள கெட்டுத் தகரம் றகர டகரமாகத் திரிந்து தனித்து வந்தன.

புல்+தோல்=புற்றோல்; எள்+தூணி=எட்டுணி;

இவற்றுள் ல,ள கெட்டுத் தகரம் றகர டகரமாகத் திரிந்து ஒற்றடுத்து வந்தன.

லகரவொற்றுடன் தகரம் வந்து புணருங்கால் லகரமெய் ஆய்தமாகவும் வருமொழி முதல் றகரமாகவும் சிறுபான்மை திரிதல் இவரால் புறனடையாக, ''பல் எனும் மொழியொடு தலையெனல் புணர்கால் பஃறலை ஆதலும்...... அன்னவை பிறவும் பொதிய மால்வரைப் புகழ்பொரு புலமைச் சீரியர் தம்பால் தெரிவது முறையே''[1] எனத் தழுவிக்கொள்ளப் பட்டுள்ளது.

''ளளவேற் றுமையில் றடவும் அல்வழி அவற்றொடு உறழ்வும் வலிவரின் ஆம்.....''[2] என்ற விதியில், முற்கூறிய காரணம் பற்றி, க,ச,ப நீக்கப்பட்டன. (142)

---

1 அறுவகை. 165
2 நன்னூல் 227

143 **மகர ஒற்றொடு தகரஉயிர் மெய்வந்து**
**ஒன்ற நகர ஒற்றா மிளிர்தரும்;**
**நந்தாய் எனும்சொல் நவில்உதா ரணமே.**

நிலைமொழி ஈற்று மகர மெய்யுடன் தகர வருக்க உயிர் மெய் வருமொழி முதலாக வந்து புணர மகரம் நகரமாகத் திரியும். இதற்கு நந்தாய் என்பது உதாரணம் ஆம் என்றவாறு.

''மவ்வீறு ஒற்றுஒழிந்து உயிர்ஈறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்''[1] என்றதனுள் இனமாய்த்திரிதல் இங்குக் காட்டப்பட்டது. நம்+தாய் என்ற புணர்ச்சியில் மகரம் தகரத்திற்கு இனமான நகரமாகத் திரிந்து நந்தாய் என நின்றமை காண்க. உறழ்ச்சி முடிபையும் இவ்வாசிரியர் ஏழா மிலக்கணத்துள், ''மகரங் கசத வருங்கால் நஞுந ஆகும்;...... பிறவும் உள்ளன......... நுகத்தடி எனவே[2]'' எனக் குறிப்பிட்டுள்ளார். (143)

144. **ணமனலள ஒற்றொடு ககரஉயிர் மெய்வரின்**
**திரிதரும் வண்ணம் தெரிக்கும்; உதாரணம்**
**மட்குடம், அங்கை, பொற்கோல், விற்கணை,**
**முட்கூர் என்ன மொழிவது முறையே.**

ண்,ம்,ன்,ல்,ள் ஆகிய நிலைமொழியீற்று மெய்முன் வருமொழி முதலாகிக் ககரவருக்க உயிர்மெய் புணர்ந்தால் அம் மெய்கள் திரியும். மட்குடம், அங்கை, பொற்கோல், விற்கணை, முட்கூர் என்பன இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

''ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின் இயல்பும் ஆகும், வேற்றுமைக்கு''[3] ''லளவேற் றுமையில் றடவும்''[4] ''மவ்வீறு..... வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்''[5] ஆகிய விதிகள் இந்நூற்பாவில் ககரத்திற்குக் கூறப்பட்டன. (144)

1 நன்னூல் 219
2 ஏழா. இலக். 74
3 நன்னூல் 209
4 நன்னூல் 227
5 ,, 219

**145. ணமனலள ஒற்றொடு உயிர்மெய்ச் சகர
பகரம் புணர்கால் மகரஒற்று ஒன்றே
ஞகரஒற்று ஆயும் திரியாதும் நிற்கும்;
மற்றவை ககரத் தால்என வயங்கும்;
நஞ்சீர், நும்பா எனும்இரு மொழியும்
நிரைபடும் உதாரணம் ஆகும்; அவற்றிற்கு
மட்சால் விட்புலம் எனச்சில விரிக்கில்
பெருத்துக் கெடும்எனப் பேசிலம் அன்றே.**

ண்,ம்,ன்,ல்,ள் ஆகிய நிலைமொழி ஈற்று ஒற்றுடன் சகர, பகர வருக்க உயிர்மெய்கள் புணருங்கால் மகரமெய் மட்டுமே முறையே ஞகர மெய்யாகத் திரிந்தும், திரியாமல் இயல்பாகவும் நிற்கும். நஞ்சீர், நும்பா என்ற சொற்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாம். மற்ற நான்கு மெய்களும் ககரத்திற்குத் திரிவதைப் போன்று திரியும். மட்சால், விட்புலம் என்பன போன்றவை இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

முன்னர்க் கூறப்பட்ட நன்னூல் விதிகளே இங்கும் சகர, பகரத்திற்குப் பிரித்துக் கூறப்பட்டன. உரையில் உதாரணம் விதிபற்றி இடம் மாற்றியமைக்கப்பட்டது. (145)

**146. ணகர ஒற்று நகரஉயிர் மெய்வரின்
தனதுஉயிர் மெய்யாய்ச் சாரச் செய்யும்;
பெண்ணாகம் எனும்சொல் பிறங்குஉதா ரணமே.**

நிலைமொழிஈற்றில்உள்ள னகரமெய் வருமொழி முதலாகிய நகர வருக்க உயிர் மெய்யுடன் புணர்ந்தால் அவ்வுயிர்மெய்யையும் னகரமாக்கும். பெண்ணாகம் என்பது இதற்கு எடுத்துக்காட்டாம் என்றவாறு.

"குறிலணை வில்லா ணனக்கள் வந்த நகரம் திரிந்துழி நண்ணும் கேடே"[1] எனப் பவணந்தியார் தனிக்குறில்அடுத்த ணகரம், தொடர்மொழியீற்று நகரம் எனப் பாகுபாடு செய்து

1 நன்னூல் 210

கொண்டார். அவர் விதிப்படி நெடில் அல்லது பல எழுத்துகளை அடுத்து வந்த ணகரமெய் நகரப்புணர்ச்சியில் வருமொழி முதலை ணகரமாக்கித் தான் கெட்டுவிடுகிறது, பாண்+நன்று பாணன்று; அமண்+நிலை= அமணிலை என வரும். தனிக் குறிலை அடுத்து வரும் ணகரம் தான் கெடாது நின்று வரும் நகரத்தையும் ணகரமாக்கும். இவ்விதிதான் இந்நூற்பாவில் கூறப்பட்டது. (146)

**147.** **மகர ஒற்றுத் தன்னொடு ஞநவின்**
**உயிர்மெய் தோன்றின் தான்இறந்து ஒழியும்;**
**ஒவ்வோர் இடத்தே அவ்வவ் வொற்றாம்.**
**வருஞாயிறு எனலும், பொருநீர்மை எனலும்**
**செஞ்ஞாயில் வெந்நரி என்பவும் உதாரணம்.**

நிலைமொழி ஈற்று மகரமெய் வருமொழி ஞ, நக்களுடன் புணரும்போது கெட்டுவிடும். வருஞாயிறு,பொருநீர்மை என்பன இதற்கு உதாரணங்கள் ஆகும். சிற்சில இடங்களில் அம் மகரமெய் வருமொழி ஞ, நக்களாகத் திரியும். செஞ்ஞாயில், வெந்நரி என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

நன்னூல், ''நும், தம், எம், நம் ஈறாம் மவ்வரு ஞநவே''[1] என இவ்விதியை மேற்கண்ட நான்கு சொற்களுக்கே உரிய தாக்குகிறது. வீரசோழியம்தான் ''ஞநமக்கள் பின்வரின் சாற்றும் ம போம்''[2] என இதனைப் பொதுவாக்குகிறது. இவர் வீரசோழிய நெறியைக் கைக்கொண்டு இவ்வாறு கூறினார். எனினும் மரம் + ஞாயில் = மரஞாயில், வனம் + நரி=வனநரி எனவே வருதலால் ஒவ்வோர் இடம் என்றதைத் தனிக்குறிற்பின் வருமிடத்தை எனக் கொள்ளலாம்.

(147)

**148.** **னகர மெய்யும் ணகரஒற்று அதுபோல்**
**வரும்நகர உயிர்மெயைத் தன்னது ஆக்கும்;**
**நின்னாய் எனும்சொல் நிகழ்த்துஉதா ரணமே.**

---

1 நன்னூல். 221
2 வீரசோழியம் 19

நிலைமொழி ஈற்று னகர வொற்றும் வருமொழி முதல் நகரத்தை ணகர வொற்றைப் போன்றே தன் இனமாகத் திரிக்கும். நின்னாய் என்பது இதற்கு உதாரணம் ஆகும் என்றவாறு.

இவ்வெடுத்துக்காட்டால் இந்நூற்பா தனிக்குறில் பின் வரும் னகரத்திற்கே உரியது எனத் தெளிவாகிறது. மான் + நோக்கு = மானோக்கு; சேரன் + நாடு = சேரநாடு என வருவன இந்நூற்பா விதியோடு முரணுதல் காண்க. (148)

**149.** **மகரஒற்று அதன்பின் கசதப வருங்கால்**
**அவ்வவ் வொற்றாய் அவிர்தலும் வழங்கும்;**
**சிங்கக் காளி, தங்கச் சேலை,**
**மனத்திடம், களப்போர் எனும்நான்கு உதாரணம்.**

நிலைமொழி ஈற்று மகரமெய் வருமொழி முதலாக வல்லினம் வந்தால் அவ்வின மெய்யாகத் திரிதலும் உண்டு. சிங்கக்காளி, தங்கச்சேலை, மனத்திடம், களப்போர் என்பவை நான்கும் இதற்கு உதாரணங்களாகும் என்றவாறு.

"மவ்வீறு ஒற்றுஒழிந்து உயிர்ஈறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்"[1] என்பதில் உள்ள வல்லினம் வரின் மிகுதல் இங்குக் கூறப்பட்டது. (149)

**150.** **யகரமெய் அதன்பின் ஞகரவுயிர் மெய்வரின்**
**அவ்வுடல் ஆதலும், இயைந்தவாறு அவிர்தலும்**
**உடைத்து; மெஞ்ஞானமென்று உரைக்கும் சொல்லும்**
**வாய்ஞானம் எனலும் வழங்கு உதா ரணமே.**

நிலைமொழி ஈற்று யகரவொற்றின்பின் ஞகரம் வந்தால் அம்மெய் ஞகரமாகத் திரிந்து புணர்தல், இயல்பாய்ப் புணர்தல் ஆகிய இரண்டும் உண்டு. மெஞ்ஞானம், வாய் ஞானம் என்பன இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

---

1 நன்னூல் 219

"குறில் பின் உறும் யவ்வொடு ஞநமவரில் கெடுதலும் மிகலும் ஆம்.[1]" என இவர் கூறுவதால் அவ்வுடல் ஆதல் தனிக் குறிலை அடுத்த போதே எனவும், இயல்பாதல் பிற இடங்களில் எனவும் கொள்ளலாம். (150)

**151. ளளமெய்ப் பின்னர் நமஉயிர் மெய்வரின்**
**ஆமாறு உதாரணம் அறைகுதும்; கன்னார்**
**வாணுதல் என்பவும், கான்முழம், சூண்மொழி**
**என்பவும் ஆம்என்று இசைத்திடல் இயல்பே.**

நிலைமொழி ஈற்று ல, ள, மெய்களோடு நகர மகர உயிர் மெய்கள் புணருங்கால் கன்னார், வாணுதல், கான்முழம், சூண் மொழி என்னுமாறு விகாரமடையும் என்றவாறு.

இந்நூற்பாவுள் விதி இடம் பெறவில்லை. ஏழாமிலக்கணத் தில் "குற்றெழுத்து அதன்பின் குலவிய லகரம் தன்னை நவ்வரில் தகரம் கடுப்பத் திரித்து வேறு உருவாத்திரிதரும்; உதாரணம் பன்னலம், சொன்னூல் அனையபற் பலவே"[2] லவ்வீற்றொடு தநஞம வருமாயில் திரிவுள"[3] "ளவ்வீற்றதனொடு...... ஞமவந் துறுங்கால் ஒண்ஞாங்கர் என்னச் செவ்வேண்மயில் எனத் திரிந்தே உறுமே"[4] "ளகர வொற்றொடு தநவந்தொன்றின் முட்டீய்த்தனன் எனக் கண்ணாற்றம் என இருமைத் திரிவும் தாடருவான் என அவணனியாள் எனக் கேடொடு திரிபும் காணுறும்; சில்லோர் குறில்பின் திரிதரு டவ்வொழித்து ஆய்தம் தயங்கக் கூறுவர்; அம்முறை நலம் அன்று; அறியார் பலரே"[5] என்னும் நூற்பாக்களில் இக்கருத்து இடம் பெற்றுள்ளது.

கல் + நார் = கன்னார் — லகரமுன் நகரம் வந்து னகரமாயிற்று

கால் + முழம் = கான்முழம் — லகரமுன் மகரம் வந்து னகரமாயிற்று

---

1 ஏழா. இலக். 88
2 ,, ,, 93
3 ,, ,, 96
4 ஏழா. இலக். 100
5 ,, ,, 10

வாள் + நுதல் = வாணுதல் — ளகரமுன் நகரம் வந்து ணகரமாயிற்று.

சூள் + மொழி = சூண்மொழி — ளகரமுன் மகரம் வந்து ணகரமாயிற்று. (151)

**152. ஞகரஉயிர் மெய்யும் மகரஉயிர் மெய்என**
**லளஒற் றுடன்உறீஇ னணமெய்கள் ஆகச்**
**செய்யும்; உதாரணம் அகன்ஞாலம் எனலும்**
**இவண்ஞானி தான்என்று இசைத்தலும் ஆமே.**

வருமொழி முதலில் உள்ள ஞகரம் நிலைமொழி ஈற்று லளக்களுடன் புணருங்கால், மகர மெய்யீற்றுப் புணர்ச்சியைப் போன்றே அம்மெய்களை னகர ணகர மெய்களாகத் திரிக்கும். அகன்ஞாலம், இவண்ஞானிதான் என்னும் மொழிகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

''லவ்வீற்றொடு தநஞய வருமாயின் திரிவுள''[1] ''ளவ்வீற்ற தனொடு.........ஞம வந்து உறுங்கால் ஒண்ஞாங்கர் என்னச் செவ்வேண்மயில் எனத் திரிந்தே உறுமே'' [2] என இவ்விதி வேறிடத்தும் இவரால் கூறப்பட்டுள்ளது.

இவள் + ஞானி =இவண்ஞானி (152)

**153. மொழியீற்று மெய்யும் அவண்உள உயிர்மெய்**
**உகரமும் தம்பின் யகரஉயிர் மெய்வரின்**
**அவ்வவ் வருக்கத்து இகரமாய் அவிர்தரும்;**
**அவனியாவன் எனலும், களிற்றியானை எனலும்**
**உதாரணம் ஆகும்; குற்றிய லிகரம்**
**என்றுஇதைப் புலவோர் இயம்புதல் மரபே.**

நிலைமொழியீற்று மெய்களும், உகரம் ஏறிய உயிர்மெய் களும் வருமொழி முதலாக யகரம் வரின் அந்தஅந்த வருக்கத் தசை சேர்ந்த இகரமாகத் திரியும். இவ்வாறு திரிந்த இகரத்

1 ஏழா,இலக்.96 2 ஏழா.இலக். 100

தைப் புலவர்கள் குற்றியலிகரம் என்பர். அவனியாவன், களிற்றி யானை என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

நிலைமொழியீற்று மெய்முன் யகரம் வந்தால் இகரம் தோன்றும் என்பது இவர் கோட்பாடு. இது இந்நூல் 122 ஆம் நூற்பா உரையுள் காட்டப்பட்டது. அவண் உள உயிர்மெய் உகரம் பெரும்பாலும் குற்றுகரமே எனினும், "யவ்வரின் இய் யாம் முற்றும் மற்றுஒரோவழி"[1] என்பதற்கேற்பப் பொதுவாக உயிர்மெய் என்றார். கதவியாது, கதவியாத்தான் என இரு வழிகளிலும் முற்றுகரம் இகரமாதல் காண்க. (153)

**154. உயிர்மெய் உகரம் ஈற்றுஉள மொழிப்பின்**
**எவ்வுயிர் வரினும் உகரத்து இடங்கவர்ந்து**
**அதைஒரீஇ நிற்கை மிகைபடும் வாய்பாடு:**
**அதனைக் குற்றிய லுகரம்என் றிடலுண்டு;**
**உதாரணம் அவனுக் கிவளார் எனலே.**

உகரமேறிய உயிர்மெய்யை இறுதியிற் பெற்ற சொல்லுடன் எவ்வுயிர் மொழிமுதலாக வந்து புணர்ந்தாலும் பெரும் பாலும் ஈற்றுகரம் கெட்டு வருமுயிர் ஏறி நிற்கும். இவ்வுயிர் மெய்யைக் குற்றியலுகரம் என்பர். அவனுக்கிவளார் என்ற தொடர் இதற்கு உதாரணம் ஆம் என்றவாறு.

நூற்பா வாளா உயிர்மெய் உகரம் எனினும் குற்றியலு கரம் என விதந்தோதியமையின் அவை வல்லின உயிர்மெய் என்பது பெறப்பட்டது. "உகரம் ஈற்றுஉறு பதம் இரண்டு விதமாம் முற்றுகரம் எனவும் குற்றுகரம் எனவும் அவற்றுள் முந்தியது உயிர்வரில் கேடுறாமையும் ஏனையது கெடுதலும் இயற்கை ஆகும்"[2] என்றார் பிறிதோரிடத்தும்.

குற்றியலுகரம் உயிரோடு புணருங்கால் தான் கெடாது நின்றே உயிர் ஏற இடங்கொடுக்கும் என்பது இளம்பூரணர்,[3] நச்சினார்க்கினியர்[4] கோட்பாடு. ஆனால் இவ்வாசிரியர்,

1 நன்னூல் 164
2 ஏழா.இலக். 43
3 இளம்.தொல்.எழுத். 106
4 நச்சர்.தொல்.எழுத். 105

"ஆவிபின் தோன்றக் கெடும் குற்றுகரம்"[1] "குற்றுகரம் ஆவி வரிற்சிதையும்"[2] "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்"[3] என்னும் நூல்விதிகளை ஏற்று "உகரத்து இடங்கவர்ந்து அதை ஒரீஇ" என்றார். முன் காட்டப்பெற்ற ஏழாமிலக்கண நூற்பாவிலும் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (154)

155. முற்றிய லுகரம் திரியாது வரும்உயிர்
வகர வருக்கம் ஆதலும் சிறிதுஉள;
பொதுவில், கடுவுணல் போல்வன உதாரணம்.

நிலைமொழி ஈற்று முற்றியலுகரம் உயிரெழுத்துகளுடன் புணருங்கால் திரியாமல் வகர உடம்படுமெய் பெற்று வருதலும் சிற்சில இடங்களில் உண்டு. பொதுவில், கடுவுணல் என்பன எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

முற்றுகரம் வருமொழிஉயிருடன் புணருங்கால் கெடுவதில்லை. எனவே, "இ ஈ ஐவழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்"[4] என்ற பொதுவிதிப்படி வகர உடம்படுமெய் பெறுகிறது. இவர் இதனை வேறிடத்தே, "உகரம் ஈற்றுறு பதம் இரண்டு விதமாம் முற்றுகரம் எனவும் குற்றுரம் எனவும்; அவற்றுள் முந்தியது உயிர்வரில் கேடுறாமையும் ஏனையது கெடுதலும் இயற்கையாகும்"[5] என விளக்கியுள்ளார். ஆதலும் சிறிது உள என்ற உம்மையானே அதே, இதழகு, எதுயிர் எனச் சில முற்றுகரங்கள் உகரங் கெட்டு முடிவனவும் வழக்கில் உள என்பது பெறப்பட்டது. (155)

156. மகர மெய்ப்பின் வகரஉயிர் மெய்வரின்
மகரக் குறுக்கம் ஆம்என வாய்பாடு;
உதாரணம் வரும்வாழ்வு எனும்உரை ஆமே.

நிலைமொழிஈற்று மகரவொற்றையடுத்து வருமொழி முதலாக வகரம் வந்தால் அம்மெய் தன்னளவில் குறைந்து

1 வீரசோழியம் 2
2 நேமிநாதம் 14
3 நன்னூல் 164
4 நன்னூல் 162
5 ஏழா. இலக். 43

மகரக்குறுக்கம் எனப்படும். வரும்வாழ்வு என்பது இதற்கு உதாரணம் ஆம் என்றவாறு.

நன்னூல், ''ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்''[1] எனத் தனிமொழி புணர்மொழி இரண்டிடத்தும் மகரக் குறுக்கம் காட்டிற்று. இவர் புணர்மொழியில் இடம்பெறும் மகரக்குறுக்கத்தை மட்டும் இங்கு அதிகாரம் பற்றிக் குறிப் பிடுகிறார். சில இடங்களில் இந்த மகர மெய் முற்றிலும் கெடுதலும் உண்டு என்பதைக்குறிக்க விதியாக வரையறுக் காமல், ''மகரக் குறுக்கம் ஆம் என வாய்பாடு'' என்கிறார். இது இவரால், ''மப்பின் வகரம் வரில் உரு இருந்தும் குன்றும்; உதாரணம் குலம்வலிது என்னல்; வேறோர் விதத்தில் கெடுத லும் உண்டு; மரவயிரம் எனத் தனவலி எனவே''[2] என விளக்கப்பட்டுள்ளது. (156)

157. **ஆஓ இரண்டும் தனித்தனி இரட்டின்**
**பிற்பொறி ககர வுயிர்மெய் ஆதல்உண்டு;**
**ஆகா ஓகோ எனும்இவை உதாரணம்.**

ஓரெழுத் திடைச்சொற்களாகிய ஆ,ஓ என்னுமிரண்டும் தம்மொடுதாமே புணருங்கால் இரண்டாவது உயிர்நெடில் ககரவருக்கமாகத் திரிதலும் உண்டு. ஆகா, ஓகோ எனும் சொற்கள் இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

உயிரொடு உயிர்க்கு மயக்கம் இன்மையின் உடம்படுமெய் வேண்டப்படுகிறது. ய,வ ஆகிய இரு மெய்களே உடம்படு மெய் யாகும் என்பது இவர்க்கும் உடன்பாடே. ஆவுடன் ஆ சேரும் போது, ''ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தார் ஒருசாரார்''[3] என வகர உடம்படுமெய்யே இலக்கியத்துள் பயின்று வருகின் றது. எனினும் ஆகா, ஓகோ என்பன தற்போது வழக்கில் உள் ளன. இவற்றை இரு நெடில்களின் புணர்ப்பாகக்கொள்ளாமல் ஒரு தனிச் சொல்லாக்க் கொள்ளலே சிறப்பாம். அன்றி வட

---

1 நன்னூல் 96
2 ஏமா.இலக். 77
3 யா.காரிகை 31 மேற்கோள்

மொழி ஹ, "முப்பது சயவும், மேலொன்று சடவும் இரண்டு சதவும் மூன்றே யகவும்"[1] என்ற விதிபற்றிக் ககரமாயிற்றெனி னும் இழுக்கின்று. (157)

**158. அகரஆ காரம் அவ்வுயிர் மெய்களில்**
**புணர்கால் இம்முறை யாகியும் பொலிதரும்;**
**நாகணை, தராதரம், சிவாக்கினை எனல்போல்;**
**அன்றியும் பகர்வார் அவைநலம் அலவே.**

நிலைமொழிஈற்று அகர ஆகாரம் வருமொழிமுதல் அகர, ஆகாரங்களொடு புணர்ந்தால் நாகணை, தராதரம், சிவாக் கினை என்பதைப் போல வரும். இவ்விதமின்றி இவையும் (தமிழ் இலக்கணப் பொது) விதிகளின் படி நாகவணை, தரவ தரம், சிவவாக்கினை என (உடம்படுமெய் பெற்று) வருதல் வேண்டும் என்பார். ஆனால் அது சிறப்பன்று என்றவாறு.

இந்நூற்பாவும் 160 ஆவது சூத்திரமும், "அ,ஆ இறுதி முன் அஆ வரினே இருமையுங்கெட ஆ ஏற்கும் என்ப"[2] "இ,ஈ இறுதி முன் இஈ வரினே இருமையும் கெட ஈ ஏற்கும் என்ப"[3] "உஊ இறுதி முன் உஊ வரினே இருமையும் கெட ஊ ஏற்கும் என்ப"[4] என்னும் வடமொழி தீர்க்க சந்தியைக் கூறுகின்றன. தர அதரம், சிவ ஆக்கினை என்னும் தொடர்களில் நிலைமொழி வருமொழி இரண்டும் வடசொற்கள். (தற்பவம் ஆகவும் இருக் கலாம்) எனவே தீர்க்க சந்தி பெற்றன. நாக+அணை என்ற தொடரில் முதற்சொல் வடசொல். வருமொழி தமிழ். எனவே நாகாணையும் ஆகாமல், நாகவணையும் ஆகாமல் தனிமுடிவு பெற்றது.நாக+அரி=நாகாரி என்றே வருதல் காண்க.இவற்றை எல்லாம் பவணந்தியார்"இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும் போலியும் மரூவும் பொருந்தியவாற்றிற்கு இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே"[5] என்பதில் அடக்குவார்.

---

1 நன்னூல் 147
2 முத்துவீரியம் 150
3 ,, 151
4 முத்துவீரியம் 152
5 நன்னூல் 239

நிலைமொழி, வருமொழி இரண்டும் வடமொழிகளாக இருந்தால் அம்மொழி விதியே கடைப்பிடிக்கப்பட வேண்டு மென்றும், அவை மாறியிருப்பின் ஆன்றோர் மரபு பற்றிக் கொள்ள வேண்டுமென்பதுவும் இவ்வாசிரியர் கருத்து. எனவே தான் ஆகியும் என உம்மை கொடுத்தும், நாகணையை எடுத்துக் காட்டியும், அன்றியும் பகர்வார் எனப் பிறர்கோள் கூறியும் சூத்திரஞ் செய்தார். (158)

**159. அகரஉயிர் மெய்யோடு இகர உகரம்**
**புணர்கால் அதன்ஏ, ஓஆம் உதாரணம்**
**நரேந்திரன், பயோதரம் எனும்இரு பாற்றே.**

(வடமொழிகளாகிய) நிலைமொழி ஈற்று அகரத்தின் முன் வருமொழிமுதலாக இகர, உகரங்கள்வந்தால் முறையேஅவை அகரமேறிய நிலைமொழிஈற்று உயிர்மெய் வருக்கத்தைச் சேர்ந்த ஏகார ஓகாரமாகத் திரியும். நரேந்திரன், பயோதரம் என்பன இதற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

இந்நூற்பா, "அஆ இறுதிமுன் இஈவரினே இருமையும் கெட ஏ ஏற்கும் என்ப"[1] அஆ இறுதி முன் உஊவரினே இருமையும் கெட ஓ எய்தும் என்ப"[2] என்னும் குணசந்திவிதி கூறுதலின் உரையில் வடமொழிகளாகிய என்பதுபெய்து உரைக் கப்பட்டது. அகரஉயிர்மெய் எனக்கூறிப் பிறகு அதன் ஏ,ஓ ஆம் என்றது இத்தகைய வடமொழிச் சந்தியில் தமிழ்மரபு பற்றி உடம்படுமெய் வாரா என விலக்குதற்காம். நூற்பா குறில் களையே கூறி இருப்பினும் ரமேசன் போன்றனவும் இலக்கியங்களில் விரவியிருப்பதால் உரையில் கோடலாக ஈ,ஊ என்பனவற்றையும் வருமொழி முதலாகக் கொள்க. (159)

**160. உயிர்மெய் இகரத்து, உயிர்ஆம் இகரம்**
**வருங்கால் நெடிலா மன்னுறீஇக் கிடக்கும்;**
**முனீந்திரன் என்னும் மொழிஉதா ரணமே.**

---

1 முத்துவீரியம் 153 2 முத்து வீரியம் 154

(வடமொழிகளாகிய) நிலைமொழிஈற்று இகரத்தின்முன் இகர உயிர்வரின் அது நெடிலாக விளங்கும். முனீந்திரன் என்பது இதற்கு உதாரணமாகும் என்றவாறு.

இதுவும் 158 ஆம் நூற்பாவில் கூறப்பட்ட தீர்க்க சந்தி ஆகும். நூற்பா குறிலை மட்டும் கூறினும் மகீசன், நதீசன் என வருஉம் நெடில்களும் தீர்க்க சந்தியே ஆம். (160)

**161.** **ரகர அகரம் பின்வரும் அகரம்**
**ககரம் ஆகக் காட்டலும் உடைத்து;**
**முரகரி அரகர எனும்இவை உதாரணம்.**

தொடர்மொழிகளில் ரகரத்தை அடுத்த அகரம் சில வடசொற்களில் ககரமாகவும் விளங்கும். முரகரி, அரகர என்பன எடுத்துக் காட்டுகள் ஆகும் என்றவாறு.

இது புணர்ச்சி விதியன்று. ரகரத்தை அடுத்த ஹகரம் வடமொழியில் இயல்பாகப் புணரும். (முர+ஹரி=முரஹரி;ஹர+ஹர=ஹரஹர) இவற்றுள் வடமொழி, ஹகரம் "முப்பதுசயவும், மேலொன்று சடவும்,இரண்டு சதவும்,மூன்றே அகவும்"[1] என்ற விதிபற்றி மொழி முதலில்அகரமாகவும்இடையில்ககரமாகவும் திரிகிறது. ஹரஹர என்பது அரகர என வருமிடத்து இது மிகத்தெளிவாதல் காண்க.

காட்டலும் உடைத்து என்ற உம்மையானே சில இடங்களில் ஹரிஹரன் என்பது போலத் தற்சமமாக நிற்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றார். அற்றேல் அதனை அரிகரன் எனத்திரித்தால் பொருட்சிறப்பழிதல் காண்க. அச்சொல் ஹரிஹரன் என்றோ அரிஹரன் என்றோதான் வருதல் வேண்டும். வடமொழி எழுத்தே வேண்டாமெனில் இருசொற்களையும் தனித்தனியே அரி,அரன் எனத் தமிழாக்கித் தமிழ் விதி பற்றி அரியரன் எனப் பொருத்துக. (161)

---

1 நன்னூல் 147

162. அகர உகரம் உயிர்மெய் ஆம்கால்
பின்வரும் உயிர்களை வகரம் ஆக்கலும்
இகரமும் எகரமும் அவன்ஆம் காலை
யகரம் ஆக்கிடலும் உயிரெழுத்து இயல்பே;
ஆதலின் விடுத்துஇனி அளபுஉரைக் குதுமே.

நிலைமொழியீற்று உயிர்மெய்யாம் அகர உகரங்களுடன் வருமொழி உயிர் புணருங்கால் அவ்வுயிர் வகரவருக்க உயிர்மெய் யாகத் திரியும். அவ்வாறே இகர எகரங்களோடு புணருங்கால் யகர வருக்க உயிர்மெய்யாகத் திரியும். இவை உயிர்எழுத்து களுக்கு இயல்பே.ஆகவே இதனை மேலும் விரிக்காமல்அடுத்து அளபெடைபற்றிக் கூறுவாம் என்றவாறு.

இந்நூல் 117, 118 ஆம் நூற்பாக்களில் கூறப்பட்ட உடம் படுமெய் பற்றிய விதிகள் வடமொழிச் சொற்கள் தமிழில் தற்பவமாய் வந்து புணரும் போதும் தமிழ் விதியே பின்பற்றப் படும் என்பதைத் தெளிவிப்பதற்காக அநுவதிக்கப்பட்டன. அங்கே கூறியது தனித்தமிழ்ச் சொற்களுக்கு. இவை வட மொழித் திரிசொற்களுக்கு. எனவே இந்நூற்பா கூறியது கூறல் ஆகாது. இவ்விதிகள் வடமொழிச் சொற்களுக்கு என்பது அதிகாரத்தாலே பெற்றாம். (162)

163. ஒவ்வோர் பொருளை உறுத்துதல் பற்றி
வண்ணம் அல்லா இயற்றமிழ்ப் பகுதியில்
நெட்டெழுத்து அதற்பின் உயிர்அளபு எடுத்தல்உண்டு;
உதாரணம் கெடாஅ தழீஇஎனல் பலவே.

(செய்யுளோசை குன்றுமிடத்திலோ, குன்றாஇடத்தும் இன்னிசை நிறைக்கவோ, பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லாகப் பொருள் தரும் பொருட்டோ)ஒரு காரணம் பற்றி வண்ணம் அல்லாத இயற்றமிழ்ச் செய்யுளில் நெட்டெழுத்து கள் தத்தம் மாத்திரையின் மிக்கு ஒலிக்கும். கெடாஅ, தழீஇ எனவரும் பல இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

உயிரளபெடை வரும் காரணம் இந்நூற்பாவில் இடம் பெறாததால் மரபு பற்றி உரையில் பெய்து கொள்ளப்பட்டது. இயல், இசை, நாடகம் என்னும் முக் கூற்றுத் தமிழும் முறையே ஒன்றைவிட அடுத்தது எளிமையாக இருத்தல் வேண்டும் என்பது இவர் கோட்பாடு. ''இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்ச் சொல் பொதிய மால்வரைப் பொழிலென இருண்டும், உலவா முனிவோர் உடையெனச் சிவந்தும், வீழ்புனல் அருவியில் வெளுத்தும் தோன்றும் ... ... ...''[1] ''வீணையில் தேர்ந்தோன் விளம்பும் மாற்றம் தழீஇக்கொளல் நாடகத் தமிழினுக்கு அழகே ஆயினும் பொருட்சுவை அழியினும் இயல்இசைச் சொல் மிகப் புணரினும் சோர்வுபடுமே''[2] என்னும் நூற்பாக் களால் இது தெளிவாகிறது.

வண்ணப் பாடல்களில் அளபெடை வந்தால் அது குழிப்பிற் கேற்ப இயைபாக அமையாததலின் அவைகளில் அளபெடுத் தல் நீக்கப்பட்டது. ''வண்ணத் தளவில் வடமொழி மரூஉச் சொல் புல்லினும் மதுரப் பொலிவு குன்றலும், குழிப்புச் சிதைவும் கொடுந்தமிழ்ப் புணர்ப்பும், அளபெடைச் சேர்க்கை யும் ஆகா அன்றே''[3] என்பது வண்ணத்தியல்பு. என்றாலும் மிச் சிறுபான்மையாக, ''ஆகா அளபெடை அணையினும் அம் முறை துள்ளல் தோறும் துலக்கவல்லானேல் அஃதும் ஓர் சிறப்பு என்று அறைவார் சிலரே''[4] என ஏற்கிறார். (163)

**164. ஒற்றினை இரட்டித்து இஃதும்ஓர் அளபெடை**
**என்பார் உளர்எமக்கு இனிதுஅஃது அன்றே.**

ஒரு மெய்யெழுத்தையே இருமுறை எழுதி இது ஒற்றளபெடை என வேண்டுகின்ற ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் யாம் அதனை விரும்பேம் என்றவாறு.

''கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்''[5] என்பன போன்ற ஒற்றளபெடைகள் இலக்கியங்களுள் மிகமிக அரிதாகவே பயின்று வருகின்றன. இலக்கண நூல்களில் மேற்கோளாகக் காட்டப்படும் செய்யுள்கள் அனைத்தும் உரையாசிரியர்களால் இலக்கணத்தை விளக்கவேண்டியே இயற்றப்பட்டனவாகும்.

---

1 அறுவகை. 171
2 ,, 453
3 வண்ணத்தியல்பு 7
4 அறுவகை. 478
5 மலைபடுகடாம் 352

அவை இயற்கையாயெழுந்த இலக்கியங்கள் அல்ல. மேலும் அத்தகைய ஆட்சியும் பிற்காலத்தே இறந்தொழிந்தது. எனவே) இவ்வாசிரியர் இறந்தது விலக்கல் என்னும் உத்திபற்றி ஒற்றள பெடையை வேண்டாராயினார். (164

**165.** **பல்எனும் மொழியொடு தலையெனல் புணர்கால்**
**பஃறலை ஆதலும், அருணையும் புரியும்**
**அருணா புரியென்று அவிர்தலும், குசவன்**
**குயவன் ஆதலும், வரியும் குயிலும்**
**வரிக்குயில் ஆதலும் அன்னவை பிறவும்**
**பொதிய மால்வரைப் புகழ்பொரு புலமைச்**
**சீரியர் தம்பால் தெரிவது முறையே.**

பல் + தலை = பஃறலை, அருணை + புரி = அருணாபுரி வரி + குயில் = வரிக்குயில் போன்ற புணர்ச்சி பேதங்களும், குசவன், குயவன் போன்ற மரூஉ மொழிகளும் போன்றவை களைப் புகழ்பெற்ற பெரும்புலவர்களின் இலக்கிய வாயிலாகவே அறிந்து கொள்ளல் தக்கதாம் என்றவாறு.

"குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம் ஆகவும் பெறூஉம் அல்வழியானே"[1] என்னும் விதி பற்றி பஃறலை வந்தது அருணை என்னும் சொல்லோடு புரி புணர்ந்து அருணாபுரி ஆயிற்று என்பது அத்துணை இயைபுடையதாகத் தோன்ற. வில்லை. இரண்டும் வடமொழிச் சொற்கள். அருண, புரி என்ற இரண்டும் அருணபுரி என்றே வடமொழியில் இயல்பாகப் புணர்ந்து, நீட்டல் விகாரம் பெற்று அருணாபுரி என ஆயிற்று எனக் கோடலே சிறப்பாம். "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்"[2] ஆதலின் வரிக்குயில் எனக் ககரம் மிக்கது. இவ்விதி இந்நூலில் சொல்லப்படாததால் இங்கு உதாரணத்தால் காட்டினார். குயவன் என இருத்தற்பாலது பேச்சுவழக்கில் குசவன் என மருவச் சிறுபான்மை இலக்கியத்தும் இடம்பெற்றுவிட்டது. (165)

**புணர்ச்சி இயல்பு முற்றிற்று.**

**எழுத்திலக்கணம் முற்றுப்பெற்றது.**

ஆகச் சூத்திரம் 165.

---

1 நன்னூல் 228. 2 நன்னூல் 165

# 2. சொல் இலக்கணம்

எழுத்திலக்கணத்தை 165 நூற்பாக்களால் நிறைவுசெய்த ஆசிரியர் அடுத்து நிறுத்தமுறையானே சொல் இலக்கணம் கூறத் தொடங்குகிறார். இந்த இரண்டாவது பெரும்பிரிவு பொது இயல்பு, பிரிவு இயல்பு, சார்பு இயல்பு, திரிபு இயல்பு என்னும் நான்கு உட்பிரிவுகளை உடையது.

பொதுவாக இலக்கணங்கள் சொல்லதிகாரத்தில் சொற்களைப் பெயர், வினை, உரி, இடை எனப் பிரித்துக்கூறி, திணை, இடம், பால், வேற்றுமை போன்ற சிறப்பிலக்கணங்களை விரித்துக் கூறும். இவர் வேறொரு புதிய நெறியில் செல்ல முயல்கிறார்.

## I. பொதுவியல்பு

எழுத்துகளால் சொற்கள் ஆகின்றன என்பதும், சொற்களின் பெருக்கம் நிகண்டுகளால் அறியப்படும் என்பதும், சொற்கள் வழக்கில் திரிந்து வழங்கும் என்பதும், சொற்களின் நிறங்களும், திசைச்சொல் ஆட்சியும் இப்பொதுவியல்பில் கூறப்படும். இது மொத்தம் பதினாறு நூற்பாக்களைக் கொண்டது. சொற்களைப்பற்றிய பொதுவான சில செய்திகளை அறிவிப்பதால் இது பொதுவியல்பு எனப்பட்டது.

இவ்விலக்கணத்தின் தலைச்சூத்திரத்தில் தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் கூறி இதனைத் தற்சிறப்புப் பாயிரமாக்குகிறார்.

**1.** **எழுத்தின் புணர்ச்சியும் இவ்வாறு ஓதி**
**முதல்இலக் கணத்தை முடித்தனம்; அடுத்து**
**நல்இயற் புலவோர் நவில்குகற் கருதிச்**
**சொல்இலக் கணமும் தொகுக்குதும்; அதனுள்**
**பொதுஇயல்பு அதனைமுற் புனைந்துஉரைக் குதுமே.**

(எழுத்து இலக்கணத்திலேயே மிக முக்கியமானதாகிய) எழுத்துகளின் புணர்ச்சி விதிகளைக் கூறி முதல் இலக்கணத்தை நிறைவு செய்தோம். இனித் தொடர்ந்து நன்மைமிக்க புலவோர்களால் போற்றப்படுகின்ற முருகப் பெருமானைத் தியானித்துச் சொல் இலக்கணத்தையும் தொகுத்து உரைக்கத் தொடங்குகிறோம். அதனுள் முதலாவதாகப் பொதுவியல் பினைக் கூறலுற்றாம் என்றவாறு.

''எழுத்தியல் தொகையில் ஏற்றம் நாடில் அவை புணர் இயல்பே''[1] என்னும் தம் கோட்பாட்டிற்கிணங்க எழுத்தின் புணர்ச்சியும் என்றார். குகற் கருதி என்றதனானே வாழ்த்தலும், வணங்கலும் உபலக்கணமாகப் பெறப்பட்டன. சொற்களின் நிறம் என்பது பற்றிப் பிற இலக்கண நூல்கள் கூறுவதில்லை. இவரே சொல்கிறார். இது பற்றியே புனைந்து உரைக்குதுமே என்கிறார். (166)

**2. சொல்எனல் எழுத்துத் தனித்தும் சிற்சில**
**புணர்ந்தும் வருவன; உதாரணம் புகலின்**
**ஆஎனும் பெற்றப் பெயர்முதற் பலவும்**
**தனிப்பொறிச் சொல்லாம்; மயில்எனும் ஒகரப்**
**பெயர்முதற் பலவும் புணர்பொறிப் பதமே.**

தனி எழுத்தாக (பொருளோடு) ஓர்எழுத்தொருமொழியாக வருவனவும், சிற்சில எழுத்துகள் சேர்ந்து தொடர்மொழியாக வருவனவும் சொல் எனப்படும். பசுவைக் குறிக்கின்ற ஓரெழுத்தொருமொழியாகிய ஆ முதலிய பல சொற்களும், மஞ்ஞையைச் சுட்டுகின்ற மயில் என்னும் தொடர்மொழி முதலிய பல பதங்களும் இதற்கு உதாரணங்கள் ஆம் என்றவாறு.

தொல்காப்பியர் சொற்களை, ''ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி''[2] என மூவகைப்படுத்துவார். இலக்கண விளக்கமும்

1 ஏழாம். இலக். 1 2 தொல். எழுத்து. 45

இம்முறையிலேயே, "எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் பதமாம்"[1] என்கிறது. ஆனால் இவ்வாசிரியர், "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்"[2] என்ற பவணந்தியார் மதம் பற்றி இரு பிரிவாகவே கொள்கிறார். (167)

**3. றகரமும் ரகரமும் ழகரமும் ளகரமும்**
**னகரமும் நகரமும் சிற்சில மொழியில்**
**பிறழ்ந்தும் வருவன; உதாரணம் பேசில்**
**தறைதரை என்னும் நிலத்தின் பெயரும்,**
**உழிஉளி என்னும் இடத்தின் பெயரும்,**
**வனம்வநம் என்னும் காட்டின் பெயரும்**
**ஆம்; இவை பற்றி அனைத்தும் பிறழப்**
**பொறித்தலும் பேசலும் பொருத்தம் அலவே.**

சிற்சில வார்த்தைகளில் வல்லின றகரம் இடையின ரகரம் இரண்டும், ழகர ளகரங்கள் இரண்டும், ஈற்று னகரமும் தந்நகரமும் பிறழ்ந்தும் வருதல் உண்டு. நிலத்தைக் குறிக்கத் தறை, தரை எனலும், இடத்தை உணர்த்த உழி, உளி எனலும், காட்டினை வனம், வநம் எனலும் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். சில இடங்களில் மட்டும் இவ்வாறு பிறழ்ந்து வருதல் பற்றி எல்லா இடங்களிலும் மாற்றி எழுதுவதோ உச்சரிப்பதோ பிழையாகும் என்றவாறு.

மிகமிக அருகியே இப்பிறழ்ச்சி உள்ளது என்பதனால் சிற்சில என்றார். ஈண்டும் பிறழ்வது அத்துணைச் சிறப்பன்று எனத் தெளிவிக்கப் பிறழ்ந்தும் என உம்மை கொடுத்தார். வழக்கில் சில சொற்களில் மட்டும் இத்தகைய பிறழ்ச்சி இடம் பெற்றுவிட்டதைக் கொண்டு வரைமுறையில்லாமல் ஆளல் தக்கதன்று; சான்றோர் இலக்கிய ஆட்சிகொண்டே கையாள வேண்டும் என்பதும், பேசும் போதுகூட எழுத்துகளைத் தெளிவாக உச்சரிக்க வேண்டும் என்பதும் வற்புறுத்தப் பட்டது. (168)

---

1 இலக். விளக். 2 நன்னூல் 128

**4. தமிழ்ச்சொற் பெருக்கைத் தரணியிற், புலவோர்**
**அவையில், சேந்தன் காங்கே யன்ஆதியர்**
**நூல்களில் தேறி நுவல்வது கடனே.**

தமிழ்மொழியில் உள்ள சொற்களின் மிகுதியை மக்களின் பேச்சு வழக்கிலும், புலவர்களின் கூட்டத்தில் கலந்து பழகியும், சேந்தனால் ஆக்குவிக்கப்பட்ட திவாகரம், காங்கேயனால் செய்யப்பட்ட உரிச்சொல் போன்ற நிகண்டு நூல்களிலும் பார்த்துத் தெளிந்து பிறகு பிழையற இலக்கியத்தில் ஆளுதல் வேண்டும் என்றவாறு.

தரணி மக்களையும், புலவோர்அவை அங்குப் பயிலப்படும் இலக்கியங்களையும் ஆகுபெயராக உணர்த்தின. தரணியில் அவையில் என்புழி எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன. பரவை வழக்கை மக்களிடையிலும், இலக்கிய வழக்கை அறிஞர் கூட்டுறவாலும் அறிய வேண்டும். நிகண்டு நூல்கள் பெரும் பாலும் திரிசொற்களை அறியத் துணைபுரியும். (169)

**5. ஒருமொழி ஒருவாறு உலகில் திரிந்து**
**வழங்கல்உண்டு; உதாரணம் வருகிறவன் என்கை**
**வாறவன் ஆனதும், கொண்டுவந்து என்கை**
**கொண்டாந்து ஆனதும், ஏனடி என்கை**
**ஏண்டிஎன்று ஆனதும், இனையன பலவும்**
**வாசகத்து அன்றி வண்ணம் நாடகம்**
**எனும்இரு பகுதியில் இசையினும் தகுமே.**

இலக்கிய வழக்கிலிருந்தும் சில மொழிகள் பேச்சு வழக்கில் திரிந்து வழங்குதலும் உண்டு. வருகிறவன், கொண்டுவந்து, ஏனடி என இருக்கவேண்டியவை முறையே வாறவன் கொண்டாந்து, ஏண்டி என மருவி வழங்குதல் போன்ற பல இதற்கு எடுத்துக்காட்டுகளாம். இத்தகைய மரூஉ மொழிகளை இயற்றமிழில் அதிகம் பயன்படுத்தாமல் இசைத்தமிழ் நாடகத் தமிழ்ப்பகுதிகளில் ஆண்டாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாம் என்றவாறு.

இங்கு வண்ணம் என்பது ஒலிக்கட்டுக்கோப்போடு கூடிய இசைத்தமிழை உணர்த்திற்று. இசைத்தமிழும் நாடகத்தமிழும் பாமரரும் எளிதில் உணர்ந்துகொள்வதற்காக இயற்றப்படு தலின் அவற்றுள் இத்தகைய மரூஉ மொழிகள் தழுவி ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனினும் அங்கும் இத்தகைய சொல்லாட்சி மிக்க சிறப்பினையுடையது அன்று என்பதற்காக இசையினும் என உம்மை புணர்த்தார். (170)

**6. இயல்இசை நாடகம் என்னும்முத் தமிழ்ச்சொல்**
**பொதிய மால்வரைப் பொழில்என இருண்டும்,**
**உலவா முனிவோர் உடைஎனச் சிவந்தும்,**
**வீழ்புனல் அருவியில் வெளுத்தும் தோன்றும்என்று**
**அறிவார் மலர்த்தாள் அணிதலை எமதே.**

இயல், இசை, நாடகம் என்ற தமிழின் முப்பிரிவுகளில் ஆளப்பட வேண்டிய சொற்கள் முறையே பொதியமலைச் சோலையைப்போல இருண்டும் (கரிய நிறமாகவும்) ஓரிடத்தில் நிலையாகத் தங்கி இராமல் சுற்றிக் கொண்டே இருக்கும் தவசிகளின் ஆடையைப்போலச் செந்நிறமாகவும், மலையரு வியைப் போன்று வெண்மையாகவும் இருக்க வேண்டும். இதனை உணர்ந்து கொள்கின்ற அறிஞர்கள் எம் வணக்கத்திற் குரியவராவர் என்றவாறு.

முன்பே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று இந்நூலாசிரியர் தமிழ்ச் சொற்களுக்குப் புதியன புகுதலாக நிறம் வகுக்கிறார். இந்நிறப்பகுப்பு சொற்பொருளின் அருமை, எளிமை நோக்கி வகுக்கப்படுகிறது என்பது பின்வரும் நூற்பாக்களால் விளங்குகிறது. இயல், இசை, நாடகம் ஆகியவை முறையே ஒன்றைவிட அடுத்தது எளிய நடையில் அமைய வேண்டும் என்பதே இந்நூற்பாவின் கருத்து ஆகும். இயல், இசை, நாடகப் பிரிவு பற்றி இந்நூலில் பின்னால் யாப்பிலக்கணத்தில் கூறப் படும்.

உலவாமுனிவோர் என்புழி அவாய்நிலையானே அருளை உடைய என வருவித்துக்கொண்டு குறையாத அருளினை

உடைய முனிவோர் என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆக்கினும் அமையும். சொற்களின் அருமை, எளிமைகளை உள்ளவாறு நிர்ணயித்தலில்உள்ள சிக்கல்களை நினைந்து, ''அறிவார் மலர்த்தாள் அணிதலை எமதே'' என்றார். (171)

7. எழுத்துஉரு அறியா இயல்பினர் தாமும்
அறியும் மாற்றம் அனைத்தும்வெண் ணிறமே.

எழுத்தறிவற்ற பாமரர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் சொற்கள் எல்லாம் வெண்ணிறம் படைத்தவையாகும் என்றவாறு.

இந்நூற்பாவால் அன்றாட வாழ்வில் அனைவரும் பயன்படுத்தும் எளிய சொற்கள் யாவும் வெண்ணிறம் வாய்ந்தன என்பது பெறப்பட்டது. வழக்கிலும் வெள்ளைப்பாட்டு, வெள்ளறிவு என வழங்கப்படுதல் காண்க. (172)

8. கொல்லா விரதக் குருவாம் குறள்போல்
புந்தியின் அளவில் பொருள்தரும் சொற்கள்
பளிங்கு நிறம்எனப் பகர்வது முறையே.

(ஒன்றாக நல்லது கொல்லாமை என்று தலையான அறமாகக்) கொல்லா நெறியைப் புகட்டும் ஆசானாகிய திருக்குறளைப் போன்று கற்பவர்கள் தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவு பொருள் கொள்ளும்வகையில் அமைந்த சொற்களைப் பளிங்கு நிறம் உடையன எனலாம் என்றவாறு.

அடுத்தது காட்டும் பளிங்கினைப்போல் இச்சொற்கள் கற்பார் அறிவிற்கேற்பப் பொருள் தருதலின் அந்நிறம் எனப்பட்டது. (173)

9. பேயொடு குன்றும் பிளக்கு மாறு
கழறும்நூல் ஆதிய கருத்த நிறமே.

நக்கீரனைச்சிறைப்படுத்திய கற்கிமுகி என்றபேயையும், திருப்பரங்குன்றக் குகையையும் முருகப்பெருமான் வேலால்

பிளக்கும்வண்ணம் பாடப்பட்ட திருமுருகாற்றுப் படை போன்ற நூல்கள் கருமைநிறம் வாய்ந்தன ஆகும் என்றவாறு.

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டுள் முதலாவதாகத் திகழும் கடைச்சங்க நூலாதலின் இன்று மிகப்பலருக்கு எளிதில் பொருள் விளங்காத தொன்மையான சொல்லாட்சியைப் பெற்றுள்ளது. இதனைப் புரிந்து கொள்ளும் அருமைநோக்கிக் கருத்தநிறம் என்றார். இவர் கருமை என்று கூறுவதால் அத்தகைய நூல்கள் இழிந்தவை எனப் பொருளன்று. பொருள்காண அரியது என்பதே கருத்து. யமகம், திரிபு, ஏகபாதம் போன்ற பிற்காலத்திய மிறைக்கவிகளும் இந்தக் கண்ணோட்டத்தில் கரிய நிறம் உடையனவே.

நக்கீரர் வரலாறு காளத்திப்புராணம், திருப்பரங்கிரிப்புராணம்,அருணகிரிநாதர் புராணம்,புலவர் புராணம்,திருவிளையாடற்புராணங்கள் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது. (174)

**10. கற்றூ ணிடத்தொரு கடவுட் காட்டலும்,**
**அரன்மனை அடிசில் ஆக்கச் செய்ததும்,**
**கணபதி கரத்தால் கயிலை மீதுஉறச்**
**சேர்த்ததும் ஆதிய செஞ்சொற் றிரளே.**

பிரபுடதேவராயனுக்காகத் திருவண்ணாமலைக் கோயில் தூண் ஒன்றில் முருகப் பெருமானை வரவழைத்ததாகிய அருணகிரிநாதரின் திருப்புகழ், கவிராசபண்டிதரின் சௌந்தரியலகரி மொழிபெயர்ப்பு, விநாயகர் தன் துதிக்கையால் கயிலையங்கிரியிற் செலவிடுத்த ஔவையாரின் விநாயகர் அகவல் போன்ற பனுவல்கள் யாவும் செம்மையான நிறமுடைய சொற்கள் ஆகும் என்றவாறு.

அருணகிரிநாதர் சம்பந்தாண்டான் பொருட்டுக் கம்பத்திளையனாரைக் கற்றூணில் காட்டிய வரலாறு இவ்வாசிரியரால் இயற்றப்பெற்ற அருணகிரிநாதர் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சங்கராசாரிய சுவாமிகளின் வடமொழி சௌந்தர்யலகரியைக் கவிராச பண்டிதர் மிக இனிமையாகத் தமிழாக்கினார். இதற்குப் பரிசாக உமையம்மையே கவிராச

பண்டிதரின் மகள் வடிவில் வந்து ஆறுமாதம் அவருக்கு அடிசிற் பணி செய்தார் என்பர். இவ்வரலாறு இந் நூலாசிரியரால் இயற்றப்பெற்ற புலவர் புராணத்தின் கவிராசபண்டிதர் சருக்கத்தில் விரிவாக இடம் பெற்றுள்ளது. மூத்த பிள்ளையார் ஔவை மூதாட்டியைக் கயிலையில் உய்த்த வரலாறும் புலவர் புராணம் ஔவையார் சருக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. (175)

**11. நால்வரும் பதின்மரும் நவின்ற சொற்கள்**
**பொன்மை நிறம்எனப் புகலத் தகுமே.**

சைவ சமயாசாரியர்கள் ஆகிய திருஞானசம்பந்தர் முதலிய நால்வரின் திருப்பாடல்களும், வைணவ ஆழ்வார்களாகிய பெரியாழ்வார் முதலிய பதின்மரின் அருளிச்செயல்களும் பொன்னிறம் வாய்ந்தவை எனலாம் என்றவாறு. (176)

**12. நிறத்தின் பகுதியை இவ்வாறு நிகழ்த்தல்**
**மிகைப்படும்; புணர்ச்சி பற்றிச் சொற்களின்**
**ஐவகை நிறமும் அறிந்துஓர் புலவன்**
**முத்தமிழ் பாடல் முறையே ஆதலின்,**
**ஆணி போன்றுஓர் பொருட்பெயர் ஐந்தால்**
**காட்டுதும்; ஆயினும் கண்ணினும் சிறந்த**
**மனத்தாற் காண்டலே வழக்குளனல் இயல்பே.**

சொற்களின் நிறப்பாகுபாட்டை இங்ஙனம் விரித்தால் மிக விரிந்துவிடும். சொற்கள் தம்முள் புணர்வதனால்தோன்றுகின்ற ஐந்து வகையான நிறபேதங்களையும் நன்கு உணர்ந்தே ஒரு புலவன் இயல், இசை நாடகங்களைப் படைக்க வேண்டும். எனவே ஒரே பொருளைக் குறிக்கும் ஐந்து நிறச் சொற்களையும் மாதிரிக்காக ஒன்று காட்டுகின்றோம். என்றாலும் ஊனக் கண்ணைவிடச் சிறந்ததாகிய மனத்தால் சிந்தித்து உணர்தலே தக்கதாகும் என்றவாறு.

செஞ்சொற்களே தம் புணர்ச்சியால் பொருள் காணமுடியாமல் கருஞ்சொற்கள் ஆகிவிடும். யமகம், திரிபு போன்ற மிறைக்கவிகளின் எதுகைகள் இவ்வாறே அமைகின்றன. எனவே

தனிச்சொல்லின் நிறம் கூற முடியாமல் அதன் இலக்கிய ஆட்சியை வைத்தே தீர்மானிக்க வேண்டி உள்ளது.

ஆணி என்றது ஈண்டு பொன்னின் மாற்றைச் சார்த்து வகையால் அறியப் பயன்படும் உரையாணியை. (177)

**13. உலகினர் உணவுஇனத்து உயர்ந்த ஒருபொருட்**
**சோறுஎனல் வெண்சொல்; அன்னம் என்கை**
**பளிங்கு நிறச்சொல்; பதம்எனல் கருஞ்சொல்;**
**அமுதுஎனல் செஞ்சொல்; அடிசில் என்கை**
**பொன்னிறச் சொல். இவண் புகன்று காட்டல்**
**அம்மையில் புலமை அணையா ராய்இருந்து**
**இம்மையில் முயல்வார் இதழ்தல்நன்கு உணர்ந்தே.**

மக்கள் உணவு வகைகளில்உயர்ந்தஒன்றாகிய சாதத்தைச் சோறு எனக் கூறுதல் வெண்சொல் ஆகும்; அன்னம் என்னல் பளிங்குச் சொல்லாம்; பதம் என்பது கருநிற வார்த்தை; அமுது என்றிடில் செஞ்சொல் ஆகும்; அடிசில் எனும் சொல் பொன் னிறம் வாய்ந்தது. முற்பிறவிகளில் புலமை நலம் இல்லாதவர் களாக இருந்து இப்பிறவியிலேயே கற்க முற்படுவோர் இந்நுட் பங்களை உணராராய் எம்மை இகழ்வர் என்பதை நன்கு உணர்ந்திருந்தே யாம் இந்நூலில் சொற்களின் நிறம் பற்றிய இக்கோட்பாட்டைக் கூறுகின்றோம் என்றவாறு.

சோறு வெள்ளை வழக்கு; அன்னம்-பறைவையா, சோறா எனச் சற்றே திகைப்புண்டாக்கி இடம் பற்றித் துணியப்படும்; பதம் என்ற வார்த்தை பல பொருள் ஒரு சொல்லாதலின் எளிதில் விளங்காது. அமுது எனல் மரபோடு கூடிய இலக்கிய வழக்கு. அடிசில் உபசார வழக்கு. இதனை ஓர் எடுத்துக் காட்டாகக் கொண்டு பிற சொற்களுக்கும் நிறம் கொள்க. இது சற்றேறக்குறைய வடமொழியார் கூறும் நாளிகேரபாகம், கதலிபாகம், திராட்சாபாகம் என்பனவற்றை ஒத்தது. கருமை, செம்மை, வெண்மை என முறையே அவற்றைக் கொள்ளலாம்.

தவமுடையாராதல் கல்வியுடையாராதல் ஆகிய இரண்டும் முற்பிறவிகளின் பயிற்சியாலேயே சிறப்படைவனவாம். இப்பிற

வியில் முதன்முதலாகக் கற்கத் தொடங்கியவர்கள் பருப் பொருள்களை மட்டுமே அறிவர்; அவர்களுக்கு நுண்பொருள்கள் விளங்கா. அத்துடன் தம் அறியாமையையும் அவர் உணர மாட்டார். தம் அறியாமையை மறந்து அன்னோர் நுண்பொருள் களை எடுத்துக் கூறும் அறிஞர்களைப் பழிப்பர். இவ்வுலக நடை முறையை நன்கு அறிந்திருந்தாலும் உணரத் தகுதியுடையவர் களுக்காக உரைத்தேன் என்கிறார். (178)

**14. பளிங்கு நிறமும் பழுதுஇல்பொன் நிறமும்**
**வெண்மையில் செம்மையில் மேவல் பற்றி**
**முத்தமிழ் ஆம்என மொழிந்தனர் முதியோர்.**

பளிங்கு நிறமும் பொன்வண்ணமும் முறையே வெண்மை யிலும் செம்மையிலும் அடங்குதல் பற்றித் தமிழ் மொழியை முத்தமிழ் என்று முந்து நூற்புலவர் கூறினர் என்றவாறு.

இயற்றமிழ் கல்விவல்லாருக்கே விளங்கும் வண்ணம் கடு நடையை உடையதாகவும், இசைத்தமிழ் ஓரளவு கல்விப் பயிற்சி உடையாரும் புரிந்து கொள்ளும்படி செம்பாகமான தாகவும், நாடகத் தமிழ் பாமர ரஞ்சகமாக மிகமிக எளிமை யாகவும் இருக்கலாம் என்பது இவர் கருத்து. (179)

**15. தாயைத் தல்லிஎன்று உரைப்பது போலும்**
**திசைச்சொலும் சிற்சில சேர்ந்தமை பற்றித்**
**தன்சொலைப் பிறஎனச் சாற்றிடல் மயலே.**

அன்னையைக் குறிப்பதற்குத் தல்லி என்று கூறுவது போன்ற மிகச் சில திசைச் சொற்கள் தமிழ் மொழிச் சொற் களுடன் கலந்து வழங்குவதைக் கொண்டு தமிழ்ச் சொற்களை யெல்லாம் பிறமொழிச் சொற்கள் என்றே கூறுவது அறிவு மயக்கமான செயலாகும் என்றவாறு.

தல்லி என்பது தெலுங்கு மொழியில் இருந்து வந்த திசைச் சொல். திசைச்சொற்களுக்குக் கூறிய இதனையே வடமொழிக் கும் கொள்க. இடைக் காலத்தே பெரும்பாலான தமிழ்ச்

சொற்களை வடமொழிப் பதங்களாக நினைந்து மயங்கிய ஒரு மிகத்தவறான போக்கு காணப்பட்டதால் இந்நூற்பா மிகமிகஇன்றியமையாததாகும். (180)

**16. சொல்லின் பொதுவியல்பு ஒருவாறு சொற்றனம்;**
**பிரிவுஇயல்பு அதனைப் பேசுதும்; அவற்றுள்**
**சுட்டுச் சொல்முதல் சொல்லுதும் அன்றே.**

சொற்களைப் பற்றிய பொதுவான சில செய்திகளைக் கூறும் (முதற் பகுதி ஆகிய) பொது இயல்பை ஓரளவு சொல்லி நிறைவு செய்தோம். இனித் தொடர்ந்து பிரிவியல்பைக் கூறத் தொடங்குகிறோம்.அவற்றில் சுட்டுச் சொல்லை முதன்முதலில் விளக்கப் புகுகிறோம் என்றவாறு.

இந்நூற்பாவால் பொதுவியல்பை உரைத்தாம் எனத் தலைக்கட்டி, பிரிவியல்பு பேசுதும் என்ன நுதலிப்புக்கு, முதலில் சுட்டுச் சொல் உரைப்பாம் என்றார். இவ்வாறு அடுத்த இயல்பாகிய பிரிவு இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்டது. (181)

## II. பிரிவியல்பு

இவ்வியல்பு சொற்களைச் சுட்டு, பெயர், வினை, ஏவல், அமைதி, தன்மை, உரி, ஒப்பு, விளி, இரக்கம், வியன் முதலிய பலவாறாகப் பிரித்துக் கூறுதலின் பிரிவியல்பு எனப்பட்டது.

இலக்கண நூல்கள் யாவும் சொல் இலக்கணத்தில் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, உரி, இடை என்ற நால்வகையுள் அடக்கி, இருதிணை, மூவிடம், ஐம்பால், எட்டுவேற்றுமை முதலிய சொற்களுக்கே உரிய சிறப்பிலக்கணங்களைக் கூறும். ஆனால் இவர் சொற்களைப் பலவாறு பிரித்துக் கொண்டு ஒரு புதிய நெறியில் தம் போக்கில் செல்கிறார். சொல்லிற்கு வேண்டிய இன்றியமையாத சில இலக்கணங்கள் அறுவகை இலக்கணத்தில் இடம் பெறவே இல்லை. இங்குக் கூறப்படாததால் அவைகள் ஏழாமிலக்கணத்திலே இடம்பெற்றுள்ளன. இவர் சொற்களை மிகப்பலவாறாகப் பிரித்துக் காட்டினாலும்

அவை அனைத்தும் முன்னோர் மொழிந்த நான்கில் அடங்கி விடும் என்பது வெள்ளிடைமலை.

### 1. சுட்டுச் சொல்வகை

**17. அவன்இவன் எவன்எனும் ஆண்பாற் சுட்டும்,**
**அவள்இவள் எவள்எனும் பெண்பாற் சுட்டும்,**
**அ∴துஇ∴து எ∴துஎனும் அலிப்பாற் சுட்டும்**
**உலகம்முழுதும் ஒத ஒளிர்வன; அவற்றுள்**
**ஆய்தம் நடுவிலா அலிச்சுட்டு மிகுமே.**

அவன் இவன் எவன் என்னும் ஆண்பாற் சுட்டுச் சொற்களும், பெண்பாற் சுட்டுச் சொற்களாகிய அவள் இவள் எவள் என்பனவும், அஃது இஃது எஃது என்னும் அலிப்பாற் சுட்டுச் சொற்களும் மக்கள் அனைவரும் அறியும்படி விளங்குவன வாகும். இச் சொற்களுள் அலிப்பால்சுட்டு இடையில் ஆய்தம் பயிலாமல் அது, இது, எது என்ற வடிவிலேயே பெரும்பாலும் வழங்கப்பெறும் என்றவாறு.

''எகரம் முதல்நின்று பொதுப்படச் சுட்டி''[1] என்ற தம் கொள்கைக்கேற்ப எவன், எவள், எது என்ற சொற்களைச் சுட்டுச் சொல் ஆக்கினார். வடமொழியில் நபும்ஸகலிங்கம் என்பதற்கேற்ப இவர் இங்கு ஒன்றன்பாலை அலிப்பால் என வழங்குகிறார்.

எனினும் ஏழாமிலக்கணத்தே, ''ஆண்பெண் பலர்என ஒன்று பலஎன ஐம்பால் உள்ளன அருந்தமி ழிடத்தே''[2] என்றே சொல்லி அலிப்பால் என்ற குறியீட்டைக் கைவிட்டு விடுகிறார். (182)

**18. உவன்உவள் உதுஎனும் சுட்டுச் சொற்களும்**
**ஒவ்வோர் இடத்தே இளைத்துறல் உளவே.**

1 அறுவகை. 107
2 ஏழாம். 132

உவன், உவள், உது என்ற சுட்டுச் சொற்களும் இலக்கியத்தில் ஆங்காங்கு மிக அருகி வழங்குகின்றன என்றவாறு.

இவர் உகரத்தை நடுநிலைச் சுட்டு என்கிறார்.[1] அது மிக அதிகமாக வழக்காற்றில் இல்லாமல் மிக அருகியே வழங்கப் படுகின்றன என்கிறார். "பூணாரம் நோக்கிப் புணர்முலை பார்த்தான் உவன்"[2] எனவும், "பண்டாரம், காமன் படை உவள் கண் காண்மின்"[3] எனவும் எட்டுத்தொகை முழுவதிலும் இவ்விரு சொற்களும் ஒவ்வொரு இடத்தில் மட்டுமே பயின்று வந்துள்ளன. உது என்ற சுட்டு எட்டுத்தொகையில் மொத்தம் 8 இடங்களில் வந்துள்ளது. "உதுக்காண்"[4] "உதுவே"[5] "உது எம் ஊரே"[6] என்னும் மூன்று வடிவில் அச்சொல் பயின்றது.

சொற்களும் என்பதிலுள்ள உம்மை மூன்றையும் அடக்கிய முற்றும்மை. (183)

**19. அவன்இவள் எ∴துஎன்ற பகுதி மூன்றும்**
**ஒருமைச் சுட்டுச் சொற்கள்எனல் உறுதியே.**

அவன் முதலாகச் சொல்லப்பட்ட ஆண், பெண், அலிப்பால் சொற்கள் அனைத்தும் ஒருமைச் சுட்டுச் சொற்கள் ஆகும் என்றவாறு.

உரையிற் கோடலாக உவன், உவள், உது என்னும் முப்பாற் சொற்களும் ஒருமையே எனக் கொள்க. (184)

**20. ஆண்பால் பெண்பால் உயர்திணை என்பதும்**
**அலிப்பால் அ∴றிணை என்பதும் அழகே.**

---

1 அறுவகை. 106
2 பரிபாடல் 12-55
3 " 11-123
4 நற்றிணை 88-5; 329-9; குறுந். 81-4; 191-1; கலித். 108-39
5 " 96-3; ஐங்குறு. 415-2
6 குறுந்தொகை 179-3.

ஆண்பால் பெண்பால் ஆகிய சொற்கள் உயர்திணை என்றும் அலிப்பாற் சொற்கள் அஃறிணை என்றும் கூறப்படும் என்றவாறு. (185)

**21.** **ஒருமைப் பன்மையும் பன்மை ஒருமையும்**
**வழங்கல் உண்டு; உதாரணம் முருகர் என்னும்**
**ஒருசேய்ப் பெயரும், கடகம் என்னும்**
**பன்னிரண்டு யானைப் பெயரும் ஆமே.**

சிறப்புப்பற்றி வரும் ஒருமைப் பன்மையும், தொகுதியொருமையாக வரும் பன்மையொருமையும் வழக்கத்தில் உள்ளன. ஒரு சேயோன் ஆகிய தெய்வத்தை முருகர் என்பதுவும், பனிரெண்டு களிறுகளின் கூட்டத்தைக் கடகம் என ஒருமை வாய்பாட்டாற் கூறுவதும் இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு. (186)

**22.** **அவர்இவர் உவர்எவர் என்னும் சொற்கள்**
**உயர்திணை ஒருமைப் பன்மைச் சுட்டே**
**ஆகி, ஒவ்வோர் இடத்துஅப் பன்மையும்**
**ஆகும்; உதாரணம் அவர்ஞான பண்டிதர்,**
**இவர்தே வகியார் என்பவும், தனித்தனி**
**பன்னகர் வாணரும் கூண்டுள களம்புக்கு,**
**எவர்பொன் னூரவர் என்பதும் ஆமே.**

அவர், இவர், உவர், எவர் என்னும் சொற்கள் உயர்திணையில் பெரும்பாலும்(சிறப்புப் பற்றிய)ஒருமைப் பன்மையாகவே வரும். அவர் ஞான பண்டிதர், இவர் தேவகியார் என்பன இதற்கு உதாரணங்கள் ஆம். என்றாலும் அச்சொற்கள் சிற்சில இடங்களில் பன்மையாகவே வழங்கும். பன்நகர் வாணரும் கண்டுள களம்புக்கு, எவர் பொன்னூரவர் என்னும் இரண்டும் இதற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

உவர் என்ற சொல்லாட்சி அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. வாழ்நர் ஊரவர் என்ற சொற்களை உதாரணமாகக் காட்டலால் இந்நூற்பா இதில் கூறப்பட்ட நான்கு தனிச்

சொற்களுக்கேயன்றி உயர்திணைப் பன்மை விகுதியாகிய அர் என்பதற்கும் கொள்ளப்பட வேண்டுவதாகிறது. அர் விகுதிக்கு மேல் கள் விகுதி சேர்த்து வழங்கலே பெரும்பான்மையாகி விட்ட பிறகு எழுந்த நூல் இஃதாதலின் அவர் முதலியன பெரும்பான்மை ஒருமைப் பன்மையாகவே வரும் என்கிறார். ஆனால் பண்டைய நூல்களில் மிகப் பெரும்பான்மை பன்மை யாகவேதான் வருகின்றன. (187)

**23.** **அவர்கள் என்றிடல் ஆதிய சொற்கள்**
**உயர்திணைப் பன்மைச் சுட்டே ஆகி,**
**ஒவ்வோர் இடத்து அவ் வொருமைப் பன்மைச்**
**சுட்டும் ஆகும்; உதாரணம் சொல்லின்**
**வானவர்கள் என்பதும், மந்திரி அவர்கள்**
**என்பதும்; இவற்றுள் பின்மொழி போல்வன**
**வாசகம் நாடக வாய்பாட் டினவே.**

அவர்கள் என்பதைப் போன்ற (விகுதி மேல் விகுதி ஏற்ற) சொற்கள் பெரும்பாலும் உயர்திணைப் பன்மைச் சுட்டாகவே வரும். வானவர்கள் என்ற சொல் இதற்கு எடுத்துக்காட்டாம். எனினும் சிற்சில இடங்களில் மந்திரி அவர்கள் என்பதைப் போன்று ஒருமைப் பன்மைச் சுட்டாகவும் வரும். சிறப்புப்பற் றிய இத்தகைய ஆட்சியை (இயல், இசைத் தமிழ்களைக் காட்டி லும்) உரைநடையிலும் நாடகத் தமிழிலும் அதிகம் காணலாம் என்றவாறு.

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும், ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும் வழக்கின் ஆகிய உயர்சொல் கிளவி இலக் கண மருங்கில் சொல்லாறு அல்ல"[1] என்பது பற்றி வாசகம் நாடக வாய்பாட்டினவே என்றார். (188)

**24.** **இவைஎனல் ஆதியும் அவைகள் என்றிடல்**
**ஆதியும் அஃறிணைப் பன்மைச் சுட்டாம்;**
**இவற்றிற்கும் உதாரணம் இயம்பிடல் இழிவே.**

1 தொல். சொல், 27

இவை, அவை, எவை முதலியனவும், இவற்றோடு விகுதி மேல் விகுதியாகக் கள் சேர்ந்த சொற்களும் அஃறிணைப் பன்மைச் சுட்டுச் சொற்கள் ஆகும். இவைகளுக்கும் எடுத்துக்காட்டுகள் கூறினால் அது (கூறுபவர், படிப்பவர் ஆகிய இருபாலாருக்கும்) இழிவாகும் என்றவாறு.

இதுவரை நடந்த 188 நூற்பாக்களில் பற்பல முறை எழுத்துகள், சொற்கள், இவை, அன்னவை என்பன போன்றவை பயின்றிருத்தலின் இங்கே இவைகட்கு உதாரணம் இயம்பல் இழிவே என்றார். இஃதேயன்றி அஃறிணையில் வருகின்ற சொற்கள் இழிவானவை என்பது கருத்தன்று. (189)

**25. இன்னான் இன்னாள் இன்னதுஎனல் ஆதிய**
**குறிப்புச் சுட்டுச் சொல்எனல் குணமே.**

இன்னான் இன்னாள் இன்னது முதலிய சொற்களைக் குறிப்புச் சுட்டுச் சொல் எனக் கூறுதல் தக்கதாம் என்றவாறு.

இச்சொற்களால் பொருள் வெளிப்படையாக விளங்காமல் கூறுபவர் குறிப்பைக் கொண்டே உணர வேண்டிஇருத்தலின் குறிப்புச் சுட்டுச் சொல் எனப்பட்டது. (190)

**26. அங்ஙனம் அந்த அங்குஎனல் ஆதிய**
**மொழி, பொது, வயின்எனும் மூவகைச் சுட்டே.**

அங்ஙனம், அந்த, அங்கு என்பன போன்ற சொற்கள் முறையே கூற்று, பொது, இடம் என்பனவற்றைச் சுட்டும் மூவகைச் சுட்டுகளாம் என்றவாறு.

ஆதிய என்றது இங்ஙனம், இந்த, இங்கு, எங்ஙனம், எந்த, எங்கு என்ற மற்றவற்றை. அங்ஙனம் உரைத்தான் எனப் பெரும்பான்மை மொழிபற்றி வருதலாலும், அந்த மனிதன், அந்தப்பசு, அந்த நாள், அந்தக் கருத்து எனப்பொதுவாக அனைத்துப் பொருள் பற்றியும் வருவதாலும், அங்கு என்பது இடம் பற்றியே வருவதாலும் இவ்வாறு கூறப்பட்டது. இது இங்ஙனம் முதலிய மற்ற சொற்களுக்கும் பொருந்தும். (191)

**27. சுட்டுச் சொல்விதம் சொற்றனம்; இனிப்பெயர்ச்**
**சொல்விதம் பகருதும் சூழ்ந்த வாறே.**

இதுகாறும் சுட்டுச் சொற்களின் வகைகளைக் கூறினோம். இனித் தொடர்ந்து எம் ஆய்வின் வண்ணம் பெயர்ச்சொற்களின் விதங்களைக் கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவினால் சுட்டுச் சொல்வகை நிறைவு செய்யப் பட்டு இரண்டாவதாகிய பெயர்ச்சொல்வகைக்குத் தோற்று வாய் செய்து கொள்ளப்பட்டது. (192)

## 2. பெயர்ச்சொல் வகை

**28. இடுகுறி காரணம் எனும் இருவகைபெயர்;**
**வேல்எனல் வேலன் எனல்உதா ரணமே.**

பெயர்ச்சொற்கள் இடுகுறிப் பெயர் என்றும் காரணப் பெயர் என்றும் இருவகைப்படும். வேல், வேலன் என்ற சொற் கள் முறையே இவற்றிற்கான எடுத்துக்காட்டுகளாம் என்ற வாறு.

பிறர் மதம் பற்றி இவர் இந்நூற்பாவில் இடுகுறிப்பெயர் என்ற ஒன்றை ஏற்றுக் கொள்கிறார். ஆயினும் பெயர்கள் அனைத்தும் காரணம் பற்றியனவே என்பதுவும், காரணம் மறந்த பெயர்களே இடுகுறி ஆகின்றன என்பதுவும் இவர் கொள்கை. இதனை இவர், ''எவ்வகைப் பெயரும் இலங்குதென் பொதியைமால்வரைக்குவட்டின் மன்னும்மாதவன் அடியவர்க்கு அடிமை ஆவார் அகத்தில் காரணம் என்றே கவின்தரும்; அல் லார்க்கு அறிந்தமை காரணம் அறியாதன முற்று இடுகுறியாம் என்று இயங்குவனவே'' எனவும், ''அறிந்த காரணம் மறைந்து மற்று அவற்றை என்னிற் பெரியாரிடை வினாவு என்றற்கு ஒல்கிய குரவன் ஒருவன் முன்நாள் இடுகுறி எனும்பெயர் இகத்து அமைத்தனன்; அதைச் சிலர்அலாப் பலரும் செப்ப ஒப்பினரே''[1] எனவும் பிறிதோரிடத்தில் கூறுகிறார்.

---

14 ஏழா. இலக். 154. 155

வேல் இடுகுறிப் பெயர். வேலை உடையவன் வேலன் காரணப்பெயர் என இந்நூற்பாவில் பிறர்மதம் பற்றிக் கூறிய பின் தன் கொள்கையை அடுத்த இரு சூத்திரங்களில் கூறுகிறார். (193)

**29. பகாப்பதம் இடுகுறி; பகுபதம் காரணம்**
**என்பார் பற்பலர்; இடுகுறி எனலால்**
**அஃதும்ஓர் குறிப்பால் அவிர்தரும் எனலாம்;**
**அக்குறிப்பு அறிவோர் அகத்திய முனிவோன்**
**அடியவர் தாமே; ஆயினும் அவர்தாள்**
**மலர்தரும் மகரம் வாய்ந்த சென்னி**
**உடைமையின் களிப்பால் உரைக்குதும் இதற்கே.**

பகுக்கப்பட முடியாத சொற்கள் யாவும் இடுகுறிப் பெயர்கள் என்றும், பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிபடும் பதங்கள் யாவும் காரணப் பெயர்கள் என்றும் மிகப்பலர் கூறுவார்கள். இடுகுறி என்று கூறுவதனாலேயே அப்பெயரும் ஏதாவது ஒரு குறிப்புப் பற்றியே விளங்கி வருகிறது எனலாம். எந்தக் குறிப்பைக் கொண்டு அப்பெயர் வழங்கப்படுகிறது என்பதைப் பெரும்புலவர்களே அறிவர். எனினும் யாமும் அத்தகைய புலவர்களை வழிபடும் பெரும் பேறுடையோம் ஆதலின் முன் கூறப்பட்ட (வேல், என்ற) இடுகுறியும் காரணம் பற்றியதே எனக் கூறுவாம் என்றவாறு.

"பகுப்பால் பயன் அற்று இடுகுறியாகி முன்னே ஒன்றாய் முடிந்து இயல்கின்ற பெயர்வினை இடை உரி நான்கும் பகாப்பதம்", "பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர் பொழுது கொள் வினைபகுபதமே"[1] என்பனவற்றை நினைந்து கூறியது இது. ஓர் அடையாளமாக இடப்பட்ட பெயர் என்ற அளவிலேயே பவணந்தியார் இடுகுறி என்றார். ஆனால் இவ்வாசிரியர் குறி என்ற சொல்லிற்குக்

1 நன்னூல் 131, 132

காரணம் குறித்து வருவது எனப் பொருள் கொண்டு அஃதும் ஓர் குறிப்பால் அவிர்தரும் என்றார். அடுத்த நூற்பாவில் பொதுவாக இடுகுறி எனக் கருதப்படும் வேல் எவ்வாறு காரணப் பெயர் ஆகிறது எனக் கூறுகிறார். (194)

**30. வகரம் சத்தி; இல்எனல் உறையுள்;**
**வகரமும் இகரமும் வேயாம்; ஆதலின்**
**வேல்எனும் இடுகுறி விளங்கிற்று எனப்பலர்**
**கருத்துக் கிசையக் கருதுகின் றனமே.**

வகரம் சத்தியைக் குறிக்கும் எழுத்தாகும். இல் என்றால் வசிப்பிடம் என்பது பொருள். வகரமும் இகரமும் இணைந்தால் வே ஆகும். எனவே வ+இல் வேல் ஆயிற்று. வேல் என்ற சொல் சத்தியின் உறைவிடம் எனப் பொருள் தந்து காரணப் பெயர் ஆயிற்று. பலர் இவ்வாறே கருதுகின்றனர். யாமும் அக்கொள் கையையே ஏற்றுக்கொள்கிறோம் என்றவாறு.

திருவைந்தெழுத்தில் வகரம் சக்தியைக் குறிக்கும். "இறை சத்தி பாசம் எழில்மாயை ஆவி உறநிற்கும் ஓங்காரத் துள்"[1] என்பதனால் இது தெரியப்படும். "அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து எகரம் ஒலிக்கும்"[2] என்பது நன்னூல் விருத்தி. வ+இல்=வேல்=சக்தியின் உறைவிடம் எனக் காரணப்பெயர்.

இங்கு இவ்வாறு கூறிய இவரே ஏழாமிலக்கணத்தில் "வெல்லும் தன்மையில் வேல் என விளம்பினர்"[3] என்கிறார். அங்கே வெல் என்ற பகுதியில் இருந்து வேல் என்ற சொல் காரணப்பெயராயிற்று எனப்பட்டது. இவ்வாறு இவ்வொரே சொற்கு இவர் இரு காரணங்களைக் கூறுகிறார். (195)

**31. னகர ஒற்று ஈற்றுஉறும் ஆண்பாற் பெயர்மிகை;**
**பிரமன் பகவன் குகன்சிவன் எனவே.**

1 திருவருட்பயன் 82
2 நன்னூல் விருத்தி 125
3 ஏழா. இலக். 195

பெரும்பாலான ஆண்பாற் பெயர்கள் னகர ஒற்றைக் கொண்டு முடியும். பிரமன், பகவன், குகன், சிவன் என்பன உதாரணங்களாம் என்றவாறு.

மிகை என்றதனாலே சிறுபான்மை இவ்விதிக்கு விலக்கும் உண்டு என்பது பெறப்பட்டது. இது இந்நூல் 200, 204 ஆம் நூற்பாக்களில் கூறப்படும். (196)

**32. ளகரஒற்று ஈற்றுஉறு பெண்பாற் பெயர்அணி**
**உமையாள் கலைமகள் என்பவை ஒத்தே.**

ளகரஒற்றைத் தம் இறுதியாகப் பெற்று பெண்பாற் பெயர்களின் வரிசை உமையாள், கலைமகள் என்பவைகளைப் போன்றதாகும் என்றவாறு.

ஈற்றுஉறு அணி என்றதனானே உறாத அணியும் உண்டு என்பது பெறப்பட்டது. (197)

**33. ரகரஒற்று ஈற்றுஉறு பன்மைப் பெயர்இசைவு**
**அடியார் பாவலர் ஆம்இவை போன்றே.**

அடியார், பாவலர் என்பவைபோல உயர்திணைப் பன்மைப் பெயர்களுக்கு (பலர்பால்) ரகரமெய் கடைசியில் வருவது பொருத்தமாம் என்றவாறு.

இதற்கும் விதிவிலக்கு உண்டு. பின்னர் கூறப்படுகிறது. (198)

**34. இகரமும் உகரமும் ஐமுதல் பிறவும்**
**அலிப்பால் பெயர்ஈற்று அணுகுதல் அமைவாம்;**
**வாரிதி முத்து மஞ்ஞை என்பவும்**
**மரம்கல் ஆதியும் ஆம்எனல் வழக்கே.**

இ, உ, ஐ முதலிய மொழியீற்றெழுத்துகள் பலவும் அலிப் பால் பெயர்ச்சொல்லின் (ஒன்றன்பால்) கடைசியில் அமைதல் ஏற்புடைத்தே என்றவாறு. வாரிதி, முத்து, மஞ்ஞை, மரம்,

கல் போன்ற சொற்கள் இதற்கு உதாரணங்கள் ஆகும் என்ற வாறு.

பிறவும் என்று பொதுவாகக் கூறியதால் மொழியீற்று எழுத்துகள் அனைத்தும் கொள்ளப்பட்டன. கண், கோட்டான், காய், தளிர், தெவ், ஊழ், கவுள் எனப் பல்வேறு ஈறுகளும் வரையறையின்றி வரும். (199)

30. அஃறிணை போலும் உயர்திணைப் பெயர்கள்
சிவைதிரு கணபதிமால் எனல் பலவே.

சிவை, திரு, கணபதி, மால் போன்ற பல பெயர்கள் அஃறிணையைப் போன்ற (முறையே ஐ, உ, இ, மெய் ஈற்றைப் பெற்ற) உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

எனவே சொற்களின் ஈற்றை மாத்திரம் கொண்டு பெயர்களின் திணை, பால் வகுக்க முடியாது என்றாராயிற்று.பெரும்பான்மையான சொற்கள் பொதுவாக இந்த இந்த ஈற்றைக் கொண்டு விளங்குகின்றன எனக் கூறப்படுகின்றனவேயன்றி இவையே வரும் என விதி வகுக்கப்படவில்லை. (200)

36. உயர்திணைப் பன்மை போலும் அஃறிணை
உம்பரும் செக்கரும் இடங்கரும் அனையவே.

உம்பர், செக்கர், இடங்கர் போன்ற அஃறிணைப் பெயர்கள் (ரகர மெய்யை ஈறாகப் பெற்று) உயர்திணைப் பன்மைப் பெயர் போன்று (பலர்பால்) விளங்குகின்றனஎன்றவாறு.
இடங்கர்-முதலை (201)

37. முப்பாற் பொதுப்பெயர் மூர்த்தி ஆ தியவே

மூர்த்தி போன்றசில பெயர்கள்ஆண், பெண் அலி ஆகிய மூன்று பால்களிலும் பொதுவாக வழங்கப்படும் என்றவாறு.

இராமமூர்த்தி, சீதை கருணாமூர்த்தி, அது அநுமனின் சிலாமூர்த்தி என முப்பாலிலும் வருதல் காண்க. (202)

**38. ஆண்பால் போலும் அஃறிணைப் பெயர்கள்**
**கலன்புலன் ஆதிய கணக்குஇலா தனவே.**

ஆண்பால் ஒருமையைப் போன்று னகர மெய்யால் முடியும் கலன், புலன் முதலிய எண்ணற்ற சொற்கள் வழக்கில் உள்ளன என்றவாறு. (203)

**39. ஒன்றன் பெயர்மற் றொன்றுஎனக் காட்டும்**
**பெயர்மா றாட்டம் அனைத்தும் பெரியோர்**
**பால்அடைந்து உணர்ந்து பகர்வது முறையே.**

ஒரு பாலுக்குரிய பெயர்ச்சொல் (தன் ஈற்றெழுத்தால்) வேறொரு பாலுக்குரியதாகக் காட்சியளிக்கும். இவ்வேறுபாடுகளை எல்லாம் கல்வியில் தம்மினும் பெரியவர்களை அணுகி அறிந்து பயன்படுத்த வேண்டும் என்றவாறு.

இவர் அன், அள், அர் போன்ற "பெயரினும் சிலவாம் வினையின் விகுதி"[1] களைக் கொள்ளாமல் ஈற்றெழுத்தை மட்டுமே கொள்வதால் 200, 201, 203 ஆகியவற்றுடன் இந்நூற்பாவும் வேண்டப்பட்டது. இவர் மாணவர் உய்த்து உணர்ந்து கொள்ளுமாறு விதிகளைச் செய்யாமல், "புலவரும் மயங்கும் புன்மை சான்ற சூத்திரம் புகன்று துவக்குறப் படுத்தாது இன் சுவைப் பாளிதம் எனத்தகு பாவால் தெளியுமாறு தெரிக்க"[2] விரும்புவதால் 204 ஆம் நூற்பாவே போதுமானதாயிருக்க 200, 201, 203 ஆகிய தனித்தனி நூற்பாக்களையும் செய்தார்.

| | | |
|---|---|---|
| சிவை, உமை | - | அஃறிணை போன்ற உயர்திணைப் பெண்பால்சொற்கள் |
| கணபதி, மால் | - | அஃறிணை போன்ற உயர்திணை ஆண்பால் சொற்கள் |

1 நன்னூல் 140 2 ஏழா. இலக். 6

உம்பர், இடங்கர் - உயர்திணைபோன்ற அஃறிணை ஒருமைச் சொற்கள்

கலன், புலன் - உயர்திணை ஆண்பால்போன்ற அஃறிணைச் சொற்கள்

உறையுள், கள் - உயர்திணை பெண்பால்போன்ற அஃறிணைச்சொற்கள்.

இவ்வறுவகையிலக்கணம் பெரிதும் பள்ளிச் சிறார்களின் தகுதியில் உள்ள மாணவர்களை நினைந்தே செய்யப்பட்டமையில் பொருள் அறிந்து திணை, பால் காண்க என்னாது பெரியோர்பால் அடைந்து தெளிக என்றார். (204)

**40. பெயர்ச்சொல் ஒருவாறு பேசினம்: வினைச்சொல்**
**அறிந்த வாறுஈண்டு அறைகுதும் அன்றே.**

பெயர்ச்சொற்களைப்பற்றிய சில செய்திகளை இதுவரை உரைத்தாம். இனி அடுத்து வினைச்சொற்களைப்பற்றி யாம் அறிந்தஅளவு கூறுவாம் என்றவாறு.

இச்சூத்திரத்தால் பெயர்ச்சொல்வகை என்னும் இப்பிரிவு நிறைவுசெய்யப்பட்டு மூன்றாவதாகிய வினைச்சொல்வகைக்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்டது. (205)

## 3. வினைச்சொல் வகை

**41. உண்டல் உறங்கல் போதல் வரல்முதல்**
**அனையன பிறவும் பொதுவினை யாமே.**

உண்டல், உறங்கல், போதல், வரல் போன்றுள்ள சொற்கள் அனைத்தும் பொதுவினைகளாம் என்றவாறு.

இங்குக் காட்டப்பட்டுள்ள சொற்களைப் போன்றவை அனைத்தும் திணை, பால், இடம், காலம் போன்றவைகளைக் காட்டாமல் தொழிலை மட்டும் உணர்த்தி நிற்றலின் பொது வினை என்றார். இலக்கணத்தில் இவை தொழிற்பெயர் எனப்

படும். இச்சொற்களை இவர் வினை எனினும், உண்டலை விரும்பான், உறங்கல் நன்று என்பனபோல் இவை பெயர்ச் சொற்களாகவே ஆளப்பெறும்.

தமிழ் இலக்கண மரபின்படி பொதுவினை என்ற குறியீடு தொழிற்பெயரை உணர்த்தாமல் தன்வினை, பிறவினை ஆகிய இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும் வினைகளைக் குறிக்கும். எனவே இப்பெயராட்சி இந்நூலிற்கே உரியது. (206)

**42. வந்தேன் இருந்தேன் என்பவை முதலின**
**தன்வினை ஆம்எனச் சாற்றுதல் வழக்கே.**

வந்தேன் இருந்தேன் என்பனவற்றைப் போன்ற வினைச் சொற்களைத் தன்வினை எனக்கூறுதல் மரபாம் என்றவாறு (207)

**43. வைதான் என்பதும், சிரித்தாள் என்றலும்,**
**ஓடியது என்கையும், அன்னவை பலவும்**
**முப்பாற் பிறவினை ஆம்எனல் முறையே.**

வைதான், சிரித்தாள், ஓடியது ஆகிய சொற்களும் இவை போன்ற பிறவும் (முறையே ஆண், பெண், அலி ஆகிய) முப்பால் பிறவினைகள் ஆகும் என்றவாறு.

பிறவினைச் சொற்களுக்கு மட்டும் பால்வரையறை காட்டியதால் தன்வினைச் சொற்களில் அது தெரியாது என்பது பெறப் பட்டது. (208)

**44. போயினன் என்றிடல் ஆதிய பிறவினை**
**ஆயினும் தன்வினை ஆதலும் உடைத்தே.**

போயினன் என்பதைப் போன்ற வினைகள் பெரும்பாலும் பிறவினையே ஆயினும், சிற்சில இடங்களில் தன்வினையாக வருதலும் உள என்றவாறு.

"கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்"[1] எனத் தன்வினையாகவும், "கண்டனன் அநுமனும் கருத்தும் எண்ணி னான்"[2] எனப் பிறவினையாகவும் வந்தமை காண்க. (209)

**45. போன செய்த வைத்த எனல்ஆதிய**
**வினைமுற்று இறந்த காலம் தழுவுமே.**

போன, செய்த, வைத்த என்பனவற்றைப் போன்ற சொற்கள் இறந்தகால வினைமுற்றுகளாம் என்றவாறு.

இவை செய்த என்னும் வாய்பாட்டுப் பெயர் எச்சங்கள் ஆவதன்றிப் பசுக்கள்போன, பறவைகள் ஒலித்த எனச் சிறுபான்மை பலவின்பால் இறந்தகால வினைமுற்றாகவும் ஆளப்படுதலின் ஈண்டு எடுத்துக் காட்டினார். இவற்றைப் போயின, செய்தன, வைத்தன என்பனவற்றின் விகாரமெனக் கொள்ளினும் ஆம். (210)

**46. ஆகின்ற அழிகிற எனும்இவை அனையவை**
**நிகழ்கா லத்தொடு கூடிநின் றனவே.**

ஆகின்ற, அழிகிற போன்ற சொற்பகுதிகள் (எச்சம், முற்று என்ற இரண்டு வகையிலும்) நிகழ்காலத்தைக் காட்டுகின்றன என்றவாறு.

முன்நூற்பாவைப் போன்று முற்று எனத் திட்டமாகக் கூறாது இது எச்சம், முற்று ஆகிய இரண்டிற்கும் பொது என உணர வைத்தார். ஆகின்ற போன்றவைகள் அப்படியே முற்றுச் சொல்லாக அமையாமல் ஆகின்றவன், அழிகிறது என விகுதி பெற்றே முற்றாதலின் உரையில் சொற்பகுதிகள் எனப்பட்டது. இதில் ஆநின்று, கின்று, கிறு எனும் நிகழ்கால இடைநிலை களில் கின்று, கிறு என்னும் இரண்டும் காட்டப்பட்டன. (211)

**47. பிறக்கும் பேசும் பிணங்கும்எனல் ஆதிய**
**எதிர்கா லத்தோடு இசைந்துநிற் பனவே.**

---

1 கம்பர். சுந்தர. திருவடி தொழுத. 25
2 ,, ,, உருக்காட்டு. 22

பிறக்கும், பேசும், பிணங்கும் என்பதைப் போன்ற சொற்கள் (எச்சமாகவும் முற்றாகவும்) எதிர்காலத்தைக் காட்டும் என்றவாறு. (212)

**48. சொல்லி நின்று வந்துஎனல் ஆதிய**
**மற்றும்ஓர் வினையை வருவிக்கும் ஆதலின்**
**வினையெச்சம் ஆம்என விளம்பிடல் இயல்பே.**

சொல்லி, நின்று, வந்து என்பனவற்றைப் போன்ற சொற்கள் தம் பொருளை முற்றுவிக்க வேறு ஒரு வினைச் சொல்லினை வேண்டி நிற்கும் ஆதலின் இத்தகையவை வினையெச்சம் எனக் கூறப்படும் என்றவாறு. (213)

**49. ஈகை ஆதிய நல்வினை; ஏற்கை**
**ஆதிய தீவினை அறிஞராம் அவற்கே.**

பிறருக்கு அளித்தல் முதலியன நல்வினைகளாம். பிறரிடம் ஏற்றல் முதலியன தீவினைகளாம். இவற்றை அறிஞர்கள் அறிவர் என்றவாறு.

நல்வினை, தீவினை என்பன பொருளுலகில்தான் உண்டு. இலக்கணமாகிய சொல்உலகில் (சப்தப்பிரபஞ்சம்) வினைச் சொற்களில் நல்லவை, தீயவை என்ற பாகுபாடு கிடையாது. இலக்கணப் பிழையில்லாமல் ஆளப்பட்டால் கொல்லுதலும், கொன்றதைத் தின்னுதலும் கூட நல்ல வினைச்சொற்களே. இவர் இலக்கணத்தோடு நீதியும் புகட்டுவான் வேண்டி இந்நூற்பாச் செய்தார். (214)

**50. வினைச்சொல்இவ் வண்ணம் விளம்பினம் இனிப்பாத்**
**தொறும்ஒரு வகைச்சொற் சொல்லுதும் அன்றே.**

வினைச்சொற்களைப்பற்றி இதுகாறும் சொன்னோம். இனித் தொடர்ந்து நூற்பாவுக் கொன்றாகப் பலவகைச் சொற்களைப் பற்றிக் கூறுவாம் என்றவாறு.

இச்சூத்திரத்தால் வினைச்சொல்வகை முடிக்கப்பட்டு இவ் வியல்பின் இறுதிப் பகுதியாகிய பல்வகைச் சொற்களுக்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படுகிறது. (215)

## 4. பல்வகைச் சொற்கள்

**51. செய்போ நில்எனல் ஆதிய யாவும்**
**ஏவற் சொற்கள்என்று இயம்புதல் இயல்பே.**

செய், போ, நில் என்பன போன்ற கட்டளைவினைகள் அனைத்தும் ஏவற்சொற்கள் என்றுகூறப்படும் என்றவாறு.(216)

**52. வளர்ச்சி தளர்ச்சி அகலம்எனல் ஆதிய**
**அமைதிச் சொல்என்று அறைவது முறையே.**

வளர்ச்சி, தளர்ச்சி, அகலம் போன்ற சொற்கள் ஒரு பொருளின் அமைப்பைக் குறிப்பிடுவதால் இவை போன்ற வற்றை அமைதிச் சொற்கள் எனலாம் என்றவாறு.

அமைதிச்சொல், தன்மைச்சொல், ஒப்புச்சொல், இரக்கச் சொல், கூட்டும் சொல், வியன் சொல், வெறுப்புச் சொல் என்றெல்லாம் இவர் பிரித்துப் பிரித்துக் கூறுவது அவற்றின் பொருள் வேறுபாடு காட்டவே ஆகும்.இவைகள் கருவியாகவோ விதியாகவோ அமைந்து இலக்கணத்திற்குப்பயன்படுவதில்லை. பெயர், வினை,இடை, உரி என்ற முறையான பகுப்பில் இவை யனைத்தும் அடங்கிவிடுகின்றன. (217)

**53. இனிப்பு புளிப்பு கசப்பு கோபம்**
**சாந்தம்எனல் ஆதிய தன்மைச் சொல்லே.**

இனிப்பு, புளிப்பு, கசப்பு, கோபம், சாந்தம் என்பன போன்ற சொற்கள் ஒன்றன் குணத்தைக் குறித்தலால் இத் தகையன தன்மைச் சொற்கள் எனப்படும் என்றவாறு. (218)

**54. உறுஎனல் ஆதிய உரிச்சொல் ஆமே.**

உறு என்பதைப் போன்ற சொற்கள் உரிச்சொற்கள் ஆம் என்றவாறு.

ஒரு பொருளின் மிகுதியை உணர்த்தும் உறு என்ற சொல்லைப் போன்று பொருட்கு உரிமை பூண்டு நிற்கும் சொற்கள் உரிச்சொல் எனப்படும். (219)

**55. ஓம்எனல் ஆம்எனல் ஆதிய ஒப்புச்**
**சொற்கள் ஆம்எனத் துணிவார் புலவோர்.**

ஓம், ஆம் போன்ற சொற்கள் பிறர் கூறுவனவற்றிற்கு உடன்படுவோர் பயன் படுத்தும் ஒப்புச்சொற்கள் ஆகும் என்றவாறு.

இங்குக் கூறப்படும் ஒப்புச்சொல் என்பது உடன்பாட்டுப் பொருளில் ஆளப் பட்டது. உவமைப் பொருளில் அன்று. (220)

**56. ஏஎனல் ஆதிய விளிச்சொல் ஆமே.**

ஏ என்பதைப் போன்ற சொற்கள் பிறரை அழைக்கும் விளிச்சொற்கள் ஆம் என்றவாறு. (221)

**57. ஐயோ என்றிடல் ஆதிய சிற்சில**
**இரக்கச் சொல்உள என்பது முறையே.**

ஐயோ என்பதைப் போன்ற இரக்கத்தைக் குறிக்கும் சொற்கள் சிலவும் வழங்கி வருகின்றன என்றவாறு. (222)

**58. கூகூ எனல்பலர்க் கூட்டும் சொல்லே.**

கூகூ என்பது ஓரிடத்தில் பலரைக் கூட்டுவிப்பதற்குரிய சொல் ஆகும் என்றவாறு. (223)

**59. ஆஒ என்றிடல் வியன்சொல் ஆமே.**

ஆ ஓ என்னும் ஓரெழுத்தொருமொழிகள் பெரும்பாலும் வியப்பைக் காட்டுவன என்றவாறு.

ஆ வலிக்கிறது, ஓ கொடிது என இவை துன்பம், இரக்கம் பற்றியும் வருமாதலின் உரையில் பெரும்பாலும் எனப்பட்டது. (224)

**60. சீஎனும் வெறுப்புச் சொல்முதல் தேடி,**
**எம்மொழி யோடும் இம்மொழி எனல்போல்**
**வருதுணைச் சொல்வரை வகுத்துக் கூறினும்**
**கழகத்து அன்றுஇடைக் காடன் கழறும்**
**சொல்முதல் எழுதொணா தனசில துலங்கும்;**
**அன்றியும் கடல்நீர் அளக்கை போலாம்**
**ஆதலில் பிரிவுஇயல்பு இம்மட்டு அடக்கித்**
**தள்ளரும் சார்புஇயல்பு அறைகுதும் சற்றே.**

சீ எனப்படும் வெறுப்புச் சொல்முதல் ஒவ்வொன்றாகத் தேடி, எம்மொழியோடும் இம்மொழி என்பதுபோல் இணையாக வருகின்ற துணைச்சொற்கள்வரை எடுத்துப் பலவாறாக வகைப்படுத்தி உரைத்தாலும் கடைச்சங்கத்தில் முன்னாளில் இடைக்காடன் பாடிய பாட்டில் இடம் பெற்றதும் வரிவடிவம் காட்ட முடியாததுமாகிய சொல்லைப் போன்ற சில எஞ்சும். அன்றியும் இம்முயற்சி கடல்நீரை முகத்தலளவையால் அளக்க முற்படுவது போலாகும். ஆதலால் பிரிவியல்பாகிய இப் பகுதியை இத்துடன் முடித்துக் கொண்டு இன்றியமையாததாகிய சார்பியல்பைச் சற்றுக் கூறுவாம் என்றவாறு.

எம்மொழியோடும் இம்மொழி என்புழி, எம், இம் என்ற இரண்டும் இணைந்துநின்று பொருள்தருதலின் இவை போன்றவற்றைத் துணைச்சொற்கள் என்றார். இடைக்காடர் பாடலாக வழங்கப்படும் பாடல்கள் வருமாறு:-

ஆற்றங் கரையின் அருகிருக்கும் மாமரத்தில்
காக்கை இருந்து கஃகஃகெனக்-காக்கைதனை

எய்யக்கோல் இல்லாமல் இச்சிச்சிச் என்றானே
வையக்கோ னார்தம் மகன்.[1]

மன்றலங் கோதை மலர்மலைந் தஃகுவஃ
கென்று திரியும் இடைமகனே-சென்று
மறியாட்டை யுண்ணாமை வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணாக்கு மாறு.[2]

இந்நூற்பாவால் சொல்லிலக்கணத்தின் இரண்டாம் இயல்பு ஆகிய பிரிவு இயல்பு நிறைவு செய்யப்பட்டு அடுத்ததாகிய சார்பியல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படுகிறது. (225)

## III. சார்பியல்பு

இவ்வியலுள் சில விகுதிகள், அசை, சாரியை, போலி, உவமை, மங்கலம், யாப்பிலக்கண வாய்பாடு, புதுமொழியாக்கம் பற்றிய பல்வகைச் செய்திகள் கூறப்படும். இவை பெரும்பாலும் சொற்களைச் சார்ந்து வருதலால் சார்பியல்பு எனப்பட்டது. எழுத்திலக்கணத்தில் இடம்பெறவேண்டிய போலி, யாப்பிற்குரிய வாய்பாடுகள், பாட்டியல் கூறும் மங்கலச் சொல் போன்ற பலவும் இவ்வியல்பினுள் இடம் பெற்றுள்ளன. மங்கலச் சொல் என்பது ஒரு பனுவலின் முதற்சொல்லை வைத்துக்கொண்டு பார்ப்பது; ஆதலின் ஓரளவு அது இங்கு இருத்தல் அமைவுடைத் தாம். முன் இயல்பில் பலவகைச் சொற்களைச் கூறியவர் உவமைச்சொல்லை அங்கே கூறாமல் இங்கே ஏன் சொல்கிறார் என்பது விளங்கவில்லை. பொதுவாக இந்நூலின் அமைப்பு முறை சரியான இலக்கணக் கட்டுக்கோப்புடன் அமையாமல் உதிரிக் கருத்துகளின் தொகுப்பாகவே பற்பல இடங்களில் காணப்படுகிறது. இவ்வியல்பு 25 நூற்பாக்களைக் கொண்டு உட்பிரிவுகளின்றி விளங்குகிறது.

**61. ஆன்அன் ஆள்அள் ஆம்அம் ஏன்ஏம்**
**உம்ஓம் கின்ற கிறமுதல் பல்வகை**

---

1 பெருந்தொகை 1424  2 பெருந்தொகை 1425

**விகுதிகள் மேலோர் விதித்த வாறே**
**உலகர்வாய் மொழியினும் சார்தரல் உளவே.**

ஆன்,அன்,ஆள்,அள்,ஆம்,அம்,ஏம்,ஏன், உம்,ஓம், கின்ற,கிற என்பன முதல் பலவகையான விகுதிகள் முன்னோர் இலக்கணங்களில் வகுத்துள்ள வண்ணமே மக்களின் பேச்சு வழக்கினும் வழங்கி வருகின்றன என்றவாறு.

வந்தான், வந்தனன் - ஆண்பாற் படர்க்கை விகுதி. (ஆன்,அன்)

கண்டாள், கண்டனள் - பெண்பாற் படர்க்கை விகுதி (ஆள்,அள்)

வருவேன் - தன்மை ஒருமை விகுதி (ஏன்)

நடப்பாம், நடப்பம் - தன்மைப் பன்மை விகுதி (ஆம், அம்)

வருவேம் - தன்மைப் பன்மை விகுதி (ஏம்)

உண்டும் - தன்மைப் பன்மை விகுதி (உம்)

கண்டோம் - தன்மைப் பன்மை விகுதி (ஓம்)

கின்ற, கிற இணைந்த சொற்களை இவர் 211 ஆம் நூற்பாவில் காட்டினார். இலக்கண நூலாசிரியர்கள் கின்று, கிறு என்பனவற்றை நிகழ்கால இடைநிலைகள் எனவே விளக்குவர். இவ்விடைநிலைகளோடு விகுதிபுணர்ந்தே கற்கின்றவன், பாடுகிறவள் என முற்று ஆகும். கற்கின்ற மாணவன், பாடுகிற மங்கை எனப் பெயரெச்சமாக வரும்போதும் அகரமாகிய தெரிநிலைவினைப் பெயரெச்சவிகுதி புணர்ந்தே வரும். ஆனால் இவர் கின்று, கிறு என்பதற்குப் பதில் கின்ற கிற எனக் கொண்டு விகுதி என்கிறார். இக்கருத்து பொருத்தமுடையதாகத் தெரியவில்லை.

இந்நூற்பாவில் தமிழில் உள்ள முப்பத்தேழிற்கு மேற்பட்ட விகுதிகளில் பத்து விகுதிகளும், கின்ற, கிற என்பவை விகுதிகளாகவும் கூறப்பட்டன. அர், ஆர்,து,அ,க,ய போன்ற பிற விகுதிகள் ஏழாமிலக்கணத்துள் இடம் பெற்றுள்ளன. (226)

**62. அம்மா அந்தோ மாதோ கொல்ஆல்
ஐஇல் இன்ஏ ஓஅன்று அரோஎனப்
பன்மொழி ஈற்றினும் இடையினும் வரும்இவை
அசைகள் ஆம்என்று அறைந்திடல் முறையே.**

அம்மா, அந்தோ, மாதோ, கொல், ஆல், ஐ, இல், இன், ஏ, ஓ, அன்று, அரோ எனப் பலமொழிகளால் அமைந்த தொடரின் கடைசியிலும் நடுவிலும் இடம் பெறுகின்ற சொற்களை அசைச் சொற்கள் என்றல் மரபு என்றவாறு.

சிற்சில இடங்களில் இவைகள் பொருள் உணர்த்தலை அடுத்த நூற்பாவில் கூறுகின்றார். (227)

**63. அசைகளில் சிற்சில மொழிகளின் ஈற்றுஉற்று
ஒவ்வோர் விதப்பொருள் உணர்த்தல்உண்டு; அவற்றை
வேற்றுமை இனம்என விளம்புநர் சிலரே.**

அசைகளில் சில, பதங்களின் கடைசியில் பொருந்தி, சில விதமான பொருள்களை உணர்த்தும். சிலர் அத்தகைய மொழி களை வேற்றுமை உருபுகளுக்கு இனமானவை எனக் கொள்வர் என்றவாறு.

அசை என்ற சொல் இலக்கணத்தில், தனக்கென வேறு பொருளின்றிப் பெயர் வினைகளுடன் சார்த்திச் சொல்லப் படும் அசைநிலையையே குறிக்கும். ஆனால் இவர் அசைகள் என்ற சொல்லை இடைச்சொற்கள் என்ற பொருளில் ஆள்கிறார் என்றே தோன்றுகிறது. ஏனெனில் அறுவகை இலக் கணம் முழுவதிலும் இடைச்சொல் என்ற பெயரே இடம் பெறவில்லை. ஆனால் ஏழாமிலக்கணத்தில் இடைச்சொல் இயல்பு என்றே ஓர் பிரிவு உள்ளது. வேற்றுமை என்றது வேற்றுமை உருபுகளை. அவைகள் அசைகளின் இனம் என்ப தால் இவ்வெண்ணம் உறுதிப்படுகிறது. முன் நூற்பாவில் ''பன் மொழி ஈற்றினும், இடையினும் வரும்'' என்றது வாக்கியங் களின் இடையிலும் இறுதியிலும் என்ற பொருளில். இந்நூற்பா வில் கூறப்பட்டது, தனிமொழியின் இறுதியில் வரும் என்பது.

தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எச்சம் போன்ற இடைச்சொற்களின் பொருள்கள் அனைத்தும் இந்நூற்பாவி னால் அமைத்துக் கொள்ளலாம். (228)

**64. சிற்சில விகுதிகள் சாரியை என்று,**
**ஐஔ இரண்டையும் இயங்குமாறு ஈரிரு**
**பொறிகளா வரைதரல் போலி என்றும்**
**கேட்டமட் டறிவார் கிளத்தல்உண்டு; அவற்றிற்கு**
**இன்னுமோர் வகைப்பெயர் இடினும் என்எனும்**
**உரத்தினர் எம்உயிர்க்கு உறுதுணை ஆமே.**

சிற்சில விகுதிகளைச் சாரியை என்றும், ஐஔ என்ற இரண்டு எழுத்துகளையும் முறையே அய், அவ் என எழுதுதல் போலி என்றும் பலவாறு அறிஞர்கள் கூறுவார்கள். இவை களுக்கு இவ்வாறன்றி வேறு வகையாகப் பெயர் 'இட்டுரைப் பினும் தவறு என்ன எனக் கேட்கும் நெஞ்சுரம் உடையவர்கள் எனக்கு இனிய துணையாவர் என்றவாறு.

கரம், காரம், கான் முதலிய எழுத்துச் சாரியை இங்கே குறிப்பிடப்பட்டன. ஏனெனில் அவையே விகுதிகளைப் போன்று ஒரு சொல்லின் ஈற்றில் பயிலப்படுகின்றன. ஐ, ஔ என்பன வற்றுள் முறையே யகர வகர ஒலிகள் திகழ்வதை இவர் முன் எழுத்தில் (நூற்பா 119) கூறினார். இத்தகைய குறியீடுகளால் பெரும்பயன் இல்லை என்ற ஆசிரியர் கருத்தே இந்நூற்பாவின் பிற்பகுதியால் வெளியாகிறது. (229)

**65. ஒத்தல் உறழ்தல் கடுத்தல் போலல்**
**நிகரல் புரைதல் நேரல் மானல்**
**அன்னவை உவமைச் சார்புஎன லாமே.**

ஒத்தல், உறழ்தல், கடுத்தல், போலல், நிகரல், புரைதல், நேரல், மானல் போன்றவைகள் அனைத்தையும் உவமையைச் சார்ந்த சொற்கள் எனலாம் என்றவாறு.

இந்நூற்பா உவம உருபுகளை உணர்த்துகிறது. (230)

66. மகிதலம் புகழ்மொழி அனைத்தும் மங்கலச்
சார்பே; நூல்முகம் தனில்உறத் தகும்எனில்
தமிழின்வித்து அனையவர் தணவார் அன்றே.

"உயர்ந்தவர்களால் போற்றப்படுகின்ற சொற்கள் யாவுமே மங்கலத்தன்மை வாய்ந்தவை. எனவே அவை ஒரு நூலின் முதற்சொல்லாக இருக்கும் தகுதி வாய்ந்தனவே" என்றால் தமிழ்மொழியின் சாரத்தை அறிந்த அறிஞர்கள் அதை மறுக்க மாட்டார்கள் என்றவாறு.

பாட்டியல் நூல்கள் நூல் முகப்பில் குறிப்பிட்ட சில சொற்களே வர வேண்டுமென்று வரையறை செய்துள்ளன. அக் கோட்பாட்டை மறுக்கும் முகத்தால் உயர்ந்தவர்களால் ஆளப் படுகின்ற சொற்கள் அனைத்தும் மங்கலச் சொற்களே என வலியுறுத்துகிறார். இதே கருத்து மறுபடியும் 233 ஆம் நூற்பா வில் தெளிவாக அநுவதிக்கப்படுகிறது.

இங்கு மகிதலம் என்னும்சொல் ஆகுபெயராக உயர்ந் தோரை உணர்த்திற்று-சொற்களின் தகுதி உணர்ந்தோர் அவரே ஆதலின். (231)

67. மங்கலச் சொல்லின் எழுத்துமூன்று ஐந்துஏழ்
ஆகியும், ஈறு திரியாதும் அவிர்தரல்
இனிதே; பிறழினும் எள்ளார் புலவர்.

ஓர் இலக்கியத்தின் முதற் சொல்லாகவரும் மங்கல மொழி மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றைப்படை எழுத்துகளைக் கொண்டதாகவும், புணர்ச்சியால் ஈறு திரியாததாகவும் இருந் தால் சிறப்பாம். அவ்வாறு அமையாவிடினும் அறிஞர்கள் இகழ மாட்டார்கள் என்றவாறு.

பண்டைக் காலத்தில் இல்லாமல், இடைக் காலத்தில் தோன்றி, இந்நூலாசிரியர் காலத்தே ஓரளவு காலூன்றிவிட்ட பாட்டியல் நூற்கருத்துகளை முற்றிலும் ஒதுக்காமலும் அப் படியே ஏற்றுக் கொள்ளாமலும் இடைப்பட்ட ஒரு வழியைக்

கைக்கொள்கிறார். மங்கலச் சொல்லிற்கு எழுத்து வரையறை கட்டாயமில்லை; ஆனால் இருந்தால் சிறப்பு என்கிறார்.(232)

**68. அடல்மிகும் மடங்கல் அன்னசீர்ப் புலவர்**
**வைத்தசொல் அனைத்தும் மங்கலம் ஆமே.**

(தலைமையை உடைய) வலிமைமிக்க சிங்கம் போன்ற புலவர்கள் தங்கள் நூன்முகத்தில் வைத்த சொற்கள் யாவும் மங்கல மொழிகளே என்றவாறு.

விலங்கினத்துள் எங்ஙனம் சிங்கம் தலைமைஉடையதோ அங்ஙனம் புலவரவையில் தலைவராயிருக்கத் தகுதியுடையவர்கள் மடங்கல் அன்ன சீர்ப்புலவர் எனப்பட்டனர். சீர் இங்குத் தலைமை. (233)

**69. நூற்பெயர் முதல்மொழி பாட்டுடைத் தலைவன்**
**குலம்பெயர் நாள்கோள் ஆதிய குறிக்கும்**
**பொருத்தம் சொற்சுவை புகுதாச் செவிக்கும்**
**மழைஎனப் பொழியா வாய்க்கும் வேண்டும்;**
**ஆயினும் அவற்றுட் சீரிய தாய**
**ஒருவிதம் உரைக்குதும் உலகின் பொருட்டே.**

மேகம் மழை பொழிவதைப் போன்று கவி பொழியத் தெரியாத புலவனோடு கவிதையின் சொற்சுவை, பொருட்சுவைகளை உணர்ந்து துய்க்க இயலாத சுவைஞரே நூற்பெயர், நூலின் முதல் சொல்லாகிய மங்கல மொழிக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் குலம், பெயர், உடு, கிரகம் ஆகியவற்றால் அமைகின்ற பொருத்தம் முதலியவைகளை வேண்டுவர். எனினும் அத்தகைய பொருத்தத்தில் ஒன்றை மட்டும் உலகினருக்காகக் கூறுவாம் என்றவாறு.

பாடாப்புலவரும், அறியாச்சுவைஞரும் வேண்டுவர் என்றதனானே பெரும்புலவரும், நல்ல இரசிகரும் வேண்டார் என்பது பெறப்பட்டது. இங்கும் பாட்டியல் கருத்துகளைப் புறக்கணித்தலும் பிறகு ஒருவாறு தழுவிக்கொள்ளலும் என்ற நிலையைக்

காண்கிறோம். உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டிய கடப் பாடுடைமையின் அவர் பொருட்டே உரைக்குதும் எனக் கொள்க. ஏகாரம் பிரிநிலை. இது எம் கொள்கையன்று உலகினர் கொள்கை என்றபடி.

பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் "பூமா திருக்கும்" எனத்தொடங்குகிறது. இதன் முற்சீராகிய 'பூமாது' என்ற சொல் ஈற்றில் திரிந்து பூமாதி என நிற்கிறது. மேலும் செந்தில் என்ற தலத்தின் இயற்பெயருக்கு பூ என்ற முதல் எழுத்து தானப்பொருத்ததில் "மரணம்" எனப்பெயரிய மிகக் கொடியதாகிறது. இவ்வாறு மங்கல வகையால் இந்நூல் குற்ற முடையதாயினும் தன் சொற்பொருட்சுவைச் சிறப்பால் இது நின்று நிலவுகிறது. இதனை இவ்வாசிரியரே தம் புலவர் புராணத்தில் எடுத்துக்காட்டுவதுடன் அங்கு இந்நூற்பாவையும் குறிப்பிடுகிறார். அவை வருமாறு:

"ஆன்ற முப்பொறி மங்கலங் கடைதிரிந் ததுவும்
கோன்றன் ஊர்ப்பெயர்க்கு அமைதருபொருத்தத்தின் கொடிதும்
வான்ற னைப்புரந் தான்அரு ளாற்றமிழ் வண்ணம்
ஏன்ற வண்சுவை யான்மிக இனியவா யினவே".

"பொருத்த மாதிய சிலவகை மழையெனப் பொழியும்
திருத்த மின்றிய வாய்க்கும்வண் சுவைபுகாச்செவிக்கும்
வருத்த முங்களிப் புந்தரும் எனஅறு வகைய
அருத்த மாரிலக் கணம்சொலற்கு ஈதொர்சான் றாமே.[1] (234)

**70. எவ்வகை எழுத்தும் அம்முதல் ஒவ்வரை**
**ஆகும்ஐந் தெழுத்துள் அடங்குதல் தேறி,**
**ஆதிஅந் தம்புணர் விதம்அறிந்து அணிவான்**
**பெயர்முதல் எழுத்தே நூல்முதல் என்னில்**
**வாலை மற்றைய நான்கும் நிரைநெறிக்**

---

1 புலவர் புரா. பகழிக். 13,14,

**குமாரமும் அரசும் விருத்தமும் மரணமும்**
**இவற்றுள்மூன்று உயர்வுமற்று இரண்டும்தாழ்வு எனக் கண்டு**
**இயல்புஅறிந்து எடுக்கை; இஃதும் உணர்கால்**
**சொற்சார்பு ஆதலின் சொற்றதுஇவ் வயினே.**

அனைத்தெழுத்துகளும் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தினுள் அடங்கி விடுவதையும், இவைகளின் முதல் முடிவுகளைக் கணக்கிடும் முறையையும் உணர்ந்து கொள்ள வேண்டும். பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரின் முதல் எழுத்தே நூலின் முதல் எழுத்து என்னின் அப்பொருத்தம் வாலை எனப்படும் (நூலின்முதல் எழுத்து பாட்டுடைத்தலைவன் இயற்பெயர் முதல் எழுத்துக்கு இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாவது எழுத்தாயின் அப்பொருத்தம் முறையே) குமாரம், அரசு, விருத்தம் மரணம் எனப்பெயர் பெறும். இவற்றுள் முதல் மூன்றும் கொள்ளக் கூடியனவும் பின்னிரண்டும் தள்ளத்தக்கனவும் ஆம். நூலை இயற்றத் தொடங்குமுன் இப்பொருத்தத்தைப் பார்த்துச் செய்ய வேண்டும். (இலக்கண வகையில் இது பாட்டியலைச் சேர்ந்தது ஆயினும்) இது சொல்லொடு தொடர்பு பட்டதாதலின் (சொற்களின் இலக்கணம் கூறும்) இவ்வியல்பில் கூறப்பட்டது என்றவாறு.

மொழி முதலில் மெய் எழுத்துகள் வாரா. உயிரும் உயிர் மெய்யுமே வரும். அ என்பதுள் ஆவும், க முதல் ன வரை மேலும் கா முதல் னா வரை ஆகிய மொழி முதல் வரும் எழுத்துகள் யாவும் அடங்கும். இவ்வாறே அகர முதலிய ஐந்தில் அனைத்து எழுத்துகளும் அடங்கும். ஐயும் ஔவும் அகரத்தோடு எண்ணப்படும்.

உயிர் எழுத்துகளின் வரிசையிலேயே இவ்வைந்தும் எண்ணப்படும். உதாரணமாக முருகன் என்ற பாட்டுடைத் தலைவன் பெயரை எடுத்துக் கொள்வோம். இது உகரத்தில் அடங்கும் பாடும் நூலின் முதல் எழுத்தும் உகரத்தில் அடங்கினால் (உ, ஊ, கு முதல் னு வரை ஏற்பன) அது வாலைப் பொருத்தமாம். நூல் அடுத்த எகரத்தில் தொடங்கினால் குமாரப் பொருத்தம்;

ஒ எனில் அரசப் பொருத்தம். நான்காவதாகிய அகரமும் அடுத்த இகரமும் முறையே விருத்தம், மரணம் எனப்படும். இவ்விரண்டுமே நீக்கத்தக்கன. இவைகளே "ஐந்தெழுத்துள் அடங்குதல் தேறி, ஆதி அந்தம் புணர்விதம் அறிந்து" என்று நூற்பாவில் குறிக்கப்பட்டன.

பாட்டியலில் கூறப்படவேண்டிய செய்தியாகிய இது சொல்லியல்பில் கூறப்பட்டதற்கு நூலாசிரியரே அமைதியும் கூறினார். இது அடுத்து யாப்பியற் செய்திகள் இங்கே கூறப் படுவதற்கும் பொருந்தும். (235)

**71. செய்யுட் களின்நிலை தெரித்தற் பொருட்டு**
**நேர்நிரை எனும்இரு பகுதியின் சார்புச்**
**சொல்உள தண்டமிழ்த் தொன்மைவாய் பாடு;**
**அவற்றையும் பகருதும் அறிந்த வாறே.**

பாக்களின் அசை, சீர் முதலியவைகளைத் தெளிவாக்கும் பொருட்டுத் தமிழில் நேர், நிரை என்ற இரு சொற்கள் மிகப் பழங்காலந்தொட்டே வழங்கி வருகின்றன. (இச் சார்பியல் பிலேயே-அவைகளும் சார்புச் சொற்களாயிருப்பதால்) அவற் றைப்பற்றி யாம் அறிந்த வண்ணம் கூறுவாம் என்றவாறு. (236)

**72. குறில்நெடில் தனித்தும்மெய் ஒன்றுஇரண்டு அனணந்தும்**
**குஎனக் கூஎனக் கல்எனக் கார்என**
**நெய்த்துவாழ்ந்து எனும்இரு மொழிகளின் ஈற்றெழுத்து**
**அகன்றால் எனவரும் அறுவகை நேரே.**

குற்றெழுத்துத் தனியாகவும், ஒருமெய் அணைந்தும், இரு மெய்யோடும் வருவனவும் இதேபோல் நெடில் தனியாகவும், ஒன்று அல்லது இரண்டு மெய்யொடும் வருவனவும் ஆகிய ஆறும் நேரசை எனப்படும். கு,கல்,நெய்த், கூ, கார், வாழ்ந் என்னும் ஆறும் முறையே இவற்றிற்கு உதாரணங்கள் ஆகும் என்றவாறு.

இருமெய்யிணைந்த குறில் நெடில்களை அங்ஙனமே கூறாலா காமையின் முழுச் சொற்களாகக் கூறி ஈற்றெழுத்து அகன்றால் என என்றார். (237)

**73. குற்றெழுத்து இணைந்தும் குறில்நெடில் புணர்ந்தும்**
**இவற்றொடுஒற்று ஒன்றுஇரண்டு அணைந்தும் கரிஎனச்**
**சிவாஎனக் குகன்எனக் கவான்என, நிகழ்ந்து**
**விடாய்க்குஎனும் இருசொல் கடையெழுத்து ஒழிந்தா**
**லெனஇரு மூன்று விதம்நிரை வரும்;இவை**
**அன்றியும் ஒருவாறு அறைகுதும் அடுத்தே.**

இரு குறில்கள் சேர்ந்தும், அதனோடு ஒரு மெய்யோ இரண்டோ கூடியும் வருவனவும், இதேபோல் குறில்நெடில் சேர்ந்தும் அதனோடு ஒன்று அல்லது இருமெய் கூடியும் வருவன வும் ஆகிய ஆறும் நிரையசை எனப்படும். கரி, குகன், நிகழ்ந், சிவா, கவான், விடாய்க் என்பன முறையே இவற்றிற்கு உதா ரணங்களாம். இந்த ஆறுவகையே அன்றிச் சிறுபான்மை வேறொருவகையாகவும் நிரையசை வருவதுண்டு. அதனை அடுத்த நூற்பாவில் கூறுவாம் என்றவாறு. (238)

**74. செய்கை, தர்மம், கல்வி, தன்மை**
**பொன்வில் எனுமிவை போன்றநேர் நேரும்**
**நிற்கும் இடத்தால் நிரைஎனப் படுமே.**

செய்கை, தர்மம், கல்வி, தன்மை, பொன்வில் போன்ற இச்சொற்கள் முன்சொன்ன விதிப்படி தனித்தனியே இருநேர் கள் ஆகும். (இவற்றின் பெயர் தேமா என்பது பின்னர் கூறப் படும்) இத்தகைய நேர்நேர் ஆகியன யாப்பிலக்கணத்திற்கு வழுவாகாமல் அமையவேண்டிய இடத்தில் ஒரு நிரையசை யாகக் கொள்ளப்படும் என்றவாறு.

இரு எழுத்துகளுக்கு இடையே ய,ர,ல,ன மெய்கள் நின்று அவ்வெழுத்தின் கூட்டம் இரு நேராகக் கொள்ளப்படின் அந்த யாப்பிற்கு வழு உண்டாகும் என்றால் அத்தகைய இடங்

களில் மட்டும் இடைநின்ற இம்மெய்களைக் கருதாது இரு எழுத்துகள் இணைந்த நிரையாகக் கொள்க. இம்மெய்களை அடுத்த குறில் மீண்டும் ஒரு குறிலடுத்து வரினும் நிரையாகவே கொள்க என்பார் தன்மை,பொன்வில் என இரண்டு உதாரணம் காட்டினார்.இது யரலவுக்கும் பொருந்தும்.ஓர் இலக்கிய ஆட்சி காண்போம்.

இதே நூற்பாயிரத்தில் "ஐந்தே இலக்கணமென் றாயிரம் பேர் கூறல்கண்டும்"[1] என வருகிறது. கூறல்கண்டும் என்ற சீர் தேமாந்தண்பூ என்ற நாலசைச் சீராகிறது. வெண்பாவில் மூன்றசைகளுக்கு மேல் வரக்கூடாது. எனவே கூ,றல்கண், டும் எனப் பிரித்து நேர், நிரை, நேர், கூவிளங்காய் என அலகிடப் பட வேண்டும்.இங்கு றல்கண் என்ற எழுத்தின் கூட்டம் பொன் வில் போல அமைந்ததைக் காண்க.

இத்தகைய சொற்கள் நிற்கும் நிலையால் தேவையானால் தான் நிரை எனப்படும் எனவும், இல்லையேல் நேர்நேர் என்றே கொள்ளப்படும் என்பதும் கருத்து. (239)

**75. நேர்நாள் நிரைமலர் இவைகள் ஓர்அசைச்**
**சொற்கள் ஆம்எனத் துணிந்தனர் புலவோர்.**

நேர் அசையும் நிரை அசையும் (வெண்பாவின் ஈற்றில்)ஓர் அசைச் சீராக வரும்போது முறையே நாள் என்றும் மலர் என்றும் புலவர்களால் கூறப்படும் என்றவாறு.

நூற்பா ஓர் அசைச் சொல் எனினும் வெண்பா ஈற்றடி "தூக்கம் வருகின்றது"[2] எனவும் வரலாமாதலின் உரையில் ஓரசைச்சீர் எனப்பட்டது. வெண்பாவின் ஈற்றில் என்பது யாப்பு மரபால் சேர்க்கப்பட்டது. (240)

**76. இணைநேர் தேமா; இணைநிரை கருவிளம்;**
**முன்நேர் பின்நிரை கூவிளம்; முன்நிரை**

---

1 அறுவகை இலக்.பாயிரம். 1
2 தண்டபாணி சுவாமிகள் தனிப்பாடல் திரட்டு 311.

**பின்நேர் புளிமா ஆம்;இவை நான்கும்**
**ஈர்அசைச் சொற்கள்என்று இயம்பிடல் இயல்பே.**

இரு நேரசைகள் இணைந்த சீர் தேமா ஆகும். இரு நிரையசைகள் இணையின் அது கருவிளம் எனப்படும். நேர்நிரையசைகளால் கூவிளச் சீரும், நிரைநேர் அசைகளால் புளிமாச் சீரும் தோன்றும். இந்நான்கும் ஈரசைச் சீர்கள் எனப்படும் என்றவாறு.

இந்நூற்பாவிலும் சொற்கள் என்ற ஆட்சியைச் சீர்கள் என்ற பொருளிலேயே கொள்க. (241)

77. **தேமா புளிமா இரண்டும்ஓர் இடத்தே**
**காசு பிறப்புஎனக் கழறநிற் பனவே.**

தேமா, புளிமா ஆகிய இரு சீர்களும் (வெண்பாவின் ஈற்றுச் சீர் ஆகும்) ஓர் இடத்தில் (இரண்டாம் அசையாக உகரத்தைப் பெற்றுக்) காசு, பிறப்பு என்னும் வாய்பாடுடையனவாய் விளங்கும் என்றவாறு. (242)

78. **ஈரசைச் சொல்லுடன் நேர்உறில் காய்என**
**நிரைஉறில் கனியென நிகழ்த்தல்உண்டு;அவற்றை**
**மூவசைச் சொற்கள் ஆம்எனல் முறையே.**

(தேமா,புளிமா,கூவிளம், கருவிளம்ஆகிய) நான்கு ஈரசைச் சீர்களுடன் மூன்றாவதாக ஒரு நேர் அசை சேர்ந்தால் காய் எனவும், நிரையசை சேர்ந்தால் கனி எனவும் கூறப்படும். இத்தகையவை மூவசைச் சீர்கள் என்று பெயர் பெறும்.

தேமாங்காய், தேமாங்கனி என்பது போல வரும். (243)

79. **இணையசைச் சொல்லே ஒன்றோடொன்று இணைந்து**
**நாலசை யாதலுண்டு; அம்முறை ஆம்கால்**
**முன்மொழி இயல்பில் பிறழாது ஒழிந்த**
**பின்வரும் நேர்நேர் தண்பூ, நிரைநிரை**

**நறுநிழல், நேர்நிரை தண்ணிழல், நிரைநேர்**
**நறும்பூ ஆம்எனத் திரிதரும் அன்றே.**

இரண்டு ஈரசைச் சீர்கள் தம்மோடிணைந்து நான்கசைச் சீர்கள் ஆகும். அப்படி ஆகுங்காலை தேமா முதலிய முதல் ஈரசைச் சீரின் வாய்பாடு முன்னர் (241ஆம் நூற்பாவில்) கூறப்பட்டவாறே இருக்கும். இரண்டாவதாகிய ஈரசைச் சீர் நேர்நேர் ஆயின் தண்பூ எனவும், நிரைநிரை ஆயின் நறுநிழல் எனவும், நேர்நிரை என்றால் தண்ணிழல் எனவும், நிரைநேர் என்றால் நறும்பூ எனவும் வேறு பெயர்களால் குறிக்கப்படும் என்றவாறு.

தேமாந்தண்பூ, கருவிளநறுநிழல் என்பவைபோல வரும்.
(244)

**80. ஓர்அசை ஈரசை வெவ்வேறு இருந்து**
**மூன்றசை தோன்றிய முறைப்படி நான்கசைச்**
**சொல்லொடுஓர் அசைவந்து தோன்றல்உண்டு; அதுநேர்**
**ஆயிற் பூஞ்சீர் நிழற்சீர் என்றும்**
**நிரைஎனில் பூநலம் நிழல்நலம் என்றும்**
**கொள்ளுமாறு உணர்வோன் கோடியில் ஒருவனே.**

ஓரசையும் ஈரசையும் தனித்தனியாகஇருந்து மூன்றசைச் சீராக இணைந்ததைப் போன்றே நான்கசைச் சீரோடும் அசைவந்து சேரலாம். அப்படி வருகின்ற ஐந்தாவது அசை நேர் ஆயின் சீர் எனவும், நிரை ஆயின் நலம் எனவும் பெயர் பெறும். கோடியில் ஒருவரே இந்த ஐந்தசைச் சீர்களை அறிய வல்லார் என்றவாறு.

யாப்பிலக்கண நூல்கள் அனைத்தும் பொதுச்சீர்கள் என்னும் நாலசைச் சீர்களுக்குமேல் விரிப்பதில்லை. இவர் அப்பொதுச் சீர்கள் பதினாறொடும் நேர், நிரை என்னும் அசைகளைச் சேர்த்து முப்பத்திரண்டு ஐந்தசைச் சீர்களை வகுத்துக் கொள்கிறார்.தேமாந்தண்பூஞ்சீர் முதல் கருவிளநறுநிழல் நலம்

ஈறாக முப்பத்திரண்டு வகையான ஐந்தசைச் சீர்கள் உண்டாகும். இவர் யாப்பிலக்கணத்தில் சூத்திரப்பாவைக் குறிக்குமிடத்து ஓரடிக்கு இரண்டு நான்கசைச் சீர்கள் வருமென்றும் சில இடங்களில் அவற்றுள் ஒன்று ஐந்தசையாக இருக்கலாம் எனவும் கூறுகிறார். அதற்காக இங்கேயே முன்மொழிந்து கொள்கிறார். "அரும்பொருள் விரிப்பதற்கான சூத்திரப்பா நிழல்பூ ஈற்றுள நான்கசைச் சொற்கள் இணைந்தும் ஒவ்வோரிடத்தே நலம் சீர் ஈற்றுள ஐந்தசைச் சொற்கள் வந்தும் ஓரடியாகும்......"[1]

ஐந்தசைச் சீர் பற்றிய கோட்பாடு வேறு நூல்களில் கூறப்படாமையின் கொள்ளுமாறு உணர்வோன் கோடியில் ஒருவனே என்றார். (245)

**81. இவற்றைத் தளைஎன்று இயம்பலும் பழமை**
**யாப்பிலக் கணத்தில் பிரிவுஇயங் குறுமே.**

இத்தகைய சீர்களால் தளைகள் உண்டாகும் எனலும் தொன்மையான கருத்தாகும். அத்தளைகளைப் பற்றிய செய்திகள் யாப்பிலக்கணத்தில் விளங்கும் என்றவாறு.

சீர்கள் வேறு; இரு சீர்களுக்கிடையில் தட்டு நிற்பதாகிய தளைகள் வேறு. இந்நூற்பாவின் சொற்போக்கு சீர்களே தளைகள் என்னுமாறு அமைந்து கிடப்பினும், இச்சீர்கள் தளைகள் தோன்ற நிலைக்கலன்களாக அமையும் என்ற கருத்தில் உரை கூறப்பட்டது. இந்நூலாசிரியர் அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம் ஆகிய இரு நூல்களிலும் எங்கும் தளைகளின் இலக்கணத்தைக் கூறவே இல்லை என்பது வியப்பிற்குரியது. (246)

**82. ஆறசை யாதிய நாடகப் பகுதி**
**இசையொடு கூடி அளவின்றிப் பிறழும்;**

---

1 அறுவகை. 402.

**அவற்றிற் கும்தளை அறையுமாறு உணரில்**
**பன்றி முகத்தில் படாம்அணிந் தற்றே.**

அடியின் ஓர் பகுதி ஆறசைஅளவும் மிக்கிருத்தல் முதலி யன நாடகத் தமிழாகிய கீர்த்தனை, பதம் போன்றவைகளி லும், தனி இசைக்கேஉரிய உருப்படிகளிலும் இசை இலக்க ணத்திற்கேற்பப் பலவிதமான மாறுபாடுகளுடன் விளங்கும். அவற்றிற்கு எல்லாம் சீர்வரையறை செய்ய இயலாது. அவ் வாறு அவைகளையும் இயற்றமிழ் வாய்பாட்டால் அலகூட்டிப் பார்க்க முயலுதல் பன்றியின் முகத்தில் படாம் அணிந் ததைப் போலாகும் என்றவாறு.

இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ஒன்றைவிட அடுத்தது எளிமையானது என்பதும், இசை பாடுதற்கு மட்டும் உரியது, நாடகம் அத்தோடு கூத்திற்கும் உரியது என்பதும் இவர் கருத்து. இசையும் கூத்தும் இசை இலக்கண விதிகளுக் கேற்பப் புனையப்படுபவை. மேலும் மிக வெள்ளையாக அமைந்து பாமரர்களையே மகிழ்விக்கத் தோன்றியவை. எனவே அவற்றில் அளபெடை, மரூஉமொழி, கொச்சைச் சொல் விரவி வரும். இயற்றமிழின் செம்மையும், பொருட்கட்டுக் கோப்பும் அவற்றில் இருத்தல் அருமை. எனவே இயற்றமிழின் அலகீட்டுமுறைகளை இசை,நாடகப் பகுதிகளுக்கும் கொள்ளுதல் பட்டத்துயானைக்குக் கட்டவேண்டிய முகபடாத்தினைச் சேற்றில் உழலும் பன்றிக்குக் கட்டுவது போலாம் என்றார்.

இசைப் பகுதியும், நாடகப் பகுதியும் தனித்தனியே சிறந்தவை எனக் கருதப்படலாம். எனினும் இயற்றமிழுடன் ஒப்பு நோக்கில் அவை தரத்தில் தாழ்வே என்ற கருத்து இங்கு வெளிப்படுகிறது. (247)

**83. அயல்படு கலைஉடைக் கணங்களைத் தழீஇ**
**இம்மொழி வழிசிலர் இயம்பல்உண்டு; அவற்றைத்**
**தணவலே நலமாம்; வேண்டினும் அவ்வத்**
**தெய்வப் பெயர்நிலைத் தளைகொளல் சிறப்பே.**

வடமொழியாகிய அயல்மொழியின் வாய்பாடாகிய கணம் என்னும் யாப்பலகைத் தழுவிச் சில நூலாசிரியர் தமிழிலும் கணப்பொருத்தம் என்ற ஒன்றைக் கூறுவர். தமிழ்ப் புலவர்கள் (அயன் மொழிக்கே உரியதாகிய) அந்தக் கோட்பாட்டைத் தவிர்த்தலே சிறப்பாகும். ஒருகால் அத்தகைய பொருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏற்படினும் பாட்டுடைத்தலைவனாகிய தெய்வத்தின் இயற்பெயர் எந்த கணத்தில் அமைகிறதோ அதனை (முதற்சீருக்கு) அப்படியே ஏற்றுக்கொள்ளல் நலமாம் என்றவாறு.

தமிழ் யாப்பில் நேர், நிரை என்ற ஈரசைகள் அடிப்படை அலகுகளாக இருப்பதைப்போல் வடமொழி யாப்பில் எட்டு கணங்கள் முதல் அலகுகளாகக் கொள்ளப்படுகின்றன. மூன்று எழுத்துகளைக் கொண்ட ஒரு கூட்டம் கணம் எனப்படும். அவ்வெட்டு கணங்களும் ம,ந,ப,ய,ஜ,ர, ஸ,த என்று ஓரெழுத்துப்பெயர் கொண்டவை. மூன்று நெடில்கள் 'ம' கணம் என்றும், மூன்று குறில்கள் 'ந' கணம் என்றும் கூறப்படும். ஒரு நெடில் இருகுறில் 'ப'கணம் எனவும், குறில்நெடில் நெடில் 'ய'கணம்எனவும் பெயர்பெறும். குறில்நெடில்குறில் 'ஜ'கணமாகவும், நெடில்குறில்நெடில் 'ர'கண மாகவும் கொள்ளப்படும். குறில்குறில்நெடில் 'ஸ' கணமும், நெடில்நெடில்குறில் 'த' கணமும் ஆகும்.

வடமொழியில் மூவெழுத்துகளைக் கொண்ட கணம்உள்ளதால் போலும் தமிழ்ப்பாட்டியலாரும் முதற்சீர் மூன்றசைச் சீராகவே இருத்தல் வேண்டும் என்றனர். "மூவசை எண்சீர் கணம் என மொழிந்தனர்; ஈரசை நாலசை ஓரசை ஒழித்தே"[1] "முன்மொழி யாகலான் மூவசைச்சீர் அலல்னநன்மைசால் தெய்வம் நவிலாமை"[2] "கூறிய இலக்கணம் குறைபா டின்றித் தேறிய மூவசைச் சீர்முத லாக அகலக் கவிதான் அமையும் என்ப"[3] என்று தமிழ்ப் பாட்டியல்கள் கூறுகின்றன.

1 பன்னிரு பாட். சொல். 4

2 வெண்பாப். முதன்மொழி. 22

3 இலக். விளக்கம் 804

வடமொழியின் குறிலைத் தமிழ்நேரசையாகவும், நெடிலை நிரையசையாகவும் கொண்டுள்ளனர். மூன்று நெடில்களால் ஆன 'ம'கணம் எனச் சிதம்பரப்பாட்டியலில் மூன்று நிரையசைகளாகிய கருவிளங்கனி கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே மூன்று குறில்களாலான வடமொழி 'ந'கணத்தின் பெயர் மூன்று நேரசைகளானியன்ற தேமாங்காய்ச் சீருக்குத் தரப்பட்டுள்ளது. "வான் இலகு நேர் ; குருவே நிரையாம் ; வெண்சீர் வரில் நபதவ கணநாள் பரணி மும்மீன் ஊனமிகு புனர்பூசம் பூசம் வாணாள் உற்றபுகழ் சூனியநோய் பலன்கள் ஆகும்; தேன்அனையாய் வஞ்சிச் சீர் அடைவே நான்கும் திகழ் 'சரமய' கணநாள் சோதி ஆரல் தானமுறு கேட்டை சதயம்தான் கேடு சாவுதிரு மகிழ்ச்சிபலன் தரத்தொடங்கும்"[1] என்பது சிதம்பரப் பாட்டியல்.

தமிழ் யாப்பமைதிக்குச் சற்றும் தொடர்பே இல்லாத இந்தக் கணம் என்னும் ஒரு வடமொழிக் கோட்பாட்டைக் கொண்டுவந்து தமிழில் பயன் இல்லாமல் நுழைக்க வேண்டாம் என்கிறார் இவ்வாசிரியர். இது இவருடைய அழுத்தமான சொந்தக் கருத்தாக இருந்தபோதிலும் அவர்காலத்தில் இருந்த புலவர்கள் பாட்டியற் கொள்கைகளை மிகவும் உறுதியுடன் பின்பற்ற விரும்பின காரணத்தால் இவர் சற்று விட்டுக் கொடுத்து ஒரு சமயம் கணப்பொருத்தம் பார்க்க வேண்டுமெனில் எக்கடவுளைப் போற்றி, இலக்கியம் பாடப்படுகிறதோ அத்தெய்வத்தின் பெயருள்ள சீரில் தொடங்கலாம் என்கிறார்.

இது எளிதாக விட்டுக்கொடுப்பது போல் தோன்றினாலும் வடமொழிக் கணமே சிந்தையில் நுழையாதபடி விரட்டுவதாகும். உதாரணமாகச் சிவபெருமான் மீது ஓரிலக்கியம் இயற்றப்படுவதாக வைத்துக் கொள்வோம். இந்த இயற்பெயர் எந்தக் கணத்தில் இருக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறுகிறார். சிவபெருமான் என்ற உடனே தமிழ்ப் புலவனுக்குக் கருவிளங்காய் என்ற தமிழ்ச்சீர் நினைவிற்கு வரு

---

1 சிதம்பரப். பொருத்த. 9

மேயன்றி இது 'வ'கணம் என்ற நினைவு தோன்றாது. அதே போல் திருமால் அல்லது முருகன் எனில் புளிமா எனத் தொடங்கி விடுவான்.மூவசைச் சீரே தான் வேண்டும் என எண்ண மாட்டான்.

இவ்வாறாக இச்சூத்திரம் தமிழ்இலக்கணத்தில் பயனின்றி நுழைந்துவிட்ட ஓரயல்மொழி வழக்கைக் களைய முயலும் சிறந்த நூற்பா ஆகும். (248)

**84. கின்னம்என்று அருண கிரிப்பெயர் முனியும்**
**திமுதம்எனக் கம்பனும் செப்பிய முறையில்**
**புதுமொழி சாரப் புகல்வார் புகலினும்**
**தமிழ்உணர் பெரியோர் தழுவுதல் இயல்பே.**

கின்னம் என்று ஒரு புதிய சொல்லை அருணகிரிநாதரும், திமுதம் என்ற புதுமொழியைக் கம்பனும் படைத்துக் கொண்ட பாங்கில் புதுமையான வார்த்தைகளை ஆக்கத் தகுதிஉடைய பெரும் புலவர்கள் அவ்வாறு செய்தாலும் தமிழ் மரபறிந்த சான்றோர்கள் அவற்றையும் ஏற்றுக் கொள்ளுதல் இயல்பே ஆகும் என்றவாறு.

கின்னம் என்ற சொல் வருத்தம் என்ற பொருள் உடையது. இது கின்ன என்ற வடசொல்லின் தமிழ் வடிவம். அருணகிரி நாதர் இச்சொல்லை, "கின்னம் களையும் கிருபைசூழ் சுடரே"[1] "கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன குன்னங் குறிச்சி வெளியாக்கிவிட்டது"[2] எனத் தம் நூல்களில் ஆண்டிருக்கிறார். இந்நூலாசிரியர் இது வடசொல் என்பதனை நோக்காமல் அருணகிரிநாதரால் புதியதாகப் படைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ச்சொல் எனக் கருதுகிறார். ஆனால் 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரிநாதருக்கு முன்பே 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய வேம்பத்தூர் நம்பி தம்முடைய திருவிளையாடல்புராணத்தின் பாயிரத்தில், "அன்னம் பறந்து

---

1 கந்தர் அநுபூதி 49    2 கந்தர் அலங்காரம் 24

இன்னம் பெரும் கின்னம் படும்"[1] என இச்சொல்லை இதே பொருளில் தமிழாக்கி ஆண்டுள்ளார்.

கம்பன் திமுதம் என்ற சொல்லைப் பெய்துள்ளது கீழ்வரும் கவியில்:- "குமுத நிட்ட குலவரை கூத்தனில் திமுத மிட்டுத் திரியுந் திரைக்கடல் துமித மூர்புக வானவர் துள்ளினார் அமுதம் இன்னம் எழும்எனும் ஆசையால்."[2]

இதைப்பற்றிய ஒரு செவிவழி வரலாறு புலவர்புராணத்தில் இடம்பெற்றுள்ளது. இது காலத்திற்கேற்ற புதிய சொல்லாக்கம் தேவை என்பதை உணர்த்தும் நூற்பா ஆகும். (249)

**85. சார்புஎலாம் மொழியத் தகுமோ? ஆதலின்**
**இம்மட் டடக்கி இனித்திரி வியல்பும்**
**தெரிந்த வாறு செப்புதும் சிறிதே.**

சார்புச் சொற்கள் அனைத்தினையும் முற்றக்கூறி முடிக்க இயலாது. எனவே இவ்வியல்பை இத்துடன் நிறுத்திக்கொண்டு அடுத்துத் திரிவுஇயல்பு என்ற பகுதியில் யாமறிந்தஅளவு சில செய்திகளைக் கூறுவாம் என்றவாறு.

முன்பே சுட்டிக் காட்டப்பெற்றபடி தமிழ் இலக்கணத்திற்கு இன்றியமையாதன அனைத்தையும் ஓர்ஒழுங்கான வரைமுறை செய்துகொண்டு கூற இவ்வாசிரியர் முயலவில்லை. ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு அது தொடர்பான பல கருத்துகளைத் தொகுத்துக் கூறும் முறையில்தான் இந்நூல் அமைக்கப் பட்டிருக்கிறது.

இவ்விறுதிச் சூத்திரத்தால் மூன்றாம் பிரிவாகிய சார்பியல்பு நிறைவு செய்யப்பெற்று அடுத்த திரிவியல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (250)

---

1 நம்பி. திருவிளையாடற் புராணம். கடவுள்வாழ்த்து 3
2 கம்பன். யுத்த. சேதுபந்தனப். 42

## IV. திரிவியல்பு

இவ்வியலுள் சில சொற்களின் வடிவங்கள் திரிதல், அன்மொழித்தொகை, ஆகுபெயர், பொருள் மயக்கம் இல்லாமல் கூறுதல், குறைச் சொல், முன்னோர் மொழியைப் பின்னோர் எடுத்தாளல், வகையுளி, சில சாரியைகள், விகுதிகள், சில இடைச்சொற்கள், சில புணர்ச்சி விதிகள் முதலியன இடம் பெற்றுள்ளன. இவைகளில் பெரும்பாலும் சொற்களின் வடிவமோ அல்லது பொருளோ மாறி வருவதால் இவையனைத்தும் திரிவியல்பில் தொகுக்கப்பெற்றன. இவ்வியல்பு 27 நூற்பாக்களைக் கொண்டு உட்பிரிவுகள் இன்றி விளங்குகிறது.

**86. முன்வரும் இயல்பில் மொழிந்துகாட் டியவா**
**மருமகன் மருகன் ஆகிய பகுதியும்,**
**துளவே துழாய்எனத் துலங்குமோர் பகுதியும்**
**திரிவுஎனில் தகுமே ஆயினும் சிலர்தாம்**
**மரூஉச்சொல் என்றும் வாய்பா டென்றும்**
**இயம்பல்உண்டு; உணர்வார்க்கு இஃதும்ஓர் திரிவே.**

இவ்விலக்கணத்தின் (முதல் இயல்பாகிய) பொதுவியல்பில் முன்பே எடுத்துக்காட்டியவாறு மருமகன் என்ற சொல் மருகன் என (இடைக்குறை பெற்று) வழங்குவதும், துளவு துழாய் என ஆளப்படுதலும் திரிவு எனத்தக்கதேயாம். என்றாலும் சிலர் இவற்றை மரூஉச்சொல் என்றும், மரபுபட்ட வாய்பாடு என்றும் கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் மரூஉ, மரபுவழி வாய்பாடு என்பனவும் திரிவே ஆகும் என்றவாறு.

இந்நூல் 170 ஆம் நூற்பாவில் வருகிறவன், கொண்டுவந்து ஏனடி என்பவை முறையே வாரவன், கொண்டாந்து, ஏண்டி என மருவி வழங்கப்படுதல் காட்டப்பெற்றன. இங்கே மருகன், துழாய் ஆகியஇரு மாற்றங்கள் காட்டப்பெறுகின்றன. இத்தகையவை அனைத்தையும் சொற்றிரிவு எனலே தக்கதாம் என்பது இந்நூலாசிரியர் கொள்கை. திரிந்த வடிவம் ஒன்று தொடர்ந்து ஆளுகைக்குட்பட்டுவிட்டால் அது மரூஉ மொழி

எனவும், மரபு வழிப்பட்ட வாய்பாடு எனவும் பெயர் பெற்று விடுதல் இயல்பே. எனவே அதுவும் திரிவே என்பது இவர்தரும் விளக்கம். (251)

**87. வாழ்நனை வாணன் என்பது பற்றி**
**வாய்பா டில்லா வழிக்கொடு திரித்துச்**
**சொல்வது பிழைஎனத் துணிவுறத் தகுமே.**

வாழ்நன் என்ற சொல் இலக்கியங்களுள் வாணன் என வழங்கப்படுதல்பற்றி வாய்பாடின்றியும் பலவாறு சொற்களைத் திரித்துப் பயன்படுத்துதல் தவறாகும் எனத் தெளிய வேண்டும் என்றவாறு.

வாழ் என்ற சொல்லோடு நன் என்னும் பகுதி சேர்ந்தால் வீரசோழியம் கூறும், "ஐம்மூன்றதாம் உடல் வன்மைபின் வந்திடில் ஆறொடைந்தாம் மெய்ம் மாண்பதாகும்; நவ்வரின் முன் அழிந்து பின் மிக்க ணவ்வாம்"[1] என்ற விதிப்படி வாணன் என்றாகிறது. இந்நூலாசிரியர் இவ்விதிகளை ஏற்றுக்கொள்வதில்லை என்பது முன்பே கூறப்பட்டது.[2] எனவே இத்தகைய புணர்ச்சிகளை (உதாரணம் — திகழ்+நாகம் = திகணாகம்; ஏழ்+திரை = ஏடிரை) இவர் வாய்பாடற்றதும் பிழையானது மான சொற்றிரிவுகள் எனக் கருதுகிறார் (252)

**88. ஆல்உடைக் கடவுளை ஆல்என்று அறைதலும்,**
**முருகு நீங்கா முழுதுணர் புலவனை**
**முருகுஎனப் பகர்தலும், மொய்குழல் வனிதையை**
**மொய்குழல் என்றலும், அன்னவை பிறவும்**
**அன்மொழி என்பார் அளவிலார்; அவைகட்**
**பின்மொழி முன்மொழி விளக்கும் பெட்பால்**
**இவ்விரு மொழிச்சார்பு எனத்திரித்து, இடம்அறிந்து**
**ஒன்றொன் றாயே உரைப்பதுஎம் இசைவே.**

ஆலமரத்தின் நிழலிலுள்ள இறைவனை ஆல் எனக்கூறலும், இளமை (அல்லது அறிவு மணம்) நீங்காத இளைய

---

1 வீரசோழியம். 18    5 அறுவகை. 135 உரை

பிள்ளையாரை முருகு எனச் சொல்லலும், மொய்த்த கூந் தலை உடைய பெண்ணை மொய்குழல் என உரைத்தலும், இவை போல்வன பிறவும் பலரால் அன்மொழி என்று கூறப் படும். எனினும் அச்சொற்களின் பொருளை முன்னும் பின்னும் உள்ள சொற்கள் விளக்குகின்ற சிறப்பால் (அச்சொல் அப் பொருளைத் தரும்போது, அவ்விரு மொழிகளின் சார் பினால் திரிவு பெற்றது (பொருள் மாற்றம் பெற்றது) எனக் கொண்டு (அது பயிலப்பட்ட) இடத்திற்கேற்றவாறு ஆகுபெயர், முன்மொழிச் சார்பு, பின்மொழிச்சார்பு எனத் தனித்தனியாகக் கூறுங்கொள்கையே எமக்கு உடம்பாடானது என்றவாறு.

ஆல் என்ற சொல் ஆலமர் செல்வனை உணர்த்தினால் அது முதலில் ஆல நீழலை உணர்த்திப் பின் அங்குள்ள இறை வனுக்கு ஆகி வந்ததால் இருமடி இடவாகுபெயர் எனப்படும். முருகு என்பது அதனை உடையவனுக்கு ஆகி வந்தால் பண் பாகு பெயராம். அடர்ந்த கூந்தல் எனப் பொருள்தரும் மொய்குழல் என்ற சொற்றொடர் அதனை உடையாளொரு பெண்ணை உணர்த்தும்போது அன்மொழித்தொகை எனப் படும். இவர் ஆகுபெயர், அன்மொழி என்ற இந்த இரண்டினை யும் அன்மொழி என்றே கொள்வோரை மறுக்கிறார்.

அன்மொழித்தொகை இலக்கண ஆசிரியர்களால் முன் மொழி நிலையல், பின்மொழி நிலையல் என இரண்டாகப் பகுக்கப்படும். எடுத்துக் கொண்ட சொற்றொடரில் பொருள் கோளிற்கு முன்மொழி துணை செய்யின் அது முன்மொழி நிலையல் எனப்படும். அதுவே போலப் பின்மொழியில் பொருள் கோளுக்கேற்ற சிறப்பு நிலைபெற்றிருப்பது பின்மொழி நிலை யல் ஆகும். ''நால்வாய் அடக்கினான்'' என்புழி யானை என்ற பொருள்கோளுக்கு நாலுதல் என்னும் முன்மொழியே சிறந்த தாதலின் இது முன்மொழி நிலையல் ஆகும். இவ்வாறே பொற்றொடி வந்தாள் என்பதில் தொடியே மங்கையை அறியத் துணை செய்தலின் அது பின்மொழி நிலையலாம். இத்தகைய பாகுபாட்டை இவ்வாசிரியரும் வேண்டுகிறார்.

ஆகுபெயர் எப்போதும் தனிச்சொல்லாக வரும். அல்லது சில இடங்களில் அடையடுத்து வரும். தாமரை ஆகுபெயர்; செந்தாமரை அடையடுத்த ஆகுபெயர். இதுவும் ஒரு சொல் நீர்மைத்தே. ஆனால் அன்மொழித்தொகை எப்போதும் சொற்றொடராகவே வரும். மொய்குழல், தேமொழி என்பனவே அன்மொழித்தொகைகளாம்.

அன்மொழித்தொகையில் பெரும்பாலும் பின்மொழியே கூறுபவனின் கருத்தை விளக்கும். முன்மொழி நிலையலாக அமையும் அன்மொழித்தொகைகள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தனவே. இது பற்றியே "பின்மொழி முன்மொழி விளக்கும் பெட்பால்" எனப் பின்மொழிநிலையலை முதலில் வைத்தார்.

"ஒன்று அலா மொழியில் பின்மொழி தொகுவது அன்மொழி என்பர் அவற்றின் உதாரணம் பொற்றொடி கார்குழல் வெண்ணகை எனலாம்; ஒருமொழி ஆகுபெயரோடு இவற்றைச் சொல்வார் உளர்; அது தொல்வழக்கன்று."[1] என்ற இவர் கருத்து இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

இவர் காலத்தில் தமிழ் இலக்கண உலகில் ஆகுபெயர், அன்மொழித்தொகை பற்றிய ஒரு பெரிய சர்ச்சை நடந்து கொண்டிருந்தது. அச்சர்ச்சையின் பாதிப்பு அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம் ஆகிய இரு நூல்களின் அன்மொழித் தொகை பற்றிய நூற்பாக்களிலும் தெரிகிறது.

இங்கு நால்வாய், பொற்றொடி, மொய்குழல், ஆல்,முருகு, என்ற சொற்கள் தமக்கே உரிய பொருளில் வராது வேற்றுப் பொருள்தந்து நிற்றலின் இவை திரிவு எனக்கொள்ளப்பட்டன. (253)

**89. கப்பணம் உம்மணி ஒருபணம் இருமணி**
**ஆதல்போல் திரிவன ஆகு பெயரே.**

கப்பணம், உம்மணி போன்ற சொற்கள் முறையே ஒரு பணம், இரண்டுமணி என்பனவற்றைக் குறித்தாற்போலப்

---

1 ஏழா. இலக். 201

பொருள் திரிந்து வருவன ஆகுபெயர்கள் ஆகும் என்றவாறு.

க,உ என்பன முறையே எண்களை உணர்த்துங் குறியீடு கள். இவை சொற்களன்று. இக்குறியீடுகள் சொல்லின் நீர்மை பெற்றுப் புணர்வதால் கப்பணம் போன்ற தொடர்கள் தோன்று கின்றன. இவ்வாறு குறியீடுகள் சொற்களாக ஆகி வருதல் ஆகுபெயர் எனப்படும் என்கிறார். ஆகுபெயர் என்பதற்கு இது ஒரு புதிய கருத்து ஆகும். ஆனால் இவரே ஏழாமிலக் கணத்தில், ''ஒரு பொருளினுக்கே உள்ள பெயரை இயைபால் மற்றொன்றினுக்கு எடுத்து உரைத்தல் ஆகுபெயர் என்று அறைவார்; உதாரணம் தாமரை மலரைத் தாமரை எனலும் பொற்பணத்தினைப் பொன் எனலும் போல்பவே''[1] எனக் கூறுகிறார். (254)

**90. ஒருபொருட் பெயரே உரையா துரைக்கில்**
**குணத்தால் திகழ்தரக் கூறல் வேண்டும்;**
**யானையை மதமலை என்றிடல் உதாரணம்;**
**பெயர்த்திரிவு என்றுஇதைப் பேசப் படுமே.**

ஒரு பொருளை அதன் இயற்பெயரைச் சொல்லாமல் வேறு வகையாகக் கூறவேண்டிவந்தால், சொல்ல நினைத்தது எப்பொருளை எனத் தெளிவாகப் புரியுமாறு அதன் பண்பு களை வெளிப்படுத்தி உரைக்க வேண்டும். யானையை மதமலை எனக் கூறுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இதைப் போன்றவைகள் பெயர்த்திரிவு எனப்படும் என்றவாறு.

ஒரு பொருளை அதன் பெயரல்லாத வேறு சொற்களால் கூற நேர்ந்தால் சொல்பவன் தன் கருத்து தெளிவாவதற் கேற்ற சொல்லைப் பெய்து கூற வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர் பொருளறியாது இடர்ப்படுவர். யானையை மத மலை என்றால் மதம் என்ற சொல்லைக் கொண்டு எளிதில் பொருளை உய்த்துணர்ந்து கொள்ளலாம். அங்ஙனமின்றிக் கருமலை என்றால் கூறுபவன் கருத்து விளங்காது. இவ்வா றான மதமலை போன்ற சொல்லாட்சிகளைப் பெயர்த்திரிவு எனக் கொள்ளலாம் என்பது இவர் கருத்து. (255)

---

1 ஏழா. இலக். 183

**91.** **வருவித்து உரைசெயும் மாற்றம் கூறில்**
**எளிதில் தெளியுமாறு இசைக்க வேண்டும்;**
**கூலிதந் தானிலை எனுஞ்சொற் கூறுவார்**
**வேலைசெய் தமையை விளக்கும் முறையே.**

ஒரு செய்தியின் ஒரு பகுதியை உய்த்து உணர்ந்து கொள்ளுமாறு விட்டுவிட்டு மறுபகுதியை மாத்திரம் கூறுவதாயின் எளிதில் உணர்ந்து கொள்வதற்கேற்ற சொற்களால் கூற வேண்டும். கூலி தரவில்லை எனக்கூறினால் சொன்னவர் வேலைசெய்தார் என்பது எளிதில் விளங்குவது இதற்கு எடுத்துக்காட்டாம் என்றவாறு.

கூலி என்ற சொல்லாலே வேலை செய்தமை எளிதில் உணரப்படும். அவனே பணம் தரவில்லை எனக் கூறினால் வாங்கிய தொகையைத் திருப்பித் தருதலா, கடன் தருதலா, கொடையா எனத் தெரியாமல் மயங்க நேரும். எனவே இவ்வாறு மயக்கந் தருமாறு சொல்லாட்சி அமையக்கூடாது. (256)

**92.** **தன்கருத்து அல்லாப் பொருள்தரும் சொற்கள்**
**நன்றுஅல; உதாரணம் நவில்வார் பலரே.**

சொல்லுகிறவன் எதை வெளிப்படுத்த எண்ணுகிறானோ அக்கருத்தைத் தெளிவாக உணர்த்தாமல் மாறுபட்ட பொருளைத் தருகின்ற சொற்களைப் பயன்படுத்தல் நல்லது ஆகாது. இவ்வாறு மயங்கப்பேசும் பலரை நாம் நம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். அவைகளையே எடுத்துக் காட்டாகக் கொள்க என்றவாறு.

புலிகொல்யானை எனில் புலியால் கொல்லப்பட்ட யானையா அல்லது புலியைக் கொன்ற யானையா எனத் தெளிவாக உணர முடியாது. கூறுபவனின் கருத்திற்கு மாறாகவும் பொருள் கொள்ளப்படலாம். செய்யுட்களில் பல இடங்களில் அன்றே என்ற சொல் ஆளப்படும். அது அசைச் சொல்லா அல்

லது மறுப்பா என்று புரிந்துகொள்ள முடியாமல் குழப்பும். இத்தகைய சொற்கள் களையப்பட வேண்டும் என்கிறார். (257)

**93. ஒருசொல் நால்வகைப் பொருள்தரல் உணர்ந்தே**
**முறையிற் கூறுதல் முதிர்தமிழ் வழக்கே.**

ஒரு சொல் பல பொருள்களையும் உணர்த்துமாதலின் மயக்கம் ஏற்படாதவாறு தெளிவாகக் கூறுதல் இலக்கண இலக்கிய முதிர்ச்சியாற் சிறந்த தமிழ்மொழியின் மரபாகும் என்றவாறு.

இங்கே நால்வகை என்றது பல என்னும் பொருளில். நான்கு பேர் போற்ற வாழ்ந்தான், நான்கு வார்த்தை பேசி விட்டான், நான்கு ஊர்கள் சுற்றியவன் என்ற பேச்சு வழக்கையொட்டி வந்தது.

மா என்ற சொல் மாமரம், விலங்குப் பொது, குதிரை, திருமகள், தானியப் பொடி, இருபதில் ஒன்று என்னும் பின்னம், பெருமை முதலிய பல பொருள்களைத் தரும் ஒரு சொல்லாகும். இத்தகைய சொற்களை ஆளும்போது அடைச்சொற்களாலோ அல்லது தக்க வினைச் சொற்களாலோ பொருள் மயக்கம் ஏற்படாதவண்ணம் தெளிவு படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து இந்நூற்பாவில் வலியுறுத்தப்பெறுகிறது. பாயா வேங்கை, 'பறவாத்தும்பி போன்ற பழைய வெளிப்படை வழக்காறுகள் இங்கு சிந்திக்கத்தக்கன. (258)

**94. கமலையை மலையெனக் கலைஎனக் கமஎனப்**
**பகர்தலை நடுக்கடைக் குறைப்பதம் போலும்**
**பொருத்தினும் நிறைபதம் புகன்றிடில் தகுமே.**

கமலை என்ற சொல்லின் முதல், இடை, கடை எழுத்துகளைக் குறைத்து முறையே மலை, கலை, கம என வழங்கினால் அவை முதற் குறை, இடைக்குறை. கடைக்குறை எனப்படும். இத்தகைய ஆன்றோர் வழக்கும் உண்டு. எனினும் முழுப்பதமாக ஆளலே தக்கதாம் என்றவாறு.

255 முதல் இதுவரையான ஐந்து நூற்பாக்களில் சொற்களைப் பயன்படுத்துங்காலைப் பொருள்மயக்கம் இல்லாமல் தெளிவாக ஆளவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. (259)

**95. ஒருவன் சொல்லொடு கருத்துமற் றொருவனது**
**ஆதலும் திருடலும் ஆம்; இவை இரண்டும்**
**அவர்திறம் கருதி அறிதல்மிக்கு எளிதே.**

ஒரு புலவன் வேறோர் புலவனின் சொற்களையும், கருத்துகளையும் அப்படியே எடுத்து ஆளல் உண்டு. கருத்து வளமோ சொல்லாற்றலோ இல்லாத சில போலிப் புலவர்கள் மற்றவர்களின் சொல்லையும் பொருளையும் தம்முடையனவாகக் கூறி ஏமாற்றலும் உண்டு. இந்த இரண்டையும் அப்புலவனின் தகுதியை நோக்கி எளிதில் உணர்ந்துகொண்டு விடலாம் என்றவாறு.

"வந்தாய் போலே வாராதாய் வாரா தாய்போல் வருவானே"[1] என்ற நம்மாழ்வாரின் வாக்கில் ஈடுபட்ட கம்பர் "மாயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்"[2] என விராதன் கூற்றாக அமைக்கிறார். இது திருட்டன்று. பெருங் காவியம்படைத்தற்கேற்ற பேராற்றலுடைய கவிச்சக்கரவர்த்தி தன் இயலாமையின் காரணமாக இவ்வாறு செய்யவில்லை. ஆழ்வார் அருளிச்செயல்களின் ஈடுபாடு இது.

ஆற்றலற்ற புன்கவிஞர்கள் சிலர் சில பிரபந்தங்களில் பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரை மட்டும் மாற்றி வேறொரு வள்ளலிடம் சென்று தம் சொந்தப் படைப்பாகக் கூறுவதுண்டு எனவும் கேள்விப்படுகிறோம். தனிப்பாடல்கள் சிலவற்றிலும் இத்தன்மை உண்டு. இதுவே பெரும்புலவனின் படைப்பைத் திருடலாகும்.

---

1 திருவாய்மொழி 60-9
2 கம்ப. ஆரணியம். விராதன்வதை. 55

முன்னோர் மொழியைப் போற்றல், திருட்டு ஆகிய இரண்டினையும் படைப்பாளியின் தரத்தைக் கொண்டு(கல்வி, சான்றாண்மை இரண்டும்) மிக எளிதில் கண்டுபிடித்து விடலாம். (260)

**96. எவ்விதச் சொற்களும் தளையும் சந்தமும்**
**ஆகித் திரிதரல் அருந்தமிழ்க்கு இயல்பே.**

அனைத்துச் சொற்களும் செய்யுளில் தளை, சந்தம் முதலியவை நோக்கி விகாரமடைவது தமிழ்மொழியில் இயல்பேயாம் என்றவாறு.

இந்நூற்பா, "வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி"[1] என்ற செய்யுள் விகாரத்தைக் கூறுகிறது. நூற்பா தளை, சந்தம் எனக்கூறினும் எதுகை முதலிய தொடைகளையும் உரையிற் கோடலாக வருவித்துக் கொள்க.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"[2] என்ற குறளில் தொட்டது,கற்றது என இருக்க வேண்டியவை தொட்டு, கற்று எனத் தொகுக்கப் பெற்றன. "கமமார் பாவக் கரிகா லான்முற் கரையோர் தீமைத் திரளேதீர்"[3] என்புழிக் கரிகாலன் என இருக்க வேண்டியது தனனா தானத் எனும் சந்தத்திற்கேற்பக் கரிகாலான் என நீட்டல் விகாரம் பெற்றது. (261)

**97. இவ்விதத் திரிவெலாம் இயம்பிற் பெருகும்**
**ஆதலிற் சற்றுவேறு அறைகுதும் அன்றே.**

இத்தகைய சொல் திரிவுகள் விரித்துக்கூறின் மிகவும் பெருகி விடும். எனவே இதனை இம்மட்டடக்கிக் கொண்டு கொஞ்சம் வேறு செய்திகளைக் கூறுவோம் என்றவாறு. (262)

---

1 நன்னூல் 155
2 திருக்குறள் 396
3 திருப்பேரூர்க் கலம்பகம் 36

**98. சொல்லீற்றைத் திரித்தும் தான்திரிந்தும் ஒன்றும்**
**அன்இன் இரண்டும் உடைமையைக் காட்டும்;**
**அதன்பொருள், பசுவின் கன்றுஎனல் உதாரணம்.**

ஒரு சொல்லொடு அதன் ஈற்றைத் திரித்தோ, அல்லது தன் முதல் எழுத்து திரியும் படியாகவோ அன், இன் என்ற இரு விகுதிகளும் சேர்ந்தால் உடைமைப் பொருளைத் தரும். அதன் பொருள், பசுவின் கன்று என்ற இரு தொடர்களும் இதற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

அது + அன் - நிலைமொழியின் ஈறுதிரிந்து அதன் என ஆனதற்கும், பசு + இன் - வகர உடம்படுமெய்யால் இகரம் திரிந்து பசுவின் என ஆனதற்கும் உதாரணங்களாம். அதனுடைய பொருள், பசுவினுடைய கன்று என உடைமைப் பொருளில் வந்தன. இந்த அன், இன் இரண்டும் பொதுச்சாரியைகள் ஆகும். (263)

**99. ஆன், அன், ஒன்எனும் மூன்றும் ஆண்பால்**
**உடைமை காட்டும்; மயிலான் முருகன்**
**சேவ லோன்எனச் செப்பிடல் உதாரணம்.**

ஆன், அன், ஒன் ஆகிய மூன்றும் ஒரு பெயர்ச்சொல்லுடன் விகுதியாகப் புணர்ந்து உடைமையைஉடைய ஆண்பாலைக் குறிக்கும். மயிலான், முருகன், சேவலோன் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆம் என்றவாறு.

மயிலை உடையவன், முருகை உடையவன், சேவலை உடையவன் என்று உடைமைப் பொருளில் வந்தன. இவை வினைக்குறிப்பு விகுதிகள் எனப்படும். (264)

**100. மொழியீற்று ஐவரில் செய்மாறு உணர்த்தும்**
**குரவனை வணங்குஎனல் குலவுஉதா ரணமே.**

ஒரு சொல்லின் இறுதியில் ஐ (என்ற உருபு) சேருமாகில் அது அச்சொல்லைச் செயப்படுபொருளாகக் காட்டும். குரவனை வணங்கு என்பது எடுத்துக்காட்டாகும் என்றவாறு.

ஐகாரத்தினால் இறும் இயல்பான யானை,வாழை போன்ற சொற்களைஅன்றித் தனியாக ஐ உருபு சேர்தலைக் குறிக்க மொழி ஈற்று ஐ வரில் என்றார். இது இரண்டாம் வேற்றுமை உருபு. (265)

**101. அஃறிணைப் பன்மைச் சுட்டோடு அன்இன்**
**ஐமுதற் பிறவரில் அற்றென இடைவரல்**
**வாய்பாடு; உதாரணம் அவற்றன் இவற்றின்**
**எவற்றை எனல்போன்று இசைப்பார் புலவோர்.**

பலவின்பால் சுட்டோடு அன், இன், ஐ முதலிய இடைச் சொற்கள் சேரும்போது அவைகளின் இடையே அற்று (ச் சாரியை) என ஒன்று தோன்றுதல் உண்டு. அவற்றின், இவற்றின், எவற்றை என்பன இதற்கு உதாரணங்களாம் என்றவாறு.

ஐ முதல் பிற என்றதனால் ஆல், ஒடு, உடன், கு ஆகிய உருபுகளையும் கொள்க "வவ்விறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே"[1] என்றது இதுவே. (266)

**102. இல்எனல் உடைமையை உவமையை உயர்ச்சி-**
**தாழ்ச்சியை வினையைக் காட்டத் தகும்குறி;**
**மதியில் மறுஎனல், பாலில்வெண் பொடிஎனல்,**
**அதில்நலம் இதில்இழிவு என்றிடல், அவையிற்**
**பேசல் எனல்இவை பிறங்குஉதா ரணமே.**

இல் என்னும் இடைச்சொல் உடைமை, உவமை, உயர்வு தாழ்வு, வினை ஆகியவற்றைக் காட்டும் அடையாளம் ஆகும். மதியில் மறு, பாலில் வெண்பொடி, அதில் நலம், இதில் இழிவு, அவையிற்பேசல் என்பன முறையே இவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாம் என்றவாறு.

மதியில்மறு என்பதனை மதியினுடைய மறு எனக் கொண்டு உடைமைப்பொருள் என்கிறார். மதியின் மறுஎனில் உடைமைப்

---

1 நன்னூல் 250

பொருள் சரியே. மதியில் மறு என்புழி ஏழன்உருபாகக் கொள்ளலே தக்கதென்று தோன்றுகிறது. இல் சாரியை எங்கும் ஆறாம் வேற்றுமையில் வருவதாகத் தெரியவில்லை.

பாலில் வெண்பொடி-பால் போன்ற வெண்ணீறு என உவமைப் பொருளில் வந்தது. அதில்நலம், இதில்இழிவு என்பன வற்றையும் முறையே அதன்கண் உள்ள, இதன் கண் உள்ள என ஏழாம் வேற்றுமையாகவே கொள்ளலாம். அவையிற் பேசலும் இதுவே. இவர் இல் என்னும் இடைச்சொல்லை அடுத்துவரும் சொல்லைக் கொண்டு உயர்ச்சி, தாழ்ச்சி, வினை என்கிறார். அவையில் பேசல் என் பதை வினை என்று சொன்னால் மதியில் மறு என் பதைப் பெயர் என்றும் கூறலாமே. எனவே இல் என்பதனை ஏழாம் வேற்றுமை உருபாகவும், உவம உருபாகவும் கொள்ளலே சரி எனத் தெரிகிறது. (267)

**103. இல்லே இன்னன விளங்கல்உண்டு உதாரணம்**
**வேட்டலின் என்றதோர் மெய்ம்மொழி யாமே.**

இல் என்னும் இடைச்சொல்லே இன் எனவும் வருவது உண்டு. வேட்டலின் எனக் கூறுகின்ற திருக்குறள் ஆட்சியே இதற்கு உதாரணம் ஆகும் என்றவாறு.

இந்நூற்பா "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின் உயிர்சொரிந்து உண்ணாமை நன்று"[1] என்ற திருக்குறளை நினைந்து கூறியது. திருக்குறள் வேதம் என்ற பொருளில் மெய்ம்மொழி எனப்பட்டது. இல் இன் ஆகத் திரிந்து வருவது வேறு; முன் 262 ஆம் நூற்பாவில் கூறப்பட்ட ஆறாம் வேற்றுமைச் சாரியையாகிய இன் வேறு. அது இயல்பு, இது திரிவு. (268)

**104. உம்எனல் ஒன்றோடு ஒன்றைக் கூட்டவும்,**
**உயர்ச்சியைத் தாழ்ச்சியை உணர்த்தவும், பின்னைக்**

---

1 திருக்குறள்

**கால வினையைக் காட்டவும் தோன்றும்;**
**உதாரணம் வேலும் மயிலும் என்கையும்,**
**தெய்வமும் பொய்யோ, நானும்உய் வேனோ**
**என்பவும், இரங்கும் என்றலும் ஆமே.**

உம்மை ஒரு பொருளோடு மற்றொரு பொருளைச் சேர்த்துக் கூறவும், உயர்வையோ அல்லது தாழ்வையோ குறிப்பிடவும், எதிர்கால விகுதியாகவும் பயன்படுத்தப்படும். வேலும் மயிலும், தெய்வமும் பொய்யோ, நானும் உய்வேனோ, இரங்கும் என்பன முறையே இவற்றிற்கான உதாரணங்கள் ஆம் என்றவாறு.

வேலும் மயிலும்-எண்ணும்மை; தெய்வமும் பொய்யோ -உயர்வு சிறப்பு; நானும் உய்வேனோ-இழிவு சிறப்பு; இரங்கும்-எதிர்கால விகுதி. "எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே"[1] என்பதில் சில இந்நூற்பாவில் இடம் பெற்றன. (269)

**105. ஏன்ஏம் ஓம்ஆம் என்பவை தன்தம்**
**வினைக்குறி ஆகுப; உதாரணம் விளம்பின்**
**மறவேன் சென்றேம் வந்தோம் நின்றாம்**
**என்னும்நான் மொழியும் ஆம்எனல் இயல்பே.**

ஏன், ஏம், ஓம், ஆம் என்பவை தன்மை ஒருமை பன்மைகளுக்குரிய வினைமுற்று விகுதிகள் ஆகும். மறவேன், சென்றேம், வந்தோம், நின்றாம் என்னும் நான்கும் இதற்கு எடுத்துக்காட்டுகளாம் என்றவாறு.

ஏன்-தன்மை, ஒருமை வினைமுற்று விகுதி.

ஏம், ஓம், ஆம்-தன்மை, பன்மை வினைமுற்று விகுதிகள். (270)

**106. ஆள்அள் இரண்டும் ஆன்அன் ஆண்பாற்கு**
**உறுதலில் பெண்பா லுடனுறும் அன்றே.**

---

1 நன்னூல் 425

ஆன் அன் என்பவை எவ்வாறு ஆண்பாலில் உடைமையைக் குறிக்க வருகிறதோ அவ்வாறே ஆள், அள் ஆகிய இரு விகுதிகளும் பெண்பாலுக்கு வரும் என்றவாறு.

இந் நூற்பாவை 263ஆம் நூற்பாவுடன் மாட்டேற்றிக் கொள்க. சாயல்+ஆள்=சாயலாள்; மேனி+அள்=மேனியள் என உடைமையைக் காட்ட வரும்.

இனி ஆள், அள் என்பனவற்றை வினைமுற்று விகுதிகளாகக் கொண்டு கண்டாள், கண்டனள் என்பவைபோல வரும் எனினுமாம். (271)

**107. குகரம் தனித்தும், உகரமுற் கொண்டும்,**
**ஒருமொழி ஈறு திரியத் திரியாது**
**ஒற்று மிகுத்தும், அதனோடு அத்துஎனும்**
**சொல்இடை தோன்றியும் துலங்கப் புணரின்**
**மற்றும் ஓர்மொழி வருமாறு செய்யும் ;**
**அவற்கு நலம்எனல், ஆவுக்கு நீர்எனல்**
**எதுக்குச் சரிஎனல், வீரத் துக்குவேல்**
**எனல்உதா ரணமாம் இனிதுஉணர் வார்க்கே.**

கு என்னும் (நான்கன்) உருபு தனியாகவோ, தனக்கு முன் உகரத்தைப்பெற்றோ, தான்புணரும் நிலைமொழியின் ஈற்றைத் திரித்தோ, திரிக்காமலோ, மெய்யெழுத்து மிகுத்தோ, அத்துச் சாரியையும் பெற்றோ ஒரு சொல்லுடன் புணர்ந்தால் பொருளை முற்றுவிக்க வேறொரு சொல்லை வருவிக்கும். அவற்கு நலம்,ஆவுக்குநீர், எதுக்குச்சரி, வீரத்துக்குவேல் என்பன இதற்கு உதாரணமாம் என்றவாறு.

அவற்கு நலம்-குவ்வுருபு தனித்து வந்தது. ஆவுக்கு நீர் -உகரத்தை முன் பெற்று வந்தது. இவ்விரண்டும் நிலைமொழி ஈற்றைத் திரித்துப் புணர்ந்தன. எதுக்குச்சரி-இனமெய் மிகுத்துப் புணர்ந்தது. நிலைமொழி ஈறுதிரியாத புணர்ச்சிக்கும் இது எடுத்துக்காட்டு. வீரத்துக்கு வேல் – நிலைமொழி ஈறு திரிந்து அத்துச்சாரியை பெற்றுவந்தது. நான்கன் உருபு

இதற்கு இது எனும் பொருளில் வருதலின் மற்றும் ஓர்மொழி வருமாறு செய்யும் என்றார். (272)

**108.** **ளளமெய் ஈற்றுடைச் சொல்லொடு வல்லினத்து**
**உயிர்மெய் முதலுடை வினைமொழி இசைவுறீஇ**
**றடமெய் ஆம்கால் ஐஎனக் கொளல்முறை;**
**முருகற் பணிதலும், கலைமகட் கருதலும்**
**உதாரணம்; வேந்தர்ச் சேர்தரல் என்னல்**
**போல்வன பன்மைக்கு அப்பொருள் விளைக்கும்**
**மொழிகள்என்று உரைப்பார் முத்தமிழ்ப் புலவோர்.**

நிலைமொழி ஈறு ன, ள மெய்களுள் ஒன்றாக இருந்து அவை வருமொழிமுதல் வல்லினத்தோடு புணர்ந்து ற,ட மெய்களாகத் திரியும்போது அங்கு (இரண்டன் உருபாகிய) ஐ யின் பொருளைக் கொள்ளலே சரியாகும். முருகற் பணிதல், கலைமகட் கருதல் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாம். வேந்தர்ச் சேர்தரல் என்பதுபோல ரகரமும் இனமெய்யும் பெற்றுவருபவை பன்மையில் இரண்டாம் வேற்றுமைப் பொருள் விளைக்கும் என்பர் புலவர் என்றவாறு.

முருகன் பணிதல் – எழுவாய்த் தொடர். முருகற் பணிதல் – முருகனைப் பணிதல் என்னும் பொருளில் வந்த இரண்டன் தொகை.

கலைமகள்கருதல், கலைமகட் கருதல் என்பனவும் இவ்வாறே.

வேந்தன் சேர்தரல், வேந்தர் சேர்தரல்-அல்வழிப்புணர்ச்சி.

வேந்தறசேர்தரல் – வேந்தனைச் சேர்தரல் – வேற்றுமை – ஒருமை.

வேந்தர்ச்சேர்தரல் -வேந்தர்களைச் சேர்தரல்-வேற்றுமை - பன்மை (273)

**109.** **ஒருபொரு ளுடன்அதன் உடைமையைப் பொருத்தில்**
**இன்எனும் மொழியிடை தோன்றாது இசைவுறும்;**
**உமைமகன் எனும்சொல் உதாரணம் ஆமே.**

ஒரு பெயர்ச்சொல்லுடன் அதனுடைய உடைமைப் பொருளில் வரும் மற்றொரு பெயர்ச்சொல்லைச் சேர்க்கும் பொழுது இன் என்னும் சாரியை இல்லாமலும் இருக்கலாம். உமைமகன் என்பது இதற்கு எடுத்துக்காட்டு ஆகும் என்றவாறு.

இச்சாரியை பெற்று உமையின் மகன் எனவும் வரலாமாதலின் உரையில் அவ்வாறு கூறப்பட்டது. உமைக்கு மகன் என்னும் உறவுமுறையை இந்நூலாசிரியர் பேச்சு வழக்கை நோக்கி உடைமைப் பொருளாகக் கொள்கிறார். ஆனால், "கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அது வாதல், பொருட்டு, முறை ஆதியின் இதற்கு இது எனல்"[1] நான்காம் வேற்றுமைப் பொருள் என்பதே தமிழ் இலக்கண மரபாகும். (274)

**110. ஆல்எனல் ஆதலின் எனும்பொருள் ஆதலும்**
**ஏல்எனல் என்றால் என்னத் திரிதலும்**
**கொல்எனல் ஐயக் குறியும் ஆதலும்**
**தேடுபு என்கை தேடிஎன்று ஒளிர்தலும்**
**இனத்தால் பன்மையில் ஒருமைவந்து எய்தலும்**
**அன்னசொல் திரிவுஎலாம் அருந்தமிழ்ப் புலவோர்**
**மரபால் தேறிடல் வழக்குஎனத் தகுமே.**

ஆல் ஆதலின் என்ற பொருளில் வருதலும், ஏல் எனற்பாலது என்றால் என்று திரிதலும், கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளில் வருதலும், தேடுபு என்ற சொல் தேடி என்ற எச்சமாதலும், இனத்தாற் பன்மையாகிய பொருள் ஒருமை முடிபைப் பெறுதலும் போன்ற சொல்திரிவுகள் அனைத்தும் புலவர்களின் வழக்காற்றினால் அறிந்து தெளிய வேண்டியனவாகும் என்றவாறு.

வந்தது ஆதலின் பார்த்தேன் என இருக்க வேண்டியது வந்ததால் பார்த்தேன் என வழங்கப்படுகிறது. அவ்வாறே வந்தானேல் என்பது வந்தானென்றால் எனப்படுகிறது.

கொல் என்பது வெறும் அசைச் சொல்லாக மட்டும் நில்லாலாமல் "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை

---

1 நன்னூல் 298

மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"[1] என்புழிப்போல ஐயப் பொருளிலும் வருகிறது. இந்நூல் 227 ஆம் நூற்பாவில் கொல் அசையாக வருதலை மட்டும் குறிப்பிட்டார். எனவே இங்கு ஐயக்குறியும் என எச்சஉம்மை கொடுத்தார்.

இவர் விகுதிகளைக் கூறும் போது (இந்நூல் 226) பு என்னும் வினையெச்ச விகுதியைக் கூறவில்லை. செய்பு என்னும் வாய்பாடாய் வந்த தேடுபு என்ற வினையெச்சம் வழக்கில் தேடி என வழங்கப்படுதல் இந்நூற்பாவில் கூறப்படுகிறது.

"கண்ணும் தோளும் முலையும் பிறவும் பன்மை சுட்டிய சினைநிலைக்கிளவி பன்மை கூறும் கடப்பாடு இலவே"[2] என்னும் நூற்பாவால் கூறப்பட்டனவும் சேனை, ஊர் போன்ற பல பொருட்களின் கூட்டமும் அடங்க இனத்தால் பன்மை என்றார். சேனை வென்றது. ஊர் திரண்டது என ஒருமையில் வந்தாலும் பல வீரர்களின் தொகுதியும், பல மக்களின் கூட்டமும் ஆகிய பன்மையே கருத்தாம்.

"சொற்றொறும் இற்றுஇதன் பெற்றிஎன்று அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவில ஆதலின் சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும் தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே"[3] என்ற பவணந்தியார் கருத்தையே அவ்வாறு தெளிவதற்கு இலக்கிய மரபையே கருவியாகக் கொள்ள வேண்டும் என்னும் நெறியையும் காட்டி முடிக்கிறார் இவ்வாசிரியர்.

(275)

**111. தல்ஆர் அல்அர் பாக்கு முதலிய**
**விகுதியின் நிலைஎலாம் வெள்ளியங் கிரிநேர்**
**பொதிய மால்வரைப் பூம்பொழிற் றென்றற்**
**பரவுவார் மனத்துஓர் பால்கிடப் பனவே.**

தல், ஆர், அல், அர், பாக்கு முதலிய விகுதிகளின் தன்மைகள் அனைத்தும் கயிலைக்கிணையான பொதியமலையின்

---

1 திருக்குறள்
2 தொல். சொல். 62
3 நன்னூல் 461,

மலர்ச்சோலைகளில் தோன்றும் தென்றலைப் போற்றும் அறிஞர்களின் உள்ளத்தின் ஒரு பகுதியில் இருக்கும் என்றவாறு.

தமிழ்ப் புலவர்கள் தென்றலைப் போற்றுதல் அது தமிழோடும் அகத்திய முனிவரோடும் தொடர்புடைமைபற்றி. புலவர்மனத்து ஓர்பால் கிடப்பன என்றது அவர்கள் அறிவர் என்ற பொருளில் அவர்களை அணுகித் தெளிக என்பது குறிப்பு. இவ்விகுதிகள் பல்வேறு நிலைகளில் வருதலின் இவ்வாறு கூறப்பட்டது. (276)

**112. உலகம் எங்கணும் நிகழ்ஒலி உருவாய்**
**சொற்களை இவ்வணம் சுருக்கிச் சொற்று**
**வேறுஇலக் கணம்சொல விரும்புகின் றனமே.**

உலக முழுவதிலும் ஒலி உருவாக விளங்குகின்ற சொற்களின் இலக்கணத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறி முடித்து இனி அடுத்துப் பொருள்ஆகிய வேறு ஓர் இலக்கணத்தைக் கூற விரும்புகிறோம் என்றவாறு.

உலகம் என்றது வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்உலகத்தை. என்னை? இவர் இலக்கணம் கூறியது தமிழ்ச் சொற்களுக்கே ஆதலின். இங்கேகூறப்பட்டவை சொல் உலகின் பொருள்களான சொற்களின் இலக்கணமேஅன்றிப் பொருள்உலகப் பொருள்களான பண்டங்களின் இலக்கணம் அன்று எனத்தெளிவாக்க ஒலி உருவாய் நிகழ்சொல் என்றார்.

இச்சூத்திரத்தால் அறுவகைஇலக்கணத்தின் இரண்டாம் இலக்கணமாகிய சொல்லிலக்கணம் நிறைவுசெய்யப்பெற்று அடுத்து மூன்றாவதாகிய பொருள் இலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்டது. (277)

**சொல்இலக்கணம் முற்றிற்று.**

ஆக மொத்தச் சூத்திரம் 277.

# 3. பொருள் இலக்கணம்

சொல் இலக்கணத்தை 112 நூற்பாக்களால் நிறைவு செய்த ஆசிரியர் அடுத்து நிறுத்தமுறையானே பொருள் இலக்கணம் கூறத் தொடங்குகிறார். இப் பொருளிலக்கணம் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் கூறுவதுபோல் புத்தமைப் புடையது. அவர், "அகமும் புறமுமாய் எழுதிணை பற்றிக் களவு, கற்பு என்றும், வெட்சி, வஞ்சி முதலியனவாகவும் உரைக் கும் பொருள்இலக்கண மரபு பண்டை இலக்கிய மரபாகும். சுவாமிகள் வகுத்துரைக்கும் பொருளிலக்கணமோ மக்களின் நடைமுறை வாழ்வினை மையமாகக் கொண்டு விளக்கும் புது முறையில் அமைந்த பொருளிலக்கணமாகும்"[1] என்கிறார்.

இந்நூல் பொருளை அகப்பொருள், புறப்பொருள், அகப் புறப்பொருள் என மூவகையாகப் பகுத்துரைக்கிறது. இவ்விலக் கணம் தோற்றுவாய், உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமை இயல்பு,துறை இயல்பு ஆகிய ஐந்து இயல்புகளை அகப் பொருளி லும், நிலத்தியல்பு, உழியியல்பு, வேற்றுயிரியல்பு, கருவிஇயல்பு, தொகுப்பியல்பு ஆகிய ஐந்து இயல்புகளைப் புறப்பொருளிலும், அகப்புறப்பொருள் நிலை என்ற ஓர் இயல்பை அகப்புறப் பொருளிலும் ஆக மொத்தம் பதினோர் இயல்புகளைக் கொண்டு விளங்குகிறது. இப்பொருளிலக்கண மொத்த நூற் பாத்தொகை நூற்றிருபத்திரண்டாகும்.

## I. அகப்பொருள்

### 1. தோற்றுவாய்

1. **தெருள்இலக் கணம்உணர் சிறுமுனி வழிபட**
   **அருள்இலக் கணம்பகர் அறுமுகத்து ஒருவனை**
   **மருள்இலக் கணம்அற வழுத்தும் மாண்பால்**
   **பொருள்இலக் கணமும் புகலுதும் சிறிதே.**

---

1 அறுவகை இலக்கணம். சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிப் பதிப்பு முகவுரை

தெளிவான மெய்யறிவின் தன்மையை உணர்ந்தவராகிய அகத்தியர் வழிபாடு செய்ததால் அவருக்குஅருளின் தன்மையை உபதேசித்தருளியவராகிய முருகப் பெருமானை (எம்மை வருத்தும்)அறியாமையின் தன்மை நீங்குமாறு போற்றுகின்ற சிறப்புடையேமாதலின் பொருளிலக்கணத்தையும் ஒரு சிறிது கூறலுற்றாம் என்றவாறு.

இந்நூற்பா தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் கூறுவதால் பொருள் இலக்கணத்தின் தற்சிறப்புப்பாயிரம் ஆகிறது. பொருள் இலக்கணமும் என்பதில் உள்ள உம்மை எழுத்து,சொல் இலக்கணங்களைத் தழுவியது.

இவர் முந்தையோர் கண்ட முறையில் பொருளிலக்கணம் கூறவில்லை. புது முறையில் அமைத்துக் கொள்கிறார். மிக விரிவாகவும் கூறவில்லை. இவரே ''அகப்பொருள் காமம் புறப் பொருள் சமர் என்று அறைந்துளார்; யாமும் அறுவகை இலக்கணத்து ஒருவா சொற்றுளம்; உணர்வது கடனே''[1] என்கிறாராதலின் சிறிதே என்றார். (278)

**2. அகப்பொருள் புறப்பொருள் அகப்புறப் பொருள்என**
**முப்பொருள் கூறுதும் முறைப்படி உணர்ந்தே.**

பொருளை முறையாக அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப்பொருள் என மூவகையாகப் பிரித்து அவற்றின் தன்மைகளை உணர்ந்து கூறுவாம் என்றவாறு.

தொன்மையான நூல்கள் அகம் புறம் என்னும் இரு பகுதிகளை மட்டுமே கூற, இவர் அகப்புறம் என்னும் மூன்றாவதொன்றைப் புதியன புகுதலாக சேர்த்துக் கொள்கிறார்.(279)

**3. அகப்பொருள் இலக்கணம் அம்பிகை பாகனும்**
**நந்தியம் பகவனும் நறைகமழ் மலர்உதிர்**
**பொழில்மலி தமிழ்வரைப் புனிதமா தவனும்**
**சீரிய புலமைத் திருவள் ளுவன்முதற்**
**பலரும் கூறிடல் பார்மிசைக் கேட்டும்**
**நாணுறாது இவ்வயின் நவிலல்உற் றனமே.**

---

1 ஏழா. இலக். 258.

மாதொரு பாகராகிய சிவபெருமானும், நந்தியம் பெருமானும், மணமிக்க மலர்களைப் பொழிகின்ற சோலைகள் நிறைந்த பொதிய மலையில் உள்ள அகத்தியரும், மாண்பமைந்த பெரும் புலவராகிய திருவள்ளுவர் முதலிய பலபெரும் கவிஞர்களும் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறிஇருக்கிறார்கள் என்பதை உலகினர் கூறக்கேட்டும் வெட்கமடையாமல் யாமும் இங்கு அதனைக் கூறத் தொடங்குகிறோம் என்றவாறு.

இந்நூற்பா முந்தைய நூலாசிரியர்களை அவையடக்க வாய்பாட்டாற் சுட்டுகிறது. இறையனார் அகப்பொருளும், அகத்தியரால் இயற்றப்பெற்றனவாகக் கருதப்பெறும் பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னுமிரண்டும் இங்குக் குறிக்கப்பெற்ற இலக்கணங்கள் ஆகும். திறக்குறள் அகப்பொருளிலக்கணத்தின் இலக்கியமாக இங்குச் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறுகிறது.

காம சாத்திரத்தின் முதல் ஆசிரியராக நந்தியைக் கூறம் இந்திய மரபுபற்றி நந்தியம் பகவனும் இங்கு அகப்பொருள் ஆசிரியராகக் கூறப்பட்டுள்ளார். "எல்லா உலகும் படைத்த விதி இயற்றும் தருமம் பொருள் இன்பம் வல்லோர் உணரச் சொன்னவற்றுள் மற்றை இரண்டும் பிறர் செய்தார்; நல்லர் நந்தி இன்பநூல் ஞாலம் எடுக்க அது சுருக்கிச் சொல்லாரியத்தில் ஈரஞ்ஞூறு அத்யாயம்போற் சொன்னானே"[1] என்பது இன்பநூல். மெய்யுறு புணர்ச்சியும் அகப்பொருளின் செம்பாதியாதலின் அத்துறையின் இலக்கண ஆசிரியரும் ஈண்டுக் குறிக்கப்பட்டார். (280)

**4. பூவின் மணம்எனப் புனிதத் தமிழினுக்கு**
**ஆவி ஆகும் அகப்பொருள் இயல்பே.**

மலருடைய சிறப்பிற்கு நறுமணம் எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறு தூய தமிழ்மொழியினுடைய சிறப்பிற்கு அகப்பொருள் இலக்கணம் மிக இன்றியமையாதவொன்றாம் என்றவாறு. (281)

---

1 கொக்கோகம் 9

**5. இயற்கையின் மனத்தினுக்கு இன்ப மேஇனிது**
**ஆதலின் அகப்பொருள் அஃதுஎனல் இசைவு;அதுள்**
**உறுப்புஇயல்பு அதனைமுன் உரைக்குதும் சிறிதே.**

இன்பத்தையே விரும்பித் துய்த்தல் உள்ளத்திற்கு இயல்பாகும். எனவே இன்பப்பாலை அகப்பொருள் எனக்கூறுவது பொருத்தமானதே. அவ்வகப்பொருளில் முதலில் உறுப்பு இயல்பினைக் கொஞ்சம் கூறுவாம் என்றவாறு.

அகப்பொருள் என்பதற்கு அகத்தால் விரும்பப்படும்பொருள் எனப் பொருள்கொண்டால் அவ்வாறு விரும்பப்படும் பொருள் இன்பமே ஆதலின் அப்பெயர் பொருத்தமானதே என்கிறார். இந் நூற்பாவால் இவ் விலக்கணத்தின் முதற்பகுதியாகிய உறுப்பியல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்கிறார். (282)

## 2. உறுப்பியல்பு

இவ்வியல்பில் இன்பப்பொருளாம் மகளிரின் உறுப்புநலன்கள் விளக்கப்பட்டுள்ளன. இந் நலங்களுள் இயற்கையாக அமைந்தவை இவையிவை எனவும், செயற்கையால் விளைபவை இவையிவை எனவும் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. உவமான சங்கிரகம் என்னும் தனி உவமையணி நூல்களின் பெரும்பகுதி இங்கு இடம்பெற்றுள்ளது. இது தலைவியின் கூந்தலில் தொடங்கி அடி முடியக் கேசாதி பாதமாகக் கூறப்பட்டுள்ளது. பொதுவாக மகளிரைக் கேசாதி பாதமாகவும், ஆடவரைப் பாதாதி கேசமாகவும் வருணிக்க வேண்டுமென்னும் கவிமரபு பற்றி இங்ஙனம் கூறினார். இவ்வியல்பு 23 நூற்பாக்களை உடையது.

**6. கரியவார் குழலிற் கட்டலும், அவிழ்த்தலும்,**
**பின்னலும், பிரித்தலும், பிறைமுதற் பணிகளும்,**
**மலரொடு வண்டும் வந்துவந்து அகல்வன;**
**வழுதிகண்டு அரன்நுவல் மணம்அக லாதுஉற்று**
**அரியபொற் பாவை அணிக்குஅணி யாமே.**

கருமையான நீண்ட கூந்தலுக்குக் கொண்டையாகக் கட்டுதலும், அவிழ்த்து விடுதலும், பின்னிக் கொள்வதும், பிரித்துவிட்டுக் கொள்ளலும், சந்திரபிறை, சூரிய பிறை போன்ற அணிகலன்களும், பூச்சூடிக் கொள்ளலும், அதை நாடிச் சுரும்பினங்கள் நெருங்குதலும் அப்போதைக்கப்போது ஏற்பட்டு நீங்கும் சிறப்புகளாகும். பாண்டியனால் நுகரப்பட்டு இறையனாரால் கூறப்பட்ட இயற்கைமணம் பெறுவதற்கரிய தங்கச்சிலை போன்ற பெண்களின் வனப்பிற்கு வனப்பாகும் என்றவாறு.

இந்நூற்பாவில் கருமை, நீட்சி, வாசனை ஆகிய மூன்றும் மகளிரின் கூந்தலுக்கு இயற்கை வனப்புகள் என்பதுவும், கொண்டை, பின்னல் போன்ற தலையலங்காரம், அணிகலன், மலர், வண்டுமூசல் ஆகியன செயற்கைப் புனைவுகள் என்பதுவும் எடுத்துக்காட்டப்பட்டன.

வண்டுகள் கூந்தலுக்காக வாராமல் மலர்களுக்காகவே வருதலின் மலரொடு வண்டு என ஒடுக்கொடுத்தார். "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகை இரண்டாம் பாடல் பற்றிய திருவிளையாடற்புராண வரலாறு இதில் இடம்பெற்றது. இவ் வாசிரியர் உத்தமசாதி மகளிரின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்ற கொள்கையர் என்பது இதனால் தெரிகிறது.

பிறை முதற் பணிகள் என்றது சூரிய பிறை, சந்திர பிறை, திருகுப்பூ, தெய்வவுத்தி முதலிய தலைக்கோலத்திற்குரிய அணிகலன்களை. (283)

**7. அருமகள் நெற்றியில் அம்பொற் சுட்டியும்**
**பட்டமும் திலகம் ஆதியும் பனித்துளி**
**அன்ன வேர்வையும் அகன்றுவந்து ஒன்றுப;**
**அகலமும், கவிழ்பிறை அன்ன தோற்றமும்**
**இயல்பின வாகி இயங்குறும் அன்றே.**

பெறுதற்கரிய மங்கையின் நுதலில் அழகிய பொன்னாலாகிய சுட்டியும், நெற்றிப்பட்டமும், குங்குமப்பொட்டு முதலிய திலக வகைகளும், பனித்துளிகளைப் போன்று குறுவேர்வரும்பலும்

இடையிடையே பொருந்தி நீங்கும் செயற்கைச் சிறப்புகளாம். நெற்றி நன்கு அகன்றிருத்தலும், பிறைமதியைக் கவிழ்த்து வைத்தாலன்ன உருவப் பொலிவும் அதற்கு இயற்கையாய் அமைந்த எழிலாம் என்றவாறு.

வேர்வை இயற்கை நிகழ்ச்சியாயினும் பெருநாண், மெய்யுறு புணர்ச்சி போன்றவைகளால் அவ்வப்போது தோன்றி மறைதலின் ஒப்பனைகளோடிணைத்துக் கூறினார். (284)

**8. பருவ மடவரல் அன்ன பாங்கினள்**
**புருவத் துணையில் போர்மதன் கருப்புச்**
**சிலைபொரு தோற்றம் சிறிதும் ஓவா;**
**குனிப்புஉறழ் செயலது குலவி மறையுமே.**

இளமை, மடப்பம் போன்ற மங்கையர்க்குரிய சிறப்புகளைப் பெற்றுள்ள மகளிரின் இணைப் புருவங்களில் பூசலியற்றும் மாரனுடைய கரும்புவில்லைப்போன்ற எழில் வளைவுத்தோற்றம் ஒருபோதும் நீங்காது. புருவத்தை வளைத்தல், உயர்த்தல் போன்ற பிற செய்கைகள் செயற்கையால் விளைந்து மறையும் என்றவாறு.

மடவரல் என்ற சொல், ''மடவரல், உண்கண், வாள்நுதல் விறலி''[1] என்புழிப் போல மடப்பம் என்ற பொருளில் ஆளப் பட்டது.உபலக்கணமாக அச்சம், நாணம், பயிர்ப்பு என்பனவற் றையும் கொள்க. குனிப்பு உறழ் செயல் என்றது ''நெறித்து மீறியிடங் கோட்டல் சுழித்திடல் குழிப்பாமே''[2] போன்ற செயற்கை மாற்றங்களை. (285)

**9. நேரிழை கண்களின் நீட்சியும் கருமையும்**
**மருட்சியும் அகலமும் வரிச்சீரும் இயற்கை;**
**கடைபடு செம்மையும் கடுவோடு அமிழ்தும்**
**மதிக்கனல் சூட்டால் வரும்நீரும் மாறுமே.**

---

1 புறம். 89. 2 பிரபந்தத் திரட்டு V-3

தக்க அணிகலன்களை அணிந்துள்ள மங்கையின் விழிகளுக்கு நீண்டிருத்தலும் கருமை நிறமும், மருட்சியான பார்வையும், அகலமும், செவ்வரி படர்ந்த அழகும் இயற்கையா யமைந்த பொலிவுகளாகும். கடைக்கண்கள் சிவத்தலும், விடமும் அமுதமும் போல் பார்வையால் துன்பத்தையும் இன்பத்தையும் மாறிமாறித் தருகின்ற பண்பும், நிலவு அழல்போல் வெதுப்புதலால் கண்ணீரைச் சிந்துதலும் காரணம் உள்வழித் தோன்றி அது நீங்க மறைவனவாம் என்றவாறு.

கடைபடு செம்மை என்றது கலவியில் இதழ் வெளுத்துக் கண்கள் செம்மை நிறமடைவதை.இது மங்கையர்க்குச் சிறந்த எழில் தரும். இனிக் 'கடைபடு செம்மை' என்பதனை இரட்டுற மொழிதலாக்கிச் சினத்தால் கண்கள் சிவத்தலையும் கொள்க. கண்கள் சிவக்குமளவு பெருஞ்சினம் கொள்ளல் பெண்களின் மென்மையான இயல்பிற்குச் சற்றும் ஏலாததுஆதலின் கடைபடு என்ற அடை புணர்த்தார். பொதுநோக்கால் ஆடவர்க்கு விடம் போன்ற துன்பத்தையும், சிறப்பு நோக்கால் அமுதம் போன்ற இன்பத்தையும் தருதல் குறிக்கப்பெற்றது. தண்மதி நிலவு கனலாய் வாட்டுதல் பிரிவுக் காலத்தில் ஆகும். (286)

**10. நல்லாள் நாசியில் நாண்மலர் துத்தி**
**போலும் பணிவரும் போகும்;எட் புதுப்பூ**
**அனைய தன்மை அசையாது ஒளிருமே.**

சிறப்புமிக்க மங்கையின் மூக்கில் அன்றலர்ந்த துத்திப்பூ போன்ற மூக்குத்தி செயற்கைப் புனைவாம்; எள்ளின் புதிய மலர்போன்ற வடிவம் மாறாது விளங்கும் இயற்கைத் தன்மை யாகும் என்றவாறு.

''எள்ளும் குமிழும் இலவுஅலர் காம்பும் அள்ளும் சண்பகத்து அரும்பும் நாசிக்கே''[1] என்பது உவமான சங்கிரகம். (287)

---

1 உவமான சங்கிரகம் 24.

**11. அணியிழை செந்நிறத்து ஆம்பல் மலர்வாய்க்கு**
**இதழ்ச்சுவை, சொல்லிசை, வெண்ணகை நிரைநயம்**
**இயற்கை; ஊடலில் இகழ்ந்தழல் ஏனைய.**

நல்ல அணிகலன்களைப் புனைந்துள்ளவளாகிய நங்கையின் செவ்வல்லி மலரைப்போன்ற வாய்க்கு இதழ்களின் கனிச்சுவையும், இசையைப்போல் கேட்டாரை உவப்பிக்கும் சொல்லினிமையும், வெண்மையான பற்களின் வரிசையால் ஏற்படும் பொலிவும் இயற்கை அழகுகளாம். ஊடுங்காலை இகழ்ந்து கூறலும், அழுதலும் செயற்கைப் பண்புகளாம் என்றவாறு. (288)

**12. புனையிழைப் பசுங்கிளி போலும் அங்கனை**
**கவுட்குஒளி இயற்கை; கமழ்ச்சியும் குறியும்**
**மஞ்சளொடு கணவன் வருவிப் பனவே.**

சிறந்த அணிகளைப் பூண்டுள்ளவளாகிய பச்சைக்கிளியைப் போன்ற மங்கையின் கன்னத்திற்குப் பிரகாசம் இயற்கையாம். நறுமணம் மஞ்சளாலும், பற்குறி நகக்குறிகள் தலைவனாலும் ஏற்படும் செயற்கைச் சிறப்புகளாம் என்றவாறு.

இது நிரல்நிரைப் பொருள்கோள். (289)

**13. சேயிழைப் பூங்கொடி செவிக்குத் தலைவன்**
**திறல்கேட்டு உவகையைச் சிந்தையிற் பொருத்தல்**
**இயற்கை; இடுதொளை வளர்ச்சியொன்று இயற்கைநேர்**
**செயற்கை; மணிக்குகை செம்பொன் ஓலைகள்**
**ஆடலும் மாறலும் செயற்கை ஆமே.**

செம்மையான அணிகலன்களைப் பூண்ட பூங்கொடிபோல் வாளாகிய பெண்ணின் காதுகளுக்குத் தன் கணவனின் பெருமையைக் கேட்டு, அதனால் விளையும் மகிழ்ச்சியை மனத்தில் இருத்தி வைத்தல் இயற்கைக் குணமாம். பூண்களைப் பூட்டுவதற்காகச் செவிகளில் இடப்பட்ட தொளைகள் நாளடைவில் பெரிதாவது இயற்கையைப் போன்ற செயற்கையாம். மணிகள்

பதிக்கப்பெற்ற குழைகள், செம்பொன்னாலாகிய காதோலை கள் போன்ற பூண்களின் அசைவும், அவைகளின் மாற்றமும் செயற்கைப் புனைவுகளாம் என்றவாறு.

செயற்கையாக இட்டதொளை நாளடைவில் பெரிதாதலின் இயற்கை நேர் செயற்கை என்றார். காதணி பருவத்திற் கேற்ப அவ்வப்போது மாற்றப்படுதலின் மாறலும் என்றார். (290)

**14. கவின்திகழ் அகல்முகக் கன்னி கமுகுஉறழ்**
**மிடற்றுஎழும் மென்குரல் இயற்கை; வேறு எல்லாம்**
**செயற்கை யாம்எனச் செப்பிடல் இயல்பே.**

அழகுமிகுந்தும் அகன்றும் உள்ள முகத்தை உடைய நங்கை யின் பாக்கு மரத்தின் மேற்பகுதியைப் போன்ற கழுத்தில் உண்டாகும் இனிய மென்குரல் இயற்கையாகும். மற்றவை அனைத்தையும் செயற்கையானவை எனக் கூறலே தக்கதாம் என்றவாறு.

வேறு எல்லாம் என்றது, ''வாய்வெருவி நாடும் மிடறூடு மயில் காடை குரலோசை தர''[1] என்றதைப் போன்று புட்குர லெழுப்புதலை. (291)

**15. கொன்றுஉயிர் தரும்விழிக் கோதை முலைக்குக்**
**குளிர்ச்சியும் வெப்பமும், குன்றுஎனப் பொதுமி**
**இடம்அறிந்து அரும்போர் இயற்றலும் இயற்கை;**
**பூணும், களபமும், பொறித்தசித் திரங்களும்**
**செயற்கை யாம்எனத் தெளிவது முறையே.**

பொதுநோக்கால் நோய்தந்து உயிரை மெலிவித்த பிறகு தானே சிறப்பு நோக்காகிய மருந்தால் அவ்வுயிரை உய்விக்கும் கண்களை உடைய பூமாலையைப்போன்று அழகு வாய்ந்த தலைவியின் நகில்களுக்குக் (கோடையில்) குளிர்ச்சியும், (குளிர் காலத்தே)வெம்மையும், குன்றுகளைப்போற் பணைத்தெழுந்து

1 நல்ல சர்க்கரை மன்றாடியார் காதல் 338

காலம்அறிந்து கலவிப்போர் புரிதலும் இயல்பான பண்பு களாம். அணிகலன்களும், வாசனைச் சாந்தும், எழுதப்பெறும் தொய்யிற் சித்திரங்களும் செயற்கையாகச் செய்யப்படும் புனைவுகளாம் என்றவாறு.

“வாவியுறை நீரும் வடநிழலும் பாவுஅகமும் ஏஅனைய கண்ணார் இளமுலையும் ஓவியமே மென்சீதகாலத்துவெம்மை தரும்; வெம்மைதனில் என்புஆரும் சீதளம் ஆமே”[1] ஆதலின் குளிர்ச்சியும் வெப்பமும் ஒருங்கே கூறப்பட்டன. (292)

**16. மென்மையும் வேய்முளை போலும் விளக்கமும்**
**இயற்கை; ஆதலில் தொய்யில்மற்று ஏனை**
**சுரிகுழற் காரிதன் சுந்தரத் தோட்கே.**

சுருண்ட கூந்தலைஉடைய மங்கையின் அழகிய தோள் களுக்கு மிருதுத் தன்மையும், மூங்கில் முளையைப் போன்றுள்ள ஒளியும் மட்டுமே இயற்கைப் பொலிவாம். எனவே வாசனைக் குழம்பால் வரையப்படும் சித்திரங்கள் முதலியன செயற்கைப் புனைவுகளே என்றவாறு.

ஏனை என்றது இயற்கை அல்லாத செயற்கையை. (293)

**17. மலர்தலும் குவிதலும் செம்மையும் மயில்அனாள்**
**அங்கைக் குணமே; அணிவளை அம்மனை**
**கழங்குஇவை ஒவ்வொரு காலத்து உறுபவே.**

மயில்போன்ற சாயலைஉடைய மடந்தையின் அழகிய கரங்களுக்கு விரிதலும், குவிதலும் எப்போதும் நிலைத்துள்ள பண்புகளாகும். வரிசையாக அடுக்கப்படும் வளையல்கள், அம்மானைக்காய், கழங்கு ஆடும் காய் போன்றவைகள் சிற்சில பருவங்களுக்கு மட்டுமே உரியனவாகும்.

அணிவளை என்பதனை வினைத்தொகையாகக் கொண்டு அணியப்பெற்ற வளையல்கள் எனினுமாம். (294)

---

1 தனிப்பாடல்.

**18. தொய்வே நல்லாள் வயிற்றின் சுயகுணம்;**
**கருப்பம் தங்கிய காலத்து விம்முமே.**

அழகிய மங்கையின் அகட்டிற்கு உள்ளடங்கி யிருத்தலே இயல்பாம். கருவுற்றிருக்கும்போது அது வீங்கும் என்றவாறு.

**19. சேர்வான் மகிழ்வுறும் இயற்கைத் தேய்வும்**
**அலமரற் கண்டுறும் ஆடைச் சேர்க்கையும்**
**இலங்கிழைப் பூவைதன் இடையிடத்து உளவே.**

ஒளிமிக்க பூண்களை அணிந்துள்ளவளும் நாகணவாய்ப்புள் போன்று அழகுடையவளுமாகிய பெண்ணின் இடுப்பின்கண் அவள் காதலனுக்குக் களிப்பூட்டும் சிறுமையும், காமம் மிக்கவழி நெகிழும் தன்மையைஉடைய சேலையின் உறவும் உள்ளன என்றவாறு.

சிற்றிடையாளாதல் இயற்கையும், ஆடை முதலியன செயற்கைப்புனைவும் ஆகும் என்பது கூறப்பட்டது. ஆடையைக் கூறவே மேகலை போன்ற அணிகளும் பெறப்பட்டன. (296)

**20. கணவற் காண்டொறும் மதப்புனல் கசிதலும்,**
**அவன்அகத்து அவிர்ந்துதன் அகத்துஅதைக் கோடலும்**
**இயற்கைக் குணமாம்; புணர்ச்சியும் எழில்மகப்**
**பேறும்மற் றுளதொரு பெட்பாம் பிறங்கிழைக்**
**காரிகை உயிர்எனக் காக்கும் கடிதடத்**
**தேரினுக்கு எனமிகச் செப்பினர் தெளிந்தோர்.**

ஒளிவீசுகின்ற பூண்களை அணிந்துள்ளவளாகிய மங்கை தன்னுடைய உயிரைப் போல் போற்றிப் பாதுகாக்கும் தேர்த் தட்டைப்போன்ற அல்குற்குத் தலைவனைக்(காம உணர்வுடன்) பார்க்கும்பொழுதெல்லாம் சுரதநீர் ஊறுதலும், அவனுடைய உள்ளத்தில் இடம்பெற்று விளங்குதலும், அவன் கோசத்தைத் தனக்குள் ஏற்றுக்கொள்ளலும் இயல்பான பண்புகளாம். மெய் யுறு புணர்ச்சியால் விளைகின்ற வேறுபாடுகளும், அழகிய

பிள்ளைப்பேறும் செயற்கையாக அவ்வப்போது நிகழ்வனவாம் என அறிஞர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

'அகத்து அதைக்கோடல் இயற்கைக் குணமாம்' என்றா ராதலின் பிறகு புணர்ச்சி என்புழி அதனால் விளையும் வேறு பாடுகள் எனப் பொருள் உரைக்கப்பட்டது. (297)

**21. அன்னமென் நடையே அகற்றரும் இயற்கை;**
**சிலம்பொலி யாதிய சேர்க்கைச் செயலாம்**
**பழிக்கரும் கற்புடைப் பாவையர் அடிக்கே.**

குறைகூற முடியாதபடி அருமைமிக்க கற்பினைஉடைய வரும், சிலைகளைப்போலெழில் வாய்ந்தவரும் ஆகிய மகளிரின் கால்களுக்கு அன்னத்தைப்போல் மெதுவாகவும் எழிலோடும் இயங்கும் நடை ஒன்றே இயல்பான பண்பாம். சிலம்பின் ஓசை முதலிய பிற அனைத்தும் செயற்கைப் புனைவுகளாம் என்றவாறு.

ஆதிய என்றது மிஞ்சி, செம்பஞ்சுக் குழம்பு முதலியன வற்றை. (298)

**22. உந்தியும், ரோமத்து ஒழுங்கும், கவானும்,**
**பிறவும் கொளும்இரு பெட்பின் பகுதியைப்**
**பைந்தொடிக் கரத்தினர் பண்புநன்கு உணர்ந்த**
**செந்தமிழ்ப் புலவரால் தெரிவது முறையே.**

கொப்பூழ், மயிர்ஒழுங்கு, தொடைகள் முதலிய மற்ற உறுப்புகளின் இயற்கை செயற்கை இயல்புகள் அனைத்தையும் பசிய வளையல்களை அணிந்த கையினராகிய மகளிரின் இயல்பு களை நன்கு ஆராய்ந்தறிந்துள்ள தமிழறிஞர்கள்பால் கேட்டுத் தெரிந்துகொள்ளல் தக்கதாம் என்றவாறு.

பிற என்றது இவ்வுறுப்பியல்பில் கூறப்படாதன அனைத்தும். (299)

**23. உறுப்புஇயல்பு இவ்வாறு உரைத்தனம்; இனிஅவர்**
**குறிப்புஇயல்பு அதனையும் கூறுதும் கூர்ந்தே.**

(மகளிரின் உறுப்பு நலன்களைக் கூறும் பகுதியாகிய இந்த) உறுப்பியல்பை இவ்வாறு கூறி முடித்தோம். தொடர்ந்து அம்மகளிரின் குறிப்பின் இலக்கணத்தையும் நன்கு ஆராய்ந்து சொல்வாம் என்றவாறு.

இவ்விறுதி நூற்பாவால் இரண்டாவதாகிய உறுப்பியல்பு நிறைவுசெய்யப்பட்டு அடுத்த பகுதிக்குத் தோற்றுவாய்செய்து கொள்ளப்பட்டது. (300)

உறுப்பியல்பு முற்றிற்று.

## 3. குறிப்பியல்பு

பொருள்இலக்கணத்தின் இப்பிரிவில் பேதை முதலிய ஏழு பருவ மாதர்களின் செயல்களும், பொதுவாகப் பெண்களின் புணர்ச்சி, பிரிவுக் கால நிலைகளும்கூறப்படுகின்றன. இப்பகுதி பன்னிரண்டு சூத்திரங்களை உடையது.

**24. சிற்றிலில் சிறாரொடு சிறுமணம் பயில்ஏழு**
**ஆண்டுடைப் பேதை அகத்தும் அணிமலர்**
**உரிஞ்சல்உண்டு; உடைதழீஇச் சிறிதுநாண் உறுமே.**

தான் விளையாட்டாகக் கட்டிய சிறிய மணல்வீட்டின் அருகே தன் வயதொத்த சிறுவர்களுடன் பொம்மைக் கல் யாணம் செய்து மகிழும் ஏழு வயதுடையவளாகிய பேதைப் பருவ மகளின் உள்ளத்திலும் காமனின் அழகிய மலர்க்கணை தைப்பது உண்டு. அவள் தன் ஆடைகளைத் தழுவிக்கொண்டு சற்றே நாணமுறுவாள் என்றவாறு. (301)

**25. ஒன்பது ஆண்டுடைப் பெதும்பைதன் உளத்தில்**
**காமன் முதற்கணைக் கதுமைசற்று அழுந்தும்;**
**தூதளம் பசுங்காய்த் துணைஎன முலைஎழும்;**
**கழங்கொடு செவ்வரிக் கருங்கண் பிறழ்தரும்;**

**முச்சிலில் மணல்கொடு முன்றில்வாய் கொழியாது**
**அச்சமும் மடமும் நாணமும் அணையுமே.**

ஒன்பது வயதினளாகிய பெதும்பையின் மனத்தில் மாரனின் முதல் மலரம்புகளின் கூர்மை கொஞ்சம் நன்கு பதியும். அவளுக்குக் கண்டங்கத்திரியின் பசுமையான காய்களைப் போன்று (சிறிய வடிவினதாக) இரு நகில்கள் தோன்றும். அவளுடைய செவ்வரி படர்ந்த கரிய கண்கள் தான் விளையாடும் கழற்சிக்காய்களோடு சுழலும். சிறு முறத்தில் மணலை வைத்துக்கொண்டு, தன் வீட்டின் முன்புறம் அமர்ந்து (சிறு சோறடுவதற்காக) அதனைக் கொழிக்கவிடாமல் அச்சம், மடம், நாணம் முதலிய பெண்மைப் பண்புகள் வந்தடையும் என்றவாறு.

முன்றிலில் அமர்ந்து முச்சிலில் மணற்கொழித்தல் பேதைப் பருவச் செயல். சற்று மகடூஉக் குணங்கள் மேலோங்கலின் பெதும்பைப் பருவத்தே அது நீங்கிற்று. (302)

**26. பன்னிரண்டு ஆண்டுடை மங்கைபந்து அடிக்கும்;**
**ஒத்தபாங் கியரோடு ஊசல் ஆடும்;**
**நீர்த்தடம் குளிக்கும்; நினைத்துநெட் டுயிர்க்கும்;**
**எழில்நலம் பொலிதரும் இணைமுலை காக்கும்;**
**காமவேள் அனையான் கலவிக்கு இசையுமே.**

பன்னிரண்டு வயதாகிய மங்கைப் பிராயத்தாள் பந்து விளையாடுவாள். வயதில் தனக்கிணையான தோழியருடன் ஊஞ்சல் ஆடுவாள். நீர்நிலைகளில் விருப்பத்துடன் புனலாடுவாள். எதையோ எண்ணி அடிக்கடிப் பெருமூச்செறிவாள். அழகு பெற்று விளங்கும் நகில்களைப் பிறர் கண்களில் படாதவாறு மறைத்துக் கொள்வாள். மன்மதனைப் போன்ற அழகிய வாலிபனோடு புணர ஒருப்படுவாள் என்றவாறு. (303)

**27. ஈர்எட்டு ஒருபதிற்று ஒன்பது இருபன்**
**நான்குஎனும் வயதுடை நல்லார் ஆய**
**மடந்தையும், அரிவையும், தெரிவையும் மாரன்**

**கணையால் மெலிதலும், கலவியில் களித்தலும்,**
**கண்வாள் கொடுபல காளையர்க் கோறலும்,**
**பகலைப் பழித்தலும், பைம்பொற் சுணங்குஆர்**
**முலைகள் ஆடவர் மொய்ம்பினும் உயர்வுஎனக்**
**கருதலும், மதப்புனல் கடல்எனப் பெருக்கலும்**
**ஆதிய நலம்எலாம் அளப்பதற்கு அரியவே.**

பதினாறு, பத்தொன்பது, இருபத்துநான்கு ஆகிய வயதுடைய பெண்கள் முறையே மடந்தை, அரிவை, தெரிவை எனப் படுவர். இவர்கள் காமவேதனையால் மிகத் துன்புறுவர். புணர்ச்சியால் உவகையடைவர். கண்ணாகிய வாளின் வீச்சினால் பல வாலிபர்க்குக் கொல்வது போலும் வருத்தத்தைச் செய்வர். (கொழுநனின் உறவுக்குத் தடையாக உள்ளதால்) பகல் நேரத்தின் மீது வெறுப்புக் கொள்வர். பசிய பொன்னைப் போன்ற தேமல் பொருந்திய நகில்களே ஆண்களின் புயங்களை விடச் சிறப்புப் பெற்றவை எனப் பெருமிதம் கொள்வர். காமத்தின் மிகுதியால் சுரதநீரை மிக அதிகமாகச் சுரத்தலும் இப்பருவ மகளிரின் இயல்புகளாம். இதைப்போன்ற மற்றைய சிறப்புகளைஎல்லாம் இவ்வளவென்று இயம்ப வொண்ணாது என்றவாறு.

இரத்தினச் சுருக்கம் பெண்களின் ஏழு பருவத்தைக் கூறுங்கால், ''வாரிமணி வெய்யோன் மதிபா ரதம்வள்ளல் சீரின் அறம்வளர்க்கும் செய்கைதான் – நாரிகேள் பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக ஈதுஎழுவர் தம்பருவம் எண்''[1] என்கிறது. இதன்படி அரிவையின் பருவம் பதினெட்டு வயதாம், (பாரதம்-பதினெட்டு நாட்போர்) தெரிவைக்கு வயது இருபத்தொன்றாம். (வள்ளல்-மூவெழுவர்) ஆனால் இவர் இவற்றை முறையே பத்தொன்பது, இருபத்து நான்கு என்கிறார். வெண்பாப் பாட்டியல், ''பகருங்கால் ஐந்துஏழ் பதினொன்று பன்மூன்று அகலாத பத்தொன்பான் ஐயைந்து–இகலாத முப்பத்தொன்று ஈரிருபான் பேதை முதலோர்க்குச் செப்புவர் ஆண்டு எல்லைத்

1 இரத்தினச் சுருக்கம் 40

திறம்''[1] என முற்றிலும் வேறுவிதமாகக் கூறுகிறது. நவநீதப் பாட்டியலும் வெண்பாப் பாட்டியல் கருத்தையே கூறுகிறது.[2] இவ்விரு பாட்டியல் நூற்கருத்துக்கும் இவ்வாசிரியர் கருத்திற் கும் அரிவைப்பருவம் ஒன்றில்தான் ஒற்றுமை உள்ளது.

பல அரிய செயல்களைச் செய்யும் வலிமைமிக்க ஆடவரை யும் தம் வனப்பால் நெகிழச் செய்வதாலும், தம்பாலுள்ள இவ்வியற்கை ஆற்றலை உணர்ந்து கொள்ளும் பருவத்தினர் ஆனதாலும் முலைகள் ஆடவர் மொய்ம்பினும் உயர்வெனக் கருதுவர். அது பெருமிதம் ஆதலின் உரையில் அவ்வாறு உரைக் கப்பட்டது. (304)

**28. பேசலும் கலவியிற் பிணங்கா இயற்கையும்**
**பாலுடைச் சரிமுலைப் பசுநரம்பு அவிர்ச்சியும்**
**ஆடலில் வெறுப்பும் அனையன பிறவும்**
**பேரிளம் பெண்ணின் பெட்புஎனத் தகுமே.**

அதிகமாகப் பேசுதலும், மெய்யுறு புணர்ச்சியின்போது ஊடாத இயல்பும், பால் சுரக்கின்றனவும், சரிந்தனவுமாகிய நகில்களில் பச்சை நரம்புகளின் தோற்றமும் (கழங்கு, ஊசல், அம்மானை, புனல் போன்ற) விளையாட்டுகளில் விருப்பமின் மையும், இவை போன்ற பிற தன்மைகளும் பேரிளம்பெண்ணின் பண்பு நலன்கள் எனலாம் என்றவாறு.

தெரிவைப் பருவத்தைக் கடந்தவள் பேரிளம்பெண். ஆதலின் வயது வரையறை கூறவேண்டாவாயிற்று. நாற்பது வயதுடையாள் பேரிளம்பெண் என வகுத்துக் கொண்டால் நாற்பத்தைந்து வயதினளை என்னென்பது? ஆகவே தெரிவை நிலையைத் தாண்டியவள் பேரிளம்பெண் எனக் கோடலே தக்கதாம்.

ஆடலில்வெறுப்பு என்பதற்குக் கலவியின் புறச்செய்கைகளில் அதிக நாட்டமின்மை என உரைப்பினும் ஆம். (305)

---

1 வெண்பாப்பாட்டியல்-செ. 26
2 நவநீதப்பாட்டியல்-செ, 21

**29. பார்வையில், பரிவில், பழகலில், பகர்ச்சியில்,**
**செயலில் சேயிழை சிந்தையில் கிடக்கும்**
**மோகம் கமழ்வது முறைஎனத் தகுமே.**

செம்மையான அணிகலன்களை அணிந்துள்ளவளாகிய தலைவியின் உள்ளத்தில் உள்ளகாதல் அவளுடைய சிறப்பு நோக்காலும், தலைவன்மாட்டுக் காட்டும் தனி அன்பினாலும், அவனோடு பழகுகின்ற முறையாலும், பேசும் மொழிகளாலும் நடைமுறைச் செய்கைகளாலும் வெளிப்படும் எனலாம் என்ற வாறு. (306)

**30. தலைவன் மால்உடைத் தையல்ஊண் வெறுக்கும்;**
**மதிக்குடைச் செல்வனை வையும்;நெட் டுயிர்க்கும்;**
**தென்றலுக்கு அஞ்சும்; சேடியைப் பகைக்கும்;**
**அன்னையைத் தினந்தொறும் அழஅழப் படுத்தும்;**
**கனவினிற் களித்துக் கண்விழித்து அயரும்;**
**வளைகலன் கலைமலர் ஆதிய மறக்கும்;**
**அன்ன தன்மை அளவிலாது உறுமே.**

இந்நூற்பா பிரிவாற்றாத தலைவியின் தன்மைகளைக் கூறு கிறது. தலைவனைப் பிரிந்து அவ் விரகத்தால் துன்புறுகின்ற பெண் உணவை வெறுப்பாள்; சந்திரனைத் தன் வெண்கொற்றக் குடையாகக் கொண்டுள்ள காமனைப் பழிப்பாள்; அடிக் கடி பெருமூச்சு விடுவாள்; தென்றல் எங்கே தன்னைத் தீண்டி மோகத்தீயை மூட்டிவிடுமோ எனப் பயப்படுவாள்; ஒருவிதக் காரணமுமின்றித் தன் தோழியுடன் சினம் கொள்வாள்; நாள் தோறும் அவள் தாய் தனக்குள் மிக வருந்தும்வண்ணம் வருத்துவாள்; கனவில் காதலனைக் கண்டு மகிழ்ந்து துயில் நீங்கி நினைவில் அவனைக் காணாதே சோர்வுறுவாள்; கை வளையல் முதலிய பூண்களாலும், புத்தாடைகளாலும், பூக்க ளாலும் தன்னை ஒப்பனை செய்துகொள்வதை மறந்தே விடுவாள். பிரிவாற்றாத தலைவியின் இத்தகைய மெய்ப்பாடு கள் பற்பலவாகும் என்றவாறு.

இச் செயல்கள் பொதுவாக மகளிருக்கென்று கூறப்பட்டிருப்பினும் சிறப்பாக மடந்தை, அரிவை, தெரிவையர்க்காம் எனக்கொள்ளலாம். (307)

31. மாலைகண்டு உவப்பதும், மருப்புனல் ஆடலும்,
சேலையும் பணிகளும், திலகமொடு மையும்
திருத்தலும், தூரியச் செங்கைச் சேடியர்
எழுத்தினுக்கு இசைவதும், இனையன பிறவும்
காளைதோட் புணரும் கருத்தினள் குறிப்பே.

இந்நூற்பா காதலனோடு கலந்திருப்பாள் இயல்பு கூறுகிறது.

மாலை நேரத்தைக் கண்டு மனமகிழ்ச்சி கொள்வதுவும், வாசனைப் பொருள் கலந்த நன்னீராடலும், புத்தாடை உடுத்தி அணிகலன்கள் பூண்டு நெற்றிப் பொட்டுடன் கண்களில் மை எழுதித் தன் ஒப்பனையைச் செப்பஞ்செய்துகொள்ளலும், தோழியர் வாசனைக் குழம்பையும் எழுதுகோலையும் ஏந்தித் தன் தோள்களிலும் நகில்களிலும் தொய்யில் எழுத வருங்கால் அதற்கு உடன்படுவதும், இது போன்ற பிற செயல்களும் கணவனோடு சேர்ந்திருந்து அவனைக் கூடுபவளின் குறிப்புகளாம் என்றவாறு.

திலகம் சேர்ந்துவாழும்போதும், பிரிவுக்காலத்தும் நீங்காது மங்கல மடந்தையரின் நெற்றிக்கு எழில் தருவதாதலின் அதற்கு ஒடுக்கொடுத்துப் பிரித்தார். குறிப்பு என்றதனானே தன் கூடல் விழைவைக் காட்டும் சங்கேதம் எனினுமாம். (308)

32. பழகிய கொழுநர்தாம் பற்றிய போழ்தினும்
காமங் கசிதரக் கடிதடங் களித்து
வாள்நுதல் வெயர்வையும் வாய்இதழ் உலர்ச்சியும்
கருத்தைத் காட்டினும் கடுகுஅள வேனும்
பயிற்பொடு கோடுதல் பாவையர்க்கு அழகே.

பலமுறை கலந்து உறவாடிய கணவனே கையைப் பிடித்த காலையும், தானும் காமமிகுதியால் சுரதநீர் சுரந்து பூரித்த

அல்குலாளாகவும், ஒளிகாலும் நெற்றியில் சிறுவேர்வும், உதடுகளின் வறட்சியும் கொண்ட புணர்ச்சி வேட்கையளாகவும் இருப்பினும் ஒருசிறிதாவது பயிர்ப்புப்பண்பைக் காட்டுபவளாகக் கலவிக்கிசையாள்போல் பாவனை செய்தலே அழகிய மகளிருக்குச் சிறப்பாகும் என்றவாறு.

இயற்கை அல்லது களவுப்புணர்ச்சி அன்றென்பார் பழகிய கொழுநர் என்றார். தலைவியும் முன்பே அதில் பழக்கப்பட்டவளே என்பதை அவள் மெய்ப்பாடுகளைக் கூறுமுகத்தான் தெளிவாக்கினார். நுதல் வெயர்வை, இதழ் உலர்ச்சி இரண்டும் அவள் இசைவை வெட்ட வெளிச்சமாக்கிய போதும் இசையாதவள் போற் செயற்படுதலின் கோடுதல் என்றார். கோடுதல் இங்கு உள்ளமும் செய்கையும் தம்முள் மாறுபடுவதை உணர்த்திற்று. (309)

**33. அன்னம் என்று இருப்பார் அமளிஅம் கலவி**
**தன்னிடை செயுந்தொழில் சாற்றரும் பாற்றும்,**
**கொண்கர்தம் உள்ளக் குறிப்பும் ஆமே.**

அன்னம்போன்ற அழகிய மகளிர் அணையில் இனிய கலவிக் காலத்தே இயற்றும் செயல்கள் இத்துணைய, இத்தகைய எனக் கூறமுடியாதனவும், தம் கணவரின் மன விருப்பத்திற்கேற்றனவும் ஆகும் என்றவாறு.

அமளிஅம் கலவி என்பதற்குப் போராகிய இனிய புணர்ச்சி என்றோ, ஆரவாரம் நிறைந்த அழகியகூட்டம் என்றோ கூறினும் அமையும். (310)

**34. கண்களின் சோர்வும், கவுளொடு கனிஇதழ்க்**
**குறிகளும், பகற்றுயில் கொள்கையும், பிறவும்**
**இனியவன் தன்னுடன் இரவுஎலாம் மதப்புனல்**
**சிந்திச் சிந்திச் சேர்ந்துளாட்கு இயல்பே.**

தன் மனத்திற்கினிய மணாளனுடன் முதல்நாள் இரா முழுவதும் சுரதநீர் பெருகப் பெருகக் களித்துக் கலந்த தையல் நல்லாளுக்கு மறுநாள் கண்கள் சோர்வுபடுதலும், கன்னத்

திலும் வீழிக்கனி போன்ற உதடுகளிலும் காதலனின் பற்குறி நகக்குறிகளின் தோற்றமும் பகல் நேரத்தில் உறங்குதலும் இதைப்போன்ற பிறவும் இயற்கையாம் என்றவாறு. (311)

**35. குறிப்புஇயல்பு இவ்வணம் குறுக்கிக் கூறினம்;**
**பழமை இயல்பினைப் பகருதும் சிறிதே.**

இவ்வாறாக அகப்பொருளின் குறிப்பியல்பு எனும் இப்பகுதியைச் சுருக்கமாக உரைத்துமுடித்தாம். இனி அடுத்துப் பழமை இயல்பைக் கொஞ்சம் கூறுவான் எடுத்துக்கொள்வாம் என்றவாறு.

இந் நூற்பாவினால் இப்பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்த பழமை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப் படுகிறது. (312)

**குறிப்பியல்பு முற்றிற்று.**

## 4. பழமை இயல்பு

காதல் பற்றிய சில பழமையான மரபுகளும், கருத்துகளும் இவ்வியல்பில் தொகுத்துக் கூறப்பெறுவதால் இஃது இப்பெயர்த் தாயிற்று. இதுவும் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது.

**36. அவன்அவள் இசைதலும், அனுப்பும் தூதால்**
**இசைதலும் பழமைஎன்று இசைத்தனர் புலவோர்.**

தலைவனும் தலைவியும் யார் உதவியும் இன்றித் தாமே எதிர்ப்பட்டுக் கூடுதலும், ஒருவர் அனுப்பிய தூதால் (குறிப்பிட்ட இடத்தும் நேரத்தும்) சந்தித்துக் கலத்தலும் ஆகிய இரண்டுமே தொன்மையான நெறிகள் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

அவன் அவள் இசைதல் இயற்கைப் புணர்ச்சியாம். பாங்கி மதி உடன்பாடு, பகற்குறி, இரவுக்குறி, ஊடிய தலைவி தலைவனின் வாயில் நேர்ந்தபின் நிகழும் கூட்டம் முதலியன

இரண்டாவதாகும். இவை சங்கத்தொகை நூல்களிலும் இடம் பெற்றுள்ள மிகத் தொன்மையான மரபுகளாம். (313)

**37. ஆண்பெண் எனும்உரு அமைந்தவர் தனித்தனி**
**தாம்விழைந்து அளவற முயன்றும் கூடாது**
**உடன்உயிர் இழந்துஈண்டு ஒழிந்தனர் பலரே.**

ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாருள்ளும் தம் காதலரைப் பெற விரும்பி பெரிதும் முயற்சி செய்தும் அது பயன்தராமை யினால் இருவருமாக மாண்டொழிந்தவர்கள் பற்பலராவர். என்றவாறு.

இச்சூத்திரத்திற்கு ஆண்கள் விழைந்து முயன்றும் கூடாது உடனே உயிர் இழந்து எனவும், பெண்கள் விழைந்து முயன்றும் கூடாது உடனே உயிர் இழந்து எனவும், ஆணும் பெண்ணும் தனித்தனியே தாம் விழைந்து முயன்றும் கூடாது ஒன்றாக உயிர் இழந்து எனவும் மூன்று விதமாகப் பொருள் கொள்ளு மாறு அமைந்துள்ளது. (314)

**38. கண்களால் இசையாக் காரிகை கரத்தால்**
**இணங்காள் என்றமை இயம்பும்இவ் வுலகே.**

புணர்ச்சி விழைவோடு நோக்கப்படும் கனிவான பார்வை அழைப்பிற்கு இணங்காதவளாகிய ஒரு பெண் அவளை வலியக் கைப்பற்றினாலும் உடன்பட மாட்டாள் என்று உலகத்தினர் சொல்வார்கள் என்றவாறு. (315)

**39. ஏதொரு நிமித்தத் தேனும் எள்துணை**
**உரிமையும் இல்லார் உடல்தழீஇ மகிழ்வார்**
**பதரினும் பதர்எனப் பகர்வது முறையே.**

ஏதாவது ஒரு காரணத்தால் ஓர் எள்ளளவாவது தன்னோடு கூடுதற்குரிய உரிமை இல்லாதவரோடு மெய்யுறு புணர்ச்சி யில் ஈடுபட்டுக் களிப்பவர்களை மிகமிகப் பயனற்றவர்களும் இழிவானவர்களும் ஆவர் எனக் கூறலே தக்கதாம் என்றவாறு.

இந்நூற்பா ஆண்பெண் இருபாலாருக்கும் பொதுவான தாகும். உறவுமுறை பற்றியோ அல்லது மனஒருமைப்பாடு பற்றியோ மெய்யான காதல் கொண்ட இருவரின் கூட்டமே முறையானதாகும். இதனால் பிறனில், வரைவின் மகளிர் ஆகியோர் விழைவு விலக்கப்படுகிறது. (316)

**40.** **மற்றொரு நல்லாள் வனப்புஎடுத்து உரைக்கில்**
**பொற்றொடிக் கரத்துப் பூவை ஊடலும்**
**இயல்போடு உள்ளதுஎன்று இயம்பினர் பழையோர்.**

பொன்னாலாகிய வளையல்களை அணிந்தவளும், நாகணவாய்ப்புள்ளைப் போன்றவளுமாகிய காதலியிடம் வேறொரு பெண்ணின் அழகைப் புகழ்ந்து விவரித்தால் அவள் ஊடல் கொள்வது இயற்கையானதுதான் என்று முன்னூலாசிரியர்கள் மொழிந்துள்ளனர் என்றவாறு. (317)

**41.** **பொய்யினும் தீராப் புலவியின் மிகையால்**
**வைதுஎவன் செய்யினும் மடநல் லார்இரு**
**பாடகத் தாள்களில் பாழிஅம் தடந்தோட்**
**காளைபோய்ப் பணிதலும் கழிக்கரும் இயல்பே.**

ஊடல் உணர்த்துவதற்காகக் கணவன் பற்பல பொய்ம்மொழிகளையும் கூறிச் சமாதானம் செய்தபோதிலும் அமைதியுறாத தலைவி தன்னைப் பழித்தாலும் அல்லது வேறேது செய்தாலும் (அதனாற் சினங்கொள்ளாமல்) வலிமையும், அழகும், பெருமையும் மிக்க புயங்களைஉடைய கொழுநன் அவளுடைய சிலம்பணிந்த கால்களில் விழுந்து பணிதலும் தவிர்க்க முடியாததே ஆகும் என்றவாறு.

''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையும் காலைப் புலவியுள் உரிய'' [1] என்றார் ஆசிரியரும். (318)

**42.** **தன்னுடைக் கேள்வனைத் தலைவியை விழைவார்ப்**
**பகைத்தலும் மாந்தர்தம் பண்பின் பழமையே.**

---

1 தொல். பொருள். 223.

தன் கணவனை அடைய விரும்பும் பிற மகளிரிடத்தில் ஒரு பெண்ணும், தன் மனைவியை நேசிக்கும் பிற ஆடவரிடத்தில் ஓர் ஆணும் பகைமை பாராட்டுதல் மனிதர்களுக்குத் தொன்று தொட்டு வந்துள்ள ஓர் இயற்கைப் பண்பாகும் என்றவாறு. (319)

**43. பெண்மைக்கு அலகையும் பெரிதுஉளம் இரங்கிடல்**
**மும்மை உலகமும் மொழிதரு மன்றே.**

பெண்ணுக்கு ஏதாவது ஒரு துன்பம் நேர்ந்தால் அதைக் கண்டு இரக்கமற்ற பேயும் மனமிரங்கும் என்று உலகினர் வாய்மொழியாகக் கூறுவர் என்றவாறு.

''பெண் என்றால் பேயும் இரங்கும்'' என்பது பழமொழி. (320)

**44. இளமையோடு எழில்நலம் ஏய்ந்தோர்க் காணின்**
**உற்று நோக்கி உளம்மிக உருகிடல்**
**பெண்மை ஆண்மையின் பெரும்பாற் குணமே.**

இளமையும் அழகும் பொலியும் மறுபாலாரைக் கண்டால் அவரை ஏக்கத்தோடு கூர்ந்து பார்த்து மனச்சோர்வடைதல் ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவான பெரும் பான்மைப் பண்பாம் என்றவாறு.

பெரும்பாற் குணமே என்றதனால் சிறுபான்மையர் தமக்கு உரியாரையன்றிப் பிறரை விழையாத மனவலிமை உடையவர் என்பதும் அவரே சிறந்தவர்களாவர் என்பதும் பெறப்பட்டன. (321)

**45. தவமும் சமயமும் சாதியும் பொருளும்**
**அங்கசன் தொடும்கணைக்கு ஆற்றாது அலமரும்**
**மயலாற் கழிவது மாநிலத்து இயல்பே.**

மாரனுடைய மலர்க்கணைகள் விளைவிக்கும் காம வேதனையைத் தாங்காமல் வருந்தும் மயக்கத்தால் தவம், சமயம், சாதி

பொருள் முதலிய அனைத்தையும் பலர் இழந்துவிடுவது இவ்வுலகில் இயற்கையான ஒன்றேயாம் என்றவாறு. (322)

**46.** **பிழையாது ஒழுகிய பெண்மகட்கு எதிர்செலும்**
**முனிவரும் தெய்வமும் இலைஎனல் முறையே.**

தன் கற்புநிலையினின்றுசற்றும் வழுவாமல்நடந்துகொண்ட ஒரு பெண்மணிக்கு விரோதமாகச் செயல்புரியும் வலிமை எந்தத் தவசிக்கும் எந்தத் தெய்வத்திற்கும் இல்லை என்று சொல்லப்படுவது சரியானதே என்றவாறு. (323)

**47.** **எவ்விதச் சுருதியும் நெறிகளும் பிறவும்**
**இயங்குமாறு அவிர்தரும் இவ்வழிப் பழமை**
**முற்றும்ஒ தரிதால் முடித்து, இனி அடுத்துத்**
**துறைஇயல்பு எடுத்துத் தொகுத்துஉரைக் குதுமே.**

எல்லாவகையான வேதங்களும், அனைத்துவகை மரபுகளும், உலகியல் நடைமுறைகளும் செவ்விதின் நடைபெறுமாறு அமைந்துள்ள இத்தகைய தொன்மை மரபுகள் அனைத்தையும் முழுவதும் விரித்துக் கூற இயலாது. எனவே இதனை இம்மட்டடக்கித் தொடர்ந்து துறை இயல்பைத் தொகுத்துக் கூறுவாம் என்றவாறு.

இச்சூத்திரத்தால் இப்பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்த பகுதியாகிய துறை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (324)

**பழமை இயல்பு முற்றிற்று.**

## 5. துறை இயல்பு

அகப்பொருள் துறைகளைப்பற்றிய சில கருத்துகள் இந்தப் பகுதியில் தொகுத்துக் கூறப்படுகின்றன. இவ்வியல்பு ஒன்பது நூற்பாக்களால் ஆனது.

**48. இன்ப வெள்ளத்து இசைவுறும் ஒவ்வோர்**
**நிகழ்ச்சியும் துறைகள் ஆம்எனல் நெறியே.**

இன்ப நிறைவாகிய காமப் பகுதியோடு பொருந்தியுள்ள ஒவ்வொரு தனித்தனி நிகழ்ச்சியையும் ஒவ்வொரு துறை எனக் கூறுதல் மரபாகும் என்றவாறு.

இந்நூற்பா துறை என்றால் என்ன எனக்கூறுகிறது. (325)

**49. காண்டல், ஐயுறல், மெய்தொட்டுப் பயிறல்,**
**கலவி மகிழ்தல், கான்முளைப் பழித்தல்,**
**நாணிக்கண் புதைத்தல், நற்றாய் இரங்கல்,**
**தழைவியந்து உரைத்தல் ஆதிய நானூறு**
**என்றே பற்பலர் இயம்பினர்; சிலர்தாம்**
**இம்மகள் இன்னாற்கு ஆம்என இசைதலும்,**
**காதலால் தொழலும், காட்டி மயக்கலும்,**
**தலைவன் தேடலும், தன்உரு மாற்றலும்**
**ஆதிய நவின்றனர்; அன்றியும் ஒருவன்**
**பெண்மடல் ஏறிய பெற்றிகூ றினனே.**

காட்சி, ஐயம், மெய்தொட்டுப் பயிறல், கலவி மகிழ்தல், பாலனைப் பழித்தல், நாணிக்கண் புதைத்தல், (மகட்போக்கிய அல்லது மகள் மெலிவுகண்ட)நற்றாய் இரங்கல்,(தலைவன் அல்லது பாங்கி கையுறை ஆகிய) தழை வியந்து உரைத்தல் முதலிய அகப்பொருள் துறைகள் நானூறு எனப் பலர் கூறினர். சிலர் இத்தலைவி இன்னவனுக்குத் தக்கவள் என உடம்படல், காதலால் தொழுதல், (தலைவன் அல்லது தலைவி தன்னைக்) காட்டியபிறகு மறைந்து கொண்டு மயங்கவைத்தல், தலைவன் தலைவியைத் தேடுதல், தலைவன் மாறுவேடத்தில் வருதல்

போன்ற சில புதிய துறைகளையும் கூறியுள்ளனர். அது மட்டு மன்றி ஓர் ஆழ்வார் பெண் மடலேறிய சிறப்பையும் பாடினார் என்றவாறு.

பொதுவாக நானூறு துறைகள் எனக்கூறப்படினும் கவிஞர் தம் கற்பனைக்கு ஏற்பப் புதுத்துறைகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகிறார். பெண் மடல்ஏறியதைக் கூறியவர் திருமங்கையாழ்வார். (326)

**50. தலைவனும் தலைவியும் தோழனும் தோழியும்**
**அன்னமும் கிளியும் அணிமலர்ப் பொதும்பரும்**
**கதிர்மதி முகில்வளி கடல்மலை பொருள்போர்**
**பார்த்தல் கவிழ்தல் ஆதிய பலவும்**
**கருதிக் கூர்ப்புடைக் கவிஞர்வாய் திறக்கில்**
**திகழ்தரு துறைவகை செப்பிடற்கு அரிதே.**

தலைவன், தலைவி (ஆகிய அகப்பொருளின் முக்கியப்பாத் திரங்கள்) பாங்கன், பாங்கி (ஆகிய துணைப் பாத்திரங்கள்), அன்னம், கிளி (போன்று உவமைக்கும் தூதனுப்பவும் ஏற்ற பொருள்கள்) அழகிய பூங்கா சூரியன், சந்திரன், மேகம், வாடை தென்றல் முதலிய காற்று, சமுத்திரம் வெற்பு(முதலிய மனநிலைக்கேற்ப இன்ப துன்பங்களைத் தரும்) இயற்கைப் பொருள்கள், (பிரிவுக்குப் பெரும்பான்மைக் காரணமான) செல் வம், யுத்தம் ஆகியன, தலைவியைத் தலைவன் பார்த்தல், அவள் நாணித் தலைகுனிதல் போன்ற சுவையான நிகழ்ச்சிகள் என்பன வற்றை எல்லாம் சிந்தித்து அறிவுக்கூர்மையுடைய ஒரு புலவன் பாடத்தொடங்கினால் தோன்றுகின்ற துறைகள்எண்ணிக்கைக் கடங்கா என்றவாறு.

பொருள் என்றதால் கல்விப்பொருள், செல்வப்பொருள் இரண்டுங் கொண்டு ஓதற்பிரிவையும் அடக்குக. போர் என் றால் தூது, பிற அரசியல் வினை முதலிய அனைத்தையும் கொள்க. கூர்ப்பு என்பது அறிவுக் கூர்மையும் பொருள்களின் இயல்புகளை ஆய்ந்துணரும் திறமையும் ஆகும்.

இந்நூற்பாவால் துறைகள் பல்கக் காரணம் கூறப்பட்டது. (327)

**51. துறைத்தொகை ஒருவிதம் சொல்வார் சொல்லினும்
நூறுதொட்டு ஆயிரம் வரைநுவன்று அதன்பெயர்
வேறுஇடத் தகும்என விளம்பல் என்இசைவு;
உயர்த்தினும் தாழ்த்தினும் ஒண்பொருட் சுவைகண்டு
எடுத்தலும் இகழ்தலும் இயல்பாம் அன்றே.**

அகப்பொருளின் துறைகள் இவ்வளவே என ஓர் எண்ணிக்கையை வரையறை செய்து ஆசிரியர்கள் கூறினாலும் நூறு முதல் ஆயிரம் வரை (புலவனின் திறமைக்கேற்றபடி) துறைகளைக் கூறி அந்தச் சிற்றிலக்கியத்திற்கு (அகத்துறைக்கோவை அல்லது ஐந்திணைக் கோவை என்னாமல்) வேறொரு பெயர் வைத்தாலும் பொருந்தும் என்னும் கொள்கை எமக்கு உடம்பாடாம். பாடல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினாலும் குறைத்தாலும் சுவைஞர்கள் நூலின் பொருட்சுவையையே கருதி அதனைப் போற்றவோ தூற்றவோ செய்வதுதான் இயற்கை என்றவாறு.

கல்லாடத்தில் நூறு துறைகளே இடம் பெறுகின்றன. பலவருக்கக் கோவைகள் அகராதி வரிசையில் மொழி முதல் எழுத்துகளைக் கொண்டு அமைகின்றன. இவற்றுள் நானூறு துறைகள் இடம் பெற வாய்ப்பில்லை. ஒட்டக்கூத்தர் நாலாயிரக் கோவை பாடியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு பல்வேறு இலக்கிய வகைகள் ஆட்சியில் இருத்தலால் சற்றேறக்குறைய நானூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியத்தைக் கோவை என்றும் மற்றவற்றிற்கு வேறு பெயரிட்டும் வழங்கலாம் என்ற கருத்து கூறப்படுகிறது.

இலக்கிய ரசிகர்கள் சொற்சுவை பொருட்சுவை நோக்கி ஒரு நூலைப் பாராட்டவோ தூற்றவோ முற்படுவரே யன்றி அதன் பாடல் எண்ணிக்கையை மட்டும் கொண்டு அங்ஙனம் செய்யார் என்ற திறனாய்வுக் கொள்கையும் இதில் விளக்கப்பட்டது. (328)

52. நாடகம் தொட்டு வண்ணம் ஈறாய
கவிதொறும் துறைநலம் காட்டல்உண்டு; ஆயினும்
கட்டளைக் கலித்துறை கடல்உறழ் சந்தம்
என்னும்இவ் விரண்டால் இயம்பிடல் மிகையே.

(பதம், சிந்து முதலிய)நாடகத் தமிழ்ப் பா வகைகள் முதல் (எட்டுக் கலைகளையும் ஆண்கலை பெண்கலை என்ற இரு பெரும் பகுப்புகளையும் கொண்டு சந்தக் குழிப்போடு பாடப் படும்) வண்ணப் பாடல்வரை எல்லா வகையான யாப்பிலும் அகப்பொருள் துறையின் சிறப்பு காட்டப்படும். என்றாலும் கட்டளைக் கலித்துறை, கடல் போன்ற கம்பீரமான ஒலி நயம் கொண்ட வண்ணம் ஆகிய இந்த இருவகை யாப்பில் அகப்பொருள் துறைகளை இயற்றுதலே பெரும்பான்மை வழக்கம் என்றவாறு.

நாட்டியத்தோடு பாடுவதற்கு ஏற்ற பகுதி நாடகத்தமிழ் என்ற இவ்வாசிரியர் கருத்து முன்பே கூறப்பட்டது. இவர் கூறும் வண்ணத்தின் இலக்கணம் அடுத்த யாப்பிலக்கணத்தில் விரிவாகக் கூறப்படும். பெருங்காப்பியங்களிலும், தனிப் பாடல் களாகவும் அகவல், விருத்தங்கள் வெண்பா போன்றனவற்றால் அகப்பொருள் துறைகள் கூறப்படினும் தனி அகப்பொருளாகப் பாடுங்கால் கட்டளைக் கலித்துறையாலேயே கோவைகள் அமைகின்றன. தணிகைப்புராணமாகிய பெருங்காப்பியத்தின் இடையிலேயே கச்சியப்பமுனிவர் கட்டளைக் கலித்துறைகளானி யன்ற கோவையைச் சேர்த்துள்ளார்.[1] அவ்வாறே வண்ணங் களின் பாடுபொருளும் மிகப்பெரும்பான்மை அகப்பொருள் துறைகளே. (329)

53. வண்ணம் புகுபவும் மாட்டா தனவும்
துறைகளில் உளஎனச் சொல்வது துணிவே.

வண்ணப்பாடல்களில் பாடக்கூடியன, அவற்றுள் சொல்ல இயலாதன என அகப்பொருள் துறைகளில் பல உள்ளன எனக் கூறினால் அது உறுதியானதே என்றவாறு.

1 தணிகைப் புராணம், களவுப்படலம்.

வண்ணயாப்பு அளவால் பெரியது. அதன் பிற்பாதியாகிய நான்கு கலைகளே துறைப்பொருள் கூறப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. ஒரு கலை என்பது மூன்று துள்ளல்களையும் ஒரு தொங்கலையும் கொண்டதாகும். எவ்வளவு சிறிய வண்ணக்குழிப்பு எடுத்துக் கொண்டாலும் ஒரு கலை கிட்டத்தட்ட இரு கட்டளைக் கலித்துறை அளவு அமையும். எனவே எந்த ஒரு துறையைச் சற்றேறக் குறைய எட்டு கட்டளைக் கலித்துறைகளாக விரித்துக் கூற முடியுமோ அந்தத் துறையே வண்ணத்தில் இடம்பெற முடியும். உதாரணமாக இடமணித் தென்றல் என்னும் துறையை வண்ணத்தில் விரித்தால் அதன் சுவை குன்றும். எனவே தான் கலவி மகிழ்தல், நற்றாய் இரங்கல், அவயவம் எழுதல் அரிது எனல், தலைவியின் பிரிவுத் துன்பத்தை ஏதோ ஒரு வாய்பாட்டாற் கூறுதல், பாலனைப் பழித்தல் போன்ற விரித்துக் கூற வாய்ப்பளிக்கும் துறைகளே வண்ணக்கவியில் அதிகமாக இடம் பெறுகின்றன.

இது வண்ணப்பாடல்களின் நீளத்தால் நேர்கின்ற ஒன்றேயன்றித் துறைகளில் சிறுமை பெருமை இன்று. (330)

**54. துய்ப்பார் சொல்எனச் சூட்டுநர் மொழிஎன**
**இருவகைத் துறைகள்ஈண்டு இலங்குகின் றனவே.**

அகப்பொருளை நுகரும் பாத்திரங்களின் கூற்று என்றும் கவிக்கூற்று எனவும் அகப்பொருள் துறைகள் இருவகை உடையனவாக விளங்குகின்றன என்றவாறு.

இச்சூத்திரம் அகப்பாட்டின் முக்கிய உறுப்புகளில் ஒன்றாகிய கூற்று பற்றிக் கூறுகிறது. தலைவன், தோழன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி போன்ற கதைமாந்தர் இன்பதுன்பங்களைத் தாமே அநுபவிப்பதால் துய்ப்பார் எனப்பட்டனர். சூட்டுநர்மொழி என்பது இலக்கியத்தை இயற்றி ஒரு பாட்டுடைத் தலைவனுக்கு அணிவிக்கும் கவிஞனின் கூற்றை. (331)

**55. ஒருதுறை பற்றிப் பற்பல விதமாய்ச்**
**சாற்றலும் இயல்புஎனில் தள்ளார் புலவோர்.**

ஒரே ஒரு துறையை எடுத்துக் கொண்டு பலப்பல பாடல்களில் வேறுவேறு வகையாகக் கூறுதலும் இலக்கண வரம்பிற்கு உட்பட்டதே எனச் சொன்னால் அறிஞர்கள் மறுக்க மாட்டார்கள் என்றவாறு.

நாணிக் கண்புதைத்தல் என்னும் ஒரே துறையில் அமைந்த பல ஒருதுறைக்கோவைகள் தமிழில் உள்ளன. இவற்றுள் அமிர்த கவிராயரின் ஒருதுறைக்கோவை இதே துறையில் நானூறு பாடல்களை உடையது. இங்ஙனமே வெறிவிலக்கல் துறையைக் கூறும் ஒருதுறைக்கோவைகளும் சில உள்ளன. இவைகள் நூறு பாடல்களானியன்றவை. இந்நூற்பா இத்தகைய ஒரு துறைக்கோவைகளை நோக்கி அமைந்ததாகும். (332)

**56. துறைஇயல்பு இவ்வணம் சுருக்கித் தொல்அகப்**
**பொருள்முடித்து இனிமறு பொருட்புக லுதுமே.**

துறை இயல்பாகிய இப்பகுதியை இவ்வாறு சுருக்கமாகத் தலைக்கட்டி இத்துடன் தொன்மையானதாகிய அகப்பொருள் இலக்கணத்தையும் நிறைவு செய்து அடுத்து மற்றொன்றாகிய புறப்பொருள் இலக்கணத்தைக் கூறத் தொடங்குவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் துறையியல்பாகிய இச்சிறுபகுதியும், அகப்பொருளாகிய பெரும்பகுதியும் நிறைவு செய்யப்பட்டு அடுத்த இரண்டாவதாகிய புறப்பொருளுக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்டது. (333)

**துறை இயல்பு முற்றிற்று.**

**அகப்பொருள் முற்றும்.**

# II. புறப்பொருள்

பொருள் இலக்கணத்தில் இரண்டாம் பெரும் பிரிவாகிய இதனுள் நிலத்தியல்பு, உழிஇயல்பு,வேற்றுயிரியல்பு, கருவியல்பு, தொகுப்பியல்பு என்ற ஐந்து சிறு பகுதிகள் அடங்கியுள்ளன. முன்பே கூறப்பட்டபடி இவ்வாசிரியர் வெட்சி, கரந்தை போன்ற மரபியற் புறப்பொருள் கொள்ளாது இயற்கை நிலப் பகுப்பு, மக்கள் வாழிடங்கள், விலங்கு, பறவை இவற்றுள் சில வற்றின் தன்மைகள், அன்றாட வாழ்க்கையில் பயன்படும் கருவி கள் போன்றனவற்றைக் கூறியுள்ளார். இப்பகுதி இவ்வாசிரியர் வாழ்ந்த காலச் சமுதாய நிலையை அறியப் பெரிதும் உதவி புரிகிறது.

## 1. *நிலத்தியல்பு*

**57. புறப்பொருட் பகுதியில் பொருவில் ஐவகை**
**நிலத்துஇயல்பு உரைக்குதும் நிகழ்ந்த வாறே.**

புறப்பொருள்களைப் பற்றிக் கூறும் இப்பகுதியில் ஒப்பற்ற ஐந்து வகையான நிலங்களின் தன்மைகளை அவை இயற்கை யாக எவ்வண்ணம் அமைந்துள்ளனவோ அவ்வண்ணமே கூறு வாம் என்றவாறு.

பொதுவாக நிலத்தின் இயல்பு தமிழ் இலக்கணங்களில் அகப்பொருள் கூறப்படும் போது கூறப்படும். ''யான் அவ்வாறு கூறாமல் புறப்பொருளாகவே நிலத்தைக் கொண்டுள்ளேன்'' என்பதை வலியுறுத்துவதற்காகப் ''புறப்பொருட்பகுதியில்'' என இங்கு மீண்டும் அநுவதித்தார்.

தன்கொள்கைக்குக் காரணம் கூறும் முகத்தான் நிகழ்ந்த வாறே கூறுதும் என்றார். இயற்கைப் பொருள்கள் முற்றிலும் புறப்பொருள்களே. குறிஞ்சி முதலிய இயற்கைப் பொருள்கள் அகப்பொருட் பாத்திரங்களின் உணர்ச்சிகளை உணர்த்தத் தகுந்த பின்னணியாகப் பயன்படுகின்றனவேயன்றி அதற்கும் அகப்பொருளுக்கும் நேரடியான தொடர்பில்லை. குறிஞ்சி

கூடல், கூடல் நிமித்தம் என்றால் மற்ற நால்வகை நிலத்தில் அஃது இல்லையென்றா பொருள்? முல்லை நில மகளிர் ஆயுட் கால முழுவதும் தம் காதலரைப் பிரிந்து ஆற்றியிருந்து வருகிறார்களா? நெய்தல் நிலப் பெண்களுக்கு இரங்கி இரங்கிச் சாவதைத் தவிர வேறு கதியே இல்லையா?

கதைமாந்தரின் உணர்ச்சிகளாகிய அகப்பொருளை வெளிப்படுத்த இந்த ஐவகை நிலப்பாகுபாடு பெரிதும் உபகாரப் பட்டபோதிலும் இவை அகப்பொருளாக மாட்டா. அகப் பொருள் முற்றிலும் நுட்பமானவை. பருப்பொருள்கள் அனைத்தும் - தலைவன், தலைவி ஆகிய இருவரின் உடல் நீங்கலாக-புறப்பொருளாகவே கொள்ளற்பாலனவாம்.

இது பற்றியே இவ்வாசிரியர் பிறிதோரிடத்தில், ''மலை வளமும், கடல்வளமும், நகர்வளமும் முதலா வயங்குபுறப் பொருள்அமைப்பும், மங்கைநல்லார் கும்ப முலைவளமும் தலைவளமும், நிலைவளமும், பிறவும் மொழியும்அகப் பொருள் வியப்பும்''[1] எனக் கூறுகின்றார். (334)

**58.** **வான்தவழ் குடுமி வரைகளும் பறம்புக்**
**கூட்டமும் குறிஞ்சி; கொள்வார் முனிவரும்**
**வேடரும்; விளைவன தினையும் கிழங்கும்;**
**பொலிவன அருவியும் பொழிலும் ஆதிய;**
**வளம்எலாம் விரிக்கிலம்; ஆயினும் மற்றும்**
**சிறிதுஉள வியன்அவை செப்புதும்; என்எனில்**
**எவ்வகைத் தெய்வமும் ஆகி எம்மது**
**முருகோன் நடம்இடும் முறைமைநன்கு உணரார்**
**தம்தேவு உளதுஎனத் தனித்தனி வரலும்**
**யாம்அது கண்டுஉவப்பு எய்தலும் ஆமே.**

மேகங்கள் உலவுமளவு உயர்ந்த சிகரங்களை உடைய பெருமலைகளும், சிறிய குன்றுகளின் தொகுதிகளும் குறிஞ்சி எனப்படும். இதனைத் தம் வாழிடமாகக் கொள்பவர்கள் தவ

1 குருபர தத்துவம். பாயிரம். 5

சிகளும் வேடர்களும் ஆவர். தினையும், வள்ளிக் கிழங்கும் இந் நிலத்தின் விளைபொருள்கள் ஆகும். அருவிகள், பூஞ்சோலைகள் முதலியன இப்பகுதிக்கு எழில் தருவனவாம். குறிஞ்சியின் இயற்கை வளங்கள் அனைத்தையும் ஈண்டு விரித்துக் கூற வில்லை. எனினும் குறிஞ்சி நிலத்திற்கு இவைஅல்லாத வேறு மூன்று சிறப்புகளாக உள்ளவற்றைக் கூறுவாம். அவை யாவை எனில் முதலாவதாக எம் வழிபடு கடவுள் ஆகிய முருகப் பெரு மான் எல்லாவகையான தெய்வ வடிவங்களையும் தாங்கிக் குறிஞ்சி நிலத்தில் திருக்கூத்து இயற்றுவதாகும். இரண்டாவது, முருகப்பெருமான் ஆகிய பரம்பொருளே இவ்வாறு வேறு வேறான நாம ரூபத்தோடு எழுந்தருளியுள்ளார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலாத பாமர மக்கள் தனித் தனிக் கூட்டங்களாகத் தத்தம் தெய்வமே அங்கே திருக்கோ யில் கொண்டுள்ளதாக எண்ணி வழிபட வருதல் ஆகும். மூன் றாவது, பரத்துவத்தின் தன்மை உணர்ந்த எம் போன்றோர் அதை எண்ணி மகிழ்தல் ஆகும் என்றவாறு.

பரம்பொருள் ஒன்றே. அது தனக்கென்று ஒரு பெயரோ வடிவமோ இல்லாதது. தன்னை வழிபடுபவர் எந்த நாமரூபத் துடன் வழிபடுகின்றனரோ அதே பெயர், வடிவத்துடன் தோன்றி அருள் செய்வதே பரம்பொருளின் தன்மை. இக்கருத்து இவர் நூல்களில் மிகப்பல இடங்களில் காணப்படும். "யாவர் எவ்வண்ணம் சொல்லும் எவற்றினும் இசைந்து நின்று மூவல் அற்று ஒளிரும் தொல்சீர் முதற்பரம் பொருளை வாழ்த்தி"[1] என்பது அவற்றுள் ஒன்று. அப் பரம்பொருளைத்தான் இவர் முருகன் என்ற பெயரில் வழிபடுகிறார். இவ்வாறு பரம்பொரு ளாகிய ஒரே தனிப் பெரும்பொருளை முருகன் என்ற பெயரில் வழிபடுவதே கௌமாரமாம். பல தெய்வங்கள் உளர்; அவர் களுள் முருகன் உயர்ந்தவன் என்னில் அது ஞானிகளுக்கு உடம்பாடாகாது. வெறும் புராணங்களின்வழிச் சிந்தை செய் வோரே இங்ஙனம் கூறுவர். "அரியும் சிவனும்மற்றை யாரும் பழனிக் கிரிமுருகன் என்றே கிளத்தும் பெரிய கவுமாரர்

1 புலவர். பொதுப்பாயிரம் 1

மாற்றம்முற்றும் காய்கனல்போல் கோபப் பவுராணி கர்க்குப் பகை''[1] என்பது இவர் வாக்கு.

திருவேங்கடத்தில் திருமாலாகவும், திருக்கழுக்குன்றில் சிவபிரானாகவும், திருச்சி மலையின் உச்சியில் விநாயகராகவும், சாமுண்டி மலையில் அம்பிகையாகவும், பழனியில் முருகனாக வும், சபரிமலையில் ஐயப்பனாகவும் விளங்குவது ஒரே பரம் பொருள். அதை இவர் முருகன் எனக்கொள்கிறார். இப்பெரு நிலை அனைவர்க்கும் எய்தல் அரிது ஆதலின் அவர்கள் தம் அறி யாமை காரணமாக வேறுவேறு தெய்வங்கள் இருப்பதாகக் கருதி வருகின்றனர். எவ்வாறாவது மக்கள் இறைவனை வழிபடுவதைக் கண்டு இவர் உவகை கொள்கிறார்.

இவர் தெய்வ சமரசமும், பரம்பொருள் ஒன்றே என்னும் தெளிவும் உடையவர். எனினும் ஆன்ம வழிபாட்டிற்கு ஒரு தெய்வ வடிவ உபாசனை அவசியம் என்கிறார். இவர் முருகப் பெருமானைப் பரம்பொருளாக உபாசிப்பவர். எனவே இங்கு அந்த உரிமைபற்றி எம்மது முருகோன் என்றார். (335)

**59. துழாயொடு பிறவும் சூழ்ந்த காடே**
**முல்லை; வாழ்பவர் மூவாப் பொதுவர்;**
**கமழ்வன பால்தயிர்; கடவுள்மா யவனே.**

துளசியோடு மற்றவகையான தாவரங்கள் மண்டி வளர்ந் துள்ள காட்டுப் பகுதியே முல்லை எனப்படும். இந்நிலத்தில் வாழ்பவர் எப்போதும் அப்பகுதியை விட்டு விலகாத ஆயர்கள் ஆவர். இந்நிலத்தில் பாலும் தயிரும் எந்நேரமும் மணம் பரப் பிக் கொண்டு இருக்கும். இம்முல்லை நிலத்திற்குரிய தெய்வம் திருமாலாம் என்றவாறு.

முல்லை நிலத்தில் மிகப்பல வகையான மரம் செடி கொடி கள் இருக்கத் துழாயைக் கூறியது அது அந்நிலக் கடவுளுக்குச் சிறப்பாக அமைந்தது பற்றி. (336)

---

1 பழனித். வெண்பா அந்தாதி 16.

60. பசும்புல் பற்றாப் பாலையிற் பல்பேய்
திரிவன; விருந்துஎனத் திருடர்வந்து அகல்வார்;
கிடப்பன உடைதலை ஆதிய; கிளத்தரும்
இந்நிலத் தெய்வம் இலங்குஇரு பிறைஎயிற்று
அகல்வாய்க் காளிஎன்று அறைந்திடத் தகுமே.

பசுமையான புல்லும் கூட முளைக்காத வெப்பம் மிக்க பாலை நிலத்தே பல பேய்கள் திரிந்து கொண்டிருக்கும். வழிப் போக்கர்களை ஆறலைப்பதற்காக அவ்வப்பொழுது கள்வர் வந்து நிலையாகத்தங்கி இராமல் திரும்பிப் போய்விடுவர். வழிப்பறிக்காரர்களால் கொலையுண்ட வழிப்போக்கர்களின் உடைந்த தலை முதலிய உறுப்புகள் ஆங்காங்கே கிடக்கும். சொல்ல முடியாத கொடுமையை உடைய இப் பாலை நிலத்துக்குரிய தெய்வம் பிரகாசிக்கின்ற இரண்டு பிறைமதி களைப் போன்ற கோரைப்பற்களையும் அகன்ற வாயையும் உடைய காளியாவாள் என்றவாறு.

பேய் திரிவன என்பதாலும், திருடர் வந்து அகல்வார் என்ப தாலும் இந் நிலப்பகுதியில் நிலையான மக்கள்வாழ்க்கை இல்லை என்பது பெறப்பட்டது. (337)

61. வாழையும் தென்னையும் மலிவுறும் மருதத்து
அந்தணர் முதற்சிலர் அமர்தலும் அன்றி
மள்ளர்ஆ தியரும் வயல்சார்ந்து இருப்பதுஉண்டு;
அவர்அயன் ஆதியர்ப் பரவல்கண்டு இவர்தாம்
இந்திரன் ஆதியர்க்கு இனியசெய் குவரே.

வாழையும் தென்னையும் மிக அதிகமாக வளரும்படி நீர் வளம் மிக்க மருதநிலத்தில் வேதியர்முதலிய சில வகுப்பாருடன் உழவர்களும் வயல்களுக்கு அருகே வசிப்பர். அவ்வந்தணர்கள் பிரமன் முதலிய தெய்வங்களை வழிபடுவதைப் பார்த்து, இந்த உழவர்களும் இந்திரன் முதலிய தெய்வங்களுக்கு மகிழ்ச் சியைத் தரும் பூசனை புரிவர் என்றவாறு.

வயல் சார்ந்திருப்பது உண்டு என்றதனாலும், வாழையும் தென்னையும் கூறப்பட்டதாலும் மருத நிலத்தின் இயல்பு கூறப்பட்டது. (338)

**62.** **வள்ளையும் புன்னையும் மடல்அவிழ் தாழையும்**
**பனையும் தோய்வுறப் பரவைசார் நெய்தல்**
**என்னும்அந் நிலத்தில் வலைஞர் அன்றியும்**
**ஈழரும் கொட்டில்இட்டு இருப்பார்; அன்னவர்**
**வருணனைக் கொற்றியை வணங்குநர் தாமே.**

வள்ளைக் கொடிகள், புன்னை மரங்கள், இதழ் விரிகின்ற தாழைச் செடிகள், பனை மரங்கள் முதலிய தாவரங்களோடு கடற்கரையில் உள்ள நெய்தல் என்னும் நிலப்பகுதியில் மீனவர் களோடு ஈழவரும் குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழ்வர். அந்நிலமக்கள் நீர்க்கடவுள் ஆகிய வருணனையும், துர்க்கையை யும் வழிபடுவர் என்றவாறு. (339)

**63.** **இவ்வகை நிலங்கள்ஓர் ஐந்தும் இசைவுறீஇ**
**மாநிலம் ஆம்; அதன் வாழ்வுஎலாம் உடையார்**
**மன்னரும், புலவரும், மாழைமிக்கு உள்ளார்**
**தாமும், கடவுளர் சாற்றரும் பொதுத்தேவு**
**ஒன்றும், குரவனும்; உரைக்கும் இம்முறை**
**உணர்வார் சிலர்எனல் உறுதியுள் உறுதியே.**

இவ்வாறு தத்தம் இயல்பால் வேறுபட்ட ஐந்து வகையான நிலங்களும் சேர்ந்ததே நாடு எனப்படும் மாநிலம் ஆகும். இம் மாநிலத்தின் அனைத்துச் சிறப்பையும் பெற்றவர்கள் அரசரும், புலவர்களும், மிகப்பொருள் படைத்த செல்வரும், சிறுதெய் வங்களாலும் இத்தன்மைத்தென்று கூற முடியாமல் மனமொழி மெய்களுக்கு அப்பாற் பட்ட பரம்பொருளும், ஞானாசிரியனும் ஆவர் என்றவாறு. யாம் கூறும் இந்த நியாயத்தை அனைவரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். மிகச் சிலரால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். இது மிக உறுதி என்றவாறு.

ஒவ்வொவரு நிலத்தில் தலைமை பூண்டவர்களுக்கு அவ்வந் நிலத்திற்கு உரிய செல்வங்கள் மட்டுமே கிடைக்கும். மீறிப் போனால் அடுத்த நிலப்பகுதியின் சிறப்பில் சிலவற்றைப் பெற லாம். ஆனால் இந்நூற்பாவில் கூறப்பெற்றிருப்பவர் அனை வர்க்கும் பொதுவானவராகவும், அனைவராலும் போற்றப் பெறுபவராகவும் இருத்தலின் ஐந்நிலச் செல்வமும் ஒருங்கே எய்தற்பாலார் ஆவர். (340)

**64. குறிஞ்சிஊர் குறிச்சி; முல்லையூர் பட்டி;**
**மருதத்து ஊர்நகர்; நெய்தல்ஊர் பட்டினம்;**
**இவற்றை நானிலம் என்றனர் புலவோர்.**

குறிஞ்சிப்பகுதியில் உள்ள ஊர் குறிச்சி என்றும், முல்லை நிலத்தது பட்டி என்றும், மருதத்தின்கண் உள்ளது நகர் என்றும் நெய்தற் பிரிவைச் சார்ந்தது பட்டினம் எனவும் பெயர் பெறும். இந்த நால்வகை நிலங்கள் அடங்கிய பகுதியே நானிலம் எனப் புலவர்களால் அழைக்கப்பட்டது என்றவாறு.

நம்பிஅகப்பொருள் இந் நான்கு திணைகளுக்குரிய மக்கள் நெருங்கி வாழிடத்தை முறையே சிறுகுடி, பாடி, பேரூர் அல்லது மூதூர், பாக்கம் அல்லது பட்டினம் எனக்கூறும். ஊர், ஊரன் என்பன மருத நிலத்திற்கு உரியதாக இலக்கியங்களுள் வழங்கப்படினும் இவர் அச்சொல்லைப் பொதுவானதாக எடுத்துக்கொண்டு நகர் என்ற சொல்லைச் சிறப்புச் சொல் லாக்குகிறார். இது வடமொழித் தாக்கம். (341)

**65. என்புஊன் வேண்டுநர் யாவரும் பாலைக்கு**
**உரியார்; அன்னவர் ஊர்ப்பெயர் சேரி;**
**அவர்தெய்வம் அனைத்தும் அலகைத் திரளே**
**என்னும் தெளிவினர் இயற்றமிழ்ப் புலமை**
**வள்ளுவன் திருத்தாள் மலர்தொழும் அவரே.**

எலும்பையும் மாமிசத்தையும் உணவாக விரும்புகிறவர்கள் யாவரும் பாலை நிலத்தில் வாழ்தற்குரியவர்களாம். அவர்கள் வாழும் ஊர் சேரி எனப்படும். அவர்களால் வணங்கப்படுகின்ற

தெய்வங்களும் பேய்க் கூட்டங்களே. இயற்றமிழில் இணையற்ற பெரும் புலவராகிய திருவள்ளுவரின் திருவடித் தாமரைகளை வணங்கும் ஏற்றம் உடையவர்களே இதனைத் தெளிவாக உணர முடியும் என்றவாறு.

இவ்வாசிரியர் ஓர் உயிரைக் கொல்வதையும், ஊன் உண்பதையுமே தீயனவற்றுள் எல்லாம் தீயதாக எடுத்துக் காட்டியுள்ளார். "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று"[1] என்பதே இவருக்கு வேதவாக்கு. ஊன் உண்பார் மக்கள் மத்தியில் வாழத் தகுதியற்றவர் என்னும் தம் கொள்கைக்கேற்ப இவர் அவர்களைப் பாலைக்கு உரியார் என்றார். அவரால் வணங்கப்படும் தெய்வங்களுக்கும் அவர் மது, மாமிசம் படைப்பர். அதனால் அத்தெய்வங்களும் அலகை ஆயின. இவர் வேறொரு நூலில், "சுத்த பூசை தோய்தரும் ஆயின் பேயும் தெய்வம் ஆம்; பிணப்பலி ஏற்கின் தெய்வமும் பேயாம் எனும் இது திறமே"[2] எனக் கூறியுள்ளார்.

வெறும் இலக்கணக் கண் கொண்டு மட்டும் பார்க்காமல் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த சான்றோர்களைப் பின்பற்றி அன்பு,அருள் முதலிய தூய பண்புகளை உடையோரே தாம் முந்து நூலிற்கு முரண்படக் கூறும் இத்தகைய புதிய கருத்துகளை நியாயம் என ஒப்பி ஏற்பர் என்ற கருத்தில் வள்ளுவன் திருத்தாள் மலர்தொழும் அவரே என்றார். (342)

**66. குறிஞ்சி ஆதியில் தவமுதல் தொழில்களும்**
**தொண்டகம் ஆதிய பறைகளும் பிறவும்**
**தக்கோர் மரபால் தெளிவது தகுதியே.**

குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களிலும் நிகழ்கின்ற தவம் புரிதல் போன்ற செயல்களையும்,அவ்வத் திணைகளுக்குச் சிறப்பாக உரிய தொண்டகம் முதலிய தாளக் கருவிகளையும் (புள், விலங்கு; பண் போன்ற) பிற சிறப்புக் கூறுகளையும் தகுதியுடைய புலவர்களின் வழக்காற்றைத் துணையாகக் கொண்டு உணர்தல் சிறந்ததாம் என்றவாறு. (343)

1 திருக்குறள் 323 2 சத்திய சூத்திரம் 111

67. ஒருநிலத்து உறுவன மற்றொன் றிடத்தில்
புகுவதுஉண்டு; அம்முறை புகல்வதும் இயல்பே.

ஒரு பிரிவாகிய நிலத்திற்கே சிறப்பாக உரியதாகிய கருப் பொருள்கள் வேறொரு நிலத்திலும் காணப்படலாம். அவ்வாறு இடம் மாறி விளங்குவதைப் புலவர்கள் விளக்கிப் பாடுவதும் மரபே என்றவாறு.

ஒரு திணைக்குரிய கருப்பொருள்கள் வேறு திணையில் விளங்குவதைப் பாடுவதற்கு திணை மயக்கம் எனப்பெயர் (344)

68. நிலத்துஇயல்பு இவ்வணம் நிகழ்த்தினம்; இனிச்சிறிது
உழிஇயல்பு உரைக்குதும் உணர்ந்த வாறே.

ஐவகை நிலத்தின் இயற்கைத் தன்மைகளை இவ்வாறு கூறி முடித்தோம். அடுத்துப்பலவகையான மக்களின்வாழிடங்களைப் பற்றி யாம் அறிந்த படி சொல்வாம் என்றவாறு.

இந்நூற்பாவால் இப்பிரிவு நிறைவு செய்யப்பட்டு அடுத்த அதிகாரத்திற்குத்தோற்றுவாய்செய்துகொள்ளப்பட்டது. (345)

நிலத்தியல்பு முற்றிற்று

## 2. உழி இயல்பு

உழி-இடம்; இங்கு இருப்பிடத்தைக் குறித்து நின்றது. இவ் வியல்பில் தவசிகள், நால்வருணத்தோர் வாழிடங்களில் காணப் படுவனவும், போர்க்களம், புலவர்அவை போன்றவைகளும் கூறப்படும். இவ்வியல்பு பதினொரு சூத்திரங்களைக்கொண்டது

69. தவத்தோர் உறையுளில் தண்டொடு கமண்டலம்
கோவணம் மரவுரி குலவுகல் லாடை
வெண்ணீறு அணிமணி வேடர்கண்டு உரித்த
கொல்லாப் புலித்தோல் ஆதிய குலவுமே.

தவசிகளின் வசிப்பிடத்தில் யோகதண்டம், நீர்க்குடுவை, கௌபீனம், வற்கலை, காவிக்கல் தேய்த்த ஆடைகள், திருநீறு, அக்கமணி, இயற்கையாக இறந்த புலியின் உடலைக் கண்ட வேடர்கள் பிரித்தெடுத்து பதப்படுத்திய புலித்தோல் முதலிய தவச்சாதனங்கள் இருக்கும் என்றவாறு.

கொல்லாமை இங்கும் வற்புறுத்தப்படுகிறது. வேடர்கள் கூடப் புலியைக் கொல்லாமல் இயற்கை மரணம் எய்திய விலங்கின் தோலைச் சேகரிக்க வேண்டும் என்கிறார். மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் புலியையே கொல்ல மாட்டார்கள் என்றால் தீமை புரியாத மான்களுக்குத் தொல்லை தரார் எனக் கூற வேண்டாவாயிற்று. புலவர் புராணத்தில் இது பற்றியே, ''வில்லுடன்புகும் வேடரும் வேறுயிர்க் கொல்லு நீர்மை தவிர்ந்ததக்குன்றமே''[1] எனவும், ''மற்ற வெற்பின் வனசரர் போலவே கொற்ற வில்கரங் கொண்டுஅவர் கொய்கனி பெற்றம் ஊரும் பிரான்நிகர் பீடுடை நற்ற வர்க்குஉணவு ஆம்மிக நாளுமே''[2] எனவும் கூறுகிறார். (346)

**70. பாம்புநா வகிர்ந்த பசும்புலும், செங்கனல்**
**குண்டமும், திரித்தநூற் கோலும், சுருதியும்,**
**மஞ்சளில் கலந்து வைத்தபச் சரிசியும்,**
**மாவிலை, தொன்னை ஆதியும் அன்றி**
**நூற்பொருள் உணர்தரும் நுண்ணிமை இல்லார்**
**கொலைமகம் புரிதற் குறித்துஅயர்ந்து உயிர்க்கும்**
**இரக்கமும் பொலிவுறும் ஈசன் என்றே**
**உலகினர் வழிபட உயர்ந்தோர் இடத்தே.**

பூசுரர்கள் என்று மக்களால் போற்றப்படும் அளவு உயர்ந்தவர்கள் ஆகிய அந்தணர்களின் இல்லங்களில் பாம்பின் நாக்கைப்போல் பிளவுண்ட பசுமையான தருப்பைப் புல்லும், தினந்தோறும் ஔபாசனம் எனப்படும் வேள்வி இயற்றுதற்குரிய யாககுண்டமும், முப்புரி நூலாகிய பூணூலைத் தயாரிப்பதற்

1 புலவர் பொதியா. 27
2 ,, ,, 28

குரிய தக்கிளியும், வேதத்தின் ஒலியும், மஞ்சள் கலந்த பச்சரிசியாகிய அட்சதையும், மாவிலை, வாழை இலையால் தைக்கப்பட்ட கிண்ணம் போன்ற தொன்னைமுதலிய வழிபாட்டிற்குரிய பொருள்களும் விளங்கும். இவையேஅன்றி வேதத்தால் கூறப்பட்ட மெய்ப்பொருளையறியும் அறிவுக் கூர்மை இல்லாத பல அந்தணர்கள் உயிர்க் கொலையொடுபட்ட தீவேள்வி புரிகின்றார்களே என மனம் வருந்திப் பெருமூச்சுவிடும் அழகிய தட்பமும் விளக்கமுறும் என்றவாறு.

வேதங்கள் எழுதாமறை ஆதலின் சுருதி என்புழி வேதநூல்கள் என்னாது வேதஒலி என்றுரைக்கப்பட்டது. ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின் உயிர் செகுத்து உண்ணாமை நன்று''[1] என்னும் நுட்பம் உணராத இடைநிலை வேதியர் குறித்து உயர்நிலை அந்தணர் வருந்துவர். ''வேதம் சொல்லினும் விரிஞ்சன் ஆதியர் நேரிற் கூறினும் நீசர்க்கு உரித்தாம் கொலைபுலை செய்தல் கூடாதன்றே''[2] ''சீர் அருள் விழைவோன் தெய்வப் பிராமணன்; அழல்தசை நுகர்வோன் அசுர வேதியன்; தம்மில் தாழ்ந்தோர் தமக்கே பணிசெயக் காதலிக்கின்றோன் கடைப்பார்ப் பானே''[3] என்னும் இவருடைய வாக்குகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. (347)

**71.** **மூவகை முரசமும், முத்தமிழ்ப் புலவர்**
**ஆர்வமும், கரிபரி ஆதியின் பெருக்கும்,**
**கதிர்வாட் சேவகர் காப்பும், பசும்பொன்**
**நவமணிக் குவியலும், நடம்பயில் அரங்கும்,**
**ஆக்கமும் செருக்கும், அறநெறி ஆதியும்**
**மன்னர்வாழ் அரண்மனை வாய்ந்த பொருளே.**

(வெற்றி, கொடை, மணம் ஆகியவற்றிற்குரிய) மும்முரசுகளின் முழக்கமும், (இயல், இசை, நாடகமாகிய) மூவகைப் புலவர்களின் மீதும் அபிமானமும், யானை, குதிரை, (தேர், காலாள்) போன்ற சேனைகளின் மிகுதியும், ஒளிவீசுகின்ற ஆயு

---

1 திருக்குறள் 259
2 சத்திய சூத்திரம் 81
3 சத்திய சூத்திரம் 33

தங்களை ஏந்திய வீரர்களின் பாதுகாவலும், சொக்கத் தங்கம் நவரத்தினங்கள் போன்ற செல்வ மிகுதியும்,(இசையோடு)கூத்து நிகழ்வதற்குரிய மண்டபங்களும், நாளுக்குநாள் (செல்வம், அதிகாரம், புகழ்) இவைகளின் வளர்ச்சியும், (நாடாளும் மன்னனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய அளவு) பெருமிதமும், அறம் பொருள் இன்பத் துறைகளுக்கு வேண்டுவன யாவும் அரசர்களின் அரண்மனையின்கண் இருக்கத்தக்கனவாம் என்றவாறு.

ஈண்டுச் செருக்கு என்றது அகந்தையை அன்று; சிறந்த பெருமிதத்தை. (348)

**72. துணிவொடு செட்டும், தொலையாக் கணக்கும்,**
**வட்டியும். திட்டமும், மாழை மணிதுகில்**
**ஆதியும் வணிகருக்கு ஆன பொருளே.**

(புதிய வியாபாரங்களில் ஈடுபடுவதற்கேற்ற) துணிச்சலும், சிக்கனமும், எந்த நிலையிலும் தீராமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்ற (வரவுசெலவுக்) கணக்கும், வட்டியும், (வியாபாரத்தை மேலும் மேலும் விரிவாக்குவதற்குரிய)எதிர்காலத் திட்டங்களும், பொன் நவரத்தினங்கள் ஆடைவகைகள் போன்ற (சொந்தத் துய்ப்புக்கும் விற்பனைக்கும் உரிய) விலை உயர்ந்த பொருள்களும் வணிகர்களுக்கான பண்டங்களாம் என்றவாறு. (349)

**73. மேழிச் சீரும், விளைந்தநெற் குவியலும்,**
**கன்னல்முத் தளவிய காலும், நாழியும்**
**அருமையும் தகுதியும் ஆகிய பிறவும்**
**நாலாம் குலத்தினர் நன்மனைப் பொருளே.**

விவசாயத்தால் விளைந்த செல்வமும், நன்கு பயிராகிய நெல் முதலிய அனைத்துவகைத் தானியங்களின் குப்பையும், முத்துகள் விளைந்த கருப்பங் கழிகளும், தானியங்களை அளப்பதற்குரிய முகத்தலளவுக் கருவியாகிய நாழியும், (வேளாண்மையால் உலகைப் பாதுகாப்பதால் இயல்பாகப் பெற்ற)

அருமைப்பாடும், (புலவர்களால் போற்றப்படும், தகுதியும், மேலும் விருந்தோம்பல் முதலிய சிறந்த பண்புகள் யாவும் வேளாண் மக்கள் வாழ்கின்ற நல்ல வீட்டின் கண்ணே உள்ளன வாம் என்றவாறு.

மேழி ஆகுபெயராக விவசாயத்தை உணர்த்திற்று. மேழிச் சீர் – மூன்றன்தொகை. நெல் மற்ற தானியங்களுக்கும் உபலட் சணம். கன்னல் முத்தளவிய கால் என்பதற்குக் கரும்பில் தோன்றிய நன்முத்துக்களை அளந்த மரக்காலும் எனினும் அமையும்; என்றாலும் இலக்கண நூலாகிய இதில் உயர்வு நவிற்சி வேண்டா ஆதலின் வேறுவிதமாக உரைக்கப்பட்டது. (350)

**74. நால்வகைக் குலங்களைத் தனித்தனி தமதுஎனப்
பகர்தரும் சிற்சிலர் மனைப்பொருள் பலவும்
கூறிலம்; சொல்முறை குறித்தவர் தம்மில்
பெரியர்யாம் யாம்எனப் பிணங்குமாறு உணர்ந்தே.**

மேற்கூறிய நான்கு வருணங்களையும் அவை சிறப்பாக எம்முடையனவே எனக்கூறும் சிற்சில இனத்தாரின் வீடுகளி லுள்ள பொருள்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஏன் எனில் இனப்பெயர்களாகிய சொற்களை வைத்துக் கொண்டு அவர்கள் தங்களுக்குள் யாமே உயர்ந்தவர்கள் என மாறுபடு கின்றனர் ஆதலின் என்றவாறு.

அந்தணர்களால் மூன்றாம்குலம் எனப்படும் தேவாங்கருட் சிலரும், நான்காம் குலம் எனப்படும் கம்மாளரிற் சிலரும் தம்மை முதற்குலமாகச் சொல்லிக் கொள்வர். அவ்வாறே நாலாங்குலம் எனப்படும் சில வகுப்பினர் தம்மை இரண்டு மூன்றாங்குலத்தவர் என்பர்.இவ்வாறு தேவாங்கப் பிராமணர், விசுவகர்மா, கோவைசியர் போன்ற சொல்முறை பற்றிப் பிணங்குவர் என்று தெரிவிக்கிறார். இத்தகைய நூற்பாக்கள் இந் நூலாசிரியர் காலத்தே மண்டியிருந்த சாதிவாதப் பிரிவினைகளையும் பூசல்களையும் காட்டுகின்றன. (351)

75. கள், அரக்கு, என்பு, ஊன், கடிநாய், பன்றி
ஆதிய கடைப்படும் ஐந்தாம் குலம்உறு
சேரியின் பொருள்எனச் செப்பினர் புலவோர்.

கள், சாராயம், எலும்புத் துண்டுகள், மாமிசம், பிறரைக் கடிக்கும் இயல்புள்ள நாய், பன்றி போன்ற இழிந்தவையே பஞ்சமர்கள் வாழ்கின்ற சேரியில் இருக்கும் என்றார் அறிஞர் என்றவாறு. (352)

76. கவந்தமும் காளியும் கூளியும் அலகைத்
திரளும் ஆடலும் செந்நீர் ஆறு
நிணம்மிதந்து ஓடலும், நிறைமணி முடிமுதற்
கலன்எலாம் மிதிபடும் காட்சியும், நரிநாய்
கழுகொடு பருந்தும் காக்கையும் படர்தலும்,
வென்றியும், தோல்வியும், வேறுபல் இயல்பும்
பொருகளச் சீர்எனப் புகன்றனர் புலவோர்.

தலையறுபட்ட முண்டங்கள், கொற்றி, பூதங்கள், பேய் கூட்டங்கள் ஆகிய இவை கூத்தாடுதலும், உதிரம் ஆற்றுப் பெருக்காய் ஓட அதில் மாமிசம் மிதந்து செல்லும் காட்சியும், இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடம் முதலிய பற்பல அணி கலன்கள் தரையில் வீழ்ந்து (வீரராலும் விலங்குகளாலும்) மிதி படுதலும், நரிகள் நாய்கள் கழுகுகள் பருந்துகள் காக்கைகள் ஆகியன (தத்தமக்கு வேண்டிய இரைமிகுதியாகக் கிடைப்ப தால்) நெருங்குதலும், ஒரு சாராருக்கு வெற்றியும் மறு சாரா ருக்குத் தோல்வியும், "கூடலர் குடர்மாலை சூட்டி வேல்திரித்து விரும்பி யாடும்"[1] பிள்ளையாட்டு, "ஒன்னாதார் படைகெழு மித் தன்ஆண்மை எடுத்து உரைக்கும்"[2] நெடுமொழிவஞ்சி, 'மண்கெழு மறவன் மாறுநிலை நோனான் புண்கிழித்து முடி யும்"[3] மறக்காஞ்சி, "பொருபடை களத்து அவிய இருவேந்தரும் இகல்அவியும்"[4] இருவருந்தபுநிலை, "குடை மயங்கிய வாள்

---

1 புறப். மாலை 30 3 " " 75
2 " " 47 4 புறப். மாலை 138

அமருள் படை மயங்கப் பாழிகொண்ட"[1] ஏமஎருமை, "கழல் வேந்தர் படைவிலங்கி அழல் வேல்திரித்து ஆட்டமர்ந்த"[2] நூழில், "களம் கழுமிய படைஇரிய உளம் கிழித்த வேல் பறித்து ஒச்சும்"[3] நூழிலாட்டு, வேந்தனின்தேர்முன் வயவரும், பின் விறலியரும் கூத்தாடும் தேர்க்குரவைகள் போன்ற பிற செயல்களும் போர்க்களத்தின் சிறப்புகள் என்று புலவர்களால் சிறப்பித்துக் கூறப்படும் என்றவாறு.

வென்றியும் தோல்வியும் என்பதற்கு ஒரு சாராருக்கே ஒரே களத்தின் ஒரு முனையில் வெற்றியும் பிறிதொரு முனையில் தோல்வியும் எனினுமமையும். (353)

77. **நால்வகைப் பயனையும் நன்குஎடுத்து ஓதலும்,**
**உயர்ச்சியைத் தாழ்த்தலும், தாழ்ச்சியை உயர்ச்சி**
**ஆக்கலும், தலைசேர்ந்து அளவுஅறக் களித்தலும்,**
**மன்னரும் பரவும் மாண்புஉடைத்து ஆதலும்,**
**ஈவார் புகழ்ச்சியும், இல்லை என்பார்**
**இகழ்ச்சியும் நிறுவலும், எண்ணில்பல் கோடி**
**தெய்வமும் மொழிப்படி செய்யக் காண்டலும்,**
**ஆதிய பிறவும் அருந்தமிழ்ப் புலவோர்**
**அவையிடத்து உள்ளன என்னும்அம் புவியே.**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் களைத் தெளிவாக எடுத்து விளக்குதல், உயர்ந்தது எனவும் தாழ்ந்தது எனவும் பொதுவாகக் கருதப்படும் அவற்றைத் தம் மெய்யறிவினாலும் மொழித்திறத்தாலும்மாற்றிநிலைநாட்டுதல் தம்மொத்த புலவர்களோடு தலைக்கூடி மிகவும் உவகை அடைதல், வேந்தர்களாலும் போற்றப்படும் சிறப்பைப் பெற்று விளங்குதல், வள்ளன்மை மிக்காரின் சீர்த்தியும் இவறல்தன்மை உடையாரின் இழிதகைமையும் நின்றுநிலவும்படி புரிதல், கணக் கற்ற பெயர் வடிவங்களோடு விளங்குகின்ற தெய்வமும் தம்

---

1 புறப். மாலை. 140
2 " " 141
3 புறப். மாலை. 142

வாக்கிற்கேற்ப இயற்றச் செய்யும் வாக்குப் பலிதம் ஆகியவை களோடு நன்மாணாக்கரை உருவாக்கித்தருதல் போன்ற பல சிறப்புகளும் பெறுதற்கரிய தமிழ்ப்புலவர்கள் கூடியுள்ள மன்றத்தில் நிலைத்திருக்கும் என்பர் உலகினர் என்றவாறு.

"மேல்இருந்தும் மேல் அல்லார் மேல்அல்லர்;கீழ் இருந்தும் கீழ்அல்லர் கீழ் அல்லவர்"[1] இது தம் மெய்யறிவால் மேல்கீழ் மாறுபடுத்தது. "இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டி, கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே பகைவர்க்குத்தி கோடு நுதி சிதைந்து கொல்துறைக் குற்றிலமாதோ"[2] இது சொற் சாதுரியத்தால் மேல்கீழ் மாறுபடுத்தது.

"கருதிய தெய்வம் கண்முன் தோன்றிப் பேசின் அல்லது பெருந்தகைப் புலமை எய்தாதுஎன்றிடல் இயல்பாம் அன்றே"[3] "வண்ணப் பாநுவல் வாயின னேனும் சொற்படி நடவும் தொழில் இலனாயின் பல்இல்பாம்பு என்னப் பரதவிப் பானே" என இவர் புலவனின் வாக்குப் பலிதத்தையும் வற்புறுத்துகின் றாராதலின் இங்குத் 'தெய்வமும் மொழிப்படி செய்யக் காண்டல் காண்' என்கிறார். (354)

**78. வெறிக்களம், நெற்களம், வேடர் சேரி,**
**புலிக்குகை ஆதிய பொருள்எலாம் விரிக்கில்**
**பெருக்கும்; ஆதலிற் பேசிலம் அன்றே.**

வேலனுக்கு வெறியாட்டயர்கின்ற இடம், நெற்களம், வேடர்களின் வாழிடம், புலிகள் வாழ்கின்ற குகைகள் முதலிய அனைத்தையும் எடுத்த விரிக்கப் புகுந்தால் இந்நூல் அளவற்று விரிந்துவிடும். எனவே அனைத்தையும் இந்நூலில் கூறவில்லை என்றவாறு. (355)

**79. உழிஇயல்பு இவ்வாறு உரைத்தனம்; அடுத்துஇனி**
**வேற்றுஉயிர் இயல்பினும் விளம்புதும் சிறிதே.**

---

1 திருக்குறள் 973
2 புறம் 95
3 அறுவகை.. 668
4 ஏழாம். 303

பல்வேறு இடங்களைப்பற்றி இதுவரை இவ்வண்ணம் சொன்னாம். தொடர்ந்து மற்ற விலங்குகளின் இயற்கையையும் ஓரளவு கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் இப்பகுதி நிறைவுசெய்யப்பட்டு, அடுத்த வேற்றுயிர் இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப் பட்டது. (356)

**உழி இயல்பு முற்றிற்று.**

## 3. வேற்றுயிர் இயல்பு

பதினைந்து நூற்பாக்களானியன்ற இவ்வியல்பில் விலங்குகள், பறவைகள், நீர்வாழ்வன போன்றனவற்றின் தன்மைகள் கூறப்பட்டுள்ளன.

**80. எண்கால் இருசிறைச் சிம்புள் என்றவை**
**சிங்கத்து உறுதசை தின்பன வாமே.**

எட்டுக் கால்களையும் இரண்டு சிறகுகளையும் பெற்றுள்ள சரபமானது சிங்கத்தைக் கொன்று அதன் ஊனை உண்ணும் இயல்பினது ஆகும் என்றவாறு.

சிம்புள் எனவும் சரபம் எனவும் கூறப்படும் இது பறக்கும் இயல்புடையது. "பறந்துசெல் சிம்புள் பைஎன வைத்தலும்"[1] என்பது பெருங்கதை. இரணியனைக் கொன்ற நரமடங்கலைச் சிவபெருமான் சரபமூர்த்தியாகி அடக்கினார். இவ் வடிவ வர்ணனையைக் காஞ்சிப்புராணத்தில் காண்க. (357)

**81. கையொடும் இன்றியும் கவின்தரும் ஆளிகள்**
**யானை ஊன்முழுது இனிதுஅருந் துபவே.**

தும்பிக்கை உடைய இனம் ஒன்று அஃதில்லாத இனம் ஒன்று என இருவகை யாளிகள் உள்ளன. இவ் விருவகையும்

---

1 பெருங்கதை. இலாவண 11–65

யானையின் மாமிசத்தை முற்றிலுமாக விரும்பிச் சாப்பிடுவன ஆம் என்றவாறு.

ஆளி கண்டபேரண்டம் எனவும் கூறப்பெறும். (358)

**82. வாலிய நிறம்முதல் ஐவகைத்து ஆகிய**
**சீயம் தாய்வயிற்று உதைந்துவெண் பிறைக்கோட்டு**
**ஆனைமேற் பிறக்கும்; அன்றுதொட்டு என்றும்**
**அதன்தலை நிணமே அயில்வது ஆகுமே.**

வெண்மை, செம்மை, பச்சை, மஞ்சள், கருமை ஆகிய ஐந்து நிறங்களிலும் உள்ள சிங்கம் தான் பிறக்கும்போதேதன் தாயின் வயிற்றை உதைத்துக்கொண்டு வெண்மையான சந்திரனின் பிறைகளைப்போன்ற தந்தங்களைஉடைய யானை யின் மேல் பாயும். அந்தநாள் முதல் என்றுமே சிங்கம் யானை மத்தகத்தில் உள்ள ஊனையே உண்டு வாழும் என்றவாறு.

சிங்கத்தில் பல நிறங் கொண்டவை இருப்பன உண்மையே. இதில் கூறப்பட்டுள்ள பிற செய்திகளை இன்றைய விலங்கியல் அறிஞர் ஏற்பதில்லை. (359)

**83. மலையிடைப் புணர்ந்த களிறுகை தூக்கின்**
**அன்றிப் பிழையாது அணிநடைக் கரும்பிடி**
**பன்னிரண்டு ஆண்டில் குருளைஒன்று ஈனும்**
**என்றுமூது உலகும் இயம்பிடல் மிகையே.**

மலையினிடத்தில் தன்னோடு கலந்த ஆண்யானை கை தூக்கி விட்டாலன்றி உயிர்பிழைக்காத அழகிய நடையைஉடையகரிய பெண்யானை பன்னிரண்டு ஆண்டிற்கொரு முறையே கன்று போடும் என்று உலகினர் கூறும் சொற்கள் உயர்வுநவிற்சியே என்றவாறு. (360)

**84. பால்நுகர் குருளையைப் படுத்துத் துயிலும்**
**தாய்ப்புலி கரத்தால் தன்னை யறியாது**
**அடித்துக் கோறும்என்று அகிலம்ஓ திடுமே.**

பால் குடித்துக்கொண்டிருக்கும் தன்னுடைய குட்டியையே தாய்ப்புலி தூங்கிக்கொண்டே முன்னங்கால்களால் தன்னை யறியாமல் அடித்துக் கொன்றுவிடும் என்றுஉலகினர் சொல்வர் என்றவாறு. (361)

85. **ஆண்டு தோறும் மரைக்கொம்பு அடியோடு**
**வீழ்ந்துமற்று அதுபோல் வேறுஉண் டாமே.**

ஒவ்வொரு வருடமும் மானின் கொம்புகள் முற்றிலுமாகக் கீழேவிழுந்து பிறகு வேறு கொம்புகள் முளைக்கும் என்றவாறு, (362)

86. **வேலியுட் போதலும் வெட்டிய பள்ளத்து**
**உறுபுனல் அருந்தலும் உதவா முயற்கே.**

முயல்கள் வேலிகளுக்குள் புகுந்து அவற்றைத் தாண்டிச் செல்லா; அவை செயற்கையாக வெட்டப்பட்ட பள்ளங்களில் உள்ள தண்ணீரைக் குடிக்கமாட்டா; (இயற்கையான நீர்நிலை களில் மட்டுமேதான் அருந்தும்) என்றவாறு.

இந்தச் செய்தியின் முழு உண்மை தெரியக்கூடவில்லை. (363)

87. **ஆறு திங்களில் அடிதலை ஆதலும்,**
**செத்துத் தேள்முதல் தீயவை தரலும்,**
**குக்கற் குருளையில் குரைத்தலும் அரவினத்து**
**உள்ளஎன்று உரைப்பார் உலகினில் உளரே.**

பாம்பிற்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தலைப்புறமும் வால்புறமும் மாறிமாறி அமையும் என்றும், அது இறந்தால் அதன் உடலிலிருந்து தேள் முதலிய வேறு விஷ ஜந்துக்கள் பிறக்கும் எனவும், சில பாம்புகள் நாய்க் குட்டியைப்போலக் குரைக்கும் எனவும் கூறுகிற மக்களும் உள்ளனர் என்றவாறு

இந் நூற்பா ஆசிரியரின் சொந்தக் கருத்தாக அமைய வில்லை. இது உண்மையான செய்தியா எனவும் உறுதியாக அறியக் கூடவில்லை. (364)

88. **புனல்பிரித்து ஆன்பால் புசிக்கும் தன்மை
தாமரைக் கிழங்கால் தடந்தொறும் திரியும்
அன்னம் கொள்வதுஎன்று அறைந்தனர் புலவோர்.**

பசுவின் பாலில் கலந்துள்ள தண்ணீரை நீக்கிவிட்டுப் பாலை மட்டும் பருகுகின்ற இயல்பு தாமரைக் கிழங்குகளைக் கோதுவதற்காக நீர்நிலைகள் அனைத்திலும் சுற்றும் அன்னத்திற்கு உண்டு எனப் புலவர் கூறுவர் என்றவாறு.

கிழங்கால்-வேற்றுமை மயக்கம். (365)

89. **கார்எதிர் நடம்இடு கலப மாமயில்
கண்வழி இந்தியம் கசிதர அதன்பேடு
அருந்திச் சினையாம் எனச்சிலர் அறைந்தனர்.**

மேகத்தைக் கண்டு ஆடுகின்ற தோகையை உடைய அழகிய ஆண்மயிலின் விழிகளிலிருந்து அதன் விந்து வெளிப்படும் என்றும் பெட்டைமயில் அதனை உண்டுக் கருப்பமுறும் எனவும் சிலர் கூறுவர் என்றவாறு.

இந் நூற்பாவும் ஆசிரியரின் சொந்தக் கருத்தாகத் தோன்றாததோடு இதன் உண்மையையும் அறியக்கூடவில்லை. (366)

90. **குயில்தரும் சினையைக் காக்கைதன் குஞ்சொடு
வளர்த்து விடும்என மாநிலம் சொலுமே.**

குயில்கள் இட்ட முட்டையைக் காக்கைகள் அடைகாத்துக் குஞ்சுபொரித்துத் தம் குஞ்சுகளுடன் ஒருசேர வளர்த்துவிடும் என்று உலகினர் சொல்வர் என்றவாறு.

இச்செய்தி பல இடங்களில் பேசப்படுகிறது. "உயிர்த்த பொழுதே நின்குரல்கே ளாமுன் ஓடிற்று ஈன்றதாய்; நயத்தின் வளர்த்த தாய் குரல்கேட்டலுமே நடுங்கத் துரந்ததால்"[1] எனக் குயிற்பழிப்புரைப்பார் சிவப்பிரகாசர். (367)

---

1 பில்புலிங்க. பிரபு. 63.

**91. நாவுஇன்றி வாய்நிறை பல்லும், நாற்கண்ணும்**
**கொண்டுள முதலைதன் இரையை மீதுஎறிந்து**
**அருந்தும்என்று உரைப்பார் அளவரும் பலரே.**

நாக்கைத்தவிர மற்ற இடங்கள் எல்லாம் பற்களால் நிறைந்துள்ள வாயையும், முகத்துக்குவெளியே பிதுக்கிக்கொண்டுள்ள கண்களையும் உடைய முதலை தான்அருந்தும் உணவை மேலே வீசி கவ்விப்பிடித்து உண்ணும் என்று மிகப் பலர் கூறுவர் என்றவாறு.

இக் கருத்தும் ஆசிரியரின் சொந்தக் கருத்தாகப் படாததுடன் இதன் உண்மையும் தெரியக்கூடவில்லை.

**92. அணில்தொனி கேட்டலும் ஆமை சினையாய்க்**
**கரையில்இட்டு உளங்கொடு காத்துஉரு ஆக்கும்**
**என்றும் பற்பலர் இயம்புகின் றனரே.**

அணில் செய்கின்ற ஒலியினைக் கேட்டஉடனே ஆமை கருவுற்ற முட்டையை நீர்க்கரையில் இட்டு, அதனை இடைவிடாமல் நினைப்பதினாலேயே அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் எனவும் பலர் கூறுகின்றனர் என்றவாறு.

இச் செய்தி ஆசிரியரின் சொந்தக் கருத்தாகக் கூறப்படவில்லை. இதன் உண்மையும் அறியக்கூடவில்லை. (369)

**93. நண்டுதன் துணையை அழைத்துவந்து அணைதலும்,**
**சங்கு இனம் சேர்கையும், தனது பார்வையில்**
**ஒருமீன் பற்பல ஒளிர்தரக் காட்டலும்,**
**வாடையில் தாழை மலர்தலும், பிறவும்**
**உலகினிற் பழகி உணர்வது முறையே.**

நண்டுகள் உரிய பருவத்தில் தம் இணையைக் கூட்டிக் கொண்டு வந்து புணர்தல், சங்குகள் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து வாழ்தல், தாய்மீன் தன் பார்வையாலேயே தான் இட்ட பல முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரித்தல், குளிர்காலத்தில் தாழம்பூப் பூத்தல் ஆகிய பிறவற்றைஎல்லாம்

ஒருவன் உலக நடை முறையில் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும் என்றவாறு.

இவ்வியல்பில் சரபம் தொட்டு மீன் வரை இயங்குதிணை உயிர்களையே கூறிய இவ்வாசிரியர் இறுதியாகத் தாழை வாடையில் மலரும் என்ற நிலைத்திணை உயிர் ஒன்றைக் கூறினார். இதைக் கொண்டு எவ்வெப் பருவத்தில் எந்த எந்தத் தாவரங்கள் பயன்தரும் என்பதையும் உலகில் பழகி உணர்க எனக் குறிப்பாற் கூறினார். (370)

**94. வேற்றுஉயிர் இயல்புஇவண் விளம்பினம்; இதன்பின்**
**கருவி இயல்புஎனக் கழறுதும் சிறிதே.**

(மனிதன் அல்லாத) பிற உயிர் இனங்களின் தன்மைகளில் சிலவற்றை இவ்வாறு கூறி முடித்தாம். இதனை அடுத்துக் கருவி இயல்பு என்ற தலைப்பில் சிலவற்றைப் புகல்வாம் என்ற வாறு.

இந்நூற்பாவால் இவ்வியல்பு நிறைவு செய்யப்பட்டு அடுத்த இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்டது. (371)

**வேற்றுயிரியல்பு முற்றிற்று.**

## 4. கருவி இயல்பு

இவ்வியல்பில் போர், நிறுத்தல் ஆகியவற்றிற்குரிய கருவிகள் கூறப்படுவதோடு செருக்கு, உயிர்வாழ்க்கை ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் கருவிகளும், சான்றாண்மை, செங்கோன்மை, புலமை ஆகியனவற்றை அறியத் துணை செய்யும் கருவிகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வியல்பு பத்து நூற்பாக்களைக் கொண்டது.

**95. வேலும், சூலமும், விளங்குவச் சிரமும்,**
**கறைபடும் உலக்கையும் ஆதிய கருவிகள்**
**விட்டும் விடாதும் பொரும்இரு விதச்சமர்க்கு**
**ஆவன என்றே அறைந்தனர் புலவோர்,**

இலையைப் போன்ற கூரிய தலையை உடைய ஈட்டியும், மூன்று தலைகளைப் பெற்ற சூலமும், புகழ்பெற்ற வச்சிரப் படையும், பகைவரின் இரத்தக்கறை படிந்த உலக்கையும் போன்றன போர்க் கருவிகள் ஆகும்.இவைதம் கைகளினின்றும் எறிந்து அல்லது எறியாமல் போரிடும் இருவகைப்போருக்கும் ஏற்றன என்று அறிஞர்கள் கூறினர் என்றவாறு.

போர்க்கருவிகள் இருவகைப்படும். முதல்வகை ஒரு வீரன் பகைவன் மேல் எறிந்து தாக்கும் படைகளாகும். இதனை வடமொழியில் அஸ்திரம் என்பர். பிறிதொருவகை வீரன்தன் கையிலேயே வைத்துக்கொண்டு போரிடற்குரிய படைகளாம். இது சஸ்திரம் எனப்படும். இந் நூற்பாவில் கூறப்பட்ட வேல் முதலியன இவ்வாறு விடுபடையாகவும், தொடுபடையாகவும் பயன்படும்.

நெல்முதலியவற்றைக் குத்தும் உலக்கையில்இருந்து பிரித்துக் காட்டக் கறைபடும் உலக்கை என்றார். (372)

96. **ஆழியும் அம்பும் கல்லும் அனையவை**
**விட்டுப் பொரும்ஒரு விதச்சமர்ப் பொருளே.**

சக்கரம், கணை, கவண்கல் போன்றவை மாற்றார் மீது செலுத்திப் போரிடுவதற்காகும் அஸ்திரம் என்னும் விடுபடைகளாம் என்றவாறு. (373)

97. **வாளொடு வில்லும் வளைவுறு தோட்டியும்**
**ஆதிய பிடித்தே அமர்செயற்கு ஆமே.**

வாள், வில், வளைந்த அங்குசம் போன்றவை வீரர் தம் கைகளிற் பற்றியே போரிடுவதற்கான சஸ்திரம் என்னும் தொடுபடைகளாம் என்றவாறு.

வில்லும் அம்பும் ஒன்றாகச் சேர்ந்தால்தான் அது போர்க் கருவி ஆகும். இவர் அவ்விரண்டையும் தனித்தனியே தொடு, விடு படையாகக் கொண்டார். தனி வில்லோ அன்றித் தனி

அம்போ போரிற் பயன்படாதாதலின் இவற்றைப் பிரித்துக் கூறல் பொருந்தாது. விசயன் சிவபெருமனை வில்லால் அடித்தது விதிவிலக்கு. அது போர் அறம் ஆகாது. (374)

**98. துலையொடு குன்றியும் எவ்வகை நிறைநிலை**
**தனக்கும் கருவிகள் ஆம்எனத் தகுமே.**

தராசும் குன்றிமணியும் அனைத்துவகையான நிறுத்தி அளத்தலுக்கும் கருவிகளாகும் என்னலாம் என்றவாறு.

குன்றிமணி பொன் நிறுத்தப் பயன்படும் ஓர் அலகு நிறையாகும். பெரிய எடைகளும் இதன் பெருக்கமே ஆதலின் இது எவ்வகைக்கும் ஆம் எனத்தகும் என்றார். இன்றும் ஒரு கிராம் என்பதை அலகாகக் கொண்டே மெட்ரிக் டன் வரை பெருக்கிக் கொள்கிறோம். (375)

**99. செம்பொடு வெள்ளியும் பொன்னும் சிறியவர்**
**செருக்குஉனும் பயிர்மிகச் செய்வன ஆமே.**

செம்பு, வெள்ளி, பொன் இவற்றாலான நாணயங்களும், பொருள்களும் தகுதியிற் குறைந்தவர்களுக்குத் தற்பெருமையை மிக அதிகமாக வளரச்செய்யும் கருவிகளாம் என்றவாறு.

இங்கு உலோகத்தின் பெயர்கள் அதனாலானவற்றிற்கு ஆகி வந்தன. கல்வி, ஒழுக்கம் போன்றவைகளால் தகுதியடையாத பூரியார்கண் உள்ள பொருட் செல்வம் அவர்களுடைய இறுமாப்பிற்குக் காரணமாகிறது என்கிறார். உலோகங்கள் அவற்றின் விலைமதிப்பின்படி வரிசைப்படுத்தப்பட்டன. (376)

**100. நெல்முதல் விளைவன பலவும் நீள்நிலத்து**
**உயிர்த்தொகை வளர்த்துஅருள் உயர்கரு விகளே.**

நெல் முதலாக நிலத்தில் விளையும் பலவகையான பயிர்களும் பெரிய உலகில் உள்ள பல உயிர்க் கூட்டங்களையும் வளர்க்கும் சிறந்த கருவிகள் ஆகும் என்றவாறு.

உயிர்களின் வளர்ச்சிக்குப் பயிர்கள் காரணம் என்றமையின் உயிர் வாழ்க்கைக்கும் அதுவே எனல் கூற வேண்டாவாயிற்று. (377)

101. அருளும் பொறுமையும் அன்பும் ஊக்கமும்
தெருட்சி ஆதியும் சீரிய பெரியோர்
உண்மைநன்கு உணர்த்தும் என்று உரைக்கும்மூது உலகே.

தன்மாட்டுத் தொடர்பில்லாத பிறரிடத்தும் காட்டப்படும் அருள், தமக்குநேரும் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு அதற்குக் காரணமானவர்களைச் சினவாத பொறுமை, தம்மோடு கூடியவர்களின்பால் நேசம், விடாமுயற்சி, தெளிவான அறிவு போன்ற நற்பண்புகள் அவற்றைத் தம்பால் பெற்றுள்ள சான்றோர்களின் உண்மைத் தன்மையை நன்றாகக் காட்டும் என உலகினர் உரைப்பர் என்றவாறு.

சான்றோர்களின் தகுதியை அவர்களுடைய குணங்களால் அறியலாம் என்றபடி. (378)

102. மழையும், சூழும், மறையவர் வாழ்க்கையும்,
புலவர்தம் சிறப்பும், புண்ணியச் சாலையும்,
கொலைதவிர் வண்மை ஆகிய கொள்கையும்
நீதிநூல் மன்னன் நெறிதெரிப் பனவே.

(உரிய காலத்தில் அளவாகப் பொழியும்) மழை, உணவு உற்பத்தி, (அறநெறிக்குப் புறமாகச் செல்லாத) அந்தணர்தம் வாழ்க்கைமுறை, புலமை முதலிய கலைவல்லார்களுக்குக் கிடைக்கும் பெருமை, (மருத்துவமனை கல்விச்சாலை இலவச உணவு விடுதி முதலிய பணிகளுக்கான) அறச்சாலைகள் உயிர்க்கொலையை எக்காரணம்பற்றியும் செய்யாத வண்மை போன்ற சீரிய கொள்கைகள் ஆகிய இவை எல்லாம் நீதி நூல்களை உணர்ந்து கடைப்பிடிக்கும் வேந்தனுடைய செங்கோல் முறைமையைக் காட்டுகின்ற கருவிகளாகும் என்றவாறு. (379)

**103. வண்ணம் வெண்பா என்னும் இருவகைச்
செய்யுளும் புலமைத் திறல்காட் டுபவே.**

வண்ணப்பாடல், வெண்பா என்னும் யாப்புகளில் அமைந்த இருவகைக் கவிகளும் ஒரு புலவனின் ஆற்றலை அறிவதற்குத் தகுந்த கருவிகளாகும் என்றவாறு.

இவ்வாசிரியர் "இளமைப் புலவோர்க்கு இசையாது இகலி முதியோர் சிலர்க்கு முன்னும்முன் உதவல் வெண்பாப் போலும் வேறுஒன்று இன்றே"[1] "தமிழ்க்கவி அனைத்திலும் தலைஎன் றுள்ள வண்ணம்"[2] என்பார். மேலும், "வெண்பாத்தோல்வியில் விருதுஇழப்பதுவும் வண்ணத்தோல்வியில் வார்செவி இழப் பதும் பழமை ஆம்எனல் பல்லோர்வழக்கே"[3] ஆதலானும் இவ்வாறு கூறினார். (380)

**104. இவ்வணம் கருவி இயல்புஎலாம் இயம்பில்
சுவைகெடும் ஆதலில் சொன்னமட்டு அடக்கித்
தொகுப்புஇயல்பு எனவும் சொல்லுதும் சிறிதே.**

இப்படியே கருவிகளின் தன்மைகள் அனைத்தையும் சொல் லிக் கொண்டே போனால் (நூல் அளவில் மிகவிரிந்து) சுவை குன்றிவிடுமாதலின் இதுவரை கூறியவற்றோடு நிறுத்திக் கொண்டு அடுத்துத் தொகுப்பு இயல்பு என்ற தலைப்பில் சில செய்திகளைக் கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் இவ்வியல்பு நிறைவு செய்யப்பட்டு புறப் பொருளின் ஈற்றுப் பகுதியாகிய தொகுப்பியல்பிற்குத் தோற்று வாய் செய்யப்பட்டது. (381)

கருவி இயல்பு முற்றிற்று.

---

1 ஏழாம். 270

2 அறுவகை. 485

3 அறுவகை. 763

## 5. தொகுப்புஇயல்பு

இவ்வியல்பில் சில புறப்பொருள்கள் தொகுத்து உரைக்கப் பட்டுள்ளன. நில உலகம், தமிழ்நாடு, இந்துசமயம் ஆகிய வற்றிற்குப் புறம்பானவையும், ஒரிரு சமயக்கருத்துகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இவ்வியல்பு ஏழு நூற்பாக்களைக் கொண்டது.

**105. கதிர்மதி, உடு, முகில் ஆதிய கவின்தரும்**
**வானத்து உரைசெயும் வகைஎலாம் புறமே.**

சூரியன், சந்திரன், விண்மீன்கள்,மேகம் ஆகியவை விளங்கு கின்ற ஆகாயத்தில் உள்ளதாகக் கூறப்படுவன யாவும் புறப் பொருள்களேயாகும் என்றவாறு.

ஆதிய என்றது மற்ற கோள்களையும், பிற மேல் உலகங் களையும் ஆம். இவ்வியல்பில் புறம் என்ற சொல் நமக்கு பருப்பொருளாகவோ அல்லது நுண்பொருளாகவோ-அப்பாற் பட்டது என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. (382)

**106. பாழியங் தடக்கைப் பகட்டுஇனம் பாம்பினம்**
**அமர்தரும் அதலம் ஆதியும் புறமே.**

(இந்நிலவுலகைத் தாங்கிக் கொண்டு இருப்பதாக நம்பப் படும்) வலியனவும் எழிலுடையனவும் பெரியனவும் ஆகிய துதிக்கைகளை உடைய (எண்டிசை) யானைகளும், நாகங்களும் வாழ்கின்ற அதலம் முதலிய கீழேழு உலகங்களும் புறமேயாம் என்றவாறு.

அதலம் ஆதிய என்றது அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மகாதல, பாதலம் ஆகிய கீழேழ் உலகங்களை. (383)

**107. பிறமொழித் தேயமும் பிறங்கும் எண்டிசைப்**
**பாலர்தம் ஊரும் பகர்புறப் பொருளே.**

தமிழல்லாத வேற்றுமொழிகள் வழங்குகின்ற நாடுகளும், புகழ்மிக்க எட்டுத் திக்குப் பாலகர்களின் நகரங்களும் புறப் பொருளே என்றவாறு.

எண்டிசைப் பாலர்தம் ஊர்களாவன: – கிழக்கு-இந்திரன் -அமராவதி; தென்கிழக்கு – அக்கினி-தேஜோவதி; தெற்கு இயமன்-சம்யமினீ; தென்மேற்கு-நிருதி-கிருஷ்ணவதீ; மேற்கு – வருணன் – ஸ்ரத்தாவதீ; வடமேற்கு – வாயு – கந்தவதீ; வடக்கு – குபேரன் – அளகாபுரி; வடகிழக்கு – ஈசானன் யசோ வதி. (384)

**108. அடுக்கிய அண்டமும் அசோகடி அரசடிக்**
**கடவுள் ஆதியர் காக்கும் ஊரின்**
**முத்தியும் கருதில் முழுப்புறம்பு ஆமே.**

ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப் படும் பற்பல உலகங்களும், அசோகமர நிழலில் உள்ள அருகக் கடவுளாலும் அரசமர நிழலில் உள்ள புத்தராலும் காக்கப் படுகின்ற உலகங்களில் சேர்தலாகிய அச் சமயங்கள் கூறும் சாலோக பதமுத்தியும் நன்கு ஆராயப்புகின் முற்றிலும் புறப் பொருளே ஆகும் என்றவாறு.

இந்து சமயப்படி முத்தி நிலையும் பதமுத்தி, பரமுத்தி என இருவகைப்படும். கடவுளின் ஊரில் இருத்தல் (சாலோகம்) அவர் அருகே இருத்தல் (சாமீபம்), அவர் வடிவோடிருத்தல் (சாரூபம்) எனும் மூன்றும் பதமுத்திகளே. அதனை அடைந் தவர்களும் திரும்பப் பிறவி எடுக்கக் கூடும். இறைவனோடு இரண்டறக்கலத்தல் ஆகிய (சாயுச்சியம்) பரமுத்தி பெற்றவரே பிறவியறப் பெற்றவர். அருகர் புத்தர் ஊரின் முத்தி என்றது சாலோக பதமுத்தியே என இவர் கொண்டார். ஆனால் சமண, பௌத்த சமயிகள் வேறு வகையாகக் கூறுவர். (385)

**109. காமியம் கருதிக் கவலும் நெஞ்சினர்க்கு**
**உறுப்பு அலாதன ஒருங்கும் புறமே.**

தனக்கு ஒரு பொருள் வேண்டும் என்னும் ஆசையால் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்குத் தம் விருப்பத்தின் பகுதியாக இல்லாத பொருள்கள் அனைத்தும் புறப்பொருளே யாம் என்றவாறு.

ஒருவர் ஒன்றின் மீது மிகுந்த பற்றை உடையவராகவும் தேவை உடையவராகவும் இருக்கும் போது அப்பொருளின் தொடர்பில்லாத மற்ற அனைத்துப் பொருள்களும் அவருடைய நாட்டத்திற்கு அப்பாற்பட்டனவே. எனவே புறமாயிற்று.

இனி இந்நூற்பாவிற்கு வேறுவிதமாகவும் பொருள் கொள் ளலாம். காமியம் என்பது உலக ஆசை. இது உடற்பற்றினால் தான் வருகிறது. பிறரையும் தன் உடலின் பெற்றோர், துணை வர், மனைவி, மக்கள், நண்பர், ஊர், நாடு என்ற காரணத் தாலேயே விரும்புகின்றனர். உடலோடு தொடர்புபடாப் பொருள்களில் இவர்கள் நாட்டம் செல்வதில்லை. எனவே "உறுப்பு அலாதன ஒருங்கும் புறமே" எனப்பட்டது. உறுப்பு இங்கு ஆகுபெயராக உடலை உணர்த்திற்று. உடற்பற்று மிக்கவர்களுக்கு உலகியலுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் தொடர்பற்றவையாகும் என்றபடி. (386)

**110. பிறவா வீடே பெறமுயன்று இருப்பார்க்கு**
**உடம்பும் புறம்என உரைத்தனர் உணர்ந்தோர்.**

இனிமேலும் ஒருபிறவி எடுத்து வராமல் இறைவனோடு இரண்டறக்கலத்தலாகிய பரமுத்திப் பேற்றையே அடைவதற் குரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தத்தம் உடலும் புறப்பொருளே ஆகும் என்று மெய்ப்பொருள் நூலைத் தெளிந்தவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

இந் நூற்பா "மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப் பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை"[1] என்னும் தமிழ் மறையை நினைந்து கூறியது.

---

1 திருக்குறள் 345

முன் நூற்பாவில் காமியம் கொண்டு கவலைப்படுபவர் களுக்கு உடலைத் தவிர மற்ற அனைத்தும் புறம் என்றார். இங்கு அதற்கு நேர் மாறுபட்ட நிலை கூறப்படுகிறது. பற்ற றுத்தவர்களுக்கு (நிஷ்காமிகள்) உடம்பும் புறம் என்கிறது இச்சூத்திரம். (387)

**111.** புறப்பொருள் இவ்வணம் புகன்றனம்; இனிஅடுத்து
அகப்புறப் பொருள்நிலை அறிந்த வாறு
குறுக்கிக் கூறுதும் கொள்வார் பொருட்டே.

புறப்பொருள்களைப் பற்றி இதுகாறும் கூறி முடித்தாம் தொடர்ந்து அகப்புறப் பொருள் நிலையை எமக்குத் தெரிந்த அளவு சுருக்கமாக விரும்பிக் கற்கின்றவர்களின் பயன்கருதிச் சொல்வாம் என்றவாறு.

இந்நூற்பாவால் தொகுப்பியலாகிய இச்சிறுபகுதியும், புறப் பொருளாகிய பெரும்பகுதியும் நிறைவு செய்யப்பட்டு அடுத்த பகுதியாகிய அகப்புறப்பொருள் நிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்பட்டது.

அகப்புறப்பொருள் நிலை ஆகிய அடுத்த பகுதியில் பெரும் பாலும் மெய்யறிவுக் கருத்துகளே (தத்துவம்) இடம் பெற்றுள் ளன. இளநிலை மாணக்கருக்கன்றி இவை ஓரளவு பக்குவம் பெற்றவர்க்கே நன்கு விளங்கும். அத்தகையோரே அடுத்த பகுதியைக் கற்க அதிகாரிகள் ஆவர். இதனை உணர்த்தவே ''கொள்வார் பொருட்டே'' என்றார். (388)

தொகுப்பியல்பு முற்றிற்று.
புறப்பொருள் முற்றிற்று.

## III. அகப்புறப் பொருள் நிலை

பொருள் இலக்கணத்தின் மூன்றாம் பெரும் பிரிவாகிய இது இந்த ஒரே பகுதியைக் கொண்டது. மொத்தம் முப்பத்தாறு சிறுபிரிவுகளைக் கொண்ட இந்நூலில் ஐந்து பிரிவுகளே நிலை எனப் பெயர் பெற்றுள்ளன. அவற்றுள் இதுவே முதலாவது; இரண்டாவது யாப்பில் உள்ளது. அடுத்த மூன்றும் புலமை இலக்கணத்தின் செயல்வகை இயல்பின் மூன்று உட்பிரிவுகள் ஆகும். இந்த ஐந்து பிரிவுகள் மட்டும் நிலை எனப்பெயர் பெறுவானேன்? இப்பிரிவின் பெயர் வேறுபாட்டை இங்கு ஆராய்வோம். மற்றவை ஆங்காங்கு கூறப்படும்.

ஒரு பொருளின் தன்மைகள் சொரூப லட்சணம், தடத்த லட்சணம் என இருவகைப்படும். ஒரு பொருளில் எப்போதும் நீக்கமற நிலைபெற்றுள்ள இயல்பு சொரூப லட்சணம் எனப்படும். இதனை அதற்கே உரிய **இயல்பு** எனலாம். மற்றொன்று ஒரு பொருளில் குறிப்பிட்ட காலத்திலோ அல்லது இடத்திலோ மாத்திரம் ஏற்படுகின்ற **நிலை** ஆகும். இது தடத்த லட்சணம் எனப்படும். உதாரணமாக நீருக்குத் திரவமாக இருப்பதே சொரூப லட்சணமாம். மிக்க வெப்பத்தால் ஆவியாதலும், குளிர்ச்சியால் பனிக்கட்டியாதலும் தடத்த லட்சணங்கள். இது காலத்தாலும் இடத்தாலும் தற்காலிகமாக ஏற்பட்ட **நிலை**.

இனி அறுவகை இலக்கணத்திற்கு வருவோம். இதுகாறும் நடந்த பதினேழு பிரிவுகளும் பெரும்பாலும் சொரூப லட்சணங்கூறியதால் அவை இயல்பு எனப்பட்டன. இப்பிரிவில் பெரும்பாலும் தடத்த லட்சணமே கூறப்படுவதால் இது நிலை எனப் பெயரிடப் பெற்றது. இவை தடத்த லட்சணமாவதை உரையில் ஆங்காங்கு உரைப்பாம்.

இப்பிரிவு பதினொரு நூற்பாக்களைக் கொண்டது.

**112. உடல்அகத்து என்பும் இரத்தமும் பசியும்**
**உயிர்ப்பும் உள்ளமும் பிறவும் ஆகிப்**

**புறத்துஉள ஐவகைப் பூதம் அவிர்தலின்**
**அவற்றையும் பொதுஎன்று அறைவது முறையே.**

உடலின் கண் உள்ள எலும்பு, உதிரம், பசி, மூச்சு, மனம் ஆகியவையும் மற்றவைகளும் ஆகி வெளியில் உள்ள நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களே விளங்குவதால் இவ்வைவகைப் பூதங்களையும் அகம், புறம் என்னும் இரண்டிற்கும் பொது வானவை என்று கூறலே தகுதியாம் என்றவாறு.

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பன ஐம்பெரும் பூதங்கள். இவற்றின் கூறுகளாகவே உடலின் தாதுக்கள் முதலிய வைகள் இருத்தலை, "தோல் எலும்பு நரம்புதசை மயிர்என்று ஐந்தும் சொல்லரிய பிருதுவியின் கூறுஅது ஆகும்; ஓலம்மிகும் அப்புவின்கூறு ஐந்துஅது ஆகும்; ஓடும்நீ ருடன்உதிரம் மூளை மச்சை மேல் அமரும் சுக்கிலம்ஆம் என்று கூறும்; மேவியஆ காரமும்நித் திரைகள் தாமும் சீலமிகும் பயமுடன்மைதுனமும் சோம்பும் தேயுவின்கூறு என்றுஉலகம் செப்பும் காணே". "ஓடல் நடந்திடல் இருத்தல் கிடத்தல் தத்தல் ஓதரிய வாயுவின்கூறு அறைந்த தாகும்; நாடரிய குரோதம்மிகு லோபம் மோகம் நண்ணும்மத மாச்சரியம் ஐந்து தாமும் நீடியவா காயத்தின் கூறுஅது ஆகும்"[1] என்பதால் அறியலாம்.

ஐம்பூதங்கள் தனித்தனியே அண்டவெளியில் இருக்கும் போது தமக்கென்ற சில தன்மைகளைப் பெற்றுள்ளன. இவற்றின் கூறே உடலின் தோல்எலும்பு முதலியனவாக விளங் கும்போது வேறுவகையான சில தன்மைகளைப் பெற்று விடுகின்றன. இவ்வாறு ஐம்பூதங்களின் இயல்புகள் தம் நிலைக் கேற்ப மாறுபடுகின்றன. தோல், எலும்பு முதலியவற்றிற்குக் கூறப்படும் இலக்கணம் நிலமாகிய பெரும்பூதத்தின் தடத்த லட்சணமாகவே கொள்ளப்படும்.

உடலை ஒரு பிண்டமாக வைத்து ஐம்பூதங்களை நோக்க அவை அண்டத்தைச் சேர்ந்த புறப்பொருளாகவும், அவ்வுட

---

1 சிவஞான தீபம் 56,57

லையே பகுத்து நோக்கும் போது அதற்குள் ஐம்பூதக் கூறு களும் இருப்பதால் அவை அகப்பொருளாகவும் ஆகின்றன. எனவே இவற்றை இவ்வாசிரியர் பொதுவான பொருள் என்ற அர்த்தத்தில் அகப்புறப்பொருள் என்றார். (389)

**113. கதிர்,மதி உடல்தொறும் கண்கள் ஆதலின்
அவைகளும் அகப்புறப் பொருளாம் அன்றே.**

ஞாயிறும் திங்களும் ஒவ்வொரு உடலிலும் கண்களாகப் பொலிதலால் அவையும் பொதுவானவையே என்றவாறு.

இரு சுடரையும் கண்களாகக் கொள்வதுவும் சமயநூற் கொள்கை. மேலே கூறிய அதே காரணத்தால் இவையும் அகப்புறப்பொருளாயின. ஞாயிறு மதிகளாக இருக்கும் இயல்பு வேறு; கண்களாக உள்ள நிலை வேறு என இவற்றின் இலக் கணங்களும் வேறுபட்டுள்ளன. (390)

**114. பொறியும் சத்தமும் புறத்தோடு அகத்தும்
உள்ளன வாம்என்று உரைத்திடத் தகுமே.**

செவி, உடம்பு, விழி, நா, மூக்கு எனும் அறிகருவிகளான ஐம்பொறிகளும் முறையே இவற்றிற்கு விஷயமாகிய ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்னும் ஐம்புலன்களும் உடலுக்கு வெளியேயிருப்பதோடு உள்ளும் இருப்பனவாகும் என்று சொலத்தகும் என்றவாறு.

ஞானேந்திரியங்கள் எனப்படும் அறிகருவிகள் புறத்தே உள்ள பொருள்களோடும் அகத்தே உள்ள மனத்தோடும் ஒரே சமயத்தில் தொடர்பு கொள்கின்றன. இவ்வாறே ஓசை முதலிய புலன்கள் புறத்தில் இருந்தாலும் அறிகருவிகளால் துய்க்கப்பட்டு அகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இக் காரணம்பற்றியே இவை பொதுப்பொருள் ஆயின.

இந்நூற்பாவில் சத்தம் என்றது ஐம்புலன்களுக்கும் உபலட் சணம். இங்கும் ஐம்பொறிகளும் துயில்நிலையில் சடமாகவும்,

விழிப்பு நிலையில் செயல்படு பொருளாகவும் வேறுபட்டிருப்ப தோடு மனத்துடன் இணைந்தால் மட்டுமே செயல்பட வல்ல தாய்த் தன்னாண்மை அற்ற நிலைமையிலும் உள்ளன. இதனால் செவி, ஓசை முதலிய பொறி புலன்களுக்குக் கூறப் படும் இலக்கணம் பெரும்பாலும் தடத்தமாகவே அமை கின்றது. (391)

115. அறிவிடத்து இருந்தும் அணித்துஉரு ஆகியும்
உணர்த்தும் குருநிலை உள்ளோ புறம்போ
என்னும்மாண்பு உடையார் எமக்குஇனி யோரே.

மாணாக்கரின் அறிவிற்குள் நுட்பமாக இருப்பதோடு அவர் அருகிலேயே தூல வடிவத்துடனும் விளங்கி உபதேசிக்கும் ஞானாசிரியருடைய நிலையை அகம் என்றோ புறம் என்றோ அறுதியிட்டுக் கூற முடியாது என்னும் தெளிவை உடையவர்கள் எம்மால் நேசிக்கத் தக்கவர்களாவர் என்றவாறு.

அகம் என்றோ புறம் என்றோ கூற முடியாது எனலால் அகப்புறப் பொருள் என்பதாயிற்று. இறைவனே குருவடிவந் தாங்கி எழுந்தருளுகிறான் என்பது சமய நூற்றுணிபு. "அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி அருளிய பெருமை"[1] என்றார் வாதவூரரும். அக்குருநாதர் புறத்தே இருந்து உபதேசம் செய்வதோடு பக்குவம் பெற்ற சீடனின் அறிவுக்குள் நின்றும் உணர்த்துகிறார். எனவே குருநாதரின் நிலையும் அகம், புறம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாயிற்று. (392)

116. "அகப்புறச் சமயம் ஆறிரண் டிடத்தும்
ஒருபொருள் உறும்என உணர்ந்தோர் உயர்ந்தோர்"
என்னும் மெய்ம்மொழிக்கு இசையார் பதரே.

"அகச்சமயங்கள் ஆறு, புறச்சமயங்கள் ஆறு என்று பிரித்துக் கூறப்படும் பன்னிரண்டு சமயங்களுக்கும் பொதுவாக

1 திருவாசகம் போற்றித் 75,76

ஓர் ஒப்பற்ற பரம்பொருள் திகழும் உண்மையை அநுபவ வாயிலாக ஐயந்திரிபற உணர்ந்தவர்களே பெரியோர் ஆவர்" என்னும் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அனைவரும் பதர் போன்றவர்களே என்றவாறு.

அகச்சமயம் ஆறாவன:- சௌரம், சைவம், சாக்தம் வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்பன.

புறச்சமயம் ஆறாவன: உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்திமிகம், வைபாடிகம், ஆருகதம் என்பன, இவ்விருவகைப் பகுப்பையும் வேறுவகையாகக் கூறுவாரும் உளர்.

"சகல லோகங்களிலும் உள்ள சருவான்மாக்களுக்கும் பொதுவான தெய்வம் ஒன்று உண்டு" "ஓர் அரசனுக்குப் பல பத்தினிகள் இருப்பது போல் சகல சமயங்களும் தெய்வம் ஒன்றிற்கே உரியனவாகும்" "எல்லாச் சமயமும் தெய்வ தரிசனம் பெற்றவர்களால் ஏற்படுத்தப் பட்டவைகளே"[1] என்னும் இந்நூலாசிரியரின் கொள்கைகளோடு இணைத்துச் சிந்தித்தால் இந்நூற்பா தெற்றென விளங்கும்.

இவ்வாறு தெய்வமும் அகப்புறப் பொதுவாயிற்று. (393)

**117. அகம்புறம் இரண்டும் அணைந்தும் அழிந்தும்**
**அவற்றின் பொதுநிலை அவிர்தரும் அன்றே.**

அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இரண்டும் கூடுங்காலை அவற்றின் தனித்தன்மைகள் தம்முள் சேர்ந்தோ அல்லது அழிவுபட்டோ பொதுநிலை உண்டாகும் என்றவாறு.

ஓர் உதாரணம் காண்போம். எழுத்து ஒலி வடிவம், வரிவடிவம் என்னும் இரண்டினை உடையது. இவற்றுள் முன்னது அகமும் மற்றையது புறமும் ஆகும் என்பது தெளிவு. எழுதப்படும் போது இது இவ்விரண்டையும் பெற்று விளங்கு

---

1 சத்தியவாசகம் 1,6,14

கிறது. நாம் அகமாகிய உள்ளத்தால் சிந்திக்கும்போது சொற்களாக – அதாவது எழுத்துக் கூட்டங்களாகத்தான் – சிந்திக்கிறோம். அப்போது நமக்கு வரிவடிவ நினைவு வருவதில்லை. ஒலியை மட்டுமேதான் சிந்திக்கிறோம். அதாவது உள்ளமாகிய அகப்பொருளுடன் எழுத்தாகிய புறப்பொருள் சிந்தனையில் அணைந்தபோது வரிவடிவமான புறப்பொருள் அழிந்து விடுகிறது. ஆனால் ஒலியாகிய அகப்புறப்பொருள் மனத்தோடு இணைந்து விடுகிறது.

எனவே வேதியியற் செயற்பாட்டைப்போலவே அகப்புறப் பொருட் சேர்க்கையும் செயல்படுகிறது. இச் செயற்பாட்டின் விளைவை அகம், புறம் எனப் பிரித்துக் கூற இயலாததால் இக்கூட்டமும் பொதுவாகவே கொள்ளத்தக்கதாம். இவ்வாறே அகப்புறச் சமயங்களுக்கும் கொள்க. (394)

**118. உள்ளனப் புறம்புஎன உழல்வார் பலரும்**
**தள்அரும் துயர்பொதுத் தன்மையில் கெடுமே.**

அகச்சமயம் என்றும் புறச்சமயம் என்றும் பேதம் செய்து அலைபவர்கள் பலராலும் நீக்கமுடியாதனவாகிய துன்பங்கள் யாவும் சமயப்பொதுத்தன்மை தோன்றியஉடன் தாமேநீங்கும் என்றவாறு.

"தற்பரம் ஒன்று சமையம் பலவாறு நிற்பதே உண்மை என்று உந்திபற; நீங்கா நிறைவு அதுஎன்று உந்திபற"[1] "ஓங்கார வித்துஆம் ஒருவனைத் தேறும்முன் நீங்காது சோகம் என்று உந்திபற; நிசரூபம் ஆம்அது என்று உந்திபற"[2] "உத்தமத்து உத்தமம் ஆம்பேறு வேண்டி ஒருபொருளை நித்தமும் நாடிப் பலதேவு உண்டு என்னும் நினைவைவிட்டுச் சுத்தமெய்ஞ் ஞானம் இதேஎன்று நாளும் துணிந்துநிற்கும் பத்தருக்கு அன்றிஉள் அஞ்சாருக்கு அஞ்சும் பழவினையே"[3] என்பன. இவ்வாசிரியரின் உறுதியான கொள்கைகள்.

---

1 சதகத உந்தி 3
2 பதிக உந்தி 9
3 ஞானவந்தாதி 13

சமய பேதங்களுக்கு அப்பாற்பட்ட பரம்பொருள் அகப்புறப் பொருளாகக் கருதப்பட வேண்டிய ஒன்று என்பது கருத்து. (395)

**119. அதுஇதுஎன்று அலைவார் ஆண்மை அகப்புறப்**
**பொதுநிலைக் கனல்எதிர் பூளை போலுமே.**

நன்மை தீமை, உயர்வு தாழ்வு, விருப்பு வெறுப்பு என்னும் இரட்டைகளில் (துவந்துவம்) சிக்கித் தவிப்பவர்களுடைய பெருமையனைத்தும் இரட்டையைக் கடந்த பொதுநிலை என்னும் நெருப்புக்கு எதிரே பூளைப்பூப்போல் சாம்பலாகி விடும் என்றவாறு.

"நன்மை தீமை இதம் அகிதம் நட்பு விடுதி தனதுபுறம் புன்மை மேன்மை இவையேயாய்ப் பூமி சுவர்க்க நிரயங்கள் பன்மை யோனி அனைத்தினும்க யிறும்பம் பரம்போல் எனையாட்டி இன்மை ஆனாய் உறவு அமையும் இறை ஆட் கொண்டான் காமியமே"[1] என்பதனால் காமியத்தால் துவந்துவம் தோன்றுவதும் தெய்வ அருளால் அது அழிவதும் பெறப்பட்டது.

உயிர்களை உய்விக்கும் தெய்வ அருள் பொதுவாகும் என் பது கருத்து. (396)

**120. உலவாப் பெருநலம் உள்ளொடு புறம்பும்**
**உணர்வார்க்கு என்பவர் உலகினில் சிலரே.**

என்றுமே குறையாத பேரின்பமான முத்திநிலையும் அறியும் தன்மை உடையவர்களுக்கு அகப்புறப்பொதுப் பொருளே என்று துணிபவர்கள் இவ்வுலகில் மிகச்சிலரே ஆவர் என்றவாறு.

முத்தி ஒன்றுதான் சிறப்பு எனப்பட்டது. அது சீவன்முத்தி தேகமுத்தி என இருவகையாய் உரைக்கப்படும். மலங்களினின்று நீங்கி உடலோடு வாழ்தல் சீவன்முத்தி. உடல் வீழ்ந்தபின்

---

1 பேரா, சித்தி 45

எய்துவது விதேகமுத்தி. இதுவும் உடலோடு கூடியும் கூடாதும் நிகழ்தலின் அகப்புறப்பொதுவாயிற்று. இதனை உணர்ந்தவர் எண்ணிக்கை மிகமிகக் குறைவேயாதலின் சிலரே என்றார். (397)

121. **அகம்எனும் அகமும் புறம்எனும் புறமும்**
**ஒவ்வொரு கண்ணே போலும்; பொதுநிலை**
**அவற்றைத் தழுவலின் அவ்விரு கண்களும்,**
**மறுத்தலின் வேறுஒரு கண்ணும்மன் னுறுமே.**

அகத்தை எப்போதும் அகப்பொருளாகவே கொள்வதும், அதுபோல் புறத்தை எப்போதும் புறப்பொருளாகவே கொள்வதும் இரண்டு கண்களைப்போல் ஆகும். (அகம் ஒரு கண் புறம் மற்றொன்று) ஆனால் அகம்புறம் இரண்டையும் பொதுவாகக் கருதுகின்ற பேதங்கடந்த நிலையோ என்னில் அகம், புறம் இரண்டையும் ஏற்றுக்கொள்வதால் அவ்விரு விழிகளாகவும், சில சமயங்களில்-அதாவது வேறு ஒரு கண்ணோட்டத்தில் மறுப்பதால் வேறு ஒரு கண்ணாகவும் பொருந்தியுள்ளது என்றவாறு.

வேறு ஒரு கண் என்றது ஞானக்கண்ணை. இவ்விழி பொருள்கள் எவ்வாறு தோற்றமளிக்கிறதோ அவ்வாறு காணாமல் அதன் உண்மை இயல்பையே காணும். (398)

122. **அகப்புறப் பொருள்இவண் அடக்கி, மூவகைத்து**
**ஆய பொருளிலக் கணம்என முடித்து, இனி**
**வேறுஇலக் கணம்சொலும் விருப்பம்உற் றனமே.**

அகப்புறப்பொருள் நிலையை இவ்வாறு சுருக்கமாக முடித்து அகம், புறம், அகப்புறம் என்று எம்மால் மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளப்பட்ட பொருளிலக்கணத்தை நிறைவு செய்து, தொடர்ந்து நிறுத்தமுறையானே யாப்பு என்னும் அடுத்த இலக்கணத்தைச் சொல்ல விழைகின்றோம் என்றவாறு

மொழி இலக்கணத்தைக் கூறும் இந் நூலுள் மெய்யறிவுக் கொள்கைகளையே கூறும் இப்பகுதி இடம்பெற்றதேன் எனில் 'புலமைத் தொழிலாற் பொருந்தும் மெய்ப்பயன் மலம்அறக், களையும் மாதவ நிவையே"[1] ஆதலின் கூறல் வேண்டும் என்க.

இந் நூற்பாவால் அகப்புறப்பொருள்நிலை ஆகிய இப்பகுதியும் பொருளிலக்கணமும் நிறைவுசெய்யப்பட்டு அடுத்த யாப்பு இலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்டது. (399)

அகப்புறப்பொருள்நிலை முற்றிற்று.

பொருளிலக்கணம் முற்றிற்று.

ஆகச்சூத்திரம் 399

1 ஏழாம். 312.

# 4. யாப்பிலக்கணம்

பொருள் இலக்கணத்தைப் புதிய முறையில் நிறைவுசெய்த ஆசிரியர் நிறுத்தமுறையானே அடுத்து யாப்பிலக்கணம் கூறத் தொடங்குகிறார். இவ் விலக்கணம் இயலிசைத் தமிழியல்பு, நாடகத் தமிழ் நிலை, வண்ணவியல்பு, மோனையியல்பு, எதுகை இயல்பு, நாற்கவியியல்பு, பனுவலியல்பு என ஏழு உட்பிரிவுகளை உடையது. இதன் மொத்த நூற்பாத் தொகை நூற்று முப் பத்து நான்கு ஆகும்.

யாப்பின் அடிப்படை உறுப்பாகிய அசையும் சீரும் முன்பே சொல்லிலக்கணத்தின் சார்பியல்பில் கூறப்பட்டுவிட்டன. எனவே இவர் இங்கு நேராகப் பாவகைளின் இலக்கணம் சொல்லப் புகுந்து விடுகிறார். பா பாவினம் என்ற பாகுபாடு, தளைகளின் இலக்கணங்கள், எதுகை மோனையல்லாத பிற தொடைகள் போன்ற யாப்பியற் செய்திகள் இதில் உரிய இடம் பெறவில்லை. சந்தக் குழிப்போடமைந்த வண்ணப் பாடல் களுக்குத் தெளிவான இலக்கணம் கூறுதல் இதற்கே உரிய தனிச் சிறப்பாகும்.

இங்கும் இவர் சில இடங்களில் முன்னூல் ஆசிரியர்களிலி ருந்து வேறுபட்டிருப்பதைக் காண முடிகிறது. இவ்வுரையில் கூறப்பட்ட பாக்களுக்கு மேற்கோள் காட்டப்படுகையில் இயன்ற அளவு இவர் வாக்கே கையாளப்பட்டுள்ளது. இவர் காட்டும் பாவோசை பற்றி நன்கு அறிய இதுதுணை செய்யும். எங்கெல் லாம் இவர் கருத்து மாறுபட்டிருக்கிறதோ அங்கு மாத்திரம் சிறிதளவு விளக்கம், மற்ற இடங்களில் நூற்பா, பொழிப்புரை மேற்கோள் மட்டும் என்ற வகையில் உரை வரையப்பட்டுள்ளது. மேற்கோளும் எல்லாப் பாவகைக்கும் காட்டப்படாமல் இன்றி யமையாதன மட்டும் தரப்படுகின்றன.

## 1. இயலிசைத் தமிழியல்ப

இவ்வியல்பில் இவர் இயற்றமிழிற்குரிய யாப்பு வகைகள் யாவை, இசைத் தமிழிற்குரியவை எவை எனத் தெளிவாக

வரையறை செய்து கூறவில்லை. ஏழாமிலக்கணத்திலும் இது கூறப்படவில்லை. ஆனால் இவரால் இயற்றப்பெற்றுள்ள முத்தமிழ்ப் பாமாலை என்னும் நூலை ஆராய்ந்தால் இவர் அகவல், வெண்பா மருட்பா, குறளடிவஞ்சிப்பா ஆகிய நான்கு பாக்களை இயற்றமிழ் எனக்கொண்டிருக்கிறார். அப்படியே ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை, கட்டளைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, சந்த விருத்தம் என்பன இசைத் தமிழாகக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில்தான் இவ்வுரையில் இயலிசைப் பகுப்புக் கூறப் படும்.

**1. காப்புஉறு பச்சிலைக் கடவுளைக் காவிஅம்**
**பூப்புனை கையுடைப் பூவையைப் புதுத்தினை**
**மாப்பிசைந்து அருளிய வள்ளியை வாழ்த்தி**
**யாப்பிலக் கணம்சிறிது இயம்புகின் றனமே.**

திருநீற்றோடுகூடிய பன்னீர்இலையைப் பிரசாதமாக வழங்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானையும், அழகான குவளை மலரை ஏந்திய கரத்தினள் ஆகிய தெய்வயானை அம்மையையும், வேலவனுக்குப் புதிய தினைமாவைப் பிசைந்து ஊட்டிய வள்ளிநாயகியையும் போற்றி யாப்பிலக்கணத்தைக் கொஞ்சம் கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பா தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் கூறலின் இவ்வியலின் தற்சிறப்புப்பாயிரம் ஆயிற்று. வாழ்த்தி என்றது நினைத்தல், வணங்கல் ஆகியவற்றிற்கும் உபலட்சண மாயிற்று. (400)

**2. சொல்லின் சார்புஇயல்பு அதனில் சொற்றுள**
**வாய்பாட் டசைநிலை உணர்வார் மகிழ்வுற**
**முத்தமிழ் யாப்பு மொழிகுதும் முறையே.**

இந்நூல் இரண்டாவது பிரிவாகிய, சொல்இலக்கணத்தின் சார்பியல்பில் கூறப்பட்டுள்ள அசை, சீர் இவற்றின் வாய்பாடு களைக் கற்றுத் தேர்பவர்கள் களிக்குமாறு மூன்று வகையாகப்

பாகுபடுத்தப்படும் தமிழ்மொழியின் யாப்பை நிறுத் முறையானே கூறுவாம் என்றவாறு.

அசைகளால் ஆன சீர்களின் வாய்பாடுகள் முன்பே கூறப் பட்டன எனச்சொல்லி அவற்றானியன்ற பாக்களின் இலக்கணம் கூறத் தோற்றுவாய் செய்துகொள்கிறார். அவ்வாய்பாடுகளை உணர்ந்தவர்களே யாப்பை அறியவும் சுவைக்கவும் முடியும். எனவேதான் உணர்வாய் மகிழ்வுற என்றார். (401)

## 1. இயற்றமிழ்

### சூத்திரப்பா

**3. அரும்பொருள் விரிப்பதற்கு ஆனசூத் திரப்பா**
**நிழல்,பூ ஈற்றுஉள நான்கசைச் சொற்கள்**
**இணைந்தும் ஒவ்வோர் இடத்தே நலம்சீர்**
**ஈற்றுள ஐந்துஅசைச் சொற்கள் வந்தும்**
**ஓரடி யாகும்; ஒருபாட்டு இத்தனை**
**அடிஎனும் அளவுஉரு; மோனையும் எதுகையும்**
**பிறழும்;ஓர் இடத்தில் பிறங்கினும் பிறங்கும்;**
**நடுவரும் மோனை நலம்ஆம் அன்றே.**

அரிய பொருள்களை விளக்குவதற்காக அமைந்த சூத்தி ரப்பா, நிழல், பூ என்னும் வாய்பாடுள்ள நாலசைச் சீர்கள் இரண்டு சேர்ந்ததும், சிற்சில இடங்களில் நலம், சீர் என்னும் வாய்பாடுள்ள ஐந்தசைச் சீர்களும் வந்ததும் ஓர் அடியாகும். ஒரு பாட்டிற்கு இத்தனை அடிகள் வரவேண்டும் என்ற வரை யறை இல்லை. பொதுவாக நூற்பாக்களில் எதுகையும் மோனை யும் சரியாக அமைந்திரா. சிற்சில இடங்களில் அவை அமை யினும் அமையும். எதுகை இல்லாவிடினும் அடியின் நடுவில் மோனை அமைவது சிறப்பாகும் என்றவாறு.

இவ்வாசிரியர் சீர்கள் என்பதற்குப் பெரும்பாலும் சொற் கள் என்றே கூறுவார். அப்பெயரீடு மயக்குமாதலின் உரையில் சீர்கள் எனவே சொல்லப்படும். நிழல், பூச்சீர்கள் என்றது தேமாந்தண்பூ முதலிய பதினாறு பொதுச்சீர்களை. ஐந்தசைச்

சொற்கள் என்றது தேமாந்தண்பூச்சீர், தேமாந்தண்பூநலம் முதலிய முப்பத்திரண்டு ஐந்தசைச்சீர்களை. இதுபற்றி இந்நூல் இருநூற்று நாற்பத்தைந்தாம் நூற்பாவில் முன்பு கூறப்பட்டது.

பெரும்பாலான இலக்கண நூல்கள் சூத்திரப்பாவைப் பற்றித் தனியாகக் கூறுவதில்லை. இதனையும் அகவற்பாவா கவே கருதுகின்றனர் போலும். சுவாமிநாதம் மட்டும், "ஒன்று இரண்டு ஆம்அடி நூற்பா"[1] எனக்கூறி இது அகவலின் ஆறு வகை களில் ஒன்று என்கிறது. அந்நூற் கருத்து இந்தநூற் கருத்தோடு ஒன்றியுள்ளமை காண்க. இனி நூற்பா பற்றிய மற்ற ஆசிரியர் களின் கொள்கை அடுத்த சூத்திரத்தில் கூறப்படுகிறது. (402)

**4. ஈரசை மூன்றசை கலந்துநன் னான்கா**
**வருவது சூத்திரம் என்பார்; அஃதுஇதற்கு**
**அயல்அல என்பதும் அக்கரத்து இயல்பு**
**பகரில்அதன் புணர்ச்சி நிலைமாறு படலும்**
**பழமை ஆம்எனும் பாவலர் பலரே.**

ஈரசைச் சீர்களும் மூவகைச் சீர்களுமாகக் கூடி ஓர் அடிக்கு நான்காக வருவது சூத்திரம் ஆகும் எனப் பலர் கூறுவர். அவ் விலக்கணமும் (நான்கு, ஐந்து சீர்கள் இணைந்து அடிக்கு இரண் டாக வரும் எனக்கூறும்) இந்நூல் கொள்கைக்குப் புறம்பான தன்று என்பதும், எழுத்துகளின் அமைப்பைக்கொண்டு கூறின் நான்காகப் பிரிப்பதனால் புணர்ச்சிநிலை மாறும் என்பதும் தொன்றுதொட்ட மரபாகும் எனக் கூறும் புலவர் பலர் உள்ளனர் என்றவாறு.

4, 5 அசைச்சீர் இரண்டு வருவது சூத்திரம் என்ற முறையில் இந்நூற்பாவின் முதல் இரு அடிகளையே அலகிட்டுப் பார்ப் போம். அவை வருமாறு:-

முதல்அடி: கூவிளந்தண்ணிழல், கருவிளந்தண்பூ.

இரண்டாம் அடி: கருவிளந்தண்ணிழல், தேமாந்தண்ணிழல்,

---

1 சுவாமிநாதம் 158

இதனையே இவ்வாறு கூறாமல் ஈரசை மூன்றசைச் சீர்கள் நான்கு வந்தன என்னில்,

முதல் அடி: கூவிளம் கூவிளம் கருவிளம் தேமா.
இரண்டாம் அடி: கருவிளம் கூவிளம் தேமா கூவிளம் என ஆகும்.

இவற்றால் பேதமின்மையின் அயல் அல என்றார். ஆனால் பிறர்கூறும் இலக்கணத்திற்குப் பொருந்த அமையும் நூற்பா ஓசையில்லாமல் போகலாம். அதற்கு எடுத்துக் காட்டாகத் தான் இந்நூற்பாவின் நான்காம் அடி இயற்றப்பட்டுள்ளது. அவ்வடியை நான்காகப் பகுத்தால் கருவிளங்காய், புளிமா, புளிமாங்காய், புளிமா ஆகும். ஈரசை மூன்றசை கலந்து நன்னான்கா வந்தும் இவ்வடி சூத்திரத்திற்குரிய அகவல் ஓசையைத் தரவில்லை. (இவ்வோசை வராத காரணம் ஆசிரியப்பாப் பற்றிய அடுத்த நூற்பாவில் விளக்கப்படும். இவ் வோசைமாற்றம் ஏற்படாமல் இருப்பதற்காக ஓர் அடியை இரண்டாகப் பிரித்துக் கூறுவதே நல்லமுறை என இவ்வாசிரியர் கருதுகிறார். (403)

## நேரிசை ஆசிரியப்பா

**5. நூற்பா என்ன நுவல்கையில் தோன்றி**
**இரண்டாப் பிரிக்கில் சீர்நலம் என்னும்**
**வாய்பாடு உறும்ஐந்து அசைச்சொலின் இன்றியும்**
**நான்காப் பிரிக்கிற் காய்கனி இன்றியும்**
**மோனை வராதும் அடிஒன்று ஆகி**
**ஈரடிக்கு ஒவ்வோர் எதுகைத்து ஆகி**
**இரட்டிய தொகையடி ஆகி முடிவது**
**நேரிசை யகவற் பாஎனல் நெறியே.**

சொல்லுங்கால் சூத்திரப்பாவேபோல் காணப்பட்டு, ஓர் அடியை இரண்டாகப்பிரித்தால் ஐந்துஅசைச்சீராக வராமலும், நான்காகப் பிரித்தால் மூவசைச்சீராக வராமலும், நடுமோனை தவறாமல் வந்தது ஓர்அடி ஆகி இத்தகைய அடிகள் இரண்டிரண்டு அடிகளுக்கு ஓர் எதுகை பெற்று இரட்டைப்

படை எண்ணுள்ள அடிகளால் நிறைவடைகின்ற பா நேரிசைஆசிரியப்பா ஆகும் என்று கூறலே முறை என்றவாறு.

ஆசிரியப்பாவை இரண்டாகப் பிரிக்க ஐந்து அசைகள் வந்தால் அகவலோசை குன்றும். இதற்குமுந்தைய நூற்பாவின் நான்காவது அடி இரண்டாகப் பிரிக்கப்பட்டால் இவ்வாறு அமையும்:-

பகரிலதன்புணர்ச்சி நிலைமாறுபடலும்
கருவிளந்தண்ணிழற்சீர் புளிமாநறுநிழல்.

இங்கு முதல் பாதியில் சீர்எனும் ஐந்தசைச்சீர் வந்தது. இனி இதையே நான்காகப் பிரித்தால் இவ்வாறு அமையும்.

பகரி லதன்புணர்ச்சி நிலைமாறு படலும்
புளிமா கருவிளங்காய் புளிமாங்காய் புளிமா.

இங்கு இருகாய்ச்சீர்கள் வந்தன. இதனாலேயே இவ்வடி அகவலுக்கு உரிய ஓசையைப் பெறவில்லை. அகவலோசை எனக் கூறுகின்ற இலக்கண நூல் எதுவும் அதனை இலக்கியத்தில் கொண்டு வருகின்ற இந்த நுட்பத்தைக் கூறவில்லை.

மற்ற ஆசிரியர்கள் „ நிலைமண்டிலம் என வழங்குவதை இவர் நேரிசை என்கிறார். முதலிலிருந்து கடைசிவரை நேராக ஒரே மாதிரி செல்லும் இசையை உடைய பா நேரிசை யாசிரியப்பா எனக்கருதுகிறார். இதைக் காட்டவே இதனை இப் பெயரால் அழைத்தலே பொருத்தமாம் என்று பொருள் தரும்படி "எனல் நெறியே" என்றார்.

இவர் கருத்துப்படி நூற்பாவிற்கும் நேரிசையாசிரியப்பா விற்கும் உள்ள வேறுபாடுகள் வருமாறு.

| நூற்பா | நேரிசையாசிரியப்பா |
|---|---|
| 1. எதுகை. மோனை இன்றியமை யாதன அல்ல. நடுமோனை இருந்தால் சிறப்பு, | 1. எதுகை மோனை இன்றி யமையாதன. நடுமோனை ஏற்றது. |

2. அடி வரையறை இல்லை. 2. இரட்டைப்படை அடிகளால் தான் வரவேண்டும். ஒற்றைப் படை ஆகாது.

இவர் கூறும் இந்த இலக்கணத்துக்கு ஒவ்வாத ஆசிரியப் பாக்களை இவரே இயற்றி உள்ளார்.

உதாரணம் 1: –

ஆளாம் அவருள் அகந்தொறும் கருதிய
வண்ணம்நின்று அருளும் மாறில்வான் கருணைப்
பெரியோய்! நின்திருப் பெய்கழற் பரவும்
தமிய னேன்றனைத் தக்கார் அல்லார்
தாமும் இகழ்வது தவிரமுன் நின்று
விழைவெலாம் உதவி, மெய்ப்புகழ் சூட்டிச்
செங்கதிர் வெண்கதிர்ச் சீரொளி தழைக்கும்
உலகெலாம் உணர உன்னுடன் கலந்துபின்
என்அணி குறிப்பார்க்கு யான்எனத் தோன்றி
அவர்விருப்பு அனைத்தும் அளித்தருள் இனிதே.[1]

இது எதுகைத்தொடை பெறாத ஆசிரியப்பா.

உதாரணம் 2:-

குருவென உலகில் குலவல் எலாம்நின்
திருவுரு என்னத் தெளிதரப் பெற்றும்
புலைநெறிக் கொடியோர் புன்மை நாடி
மலைவுறும் கொடுமை மாற்றி யருளாய்;
தண்புனற் பணையில் தயங்கும் வாளை
விண்புகின் உரிஞ்சி விரிபூ உதிர்தரு
கொன்பொழில் உடுக்கும் குமார புரியில்
நம்புநர் வேண்டுவ நல்கி
அம்புவி புரக்கும் அயிற்கைவா னவனே.[2]

---

1 முத்தமிழ்ப்பாமாலை 25

2 குமாரபுரி மும்மணிக்கோவை 16

இவ்வாசிரியப்பா ஒன்பதாகிய ஒற்றைப்படை அடிகளைப் பெற்று வந்தது.

இதிலிருந்து ஆசிரியப்பாவிற்கு அகவலோசையே இன்றி யமையாத இலக்கணம் எனவும் மற்ற தொடை நயங்கள் இருக்கு மளவு சிறப்படையும் எனவும் கொள்ளலாம். இஃது இவ்வியல்பு ஏழாம் நூற்பாவில் தழுவிக் கொள்ளப்படுகிறது.

(404)

**நிலைமண்டில ஆசிரியப்பா**

**6. ஈற்றுஉறும் அடிக்கு முந்திய அடியில்ஈர்**
**அசைகுறைவு ஆகிய வேற்றுமை ஒன்றே**
**அணைவுறும் நேரிசை யகவற் பாவே**
**நிலைமண் டிலம்என நிகழ்த்தும் அகவலே.**

ஈற்றயல் அடியில் இரண்டுஅசைகள்(ஒருசீர்) குறைதலாகிய ஒரு வித்தியாசத்தைமட்டும்உடைய நேரிசையகவல் நிலை மண்டில ஆசிரியப்பா என வழங்கப்படும் என்றவாறு.

முன்பே கூறியதுபோல் பிற ஆசிரியர்களால் நேரிசை என வழங்கப்படுவதை இவர் நிலைமண்டிலம் என மாற்றி யழைக்கிறார். பாடல் முடிவடையும்போது ஒரு சீர் குறைவ தாகிய மண்டிலம் (வளைவு) பெறுவதால் இதனை இவ்வாறு வழங்குகிறார் போலும். (405)

**7. இருவகை அகவலும் எதுகை மாறி**
**ஒற்றைத் தொகைபடும் அடியினது ஆகி**
**மோனைகெட்டு அங்ஙனம் எதுகை நின்று**
**வரினும் கொள்வது வண்தமிழ் இயல்பே.**

நேரிசை, நிலைமண்டிலம் ஆகிய இரண்டுவகை ஆசிரியப் பாக்களும் எதுகை இல்லாமலும் ஒற்றைப்படை அடிகளை உடையனவாகவும் மோனை இல்லாமல் அவ்விடத்தில் எதுகை வந்திருந்தாலும் அவற்றைத் தழுவி ஏற்றுக்கொள்வது தமிழ் இலக்கியமரபாம் என்றவாறு.

எதுகை இல்லாததும்,ஒற்றைப்படை அடிகளை உடையதும் முன்பே காட்டப்பட்டன. ஓர் அடிக்குள் மோனைவராமல் அடிஎதுகை வந்த ஆசிரியப்பா:-

வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப்
புகலி நாயக! இகல்விடைப் பாக!
அமைநாண் மென்றோள் உமையாள் கொழுந![1]

(406)

**8. அகவலில் சூத்திரச் சீர்வந்து ஒன்றினும்**
**சொற்சுவை உளதுஎனில் தூயோர் தள்ளார்;**
**ஆயினும் இனிதுஎன்று அறைவது கடையே.**

ஆசிரியப்பாவில் சூத்திரத்திற் குரிய சீர்கள் இடம்பெற் றிருந்தாலும் சொல்லினிமை இருந்தால் மேலோர்கள் அதைப் புறக்கணிக்க மாட்டார்கள்.என்றாலும் அதைச் சரியான யாப் பமைதியையுடைய பா எனக் கூறுதல் தக்கதன்று என்றவாறு

சூத்திரப்பாவில் ஒவ்வோரிடத்தே இரண்டாகப் பிரித்தால் ஐந்தசைச்சீர் வரும். ஆனால் ஆசிரியப்பாவில் அது வரக்கூடாது. இவ்வியல்பின் நான்காம் நூற்பாவின் நான்காம் அடியில் கரு விளந்தண்பூச்சீர் ஆகிய ஐந்தசைச்சீர் இடம்பெற்று ஓசை குன்றியது முன்பே காட்டப்பட்டது. ஏதோ மிகச் சிற்சில இடங்களில் பயின்றுவந்தால் பயன்நோக்கி ஏற்றுக்கொள்ளலா மெனினும் அஃதில்லாமையே சிறப்பு என்கிறார். (407)

**9. நூற்பா என்பது சூத்திரப் பாவே;**
**ஆசிரி யப்பா என்பது அகவலே,**

பொருள் வெளிப்படை. (408)

1 திருக்கழுமல மும்மணிக்கோவை. 10 அடிகள் 1-6

### வஞ்சிப்பா

10. கனிச்சீர் இரட்டிய ஓர்அடி உடைத்தாய்
மோனையும் எதுகையும் ஆசிரி யப்பா
முறையில் கொடுநடந்து ஈர்அசைத் தனிச்சொல்
காட்டிப் பின்நிலை மண்டில அகவற்
கடையடி இரண்டும் கவின்தரல் வஞ்சிப்
பாஎனல் பல்லோர் பகர்ந்த முறையே.

இரு கனிச்சீர்கள் இணைந்தது ஓர் அடியாய், அகவலைப் போன்றே எதுகை, மோனைகளைப் பெற்றுச் சில அடிகள் சென்றபிறகு ஈரசையாலாகிய ஒரு தனிச்சொல்லையும் நிலை மண்டில ஆசிரியப்பாவின் இறுதி இரண்டு அடிகளையும் பெற்று முடிவதை வஞ்சிப்பா என்பது மரபு என்றவாறு.

இவர் நிலைமண்டிலம் என்பது பிறர் கூறும் நேரிசையை, குறளடி வஞ்சிப்பாவில் ஒரு தனிச்சொல், ஒரு முச்சீர் அடி, ஒரு நாற்சீரடி எனவே முடியும் என்று இங்குக் கூறப்பட்டது. இவ்வாறு கூறினாலும் தனிச்சொல் இன்மை, அதிக ஆசிரிய அடிகள் பெற்றுவருதல் என்னும் இரண்டும் அடுத்த நூற்பாவில் தழுவிக்கொள்ளப்படுகின்றன. இதே இலக்கணத்துடன் அமைந்ததற்கு எடுத்துக்காட்டு:-

மன்னவர்முதற் பொன்னுடையவர்
தம்மெதிர்தினம் எம்மதுமனம்
ஒல்குறுந்துயர் நல்குபுன்மயல்
ஆவதுமுன் தேவலதெனில்
நல்லதுமறைச் சொல்லருள்நிறைவு
என்கைமெய்ப்படா நின்கழற்கொடாய்
பேசவாயிலன் நாசமில்புகழ்
மரீஇய
சென்னையம் பதியிற் சிறந்து
தன்னைநா டினர்க்குத் தருமுரு கோனே.[1]

---

1 சென்னைக் கலம்பகம்-80

இங்கு இவர் அகவலிலக்கணத்தில் கூறியவாறு வழியெதுகை வந்தமை காண்க, (409)

**11. தனிச்சீர் ஆதிய தணவினும் வஞ்சிப்**
**பாஎனும் மாற்றம் பழுதுப டாதே.**

தனிச்சொல் பெறுதல் முதலிய விதிகளிலிருந்து வேறுபட்டாலும் வஞ்சிப்பா என்ற பெயரால் வழங்குவதற்குத் தடையில்லை என்றவாறு.

"ஈண்டு (வஞ்சிப்பாவில்) தனிச்சொல் வேண்டும் என்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தாமையானும் பிற்காலத்தில் செய்த நூல்பற்றி முற்காலத்தில் செய்யுட்கெல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்றதலானு அஃதமையாதென்பது"[1] என்பது பேராசிரியர் கருத்து.

ஆதிய என்றதனானே அகவலடிகள் இரண்டினை மட்டுமே பெற்று வரவேண்டும் என்று முன் நூற்பாவில் விதிக்கப்பட்டதற்கும் விலக்கு அளித்தவாறாயிற்று. இதற்கு உதாரணம்:-

யாமெமதெனும் தாமதர்தமை
நாளுந்துதித் தாளுங்குரு
எனவேபணிந் தனமேலிவர்
விதிமதன்சமன் சதிதவிர்தவர்
போல்மகிழ்பவர் பால்மருவிலன்;
அதனால்
வெள்ளிய வரைபோல் விளங்குருக் காட்டித்
தெள்ளிய மறையின் சிரப்பொரு ளுணர்த்தி
கோதறு தொண்டர் குழுவினில் கூட்டி
ஆதர வுடனுற் றருள வேண்டும்;

1. பேரா. தொல். பொருள். 383

குஞ்சரம் பிளிறக் குரக்கினம் புயலென்று
அஞ்சல் உறீஇ அலமரும் பொழில்சூழ்
குன்றக் குடியில் குலவுசில் பரனே.[1]

இதில் தனிச்சொல்லை அடுத்து ஏழு ஆசிரிய அடிகள் வந்தன. தனிச்சொல் பெறாத வஞ்சிப்பா வந்துழிக் காண்க. (410)

**12. அகவற் பாசுரத் தடியினும் வஞ்சிப்**
**பாவடி குறைதலிற் குறளடி எனும்மொழி**
**கூட்டிச் சிற்சிலர் கூறலும் உளவே.**

ஆசிரிய அடிகளைவிட வஞ்சியடிகள் நீளத்திற் குறைந் திருப்பதால் இப்பாவிற்குச் சிலர் குறளடி எனச் சேர்த்துக் குறளடி வஞ்சிப்பா என வழங்குவர் என்றவாறு.

தமிழ்யாப்பியலார் இரண்டு மூன்று, நான்கு, ஐந்து ஐந்தின் மிக்க சீர்களாளியன்ற அடியை முறையே குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்பர். இவர் இத னைக் கொள்ளவில்லை. இந்தவகை வஞ்சிப்பாவின் வஞ்சியடி களில் மூவசைச்சீர்கள் இரண்டுவந்தமையாலேயே இதுகுறளடி வஞ்சிப் பாவாயிற்று. முச்சீர்கள் வந்த சிந்தடி வஞ்சிப்பாவும் தமிழில் வழங்குகின்றன. "சிந்தும் குறளும் அடி என்பர் வஞ்சிக்குச் சீர்தனிச் சொல் அந்தம் சுரிதகம்ஆசிரியத்தான்மரு வும்"[2] என்பதால் இதனை அறியலாம்.

எனவே குறளடி வஞ்சிப்பா என்பதற்கு இவர் கூறும் பெயர்க்காரணம் மேலும் ஆய்விற்குரியது. (411)

### வெண்பா

**13. ஈற்றில் நேர்வரும் மூன்றசைச் சொற்களும்**
**ஈரசை ஓரசை யாவும் வெண்பாக்கு**
**உரியன ஆம்என்று உரைத்தனர் உணர்ந்தோர்.**

---

1 குன்றக்குடிக் கலம்பகம். 40

2. வீரசோழியம் 119

நேர் என முடிகின்ற மூன்றசைச் சீர்களாகிய காய்ச்சீர் களும் ஈரசையானியன்ற ஆசிரிய உரிச்சீர்களும், தனியாக வரும் ஓரசையும் வெண்பாவிற்கு உரியனவாம் என்பர் புலவர் என்றவாறு.

இவர் தளைகளைப் பற்றியே கூறவில்லை. வெண்பாவில் வெண்டளை அமைதல் அப் பெயரின்றியே இப் பகுதியின் பதி னைந்தாம் நூற்பாவில் கூறப்படுகிறது. இங்கு வெண்பாவில் பயின்றுவரும் சீர்கள் இவையிவை என்று கூறப்பட்டன. (412)

**14. வெண்பா ஈற்றே வருவதுஓர் அசைச்சொல்**
**அவ்வயின் வராதது மூன்றசைச் சொல்லே.**

வெண்பாவின் ஈற்றுச்சீராகவே வருவது ஓரசைச்சீராம். மூவசைச் சீர் வெண்பாவின் ஈற்றில் வராது என்றவாறு.

ஈற்றே வருவது ஓர் அசைச்சொல் என்றதனானே பிற இடங்களில் வராது என விலக்கப்பட்டது. எந்நிலையிலும், ஈற்றில் மூவசைச்சீர் வாரா எனவே (குற்றியலுகரஞ் சேர்ந்த) ஈரசைச்சீர்கள் வரும் என்பது பெறப்பட்டது. (413)

**15. உரிய மூன்றசைச் சொல்லொடும் பின்நிரை**
**ஆய ஈரசைச் சொல்லொடும் நேர்வரும்;**
**பின்நேர் உளஇரண்டு அசைச்சொல் லோடு**
**நிரைவரும் வெண்பா நிலைஉணர் காலே.**

வெண்பாவின் தன்மையை ஆராய்ந்தால் அதற்கே உரிய மூன்றசைச் சீராகிய காய்ச்சீருக்குமுன்னும், நிறையசையால் முடியும் ஈரசையாகிய விளச்சீருக்கு முன்னும் நேரசைவரும். நேரசையால் இறும் ஈரசையாகிய மாச்சீருக்கு முன்னால் நிரையசை வரும் என்றவாறு.

இதனுள் காய்முன் நேராகிய வெண்சீர் வெண்டளையும், விளம்முன் நேர்,மாமுன் நிரை எனும் இயற்சீர்வெண்டளையும் கூறப்பட்டன. (414)

**16.** **நாள்என மலர்என முடித்தவெண் பாக்கள்**
**உத்தமப் பகுதி என்பதும், காசுஎனப்**
**பிறப்புஎன முடிப்பன ஏனை என்றும்**
**உணரும் பாவலன் நூற்றுள் ஒருவனே.**

நாள்,மலர் என்ற ஓரசை வாய்பாட்டான் முடிந்த வெண் பாக்கள் சிறப்புடையன என்றும், காசு, பிறப்பு என்று குற்றிய லுகரம் பெற்று வருவன அத்துணைச் சிறப்புடையன அன்று எனவும் நுட்பமாக ஓர்ந்து அறியும் புலவர்கள் மிகச் சிலரே என்றவாறு.

இவர் வெண்பாவின் ஈற்றடி சிறப்பான ஓசைநயத்தோடு அமைய வேண்டும் என வற்புறுத்துகிறார். "அதன் ஈற்றடி மோனை எழிலிசை இவற்றால் தண்ணுமை போலத் தயங்கும் அன்றே"[1] எனப் பின்னால் கூறுகிறார். அதற்கு ஓரசையால் இறும் வெண்பாவே சிறந்தது ஆகும் என்ற தம் கருத்து இங்குக் கூறப்பட்டது. (415)

## குறள் வெண்பா

**17.** **உரியசொல் நான்கால் ஓரடி அமைத்துஅவ்**
**வெதுகையில் வேறுஅடி முச்சொலில் காட்டி**
**மூன்றாம் சொல்தொறும் மோனையொடு முடிக்கில்**
**குறள்வெண் பாவெனக் கூறினர் உயர்ந்தோர்.**

வெண்பாவிற் குரிய ஈரசைச் சீர்களும் காய்ச் சீர்களும் (வெண்டளை பிழையாது)நான்கு சேர்ந்து ஓரடியாக அமைந்து, முதலடியோடு எதுகைபெற்ற இதேபோன்ற மற்றோரடி

1 அறுவகை, 423

முச்சீரான் வந்து முடிந்தால் அது குறள்வெண்பா எனப்படும் என்றவாறு.

வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டினது என முன்பே கூறப்பட்டு விட்டதாதலின் இங்கு இரண்டாம் அடியின் 'மூன்றாம் சீர் அத்தன்மைத்தே என்பது தானே போதரும். இவ்வாசிரியர் எதுகை, மோனைகளைத் தனியாகத் தொடைகள் எனக் கொள்ளாமல் யாப்பு வடிவின் இன்றியமையாததோர் அங்கமாகவே கொள்கிறார். (416)

### சவலை வெண்பா

**18. குறள்வெண் பாவிரண்டு அணைவது சவலை**
**வெண்பா வாம்என விளம்பினர் சிலரே.**

மேற்கூறிய குறள்வெண்பாக்கள் இரண்டு இணைந்து வந்தால் அதனைச் சவலை வெண்பா என்பர் என்றவாறு.

உதாரணம் வருமாறு:-

அவமிருத்தோ ராயிரம்நீத் தாண்டுகொண்ட தன்றிச்
சிவன்விழிநீ யென்றுமுரை செய்தாய்
பவமொழியச் சற்றருட்கண் பாராய் பழனித்
தவகுலவே டக்குருநா தா.[1]

இந்நூற்பா இரு குறள் வெண்பாக்கள் இணைந்தால் சவலை வெண்பா ஆகும் எனக் கூறுகிறது. இது இப்படியே சரியாகாது. முதல் குறளின் ஈற்றுச் சீர் ஓரசைச்சீராக இல்லாமல் வெண்பாவிற்குரிய ஏனைய சீர்களில் ஒன்றாகவே அமையும் சவலை வெண்பாவின் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால் அது தனிச்சொல் நீங்கிய நேரிசை வெண்பா ஆகும். இது அடுத்த நூற்பாவால் அறியப்படும். (417)

---

1 பழனிக் கலம்பகம், 66

### நேரிசை வெண்பா

**19. சவலைவெண் பாவின்முற் பகுதியின் ஈற்றில்அவ்**
**வெதுகைத் தனிச்சொல்ஒன்று இசைவுறில் நேரிசை**
**வெண்பா ஆம்என நிகழ்த்திடல் மிகையே.**

முற்கூறப்பட்ட சவலை வெண்பாவின் முதல் குறளை யடுத்து முதல்ஈரடிகட்கு எதுகையாயமையும்படி (வெண்டளை பிறழாமல்) ஒரு தனிச்சொல் சேர்ந்துள்ள பா நேரிசைவெண்பா ஆகும் என்றவாறு.

வெண்பா வகைகளிலேயே இதுவே மிக்குப் பயில்வதாதலின் இதனை அனைவரும் அறிவர் எனக் குறிக்க நிகழ்த்திடல் மிகையே என்றார். நூற்பாவில் இல்லாவிடினும் வெண்பா ஒன்றுமட்டுமே பிறதளைக் கலப்பின்றி வருவதாதலின் உரை யில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டது. (418)

### இன்னிசை வெண்பா

**20. மூன்றுஅடி நன்னாற் சீரின வாகி**
**ஈற்றடி முச்சீர் ஆக இயற்றிடல்**
**இன்னிசை வெண்பா என்பது முறையே.**

முதல் மூன்று அடிகளும் நன்னான்கு சீர்களை உடையன வாகியும் நான்காவதாகிய இறுதியடி முச்சீரானியன்றதாகியும் அமைந்த பா இன்னிசை வெண்பா எனப்படும் என்றவாறு.

இங்கு வருகின்ற சீர்கள் வெண்பாவிற்கே உரிய சீர்கள் என்பதும் ஈற்றடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு களில் ஒன்று என்பதும் வெண்பாபற்றிய அதிகாரத்தால் பெற்றாம். இதில் எதுகை பற்றிக் கூறப்படாமையின் ஒருவிகற் பம். இரு விகற்பம் இரண்டும் கொள்க. சிறு பான்மை (தொன் மையான நூல்களில்) பலவிகற்பமும் இடம்பெறும்.

ஒருவிகற்பம் :-

அரிய சமயங்கள் அத்தனையும் போற்றும்
பெரிய குருபரனைப் பேசுங்கால் யாரும்
தெரிய மலைதோறும் சென்றுதினம் ஆடற்கு
உரியவனாம் சென்னைநக ரோன்.[1]

இருவிகற்பம் :-

இவ்வுலகத் தின்பம்உவர்த் தெஞ்ஞான்றும் பூமகள் கோன்
அவ்வுலகத் தின்ப மதுவே விருப்புற்றார்
முந்நீர் வளாக முழுதுறிலும் வாய்க்கொள்ளார்
உய்ந்நீர வல்லா வுரை.[2]

பலவிகற்பம் :-

கண்ணனருள் பெற்றார்நற் கல்வியே செல்வமெனக்
கொல்லா விரதங் குறிக்கொள்ப வேறுசிலர்
தீக்கொலையிற் செய்பொருளே செல்வமென நின்றன ரால்
என்னே வுலகியற்கை யென்.[3] (419)

### பஃறொடை வெண்பா

**21. நேரிசை வெண்பா வேணமட் டடுக்கி**
**இடைதொறுந் தனிச்சொல் இசைவுறப் பொருத்தல்**
**பஃறொடை வெண்பா ஆகும்; இதனைக்**
**கலிவெண் பாவெனக் கழறுநர் உளரே.**

நேரிசை வெண்பாக்களைத் தங்கள் உளங்கொள்ளுமளவும் அடுக்கிக் கொண்டே போய் இருவெண்பாக்களின் இடைகளில் எல்லாம் எதுகையும் தளையும் பொருந்துமாறு தனிச்சொற களைப் பெய்வதால் உண்டாகும் பா பஃறொடை வெண்பா ஆகும். சிலர் இதனைக் கலிவெண்பா என்றும் கூறுவர் என்ற வாறு.

---

1 சென்னைக் கலம்பகம். 45
2 மாறன் பா, பாவினம் 14
3 மாறன் பா, பாவினம் 16

சிலர் பன்னிரண்டடிக்குக் குறைந்த அடிகளை உடையது பஃறொடை என்றும், அதனின் மிக்கது கலிவெண்பா எனவும் கூறுவர். ''அப்படி அடி ஈறாறு வரும் பஃறொடை வெண் பாவே'',''பல அடியாய் அளவு இலவாய் ஒருஉஎதுகை இரண் டாம் பாதங்கள் தொறும் பெறினும் வெள்ளடி குன்றாவாம் கலிவெண்பா''[1] என்பது அவர் கருத்து. இவர் இப்பிரிவினையை வேண்டுவதில்லை. ''பாதம் பலவரின் பஃறொடை வெண்பா''[2] என்னும் யாப்பருங்கல நெறியை இவர் கடைப்பிடிக்கிறார்.

கந்தர் கலிவெண்பா, திருவிளையாடற் கலிவெண்பா, உலா, தூது, காதல் போன்ற சிற்றிலக்கியங்கள் யாவும் இந்த யாப் பிற்கு எடுத்துக்காட்டுகளாகும். (420)

**22. இன்னும் சிற்சில வெண்பா உளஎன்று**
**உரைப்பினும் இவ்விதம் ஐந்துள் உறுமே.**

வெண்பாக்களை மேலும் பலவாறாகப் பாகுபடுத்திக் காட்டினாலும் அவையாவும் இங்குக் குறிக்கப் பெற்ற (குறள், சவலை, நேரிசை, இன்னிசை, பஃறொடை என்னும்) ஐந்து வகைகளுள் அடங்கும் என்றவாறு.

நேரிசை, இன்னிசை வெண்பாக்களின் முதல் குறளின் ஈற்றுச் சீரில் இணைந்த அசைகளைக் கொண்டு ஓராசு இடை யிட்டவை, ஈராசு இடையிட்டவை எனப்பகுப்பர். எதுகை அமைப்பைக்கொண்டு ஒரு விகற்பம், இரு விகற்பம், பல விகற்பம் என்பர். மூன்றடியான் வருவனவற்றைச் சிந்தியல் வெண்பா என்பர். அவற்றையும் தனிச்சொல் நோக்கி நேரிசை, இன்னிசை என இரு கூறாக்குவர். பஃறொடை, கலிவெண்பாக்கள் வேறுபாடு முன்பே கூறப்பட்டது.

இவை மட்டுமன்றி அமுதசாகரம் எழுத்தெண்ணிக்கையின் அடிப்படையில் வெண்பாவை ஐந்து வகையாகப் பகுக்கிறது.

---

1 சிதம்பரம் பாட்டியல் செய்யுள் 1, 2

2 யாப்பருங்கலம்,62

"கட்டளை, கலம்பகம், சமநடை, சமவியம், மட்டவிழ் குழப லினாய் மயூர சமவியம் ஒட்டினார் எழுத்தினால் ஒட்டி ஒண்ட மிழ்க்கு இட்டமாய் அவர்கள் வெண்பாவின் பேர்களே"[1] என்பது அந்நூற்பா.

இவ்வாறு பலவகையாகப்பிரித்துக் கூறப்பட்டாலும் அவை அனைத்தையும் ஒரோ வகையால் இவ்வைந்தினுள் அடக்கி விடலாம் என்பது இவர் கருத்து.

இவர் எதுகையை யாப்பின் இன்றியமையாத அங்கமாகவே கொள்வதால் பல விகற்ப வெண்பாக்களைச் சிறந்தனவாக ஏற்றுக் கொள்வதில்லை. இவரால் இயற்றப்பெற்ற இன்னிசை வெண்பாக்கள் அனைத்துமே - இவ்வுரையாசிரியனின் அறிவுக் கெட்டிய வரையில் - ஒரு விகற்பத்தான் இயன்றனவே. எதுகை, மோனை இரண்டுமே உரிய இடத்தில் நன்கு அமைந்தது தான் யாப்பின் சரியான வடிவம் என்பது இவர் கொள்கை. இஃது அடுத்த நூற்பாவில் கூறப்படும். (421)

**23.** **தளைப்பிழை இன்றிப் பொருளொடு திகழுறும்**
**வெண்பா மோனையும் எதுகையும் பிறழினும்**
**தவிரினும் ஒப்புவர் தக்கோர்; ஆயினும்**
**மதுரம் குன்றிடும் என்பது வழக்கே.**

வெண்டளை பிழையாமல் நல்ல பொருளமைதி வாய்ந்த வெண்பா எதுகை, மோனை ஆகிய இரு தொடை நயங்களும் பெற்று வராதிருப்பினும் பெரியவர்கள் அவற்றைத் தழுவி ஏற்றுக் கொள்வர். என்றாலும் அவை இனிமையில் குறை பாடுடையன என்பதே மரபாம் என்றவாறு. (422)

**24.** **குறில்தனி வரும்அசை சீர்ஈற்று அன்றி**
**வாரா இயற்கையும், குற்றிய லிகரம்**
**கொள்ளலும் தள்ளலும் ஆதிய பிறவும்**
**அறிவார் யாம்பகர் அடுக்கு முறைகொடு**

---

1 அமுத சாகரம் 71.

முடிவுஇயல்பு இடைவர மொழியார்; அவர்தம்
வெண்பா வியற்கை விரித்திடற்கு அரிது; அதன்
ஈற்றடி மோனை எழில்இசைவு இவற்றால்
தண்ணுமை போலத் தயங்கு மன்றே.

தனிக் குற்றெழுத்தை ஓர் அசையாக அலகிடுதல் சீரின் ஈற்றில் வருமன்றி முதலிலோ இடையிலோ வாராதென்பதும், குற்றியலிகரத்தைத் தளைநோக்கி அலகிடுதல் விடுதல் ஆகிய இரு நிலைகளையும், இவை போன்ற மற்றவற்றையும் உணர்ந்து கொள்ள வல்லவர்கள் ("குறள்வெண்பா இரண்டணைவது சவலை;" என்பது முதல் "நேரிசை வெண்பா வேணமட்டடுக்கி" என்பது வரை") யாம் அடுக்கிக் கூறிய நெறி பற்றி ஈற்றுச் சீர் இடையே வரும்படி பாடமாட்டார்கள். வெண்பாவின் இலக்கணத்தை நன்கு உணர்ந்து இயற்றுபவர்களால் யாக்கப்பெறும் அப் பாவின் சிறப்பை விரித்துக் கூற இயலாது. நன்றாகப் புனையப்பெற்ற வெண்பாவின் இறுதி அடி மோனைநயம் சொற்பொருத்தம் ஆகியவைகளால் மிருதங்கத்தின் தீர்மானம் போலக் கம்பீரமாக முடியும் என்றவாறு.

"அகர முதல எழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே உலகு" என்ற குறளின் முதற் சீரை எடுத்துக் கொள்வோம். இதை அலகிடும் போது நிரை, நேர் என அலகிட்டுப் புளிமாச் சீர்என வேண்டும். அவ்வாறன்றி நேர், நேர் நேர் எனக்கொண்டு தேமாங்காய் ஆக்கலும் நேர், நிரை என நிறுத்திக் கூவிளம் ஆக்கலும் பிழையாம். "குறிப்பே ஏவல் தற்சுட்டு அல்வழித் தனிக்குறில் மொழி முதல் தனியசை இலவே"[1] என்பது விதி.

"தளை சீர் வண்ணம் தாம்கெட வரினே குறுகிய இகரமும் குற்றிய லுகரமும் அளபெடை ஆவியும் அலகியல் பிலவே"[2] ஆதலின் அவை இடம் நோக்கிக் கொள்ளவோ தள்ளவோ படும். "அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல் பொருளல்ல தவ்வூன் தினல்"[3] என்னும் குறளில் தியாவிலுள்ள

1 யாப்பருங்கலம் 7. 3 திருக்குறள் 254.

2 யாப்பருங்கலம் 4.

குற்றிகரம் அலகிடப்படின் காய்முன் நிரை வந்து வெண்டளை பிழைத்தலின் அங்கு அலகு பெறாது. ஆனால், "வந்துநீ சேரின் உயிர்வாழும் வாராக்கால் முந்தியாய் பெய்த வளை கழலும்—முந்தியாங்கோளானே கண்டனங்கோள் குறியாய் இன்னுமோர் நாளானே நாம்புணரு மாறு"[1] என்னும் வெண்பாவில் "முந்தியாய்" என்ற சீர் குற்றியலிகரம் அலகுபெற்றுக் கூவிளம் என நின்றது. அங்ஙனம் கொள்ளாவிடின் மாமுன் நேர்வந்து வெண்டளை பிறழும். இதனால் குற்றியலிகரத்தை இடம் நோக்கி அலகிட வேண்டும் என்றாராயிற்று. இக்கொள்கை குற்றியலுகரத்திற்கும் பொருந்தும்.

இனி ஆதிய பிற என்றது முன் சார்பியல்பில், "செய்கை தர்மம் கல்வி தன்மை பொன்வில் எனுமிவை போன்றநேர் நேரும் நிற்கும் இடத்தால் நிரையெனப் படுமே"[2] என்ற கருத்தை.

வெண்பாவில் பிறதளை விரவாததோடு சிறந்த செப்பலோசை, சொற்கட்டு, செறிவு, எதுகை மோனை ஆகிய தொடை நயம் அனைத்தும் இன்றியமையாது வேண்டப் படுதலின் "வெண்பா இயற்கை விரித்திடற்கு அரிது" என்றார்.

மிருதங்கம் தனி ஆவர்த்தனம் வாசித்து முடிக்கும்போது எப்படி ஒரு தீர்மானத்தோடு கம்பீரமாக முடிக்கப்படுமோ அவ்வாறு வெண்பாவும் முடிக்கப்பட வேண்டும் என உவமை கூறி விளக்குகிறார். (423)

வெண்டளைக் கலிப்பா

**25. இன்னிசை வெண்பா ஈற்றடியும் நாற்சீர்
ஆகித் தளையும்அம் முறையே நிற்பது
கலிப்பா ஆம்எனக் கழறினர் கற்றோர்.**

---

1 யா. காரிகை. 51 மேற்கோள்

2 அறுவகை. இலக். 234.

இன்னிசை வெண்பாவின் இறுதி யடியும் முதன்மூன்று அடிகளைப் போலவே நாற்சீர் பெற்று வெண்டளை பயின்று (நாள் மலர் காசு பிறப்பு என்ற இறுதிச் சீரின்றி இயல்பான ஈரசை மூவசைச் சீர்களால் முடிந்து) கலிப்பா ஆகும் என்பர் புலவோர் என்றவாறு.

அம்முறையே நிற்பது என்றதனால் ஓரசை, குற்றுகர அசைகள் நீக்கப்பட்டன. வெண்டளையற்ற கொச்சகத்தினின்று வேறுபிரித்தறிவதற்காகத் தலைப்பில் வெண்டளைக் கலிப்பா என்று சுட்டப்பட்டது. (424)

**26.** **நேர்எனத் தொடுத்தலும் ஏஎன முடித்தலும்**
**கலிப்பாக்கு அணிஆம்; நிரைஎன எடுத்தலும்**
**ஆல்ஓ கொல்எனல் ஆதியில் முடித்தலும்**
**ஏனைஎன்று இயம்பினர் எண்ணில்பல் புலவோர்.**

நேரசையில்தொடங்கி ஏஎன முற்றுவிப்பது வெண்டளைக் கலிப்பாவிற்குச் சிறப்பாம். நிரையசையில் ஆரம்பித்தலும் ஆல், ஓ, கொல் முதலியனவற்றால் நிறைவு செய்வதும் அத்துணைச் சிறப்பினது அன்று. இது பற்பல அறிஞர்களின் கருத்தாகும் என்றவாறு.

வெண்டளைக் கலிப்பாவிற்கு உதாரணம் வருமாறு: -
பொற்றுயரால் நெஞ்சம் புலர்கின்ற புன்மைமுழுது
அற்றுலக மின்புறச்சித் தாடும்நா ளின்றேயோ?
மற்றுவமை இல்லா மணியே மறைமுதனூல்
கற்றுணர்ந்தார் போற்றும் கதிரா யிரத்தானே.[1] (425)

## கொச்சகக் கலிப்பா

**27.** **தளைபிறழ்ந் துள்ள கலிப்பாத் தானே**
**கொச்சகக் கலிப்பா என்றும், சிலரால்**
**கொச்சகம் என்றும் கூறப் படுமே.**

1 ஞாயிறுஆயிரம் 353

வெண்சீர் வெண்டளை பெற்றுவராத கலிப்பாவே கொச்சகக் கலிப்பா எனச் சிலராலும், கொச்சகம் எனச் சிலராலும் கூறப்படும் என்றவாறு.

இந்நூற்பா வெண்டளை பிறழ்ந்த கலிப்பா என்று மட்டுமே கூறினாலும் கொச்சகக் கலிப்பாவில் காய்ச்சீர்கள் மிகுதியாகவும், ஈரசைச் சீர்கள் அருகியும் வரவேண்டும். இதற்காகவே தளைபிறழ்ந்த என்பதற்கு 'வெண்சீர் வெண்டளை பெற்று வராத' எனப்பொருள் கூறப்பட்டது. இவர் தளைகளுக்குப் பெயரும் இலக்கணமும் தனியே கூறிற்றிலர் என்பது முன்பே கூறப்பட்டது.

கொச்சகக் கலிப்பாவிற்கு எடுத்துக் காட்டு வருமாறு:-

மஞ்சாரும் நெடுங்கோல வரையேபோல் வாரிதிமேல்
நஞ்சார்வாய்ப் பாம்பணையின் நடுக்கிடக்கும் நாரணனே!
ஒஞ்சாத மாதவப்பேர் உரத்தினர்க்கும் ஒருசிறிதும்
அஞ்சாவெங் கலிப்பேயை யடக்கும்வலி அருள்வாயே.

(426)

## மருட்பா

**38. நேரிசை வெண்பா தனிச்சொல் வரைகொடுஅவ்**
**வெதுகைவிட் டேனும்மூன்று அகவல் அடிஇசைத்து**
**அவற்றின் நடுஅடி ஈற்றில் ஈரசை**
**குறைக்கில் மருட்பா என்றுகொள் வாரே.**

நேரிசை வெண்பாவின் முதல் இரு அடிகளை முழுவதும் பெற்று, அதற்குப் பின் இதே எதுகைபெற்றோ அல்லது வேறு எதுகை பெற்றோ மூன்று அகவலடிகள் வந்து, அவற்றின் இரண்டாமடி ஈற்றுச்சீர் குறைந்தால் அந்தப்பா மருட்பா எனப்படும் என்றவாறு.

நேரிசை வெண்பாவின் முற்பாதி, மூன்றடியுள்ள நிலைமண்டில அகவலோடு இணைந்தால் (பிறர் கூறும் நேரிசையா

---

1 திருமால் ஆயிரம் 211

சிரியப்பா) மருட்பா ஆகும் எனப்பட்டது. இவர் இரு வெள் ளடிகளும் மூன்று அகவலடிகளும் இணைந்ததே என உறுதியாக வரையறை செய்து கொள்கிறார். இவரால் இயற்றப்பெற்ற மருட்பாக்கள் அனைத்தும் இத்தன்மையனவே. ஆனால் பிற நூல்களின் கொள்கை வேறு.

அவை மருட்பாவிற்கு அடி வரையறை செய்யவில்லை. ஆனால் பொருள் வரையறைசெய்கின்றன. புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிஉறூஉ என்னும் நான்கு பொருள்களே மருட்பாவிற் குரிய துறைகளாம். வெண்பா முதலிலும் அகவல் பின்னாகவும் வரவேண்டும். அவ்வளவே. "பண்பார் புறநிலைபாங்குடைக் கைக்கிளைவாயுறை வாழ்த்து ஒண்பாச் செவியறிவு என்றிப் பொருள்மிசை ஊனமில்லா வெண்பா முதல்வந்து அகவல் பின்னாக விளையும் என்றால் வண்பால் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே"[1] என்பது காரிகை. இம்மருட்பா சமனிலை, வியனிலை என இரண்டாகப் பகுக்கப்படும். இருவகைப் பாவடிகளில் சம எண் ணிக்கையில் அமைந்தது சமநிலை மருட்பா ஆகும். ஏற்றத் தாழ்வுடையது வியனிலையாம். இத்தகைய பொருள், அடிப் பாகுபாடுகளை இவர் வேண்டவில்லை.

இவர் கூறும் மருட்பாவிற்கு உதாரணம் வருமாறு:

வானமங்கை அல்லிவள் வார்குழற்பூ வாடுகின்ற;
தேனனைய மைக்கண் சிமிட்டுகின்ற; – ஞான
குருவெனப் பழனிக் குவட்டில் மேய
ஒருவனை யேதினம் உன்னும்
முருடர்தங் குலத்து முகிழ்முலை மகளே.[2]

நூற்பா முதல் மருட்பா முடிய இதுவரை கூறப்பட்ட யாப்பு வகைகள் யாவும் இவ்வாசிரியர் கருத்துப்படி இயற்றமிழ் ஆகும். இனி இங்கிருந்து இசைத் தமிழ்க்குரிய பாவகைகளைக் கூற முற்படுகிறார். (427)

1 யா. காரிகை 35

2 பழனித்திரு – கலம்பகம். 49

## 2. இசைத்தமிழ்

### அம்மானை

29. இரண்டு நாலுஐந்து எனும்அடி ஈற்றில்
தன்பெயர் குலவத் தக்கஅம் மானை
ஐந்தடிக் கலிப்பாப் போலும்; அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே
கூறினர் பற்பலர் குவலயத் திடத்தே.

அம்மானை தன் இரண்டு, நான்கு, ஐந்து என்னும் மூன்றடிகளின் ஈற்றிலும் அம்மானை என்ற சொல்லையே பெற்று வரும். இது ஐந்தடிகளை உடைய கலிப்பாவைப் போன்றது. அம்மானை ஒருவர் ஒரு செய்தியைக் கூறல், மற்றொருவர் அதனை மறுத்தல், மூன்றாமவர் இரண்டிற்கும் பொருந்துமாறு பதில் கூறுதல் என்ற முறையிலேயே பலராலும் பாடப்பட்டு வருகிறது என்றவாறு.

இதனை அம்மானையாடுகின்ற மூன்று பெண்கள் தமக்குள் விவாதித்துக் கொள்வதாகக் கூறுவர். அம்மானை என்பது மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற எண்ணிக்கையிலமைந்த எலுமிச்சம்பழம் போன்ற காய்களை எறிந்து அவை கீழே விழாமல் பிடித்து விளையாடும் ஒரு மகளிர் விளையாட்டு.

இவர் அம்மானையின் யாப்பை ஐந்தடிக் கலிப்பாப் போலும் என்கிறார். பிறர் ஈற்றடி மற்ற மூவடிகளை விட இருமடங்கு வந்ததாகக் கொண்டு ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை என்பர். பொதுவாக அம்மானைப் பாடல்களில் முதல் நான்கடிகளே எதுகை பெற்று வருவதாலும் ஐந்தாவது நான்காம் அடிக்கு மோனை பெற்று அதன் மறுபாதியாகவே அமைவதாலும் அதனை ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை எனலே பொருத்தமாகத் தோன்றுகிறது.

அம்மானைக்கு எடுத்துக்காட்டு வருமாறு: -

சுந்தரஞ்சேர் தென்குடந்தை சோமநா தப்பெருமான்
கந்தரிட மாமிதனைக் கைபிடித்தார் அம்மானை!

கந்தரிட மாமிதனைக் கைபிடித்தார் ஆமாயின்
இந்த வுலகதனுக் கேற்குமோ அம்மானை?
ஏற்குமென்றே கையில்மழு ஏந்தினர்காண்
அம்மானை.[1]

இதில் முதல் இருவரிகள் முதல் பெண் கூறும் செய்தி. அடுத்த இருவரிகள் இரண்டாமவள் எழுப்பும் ஐயம். ஐந்தாம் வரி மூன்றாமவள் இறுக்கும் விடை. மிகப் பெரும்பாலான அம் மானைகள் இவ்வாறே உள்ளன. (428)

**30.** **அம்மானை ஈற்றின் விடைமொழி யதனுள்
இருபொருள் காட்டிடல் மிகையாம்; முப்பொருள்
நாற்பொருள் மொழியினும் இசைவுறில் நலமே.**

அம்மானைப் பாட்டில் மூன்றாமவளின் பதிலாக அமைந் துள்ள கடைசிப் பகுதியில் பெரும்பாலும் இருபொருள் அமை யும்படி சொல்லாட்சி இருக்கும். அங்கு மூன்று அல்லது நான்கு பொருள்களை அமைத்தாலும் (மிக்க வலிதிற் பொருள் கோட லின்றி) இயல்பாகப் பொருந்தினால் அதுவும் சிறப்புடையதே ஆகும் என்றவாறு.

மாயன் புகழ மலைப்பழனி வாழ்முருகோன்
தூயன் குரவன் தொழுகடவுள் அம்மானை;
தூயன் குரவன் தொழுகடவுள் ஆமாகில்
வேயன்ன தோளாரை வேட்பானேன் அம்மானை?
வேட்டவிதம் எண்ணில் வினயங்காண் அம்மானை.[2]

இதில் ஈற்றிலுள்ள வினயம் என்ற சொல் வில்நயம் என இருசொல்லாகவும், வினயம் என ஒரு சொல்லாகவும் இரு பொருள் படும் பிரிமொழிச் சிலேடை ஆகும். வில்நயம் வீரத் தையும், வினயம் காதலையும் குறித்தது. சூரனை வென்ற வீரத்திற்குப் பரிசாகத் தெய்வயானையையும், தன் காதலால்

---

1 தனிப்பாடல்.

2 பழனித் திருவாயிரம். கலம்பகம். 23

வள்ளியையும் மணந்தார். இவ்வாறு இருவரை மணந்ததால் அவருடைய தூயன் குரவன் தொழுகடவுள் என்ற பெருமைக் குப் பழுது நேர்ந்து விடவில்லை என்கிறாள் மூன்றாமவள். இது இருபொருள் பயந்த ஈற்றுப்பகுதி.

வஞ்சமெல்லாந் தீர்க்கும் மயிலமலை வாழ்முருகோன்
கஞ்சன்அரி ஈசனுக்குக் கண்டனன்காண் அம்மானை;
கஞ்சன் அரி ஈசனுக்குக் கண்டனனே ஆமாயின்
கொஞ்சம் கருமங்கை கொண்டதேன் அம்மானை?
கொண்ட தமரக் குலத்தினரால் அம்மானை.[1]

இவ்வம்மானையின் முற்பகுதியிலேயே கண்டனன் என்ற சொல் முப்பொருள் தரும் பிரிமொழிச் சிலேடை. கஞ்சனுக்கு அவனைக் குட்டிக் கண்டனம் செய்த கண்டனன்; அரிக்குக் கற்கண்டு போல் இனிமைதருகின்ற கண்டு அனன்; ஈசனுக்குக் கண்ணிலிருந்து வந்த செல்வமாகிய கண்தனன். இது முதல் மகள் கூற்று.

பிற்பகுதியில் "கொஞ்சங்கருமங்கைகொண்டதேன்" என்ற வினாவும் "கொண்டதமரக் குலத்தினரால்" என்ற விடையும் இருபொழிச் சிலேடைகள். கொஞ்சம் கருமம் (சூரனுடன் போர் புரிதலாகிய வினை) கை கொண்டது அமரக் குலத்தினரால் (தேவர்களை வாழ்விக்க) என ஒரு பொருளும் கொஞ்சு அம் கரு மங்கை (கரிய வள்ளி) கை கொண்டது அம் மறக் குலத்தினரால் (குறிஞ்சி மக்கள் குலதெய்வமாக வழிபடு தலால்) எனப் பிறிதொரு பொருளும் காண்க. இது இரு பொருள், முப்பொருள் இணைந்து வந்தது.

என்றற் கனைமுதலாம் ஈரிரண்டு தாயகமும்
குன்றக் குடியிற் குருபரனே அம்மானை;
குன்றக் குடியிற் குருபரனே ஆமாயின்

1 மயிலாசலக் கலம்பகம் 38

மன்றத்து முந்தவருள் வைக்குமோ அம்மானை?
மாதனத்தை தந்துமன்றோ வாழ்விக்கும்
அம்மானை?[1]

இதன் ஈற்றடி நாற்பொருள் பயப்பது.

1. தாய் - மா தனத்தை - அழகிய நகிலமுதை - உணவளித்து என்பது பொருள்
2. தந்தை -மா தனத்தை-பெரிய செல்வத்தை
3. குரு - மா தன் அத்தை-கலைமகளாகிய தன் அத்தையின் திருவருளை-கல்வியை, சரசுவதி சிவபிரானின் தங்கை எனவே முருகனின் அத்தை
4. தெய்வம்-மா தன் நத்தை-மரணத்தின் அழிவை (நத்து-வலித்தல் விகாரம்)

இவ்வாறு அம்மானைப் பாடல்கள் பலபொருள்கள் தரும்படி அமையும். (429)

**31. கலிப்பா அரைஅரை ஆகக் கூட்டியும்,**
**எதுகை இன்றித் தனித்தனி சேர்த்தும்**
**காதை அம்மானை கழறினர் சிலரே.**

கலிப்பாவின் பாதிப்பாதிப் பாடல்களைத் தொகுத்தும், அப்படியுமின்றித் தனித்து வந்த கலிப்பா அடிகளைத் தொகுத்தும் வரலாற்றம்மானை சிலரால் கூறப்பட்டது என்றவாறு.

கலிப்பா அரை என்றது ஓரெதுகைத்தாய இரு கலிப்பா அடிகளை; தனித்தனி என்றது முதலடியோடுஎதுகை கொள்ளாமல் அமைந்த அடிகளை. பாண்டவர் வனவாசம், நல்லதங்காள் கதை, அல்லியரசாணி மாலை என வழங்குவன இத்தகைய காதை அம்மானைகள் ஆகும். (430)

**32. கொச்சகச் சீர்கொடு கூறும்அம் மானை**
**இழிவினது ஆகும்என்று இசைப்பது துணிவே.**

1 குன்றக்குடிக் கலம்பகம் 35

கொச்சகக் கலிப்பாவைப் போலப் பாடப்படுகின்ற அம் மானை இழிந்ததாம் எனத் திண்ணமாய்க் கூறலாம் என்ற வாறு.

கொச்சகச் சீர் என்றது கலித்தளையால் வருவதனை. அம் மானை எப்போதும் வெண்டளையாலேயே வரவேண்டும். கலி வந்தால் இழிவு என்கிறார். (431)

### கட்டளைக் கலித்துறை

33. ஈரசை மூன்றசைச் சொற்கள்மிக்கு அணைந்தும்
ஒவ்வோர் ஈற்றில் தேமாந் தண்பூப்
புளிமாந் தண்பூப் புணர்ந்தும் ஐஞ்சீர்
ஆவதோர் அடியாய், நாலடி உடைத்தாய்
ஈற்றில் ஏஎன முடிவது கட்டளைக்
கலித்துறை யாம்எனக் கழறுதல் முறையே.

ஈரசை மூவசைச் சீர்களை மிகுதியாகப் பெற்று ஈற்றுச் சீர் சில இடங்களில் மட்டும் தேமாந்தண்பூ அல்லது புளிமாந் தண்பூ என்ற நான்கசைச் சீராக வரும் ஐஞ்சீரடிகள் நான்கு ஏ என முடிந்தால் அது கட்டளைக் கலித்துறை எனப்படும் என்றவாறு.

கட்டளைக் கலித்துறை வெண்டளையால்அமைய வேண்டும் என்பது அதிகாரத்தாற் பெற்றாம். இப்பாவின் எழுத்து வரை யறை அடுத்த நூற்பாவில் கூறப்படும்.

பெரும்பாலான கட்டளைக் கலித்துறையடிகள் காய்ச்சீரா லேயே முடியும். எனினும் மிகச்சிறுபான்மை அங்கு நான்கசைச் சீரும் பயின்றுவருதல் உண்டு.

செந்தமிழ்ப் பாடற் புலவோ ரநேகர் தினம்பரவும்
கந்தனைத் தென்பழ னாபுரிக் கோயிலில் காணப்பெற்றால்

அந்தரத் தோரும் முனிவோரும் மோகிப்ப தன்றியெழில்
மந்தரக் கொங்கை மடவாரும் ஆசிப்பர் மட்டறவே.[1]

இதன்இரண்டாமடியின்ஐந்தாஞ்சீர் தேமாந்தண்பூவந்தது காண்க.இவ்வாறு மிகஅருகியே வரும் என்பதனால் ஒவ்வோரீற்றில் என்றார். இனி உரையிற்கோடலாக நான்கசைச் சீர்களாக வருவதன்றி வஞ்சியுரிச்சீரும் வரப் பெறும் என்க. இது நான்கசைச் சீர்களைவிடச் சற்று அதிகமாகவே பயின்றுவரும்.

கோணாமல் ஈபவர் தம்மையும் காட்டிக்கொடுப்ப தின்றி
நாணாதுஎன் பாமிக வேண்டுகின் றாய்இதோர்
ஞாயங்கொலோ?
ஆணாகிப் பெண்ணுரு வாய்அலி யாகி அமரர்என்றும்
சேணாட்டில் வாழ அமுதூட்டி யாண்ட திதித்
தெய்வமே.[2]

இதில் இரண்டாம் அடியின் ஈற்றில் தேமாங்கனியும், ஈற்றடியில்புளிமாங்கனியும் வந்தன. (432)

**34.** **நேர்எனத் துவக்கலும் நிரைஎன எடுத்தலும்**
**ஆய கட்டளைக் கலித்துறைக்கு இடைவரும்**
**மெய்தவிர் எழுத்தின் தொகைபதி னாறும்**
**அவற்றொடுஒன்று அணுகலும் ஆம்எனப் பகரினும்**
**சுவையறி வில்லாத் துகளுறு மனத்தினர்**
**நெடில்குறில் அமைவுறும் நிலைபிறழ்வ அதனால்**
**கீழ்மை தோய்வுறக் கிளத்தலும் உளவே.**

நேரசையில் தொடங்கும் கட்டளைக்கலித்துறை அடி ஒன்றிற்கு ஒற்று நீங்கப் பதினாறு எழுத்துகளும், நிரையசைக்குப் பதினேழும் வரவேண்டும். இவ்வாறு ஓரடியின் எழுத்து வரையறை கூறப்பட்டாலும் பாக்களின் ஓசை நயத்தை உணரமுடியாத குறைமதியாளர் நெடில், குறில், வல்லொற்று இவற்றின்

1 பழனித்திரு அலங்காரம் 33
2 திருமால் ஆயிரம் 113

இடமுணர்ந்து பயன்படுத்தாமல் இப்பாவிற்குரிய ஓசை தோன்றாத வண்ணம் அமைத்துத் தரங்கெடப் புனைவதும் உண்டு என்றவாறு.

வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய இரண்டும் வெண்டளை பெற்றுச்செப்பலோசையில் வரவேண்டும். செப்பலோசை என்பது இயல்பாகவும் பெருமுயற்சியின்றியும், ஆற்றொழுக்காகவும் அமைகின்ற ஓசையாகும். இது இவரால் வேறிடத்தே, 'வெண்பாக் கட்டளைக் கலித்துறை என்னும் இவற்றின் தளையிடை ஏகதேசம் வண்ணப்பாவிற் றய்ய தன்னவே தனவர்ம் சொல்லின் நேர்நேர் நிரையா வரும்அவை உணரா மருண் மனப் புலவோர் வல்லொற் றொருவியும் வகுப்பார் பிழையே''[1] எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் கட்டளைக் கலித்துறையில் வல்லொற்றுகள் மிக அதிகமாகவோ நெருங்கியோ இருக்கக்கூடாதென்பதும், குறில்நெடில்கள் அடுத்தடுத்து அதிகமாக வரக்கூடாதென்பதும் தெளிவாகிறது. அங்ஙனம் வந்தால் இயல்பான செப்பலோசை அழிதல் கண்கூடு. ஓர் உதாரணம் காண்போம்.

இந்தப் புவிக்கிடை கற்றுச் சிறந்தோங்கும் ஏற்றத்தினில்
எந்தற் கெதிர்ப்பவர் யாரும் உளரோ எனச்செருக்கும்
சொந்தக் கனாவினால் பூரிப்போர் கண்டு தொழலரிதாம்
சிந்தை யமுதாய் இலங்குந் தமிழ்த்தாய்த் திருவடியே[2]

இதன் நான்கு அடிகளும் வெண்டளையும், பதினாறெழுத்துக் கட்டளையும், எதுகை மோனையும் பெற்று வந்தனவே. ஆனால் முதல் மூன்று அடிகளில் இயல்பான கட்டளைக் கலித்துறை யோசை வரவில்லை. எனவே இது கட்டளைக் கலித்துறை ஆகாது.ஈற்றடி ஒன்று மட்டுமே நன்கமைந்த கட்டளைக் கலித்துறை அடியாகும். இவ்வோசைநயம் மிகுதியான இலக்கியங்களை முறையோடு கற்றால்தான் மனதிற்பதியும். இவ்வேற்றுமையை அறிய முடியாதவரே 'துகளுறுமனத்தினர்' எனவும், 'மருண்மனப் புலவோர்' எனவும் இவரால் குறிக்கப்பெற்றனர்.

1 ஏழாம். இலக்.-273

2 உரையாசிரியரின் உதாரணச்செய்யுள்

### கலிநிலைத்துறை

**35. காய்வரும் மூன்றசை கலந்துஐந்து ஆகியும்**
**ஈற்றுச் சீர்கனி யாகியும் வரும்அடி**
**கலிநி லைத்துறைக்கு என்றனர் கற்றோர்.**

மூன்றசைச் சீர் ஆகிய காய்ச்சீர்கள் நான்கும், ஐந்தாவதாகிய ஈற்றுச் சீர் கனிச்சீராகவும் பெற்று வரும் நான்கடிகளாலான பா கலிநிலைத்துறை எனப் பெயர் பெறும் என்றவாறு.

இவர் கூறும் கலிநிலைத்துறை விருத்தப்பாவியல் உடையாரால் சந்தக்கலித்துறை எனப்பட்டது. அவர், "நீளாத உயிரீற்றின் ஓரைந்து மாங்காய்பின் நீடக்கரத் தாளால்உ தித்திட்ட மாங்காய்க்க விக்காய சந்தத்துறை ஆளாத கவியல்ல அழகார்ப சுங்கிள்ளை அனமேஎனும் வாளாய மைக்கண்ண டங்காமு லைக்குன்று மடமங்கையே"[1] என்கிறார். இதிலிருந்து முதல் நான்கு சீர்களும் குற்றெழுத்தால் முடியவேண்டும் என்பது தெளிவாகிறது. மேலும் இப்பாவில் பெரும்பாலும் ஓர் எழுத்து வகையுளியாகத் தள்ளி வந்தால் சந்த இன்பம் மிகும். எடுத்துக்காட்டு வருமாறு:-

அயில்வேல்எ டுத்தம்பொன் மயிலேறி
யென்நெஞ்ச கத்தெய்தியே
வெயில்மேய புழுவில்து டிக்கச்செய்
வினைநோயின் வேர்கெல்லுவாய்
கயிலாய மலைநாதர் புதல்வாநல்
வயலூர்க்க ருஞ்சோலைசூழ்
சயிலாதி பா!கீரன் முதலோர்தொ
டுக்குந்த மிழ்ச்செல்வனே.[2]

நான்கு காய் ஒரு கனி சேர்ந்து ஓரடியாகும் வேறொரு யாப்பும் உண்டு. "முக்குறிலி னிற்றளவு பத்தரைய தாகிவரு மூன்றினிடனீ டக்கரமு மற்றொரிரு காயுமுடை தாளினையு மாய்ந்தறிகவே மிக்கவரு ரைத்தகவி யாகுமென வன்னநடை

---

1 விருத்தப்பாவியல் 8-6

2 பழனித்திருவாயிரம்-நவமணிமாலை 14

மின்னிலிடையே செக்கரர விந்தவத னக்கரிய கூந்தலொளி செய்யதிருவே''1 என்பது அதன் இலக்கணம். இலக்கியம் வருமாறு:-

மாடகமு றுக்கியிசை பாடுமுனி
நீடுபிணி மாற்றுமுறைமை
நாடியுரை செய்தலும கிழ்ந்துகழன்
மன்னவன யந்துபணியா
கூடியந லன்பினது கூறுவன
ருந்தவக தம்பநகரில்
பீடுறவி ருந்தபெரு மானையெவர்
பூசனைகள் பேணினர்களே.[2]

இதனால் நான்கு காய்களும் ஒரு கனியும் வந்தவையனைத்தும் கலிநிலைத்துறை ஆகாமை காண்க. (434)

**36. கட்டளைக் கலித்துறை கலிநிலைத் துறைஎனும்**
**இவற்றின் மோனைக்கு ஈற்றுச் சீர்இசைவு**
**என்றுபல் புலவோர் இயம்பினர் அன்றே.**

கட்டளைக் கலித்துறை, கலிநிலைத்துறை ஆகிய இரு யாப்பிற்கும் கடைசிச் சீராகிய ஐந்தாம் சீரே மோனை நிற்றற்குப் பொருத்தமானது என்பதால் பல கவிஞர்களும் அவ்வாறே பாடினர் என்றவாறு.

ஐந்தாம் சீரில் மோனை அமைப்பது ஐந்தசைச் சீர்களாலாகிய நெடிலடிகள் அனைத்திற்கும் பொருந்தும். (435)

## வஞ்சிவிருத்தம்

**37. ஈரசைச் சீர்மூன்று இரண்டுஇசைந்து ஓர்அடி**
**வருவன வஞ்சி விருத்தம் ஆமே.**

ஈரசைச் சீர்கள் மூன்றோ அல்லது இரண்டோ சேர்ந்து ஓரடியாகிய நான்கு அடிகளால் வருவன வஞ்சிவிருத்தம் ஆம் என்றவாறு.

---

1 விருத்தப்பாவியல் 8–9

2 விநாயக புராணம்-இந்திரன் சாபம் பெற்ற படலம் 1

இருசீரடியான் வருவது வஞ்சித்துறையென்றும், முச்சீரான் வருவதே வஞ்சிவிருத்தம் எனவும் கூறப்படும். "சிந்தடி நான்காய் வருவது வஞ்சியது எஞ்சா விருத்தம் என்மனார் புலவர்."[1] "துன்னும் குறளடி நான்கு வஞ்சித்துறை; சிந்தடி நான்கு உன்னும் விருத்தம்: துறை மூன்று ஒரு பொருள் தாழிசையாம்"[2] என்பன இவற்றின் இலக்கணங்களாம். இவர் வஞ்சித்துறையையும் விருத்தம் எனவே கொள்வதாகத் தோன்றுகிறது. இவர் பாக்களைத் துறை, விருத்தம், தாழிசை எனப் பாகுபாடு செய்துகொள்ளவில்லை. பல யாப்புகளை இலக்கியங்களைக் கண்டு தெளிந்துகொள்ளுமாறு விட்டுவிடுகிறார். இஃது இந்நூல் 446, 447 ஆம் சூத்திரங்களில் கூறப் பட்டும் உள்ளது.

சிந்தடி வஞ்சி விருத்தம் வருமாறு:-

ஆர மைந்தவி ரண்ணல்பே ரூர மைந்தவு ளத்தினர்
தார மைந்தர்ச ளந்தொடாச் சீர மைந்தமெய்ச்
சித்தரே.[3]

குறளடி வஞ்சி விருத்தம் (வஞ்சித்துறை) வருமாறு:-

வாய்ந்த பேரையூர் ஏய்ந்த வீசர்தாள்
தோய்ந்த சிந்தையார் மாய்ந்தி டார்களே.[4] (436)

## கலிவிருத்தம்

**38. நாற்சீர் ஓர்அடி யாம்கவி சிற்சில**
**கலிவிருத் தங்கள்ள னக்கவின் தருபவே.**

நாற்சீர்களானியன்ற அளவடிகளால் அமைந்த சில யாப்பு வகைகள் கலிவிருத்தங்களாக விளங்குகின்றன என்றவாறு.

கலிவிருத்த வகைகள் ஒன்றிற்கு மேற்பட்ட தாதலின் சிற்சில என்றார். சில உதாரணங்கள் வருமாறு:-

---

1 யாப்பருங்கலம் 92
2 வீரசோழியம் 125
3 திருப்பேரூர்க்கலம்பகம் 77
4 ,, ,, 76

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.[1]

நிரை நேரில் தொடங்கி அடிக்கு முறையே 12, 11 எழுத்து வருமாறு மா, கூவிளச் சீர்கள் நான்கு வந்த வகை.

நீதியி லாநெறி யெண்ணினை நீயிங்
கோதிய வாய்மையி னுறுபொரு ளின்றால்
ஆதப ராயவ ரைவரும் நீரும்
மேதினி யாளுதல் வேத்தியல் பென்றான்.[2]

மூன்று விளம் ஒருமா ஓர் அடியாக வந்த வகை.

கோவையு முலாவுமந் தாதிக் கூட்டமும்
தேவரூண் சிவனுறச் செப்பி னானெனப்
பாவைமிக் குணர்சிலர் பகரக் கேட்டுளேன்
நாவைவேட் டுறைமினா ணன்கு தேர்வளே.[3]

விளம் விளம் மா விளம் ஓர் அடியாக வந்த வகை.

தாந்தம் பெருமை யறியார் தூது
வேந்தர்க் காய வேந்த ரூர்போல்
காந்தள் விரன்மென் கலைநன் மடவார்
கூந்தல் கமழுங் கூட லூரே.[4]

அனைத்தும் மாச்சீர்களாக வந்த வகை.

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.[5]

---

1 கம்பர். கடவுள் வாழ்த்து
2 வில்லி. வாரணாவதச்.100
3 புலவர். ஒட்டக். 27
4 பெரிய திருமொழி
5 கந்தரநுபூதி 1

வெண்டளை பயின்று வந்த 'திருமந்திர' வகை. இவ்வாறே பிறவும் உள. வந்துழிக் கண்டு கொள்க. (437)

**39. ஈரசைச் சொற்கள் ஐந்துஓர் அடியாய்
வரும்கலி விருத்தமும் மாநிலத்து உளவே.**

ஈரசையாலாகிய சீர்கள் ஐந்தைப் பெற்று வருகின்ற நெடிலடியால் நடக்கும் கலிவிருத்தங்களும் புலமை உலகில் உள்ளன என்றவாறு.

நெடிலடியாலான கவிகளைக் கலித்துறை என்பர் இலக்கணிகள். "நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை"[1] என்பது யாப்பருங்கலம். வஞ்சியிற் போலவே இவ்வாசிரியர் இங்கும் துறை, விருத்தம் என்னும் ஈரினத்தையும் ஒன்றாகவே கொண்டுள்ளார்.

நெடிலடியான் வந்த கலிவிருத்தங்கள்:- (கலித்துறைகள்)

கள்ள மின்றிய திருவருட் புலவர்வாய்க் கவியும்
வள்ள லாமெழு மூவரும் வழங்குகைக் கொடையும்
எள்ளல் தீர்சிவ யோகியர் தொகையுமே இணையாக்
கொள்ள நீர்மழை பொழிந்தன பாரெலாங் குளிர.[2]

மா, மூன்று விளம், மா வந்த வகை. இதுவே மிக அதிகமாகப் பயில்கிறது.

அம்மா ணகருக் கரசன் னரசர்க் கரசன்
செம்மாண் டனிக்கோ லுலகே ழினுஞ்செல் லநின்றான்
இம்மாண் கதைக்கோ ரிறையா யிவரா மனெனும்
மொய்ம்மாண் கழலோற் றருநல் லறமூர்த் தியனான்.[3]

ஐந்து மாச்சீர்கள் வெண்டளையிற் புணர்ந்த வகை. அளவடி நெடிலடிகளால் வருகின்ற பாவினங்களுள் மூவசைச்சீர் கலந்து

---

1 யாப்பருங்கலம் – 88
2 திருவாமாத்தூர்ப்புராணம் – தீர்த்தச்சிறப்பு 6
3 கம்பர்.பால.அரசியல் 1

வருபவை பற்பல உள்ளன. இங்கு ஈரசைச்சீரே கூறப்பட்டமையின் அவை காட்டப்பெறவில்லை. (438)

## எண்சீர் வகைகள்

**40. கலிவிருத் தம்சில இரட்டித்து எண்சீர்**
**விருத்தம், கட்டளைக் கலிப்பா, சிறுநிலைத்**
**தாழிசை வரும்எனச் சாற்றிடத் தகுமே.**

முன் கூறப்பட்ட அளவடிக் கலிவிருத்தங்கள் இருமடங்காகி எண்சீர் விருத்தம், கட்டளைக் கலிப்பா, குறுந்தாழிசை என்ற வடிவங்கள் ஆகும் எனலாம் என்றவாறு.

இரட்டித்து எண்சீர் என்றதனால் நெடிலடி நீக்கப்பட்டது.

விதிவ ழாதபல் லுறைப்புடை மறையின்
மிக்க தாருகா யத்திரி யதனின்
அதிக மஞ்சமா மந்திர மதனின்
ஆறி ரெண்டெழுத் ததனினெட் டெழுத்தாம்
பதியு மேன்மையெட் டெழுத்தினஞ் செழுத்துக்
கோடி கோடிமேம் பட்டதஞ் செழுத்தின்
அதிலு மேகம்ப நாதமா மனுத்தான்
நூறு கோடியின் மிக்கதென் றுணர்வீர்[1]

மா, விளம், விளம், மா கூடி இரட்டித்த எண்சீர் வகை.

குந்தியங் கொருதினங் கைதொழற் கிரங்கிக்
கூடியக் கணம்பெருங் கொடைமகற் பயந்தாய்
செந்திரு நாயகன் சிவன்முதற் பலரும்
செறிகைநின் னிடையெனுஞ் சீர்த்திசத் தியமேல்
பந்திய பசுக்கொலைப் பாதகர் குலவேர்
பறித்திடக் கருதெனைப் பார்த்தறி யாயோ?
கந்திவண் பொழில்திரு நெல்லையில் தமியேன்
கருதிய பயன்பெறக் காணுதி விரைந்தே[2]

---

1 காஞ்சிப்புராணம்–திருவேகம்பப்படலம்

2 ஞாயிறு ஆயிரம் 329

மூன்று விளம் ஒருமா இணைந்து இரட்டித்த எண்சீர் விருத்தம். இவை போல்வன வேறு சிலவும் உள. வந்துழிக்காண்க.

தவள வாரண னாதிய தேவர்போல்
தகுவர்க் கஞ்சித் தயங்குவை யென்றுனைப்
புவனி யிற்பலர் சொல்கையி லென்மனம்
புலருந் துன்பமும் போக்கவெண் ணாய்கொலோ?
குவடு மூன்று பறித்தெறிந்து ஆடகக்
குன்றும் நாகர்தம் கோனும்ஒல் கச்செயும்
பவனன் மைந்தனுக்கு ஒன்பதுஇ லக்கணப்
பண்பு கூறிய பாற்கர மூர்த்தியே.[1]

இது கட்டளைக் கலிப்பா. நேர், நிரையில் தொடங்கும் அடிகளுக்கு முறையே பதினொன்று, பனிரெண்டு எழுத்துகள் வந்தன.

உண்டுண் டுதுயின் றெழுமூ ரவருக்
குறவா கியுழன் றுமுயன் றுபொருட்
கொண்டுண் கண்மடந் தையருக் கருள்வோர்
குன்றக் குடியிற் குறுகப் பெறினும்
வண்டுண் டகடம் பணியும் புயவேள்
மறவிக் குமதப் பயலுக் கும்வெறும்
புண்டுன் றுதலைப் பிரமற் குமனம்
புலரப் பொருமற் புகழைத் தருமே.[2]

இது வெண்டளை பெற்ற கலிவிருத்தம் இரட்டியது. இதன் ஓசை விகற்பத்தால் இந்த நூலாசிரியரால் தாழிசை எனப்படுகிறது.

சென்னி யாறுடைச் சிவகு ருப்பிரான்
செங்கை வேல்வலித் தீர வேள்குறக்
கன்னி தாடொழத் துணியு மோகனக்
கள்வ னெம்பெருங் கடவு ளென்றறிந்

1 ஞாயிறு ஆயிரம் 209
2 குன்றக்குடிக்கலம்பகம் 47

தென்னி னைப்பெலாம் முற்ற நாடியே
எழில்கு லாவுதென் பழனி வெற்பினிற்
பன்னி டுந்துதிப் பரிச தெய்திடிற்
படியும் வானமும் பரிவு திருமே.[1]

மா, விளம் மாறிமாறி நான்கு முறை வந்த குறுந்தாழிசை.

**அறுசீர், எழுசீர் வகைகள்**

**41. ஈற்றில் ஓர்அசை யீரசை நிற்கும்**
**பேதம் பற்றியும் காய்ச்சீர் விரவியும்**
**அறுசீர் எழுசீர் விருத்தப் பகுதியும்**
**சிற்சில தாழிசைப் பகுதியும் வருமே.**

ஓர் அடிக்கு ஆறு சீர்களாக நான்கடிகள் அளவொத்து வருவன அறுசீர் விருத்தமாகும். இவ் வறுசீரின் இறுதியில் ஓரசையோ, ஈரசைச் சீரோ, காய்ச்சீரோ சேர்ந்து எழுசீர் விருத்தங்கள் உண்டாகும். அறுசீர், எழுசீர் இரண்டும் சிற்சில இடங்களில் தம் ஓசைவிகற்பத்தால் தாழிசைகள் எனவும் பெயர் பெறும் என்றவாறு.

விளம், மா, தேமா இரட்டித்து வருவது; மா, விளம், மா, விளம், விளம், மா என வருவது; ஆறு சீர்களும் மாச்சீர்களே வருவது; ஐந்து மா ஒரு விளம் வருவது எனப்பலவகையான அறுசீர் விருத்தங்க ள்காணப்படுகின்றன. இவையேயன்றிக் காய்ச்சீர்களும் இயற்சீர்களும் கலந்து வருவனவும் உண்டு.

அறுசீர் விருத்தத்தின் ஈற்றில் ஓர் அசை சேர்ந்ததையே (அவ்வசையைத் தனிச்சீராகக் கருதி) எழுசீர் விருத்தம் என்பர். எடுத்துக்காட்டு வருமாறு:-

சரவ ணத்தடத் துருவமா யினும்பல
சயிலமும் மனம்நாணும்
உரனு டைப்பழ னித்திரு மலைமுகட்
டொளிர்திரு வுருவேனும்

---

1 பழனித்திருவாயிரம் - கலம்பகம் 11

கரவி லீசனு முமையுமால் விடைமிசை
காண்டொறும் நடுத்தோற்றும்
வரத நல்லுரு வாயினும் கருதுநர்
மகத்துவத் துயர்ந்தோரே.[1]

இது ஒரு மா, நான்கு விளம், ஒரு காய் சேர்ந்த அறுசீர் விருத்தம் ஆகும். இதனையே ஈற்றுச் சீரைக் காயாகக் கொள்ளாமல் மாச்சீர் ஒன்று நேரசை ஒன்று என இரண்டாக்கி எழுசீர் விருத்தம் என்பாருமுளர். இது போல்வனவற்றையே இந்நூற்பா, 'ஈற்றில் ஓரசை நிற்கும் பேதம்' எனக்குறிப்பிடுகிறது.

இனி எழுசீர்களைக் காண்போம். விளம், மா, விளம், மா, விளம், விளம், மா என வருவது; ஆறுமா ஒரு விளம் வருவது; மா, விளம், மா, விளம், மா, விளம், விளம் என வருவது போன்று இயற்சீர்களாலமைந்த எழுசீர் ஆசிரிய விருத்தங்கள் ஆட்சியில் உள்ளன. இயற்சீர்களோடு காய்ச்சீரும் கலந்து வருவனவும் சிற்சில உண்டு. அவ்வாறு வருவன யாவும் விருத்தங்களே.

இவ்வாசிரியர் சில குறிப்பிட்ட ஓசை பெற்று வரும் பாவகைகளைத் தாழிசை என்பார். வண்ணக் குழிப்பிற்கு அமையாமலும் அதே சமயத்தில் ஓர் ஓசைக்கட்டளை பெற்றும் வருவனவற்றைத் தாழிசை என்கிறார். எடுத்துக்காட்டு:-

பொறைமதி மாதவர் பேரையு ளார்அணை
போதநி னைந்தயரென்
னிறைமதி யாயொரு நிறைமதி யானென
நெஞ்சில கந்தைகொள்வாய்
குறைமதி யாயுறை கறைமதி யாய்வெண்மை
கொண்டும கிழ்ந்தனையால்
இறைமதி யாயொரு பாதிய தென்னவி
சைத்திடு கூற்றினையே.[2]

---

1 பழனித்திருவாயிரம் - கலம்பகம் 6

2 திருப்பேரூர்க்கலம்பகம் 63

இது அறுசீர்த்தாழிசை.

கருநாட தேய முழுதும்பு ரந்து
கனவண்மை யுற்ற வரசன்
பொருவாத வீர சைவத்து ளார்கள்
போற்றச்சி றந்த புனிதன்
திருவார்கு மார தேவப்பெ யர்ச்சு
சீலன்சி வன்ற னருளால்
ஒருதாய்வ யிற்று ழைையாத முத்தி
உறுமாறு நாடி னனரோ.[1]

இது எழுசீர்த்தாழிசை. (440)

**42. அறுசீர் எழுசீர் இரட்டிய விருத்தப் பகுதியும் தாழிசைப் பகுதியும் உளவே.**

அறுசீர் விருத்தங்களும் எழுசீர் விருத்தங்களும் இரட்டித்து முறையே பன்னிரு சீர், பதினான்கு சீர் ஆசிரிய விருத்தங்களாக வரும். இவ்வாறு பன்னிரண்டு, பதினான்கு சீர் பெற்றவற்றுட் சில தம் ஓசை விகற்பத்தால் தாழிசைகள் எனப்படும் என்றவாறு.

பன்னிரு சீர், பதினான்கு சீர் ஆசிரிய விருத்தங்கள் நன்கு அறியப்படுவனவே. இவர் தாழிசை என்பதற்கு உதாரணம் வருமாறு: –

மலியுங் கருணை விழியான் வானோர் பரவு பெருமான்
வடிவேன் முருகக் கடவுண் மயில மலைச்சண் முகவேள்
ஒலிதங் கியதிண் கழல்சேர் உபய சரணங் கருதி
உருகித் தொழுமெய் யடியார்க் குரிய பணிகள் புரிவார்
கலியை மதனை விதியைக் காலன் றனையுண் மதியாற்
கவலைக் கடலிற் சுழலார் கமழ்செந் தமிழ்முற் றுணர்வார்

1 புலவர். குமாரதேவர் – 1

புலியைக் கரியை யுரித்தார் போலுஞ் சிலரைப்பணியும்
புனிதச் சமயம் ஆறும் புகழத் திகழ்கின் றவரே.[1]

இது பெரும்பாலும் வெண்டளை பெற்றுவந்த பன்னிருசீர்த் தாழிசை.

தாதி மாரைவிடு தூது தீதுமிகு
தன்மை கொண்டதென உன்னியே
தத்தை தன்னைவிடி லுற்ற பச்சையுமை
தன்க ரக்கிளியொ டாடுமே
ஓதி மந்தனைவி டுக்கின் முன்பகர்பொய்
ஓதி மந்தனைநி கர்க்குமால்
ஓர நாரைகொள்வி கார மார்குரலி
னோடு ரைத்தலின டாததாம்
போதி லொன்றுமளி தேன ருந்தியுறு
போத மங்கழியு மேகமோ
போயி ணங்குசடை யூடி சைந்துதடை
பூணு மிங்கெவரை ஏவுவேன்
ஆதி யந்தமுற யானு றுந்துயர்கள்
ஆன நன்கறியெ னெஞ்சமே
ஆத ரம்பெருகு பேரை நம்பர்கடி
தாக வந்திடவி யம்பிடே.[2]

இது மா, காய் மும்முறைவந்து ஏழாவதாக விளம்பெற்று இரட்டித்த பதினான்குசீர்த்தாழிசை. (441)

### 43. ஐஞ்சீர் மேல்வரும் விருத்தம் பலவும் ஆசிரி யங்கள்என்று அறைவார் பலரே

ஐந்து சீர்களால் வரும் நெடிலடிக்கு மேற்பட்ட கழிநெடிலடிகளால் வரும் விருத்தங்களைப் பல புலவர்கள் ஆசிரிய விருத்தங்கள் என்று கூறுவார்கள் என்றவாறு.

1 மயிலாசலக் கலம்பகம் 92
2 திருப்பேரூர்க் கலம்பகம் 86

சீர்களின் எண்ணிக்கையால் அடிகள் பெயர் பெறுதலை இவ்வாசிரியர் எங்கும் கூறவில்லை. எனினும் அதில் நன்கு பழக்கப்பட்டவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக உரையில் அப்பெயர்கள் ஆளப்படுகின்றன. (442)

### வேற்றொலி வெண்டுறை

**44. ஈரடி பேதித்து இசையும்நா லடிப்பா**
**வேற்றொலி யாமென விளம்பினர் சிலரே.**

முதல் இரண்டடிகளும், அடுத்த இரண்டு அடிகளும் ஒரே யாப்பால் அமையாது வேறுபட்டுள்ள நான்கு அடிகளை உடைய பாவினம் வேற்றொலி எனப்படும் என்றவாறு.

வேற்றொலி வெண்டுறை நாலடிப்பாவாகத்தான் இருக்க வேண்டும் என்ற விதி பிற இலக்கணங்களுள் கூறப்படவில்லை. மூன்றடியிலிருந்து ஏழடி வரையிலும் அடிகள் வரலாம்' 'மூன்றடி முதலா ஏழடி காறும்வந்து ஈற்றடி சிலசில சீர்குன்றினும் அவை வேற்றொலி விரவினும் வெண்டுறை''[1] என்பது தான் இதன் இலக்கணம். எனினும் இவராலியற்றப்பெற்ற ஆறு கலம்பகங்களிலும் வேற்றொலி வெண்டுறை நாலடிகளையே கொண்டுள்ளது. எடுத்துக்காட்டு:-

சற்குருவா மவர்பலரிற் றலைமைபெறு
பழனிமலைத் தண்ட பாணி
நிற்குநிலை யுணர்ந்தவன்றன் எழுத்தாறுஞ்
சந்ததமும் நிகழ்த்த வல்லார்
கற்கும்நா வலர்பெருங் கருணை மாதவர்
விற்குனித் தமர்செயும் விறற்கை வீரரே.[2] (443)

**45. அடிதொடை கூடியும் குறைந்தும் பிறழ்ந்தும்**
**வருவன வெண்டுறை யாம்என்று அவற்றிற்கு**
**இயைந்ததோர் பெயரே இட்டனர் புலவோர்.**

---

1 இலக்கணவிளக்கம் - 731
2 பழனித்திருவாயிரம் - கலம்பகம் 42

அடிகளும் சீர்களும் தம்முள் ஒவ்வாமல் அதிகமாகவும் குறைந்தும் வருவனவும், ஒரு செவ்விய வடிவமில்லாமல் மாறி வருவனவுமாகிய பா வெண்டுறை ஆகும். புலவர்கள் இதற் களித்த பெயர் சாலப்பொருத்தமாம் என்றவாறு.

வெண்மை என்பது அறியாமையைச் சுட்டும். வெள்ளைச் சொல், வெள்ளறிவு போன்றவை காண்க. நான்கு அடிகளை ஒரே ஓசை வர ஆற்றொழுக்காக இயற்ற அறியாதவரால் இயற்றப்பட்ட பா வெண்துறை ஆயிற்று. இங்குப் பாடியவரின் அறியாமை பாவின் மேல் ஏற்றப்பட்டது. முட்டாள்தனமான வார்த்தை என்ற உலக வழக்கைப்போல. இவ்வாசிரியர் பாவினங்களின் வடிவத்தில் ஓர் ஒழுங்கும், கட்டுக்கோப்பும் இன்றியமையாமல் இருக்க வேண்டும் என்பதில் உறுதியுடைய வர். ஒரே கவியில் அடிகளையும் சீர்களையும் கூட்டியும் குறைத்தும் ஏன் பாடவேண்டும் என்பது இவர் வினா? இத னால்தான் இவர் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாப் போன்ற சில பழமையான பா வடிவங்களைக் கூடத் துணிந்து எள்ளி நகையாடுகிறார். இஃது அடுத்த நூற்பாவால் விளங்கும். (444)

**மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**

**46. கொச்சகத் தடிசில இரட்டித்து அணைந்தபின்**
**குறிலே நிரைபடும் சிலசீர் தோய்ந்து**
**முற்படு பகுதியே மறுத்தும் தோன்றியும்**
**இருசீர் முச்சீர் நாற்சீர்ப் பாவொன்று**
**ஒன்றே நின்றுபின் தனிச்சொல் உற்றும்**
**பின்நிலை மண்டில அகவலா முடிக்கும்**
**அஃதையும் ஒருநூல் அணிமுகத்து அமைத்தற்கு**
**ஒப்பிய மனுத்திரள் வேறொரு விதமாய்த்**
**திரித்துஇது கொங்கணி மங்கணிப் பாட்டென்று**
**இயம்பினும் ஆமாம் என்னும்; ஆதலின்**
**சுவைமிகத் தொடுப்பவை அனைத்தும் நலமே.**

கொச்சகக் கலிப்பாவின் அடிகள் சிலவற்றை இரட்டைப் படை எண்பெற அமைத்தபின் (தரவு), குற்றெழுத்துகளா லேயே நடக்கும் சில சீர்களையும் சேர்த்து (அராகம்), முன்

வந்த கொச்சகப்பகுதியையே மறுபடியும் இணைத்து(தாழிசை) இருசீர் ஓரடி, முச்சீர் ஓரடி, நாற்சீர் ஓரடியாயமைந்த உறுப் பைக்கூட்டி (அம்போதரங்கம்), பிறகு ஒரு தனிச்சொல் வர, ஈற்றில் நிலைமண்டில ஆசிரியப்பாவைக் கொண்டு (சுரிதகம். பிறர் நேரிசை என்பதை இவர் நிலை மண்டிலம் என்பார்.) ஒரு பா முடிகிறது. (இவ்வாறு தொடர்ந்த ஓசை நயமோ, யாப்பமைதியோ இல்லாததாகிய) இம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவையும் கலம்பகமாகிய ஒரு பிரபந்தத்தின் முதற் பாட்டாக அமைக்கவேண்டும் எனச் சம்மதித்த மக்கட் கூட் டம் வேறு வகையாக, மனம் போனவாறு எல்லாம், யாப்பு வடிவங்களைக் கூட்டியும் குறைத்தும் இயற்றி, அதற்குக் கொங்கணி மங்கணிப்பாட்டு என்று பேரிட்டால் ஆமாம் என ஏற்றுக்கொள்ளும். எனவே கவியின்பம் தோன்றப் புனையப் படுபவை அனைத்தும் நல்ல பாடல்களே என்றவாறு.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவைச் சிறந்ததாக ஏற்றுக் கொண்டவர்கள் புலவர்களல்லர்; பாமரரே எனக் கூறுவதற் காக மனுத்திரள் என்றார். மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாப் போன்றனவற்றையே இவர் கொங்கணிமங்கணிப்பாட்டு என நகையாடுகிறார். இதில் முற்றிலும் பொருள் இல்லாமலும் இல்லை. யாப்பருங்கலம் 82–ஆம் நூற்பாவில் கடையளவு அம் போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாப் பெருந்தேவபாணியாகக் காட்டப்பட்ட பாடலின் தரவும், தாழிசையும் வருமாறு:–

கடையில்லா அறிவோடு ஞானமும் காட்சியும்
உடையையாய் உலகேத்த ஒண்பொருள தியல்புணர்ந்து
மறவாழி இறையவரும் மாதவரும் புடைசூழ
அறவாழி வலனுயரி அருணெறியே அருளியோய்!

(இது தரவு)

வினையென்னும் வியன்பகையை வேரோடு முடன்கீழ்ந்து
முனைவர்கள் தொழுதேத்த இருப்பதுநின் முறைமையோ?
பொருளாடல் புரியீரேல் புகர்தீரும் எனவருளி
மருளானா மணியணைமேல் மகிழ்வதுநின் மாதவமோ?

வேந்தற்கும் முனைவற்கும் விலங்கிற்கும் அருள்துறவாத்
தோந்திரத் துறந்தநின் துறவரசும் துறவாமோ?[1]
(இவைதாழிசை)

தரவும் ஈரடிக் கலிப்பா அடிகளே; தாழிசையும் அவையே. இவற்றுள் பாடுபொருளானன்றி யாப்பு வடிவத்தாலோ அல்லது ஓசையாலோ மாற்றமில்லை. இவ்வாறிருக்க முற்பகுதியைத் தரவென்றும், பிற்பகுதியைத் தாழிசை என்றும் அழைப்பானேன்? இது முற்றிலும் செயற்கையான பொருளற்ற பாகுபாடாகும். மற்றொன்று: –

''காமர் கடும்புனல்'' என்னும் குறிஞ்சிக்கலியில் செம்மையான இன்னிசை வெண்பாக்களும், குறள்வெண்பா ஒன்றும் தாழிசை என்ற பெயரில் வந்துள்ளன. பல கலிப்பாக்களுள் சிந்தியல் வெண்பாக்களைத் தாழிசை என்ற பெயரில் காணலாம். பழமையானது என்னும் ஒரே காரணத்தால் கண்மூடித் தனமாக ஏற்றிப் போற்றாமல் யாப்பின் இந்த வடிவங்கள் யாவும் நன்கு திருத்தமுற அமைந்துள்ளனவா என ஆராய்ந்தால் நடுநிலையாளர்கட்கு எதிர்மறை விடையே கிடைக்கும்.

இவ்வியல்பின் 29 ஆம் நூற்பாவாகிய அம்மானை முதல் இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் இசைத் தமிழிற்கு உரியனவாகக் கொள்க. (445)

**47. பாநிலை தெரிதற் பொருட்டே பற்பல**
**நூல்களும் பார்க்கும் நுண்ணியர்க்கு யாம்பகர்**
**சகத்திர தீபமும் வருடப் பதிகமும்**
**என்னும் துணைநூல் இனியநற் றுணையே.**

பலவகையான பாக்களின் இயல்பை ஆராய்வதற்காகவே மிகப்பல நூல்களைக் கற்கும் அறிஞர்களுக்கு எம்மால் இயற்றப்பெற்ற சகத்திரதீபம், வருடப்பதிகம் என்னும் இரு நூல்களும் சுவைதரும் நல்ல உதவி நூல்களாம் என்றவாறு.

**சகத்திர தீபம் :–** இது திருவண்ணாமலையில் இயற்றப் பெற்ற நூல். ஒரு யாப்புவகைக்குப் பத்துப் பாடல்களாக நூறு யாப்பானியன்றது. பாயிரம், நூற்பயன் உட்பட ஆயிரத்து நான்கு பாடல்களை உடையது.

1 யாப்பருங்கலம் 82 உரைமேற்கோள்

**வருடப்பதிகம்:** இது 60 பதிகங்களை உடைய முருகன் துதி நூல். தமிழ் வருடங்கள் அறுபது ஆதலின் இது இப்பெயர் பெற்றது. ஒரு பதிகத்திற்குப் பனிரெண்டு பாடல்களாக மொத்தம் 720 பாடல்களோடு கடவுள்வாழ்த்து, நூற்பயன் ஆகிய இரண்டும் சேர்ந்து மொத்தம் 722 கவிகளை உடையது. இதில் 60 யாப்பு வடிவங்களைக் காணலாம். இந்நூல் இன்று வரை அச்சாகவில்லை. விழுப்புரத்தை அடுத்த திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தில் 26 ஆம் எண் உள்ள ஏட்டுச் சுவடியாக உள்ளது. (446)

**48. யாப்பியல் துணைகொண்டு இனியபாப் பகர்தலில்**
**தூயதாம் இலக்கியம் துணைக்கொளல் நலமாம்;**
**அதன்நிலை பிறழ்ந்தும் கிடக்கும்; ஆதலின்**
**புலவர்தம் துணையே பொருவில்நற் றுணையே.**

யாப்பிலக்கணங்களைக் கற்று அதன் உதவியால் இனிய செய்யுட்களை இயற்றுவதைவிடப் பிழையற்ற இலக்கியங்களை மாதிரியாகக் கொள்ளுதல் சிறந்ததாகும். அத்தகைய இலக்கியங்களிலும் சிற்சில இடங்களில் ஏதேனும் தக்க காரணம் பற்றி சில விதிகள் மாறி இருக்க இடமுண்டாதலின் அவற்றையும் தெளிவாக உணர்த்துவதற்கு முறையாகவும், முழுமையாகவும் கற்ற உண்மையான அறிஞர்களின் சார்பே ஒப்பற்ற நல்ல துணையாகும் என்றவாறு.

"காரிகை கற்றுக் கவி பாடலினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்" என்பது பழமொழி. இலக்கியப்பயிற்சி இல்லாதவர்களுக்குச் சொல்லாட்சி, மரபு, பொருள் கோள், தொனிப்பொருள் எதுவுமே தெளிவாக விளங்காது. எனவே இலக்கியப்பயிற்சி வற்புறுத்தப்பட்டது. இவ்வாறு கற்கும் நூல் குற்றமற்றதாக இருக்க வேண்டும். பிழைபட்ட நூல்களைக் கற்றால் குழப்பமே மிஞ்சும். எனவே தூயதாம் இலக்கியம் என்றார்.

தூய இலக்கியமும் பிறழ்ந்து கிடக்குமோ எனின் சிற்சில இடங்களில் கிடக்கும். உதாரணமாக வெண்பாவில் நாலசை யைச் சில சமயங்களில் மூன்றசையாகக் கொள்கிறோம். குற்றி யலிகர வுகரங்களை இடம் நோக்கிக் கொள்ளவோ தள்ளவோ செய்கிறோம். ஆசிரிய விருத்தங்களில் காய்ச்சீர் வரும் இடங் களில் குறில்நெடிலிணைந்த விளத்தால் இறும் ஈரசைச் சீர் களை முச்சீராக ஏற்கிறோம். இவை போல்வன சான்றோர் களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாம்.இதன் நுட்பங்களைத் தெளிவாக விளக்கிக் கூறவே சிறந்த அறிஞரின் துணை வேண் டப்படுவதாயிற்று.

இக்கருத்து இவரால் பிறிதொரு நூலின்கண், "முன்னவர் சொல் வாய்ந்த பலநூலில் வண்மையதும் புன்மையதும் ஆய்ந்த கவியாலறியலாம்" எனவும், "சொல்விற் பனமுடைய தொண்டர்திருக் கூட்டத்தால் கல்விப் பயனதனைக் காண லாம்—பல்வினையும் போக்கலாம் ஆனந்த போகப் பொது விளைவுண் டாக்கலாம் வீடுபெற லாம்"[1] எனவும் கூறப்பட் டுள்ளது. (447)

**49. இயல்இசை என்னும் இருவகைத் தமிழுக்கு**
**ஆமாறு இந்தமட்டு அடக்கிக் கூறினம்;**
**நாடகத் தமிழ்நிலை நவிலுதும் சிறிதே.**

இயற்றமிழ் இசைத்தமிழ் என்னும் இருவகைப்படும் பா வகைகளின் இலக்கணத்தை இந்த அளவு சுருக்கமாக உரைத் தோம். இனி அடுத்து நாடகத்தமிழின் இயல்பையும் சற்றுக் கூறுவாம் என்றவாறு.

தமிழுக்கு ஆமாறு என்புழித் தமிழ் என்றது தமிழ்க் கவி களை. இந்தச் சூத்திரத்தால் இப்பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்த பகுதியாகிய நாடகத் தமிழ் நிலைக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (448)

1. திருவெண்பா– 145, 157

## II. நாடகத் தமிழ் நிலை

இது இந்நூலில் நிலை என்ற பெயரிலமைந்த இரண்டாவது சிறுபிரிவாகும். முதலாவது பொருளிலக்கணத்தில் அகப்புறப் பொருள் நிலை என வந்தது. அங்கு நிலை என்ற பெயர்க் காரணம் கூறப்பட்டது. சற்றேறக்குறைய அதுவே இங்கும் பொருந்தும். அஃதெவ்வாறெனின் ஒரே பொருள் ஒரு கண்ணோட்டத்தில் அகமாகவும் பிறிதொரு கண்ணோட்டத்தில் புறமாகவும் இருப்பதை அங்குக் கண்டோம். எழுதிப்படிக்கும் பொழுது ஒருவிதமாகவும், பாடியாடக் கேட்டுக் காணும்போது பிறிதொரு வகையாகவும் உள்ளவை இங்கே இடம்பெறுகின்றன.அங்கே தமிழ் இலக்கணம் மெய்யறிவுத்துறையையொட்டிப் பேசப்பட்டது போன்றே இங்கு இராகம், தாளம், பாவம் என்பதனோடு ஒட்டிப்பார்க்க வேண்டியுள்ளது. எனவே மொழியை மட்டும் கொண்டு ஓர் இலக்கண வரையறை செய்ய இயல்வதில்லை. நாடகத்தமிழின் இலக்கணம் அதன் இராகம், தாளம் ஆகிய இசை நூலையும், பாடுபொருளாகிய இயலையும் சார்ந்தே கூறப்படவேண்டியுள்ளது. இதனால் இங்கு கூறப்படுபவை சுபாவமாக அமையாமல்தடத்தமாகவேஆகிறது. எனவே இப்பிரிவு நாடகத்தமிழ் நிலை எனப் பெயர் பெற்றது.

முன்பே கூறப்பட்டவாறு இவ்வாசிரியர் அபிநயத்தோடு ஆடுதற்கேற்ற பாடல்களையே நாடகத்தமிழ் எனக்கொள்கிறார். இப்பிரிவு எட்டு நூற்பாக்களைக் கொண்டது.

50. பல்லவத்து இருபங்கு அநுபல் லவமும்,
அதன்இரு பங்காம் சரணமும் தாளம்
பிழையாது அமைத்து,அதில் பேரின் பம்சொலின்
கீர்த்தனை என்றும், மற்று ஏனையைக் கிளத்தில்
பதம்என வும்சொலல் பாவலர் வழக்கே.

பல்லவியின் (எடுப்பு என்பர்) அளவைப் போல் இரு மடங்கில் அமைந்த அநுபல்லவியையும் (தொடுப்பு), அதற்கு இரு பங்காக அமைந்த சரணத்தையும் (முடிப்பு) தாளம் தவறாமல் இயற்றி அப்பாடலில் இறைவணக்கமாகிய பேரின்பத்தைக்

கூறினால் கீர்த்தனை என்றும், உலகியற் காதலாகிய சிற்றின் பத்தை உரைத்தால் பதம் என்றும் புலவர்கள் கூறுவர் என்ற வாறு.

தாளம் பிழையாது என்றமையின் இராகத்திற்கேற்ப என் பது தானே பெறப்பட்டது. பல்லவி முதலியன எவ்வாறு அமைய வேண்டும் என்பன இசை நூலாதலின் இங்கு கூறப்பட வில்லை. இந்த அளவுகளும், எண்களும் இவ்வாறேதான் வர வேண்டுமென்பதும் இல்லை என்பது 52,53 ஆம் நூற்பாக் களால் தெளிவாகிறது.இது பதம், கீர்த்தனை பற்றிய ஏகதேச இலக்கணமே ஆகும். மொழி இலக்கணத்தில் இவ்வளவே கூற முடியும். இதனால்தான் இப்பிரிவே நிலை எனப்பட்டது.

இவர் கீர்த்தனை, பதம் ஆகிய இரண்டும் வடிவத்தால் ஒன்றே எனவும் பாடு பொருளால்தான் வேறுபடுகின்றன எனவும் கூறுகிறார். ஆனால் இசை வல்லுநர் இக்கருத்தை ஏற் பதாகத் தெரியவில்லை. வர்ணம், கிருதி அல்லது கீர்த்தனை, பதம் ஆகிய மூன்றும் வேறுவேறானவை என்பது அவர்கள் கருத்து.கீர்த்தனைகள் எல்லா இராகங்களிலும், எல்லாத் தாள கதிகளிலும் வரலாம்.ஆனால் பதங்கள் ரத்தி இராகங்களிலும் விளம்ப காலத்திலுமே அமைய வேண்டும்.ஆனால் பதங்களின் பாடுபொருள் மதுரபக்தி என்னும் காதற்சுவை என்பது இரு வருக்கும் உடம்பாடே. எல்லாப் பதங்களும் நாட்டியத்திற்கு ஏற்றவையே. ஆனால் அனைத்துக் கீர்த்தனைகளும் நாட்டியப் பாடல்களாகா. (ஆதாரம்:- தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 27,28.8.1982 இல் நடைபெற்ற இசைக் கருத்தரங்கில் வாசிக்கப் பட்ட கீழ்க்கண்ட இரு ஆய்வுக்கட்டுரைகள்.

1. தமிழ்ப் பதங்கள்-டாக்டர் திருமதி கௌரி குப்புசாமி, மைசூர்.
2. கர்நாடக இசையில்பதங்கள்-திருஏ.நடராசன், திருப்பதி.

(449)

**51.** அநுபல் லவமும் சரணம் அளவில்
கூடினும், தாளம் குழம்பாது, யாவரும்
அறிவுறும் பொருள்அமைந்து அவிர்தரின் நலமே.

பல்லவியைவிட அநுபல்லவி சரணம் ஆகிய இரண்டும் முறையே இருபங்கு, நான்கு பங்கு எனக் கூறப்பட்ட அளவை விட அவைகள் மிகினும் குற்றமில்லை. ஆனால் தாளம் தவறாமலும், அனைவரும் எளிதில்அறிந்து கொள்ளுமாறு சொற்களும் பொருளும் அமைந்ததாகவும் இருந்தால் சிறப்பு என்றவாறு.

இசை நிகழ்ச்சிகளிலும் நாட்டியம், நாடகம் போன்றவைகளிலும் இவை கையாளப்படுகின்றன. ஒரு முறை காதில் கேட்ட உடனே அதில் கூறப்பட்டுள்ள பொருள் விளங்க வேண்டும். கற்றவர்களேயன்றி மற்றவர்களும் புரிந்து கொள்ளுமாறு இருந்தால்தான் பயன் தரும். எனவே மிக நுட்பமான பொருள்களும், அருஞ்சொற்களும் நாடகத் தமிழிற்கு விலக்கப்பட்டன.

**52\. பல்லவம் போன்றே அநுபல் லவமும்**
**ஒன்றுஅலது ஒன்றாது; சரணம்ஒன்று அன்றி**
**மூன்றும் வரல்மிகை; ஐந்தேழ் ஒன்பது**
**பதினொன்று ஒன்றினும் பல்லவத் தலையில்**
**அவற்றின் ஈறுஒன்றும் அழகால் திகழ்பவே.**

ஒரு பாடலில் பல்லவியைப் போன்றே அநுபல்லவியும் ஒன்றுதான் வரும். அதற்கு மேல் வராது. ஆனால் சரணம் ஒன்றிற்குப் பதிலாக மூன்று வருதல் பெரும்பான்மை. ஐந்து ஏழு, ஒன்பது, பதினொன்று எனச் சரணங்களின் எண்ணிக்கை கூடினாலும் ஒவ்வொரு சரணத்தின் இறுதியோடும் பல்லவி பொருளால் தொடர்புபட்டு முடிகின்ற பொலிவைப் பெற்றிருக்க வேண்டும் என்றவாறு.

இதனால் சரணங்களின் தொகை ஒற்றைப்படையில்தான் வரவேண்டும் என்பது பெறப்பட்டது. பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய பாடல் உறுப்புகளின் நீளம் இராக தாளங்களுக் கேற்பக் கூடவோ குறையவோ அமையலாம். அதற்கு இயற்றமிழ் முறையில் வரையறை கூற இயலாது. ஆனால் ஒவ்வொரு சரணமும் பல்லவியோடு சேர்ந்து பொருள் முடிவதாக அமைய வேண்டும்.

இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்ற முசுகுந்த நாடகம் என்னும் நாடக நூலிலிருந்து ஓர் இசைப்பாடல் இங்கே எடுத்துக் காட்டப்படுகிறது.

இராகம்: கமாஸ் தாளம்: திஸ்ரசாபு

பல்லவி

சித்திர வல்லிவந்தாள் – மதிவதனச்
சித்திர வல்லிவந்தாள்.

அநுபல்லவி

முத்தியின் ஆசையும்விட்டு முருகன் பத்தியிலுற்ற
புத்திவீர வாகுவும் புட்பகந் தியும்பெற்ற (சித்திர)

சரணங்கள்

குஞ்சரத் துணைநிகர் கொங்கைக் குடங்குலுங்க
நஞ்சமும் அமுதும்போல் நளின விழிபிறங்கச்
செஞ்சரண் களிற்புனை சிலம்பு மிகஇரங்கப்
பஞ்சபா ணனைச்சூழும் படைகளெல் லாம்வணங்கச்
(சித்திர)

அத்தமும் மணிகளும் அமைந்தபணிகள் மின்ன
மெய்த்தவத்தோருளத்தில் வெருட்சி மிகவும்மன்ன
முத்த நகைக்கனிவாய் மொழிகள் சிறிதுபன்ன
இத்தரையில் கண்டோரெல்லாம் யாரோயிம் மங்கை
என்னச் (சித்திர)

அந்தரத் தூர்மடவார் அனைவரும் மனநாண
இந்தநிலத்து மின்னார் யாவரும் அடிபேணச்
செந்தகை வீரர்கோன்முன் செய்தவ மென்றுகாணச்
சந்தத்தோள் முசுகுந்தன் தன்னுயிர் எனத்தோணச்[1]
(சித்திர)

**53. இருவகைப் பல்லவம் இன்றி ஆடலுக்கு
இசைவுறத் தனித்தனி ஈரடி நான்கடி
காட்டியோர் பொருளைக் கருதிக் கூறித்
தொகுப்பது சிந்தெனச் சொல்வது வழக்கே.**

---

1 முசுகுந்த நாடகம் 26

பல்லவி, அநுபல்லவி இரண்டும் இல்லாமல் நடனத்திற்கு ஏற்றபடி தனித்தனியாக இரண்டு அல்லது நான்கடிகளைக் கொண்டதாகவும், ஒரு பொருளையே கூறுவதாகவும் இயற்றிச் சேர்க்கப்பட்ட வடிவத்தைச் சிந்து என்பர் என்றவாறு.

இருவகைப் பல்லவம் இன்றி என்புழிப் பல்லவி மட்டும் பெற்று அநுபல்லவி இல்லாமல் எனினும் ஆம்.

சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே – உலகில்
ஏற்றம் புரியவந்தாய்
பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி யணைத்திடவே – என் முன்னே
ஆடிவருந்தேனே. [1]

இது பல்லவி, அநுபல்லவி இரண்டுமின்றி ஈரடியால் வந்த சிந்து.

சுட்டும் விழிச்சுடர்தான் – கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி – கண்ணம்மா
வானக்கருமை கொல்லோ
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்தநல்வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நட்சத்திரங்களடீ
சோலை மலரொளியோ – உனது
சுந்தரப் புன்னகைதான்
நீலக் கடலலையே – உனது
நெஞ்சிலலைகளடீ
கோலக் குயிலோசை – உனது
குரலினிமையடீ
வாலைக் குமரியடீ – கண்ணம்மா
மருவக் காதல் கொண்டேன். [2]

இது இருவகைப் பல்லவியுமின்றி நான்கடியான் வந்த சிந்து.

1 பாரதி கண்ணம்மா என்குழந்தை 1 – 2
2 பாரதி கண்ணம்மா என் காதலி 1 – 2

பல்லவி

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை

சரணங்கள்

தின்னப் பழங்கொண்டு தருவான் – பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்ப னென்னைய னென்றால் – அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (தீராத)

தேனொத்த பண்டங்கள் கொண்டு – என்ன
செய்தாலு மெட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் – சற்று
மனமகிழு நேரத்தி லேகிள்ளி விடுவான்[1] (தீராத)

இது பல்லவி மட்டும் பெற்று ஈரடியான் வந்த சிந்து.

பல்லவி

பக்தியினாலே – தெய்வ பக்தியினாலே

சரணங்கள்

பத்தியினாலே இந்தப் பாரினிலெய்திடும் மேன்மைகள் கேளடீ
சித்தந்தெளியும் இங்கு செய்கையனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் நல்லவீர ருறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவ முண்டாம் நெஞ்சிற் சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும் (பக்தி)

காமப் பிசாசைக் குதிக்கால்கொண்டடித்துவிழுத்திடலாகும்இத்
தாமஸப்பேயைக் கண்டு தாக்கி மடித்திடலாகும் எந்நேரமும்
தீமையையெண்ணி யஞ்சுந் தேம்பற் பிசாசைத் திருகியெறிந்து பொய்ந்
நாமமில்லாதவுண்மை நாமத்தினாலிங்கு நன்மை விளைந்திடும்[2] (பக்தி)

இது பல்லவி மட்டும் பெற்று நான்கடியான் வந்த சிந்து.

---

1. பாரதி. கண்ணன் விளையாட்டுப்பிள்ளை 1 – 2
2. பாரதி. பக்தி1-2

54\. வீணையில் தேர்ந்தோன் விளம்பு மாற்றம்
தழீஇக்கொளல் நாடகத் தமிழினுக் கழகே
ஆயினும் பொருட்சுவை அழியினும் இயலிசைச்
சொல்மிகப் புணரினும் சோர்வு படுமே.

இசையாசிரியன் கூறும் கருத்துகளையும் தழுவி ஏற்றுக் கொள்ளுதல் நாடகத்தமிழ் மரபிற்கு ஏற்றதே ஆகும் என்றாலும் இசையை நோக்கிப் பொருட்சிறப்பு இல்லாமல் அமைத்தாலோ அன்றி இயலிசைத் தமிழ்க்குரிய திரிசொற்கள் மிகவும் அதிகமாகச் சேர்ந்தாலோ அப்பாடல் தரங்குறைந்துவிடும் என்றவாறு.

வீணையில் தேர்ந்தோன் என்பது இங்கு இசைநூல் வல்லான் என்ற கருத்தில் ஆளப்பட்டது. (453)

55\. வண்ணச் சீர்கொடு வயங்கும் நாடகத்து
இசைத்தமிழ்ச் சொற்கள்வந்து இசையினும் தகுமே.

சந்தக்குழிப்புகளால் அமைந்த சீர்களைக் கொண்டுள்ள நாடகப் பாடல்களில் இசைத்தமிழிற்குரிய சொற்கள் வந்து சேர்ந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்றவாறு.

சந்தக்குழிப்புகளைப்பற்றி அடுத்த பகுதியில் கூறப்படும். இயற்றமிழ்ச் சொல் கருஞ்சொல்லாகவும், இசைத்தமிழ்ச் சொல் செஞ்சொல்லாகவும், நாடகத்தமிழ்ச் சொல் வெண்சொல்லாகவும் இருக்கவேண்டும் என இவரால் இந்நூல் 171 ஆம் நூற்பாவில் கூறப்பட்டது. 453 ஆம் நூற்பாவில் நாடகத் தமிழில் கரிய செய்யசொற்கள் விலக்கப்பட்டன. இக்சூத்திரத்தில் வண்ணம் பயின்ற நாடகத்தமிழில் ஓரளவு செஞ்சொற்கள் ஆளப்படலாம் எனத்தழுவிக் கொள்ளப்பட்டது. இதனால் நாடகத்தமிழில் எக்காரணங் கொண்டும் இயற்றமிழிற்கே சிறப்பாக உரிய கருஞ்சொற்கள் வரலாகாது என விலக்கப்பட்டதாயிற்று. (454)

56\. புலமைக்கு ஆள்எனப் போதன் பொறித்த
தலையினற்கு யாப்பியல் பதனைச் சாற்றிடல்
பாய்தொழிற் புலிக்குஅது பயிற்றல் போலும்;

அல்லாற்கு உரைசெயல் அத்தொழில் எருமைக்கு
இசைத்திடல் ஒப்பாம் எனத்தெளிந் தனமே.

நற் புலமைபெற்று விளங்குவதற்குரியவன் என்றே பிரமனால் எழுதப் பெற்ற தலையெழுத்தை உடையவர்களுக்கு யாப்பிலக்கணத்தைக் கற்பித்தல் இயல்பாகவே பாயுந்தன்மையையுடைய புலிக்குப் பாயும் தொழிலைச் சொல்லிக்கொடுப்பதுபோல் வீண் வேலை ஆகும். ''இவனுக்குப் புலமை இல்லை'' என விதிக்கப்பட்டவனுக்கு இலக்கணம் கற்பித்தல் எருமைக்குப் பாயச் சொல்லிக்கொடுப்பது போன்று பயனற்ற வேலையாகும். இதனை யாம் சற்றும் ஐயத்திற்கு இடமின்றித் தெரிந்து கொண்டுள்ளோம் என்றவாறு.

''இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு தெள்ளியராதலும் வேறு'' என்றபடி சிலர் தெள்ளியராக இருக்கிறார்கள். அவர்களுக்கு இலக்கணப் பயிற்சியே அவசியமில்லை. இலக்கியங்கண்டால் அவர்கள் இலக்கணத்தைப் படைத்துக்கொள்வர். மீன்குஞ்சுக்கு நீச்சல் கற்றுத் தரத் தேவையில்லாதவாறு இவர்கட்குக் காரிகைக் கல்வி இன்றியமையாதது அன்று.

மற்றொரு சாரார் அறிவுத் தன்மையை விட்டு அகன்றே நிற்பவர்கள். ஆழ அமுக்கினும் நாழி முகவாது நானாழி என்பது போல் எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளும் திறன் இல்லாதவர்கள். அவர்களுக்கு யாப்பறிவித்தல் எருமைக்குப் பாயும் தொழிலைக் கற்றுக் கொடுப்பதுபோல் ஆகும் என்கிறார்.

இந்நூற்பாவால் யாப்பிலக்கணம் என்பது தனி இலக்கணமாகப் பயிலப் படாமல் இலக்கியத்தின் துணை கொண்டும் மெய்ப்புலவர் கூட்டுறவாலும் அறியப் படவேண்டும் என்பதும், அதுவும் தெள்ளியராதற்கேற்ற விதியுடையாருக்கே அமையும் என்பதும் சொல்லப்பட்டது. எனவே குதிரைக்கு நீர் காட்டுவார் போன்று ஓரளவே கூறினோம் என்றும், கூறப்பெறாதனவற்றை மாணவர் தம் பயிற்சியால் கண்டு தெளிய வேண்டும் என்பதும் கருத்து. (455)

57. இயல்முத லாகிய பகுதியை அடுக்கி
முத்தமிழ்ப் பாமா லையில்மொழிந் தனமே.

இயல், இசை, நாடகம் என முக்கூறுபட்டவற்றை நிரலே அமைத்து முத்தமிழ்ப் பாமாலை என்ற சிற்றிலக்கியத்தில் காட்டியுள்ளோம் என்றவாறு.

முத்தமிழ்ப் பாமாலை: – இந்நூலாசிரியரால் இயற்றப் பெற்ற இந்நூல் திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத் தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பாயிரம் 3 கவிகள், நூல் 30 பாடல்கள், நூற்பயன் ஒரு கவி ஆக அந்நூல் 34 கவிகளானி யன்றது. நூல் 30 பாடல்களும் மண்டலித்த அந்தாதி ஆகும். 1,4,7 எனவரும் பாடல்கள் இயற்றமிழ் எனப்பட்டுள்ளது. இப் பிரிவில் வருகின்ற யாப்பு வகைகள் ஆசிரியப்பா, வெண்பா, மருட்பா, குறளடி வஞ்சிப்பா என்பனவாகும். 2,5, 8,11 என வரும் பாடல்கள் இசைத்தமிழ் ஆகும். இவற்றுள் அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், கட்டளைக்கலித்துறை எழு சீர்த்தாழிசை, கட்டளைக்கலிப்பா, கொச்சகக்கலிப்பா, சந்த விருத்தம் ஆகிய யாப்பு வகைகள் இடம் பெற்றுள்ளன. 3,6,9, 12 என வருவன பத்தும் கீர்த்தனைகளே.

இச்சூத்திரத்தால் நாடகத் தமிழ்நிலை என்னும் இப்பகுதி நிறைவு செய்யப்படுகிறது. வழக்கமாக முதல் பகுதியின் ஈற்று நூற்பாவிலேயே அடுத்த பகுதிக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளும் இயல்புடைய இவ்வாசிரியர் வண்ணத்தின் மீது இவருக்குள்ள பெரும் பற்றின் காரணமாகவோ என்னவோ தோற்றுவாயையும் தற்சிறப்புப் பாயிரம் போன்றே அங்கு அமைத்துக் கொண்டுள்ளார். (456)

நாடகத்தமிழ் நிலை முற்றிற்று.

## III. வண்ணவியல்பு

வண்ணம் என்பதும் சந்தம் என்பதும் ஒரு பொருட்கிளவி. நிகண்டுகளும் "வண்ணஞ்சந்தம்"[1] என்றே கூறுகின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்களுள் பேராசிரியர், "வண்ணம் என்பது சந்த வேறுபாடு"[2] எனவும், நச்சினார்க்கினியர் "வண்ணமாவது சந்தம்"[3] எனவும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளனர். இருந்தும் ஒருவர் வண்ணம் தமிழிற்கே உரியதென்றும் சந்தம் வடமொழிக்கே உரியதென்றும் அவை இரண்டும் வேறு வேறென்றும் கருதுகிறார். இவ்வாசிரியர் கூறுவது சந்த இலக்கணம் என்றும், இதனை வண்ணம் என வழங்கலாகாது என்பதும் அவர் கருத்து.[4]

யார் கருத்து எப்படி இருந்தாலும், இந்நூலாசிரியர் வண்ணம், சந்தம் ஆகிய இரண்டும் ஒன்றே என்றும், அது தமிழிற்கே உரியதென்றும் உறுதியான கொள்கை உடையவர் ஆவார். இவ்வியல்பின் ஈற்றுக் கவியில் "தமிழ்க்கவி அனைத்தினும் தலைஎன்று உள்ள வண்ண இயல்பு" எனலும், வண்ணத்தியல்பு நூலில் "நற்றமிழ்ச்சீர் வண்ணத் தியல்பை"[5] "அருந்தமிழ்ச் சந்தத்து"[6] "வண்ணச்செந்தமிழ்"[7] எனலும் இதனைத் தெற்றென விளக்கும்.

ஒரு குறிப்பிட்ட வாய்பாட்டிலமைந்த ஓசையே திரும்பத் திரும்ப வருவது வண்ணம் அல்லது சந்தம் ஆகும்.

சிலப்பதிகாரம் கானல்வரியின் முரிவரி சந்தப்பாவாகும். தனதன தனதனனா என்பது அதன் குறிப்பு. முரிவரியில்

1. பிங்கலந்தை 1946; சூடாமணி 8–27
2. பேரா. தொல். செய்யுள் 212 உரை
3. நச்சர். தொல். செய்யுள் 234 உரை
4. மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' மாத இதழில் 1913 ஆம் வருடம் அக்டோபர் மாதம் வெளியான வண்ணமும் சந்தமும் என்ற சிறு கட்டுரை. ஆசிரியர் 'இயலாளி'. செந்தமிழ் பக்கம் 382–384
5. வண்ணத்தியல்பு-பாயிரம் 1
6. " 2
7. " 97

இடம்பெற்ற 48 சீர்களில் 5 மட்டுமே வேறு. இவ்வாறே வேட்டுவ வரியின் அவிப்பலியும் "தனதன தனதன" என்ற குறிப்பை உடைய சந்தமே. இங்கும் 48 சீர்களில் இரண்டே மாறுபடுகின்றன.

திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்தில் "பூவியல் புரிகுழல்" என்ற திருவலிவலப்பதிகம், "சிலைதனை நடுவிடை" என்ற திருமறைக்காட்டுப் பதிகம், "பிறையணி படர்சடை" என்ற திருக்கழுமலப்பதிகம் முதலியன வண்ணப்பாடல்களாம். மேலும் "மறையானை" என்னும் திருக்கச்சியேகம்பப் பதிகத்தின் திருக்கடைக்காப்பில் "கலிக்கோவையால் சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன்" என வருகிறது.

இதனால் சிலப்பதிகாரக் காலத்திலேயே தமிழில் முளை விட்டு, ஆழ்வார் நாயன்மார் காலத்தே தளிர்த்த வண்ண யாப்பு அருணகிரிநாதரால் பெரிய ஆலமரமாக வளர்ந்து விட்டது என்னலாம். குறையும் நிறையுமாகப் பதினைந்து நூற்றாண்டுகளாகச் சந்தக் கவிதைகளுக்கு இலக்கியம் இருந்தனவேனும் இதற்கான இலக்கணம் தோன்றவில்லை.

நம்பியாண்டார் நம்பி காலத்திலேயே வண்ணப் பாடல்களுக்குத் திருத்தமான வடிவம் அமைந்துவிட்டதேனும் அந்த யாப்பு தன் உச்சியை அடைந்தது அருணகிரிநாதர் காலத்தே தான். இலக்கியம் வந்தபிறகே இலக்கணம் தோன்ற முடியும். சந்த யாப்பிற்கு முதன் முதலில் தோன்றிய தெளிவான இலக்கணம் இந்நூலாசிரியரின் "வண்ணத்தியல்பு" என்ற நூல்தான். அந்நூல் பாயிரம் 10 கவிகள், நூல் 100 நூற்பாக்கள், புறநடை வெண்பா 1 ஆக நூற்றுப் பதினொரு பாடல்களானியன்றது. இதன் முதல் பதிப்பு வெளிவந்த ஆண்டு அறியக் கூடவில்லை. இரண்டாம் பதிப்பு 1879 ஆம் ஆண்டு வந்தது. அண்மையில் திருப்பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தால் 1976 ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பு வெளியாகியுள்ளது. இம் மூன்றும் உரை இல்லாத மூலப்பதிப்புகளே. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவில் இந்நூலை விளக்க உரையுடன் வெளியிட உள்ளது.

இவ்வறுவகையிலக்கணத்தின் வண்ணவியல்பாகிய இப்பகுதியைப் புரிந்து கொள்வதற்கு அந்நூற்பயிற்சி இன்றியமையாததாதலின் இங்கு இத்துணை எழுத நேர்ந்தது. இதில் கூறப்பட்டுள்ள எட்டு வகையான சந்தங்கள் பற்றி இவ்வியல்பின் இரண்டாம் நூற்பாத் தோற்றுவாயில் சுருக்கமாகக் கூறப்படும். இடையிடையே இன்றியமையாத இடங்களிலெல்லாம் அந்நூற் சூத்திரங்கள் காட்டப்படும். (457)

**58.** **களிறே புரையும் களிப்புடைக் கவிஞர்க்கு**
**அரியேறு அன்னார்க்கு ஆவி ஆய**
**சந்த நிலைஅவர் தாள்மலர் வணங்கி**
**வண்ணத்து இயல்புஎனும் நூலிடை வகுத்துக்**
**கூறினம்; ஆதலின் இங்ஙனம் குறுக்கிச்**
**சிறிது கூறுதும் தெளிவார் பொருட்டே.**

மதம் பிடித்த யானையைப் போன்று தம் கல்விச் செருக்கால் இறுமாந்திருக்கும் புலவர்களை அடக்கவல்ல ஆண்சிங்கம் போன்ற பாவலர்களுக்கு உயிரைப்போல் போற்றுவதற்குரியதாகிய சந்தத்தின் இயல்பை அத்தகையோர் (சிங்கம் அனையார்) திருவடித்தாமரைகளைப் பணிந்து "வண்ணத்து இயல்பு" என்னும் பெயர் கொண்ட இலக்கணத்தே வகைப்படுத்தி உரைத்தோம். அங்கே விரிவாகக் கூறியுள்ள காரணத்தால் இங்கே சுருக்கமாகச் சில செய்திகளைத் தேர்ச்சி பெறுவார் பயனடைதற் பொருட்டுக் கூறுவாம் என்றவாறு.

பொதுவாகப் புலவர்களை யானைகளாகவும் அவர்களைத் தம் புலமையால் வெல்லும் வண்ணப்பாவலர்களை அரியேறாகவும் கூறினார். "வாதுக்காதரமாகிய வண்ணம்"[1] "வண்ணத் தோல்வியில் வார்செவி இழப்பதும்"[2] என இவர் இந்நூல் புலமை இலக்கணத்தில் கூறுகிறார்.

வண்ணத்தியல்பு நூல் பற்றி முன்னர்க் கூறப்பட்டது.

---

1 அறுவகை. 762
2 " 763

இனி அடுத்த நூற்பாவிற் புகுமுன் வண்ணத்தியல்பில் கூறப்பட்டுள்ள அடிப்படைச் செய்திகளைச் சுருக்கமாகக் காண்போம்.

சந்த யாப்பிற்குத் தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய என்ற எட்டும் அடிப்படை அலகுகள் ஆகும். இவ்வோசை எத்தகைய எழுத்துகளின் புணர்ச்சியால் வரும் என்று முறையே பார்ப்போம்.

**தத்த**:- உயிர்க்குறில் அல்லது உயிர்மெய்க்குறில் என்னும் இவ்விரண்டில் ஒன்றன்பின் ஒரு வல்லொற்றும் ஒருவல்லினக் குறிலும் வருதல். (எட்டு, பத்தி)

ஒரு குறில், ஒரு வல்லொற்று, ஒரு வல்லினக்குறில் சேர்ந்து வந்ததன்பின் ஒரு இடையொற்றோ அல்லது மெல் லொற்றோ வருதல். (ஒற்றர், சிட்டன்)

ஒரு குறில், ஒரு இடையின மெய், ஒரு வல்லினமெய், ஒரு வல்லினக்குறில் ஆகியவை சேர்ந்து வரல். (நெய்த்து)

முன் கூறப்பட்டதுடன் ஒரு வல்லின மெய்யோ அல்லது இடையின மெய்யோ வருதல். (மெய்ச்சொல், கர்த்தன்)

**தாத்த**: முற்கூறிய தத்தச் சந்தம் நான்கிலும் முதல் எழுத்து குறிலுக்குப் பதில் நெடிலாக வருதல். ('ஈட்டி, காற்று, பாட்டர், கூத்தன், பார்ப்பு, தூர்த்தன், காழ்த்தல்.)

**தந்த**: முற்கூறி தத்தச் சந்தம் நான்கிலும் வல்லொற்றிற் குப்பதிலாக மெல்லொற்று வருதல். (அஞ்சு, மஞ்சு, கொண்கர், கந்தன், மொய்ம்பு, மொய்ம்பர், மொய்ம்பன்.)

**தாந்த**: முற்கூறிய தந்தச் சந்தத்தின் முதல் எழுத்து குறிலன்றி நெடிலாக வருதல். (ஆண்டு, வேந்து, வேந்தர், பாங்கன், பாய்ந்து, சார்ங்கர், சார்ங்கம்.)

**தன**: இரண்டு குற்றெழுத்துகள் இணைந்து வருதல். (குரு)

இரு குறில்களுடன் மெல்லினத்து அல்லது இடையினத்து மெய் ஒன்று வருதல். (தவர், சுதன்)

**தான**: ஒரு நெடில் ஒரு குறில் இணைந்து வருதல். (காது)

முற்கூறியவற்றோடு மெல்லின அல்லது இடையினமெய் ஒன்று சேர்ந்து வருதல். (சூதர், பாதம்)

ஒரு நெடில், ஓர் இடையொற்று, ஒரு குறில் சேர்ந்து வருதல். (கேள்வி)

முற்கூறியவற்றோடு மெல்லின அல்லது இடையின ஒற்று ஒன்று அடுத்து வருதல். (சார்கண், கூர்முள்)

ஒரு நெடில், மெல்லொற்று ஒன்று, மெல்லின அல்லதுஇடையினக் குறில் ஒன்று வருதல். (மான்மி, தேன்வி)

முற்கூறியதோடு ஈற்றில் ஒரு மெல்லின ஒற்றோ அல்லது இடையின ஒற்றோ சேர்ந்து வருதல். (மாண்மன், கூன்வில்)

**தன்ன**: ஒரு குறில், ஒரு மெல்லின மெய், மெல்லின அல்லது இடையின உயிர்மெய்க்குறில் ஒன்று சேர்ந்தது. (கண்ணி, மென்வி)

முற்கூறியதோடு ஈற்றில் மெல்லினம் அல்லது இடையின ஒற்று ஒன்று சேர்ந்து வருதல். (அண்ணன், பொன்வில்)

**தய்ய**: ஒரு குறில், இடையின ஒற்று, இடையின அல்லது வல்லினக் குறில் ஒன்று வருதல். (வள்ளி, செய்தி)

முற்கூறியதோடு இடையின அல்லது மெல்லின மெய்களில் ஒன்று சேர்ந்து வருதல். (வள்ளல், நெய்தல்)

இந்த எட்டு அலகுகளையும் நினைவிற் கொண்டு அடுத்த நூற்பாவைப் பார்க்க வேண்டும். (487)

**59) வல்லினம் பற்றித் தத்தவும், முன்பின்**
**நீடலும் பிறக்கும்; மெல்லினம் புணர்ந்து**
**தந்தவும், நீட்சியும், தன்னவும் பயக்கும்;**
**இடையினம் தய்ய இயங்கச் செய்யும்;**
**தனவும் பெருக்கமும் பொதுப்பட வருமே.**

வல்லொற்று மற்றும் வல்லின உயிர்மெய்யின் கூட்டினால் தத்தச் சந்தமும், அதன் முன் நீடல் ஆன தாத்தச் சந்தமும்

பின் நீடல் ஆன தத்தாச் சந்தமும் தோன்றும். மெல்லின மெய் வல்லுயிர்மெய்யோடு பொருந்துவதால் தந்தச் சந்தமும், அதன் முன் பின் நீண்ட தாந்த, தந்தா என்பனவும் தன்னச்சந்தமும் வரும். இடையினத்து ஒற்று நன்கு ஒலிக்கப் படும்போது தய்யச் சந்தத்தை உண்டாக்கும். தனச் சந்தமும், இதன் முன் பின் நீட்சியால் வரும் தான, தனா எனு மிரண்டும் அனைத்து இனங்களையும் கொண்டு பொதுவாக வரும் என்றவாறு.

இந்நூற்பா எந்தஎந்தச் சந்தங்களில் எவ்வெவ் வகையான எழுத்துகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது என்பதைக் காட்டு கிறது. நெய்த்து, கர்த்தன் என்பன தத்தச் சந்தமெனினும் இவற்றிலுள்ள இடையின மெல்லின மெய்கள் (ய்,ன்) ஒலிப்ப தில்லை. தத்தச் சந்தத்திற்கு முக்கிய ஒலி வல்லெழுத்துகளால் வருகிறது. அவ்வாறே தந்தச் சந்தத்தில் மெல்லின வல்லினப் புணர்ப்பே முக்கியமானது. மெல்லினமெய் தன்னின அல்லது இடையின உயிர்மெய்யுடன் கூடித் தன்னச் சந்தத்தைத் தோற்றுவிக்கிறது. இடையினமெய் இடையின உயிர்மெய் யோடு சேரும்போது மட்டுமே நன்கு ஒலிக்கும். அப்போது தய்யச் சந்தம் வரும். இடையின மெய்கள் ஒலித்தால் தய்யச் சந்தம். வல்லின மெல்லின மெய்களுடன் சேர்ந்த – ஒலிக் காத – இடையின மெய்க்கு ஓசை இல்லை. தன, தான, தனா மூன்றும் இனப்பாகுபாடின்றிப் பொதுவாக வரும். (458)

**60. தத்தவும் தன்னவும் தய்யவும் தனவும்**
**நால்வகைக் குலம்என நவிலத் தகுமே.**

தத்த, தன்ன, தய்ய, தன என்பனவற்றை முறையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று கூறலாம் என்றவாறு.

இவர் ஏழாமிலக்கணத்தில் யாப்பு வகைகளுக்கும் வருணம் கூறுவார். இங்குச் சந்தங்களுக்கும் கூறுகிறார். இது இந்நூலாசிரியர் காலச் சமுதாய அமைப்பின் தாக்கம் ஆகும். இத்தகைய கருத்துகளை ஆழமாகவும் அகலமாகவும் ஆராய வேண்டிய தில்லை. (459)

**61.** **இருவகைச் சந்தமும் பிறழும் சிற்சில**
**ஐந்தாங் குலம்என்று அறைவது முறையே.**

தன்ன, தய்ய ஆகிய இரு சந்தங்களும் சில இடங்களில் மாறுபடும். அவ்வாறு மாறுபடுமிடங்களில் அவற்றை ஐந்தாங் குலத்தைச் சேர்ந்தனவாகக் கொள்ளவேண்டும் என்றவாறு.

"குறிலுடன் இடையினத்து ஒற்றும் மெல்லினத்து உயிர்மெய் யெழுத்தும் ஒன்றினும், அஃதோடு அவற்றின் ஒரொற்று அணு கிற்றாயினும் தன்னவும் தய்யவும் பிறழுமன்றே"[1] "பொய்மை என்பதும் வர்மம் என்பதும் மெய்ம்மை என்பதும் தன்னவும் தய்யவும் பிறழ்வதன் உதாரணம் என்பர் பெரியோர்"[2] என்பன வண்ணத்தியல்பு நூற்பாக்கள். (460)

**62.** **தத்தவும் தந்தவும் தாத்தவும் தாந்தவும்**
**ஆண்பால் ஆம்என்று அறைவது முறையே.**

தத்த, தந்த, தாத்த, தாந்த ஆகிய நான்கு சந்தங்களையும் ஆண்பாற் சந்தங்களாகக் கொள்ளல் தகும் என்றவாறு.

இவை வன்மையான ஓசை உடையனவாதலின் ஆண்பால் என்றார். (461)

**63.** **தன்னவும் தய்யவும் தனவும் தானவும்**
**பெண்பால் ஆம்எனப் பேசிடல் தகுமே.**

தன்ன, தய்ய, தன, தான என்னும் நான்கு சந்தங் களையும் பெண்பாற் சந்தங்கள் எனலாம் என்றவாறு.

இவை மென்மையான ஓசை உடையனவாதலின் இவ்வாறு கூறப்பட்டது. (462)

**64.** **தானவும், தய்யவும், தன்னவும், பிறழ்வன**
**அனைத்தும் அலிப்பால் ஆம்எனல் முறையே.**

---

1 வண்ணத்தியல்பு 80
2 ,, 81

தாய்ய, தான்ன என நின்று, தான என வரும் பிறழ் சந்தமும், தய்ய தன்ன எனப் பிறழ்ந்தவையும், இவ்வாறு மாறி வருவன அனைத்தையும் அலிப்பால் எனலாம் என்றவாறு.

தன்ன, தய்ய என்ற சந்தங்களில் முதல் எழுத்து நெடிலானால் அது தான்ன, தாய்ய ஆகாமல் தான எனவே ஒலிக்கும். (ஆன்நெய், தாய்மை) தய்ய தன்ன பிறழ்வு முன் அறுபத்தொன்றாம் நூற்பாவில் கூறப்பட்டது. இவ்வாறு பிறழ்ந்து வருவனவற்றையே அலிப்பால் என்கிறார்.

முன் நூற்பாவில் கூறியது இயல்பாக வரும் சந்தங்களை, இது பிறழ்ந்து வந்தனவற்றை. இதுவே இரண்டிற்கும் உள்ள வேறுபாடு.

காது - இயல்பான தானச் சந்தம் – பெண்பால்
ஆன்நெய் - பிறழ்ந்த தானச் சந்தம் - அலிப்பால்
வள்ளி, கன்னி – இயல்பான தய்ய, தன்னச் சந்தம் – பெண்பால்
பொய்மை, பொய்ம்மை என மெய்மிக்கு வந்த தன்னச் சந்தம் - அலிப்பால்.

பிறழ்வன அனைத்தும் என்றதனால், "தன்னவும் தய்யவும் சாற்றும் சொற்களில் ஒற்றின் பின்வரும் உயிர்மெய் வேறேல் சந்தி வேற்றுமையில் தன எனப்படுமே"[1] என்ற பிறழ்ச்சியை யும் கொள்க. (463)

**65. தத்தா எனவரல் ஆதியைப் பெருக்கிக்**
**குசக்குலம் முதலிய கூறலும், பிறழ்ச்சியின்**
**நீட்சி பற்றிக் கன்மரம் ஆதிய**
**முதிர்அலி வகுத்தலும் முறையே ஆயினும்**
**பயனின்மை கருதிப் பகர்ந்திலம் அன்றே.**

தத்தா, தந்தா, தனா என்பன போன்று ஈறு நீண்ட சந்தங் களைப் பலவாறாக விரித்துக் குயவர்களினம் என்று சொல்ல லாம். கன்மரம் என்ற சொல் தனன என வந்த இடத்துப்

1 வண்ணத்தியல்பு 82

பிறழ்ச்சியோடு நீட்டலும் பெற்றதால் அலித்தன்மையில் முதிர்ச்சி பெற்ற சந்தம் எனலாம். இவ்வாறு எல்லாம் கூறலா மாயினும் இவற்றால் பயனின்மை கருதிக் கூறிற்றிலம் என்ற வாறு.

தத்த, தந்த, தன ஆகிய சந்தங்கள் ஈறு நீண்டு தத்தா முதலியன ஆயின. கன்மரம் என்ற சொல்லில் கன்ம என்பது தன்னச் சந்தம். ஒரு குறிலும் ஒற்றும் சேர்ந்து கன்மரம் என வந்தால் தன்னன ஆகும். இதுவே சந்தி வேற்றுமையில் தன எனப்பட்டால் தனனச் சந்தம் ஆகிவிடும். அப்போது தன்னச் சந்தம் தனவாகப் பிறழ்ந்ததோடு இறுதி நீடலும் பெற்றது. அவ்வாறு வருமிடங்களில் அலித்தன்மை மிக்கதாகக் கொள்ள லாம் என்கிறார். இவ்வண்ணம் பலவாறு பிரித்துப் பிரித்துப் பெயரிடுவதால் இலக்கிய ஆட்சிக்குச் சற்றும் பயனில்லை என்ப துவும் நூலாசிரியரால் தெளிவாக்கப்பட்டது. இக் கருத்தை இவ் வியல்பின் அறுபதாம் சூத்திரத்திலிருந்து இந் நூற்பாவரை அனைத்திற்கும் ஏற்புடையதாகக் கொள்ளலாம். (464)

**66.** **எவ்வழி எவர்எவர் இயம்பும் வண்ணமும்**
**ஆறு சமயமும், அவற்றின் புறம்பும்**
**வீறு பொதுநெறி விளக்கமும் போன்றுஓர்**
**எண்வகைத் தாகி இலங்குறும் எனத்தேர்ந்து**
**இயம்புநர்க்கு அருட்பேற்று இச்சைஉண் டாமே.**

இறைவனின் தன்மை பற்றி யார்யார் எப்படிஎப்படி உரைத்தாலும் அவை யாவும் ஆறு சமயங்கள், சமயாதீதம், சமரசம் என்னும் எட்டினுள் ஒன்றாக அடங்கிவிடும். அது போலவே எல்லா வகையான சந்தங்களும் முன்கூறப்பட்ட தத்த முதலிய எட்டினுள் அடங்கிவிடும். இதனை உணர்ந்து இறை யுணர்வுடன் சந்தப்பாடல்களைப் பாடுபவர்க்கு அவனருளைப் பெறவேண்டும் என்னும் பேராவல் ஏற்படும் என்றவாறு.

"இன்னும் ஒருக்கால் எழுத்து உரு ஒருவன் காட்ட உணராக் கதிபெற நாடி முயலவல் லானே முழுப் புலமையன்"[1] என்பது இவர் கருத்தாகும். எனவே மொழிப் புலமையையும்

1 ஏழா. இலக். 310

இறையருள் நாட்டத்தையும் எப்போதும் இணைத்தே கூறு வார். மேலும் சந்தப் பாடல்களின் பாடுபொருளைப் பற்றி இவர், "தமது வேட்கையும், தன்மையும், விரும்பும் தெய்வச் சீரும், செழுந்தமிழ்க்கு அழகாம் வண்ணப் பாவா வழங்கலும் முறையே"[1] என்கிறார்.

சௌரம், சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்பன ஆறு சமயங்கள். இந்த அறுசமயக் கடவு ளர்க்கும் மேற்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டு. அது இவற் றுள் ஊடுருவிக் கலந்தும், தனித்தும் இருக்கும் என்பது சமயா தீதம். "கடவுளாகிய உள்பொருள் என்னால் வழிபடப்படும் ஒன்றே. அதுவே பல்வேறு பெயர் வடிவங்களுடன் பலரால் வழிபடப்படுகிறது" என்பது சமரசம். எல்லாச் சமயங்களையும் இந்த எட்டினுள் அடக்கிவிடலாம். அவ்வாறே கணக்கற்ற குழிப்புகளையும் கூறப்பட்ட இந்த எட்டு அலகுகளில் அடக் கலாம் என்கிறார்.

"கல்வி என்பது சகல நூற்களையும் கற்றுப் பிரசங்கிப்பது அல்ல. தெய்வ நிச்சயமும், திருவருட் பிரசாத விருப்பமும், அதற்குத் தக்க முயற்சியும் ஏற்படப் பெறுதலேயாம்"[2] ஆதலின் அருட்பேற்று இச்சையுண்டாமே என்றார். (465)

**67. தன்னவும் தய்யவும் தனஎனத் தொனிதரு**
**சந்திவேற் றுமையிடை மெய்க்குஎலாம் அதனதன்**
**வருக்கத்து உயிர்மெய் தான்வர வொண்ணாது;**
**இம்முறை அந்நூல் இனத்தைச் சுட்டிடல்**
**போல்சிலர் மயங்கப் புகன்றது அன்றே.**

தன்ன, தய்ய ஆகிய இரு சந்தங்களிலும் நடுவில் உள்ள மெய்யெழுத்தைத் தொடர்ந்து அதன் இனத்தைச் சேர்ந்த உயிர்மெய்க் குறிலே வந்தால் எந்த இடத்திலும் அது தன என ஆகாது. தன்னினம் வரவொண்ணாது என்ற வாய்பாட்டால் கூறும் இம்முறை வண்ணத்தியல்பு நூலில்(மெய்யடுத்த குறிலின்)

---

1 வண்ணத்தியல்பு 93

2 சத்திய வாசகம் 62

இனத்தைப் பற்றிச் சிலருக்கு ஐயம் உண்டாகும்படிக் கூறிய தன்று என்றவாறு.

அந்நூலில் ஐயம் தோன்ற இடம் உண்டு. எனவே அச் சந்தேகத்தை நீக்க இந்நூற்பா தெளிவாகக் கூறப்பட்டது என்பது போந்த பொருள்.

"தன்னவும் தய்யவும் சாற்றும் சொற்களில் ஒற்றின் பின் வரும் உயிர்மெய் வேறேல் சந்தி வேற்றுமையில் தன எனப் படுமே"[1] என்பது இந்நூற்பாவாற் சுட்டப்படும் வண்ணத் தியல்புச் சூத்திரமாகும்.

கண்ணி, பொன்வில், கன்மம், அங்ஙன் போன்றவை தன்னச் சந்தங்களாம். வள்ளி, செய்தி, வெய்ய, செல்கை போன்றன தய்யச் சந்தங்களாம். இவை சில இடங்களில் தன என மெலியும். அதைக் கூறும் வண்ணத்தியல்பு நூல் "ஒற்றின் பின்வரும் உயிர்மெய் வேறேல்" என்று மட்டும் குறிப்பிடுகிறது. உயிர்மெய் வேறு என்றால் இடையில் உள்ள அந்த ஒரு மெய்யைத் தவிர மற்ற பதினேழு மெய்களும் வருமோ என்ப தோர் ஐயம் வரும். கன்னி என்பதில் ஒற்றும் உயிர்மெய்யும் ஒன்றாகிறது. கன்று என்று வந்தால் உயிர்மெய் வேறு தானே? இது மெலியலாமா என்பது ஐயம்.

இதனை நீக்கவே அறுவகை இலக்கணத்தின் இந்நூற்பா தெளிவாக எதிர்மறை முகத்தால் 'அதன்அதன் வருக்கத்து உயிர்மெய் தான் வர ஒண்ணாது' என்கிறார். கன்று என்பதில் ற,ன இரண்டும் ஒரு வருக்கமாம். இவ்வாறு வந்தால் இங்கே தந்தச் சந்தம் ஆகிவிடுகிறது. தன்ன, தய்யச் சந்தங்கள் மெலியுமே அன்றி, மெல்லொற்றின் ஒலிஆதிக்கம் பெற்ற தந்தச் சந்தம் மெலியாது. இதனால் தன்னச்சந்தத்தில் வருகின்ற மெல்லின மெய்களுக்கு இனமான க,ச,ட,த,ப,ற க்கள் நீக்கப் பட்டன. அவ்வருக்கத்து உயிர்மெய்யே வராது என்பதால் அவ் வெழுத்தும் வராதென்பது தெளிவு. இதனால் கன்னி, செய்ய

1 வண்ணத்தியல்பு 82

போன்ற தன் உயிர்மெய்யே பெற்ற தன்ன தய்யச் சந்தங்கள் தன என மெலியாது என்பது பெறப்பட்டது. (466)

**68. இருவகை வண்ணம் ஒன்றொடொன்று இசைவுறும்**
**இடத்தைச் சந்திஎன்று இயம்புவர் பெரியோர்.**

இரண்டுவகையான சந்தங்கள் தம்முள் பொருந்தும் இடத்தைப் புலவர்கள் சந்தி எனக்கூறுவர் என்றவாறு.

தத்ததந்ததன தத்ததந்ததன தத்ததந்ததன தனதானா என ஒரு குழிப்பை எடுத்துக்கொள்வோம். இதில் தத்த என்ற சந்தமும் தந்தவும் இணைவது முதல் சந்தி. தந்தவும் தனவும் இணைவது இரண்டாவது சந்தி. தனவும் தத்தவும் இணைவது மூன்றாவது சந்தி. இக்குழிப்பில் இவ்வாறே பத்து சந்திகளையும் காண்க. (467)

**69. மெல்லின மெய்யீற்று உள்ளவண் ணத்தொடு**
**வல்லினத்து உயிர்மெய் முதல்உள வண்ணம்**
**பொருந்தில் இரண்டரைச் சந்தம் எனலாம்;**
**இரண்டே ஆம்என்று உரைப்பார் சிலர்; அது**
**குத்தல் என்று உரைக்கும் குற்றம் ஆமே.**

ங,ஞ,ண,ந,ம,ன ஆகிய மெல்லின ஒற்றுகளால் முடியும் ஒரு சந்தத்தோடு வல்லின உயிர்மெய்யைத் தன் முதலெழுத்தாகப் பெற்றதொரு சந்தம் சேர்ந்தால் அதன் கூட்டத்தை இரண்டரைச் சந்தம் என்று கொள்ளலாம். அங்ஙனமின்றிச் சிலர் இரண்டு சந்தமாகவே கொள்வர். அவ்வாறு கொண்டால் வரும் ஓசை வேறுபாடு குத்தல் என்னும் குற்றமாகக் கொள்ளப்படும் என்றவாறு.

தத்தா தந்தா என்ற குழிப்பில் எற்காண் கந்தா, சம்போ, தந்தாய், பண்பீர் என வருவதாக வைத்துக் கொள்வோம். மெல்லினமெய் முன் வல்லினம் வந்தால் நன்கு ஒலிக்கும். அது காதுக்குத் தத்தாந் தந்தா போல் தொனிக்கும். (எற்காண் கந்தா, எற்காண் மங்காய் என்பனவற்றைத் தனித்தனியே உச்சரித்துப் பார்த்தால் இவ்வேற்றுமை தெரியும்) இரு சந்தங்

களையும் விட்டிசைத்துப் படித்தால் இரு சந்தமே வருவதால் அவ் வண்ணமே கொள்ளலாம் என்பார் கூற்றை மறுத்துப் புணர்ச்சியில் ஓசை மிகுதலின் அவ்வாறு வருதல் குத்தல் என்னும் ஒலிக்குற்றம் ஆகும் என்று கூறுகிறார். எனவே குழிப்பு இரு சந்தமாக உள்ள இடங்களில் மெல்லொற்றின் முன் வல்லினம் வரலாகாதென விலக்குகிறார். (468)

70. ஈற்றில் இடையின ஒற்றுஉறும் வண்ணச்
சொல்லொடு வேறுஇனத்து ஒன்று புணர்ந்தும்அவ்
வண்ணம் தோன்றும்; வாராது ஒழியினும்
குத்தற் குற்றம்என்று உரைப்பது குணமே.

ய,ர,ல,வ,ழ,ள என்னும் இடையின மெய்யால் முடியும் சந்தச் சொற்களுடன் இடையினமல்லாத வேறு இனத்து எழுத்தால் தொடங்கும் ஒரு சொல் சந்தியில் சேர்ந்தாலும் தய்யச் சந்தம் தோன்றும். ஒருவேளை விட்டிசைத்தலால் அவ்வோசை தெளிவாகப் புலப்படாமலிருந்தாலும் கூட இத்தகைய சந்தப் புணர்ச்சிகளைக் குத்தற் குற்றம் உடையனவாகக் கொள்ளுதலே முறை என்றவாறு.

தய்யச் சந்தம், இடையின மெய்யின் ஒலிஆதிக்கத்தால் தோன்றும் வண்ணம் ஆதலின் "அவ்வண்ணம்" என அது கூறப்பட்டது. வேறு இனத்து எனப் பொதுப்படக் கூறினாலும் இடையின மெய்யோடு கூடித் தய்யச் சந்தமாகும் வேறு இனம் வல்லினமே ஆகலின் அதனையே சிறப்பாகக் கொள்க. இது பற்றியே வண்ணத்தியல்பிலும், "மூவினத் தெழுத்தினும் முழுமையைக் குறிக்கும் சந்திகள் தோறும் தணவுவ தணந்து சேர்ப்பவை சேர்ப்பது சிறந்தோர் வழக்கே"[1] எனப்பட்டது.

அம்பெய் தவனெவன்; உயிர்உய் மாறுபுரி என்னும் இரு தொடர்களை ஆராய்வோம். அம்பெய் — தந்த. தவனெவன் — தனதன. தந்த தனதன என்று அம்பெய்தவனெவன் எனச் சேர்த்தால் யகரமெய் வல்லினத்தோடு சேர்ந்து ஒலிபெற்று விடுகிறது. அம்பெய் + தவன் என்ற சந்தியில் பெய்த என்ற

1 வண்ணத்தியல்பு 84

தய்யச் சந்தம் வந்து விடுகிறது. இது தந்ததனதன ஆகாமல் தந்தய்ய தனன ஆகிவிடுவதால் குத்தல் குற்றம். இவ்வாறே உயிர்உய் - தனன; மாறுபுரி - தானதன; உயிருய்மாறுபுரி— தனனதானதன ஆகாமல் தனதய்யாதனன ஆதல் குத்தலாம். இடையின மெய்யோடு மெல்லின உயிர்மெய் சேருவதை விட வல்லினம் சேர்ந்தால் குத்தல் நன்கு தெரியும். (469)

**71.** **தத்தன எனலும் தந்தத்த எனலும்**
**தனத்தா என்றிடல் ஆதிய பிறவும்**
**தொடர்ச்சி இயல்புஎனச் சொல்வது முறையே.**

தத்தன, தந்தத்த, தனத்தா என்பனவற்றையும், இவை போல்பவை அனைத்தையும் சந்தங்களின் தொடர்ச்சி எனக் கூறுதல் மரபாம் என்றவாறு.

தத்தச் சந்தத்தோடு ஒரு குறிலோ அல்லது ஒரு குறிலுடன் இடையின மெல்லின மெய்யோ சேர்ந்து தத்தன என வருகிறது. (கற்பனை, நற்றமிழ்) ஆதிய என்றதனால் தந்தன, தய்யன, தன்னன, தனன, தாத்தன, தாந்தன, தானன என்பனவற்றையும் கொள்க. தத்தனா முதலியவையும் இதில் அடங்கும்.

தந்தச் சந்தத்தோடு ஒரு வல்லொற்றும் குறிலும் இடையின, மெல்லின மெய்பெற்றும் பெறாமலும் சேர்ந்து தந்தத்த ஆகிறது. (தென்றிக்கில், இன்றைக்கு) தத்தத்த முதலியனவற்றையும் இதில் அடக்குக.

தனச் சந்தத்தோடு ஒரு வல்லொற்றும் நெடிலும் இடையின, மெல்லின மெய் பெற்றும் பெறாமலும் கூடி தனத்தா ஆகும். (பணத்தால், சிறப்பா) தத்தத்தா முதலியவற்றையும் ஆதிய என்றதால் இதில் அடக்குக.

இவைகள் எல்லாம் ஒரு சந்தத்தோடு மற்றுமொரு முழுச் சந்தம் சேராமல் ஒரு பகுதி தொடர்ந்து இணைந்து வந்தன. எனவே தொடர்ச்சி இயல்பு எனப்பட்டது. (470)

**72.** **தத்தவில் தாத்தவும் தந்தவில் தாந்தவும்**
**தனவில் தானவும் பிறந்த வாறு**
**தன்ன தய்யவில் வரும்என மருளாது**
**அம்முறை தோற்றலும் தானச் சந்தம்**
**தான்எனத் துணிவுறத் தகும்தகும் தகுமே.**

தத்த, தந்த, தன என்ற சந்தங்களில் முதல் எழுத்து நெடிலானால் முறையே தாத்த, தாந்த, தான வண்ணங்கள் தோன்றுகின்றன. இவ்வாறே தன்ன, தய்யச் சந்தங்களிலும் முதல் எழுத்து நீண்டால் அவை முறையே தான்ன, தாய்ய ஆம் என மயங்கலாகாது. அவ்வாறு (முதல் நீண்டு) வருவனவும் தானச் சந்தமேயாகும்; வேறன்று என்றவாறு.

நன்மை-தன்ன; நான்மை-தான்ன அன்று; தானச்சந்தமே.
வெல்கை - தய்ய; வேல்கை-தாய்ய அன்று; தானச்சந்தமே.

நெடிலை அடுத்த இடையின மெல்லின மெய்கள் ஒலிப்பதில்லை. எனவே இவை தானச் சந்தமாயின. "நெடிலோடு இடையின மெய்யும் குறிலும் தான ஆம் எனச் சாற்றுதல் முறையே"[1] "நெடிலும் மெல்லினத்துஒற்றும் அவ்வினத்தோடு இடையின மென்னும் இவற்றுஒர் உயிர்மெய்க் குறிலும் சேர்ந்து குலவினும் தானவே"[2] என்பன வண்ணத்தியல்பு நூற்பாக்கள்.

துணிவுபற்றித் தகும் என மும்முறை கூறினார். (471)

**73.** **ஒவ்வோர் வண்ணமும் சிற்சில சொற்கொளும்;**
**அவற்றுள் தனவில் சுருக்கமும், தானவில்**
**பெருக்கமும் இலைஎனப் பேசத் தகுமே.**

(எட்டுச் சந்தங்களுள்) ஒவ்வொன்றும் சிற்சில அசைகளைக் கொள்ளும். அவைகளில் தனச்சந்தம் வரும் எழுத்தமைதியே மிகக் குறைந்ததாகும். தானச் சந்தம் பிறக்கும் எழுத்தமைதியே அனைத்திலும் மிக அதிகமாகும் என்றவாறு.

---

1 வண்ணத்தியல்பு 56
2 வண்ணத்தியல்பு 58

குறில் இரண்டு இசைதல், இதனோடு மெல்லின அல்லது இடையின மெய் சேர்தல் என்ற இருவகையான எழுத்துப் புணர்ப்பான் மட்டுமே தனச் சந்தம் தோன்றுகிறது. (குரு, தவர், சுதன்)

ஆனால் தானச் சந்தமோ எனில் -

1. நெடில் குறில் இணைதல் (காது)
2. இதனோடு மெல்லின அல்லது இடையின மெய் சேர்தல் (பாதம், சூதர்)
3. நெடில், இடையினமெய், குறில் வருதல் (கேள்வி)
4. இதனோடு மெல்லின அல்லது இடையின மெய் சேர்தல் (சார்கண், கூர்முள்)
5. நெடில், மெல்லினமெய், மெல் அல்லது இடையினத்தைச் சேர்ந்த உயிர்மெய்க் குறில் வருதல். (மான்மி, தேன்வி
6. இதனோடு மெல் அல்லது இடையின மெய் சேர்தல் (மாண்மன், கூன்வில்)

இரண்டே இரண்டு வகையான எழுத்துக் கூட்டத்தால் தனச்சந்தம் வருகிறது. இதைவிடக் குறைவான அமைப்பு இல்லை. இவ்வாறே ஆறுவகையாக வரும் தானச் சந்தத்தை விட அதிகமான அமைப்பும் இல்லை.

இந் நூற்பாவில் சொல் என்னும் பதம் அசை என்ற பொருளில் வந்தது. இந் நூலாசிரியர் இச்சொல்லை இப் பொருளில் ஆளலை முன்பே கண்டோம். (472)

**74.** **தனவும் தானவும் எளிதினும் எளியன;**
**தத்தவும், தந்தவும் எளியன; தாத்தவும்**
**தாந்தவும் வலியன; தய்யவும் தன்னவும்**
**வலிதினும் வலியன என்பது வழக்கே.**

வண்ணக் குழிப்புகளை அமைத்துக் கவிபாடும்போது தன, தான என்ற இரு சந்தங்களும் மிகமிகச் சுலபமானவையாம். தத்த, தந்த இரண்டும்(முன்னதைவிடக் கடினமாயினும்) எளியவையே. தாத்த, தாந்த இரண்டும் பாட அரிய சந்தங்கள் ஆகும். தய்ய, தன்ன எனும் இரண்டும் மிகமிக அரியனவாகும் என்றவாறு.

இந் நூற்பா எளிதில் புணர்க்க வாய்ப்பான சந்தங்களிலிருந்து புணர்த்தற்கரிய சந்தங்களை ஏறுமுகத்தால் சுட்டிக் காட்டுகிறது. (473)

**75. துறைபகர் வண்ணப் பாவின்முற் பகுதியை**
**ஆண்கலை என்றும்மற்று ஏனையைப் பெண்கலை**
**என்றும் உலகோர் இயம்பிடல் மிகையே.**

அகப்பொருள் துறைகளில் ஒன்றை விரித்துப் பாடுகின்ற வண்ணப்பாவின் முற்பாதியை ஆண்கலை என்றும், பிற்பாதியைப் பெண்கலை என்றும் அறிஞர்கள் கூறுவர் என்றவாறு.

ஒரு வண்ணப்பா எட்டுக் கலைகளை உடையது. இரு கலைகள் சேர்ந்தது ஓரடி எனலாம். இவ்வாறு ஒரெதுகைத்தாய நான்கு அடிகள் வரும். முதல் இரண்டு அடிகள் (நான்கு கலை ஆண்கலை எனப்படும். இவ் வாண்கலையின் முதல் மூன்று கலைகளில் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகளும்,நான்காவதில் ஊர்ச்சிறப்பும் இடம்பெறும். ''முந்திய பகுப்பின் கலையோர் நான்கில் தலைவன் .தன்புகழ் மூன்றிற் கூறிமற் றொன்றில் அன்னவன் உரைநாட் டணிசொற் றேனைய கலைநான்கு இடத்தும் பல்வகைத் துறையில் ஒன்றைத் துகளறக் கூறல் வண்ணப் பாவின் வழக்கெனத் தகுமே''1 என்பது இதன் இலக்கணம்,

அகத்துறை இடம் பெறுகின்ற மூன்று நான்காவது அடிகள் பெண்கலை எனப்படும். பொதுவாக வண்ணங்களில் ஆண்கலையைவிடப் பெண்கலை சற்று எளிமையாக இருக்கும்.

---

1 வண்ணத்தியல்பு 91

சுவாமிநாதம் இவ்வண்ணப்பாடலின் இலக்கணத்தைத் "தலைவனுக்கு நாற்கலையும் பொருட்குஉறை நாற்கலையும் சந்தம் இட்டு மும் மூன்று துள்ளலும்தொங்கலும்ஆம் கலைகள் எட்டாம் வண்ணம்"[1] எனச் சுட்டிக் காட்டுகிறது. (474)

**76. அடிகளின் ஈற்றுக் குழிப்புச் சிதைவுறத்**
**தொடுத்தல் மிகைபடும் வாய்பாடு; ஆயினும்**
**திருந்தக் கூறிடல் சிறப்பினுட் சிறப்பே.**

ஒவ்வொரு கலையின் கடைசியில் வருகின்ற சொல்லை எடுத்துக் கொண்ட குழிப்புக்கு ஏற்றதாக அமைக்காமல்- பெரும்பாலும் நெடிலுக்குப் பதில் குறிலாக - சிதைவுறும்படி இயற்றுதல் பெரிதும் பழக்கத்தில் உள்ளது. ஆன்றோர் ஆட்சி இவ்வாறு இருப்பினும்கூட அங்கும் குழிப்புச் சிதையாமல் சொற்களை அமைப்பதுதான் சாலச் சிறந்ததாகும் என்றவாறு.

ஓர் உதாரணம் காண்போம். "தானாத் தனதானா" என்ற சந்தக் குழிப்பில் அருணகிரிநாதர் அருளியது கீழ்க்கண்ட திருப்புகழ்.

தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராசா
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே.[2]

இத் திருப்புகழில் தனதானா என முடியவேண்டிய எட்டு கலைகளுள் பிணிதீர, துமஞான, சியதான என்னும் மூன்று தனதான எனக் குறிலாக முடிந்துள்ளன. இசைக்கும் போது அது நீட்டி இசைத்துச் சரிசெய்து கொள்ளப்படும். அருணகிரிநாதரின் திருப்புகழில் அநேகமாக எல்லாப் பாடல்களிலும் இத் தன்மையைக் காணலாம்.

இவ்வாசிரியர் இவ்வாறு வருவது தவறு என்று கூறவில்லை. தமிழ் யாப்பில் குறிலே நெடிலாக ஒலிக்கும் இடங்கள் உண்டு

1 சுவாமிநாதம் 172
2 திருப்புகழ் 959

என்பதை இவர் அறிவார். என்றாலும் நெடிலாக ஒலிக்க வேண்டிய நிலைஏற்படாமல் நெட்டெழுத்தாகவே அமைந்தால் மிகச் சிறப்பு எனப்படுகிறது. குறில் நெடில் மாற்றத்தோடு கலையின் ஈற்றில் குழிப்பில் இல்லாத மெல்லொற்று வருதல், வல்லொற்று வருதல் போன்றனவற்றையுஞ் சேர்த்துக் குழிப்புச் சிதைவுற என்றார். கீழ்க்கண்ட திருப்புகழில் அச்சிதைவைக் காணலாம்.

களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்
கழுவு சரிபுழு கொழுகிய குழலினர் எவரோடுங்

கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிகொடு மொழிகொடு
தளர விடுபவர் தெருவினில் எவரையும் நகையாடிப்[1]

தனன தனதன தனதன தனதன...தனதானா என்ற குழிப்பில் தனதானா வருமிடத்தில் 'எவரோடுங்', 'நகையாடிப்' என்று ஒலியோடு கூடிய ஒற்றடுத்து வந்து சிதைவாயிற்று. (475)

**77. கொடுந்தமிழ்ப் புணர்ச்சி வண்ணம் ஆயினும்
பொருட்சுவை யாதிய நலம்பல பொருந்தில்
தமிழ்க்கடற் குளிப்பவர் தழுவல்சற் றுளதே.**

எளிதிற் பொருள் விளங்காதஅளவு கருகலான சொற்களால் அமைந்த வண்ணப்பாவாக இருந்தாலும் சொற் பொருளில் சுவை, சந்த அமைதி, கூறப்பட்ட பொருளின் சிறப்பு போன்ற சிறந்த அம்சங்கள் பொருந்தியிருந்தால் தமிழ் இலக்கியத்தில் மூழ்கிக் களிக்கும் பேரறிஞர் அதனை ஓரளவு மகிழ்ந்து ஏற்றுக்கொள்வர் என்றவாறு.

வண்ணப்பாவில் பயிலும் சொற்கள் வெண்சொற்களாகவும், செஞ்சொற்களாகவும் இருத்தல் வேண்டும். எளிதில் பொருள் புரிய வேண்டும். "புகரப் புங்கப் பகரக் குன்றிற்

---

1 திருப்புகழ் 33

புயலிற் றங்கிப் பொலிவோனும்"[1] என்பதுபோல் அரிதின் முயன்று பொருள் காணக் கூடியனவாக இருத்தலாகாது. வண்ணத்தியல்பு இக்கருத்தை – வண்ணத்தில் விலக்கப்பட வேண்டிய பிறவற்றுடன் சேர்த்துப் பின்வருமாறு கூறுகிறது. "வண்ணத்து அளவில் வடமொழி, மருஉச்சொற் புல்லினும்- பொலிவு குன்றலும், குழிப்புச் சிதைவும், கொடுந்தமிழ்ப் புணர்ப்பும், அளபெடைச் சேர்க்கையும் ஆகாது அன்றே".[2]

சில சந்தப்பாடல்களில் இத்தகைய கருகிய சொல்லாட்சி இருந்தால் அவை வேறு சிறப்புகளைப் பெற்றிருக்குமேல் அதற்காக அவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதே என்கிறார். தழுவல் சற்று உளதே என்றதனால் அப்படி வரா மல் இயற்றுவதுதான் சிறப்பு எனக் குறிப்பால் வலியுறுத்தப் படுவதாயிற்று. (476)

78. மதுரம் குன்றிக் கிடப்பினும் வைத்துள
குழிப்புப் பிறழா வண்ணம் குளறிடில்
அஃதுணர் புலவர்சற்று அகம்மகிழ் வாரே.

சொல் இனிமை, பொருளினிமை குறைந்திருந்தாலும் எடுத்துக் கொண்ட சந்தக் குழிப்பு சற்றும் தவறாதபடி, ஏதோ ஒன்றை ஒருவன் உளறியிருந்தாலும் சந்தப்புணர்ச்சியின் அருமையை அறிந்தவர்களாகிய மெய்ப்புலவர்கள் கொஞ்சம் மகிழ்ச்சியடைவர் என்றவாறு.

மதுரங் குன்றல் விலக்கப்பட்டதை மேலே காட்டினோம். அப்படிச் சுவை குறைந்திருந்தாலும் குழிப்புச்சிதைவுஇல்லாமல் இயற்றின் புலவர் மகிழ்வர் என்கிறார். அஃது என்பது சந்தப் பாடல்களின் இயல்பையும் அதனை இயற்றுவதில் உள்ள சிரமத்தையும் குறித்தது. சுவையற்ற பாடல் ஆதலின் குளறிடில் என்றார். இதனால் குழிப்பிற்கமையப் பாடுவதன் அருமை உரைக்கப்பட்டது. இனிமையற்றவைகளைக் குளறுதல் என்று கூறி குறிப்பால் விலக்கினார். (477)

---

1 திருப்புகழ் 77
2 வண்ணத்தியல்பு 7

**79. ஆகா அளபெடை அணையினும் அம்முறை
துள்ளல் தோறும் துலக்கவல் லானேல்
அ∴தும்ஓர் வியப்புஎன்று அறைவார் சிலரே.**

(வண்ணத்தியல்பு நூலில் வண்ணப்பாடலுக்கு ஆகாது என்று) விலக்கப்பட்ட அளபெடை வந்திருந்தாலும்-அதே மாதிரி அளபெடை ஒவ்வொரு துள்ளலிலும் வரும்படி அமைக்கப் பட்டிருந்தால் அதனையும் ஒரு சிறப்பாகச் சிலர்விரும்பி ஏற்பர் என்றவாறு.

அளபெடையை விலக்கிய நூற்பா முன்னே காட்டப்பட்டது. துள்ளல்தோறும் அளபெடை வந்தால் அதுவும் ஒரு முறையான அமைப்பாக ஆகிவிடுவதால் வடிவொழுங்கு பெற்று வழுவமைதியாக ஏற்கத் தக்கதாகிறது. அவ்வாறு அமைப்பதன் அருமை நோக்கி ''வல்லானேல்'' என்றார். எனினும் இவ்வாறு ஏற்பவர் சிலரே என்றதார்ல்பல விரும்பார் எனக் குறிப்பால் உணர்த்தப்பட்டது. (478)

**80. அந்நூல் ஒப்பாக் குற்றம்நான் கினுக்குள்
இந்நூல் மூன்றுஇசைந்து இருப்பதுஎன் என்பார்
உற்று நோக்கும் உண்ர்வுஉறா தவரே.**

வண்ணத்தியல்பு நூல் ஏற்றுக்கொள்ளாத மதுரம் குன்றல், குழிப்புச் சிதைவு, கொடுந்தமிழ்ப் புணர்ப்பு, அளபெடைச் சேர்க்கை ஆகிய நான்கு குற்றங்களுள் இந்நூல் குழிப்புச் சிதைவு நீங்கலாக மற்றைய மூன்றையும் தழுவி ஏற்றுக் கொண்டுள்ளது ஏன் என வினவுவோர் ஆராய்ந்து நோக்கும் நுண்ணறிவற்றவரே ஆவர் என்றவாறு.

கொடுந்தமிழ்ப் புணர்ச்சி 77 ஆம் நூற்பாவிலும், மதுரம் குன்றுதல் 78 ஆம் நூற்பாவிலும், அளபெடை அணைதல் 79 ஆம் நூற்பாவிலும் ஏகதேசம் தழுவி, ஏற்றுக் கொள்ளப் பட்டன. எனினும் அந்தந்த நூற்பாவிலேயே இக்குற்றங்கள் வரக்கூடாதென்று குறிப்பாலும் உணர்த்தப்பட்டது. இதனை உணராதோரே இரு நூல்களும் தம்முள் முரணுகின்றன என்பர். இங்கும் இவை சிறந்ததாக ஏற்கப்படவில்லை.

மற்றொன்றும் கவனிக்கப்பட வேண்டும். நல்ல புலமை எய்தியவர்கள்வண்ணம் பாடுவதற்கு வழிகாட்டியாக அமைந்த சிறப்பு இலக்கண நூல் வண்ணத்தியல்பு. இது "எழுத்தும் பல்வகை எதுகைச்சொல்லும், பன்னரும் பொருளும், பழிப்பில் யாப்பும், வாய்பாட் டணியும் வழுவற வுணர்ந்தோர், ஏவலின் முயல்வோர், எழிற்றவம் நோற்போர், முருக வேளே முதல் எனத் தெளிந்தோர், மலய மால்வரை வந்தனம் புரிவோர் அனையவர் தமக்கே அழுக்கிலா தமைந்து குலவுசீர் வண்ணம்"[1] என்பதனால் அறியப்படும். ஆனால் இந்த நூல் புலமையைப் பெற முயல்பவர்களுக்குரிய பொதுநூலாகும்.

பொதுநூல்கள் சிறுசிறு வித்தியாசங்களையும் பாராட்டாது தழுவிச் செல்வதும், சிறப்பு நூல்கள் மிகத் தெளிவானதும் கடுமையானதுமான வரையறை வகுப்பதும் அனைத்துக் கலைகளுக்கும் பொதுவான ஒன்று. அது பற்றியே இந்நூலாசிரியர் பொதுநூலில் அதிகாரி பேதம் நோக்கிச் சில குறைபாடுகளைத் தழுவி ஏற்றும் சிறப்பு நூலில் அவற்றை முற்றிலும் விலக்கியும் கூறினார். இதில் முரண்பாடின்மை அறிக. (479)

**81. ஓசையும், கனமும், உலவா ஊக்கமும்,**
**தொண்டும் தோய்வுறீஇத் துலங்கிய வண்ணம்**
**அந்நூல் ஒப்பிட லாயகுற் றங்களும்**
**இல்லாது உறும்எனில் ஏற்றத்து ஏற்றமே.**

குழிப்புச் சிதைவற்ற சந்தவோசை, பாடுபொருளின் சிறப்பு, இத்தகைய பாக்களை மேலும் மேலும் படிக்கத் தூண்டும் ஊக்கம், இறைபணியில் ஈடுபடவைத்தல் ஆகியவற்றைப் பெற்று விளங்கும் சந்தப்பா வண்ணத்தியல்பு தழுவி ஏற்றுக் கொண்ட வடமொழி மருவுதல், மருஉச் சொல் பயிலுதல் என்னும் இரு குற்றங்களும்கூட இல்லாமல் அமையுமாகின் அது சிறந்தவற்றுளெல்லாம் சிறந்ததாகும் என்றவாறு.

இங்கு குறிப்பிடப்பட்ட வண்ணத்தியல்பு நூற்பா இந்நூல் 77 ஆம் சூத்திர உரையில் காட்டப்பட்டுள்ளது. கற்பவர்களின்

---

1. வண்ணத்தியல்பு 1

ஊக்கமும் தொண்டும் நூலின் மேலேற்றிக் கூறப்பட்டன. எவ்வகைக் குற்றமுமின்றி வண்ணம்பாடுதலின் அருமை விளங்க "உறும்எனில்" என்றார். (480)

**82. இம்முறை யாவும்முன் எடுத்துக் காட்டிய**
**நூற்பொருள் உணர்ந்துள நுண்ணியர்க்கு உவகையும்**
**மற்றவர்க்கு உலவா மயக்கமும் தருமே.**

வண்ண இயல்பாகிய இப் பகுதியில் கூறப்பட்டுள்ள இலக்கணங்கள் எல்லாம் வண்ணத்தியல்பு நூலில் கூறப்பட்டுள்ள இலக்கணங்களை ஐயந்திரிபற அறிந்துள்ளவர்களுக்கு மகிழ்ச்சியையும், அதனைக் கல்லாதவர்களுக்குத் தீராத குழப்பத்தையும் உண்டாக்கும் என்றவாறு.

வண்ணத்தியல்பு நூலைத் தெளிவாகக் கற்றுணர்ந்தவர்களுக்கே இப்பகுதி நன்கு விளங்கும். எனவே அதைக் கற்றுணர்ந்த பிறகுதான் இதை ஆராய வேண்டும். இல்லையேல் குழப்பம் உண்டாகும் என்கிறார். (481)

**83. கருணைக் கடல்எனச் சக்திவேல் என்ன**
**வென்றி மழுவெனத் துவக்கிஓர் மூன்று**
**வண்ணம் இவற்றினுக்கு இலக்கியம் என்றே**
**கருதிக் கூறினம்; மற்றும் பற்பல**
**வண்ணமும் வகுப்பும் விருத்தமும் பகர்ந்துளம்;**
**அவைகளும் துணையாம் அறியவேண் டுநர்க்கே.**

அகப்பொருள் துறைபெற்ற வண்ணத்திற்கு இலக்கியமாகக் கருணைக்கடல், சத்திவேல், வென்றிமழு எனத் தொடங்கும் மூன்று வண்ணங்களை இயற்றியுள்ளோம். இவையேயன்றி வேறுபல வண்ணங்களும், வகுப்புகளும், திருப்புகழ்களும், சந்த விருத்தங்களும் யாத்துள்ளோம். வண்ண இலக்கணத்தைக் கற்கும் ஆவல் உடையவர்களுக்கு அவையும் இலக்கியங்களாகப் பயன்படும் என்றவாறு.

கருணைக்கடல் – திருவுருமாமலை முருகனைப் போற்றிக் கலவிமகிழ்தல் துறையில் பாடப்பட்ட வண்ணம். "கருணைக் கடலாகிய சங்கரர்" என்ற தொடக்கத்தை உடையது,

சத்திவேல் – குன்றுதோறாடுங் குமரனைப் போற்றிப் பாலனைப் பழித்தல் என்ற துறையில் பாடப்பட்ட வண்ணம். "சத்திவேல்புனை சுந்தர மார்பினன்" என ஆரம்பிப்பது.

வென்றிமழு-திருச்செந்தூர் முருகனைப் போற்றி நற்றாயிரங்கல் துறையில் பாடப்பட்டது. "வென்றிமழுப்படையார்" எனத் தொடங்குவது.

பிற-இவர் மொத்தம் 12 வண்ணங்கள் பாடியுள்ளார். அவற்றில் 11 அகப்பொருளமைதி பெற்றவையாகும். இவையனைத்தும் "வண்ண மஞ்சரி" என்ற பெயரில் திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தால் 1980 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளன.

வண்ணப்பாடலின் அமைப்பு தெளிவாக விளங்கும் பொருட்டு இங்குச் சத்திவேல் வண்ணம் எடுத்துக் காட்டப் படுகிறது.

குன்றுதோறாடல்

**துறை: பாலனைப் பழித்தல்**

(குழிப்பு)

தத்தனாதன தந்தன தானன
தத்தனாதன தந்தன தானன
தானனாதன தானனாதன
தானனாதன தன்னனதான
(தொங்கல்) தானான தானதத்த தானனா.

**சத்திவேல்**புனை சுந்தர மார்பினன்
முக்கணாயகர் தந்தருள் பாலன்என்
மோகநாயகன் நீதியேவடி
வானதேசிகன் உண்மைவிசாகன்
வெற்றிமீறிய தம்பியர் மாமயல்
உற்றுவாடிட வஞ்சமு னாள்புரி
தாருகாசுரன் ஈடிலாமலை
யோடுதூள்பட மன்னியவீர

தத்துவாகரம் என்றொளிர் சேவகன்
முத்தியீயுமுன் எண்டொழில் ஈபவன்
ஞானவாரிதி மோனதாரக
மூலமாகிய சண்முகநாதன்
ஈராறு தோள்பொறுக்கும் ஆதிவேள்;
சர்ப்பமீதுந டம்புரி தோகையை
மெச்சுவார்கள்ம னந்தனில் வாழ்பவன்
நீறுபூசிட நாணியேசிய
சாரணாதியர் தம்முயிர்மாள
முற்றுபாடல்வி ளம்பிய பாவலன்
இட்டமானவு டம்பொடு தோணிடும்
வீறுதோய்குரு வானமேலவன்
வானுளார்பதி துன்னியவாழ்வு
தப்பிடாதெழில் ஐந்தரு நீழலில்
உற்றஆதனம் என்றதில் ஏறிய
சாமி;பூமனை மோதியேதளை
போடுமாணவ வண்மைவிநோதன்
ஏமாறி டாதளிக்கும் ஈகையான்;

அத்திமாமுக ஐங்கர னோடெதி
ரிட்டுவாதுதி னஞ்செயும் வாலிபன்
வேலையூடொரு மாவதாகிய
சூரனார்முடி மண்ணுறவீசும்
ஒப்பில்சாயகம் மிஞ்சிய மாரதன்
அக்குமாலைபு னைந்தவர் தாயகன்
ஆழிசூழ்புவி வாழவேமலை
தோறுமாடல்கள் பண்ணியநேசன்
அற்பர்வாசல்பு குந்துழ லாதருள்
வைத்துநேர்வரு கின்றகு ணாலயன்
வேழமாதொடு வேடர்சேரியில்
நீடுபாவையை நண்ணுமணாளன்
ஆராதி யார்வருத்தம் நாடிடான்;

அச்சமாறிய திண்டிறல் வீரர்கள்
சுற்றுகோவிலும் இங்கித மாமயில்

கூடியாடிட நீடுசோலையும்
ஏனலூடுறு கன்னியர்வாய்கள்
இட்டவோசையும் அஞ்சன மால்வரை
ஒத்தயானைகள் பந்திக ளாவரு
சீரும்வாவிகள் தோறும்வால்வளை
பூவிலேறவும் இன்னிசையார்புள்
அக்கமாமணி சிந்திட மோதலின்
விட்டுலாவிமு ழங்கலும் ஆறுகள்
வானமாநதி நாணவோடலும்
ஆதியாம்வளம் இன்னம்அநேகம்
ஆனாது வாழ்குறிச்சி யூரிலே
பத்தியால்விர தம்புரி வோர்களும்
இட்டதேவதை வந்தது போலெதிர்
ஆடுவார்மொழி வாய்மைதானென
நாடிவாடிய தன்மையுளாரும்
மிக்கமூவரும் ஒன்றிய தோர்மரம்
வைத்துநாகரும் அங்குச பாசனும்
ஏலவேபணி வாரும்வாய்கொடு
பூமிமீதுண வுண்ணு நரோடு
பற்றிலாரென வந்தவர் ஈகிற
எச்சிலானதும் உண்டுழல் வோர்களும்
ஆதியாகிய மா தர்பாலனு
காதுதேடுமு னென்வயிறாடு
பாராளு மாறுதித்த பாலனே
பச்சையானந ரம்புக ளால்இரு
குற்றமாமுலை யுஞ்சரி வாயின
வாடையால்மணம் வீசல்போயொரு
வாறுநாறின பொன்னிகர்மேனி
எய்ப்புமீறிய தங்கச வேள்முதல்
மெச்சுகோலம ழுங்கிய தாயிழை
யூடுதோள்வளை யாதிபூணவொ
ணாததாயின இன்னவெலாமொர்
பத்துமாதமென் உந்தியில் நீகுடி
யுற்றபோதமு தும்பகை யானது

மாமியேசிட நாளுமேதுயில்
சோகமாதியும் எண்ணியசேய்கொல்
பாவாணர் வாய்துதித்த தாதையார்
சித்திமார்மனை சென்றன ராமவர்
இட்டவேலைபு ரிந்தவர் பூவணை
மீதிலேவிளை யாடினாரென
ஓதினார்பலர் என்னசெய்மாறு
சற்றுவாடினு முன்சகி யாதவர்
நத்தினாலுமி ணங்குகி லாரெனொ
டாதிநாளையில் ஆணையாயிரம்
ஓதினாரிது புண்ணியமோசொல்
செக்கர்வானொடு திங்களும் ஆழியும்
மிக்குவேளும்மு னைந்திடும் வேளையில்
நீயும்வாய்விட லாகுமோசனி
யானபாவியும் உன்னையொவான்மெய்
சேராத கேள்வர்நட்ப ராவரோ
செட்டிபோலஇ ருந்தவர் வேசியர்
ஒட்டமீவது கண்டனை யேபல
பாலரீனிய மாதர்தோள்புணர்
வாரும்வாழ்வும் இந்நிலமீது
கட்டுமீறும்உ டம்புள நான்உனை
யிட்டுவாடுவ துந்தெரி வாய்ஒரு
காலம்நீயவர் ஆசையால்மடி
மீதிலேகொள நன்மொழிகோடி
செப்புவாயென நம்பினன்; வேதியன்
இட்டதோர்விதி யென்செயு மோவினி
வேறுதாரகம் ஏதுநீயல
தாகையாலொரு நன்னலமோது
தீராத காதல்வெப்பம் ஆறவே.

ஒரு வண்ணத்தின் எட்டு தொங்கல்களையும் தனியே வரிசையாகத் தொகுத்தால் அது எதுகை மோனையுடனும் பொருள் தொடர்புடனும் கூடிய சந்தப்பாட்டாக அமையும். அது தொங்கல்களின் தொகுப்பாதலால் தொங்கற்றாழிசை

எனப்படும். "சக்திவேல்புனை" வண்ணத்தின் தொங்கற் றாழிசை வருமாறு: –

ஈராறு தோள்பொறுக்கும் ஆதிவேள்;
 ஏமாறி டாதளிக்கும் ஈகையான்;
ஆராதி யார்வருத்தம் நாடிடான்
 ஆனாது வாழ்குறிச்சி யூரிலே
பாராளு மாறுதித்த பாலனே
 பாவாணர் வாய்துதித்த தாதையார்
சேராத கேள்வர்நட்ப ராவரோ?
 தீராத காதல்வெப்ப மாறவே. (482)

**84. எட்டுப் பதினாறு எண்ணான்கு எட்டெட்டு**
**என்னும்நாற் பகுதியில் கலைவகுத்து ஒருநால்**
**எதுகையும் மோனையும் இலங்கக் காட்டி**
**ஒருபொருட் புகழே உரைப்பது வகுப்பே.**

எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு, அறுபத்துநான்கு என்ற நான்கில் ஓர் எண்ணிக்கையுள்ள கலைகளை அமைத்துக் கொண்டு நான்கு எதுகையும், உரிய இடங்களில் மோனையும் அமைய ஒரே ஒரு பொருளின் சிறப்பை எடுத்துப்பாடும் யாப்பு வகுப்பாகும் என்றவாறு.

எட்டு முதல் நான்கு கூறப்படினும் குறைந்தது 16 கலைகள் உள்ளதே சிறந்த வகுப்பாகும். ஒரு பொருளின் புகழை வகுத்துரைத்தலின் வகுப்பு எனப்பட்டது. கலம்பகத்தின் ஓர் உறுப்பாகிய புயவகுப்பு இதனைச் சேர்ந்ததுவேயாகும். (483)

**85. இயல்இசை நாடகம் என்னும் பகுதியில்**
**அணிகெடல் குத்தல் ஆதிய குற்றம்**
**தெரியும் கண்கொடு திகழ்பொது வண்ணக்**
**குழிப்பின் புணர்ச்சி உணர்வது குணமே.**

இயல், இசை, நாடகம் ஆகிய மூவகைத் தமிழிலும் சொல், பொருள் சுவை குன்றுதல், ஓசைமிக்கோ குறைந்தோ ஒலித்தல் முதலிய குற்றங்கள் எப்படி ஆராயப்படுகின்றனவோ

அப்படியே அம்மூன்றிற்கும் பொதுவாகத் திகழ்கின்ற வண்ணத்திலும் ஆராய்வது தக்கதாகும் என்றவாறு.

வண்ணத்தை இயல்போல் படித்து மகிழலாம். தாளக் கட்டுடையது ஆதலின் இசைத்தும் இரசிக்கலாம். பாவச்செறிவோடு இருத்தலின் நாட்டியத்திலும் பயன்படுத்தலாம். எனவே இது மூன்றிற்கும் பொதுவாயிற்று.

அணிகெடல் – சொற்பொருள் குற்றத்தையும், குத்தல் – ஓசைக் குற்றத்தையும் சுட்டிநின்றது. இந்நூற்பாவால் தமிழ் யாப்பிலக்கணத்தில் இடம்பெற்றுள்ள இலக்கண இலக்கியக் கொள்கைகள் யாவும் வண்ணத்திற்கும் பொருந்தும் என்பது பெறப்பட்டது. (484)

86. தமிழ்க்கவி அனைத்தினும் தலையென்று உள்ள
வண்ண இயல்பினை வகுத்தனம்; மோனை
இயல்பினைச் சுருக்கி இயம்புகின் றனமே.

தமிழ் யாப்பு வகைகள் எல்லாவற்றிலும் முதன்மையாக விளங்குகின்ற வண்ண இலக்கணத்தை வகுத்துக் கூறினோம். இனி அடுத்த மோனை இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறுவோம் என்றவாறு.

வண்ணத்தின் இலக்கணத்தை இம்முறையில் முதன்முதல் கண்டவர் இவரே ஆதலின் வகுத்தனம் என்றார். முன்பே மோனை இயல்பு பல நூலாசிரியர்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளதாதலின் சுருக்கி இயம்புகின்றனம் என்றார்.

இந் நூற்பாவால் வண்ணவியல்பாகிய இப்பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்த மோனை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்டது. (485)

வண்ண இயல்பு முற்றிற்று.

## IV. மோனை இயல்பு

மற்ற யாப்பியல் நூல்கள் தொடை எனப் பிரித்துப் பாகுபாடு செய்துகொண்ட மாதிரி இவர் செய்துகொள்ளவில்லை.

அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. இவர் எதுகையோடு மோனையையும் யாப்பு வடிவத்தின் இன்றியமையாத உறுப் பாகவே கருதுகிறார். "மோனை இல்லா முத்தமிழ்ப் பாட்டு நாணம் இல்லா நங்கையெரப் பாமே"[1] என்பது இவர் கருத்து. இவர் யாப்பியலில் செந்தொடை எனப்படுவதற்கு இடமே இல்லை. இவ்வியல்பில் மோனையைப் பற்றிக் கூறப்படுகிறது. இது பன்னிரண்டு நூற்பாக்களா னியன்றது.

87. அகரக் குறில்நெடில் ஐஔ என்னும்
நான்கும்ஓர் மோனை நன்குஉணர் வார்க்கே.

அ,ஆ,ஐ,ஔ ஆகிய நான்கு எழுத்துகளும் சரியாக உணரவல்லார்க்கு ஓர் மோனையாகும் என்றவாறு.

"அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகாரம்
இகரமோ டீகாரம் எஏ – உகரமோடு
ஊகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அனு"[2]

என்ற அமுத சாகர விதி இவரால் பெரும்பான்மையும் அப் படியே கூறப்பட்டுள்ளதை இவ்வியல்பில் காணலாம். (486)

88. இகர எகரமும் இவற்றின் நெடில்களும்
யகரயா காரமும் இசையும் மோனைக்கே.

இ,ஈ,எ,ஏ,ய,யா இவைகள் ஒன்றற்கொன்று மோனை யாகப் பொருந்தும் என்றவாறு.

மேற்காட்டிய வெண்பாவில் இடம் பெறாத ய, யாக்கள் இங்கு மோனையாக ஏற்கப்பட்டுள்ளன. "இயங்குவ நிற்ப வான யாவையுங் கலைமா தோடு"[3] "யாற்றுள் வீழ்வுற்று இறப்பதற்கு எண்ணுற"[4] "ஏதிலான் போல நின்றான்

1 அறுவகை இலக்கணம் 495

2 அமுதசாகரம் 17

3 பிரபுலிங்கலீலை கைலாச கதி 2

4 ,, ,, 18

யார்கணும் பந்தம் இல்லான்"[1] என்பன போன்ற இலக்கிய வழக்கு நோக்கி இவ்விலக்கணம் எழுந்தது. (487)

**89. உகரமும் ஒகரமும் யொகரமும் நெடில்களும்
ஒருவகை மோனைஎன்று உரைப்பார் உணர்ந்தோர்.**

உ,ஊ,ஒ,ஓ,யொ,யோ இவ்வாறும் ஒன்றற்கொன்று மோனை எழுத்தாக வரும் எனப் புலவர் கூறுவர் என்றவாறு.

இங்கும் யொ,யோ புதியதாகப் புகுந்துள்ளன. தமிழ் இலக்கியத்தில், "ஓடியொ ளித்தனர் ஆடம ரிற்றுரி யோதன னுக்கிளையோர்"[2] "யூகம்ச ருப்ப தோபத்ர மாக வணிசெய்து மான உரவோன்"[3] "யூகமும்பி ளந்துசுர ராசன்மைந்தன் முந்திரதம் ஊருகின்ற செங்கண்நெடுமால்"[4] எனப் பயிலப்பட்டமை காண்க. யொ,யோ வரின் யு,யூ அவற்றுடன் இணைந்து வருதல் இயல்பே. (488)

**90. உயிர்ப்பொறி மோனையின் ஒழுங்கு பற்றி
உயிர்மெய்ப் பொறிகளும் ஒளிர்தரும்; அத்துடன்
அவற்றின் வருக்கத்து ஒன்றோ டொன்று
பொருந்தல்உண்டு; அம்முறை புகலுதும் அன்றே.**

உயிர் எழுத்துகளின் முறையிலேயே உயிர்மெய் எழுத்துகளும் ஒன்றற்கொன்று மோனையாக வரும். மேலும் உயிர்மெய்களிலும் சில ஒன்றற்கொன்றுமோனையாகப் பொருந்தும். அவை யாவை என்பதைக் கூறுவாம் என்றவாறு.

அ,ஆ,ஐ,ஔ ஒன்றற்கொன்று மோனை என்றால் அதே முறைபற்றிக்க,கா,கை,கௌ போன்றனவும் பொருந்தும் என்று கூறப்பட்டது. இவ்வாறு வருதலோடு உயிர் மெய்களிலும் சில

---

1 வில்லிபாரதம் 15ஆம் போர் 28

2 ,, 3ஆம் போர் 23

3 ,, 9ஆம் போர் 10

4 ,, 10ஆம் போர் 32

எழுத்துகள் பிறவற்றைத் தனக்கு மோனையாகவரப் பெறும். அவற்றை உரைப்பாம் என நுதலிப் புகுகிறார். (489)

91. சகரமும் தகரமும் அவற்றின் பிறவும்
முறைமையிற் பிறழ்வது மோனை மரபே.

சகர வருக்கத்து எழுத்துகளும் தகர வருக்கத்து எழுத்துகளும் முன் உயிரெழுத்துகளுக்குச் சொல்லப்பட்ட விதிப்படியே பிறழ்ந்து ஒன்றற்கொன்று மோனையாக வருதல் இலக்கிய வழக்கு ஆகும் என்றவாறு.

ச,சா,சை,சௌ,த,தா,தை,தௌ என்பன ஒரே மோனை.

சி,சீ,செ,சே,தி,தீ,தெ,தே என்பன ஒரே மோனை.

சு,சூ,சொ,சோ,து,தூ,தொ,தோ என்பன ஒரே மோனை

இவ்வாறே அடுத்த நூற்பாவிற்கும் கொள்க. (490)

92. மகர வகர வருக்கமும் இயல்பில்
தொடர்வது மோனையின் தொன்மை யாமே.

மகர வருக்கத்தைச் சேர்ந்த உயிர்மெய் எழுத்துகளும் வகர வருக்கத்துடன் முன் தகரசகரங்களுக்குக் கூறப்பட்ட முறையிலேயே மோனையாகப் பொருந்துதல் பழமையான மரபாகும் என்றவாறு.

தகர, சகர முறை முன் நூற்பாவில் காட்டப்பட்டது.

இவ்வியல்பின் முதல் நூற்பாவில் எடுத்துக்காட்டப்பெற்ற வெண்பாவில் இடம் பெற்ற ஞநக்களை இவர் இலக்கணத்தில் கூறவில்லை. ஆனால் இவரே பல இடங்களில் அவற்றை மோனையாகக் கொண்டுள்ளார். உதாரணத்திற்குச் சில ''ஞான பண்டித னாமென நண்ணுவார்''[1] ''நல்வரத்தினர் புகழ் ஞானச் சேரமான்''[2] ''ஞாயமெடுத் துரைத்தாலும் அவர்க்கொப்பாக நவிலல்பிழை என்றிகலும் நரர்எல்லோரும்''[3]

---

1 புலவர். பொதியாசலம் 29

2 ,, சேரமான்பெருமாள் 19

3 ,, மூன்றாழ்வார் 5

இவ்விலக்கியங்களைக் கண்டு ஞநக்களையும் ஒன்றற்கொன்று மோனையாக உரையிற் கோடலாகக் கொள்ளலாம். (491)

93. அகரமும் யகரமும் அணைவதும், றகரமும்
ரகரமும் லகரமும் தொடர்வதும் நாடகத்
தமிழிற்கு ஆம்எனச் சாற்றுநர் சிலரே.

அகர யகரங்களும், ற,ர,ல ஆகிய மூன்றும் தம்முள் மோனையாகப் பொருந்திவருதலை நாடகத்தமிழில் ஏற்றுக் கொள்ளலாம் எனச் சிலர் சொல்வார்கள் என்றவாறு.

நாடகத் தமிழிற்கு ஆம் என விதந்தோதியதால் இயலிசைத் தமிழிற்கு ஆகா என்பதும், அங்கும் ஏற்பார் சிலர் என்றமையின் ஏற்காமையே சிறப்பு என்பதுவும் பெறப்பட்டது. (492)

94. உயிர்எழுத்து அதனையே ஒற்றின் புணர்ப்பால்
உயிர்மெய் ஆக்கி உரைக்கும் மோனையும்,
ஒருசொல் நடுஉறும் உயிர்மெய் மோனையும்
நிலையிடந் தவறி நிற்கும் கூழை
மோனையில் நலமாம்; ஆயினும் அவற்றைக்
கள்ளமோ னைகள்எனக் கழறத் தகுமே.

ஓர் ஒற்றின் மீதே உயிரெழுத்துகள் வேறுவேறு சேர்வதை மோனை என்று கூறுவதும், சீரின் முதலில் வராமல் இடையில் வருகின்ற உயிர்மெய் மோனையாவதும் ஆகிய இவ்விரண்டும் தான் நிற்கவேண்டிய சீரின்கண் நில்லாமல் மாறி நிற்கின்ற கூழையைவிடச் சிறந்ததேயாயினும் இவை அனைத்தையும் கள்ள மோனைகள் எனக் கூறுவதே தக்கதாம் என்றவாறு.

''பகலேபல் பூங்கானல்'' என்ற அகவலால் யாப்பருங்கலம் காட்டுகின்ற பகரமெய் வருக்கமோனை, அந்நூலிலேயே ''கயலேர் உண்கண்'' எனக்காட்டப்படுகின்ற வல்லின மோனை போன்றவற்றை முதல் ஈரடிகளால் குறித்தார்.[1] இனம் பற்றித்

1 யாப்பருங்கலம் – 37 மேற்கோள்

திருவரங்கக் கலம்பகத்தில் "அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை"[1] என வரும் உயிர் வருக்க மோனையையும் இதனுள் அமைத்துக்கொள்க.

சீர் என்பதையும் சொல் என வழங்கும் இவர் தம் வழக்கம் பற்றி மூன்றாம் அடியில் சொல்நடு என்றார். "அன்னத் திருவுருவுள்ளே வளர்ந்ததற் கோர்அண்டமாம்"[2] என்ற கட்டளைக் கலித்துறையடியில் ஐந்தாம் சீரின் முதலில் இருக்க வேண்டிய அகரமோனை அதன் இரண்டாம் அசையில் வந்தது. இவ்வாறே "பெருமையைப் பேசுவ தெப்படி நாம்பிறை வாளெயிற்று"[3] என்ற அடியிலும் ஐந்தாம் சீரின் முதலில் வருவதற்குப் பதில் நான்காம் சீரின் இரண்டாம் அசையாகப் பிகரமோனை வந்தது. இவைகளே இங்குச் சொல்நடுஉறு மோனை எனக் குறிக்கப்பெற்றன.

குறிப்பிட்ட யாப்பில் மோனை நிற்கவேண்டிய சீரில் நில்லாது வேறு சீரின்கண் இடம் பெற்றால் அதை இவர் கூழை மோனை என்கிறார். காரிகை கூறும் இறுதிச் சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை வரத் தொடுத்தல் ஆகிய கூழை வேறு.[4] இது வேறு.

"வீடரும் பழியும் வீட்டி மெய்யெலாம் நயன மாக
நாடருஞ் சிறப்பு நல்கும் நலத்தவோ மூர்த்தி தீர்த்தம்
பாடருந் தலமிம் மூன்றும் எனிலிணை பகர்தற் குண்டோ
ஆடரு மிவற்றிற் குள்ளது எவைக்குளது ஆயுங்காலே"[5]

---

1 திருவரங்கக்கலம்பகம் 38

2 திருவரங்கத்துமாலை 21

3 திருவரங்கத்துமாலை 27

4 யா. காரிகை 19

5 திருநாகைக்காரோணப். காகதீர்த்தப்படலம் 60

இவ்வறுசீர் விருத்தத்தில் ஒன்று, நான்கு ஆகிய சீர்களில் மோனை நிற்க வேண்டும். ஆனால் மூன்றாவது நான்காவது அடிகளில் ஐந்தாஞ்சீரில் மோனை வந்தது. இவ்வாறு சீர்மாறி இருப்பவையே இவரால் கூழைமோனை எனப்படுகிறது.

இவை யனைத்திற்கும் கள்ளமோனைகள் எனப்பெய ரிட்டதால் இத்தகையன அத்துணைச் சிறப்பு வாய்ந்தனவல்ல என்பது போதரும். இக்கருத்தை அடுத்த நூற்பாவில் தெளி வாகக் கூறிவிடுகிறார். (493)

**95. உறும்இடத்து உற்றுஅரசு ஒக்கும் மோனை**
**ஒன்றே நலம்என உன்னுநர் சிலரே.**

இருக்கவேண்டிய இடத்திலும், இருக்கத்தகும் எழுத் தாலும் அமைந்து அரசனைப்போல் விளங்கும் மோனையை அமைப்பது ஒன்றுதான் யாப்பிற்குச் சிறப்பு எனக் கருதுபவர் சுவை உணர்வில் நன்கு முதிர்ச்சியடைந்த மிகச்சிலரே என்றவாறு.

அரசு ஒக்கும் என்ற உவமை பற்றி இடத்தோடு உரையில் எழுத்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கவிதைச் சுவையில் மூழ்கி அதை நன்கு துய்க்க வல்லவர் சிலரேயாதலின் உன்னுநர் சிலரே என்றார். இதனால் தமிழ்யாப்பின் வடிவ ஒழுங்கிற்கு மோனை இன்றியமையாததென்று கூறப்பட்டது. இது அடுத்த நூற்பாவால் மேலும் விளக்கப்படுகிறது. (494)

**96. மோனை இல்லா முத்தமிழ்ப் பாட்டு**
**நாணம் இல்லா நங்கையொப் பாமே.**

இயல், இசை, நாடகம் ஆகிய எத்துறையைச் சேர்ந்த தாயினும் தமிழ்க்கவிதை மோனை நலம் இல்லாமலிருந்தால் வெட்கங்கெட்ட பெண்களைப் போன்றது எனச்சான்றோர் களால் பழிக்கப்படும் என்றவாறு. (495)

**97. தவறிய மோனைத் தமிழ்க்கவி கலவிக்கு**
**இசைந்தபின் ஊடும் ஏந்திழைக்கு ஒப்பே.**

உரிய இடத்தில் அமையாமல் வேறு இடத்தில் அமையப் பெற்ற மோனையைஉடைய தமிழ்ப்பா புணர்ச்சிக்கு இணங்கி, அதற்குப்பிறகு தன் கணவனுடன் ஊடல் கொள்கின்ற மங்கைக்கு நிகராகும் என்றவாறு.

புணர்ச்சிக்கு இணங்காமல் ஊடுதல் அழகு. காதலனால் ஊடல் உணர்த்தப்பட்டு அது தீர்ந்த பிறகு கலவிக்கிசைந்தபின் மறுபடியும் ஊடல் தோன்றினால் இரசாபாசமாம். அது நேரந்தவறி வந்த ஊடல். எனவே இடந்தவறி வந்த மோனைக்கு உவமையாயிற்று. (496)

98. ஓர்அசை தொட்டுஐந்து அசைவரை உள்ள
சொற்களின் கலப்பால் துலங்குபல் பாடலில்
மோனைபோய் நிற்கும் மொழியெலாம் மொழியாது
அடக்கி எதுகைசற் றறைகுதும் அன்றே.

ஓரசை முதல் ஐந்தசை வரையில் பயின்றுவருகின்ற சீர்கள் உள்ளன. இச்சீர்கள் பல ஓர் அடியாக வந்து பா ஆகிறது. இத்தனை சீர் உள்ள இன்ன பாவில் இந்த இடத்தில் மோனை வரவேண்டும் என்றெல்லாம் விரித்து உரைத்துக் கொண்டு போகாமல் மோனை இயல்பை இத்துடன் நிறுத்திக் கொண்டு அடுத்து எதுகை பற்றியும் சில செய்திகளைக் கூறுவாம் என்றவாறு.

இந்நூல் இயலிசைத் தமிழியல்பில் மோனை பற்றிய சில செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவற்றையும்இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். இவரால் படைக்கப்பெற்ற ஏராளமான இலக்கியங்களைப் பார்த்தால் மோனை பற்றிய இவர் கொள்கைகள் நன்கு தெளிவாகின்றன. அவை வருமாறு: -

1. நான்கு சீரால் வருகின்ற அடிகளுக்கு முதல் சீரிலும் மூன்றிலும் மோனை.
2. ஐஞ்சீரடிகளுக்கு ஒன்றிலும் ஐந்திலும் மோனை.
3. ஒரே மாதிரி இருமுறை வரும் அறுசீர்க்கு (விளம்,மா, தேமா இருமுறை; மா,மா,காய் இருமுறை) ஒன்றிலும் நான்கிலும் மோனை.

4. நான்கு காய், மா, தேமா என வரும் அறுசீருக்கு ஒன்றிலும் ஐந்திலும் மோனை.

5. பொதுவாக எழுசீருக்கு ஒன்றிலும் ஐந்திலும் மோனை.

6. எழுசீருக்குமேல் போனால் மூன்று மோனை வர வேண்டும். அவை எண் சீர்களில் ஒன்று, ஐந்து, ஏழு ஆகிய சீர்களில் வரும்.

7. இரட்டித்த ஆசிரியங்களுக்கு எதை இரட்டிக்கிறோமோ அதற்குக் கூறியதே பொருந்தும்.

8. சந்தத்தில் முதல் துள்ளலிலும் மூன்றாம் துள்ளலிலும் மோனை நிற்பதோடு, முதற்கலையின் முதலெழுத்தும் அடுத்த கலையின் முதலெழுத்தும் மோனை பெற்று வரவேண்டும். இது வகுப்பு, வண்ணம், திருப்புகழ் ஆகிய மூன்றற்கும் பொருந்தும்.

இந் நூற்பாவால் மோனை இயல்பை நிறைவுசெய்து அடுத்த எதுகை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்கிறார்.

**மோனை இயல்பு முற்றிற்று.**

## V. எதுகை இயல்பு

எதுகையைப்பற்றிக் கூறுகின்ற இப்பகுதி எட்டு நூற்பாக்களை உடையது. இங்கு எதுகையின் சில வேறுபாடுகள் இனம் பிரித்துக் கூறப்படுகின்றன.

**99. சிங்கம்என்று எழும்பாட்டு அடிதொறும் எதுகை**
**தங்கம் பொங்கம்என்று அமைவது போல்வன**
**சிதையாத் தொடைஎனச் செப்புவர் தெளிந்தோர்.**

ஒரு பா சிங்கம் எனத் தொடங்கினால் அதன் மற்ற அடிகளின் தொடக்கம் தங்கம், பொங்கம் என்பன போன்று அமைவதைப் புலவர்கள் குறைபாடற்ற எதுகைத்தொடை என்பர் என்றவாறு.

எதுகைத்தொடை என்பது அதிகாரத்தால் பெறப்பட்டது. எடுத்துக் காட்டிய உதாரணச் சொற்களால் முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை என்பதும் புலனாயிற்று. இரண்டாமெழுத்து மெய் யெழுத்தாக வந்தால் மூன்றாவது எழுத்து நான்கு அடிகளிலும் ஒரே எழுத்தாக வந்தால் அப்படி அமைகின்ற தொடை சிதை யாத் தொடையாகும். இதனைச் சிதையாத்தொடை எனவே சிதைந்ததொடை ஒன்றும் உண்டு என்பதாயிற்று. இது அடுத்த சூத்திரத்தில் கூறப்படும். (498)

**100. கொற்றியும் செற்றமும் கற்றையும் போல்வன**
**சிதைவுறு தொடையெனச் செப்பினர் சிறந்தோர்.**

கொற்றி, செற்றம், கற்றை என்பன போன்ற சொற்கள் ஒரு பாவில் எதுகையாக வரின் அது சிதைந்த தொடையென்று அறிஞர்களால் கூறப்படும் என்றவாறு.

இரண்டாமெழுத்து மெய்யாகிய போது மூன்றாவது ஒரே எழுத்தாக வராமல் ஒரே வருக்கமாக வந்தது. (றி,ற,றை என வந்த றகர வருக்கக் குறில்கள்) இலக்கியத்தில் இவ்வாறு ஏராளமாக வரும். என்றாலும் இவ்வாசிரியர் இத்தகையன குறைபாடுள்ள எதுகைத்தொடையே என்கிறார். (499)

**101. பார்த்திபன் காய்த்தமா அன்ன பிறவும்**
**ஓசைத் தொடைஎன்று உரைத்தனர் உணர்ந்தோர்.**

பார்த்திபன், காய்த்தமா போன்றவை எதுகையில் வந்தால் அதை யாப்பறிந்த புலவர்கள் ஓசைத்தொடை என்று கூறுவார்கள் என்றவாறு.

இந்நூற்பா ய,ர,ல,ழ என்னும் நான்கு ஒற்றுகளில் ஏதானுமொன்று முதலெழுத்துக்கும் எதுகையெழுத்துக்கும் இடையில் வரும் ஆசெதுகையைச் சுட்டுகிறது. "யரலழ இடை உறின் ஆசுஎனப் படுமே"[1] என்பது இதன் இலக்கணம். இடையின மெய் பொதுவாகத் தன் இன உயிர்மெய்யுடன்

1 முத்துவீரியம்-யாப்பு-ஒழிபியல் 18

சேர்ந்தால்தான் முழுமையாக ஒலிக்கும். மற்றவற்றுடன் ஒலிக்காது. எனவேதான் ஒலி நயமறிந்த சான்றோர்கள் இந் நான்கை மட்டும் ஆசெதுகையாக ஏற்றனர். ஒலித்தன்மை பற்றி ஏற்கப்பட்டதால் இவர் ஓசைத்தொடை என்கிறார். ஓசைமாறுபாடற்ற தொடை ஓசைத்தொடையாயிற்று. (500)

**102. பாலுக்குக் கூழுக்கு எனப்பகர் பிறவும்**
**இனத்தொடை ஆகும்என்று இயம்பினர் சிலரே.**

பாலுக்கு, கூழுக்கு என்பனபோன்று இரண்டாவது எழுத்து ஒரே இனத்தைச் சேர்ந்ததாக வந்தால் சிலர் அதை இனஎதுகைத் தொடை என்பர் என்றவாறு.

இனஎதுகை வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை என மூவகைப்படும். நூற்பாவில் இடையின எதுகை காட்டப்பட்டது. (501)

**103. சீருற்ற நீருற்ற எனமிக்கு வருவன**
**அலங்கா ரத்தொடை யாமெனத் தகுமே.**

சீருற்ற, நீருற்ற என்பவற்றைப்போல் மூதற்சீர் முழுவதும் முதலெழுத்தொழிய ஒன்றிவந்தால் அது அலங்கார எதுகை என்று பெயர்பெறத் தகும் என்றவாறு.

பாவின் ஒலி ஒப்பனை செய்யப்பட்டதைப் போன்று கம்பீரமாக விளங்குதலின் அலங்கார எதுகை எனப்பட்டது. (502)

**104. ஆடும் பரிவேலணி பாடும் பணியேபணி**
**எனவரல் யாவும் வண்ண எதுகையே.**

ஆடும்பரிவேல் அணி, பாடும்பணியே பணி என்பன போல் சந்த ஓசையுடன் வரும் எதுகைகள் வண்ணஎதுகைகளாம் என்றவாறு.

இவ்வெதுகை "தானந் தனனாதன" என்ற சந்தத்தில் வந்தது.

"சுராங்கழல் சூட்டிக் கவுமாரர் தம்மொடு கூட்டி
அப்பால்
நிராஞ்சன நின்மல ஞானானு பூதி நிறைத்தருள்வாய்
கராங்குலி கொண்டு மலரோன்றன் சென்னி கவர்ந்
துவக்கும்
புராந்தகன் பெற்ற மகனே! குமார புரிக்கந்தனே"[1]

இக்கவியில் எதுகை "தனாந்தன" என்னும் சந்தக் குழிப்பில் அமைந்து வண்ண எதுகை ஆயிற்று. இவ்வாறே அபிராமி அந்தாதியில் வரும் சின்னஞ்சிறி, பென்னம்பெரி, கன்னங்கரி, தன்னந்தனி என்ற எதுகை "தன்னந்தன" என்ற சந்தத்தில் வந்த வண்ணஎதுகையாம்.

வண்ணப்பாடல்களில் வரும் எதுகைகள் வண்ணம்பெற்றே வருமாதலின் அங்கே இதனைக் கொள்ளலாகாது. வண்ணமல்லாத பாடலில் இவ்வாறு வருவதே வண்ணவெதுகையாம். (503)

**105. இவ்வகை எதுகையில் யாதும் இல்லெனில்
செவ்விய கவிகளும் சீர்அழிவு உறுமே.**

சிதையாத்தொடை, சிதைவுறுதொடை, ஓசைத்தொடை, இனத்தொடை, அலங்காரத்தொடை, வண்ணத்தொடை என ஆறுவகையாகக்கூறப்பட்ட இவ்வெதுகைவகைகளில் ஏதாவது ஒன்று இடம் பெறாவிட்டால் சிறந்த பொருள்நயம் மிக்க பாடலாயினும் அது தன் தகுதியை இழக்கும் என்றவாறு. (504)

**106. எதுகை இயல்பினை இம்மட்டு அடக்கி
எவ்வகைக் கவிகளும் நால்வகைத் தாமெனக்
கூறும்அம் முறையின் குறிப்புரைக் குதுமே.**

எதுகை இலக்கணத்தை இத்துடன் நிறைவுசெய்து எல்லாப் பாடல்களும் ஆசு முதலிய நான்கனுள் அடங்கும் எனக் கூறும் அம்முறையைக் குறித்துக் கூறுவாம் என்றவாறு.

1. கந்தநாயக மாலை 3

இச் சூத்திரத்துடன் எதுகை இயல்பு முற்றுவிக்கப்பட்டு அடுத்த நாற்கவி இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப் பட்டது. (505)

## IV. நாற்கவியியல்பு

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வித மான கவிகள் பற்றியும், குளகச் செய்யுள், முத்தகச்செய்யுள் என்பனவற்றின் வேறுபாடும், பாடலில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இன்னவை என்பதும், தன்மை முதலிய மூவிடங்கள் பற்றியும் இவ்வியல்பில் கூறப்படும். மொத்தம் ஏழு நூற்பாக்களை உடைய இவ்வியல்பில் ஐந்து நூற்பாக்கள் நாற்கவியியல்பைக் கூறுவதால் இப்பகுதி பன்மை பற்றிப்பெயர் பெற்றது.

**107.** பட்டினத் தடிகள் ஆதிய பாவலர்
கழுமரம் எரிவுறக் கழறிய தாதிய
ஆசு கவியினம் ஆம்எனத் தகுமே.

பட்டினத்தார் தன்னை ஏற்ற இருந்த தூக்குமரம் தீப்பற் றும்படி பாடிய பாடலைப்போல் அவ்வப்போது உடனடியாகப் பாடப்படும் பாடல்கள் ஆசுகவி எனப்படும் என்றவாறு.

''எழுத்துச் சொற்பொருள் அணியாப்பு இவையின் விழுத் தக ஒருவன் விளம்பிய உள்ளுறை அப்பொழுது உரைப்பது ஆசுகவியே''[1] என்பது இலக்கணவிளக்கம். நாகப்பட்டினத்தில் பட்டினத்தடிகள் மீது ஆலயப் பொற்பாத்திரத்தைத் திருடிய தாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கழுவேற்ற முயன்றபோது ''என் செயலாவது'' என்ற கவியைக் கூறக் கழுமரம் தீப்பற்றி எரிந் தது என்பர். (புலவர் புராணம்-திருவெண்காடர் சருக்கம்- 60-63) இப்பா உடனடியாகப் பாடப்பட்டதாதலின் ஆசுகவி ஆயிற்று. (506)

**108.** குளிர்பொழிற் பாண்டிக் குலசே கரன்பகர்
அம்பிகை மாலை ஆதிய மதுரமே.

---

1 இலக்கண விளக்கம்-764

தண்ணென்ற சோலைகள் மிக்க பாண்டி நாட்டுக் குலசேகரன் இயற்றிய மதுராம்பிகைமாலை போன்ற பாக்கள் மதுரகவியாகும் என்றவாறு.

"சொல்லும் பொருளும் சுவைபட நிறீஇச் செல்வுழி தொடையும் விகற்பமும் செறீஇ உள்ளத்து உள்ளே கொள்ளும் அமுதுஎனத் தன்மை உவமை பின்வரு பெற்றியின் உருவகம் முதல் உற்று ஓசை பொலியப் பாடுதல் மதுர கவியெனப் படுமே"[1] என இதன் விளக்கம் கூறப்படுகிறது.

குலசேகரனால் இயற்றப்பெற்ற மாலை மதுராபுரி மாலை, மதுராம்பிகை மாலை என்று வழங்கப்படுகிறது. இது போல்வன நிதானமாகச் சிந்தித்துச் செய்யப்படும் இலக்கிய எழில் நிறைந்த சிற்றிலக்கியங்கள் ஆதலின் இனிமை நோக்கி மதுரகவி எனப்பட்டன. (507)

109. கொங்குவாழ் மன்னன் கொடுத்த கொடுவாள்
அருணையூர்ப் புரவலன் அரண்மனை சேரத்
திகழ்ந்தநூல் ஆதிய சித்திர கவியே.

வக்கபாகை ஆட்கொண்டானால் வில்லிபுத்தூராருக்குக் கொடுக்கப்பட்ட குறுவாள், திருவண்ணாமலை மன்னனாகிய பிரபுடதேவராயனின் அரண்மனையிற் சென்றடையும்படி பாடப்பட்ட அருணகிரிநாதரின் "கந்தரந்தாதி" போன்றவை சித்திர கவிகளாகும் என்றவாறு.

வில்லிபுத்தூராழ்வார் தம்மிடம் வாதுபுரிந்து வண்ணத்தில் தோற்ற புலவர்களின் செவிகளை அரிந்து விடுவாராம். இதற்காகவே அவர் ஆட்கொண்டானிடமிருந்து ஒரு வாளை வாங்கி வைத்திருந்தாராம். (புலவர் புராணம் - வில்லிபுத் தூரார் சருக்கம் 22) இவருக்கும் அருணகிரிநாதருக்கும் அருணை யில் வாதப்போர் மூண்டது. அருணகிரிநாதரின் கந்தர்அந்தாதி என்ற யமக அந்தாதியில் தகர ஒருவருக்கப்பாவாக அமைந்த ஒரு பாடலுக்கு வில்லியால் உரை கூற இயலவில்லை. அவர்

1 இலக்கணவிளக்கம் 765.

தோல்வியை ஒப்புக் கொண்டார். அருணகிரிநாதர் அவரிடமிருந்த வாளை வாங்கிப் பிரபுடதேவராயனிடம் கொடுத்து விட்டார். (புலவர் புராணம் அருணகிரிநாதர் சருக்கம் 31-40)

யமகம், திரிபு, ஏகபாதம், நிரோட்டகம், அநாசிகம், ஒரு வருக்கப்பா, கமலபந்தம் முதலிய பந்தங்கள் போன்றவை சித்திரகவிகள் ஆகும். இது மிறைக்கவி என்றும் பெயர் பெறும்

**110.** **ஓர்ஆ யிரம்முதல் நூறுஆ யிரம்வரை**
**செய்யுள் தொகையுடைத் தாகிப் பலபொருள்**
**அறையும் பனுவல்கள் அனைத்தும்வித் தாரம்**
**என்பதும், அகவல், பஃறொடை வெண்பா,**
**எண்ணான்கு, எண்ணெண் கலையுடை வகுப்புஇவை**
**ஆதிய தாம்என் றறைவதும் இயல்பே.**

ஆயிரம்முதல் இலட்சம்வரை பாடல்தொகையுடைத்தாகிப் பலவகையான பொருள்களைப்பற்றிக் கூறும் நூல்கள் யாவும் வித்தாரக்கவி எனப்படும். மேலும் ஆசிரியப்பா, கலிவெண்பா, முப்பத்திரண்டு அல்லது அறுபத்து நான்கு கலைகளை உடைய வகுப்பு இவை போன்ற பெரிய பாடல்களும் வித்தாரக்கவி எனப்படுதல் இயல்பே என்றவாறு.

"வித்தார கவியை விளம்புங் காலை அத்திறம் தொடர் நிலை, அடிபல நடக்கும் தனிப்பா என்னத் தான் இரண்டாகும்"[1] "அவற்றுள், தொடர்நிலை விகற்பம் கடையில என்ப"[2] என இதன் இயல் கூறப்படுகிறது. அணியிலக்கணம் கூறும் பெருங்காப்பியம், காப்பியம் ஆகிய இரண்டும் கோவை, பரணி போன்ற மிகச் சில பிரபந்த வகைகளும் வித்தார கவியுள் அடங்கும். இங்கு பல பொருள் என்றது, "மலை கடல் நாடு வளநகர் பருவம் இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து, நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல் பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல் தேம்பிழி மதுக்கஅ சிறுவரைப் பெறுதல் புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல்

1. இலக்கணவிளக்கம் 767
2. ” ,, 768

என்று இன்னன புனைந்த நன்னடைத் தாகி மந்திரந் தூது செலவு இகல் வென்றி சந்தியிற் றொடர்ந்த"[1] பொருள் களோடு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால் வகைப் பொருள்களை. அணியாசிரியர்கள் பெருங்காப்பியத் தில் மது உண்டு களித்தலை விரித்துப் பாடவேண்டும் எனக் கூறியிருப்பினும் இவ்வாசிரியர் அதனை ஏற்கவில்லை. கற்பவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தும் செய்திகளே நூலில் இடம்பெற வேண்டும் என்பது இவர் கருத்து. இவர் புலவர் புராணத்தில் பரஞ்சோதியாரைப் பற்றிக் குறிப்பிடும் போது "வேம்பத்தூர்ப் பனவர் மதுரையூர்ச் சிவன்செய் வியன்விளை யாடல்கள் அனைத்தும் தேம்பட்ட கவியாற் சொற்றபின் பரஞ் சோதிமுனியாஞ் சைவதே சிகன்றான் தாம்பற்று நெறியால் விரித்துஅதில் கம்பன் றனைநம்பிக் கள்ளுண்டாட்டு உரைத்தது ஆம்பட்சம் அன்று என்று அருவருக்கின்றோர் அகிலமீது ஒரு சிலர் உளரே"[2] எனக் கூறுவதால் இது தெளிவாகிறது.

அகவல், கலிவெண்பா என்றது மதுரைக்காஞ்சி, பெருங் கதை, கந்தர்கலி வெண்பா போன்ற நீண்ட பாடல்களை. இயற்றப்படுகின்ற அகவல், கலிவெண்பாக்கள் அனைத்தும் வித்தாரகவி ஆகிவிடா. அளவாலும் பாடுபொருளாலும் பெரியனவாக இருப்பனவே வித்தாரகவியாம். (509)

**111.** **ஆசு கவியின் அமைதியும், மதுர**
**கவியின் கனிவும் கரட்டு முரட்டுச்**
**சித்திர கவியின் திரிவும் மாறாட்டமும்**
**வித்தா ரக்கவி விளக்கமும் புலவோர்**
**சேர்க்கையில் தேறிடில் அன்றித் தெரியா;**
**ஆயினும் இயலிசை அறிவான் அவ்வயின்**
**இருநூல் எம்மதுஎன்று எடுத்துக் காட்டலும்**
**முதல்நூல் இதுஇதுஎன மொழிவதும் தகுமே.**

ஆசுகவிகளின் ஆரவாரமற்ற போக்கையும், மதுரகவியின் இனிமையையும், கரடுமுரடாக அமைக்கப்படும் சித்திரகவியில்

---

1 தண்டியலங்காரம் 8

2 புலவர் அறிவுத்தன்மை. 50

இடம்பெறுகின்ற சொல் வேறுபாடுகள் மாறுபாடுகள் போன்றனவற்றையும், வித்தாரக்கவி அனைத்தையும் மிக விரித்துக் கூறிச் செல்லும் பாங்கினையும் அறிஞர்களின் கூட்டுறவினால் தான் தெளிவாக உணரமுடியும். வேறு வகையில் இயலாது என்றாலும் புலவன் யாமியற்றிய இரு பனுவல்கள் இத்திறத்தன என எடுத்துக் காட்டுவதும் அல்லது பழைய நூல்களில் இவைஇவை இன்னஇன்ன கவியாகும் எனக்கூறுவதும் முறையாம் என்றவாறு.

ஆசுகவி சொல்லக் கருதிய செய்தியைத் தெளிவாகவும் உடனடியாகவும் தெரிவிப்பதாகும். இதில் பெரும்பாலும் வர்ணனைகளுக்கோ சொற்சிலம்பத்திற்கோ இடமில்லை. மதுரகவி பெயருக்கேற்ப இலக்கியச்சுவை மிக்கு விளங்க இயற்றப்படுவதாம். சித்திரகவிகள் கருஞ்சொல்லாட்சி, அரிய புணர்ச்சி, செய்யுள் விகாரம், கொண்டுகூட்டுப்பொருள்கோள், குறிப்புப்பொருள் மிகுதி போன்றனவற்றால் கரடுமுரடாகி விடுகின்றன. அனைத்துப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் வித்தாரக்கவி சொல்லோவியமாக்கித் தந்துவிடுவதால் அது விளக்கமானது எனப்பட்டது.

இவ்வாறு வரையறை செய்து கூறியும் இவற்றைப் புலவோர் கூட்டத்தானன்றி அறிய முடியாது எனக் கூறியதன் காரணம் சிந்தித்தற்குரியதொன்று. வில்லிபாரதம் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் வித்தாரகவியேயாகும். ஆனால் அந் நூலாசிரியரைப் பற்றி இவர் தம் புலவர் புராணத்தில் "இருந் ததற் கொருபாட் டப்பால் எழுந்ததற் கொருபாட்டு ஓதிப் பெருந்தொகைப் படுத்து வாரைப் பேதையர் வியந்து கொள் வார்; மருந்துறழ் கவியொன் றாற்பல் வான்பொருள் தெளி வாச் சொல்லுந் திருந்தியற் பாரதச்சீர் தெரிபவர் சிலர்தாம் அன்றே"[1] என்கிறார். இதனால் மிக விரிவாக அமைய வாய்ப் புடைய பாரதம் வில்லிபுத்தூராழ்வாரால் சுருக்கப்பட்டு விட்ட செய்தியும் இக்காரணம் பற்றி ஒருவகையால் அதனை மதுரகவியின் பாற்படுத்தலாம் என்பதும் தெரிகிறது. இத்

---

1. புலவர். வில்லி. 17

தகைய நுட்பங்கள் மெய்யறிஞர் கூட்டுறவினால்தான் பெற முடியுமாதலின் அவ்வாறு கூறினார்.

இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டுகளைப் பற்றிய ஒரு புதிய கொள்கையை இந்நூற்பாவில் உரைத்திருக்கிறார். நூலாசிரியர் தன்னுடைய படைப்புகளையே எடுத்துக்காட்டாகக் காட்டுவ தாயின் குறைந்தது இரண்டினைக் காட்ட வேண்டுமென்றும், முன்னோர் நூல்களைக் காட்டினால் ஒன்றே போதுமென்பது வும் அக்கொள்கையாகும். இது இவராலும் இந்நூலில் கடைப் பிடிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 446 ஆம் சூத்திரத்தில் சகத்திர தீபம், வருடப்பதிகம் என இரு நூல்களையும் 482 ஆம் நூற்பா வில் மூன்று வண்ணங்களையும் தம் படைப்பாக எடுத்துக் காட்டுகிறார். இதே இயல்பில் ஆசு முதலியனவற்றிற்கு முன்னோர் மொழியாக ஒவ்வொன்றே காட்டுகிறார்.(நூற்பா 506 முதல் 508 வரை) (510)

**112.** **உரைப்பொருள் மிகலால் ஒன்றோடொன்று அணைவுறு**
**தொந்தக் கவிகளைக் குளகம் என்றும்,**
**பொருள்எழும் இடம்தனை எழுவாய் என்றும்,**
**முற்றுறும் இடம்தனைப் பயனிலை என்றும்,**
**குறித்ததைச் செயப்படு பொருளாம் என்றும்,**
**தன்செயல் கூறிடல் தன்மை என்றும்,**
**வினவக் கூறிடல் முன்னிலை என்றும்,**
**பிறநிலை பேசுதல் படர்க்கை என்றும்,**
**அறைவன ஆதிய அறிவது கடனே.**

கூறவேண்டிய செய்தி முற்றுப்பெறாததால் ஒன்றோ டொன்று ஒரே வாக்கியமாகத் தொடர்ந்து செல்கின்ற பாக் கள் குளகம் எனப்படும். ஒரு பாடலில் வினைமுதலாக இருக்கும் சொல் (பொருள் எழும் இடம்) எழுவாய் எனப்படும். செய்யப்பட்ட செயலை முடித்துக் கூறும் சொல் பயனிலை எனப்படும். எது செய்யப்பட்டதோ அதனைக் குறிக்கும் சொல் செயப்படுபொருளாம். ஒருவர் தன் செய்கையைத் தானே கூறினால் அது தன்மை எனப்படும். எதிரில் உள்ளவரை நோக் கிச் சொல்வதற்கு முன்னிலை எனப் பெயர். இவ்விரண்டுமல்

லாத மற்றவற்றைக் குறித்தவை படர்க்கை எனப்படும். இவ்வாறு இலக்கணிகளால் கூறப்படுவனவற்றை எல்லாம் மாணவர் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்றவாறு.

தொந்தக் கவிகளைக் குளகம் என்றதனால் ஒரே பாடலில் பொருள் முற்றுப்பெற்றால் அது முத்தகம் எனப்படும் என உரையிற் கோடலாகப் பெற்றாம். "முத்தகச் செய்யுள் தனி நின்று முடியும்", "குளகம் பலபாட்டு ஒரு வினை கொள்ளும்"[1] என்பன இவற்றின் இலக்கணம். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய வாக்கியஉறுப்புகளும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களும் இந்நூற்பாவில் கூறப்பட்டன. சொல் இலக்கணத்தில் இவை கூறப்படாததால் இங்கு இடம் பெற்றன. ஒரு பாடலின் பொருள் முடிபு காண இவை இன்றியமையாதனவாதலின் இவை யாப்பியலில் வைக்கப்பட்டன. (511)

**113. பாசுரத்து இயல்புஇவண் பகர்ந்தமட்டு அடக்கிப்
பனுவல் இயல்பினைப் பகருதும் சிறிதே.**

பாக்களைப் பற்றிக் கூறும் நாற்கவி இயல்பை இவ்வளவோடு முடித்து அடுத்து பனுவல் இயல்பைக் கொஞ்சம் கூறத் தொடங்குவாம் என்றவாறு.

இந்நூற்பாவால் இவ்வியல்பு நிறைவு செய்யப்பட்டு அடுத்ததாகிய பனுவலியல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (512)

## VII. பனுவல் இயல்பு

இவ்வியல்பில் நூல், பிரபந்தம், புராணம், காவியம் ஆகிய பகுப்புகளும், பாயிரத்தின் இன்றியமையாமையும் நூல்வகைகளின் பாடுபொருளும், நூலின் உட்பிரிவுகளும், சிற்றிலக்கிய வகைகளும், இவற்றோடு தொடர்புடைய வேறு சில செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இதில் 21 நூற்பாக்கள் உள்ளன.

**114. சொற்கடல் அமிழ்துஎனத் துலங்கும் தூய
பனுவல் இயல்பினைப் பகுக்கில்நூல் என்றும்,**

---

1 தண்டியலங்காரம் 3,4

**பிரபந்தம் என்றும் பேசும் இருபாற்று;**
**ஆணொடு பெண்போன்று அவிர்தரும்; அலிஎனக்**
**கலந்தும் சிற்சில கவின்தரும்; அவற்றைப்**
**புராணம், காவியம் என்பார் புலவோர்.**

சொற்களாகிய பாற்கடலிலிருந்து வெளிப்படும் அமுதத்தைப் போன்று விளங்கும் தூய்மைமிக்க பனுவல்களை இலக்கண ரீதியாகப் பிரித்தால் அவை நூல், பிரபந்தம் என இரு வகைப்படும். இவற்றுள் நூல் ஆண் தன்மைகளைப் பெற்றும், பிரபந்தம் பெண் தன்மைகளுடனும் இருக்கும். இவ்விரு தன்மை களும் கலந்து பேடியைப் போன்றும் சில பனுவல்கள் அமையும். புலவர்கள் அத்தகையவற்றைப் புராணம், காவியம் என்பர் என்றவாறு.

சொற்களின் கூட்டத்தாலேயே நூல்கள் தோன்றுதலின் சொற்கடல் அமிழ்து என்றார். ஆசிரியரின் அறிவாற்றலை மத்தாகக்கொள்க. அறியப்பட வேண்டிய செய்திகளைக் கூறும் இலக்கணம், தத்துவம் போன்ற பயன்பாட்டுப் பனுவல்கள் நூல் என்றும், இலக்கியச்சுவையையே தலைமையாக உடைய எழிற் கவிதைகள் பிரபந்தம் என்றும் இவரால் பின்னால் விளக்கப் படுகிறது. அறிவுத் தன்மை ஆடவர்க்கும், எழிலும் கலைச் சிறப் பும் மகளிர்க்கும் மிக்க சிறப்புடையதாதலின் அது பற்றி ஆண் பெண் என்றார். காவியம், புராணம் போன்றனவற்றில் சில இடங்களில் தத்துவம், நீதி, அரசியல் போன்ற பயன்தரு செய்திகளும், வேறு சில இடங்களில் இலக்கியச்சுவை கருதி இயற்றப்படும் பகுதிகளும் கலந்து இடம் பெறுவதால் அவற்றை அலித்தன்மை வாய்ந்தவை என்றார். ஆடூஉத்தன்மை, மகடூஉத் தன்மை இரண்டும் இல்லாததாகிய அலித்தன்மையிலிருந்து, இரண்டும் சேர்ந்துள்ள காவிய இயல்பைப் பிரித்துக் காட்டவே 'அலிஎனக் கலந்தும்' என்று விளக்கினார். (513)

**115. நூல்பிர பந்தம் காவியம் எனநுவல்**
**மூவகைப் பனுவற் பிரிவை நோக்கில்**
**மனுத்திரள் போன்றே வயங்கும் ஆதலின்**
**பெயர்குணம் முழுமையும் பேசரிது; ஆயினும்**
**ஒருவாறு இந்நூல் பொருட்டுஉரைக் குதுமே.**

நூல், பிரபந்தம், காவியம் என்று மூவகையாகப் பிரித்துக் கூறப்படும் பனுவல்களைக் கூர்ந்து ஆராய்ந்தால் அவைகளும் மக்கட் கூட்டத்தை போலவே விளங்குகின்ற தன்மை தெளிவாகும். எனவே ஒரு நூல் இன்ன குணத்தை உடையது, இன்ன பெயருள் அடங்கும் என்று முற்றிலுமாகக் கூறிவிட முடியாது. எனினும் இலக்கணம் கூறவேண்டிய இந்நூலின் கடப்பாடு பற்றி ஓரளவு கூறுவாம் என்றவாறு.

மக்களில் ஆண்களிடத்திலும் சில மகடூஉக் குணங்களும், பெண்களிடத்திலும் சில ஆடூஉக் குணங்களும் விரவி இருக்கக் காணலாம். ஒருவரிடத்திலேயேஒவ்வொருசமயம் ஒவ்வொன்று விஞ்சி நிற்பதும் இயல்பே. இதைப்போலவே பனுவல்களிலும் பயன்பாடும், சுவைப்பாடும் கலந்தே இருக்கும். எனவேதான் பனுவற்றொகைக்கு மனுத்திரளை உவமையாக்கினார்.

மற்றொன்று. மனிதன் சத்துவம், ராஜஸம், தாமஸம் என்ற முக்குண வயப்பட்டவன். அவனிடம் மூன்றும் கலந்தும், சிற்சில வேளைகளில் ஏதோ ஒன்று மேலோங்கியும் விளங்கும். எந்த ஒரு மனிதனையும் ஒரே குணமுள்ளவன் எனக்கூற முடியாது. இவ்வாறே நூல்களும் சில இடங்களில் இலக்கியச் சுவையை விட்டுவிட்டு அறிவுக்குரிய செய்திகளைத்தெரிவிக்கும்; சில இடங்களில் பொருளைப்பற்றிக் கவலையின்றி இலக்கியச் சுவையை மட்டும் வழங்கும்; வேறுசில இடங்களில் இலக்கியச் சுவையோடு சேர்த்து செய்திகளையும் தரும். இதனால் எல்லாப் பனுவலிலும் நூல், பிரபந்தம், காவியம் ஆகிய மூன்றன் கூறுகளும் விரவியே கிடக்கும். எனவே எந்தப் பனுவலையும் இது இத்தன்மையை மட்டுமே உடையது எனப்பிரித்துக் கூறிவிட முடியாது. ''மனிதரில் மன்னிய குணங்களை மானப் பனுவ லிடத்தும் படர்ந்தவை விரவுமே''. இஃது உரைச் சூத்திரம். இதில் குணங்கள் என்றது ஆடூஉ மகடூஉக் குணங்களுக்கும், முக்குணங்களுக்கும் பொதுவாகும். (514)

**116.** **அறம்பொருள் இன்பம் வீட்டு நெறிஎனும்**
**நான்கும் பனுவற் றொகைக்குஎலாம் தாயும்**
**தந்தையும் குருவும் தனிப்பெருந் தெய்வமும்**
**ஆம்எனும் துணிவுறல் அறவோர்க்கு அழகே.**

அறம், பொருள், இன்பம், வீடடைதற்குரிய வழியைக் காட்டுதல் ஆகிய நான்கும் அனைத்துவகைப் பனுவல்கட்கும் தாய், தந்தை, ஆசான், தெய்வம் என்னும் நான்கினைப் போல உறுதிச் சுற்றமாகும் என்று சற்றும் ஐயத்திற்கிடமின்றித் தெளிதல் நீதிநெறியினில் நிற்பவர்களுக்குச் சிறப்பாம் என்றவாறு.

காக்கும் தன்மையால் அறம் தாயுடனும், செல்வப்பொருள் சேமித்துக் கொடுக்குந் தன்மையால் பொருள் தந்தையுடனும், இறைவனைக் கூடிப் பேரின்பம் நுகரத் துணையாந் தன்மை யால் இன்பம் குருவுடனும், இம்மூன்றிலும் கூடியும் பிரிந்தும் உள்ள தன்மையால் வீட்டின்நெறி தெய்வத்துடனும் உவ மிக்கப்பட்டது. இது நூல் முதலிய மூவகைக்கும் பொது. ''அறம், பொருள், இன்பம், வீடு அடைதல்நூற் பயனே''[1] ஆதலின் இவ்வாறு கூறப்பட்டது. ''வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், துறவறம் ஆகிய காரண வகையான் கூறப்படுவதல்லது இலக்கணவகையான் கூறப்படாமையின்''[2] வீடு என்னாது வீட்டுநெறி என்றார். (515)

**117. இலக்கணம், இலக்கியம், சோதிடம், நீதி**
**வயித்தியம், சிற்பம் ஆதிய வகுக்கும்**
**பனுவல் யாவும் நூல்எனப் படுபவே.**

இலக்கணம், இலக்கியம், சோதிடம், நீதி, மருத்துவம், சிற்பம் போன்றனவற்றைத் தெரிவிக்கும் அறிவு நூல்கள் அனைத்தும் நூல் எனப்படும் என்றவாறு.

நூல் என்றது அறிவிற்குப் பயன்தரும் சாத்திரங்களை.

**118. தெய்வம், அரையன், செழும்பொன் கொடுப்போன்,**
**சுவைதெரிந்து உவப்போன் ஆதியர்த் துதித்த**
**பனுவல்கள் யாவும் பிரபந்தம் ஆமே.**

கடவுள், மன்னன், பொருள் அளித்துப் புரக்கும் வள்ளல், இலக்கியச் சுவையை ரசித்து அனுபவிக்க வல்லவன்

1. நன்னூல் 575
2. திருக்குறள். பரிமேலழகர் உரை.

ஆசியவர்களைப் போற்றிப் பாடப்படும் பனுவல்கள் யாவும் பிரபந்தம் எனப் பெயர்பெறும் என்றவாறு.

ஒரு பாட்டுடைத் தலைவனைப் புகழ்ந்து இயற்றப்படுவது பிரபந்தம் என்றாராயிற்று. (517)

**119. வரை,நதி நகர்,நாடு ஆதியின் வளமும்,**
**தெய்வச் செயலும், திறல்மிகு போரும்,**
**செங்கோற் சிறப்பும், சீரியர் தன்மையும்**
**அனையன போலும் அமைவுஎலாம் பெருக்கிக்**
**கழறுதல் புராணமும் காவ்யமும் ஆமே.**

மலை, ஆறு, ஊர், நாடு முதலியனவற்றின் வளப்பத்தையும், இறைவனின் திருவருளாடல்களையும், வன்மை மிகுந்தவர்களுக்கிடையே நடைபெறும் போர்களையும், மன்னனின் அரசாட்சிச் சிறப்பையும், சான்றோர்களின் இயல்புகளையும் இன்னோரன்ன அமைப்புகள் அனைத்தையும் நன்கு விரித்து விளக்கமாகக் கூறுதல் புராணம் எனவும், காவியம் எனவும் பெயர் பெறும் என்றவாறு.

அனையன போலும் என்றதனானே இருசுடர்த்தோற்றம், நன்மணம் புணர்தல் முதலாகக் கூறப்படுகின்ற பெருங்காப்பிய உறுப்புகள் அனைத்துங் கொள்க. (518)

**120. பனுவலின் முகத்துத் திலகம் போல்வது**
**பாயிரம் ஆம்எனப் பகரத் தகுமே.**

பாயிரம் என்பது எல்லாப் பனுவல்களுக்கும் முகத்தில் இடப்பெறும் பொட்டைப்போல் எழில் தருவதாகும் எனலாம் என்றவாறு.

"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைதோள் நல்லார்க்கு அணியும்போல்-நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது."[1]

என்றார் பவணந்தியாரும். (519)

---

1 நன்னூல்55

**121.** **பனுவற் காரன் பகர்பொதுப் பாயிரம்**
**தெய்வக் காப்பும், கொள்வார் செயலும்,**
**நுவன்றகா ரணமும், பயனொடு பிறவுமே.**

நூலாசிரியனால் இயற்றப்படும் பொதுப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அதிகாரி இலக்கணம், நூல் செய்த காரணம், நூற் பயன் ஆகியவற்றோடு பிற செய்திகளையும் கொண்டிருக்கும் என்றவாறு.

பிற என்றதனால் வழி, நூற்பெயர், யாப்பு போன்றவை களையும் அமைத்துக் கொள்க. (520)

**122.** **ஆக்கியோன் துணிந்தோன் அல்லான் என்னில்**
**காதுறக் கேட்டுக் களித்தோன் கழறும்**
**சிறப்புப் பாயிரம் திகழ்தரு பனுவற்**
**செய்தோன் பெயரும் சேர்த்தநல் அரங்கும்**
**அதன்புகழ் ஆதியும் ஆம்எனத் தகுமே.**

நூலாசிரியன் தன் நூற் சிறப்பைத் தானே எடுத்துக் கூறத் தயங்கிப் பாயிரம் பாடாவிடில் அந்நூல் அரங்கேற்றத்தைக் கேட்டு மகிழ்ந்த வேறு ஒருவன் சிறப்புப் பாயிரம் இயற்றலாம். அச்சிறப்புப் பாயிரத்தில் நூலாசிரியன் பெயர், அரங்கேற்றப் பட்ட களம், அந்நூற் சிறப்பு ஆகியன கூறப்படவேண்டும் என்றவாறு.

"தோன்றாதோற்றித் துறைபல முடிப்பினும் தான்தற் புகழ்தல் தகுதி யன்றே"[1] ஆதலின் சிலர் பாயிரங் கூறத் துணியார். நூலைச் சுவைத்தவன் சிறப்புப் பாயிரம் இயற்ற வேண்டுமென்பது இவருடைய கொள்கை. "தன்னா சிரியன் தன்னொடு கற்றோன் தன்மாணாக்கன் தகும்உரைகாரன் என்று இன்னோர்"[2] நூலையும் ஆசிரியரையும் நன்கு அறிந்திருப்பர் ஆதலின் அவர்களைச் சிறப்புப் பாயிரம் பாடு தற்குரியாராக நன்னூல் கூறுகிறது.

---

1 நன்னூல் 52
2 ,, 51

ஆதியும் என்றதனால் காலம், நூற்பெயர், நூற்பயன் போன்றவற்றையும் கொள்க.

**123. பாயிரத்து உறுவதில் பனுவல் முகத்துஉறும்**
**நுண்ணியர் வணக்கம் நூறுபங்கு இனிதே.**

நூலுக்குப் புறத்தே பாயிரத்தில் இடம் பெறுவதைவிட நூலின் தொடக்கத்தில் கூறப்படும் கடவுள், அடியார், புலவர் வணக்கம் பல மடங்கு சிறப்பு மிக்கதாகும் என்றவாறு.

தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் கூறப்படும் தற் சிறப்புப்பாயிரம் நூலின் புறவுரையாக அன்றி அதன் முகப் பிலேயே இடம்பெறும். நுட்பமான கடவுளுக்கும், நுண்ணிய அறிவுள்ள அடியார்களுக்கும், புலவர்களுக்கும் ஒரு சேரப் பொருந்துமாறு நுண்ணியர் என்றார்.

"தமிழ்ப் பெயர் முதுகலை தன்னைச் சுட்டிய பெரியோர் மலர்த்தாட்பிரசஞ் சூடி"[1] இது புலவர் வணக்கம். "அருள் இலக்கணம் பகர் அறுமுகத்து ஒருவனை மருள் இலக்கணம் அற வழுத்தும் மாண்பால்"[2] இது தெய்வ வணக்கம். "கனி உரு வாகிய காமர் முருகனைப் பணிபவர் அடிமலர் பழிச்சி"[3] – இது அடியார் வணக்கம். இவ்வாறு மூன்றும் இந்நூலிலேயே வந்தன. (522)

**124. இழிநூல் பாயிரத் தால்உயர்வு எய்தாது;**
**ஏனைஅஃது இலதால் இழிவுறாது; எனினும்**
**தெய்வத் துதியொடு செப்பும்நூற் பெயர்மட்**
**டாயினும் பகர்ந்திடல் அழகாம் அன்றே.**

சிறப்பற்ற ஒரு நூலுக்குப் பாயிரத்தால் மட்டும் மேன்மை வந்து விடாது. அதுவே போலச் சிறந்த நூலொன்று பாயிரம் இன்மையால் தாழ்ந்தும் விடாது.இது உண்மையே. என்றாலும்

---

1 அறுவகை. 1
2 ,, 278
3 ,, 534

கடவுள் வாழ்த்தும், நூற்பெயரும் மட்டுமாவது நூலின்கண் இடம் பெறுவதே சிறப்பாகும் என்றவாறு.

நூலின்கண் உண்மையாகவே சிறப்பு இருந்து அது பாயிரத்தில் எடுத்துக் கூறப்பட்டால் அதுதான் உயர்வாகும். உயர்வும் தாழ்வும் நூலின்கண் உள்ளதேயன்றி வெறும் பாயிரத்தால் அதுவந்து விடாதென்கிறார். இது "ஆயிரமுகத்தான் அகன்றது ஆயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே"[1] என்ற கருத்தை ஓரளவு மறுத்ததாகவும் கொள்ளலாம். நூல் நிலைத்துப் பயன்தரக் கடவுள் வாழ்த்தும், நூலின் தன்மை விளங்க அதன் பெயரும் இன்றியமையாதனவாதலின் அவற்றையாவது கூறலே அழகு எனப்பட்டது. (523)

**125. கொலைபுலை மறுத்திடல் நூற்கும், கொற்றம்**
**பெருங்கொடை எனும்இவை பிரபந்தத் தினுக்கும்,**
**கடவுளும் தொண்டரும் காவியத் தினுக்கும்**
**உரியமெய்ப் பொருள்என உரைத்தனர் உணர்ந்தோர்.**

உயிர்க்கொலையையும், புலாலுண்டலையும் தவறென விளக்குதல் அறிவுப் பனுவலாகிய நூல்களுக்கும், வெற்றி, பெருவள்ளன்மை ஆகிய இரண்டின் சிறப்பும் பாட்டுடைத் தலைவனைப் போற்றும் பனுவலாகிய பிரபந்தத்திற்கும், இறைவன், அடியவர் ஆகியோர் வரலாறு முதலியன காவியத்திற்கும் பாடுபொருளாக அமைவதற்கு உரிமைபெற்ற பொருள்கள் ஆம் என அறிஞர்கள் கூறுவர் என்றவாறு.

"அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தன்நோய் போல் போற்றாக்கடை"[2] என்பது தமிழ்மறையாதலின் அறிவுப் பனுவல்கள் எப்பெற்றியதாயினும் கொலைபுலையை மறுக்க வேண்டும் என்றார். இந்நூற்பாவில் இடம் பெற்ற வெற்றி தொழில் வெற்றி, போர் வெற்றி இரண்டையும் குறிக்கும். இவ் வெற்றி செல்வ ஆக்கத்திற்கும், வள்ளன்மை புகழுக்கும் காரண

---

1 நன்னூல் 54
2 திருக்குறள் 315

மாதலின் இவை பிரபந்தத்தின் பாடுபொருளாயின. காவியத்தில் கடவுள், அடியார் வரலாறு விரிவாக இடம்பெறும். (524)

**126. நூல்களின் பகுதிகட்கு அதிகாரம் என்றும்**
**இயல்புஎன்றும் உருவகம் என்றும் பின்னும்**
**இசைந்தவா றும்பெயர் இட்டனர் புலவோர்.**

அறிவியல் நூல்களின் உட்பிரிவுகளுக்கு அதிகாரம், இயல்பு, உருவகம் எனவும், மேலும் அந்தந்த நூலுக்குப் பொருத்தமாகவும் பெயர் சூட்டினர் என்றவாறு.

அதிகாரம் எனப் பெயர் பெற்றவை தொல்காப்பியம், வீரசோழியம் முதலியன. திருக்குறளின் அதிகாரப் பகுப்பும் இங்கே கொள்ளத்தகும். இயல்பு எனப் பெயர் பெற்றது இந்நூல். உருவகம் எனப்பெயர் பெற்றது சிறப்புநூல்.

வேறுபெயர் பெற்ற நூல்கள்:- நன்னூல், தண்டியலங்காரம்-இயல்; பிரயோக விவேகம், கைவல்ய நவநீதம் - படலம்; திருவருட்பயன்-நிலை; சிவப்பிரகாச விகாசம் - மரபு. வேறும் வந்துழிக்காண்க. (525)

**127. தசாங்கம், பவனி, தூதுஇவை முதலாப்**
**பிரபந் தப்பொருள் பிரிவுபல் விதமே.**

பிரபந்தப் பனுவல்கள் தம் பாடுபொருளால் தசாங்கம், உலா, தூது முதலியனவாகப் பல்வேறு வகைப்படும் என்றவாறு. (526)

**128. காண்டம் சருக்கம் படலம் கதிமுதல்**
**காவியப் பகுதியும் கணக்கரும் பாற்றே.**

காவியப் பனுவல்களும் காண்டம், சருக்கம், படலம், கதி முதலிய பல்வேறு பெயர்களிலமைந்த உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும் என்றவாறு.

காண்டம், படலம் இரண்டும் கம்பராமாயணத்தில்; சருக்கம், புராணம் இரண்டும் பெரிய புராணத்தில்;பருவம்,சருக்கம் இரண்டும் வில்லி பாரதத்தில்; கதி பிரபுலிங்கலீலையில்.

கணக்கரும்பாற்றே என்றதனால் சிலப்பதிகாரத்தின் காதை, சிந்தாமணியின் இலம்பகம், பல தல புராணங்களின் அத்தியாயம் போன்றனவற்றையுங் கொள்க. (572)

**129. பைந்தமிழ்ப் புலவோர் பகரும் பனுவல்**
**தொண்ணூற்று ஆறுஎனச் சொல்வார் சொல்லினும்**
**லகரி முதற்கொடு நொண்டிஈறு ஆகிய**
**வேறுபல் விதங்களும் விளங்குகின் றனவால்;**
**யாமும் சிலவிதம் இயம்ப நாணுதுமே.**

பசுமையான தமிழிற் புலமைமிக்க பாவலர்களால் இயற்றப் படும் பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறு எனச் சிலர் கூறு கின்றனர். என்றாலும் அவற்றுள் அடங்காத லகரி, நொண்டி போன்ற வேறு பல சிற்றிலக்கிய வகைகளும் இலக்கிய உலகில் காணப்படுகின்றன. எனவே சிற்றிலக்கியங்கள் இவ்வளவுதான் என்று ஓர் எண்ணிக்கை கொடுத்துக் கூற யாம் நாணுகின்றோம் என்றவாறு.

**130. மழலையங் குழவியை வயிறுநொந்து ஈன்ற**
**தாய்இடும் பெயரே தலைமிசைக் கொளல்போன்று**
**அருந்தமிழ்ப் பனுவலும் ஆக்கியோன் அமைத்த**
**பெயர்பொறுத்து உலகில் பிறங்கிடல் முறையே.**

குதலைமொழி பேசும் அழகிய குழந்தை அதனை வயிற்றிற் சுமந்து வருந்திப் பெற்றெடுத்த அன்னை சூட்டும் பெயரா லேயே சிறப்பாக வழங்கப்படுதல் போலத் தமிழ்ப் பிரபந்தமும் அதனை இயற்றியவன் உரைத்த பெயர் பெற்று விளங்குதல் தான் முறையாகும் என்றவாறு.

இதனால் நூலாசிரியனின் மனோதர்மத்திற்கேற்பப் புது வகைப் பனுவல்களை இயற்றிக்கொள்ள வழிவகுக்கப்பட்டது. சதகம் என்றால் 100 பாடல். இவர் ஏழு சதகங்களைத் தொகுத்துச் சப்த சதகம் என ஒரு நூலும், 10 சதகங்களைத் தொகுத்து சதகப்பதிகம் என வேறோர் நூலும் செய்துள் ளார். அவ்வாறே பத்துப்பாட்டுள்ள பதிகங்கள் நூற்றைத்

தொகுத்துப் பதிகச்சதகம் எனவும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இத்தகைய நூல்களையும், அதன் பெயர்களையும் இந் நூற்பாவால் அமைத்துக் கொள்ளலாம்.

இந்நூலின் பொதுப்பாயிரத்தில் இவர் இதே கருத்தை, 'கடலின் மீன்பெயர் நுளையர்வாய் மொழியெனல் கடுக்கும் 'டம்நி லாவிய செழுந்தமிழ்ப் புலவர்'' என வேறோர்உவமை யால் விளக்கினார். (529)

131. ஒருபெயர்க்கு உரியார் உலகினில் பலரால்;
பனுவலும் அங்ஙனம் பகர்வது முறையே.

இவ்வுலகத்தில் ஒரே இயற்பெயரைப் பூண்டு பலர் விளங்கு கின்றனர். இவ்வாறே ஒரே பெயரில் பல நூல்கள் தோன்று வதில் தவறில்லை என்றவாறு.

இச்சூத்திரத்தால் மாலை, அந்தாதி, பதிகம், சதகம், அலங் காரம், விலாசம், மஞ்சரி போன்ற பொதுப்பெயர்களில் பல வகையான வேறுபட்ட பிரபந்தங்கள் நிலவுதல் தழுவி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. (530)

132. மற்றையர்க்கு ஆகாப் பெயர்புனை மாந்தரில்
சிற்சில பனுவல் திகழ்வவும் உளவே.

தம்மைத் தவிர வேறு எவரும் வைத்துக்கொள்ளக் கூடாத சிறப்புப் பெயர்கள் சிலருக்கு இருக்கும். இலக்கியத்தி லும் சில நூல்கள் இவ்வாறு மற்றவர்கள் ஆளக்கூடாத பெயர் பெற்று விளங்குகின்றன என்றவாறு.

சேரமான், வழுதி, வளவன் போன்ற குடிப்பெயர்களும், கலைமாமணி போன்ற சிறப்புப்பெயர்களும் அவற்றை உடையவர்களுக்கன்றி மற்றவர்க்கு ஆகாப் பெயர்களாம். சில நூல்களுக்கும் இது பொருந்தும் என்கிறார்.

குறள் வெண்பாக்களால் ஆன நூல்கள் யாவும் திருக்குறள் ஆகமாட்டா. நான்கடிப் பாக்களாலானவை அனைத்தும்

நாலடியார் எனலாகாது. உரைக்கப்பட்டவை எல்லாம் திருவாசகம் என்றால் பொருந்தாது. இவை போல்வன சிறப்பு வகையாற் பெயர் பெற்றவைகள். இத்தகைய பனுவல்கள் பெயர் முறையில் சிறப்புப் பெயர் பெற்ற மாந்தருக்கு இணையானவை என உவமை கூறித் தெளிவிக்கிறார். (531)

**133. ஒன்றற்கு ஒருவன் உரைத்ததுஓர் பனுவலை**
**வேறுமோர் புலவன் விளம்புதல் இழிவே.**

ஒரு பொருள் பற்றி ஒரு புலவன் முன்னமேயே ஒரு சிற்றிலக்கியத்தை இயற்றியிருந்தால், பின்னால் தோன்றிய வேறொருவன் அதே பொருள் பற்றி அதே பிரபந்தத்தை இயற்றுதல் சிறப்புடைய செயலன்று என்றவாறு.

உதாரணமாகக் குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்மை மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். வேறொரு புலவர் அத்தலத்தின் அவ்விறைவி மீதே இன்னொரு பிள்ளைத்தமிழ் பாடலாகாது. பிற்காலப் புலவர் அவ்வம்மையைப் பாட விரும்பினால் வேறுவகையான பிரபந்தம்தான் பாட வேண்டும் என்கிறார்.

இக்கருத்து தல சம்பந்தப்பட்ட பிரபந்த வகைகளுக்கு மட்டுமே பொருந்தும் எனக் கொள்ளலாம். ஏனெனில் சைவ சமயாச்சாரியர் நால்வரைப் போற்றிப் பல பிள்ளைத்தமிழ்கள் உள்ளன. இவை ஒரு தலத்துக்கு மட்டும் உரியதாக அமையாமல் பொதுவாக அமைகின்றன. மேலும் தோத்திரப் பதிகங்களையும் இவ்விதியிலிருந்து விலக்கிவிட வேண்டும். ஏன் எனில் ஒருவரே ஒரு தலத்திற்குப் பல பதிகங்கள் அருளி இருப்பதைச் சைவத் திருமுறைகளில் காணலாம். இவ்வாசிரியரும் ஒரே தலத்தின் ஒரே மூர்த்திக்குப் பல பதிகங்கள் பாடியுள்ளார். எனவே தோத்திரங்களை இவ்விதிக்கு உட்படுத்தாமல் கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை போன்ற சிற்றிலக்கியங்களை மட்டுமே கொள்ள வேண்டும். (532)

**134. யாப்பிலக் கணத்தினை இம்மட்டு அடக்கி**
**மற்றோர் இலக்கணம் வகுக்கா நா டுதுமே.**

யாப்பிலக்கணத்தை இந்த அளவில் நிறைவுசெய்து அடுத்த இலக்கணம் ஆகிய அணியிலக்கணத்தை வகுத்துக் கூற முற்படுகின்றோம் என்றவாறு.

இந்நூற்பாவால் நான்காவதாகிய யாப்பிலக்கணம் நிறைவு செய்யப்பட்டு ஐந்தாவதாகிய அணியிலக்கணத்திற்குத் தோற்று வாய் செய்து கொள்ளப்படுகிறது. (533)

பனுவ லியல்பு முற்றிற்று.

யாப்பிலக்கணம் முற்றிற்று.

ஆகச் சூத்திரம் 533

# 5. அணி இலக்கணம்

யாப்பிலக்கணத்தை நூற்று முப்பத்து நான்கு நூற்பாக்களால் நிறைவு செய்த நூலாசிரியர் நிறுத்த முறையானே அடுத்த அணியிலக்கணம் உரைக்கத் தொடங்குகிறார். இவ்விலக்கணம் உவகை இயல்பு, உடைமை இயல்பு, கற்பனை இயல்பு, நிகழ்ச்சி இயல்பு, ஆக்க இயல்பு என்னும் ஐந்து உட்பிரிவுகளை உடையது. இவ்விலக்கணம் மொத்தம் நூற்று ஒன்பது நூற்பாக்களால் இயன்றதாகும்.

தொல்காப்பியத்தில் உவமை ஒன்றே அணியாகக் கொள்ளப்பட்டுப் பொருளதிகாரத்தில் தனி இயலாக இடம் பெற்றுள்ளது. திவாகர நிகண்டு அணிகளைச் சொல்லணி, பொருளணி எனப்பிரித்து முறையே 28,61 என்கிறது![1] வீரசோழியமும் தண்டியலங்காரமும் 35 பொருளணிகளை விளக்குகின்றன. மாறனலங்காரம் 64 அணிகளைக் கூறுகிறது. சந்திராலோகம் விளக்கும் அணிகளின் எண்ணிக்கை 100. குவலயானந்தமோ 120 அணிகள்வரைப் பட்டியலிட்டு விளக்குகிறது. என்றாலும் அணிகள் இத்துணை என்னும் எண்ணிக்கைக்குள் அடங்காது கவிஞனின் ஆற்றலுக்கேற்ற அளவு விரிவடையும் என்பது இந்நூலாசிரியர் கொள்கை. ''அணி எனல் புலவோன் அறிவு அளவாமே''[2] என இவரே தெளிவாகக் கூறியுள்ளார். இது, ''செய்யுள் செய்வார் செய்யும் பொருட்படைப் பகுதி எண்ணிறந்தனவாகலின் அப்பகுதி எல்லாம் கூறாது பொதுவகையான் வரையறைப்படும் இலக்கணமே கூறிஒழிந்தான் என்பது''[3] என்னும் பேராசிரியர் கருத்தோடு ஒத்துள்ளமை காண்க. இனி அவரே தம் உரையில், ''இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லு

---

1 திவாகரம்

2 ஏழா. இலக். 283

3 பேரா. தொல். பொருள். 278

கின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாம் என இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணம் கூறப்படா"[1] என்கிறார். அப்பைய தீட்சிதரின் சித்திர மீமாம்சையின் கருத்தைத் தமிழில், "உவமை என்னும் தவலருங் கூத்தி பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி யாப்பறி புலவர் இதயம் நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே" என மொழிபெயர்த்துள்ளார். மகாகவி பாரதியார், "எல்லா வித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறொன்றுமில்லை; 'உபமாலங்காரமே அலங்காரத்தின் பிராணன்' என்று பழைய இலக்கணக்காரர் சொல்லுகிறார்கள்"[2] எனத் தெளிவாக்கியுள்ளார். இதே கருத்தைத்தான் இவ்வாசிரியரும், "உவமை அதனில் உள்ளபல் விகற்பம் ஒன்றே அணியென உணங்குனர் பலரே'[3] என்கிறார்.

இக்கொள்கை பற்றியே அணி இலக்கணமாகிய இதில் உவமை ஒன்றே இடம் பெற்றுள்ளது. இப்பிரிவின் முதல் நூற்பா தற்சிறப்புப்பாயிரம் ஆகும்.

1. **கணிஉரு ஆகிய காமர் முருகனைப்**
**பணிபவர் அடிமலர் பழிச்சிப் பைந்தமிழ்**
**அணிஇலக் கணம்சிறிது அறையலுற் றனமே.**

(வள்ளி நாயகியாரால் காவல் செய்யப்பட்ட தினைப்புனத்தில்) வேங்கை மரமாக வடிவம் மாறிநின்ற முருகக் கடவுளை வணங்கும் அன்பர்களின் திருவடித் தாமரைகளைப் போற்றிப் பசுமையான தமிழ் மொழியின் அணி இலக்கணத்தை ஒரு சிறிது கூறலுற்றாம் என்றவாறு.

---

1 பேரா. தொல். பொருள். 312

2 பாரதியார் கட்டுரைகள் - கலைகள் - பக்.916

3 ஏழா. இலக். 284.

கணிஉரு ஆகிய முருகன் என்றதனானே இயல்பான ஒரு கருத்து கவிஞன் நினைந்து மாற்றி வேறு வகையாகக் கூறு வதே அணி எனப்படும் என்பதுவும், காமர் முருகன் என்ற தனானே அது மொழிக்கு எழில் தருவது ஆகும் என்பதுவும் பெறப்பட்டன. பழிச்சல் என்பது உபலக்கணமாக மூவகை வணக்கத்தையும் குறித்து நின்றது. அடுத்த நூற்பா இவ்விலக் கணம் இத்தனை பிரிவுகளை உடையது எனக் கூறுகிறது.

(534)

**2. அணிநிலை அளப்பரிது; ஆயினும் உவமை,
உடைமை, கற்பனை, நிகழ்ச்சி, ஆக்கம்என்று
ஐவகை வாய்பாடு அறைகுதும் அன்றே.**

அணிகள் செய்யுட்கண் நிற்கின்ற வகை இத்துணை வகை யாம் என ஒருதலையாகக் கூறமுடியாது. எனினும் யாம் அணியை உவமை, உடைமை, கற்பனை, நிகழ்ச்சி, ஆக்கம் என்ற ஐந்து வகையாகப் பகுத்துக்கொண்டு கூறுவாம் என்றவாறு.

அணிநிலை அளப்பரிது என்பதும், உவமையின் ஏற்றமும் முன்பே காட்டப்பட்டன. இவ் வைவகைப் பாகுபாடு பற்றி ஆங்காங்குக் கூறப்படும். இவ்வாறு பகுத்துக்கொண்ட பின்னர் நிறுத்த முறையானே முதலில் உவமை இயல்பு பேசப்படுகிறது.

(535)

## 1. உவமை இயல்பு

அணியிலக்கணத்தின் முதற்பிரிவாகிய இவ்வியல்பு 41 நூற் பாக்களை உடையது. இவ்விலக்கணம் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவமஉருபு ஆகிய பகுதிகளைப் பற்றியோ அல்லது விரி, தொகை உவமைகளின் பாகுபாட்டைப் பற்றியோ அல்லது உண்மையுவமை, புகழுவமை, நிந்தையுவமை, விபரீத உவமை, இல்பொருளுவமை, மாலையுவமை முதலான பற்பல உவமைவகைகளைப் பற்றியோ ஒன்றும் கூறுவதில்லை.

இவர் உபமான சங்கிரகம், இரத்தினச் சுருக்கம் ஆகிய நூல்களைப் போன்று இந்தஇந்தப் பொருளுக்கு இன்னின்னவை உவமையாகும் என்று கூறித் தமிழ் இலக்கிய உவமை மரபைக் காட்டுகிறார். இந்நூலில் பொருளிலக்கணத்தில் அகப் பொருளைப் பற்றிக் கூறுங்கால் உறுப்பியல்பில் முன்னரே சில உவமைகள் கூறப் பெற்றன. இங்கேயும் அம்முறையிலேயே கூறப்படுகின்றன.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில் தொன்றுதொட்டுப் பயிலப்பெற்றுவரும் உவமைகளை எடுத்துக்காட்டினாலும் இவைகளைத்தாம் கூறவேண்டும்; வேறு கூறினால் வழுவாகும் என்று சொல்லவில்லை. மாறாக, "பொருந்தக் கூறிய புத்துவ மைச்சொல் தழுவும்நா வலரும் தமராம் எமக்கே"[1] என இவ் வியல்பின் இறுதியில் கூறுகிறார்.

**3. செம்பொற் குன்றமும், செக்கரும், கனலும்,**
**மாணிக்கம் ஆதியும் மயிலோன், விடையோன்**
**கணபதி முதலினர் காட்சிக்கு இணையே.**

செம்பொன்னால் ஆகிய குன்றும், மாலைக்கால வானமும், தீயும், மாணிக்கக் கல்லும், இவை போன்ற நல்ல செம்மையான பிற பொருள்களும் முருகப்பெருமான், சிவ பெருமான், விநாயகர் போன்றோர் தோற்றத்திற்கு உவமைகளாகும் என்றவாறு. (536)

**4. கடலும், மேகமும், கரியமால் வரையும்**
**இரவும்,மைக் குழம்பும், இனையன யாவும்**
**நெடியோன், உமை,எமன், இந்திரன், வள்ளி,**
**அவுணர்க்கு இணைஎன்று அறைவது வழக்கே.**

சமுத்திரம், வான்முகில், கருநிறங்கொண்ட பெரிய மலை, நள்ளிரவு, கரிய மைக்குழம்பு ஆகியவற்றையும் இவை போன்ற சிறந்த கருமை பெற்ற பொருள்களையும் திருமால், பார்வதி

---

1 அறுவகை. 575

எமதருமன், இந்திரன், வள்ளி நாயகி, அரக்கர்கள் ஆகிய வர்களுக்கு உவமைகளாகக் கூறுதல் மரபாம் என்றவாறு.

இலக்கியத்தில் கருமை, நீலம், பசுமை ஆகிய மூன்றும் பெரும்பாலும் ஒன்றாகவே கொள்ளப்படும். கம்பநாடன் ஒரே அடியில், "மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ"[1] என இம்மூன்று வண்ணங்களையும் ஒன்றாகக் கூறுவான். எனவே இம் மூன்று வண்ணப் பொருள்களும் இந் நூற்பாவில் கூறப்பட்ட அவுணரொழிந்த மற்றவர்களுக்கு உவமையாக வரும். அவுணர்களுக்குக் கரியநிறம் மட்டுமே கூறப்படும். (537)

**5. பொன்நிறம் பிரமன் பூமகள் குஞ்சரி**
**என்னும் மூவர்க்கு இயல்பாம் அன்றே.**

பிரமன், திருமகள், தெய்வயானை ஆகிய மூவர்க்கும் பொன்வண்ணம் இயற்கையாம் என்றவாறு. (538)

**6. அன்னம் கலைமகள் அணிகாட் டுதல்போல்**
**மஞ்ஞையும் கிளியும் மலைமகள் மறமகள்**
**போலும்என்று உரைப்பது புலவோர்க்கு இயல்பே.**

அன்னப்பறவை வாணியின் எழிலுக்கு உவமையாதல்போல் மயில் உமாதேவியாருக்கும், கிளி வள்ளிநாயகிக்கும் இணை யாகும் என்பது கவிஞர் மரபு என்றவாறு. (539)

**7. அரன்குகன் திருமால் என்னும் மூவர்**
**வெளிறலும், கணபதி கருநிறம் மேவலும்,**
**மாதளம் பூஎன மலைமகள் சிவத்தலும்**
**உண்டுஎனச் சிற்சிலர் உரைத்தனர் உணர்ந்தே.**

சிவபெருமான், முருகக்கடவுள், நாராயணமூர்த்தி என்னும் மூவருக்கும் (முறையே செம்மை, செம்மை, நீலம் ஆகிய நிறமே அன்றி) வெண்மை நிறம் உடைமையையும், விநாயகர் (செம்மை நிறத்தோடு) கருநிறம் பெற்று விளங்குதலையும்

---

1 கம்பர் - கங்கைப். 1

உமாதேவி (பசுமையேயன்றி) மாதுளம்பூப்போன்ற செம்மையையும் பெற்றிருத்தல் உண்டு என்று சிலர் தம் உபாசனையினால் கண்டறிந்து கூறியுள்ளனர் என்றவாறு.

சிவபெருமான் பொதுவாகச் செம்மேனியம்மான் என்றே கூறப்படுவார். சில இடங்களில் பொன்னார் மேனியன் எனவும் வழங்கப்படுவார். திருவாசகம், "நிறங்களோரைந்துடையாய்"[1] என்கிறது. உபாசகர்கள் ஒரு குறிப்பிட்ட திருவுருவைத் தியானிக்கும்பொழுது அதற்குரிய நிறத்தோடு தியானிப்பர். இம்முறையில் சிவ வடிவத்தில் ஒன்றான சத்யோஜாத மூர்த்தியின் தியானம் வருமாறு:

குந்தேந்து ஸங்க ஸ்படிகாவ பாஸோ
வேதாக்ஷமாலா வரதாபயாங்கஹ |
த்ரயக்ஷ: சதுர்வக்த்ர உருப்ரபாவ:
ஸத்யோதிஜாதோ அவதுமாம் ப்ரதீச்யாம் || [2]

(முல்லைமலர், சந்திரன், சங்கு, பளிங்கு போன்ற நிறத்தை உடையவரும், மறைச்சுவடி, ஜபமாலை, வரதமுத்திரை, அபய முத்திரை ஆகியனவற்றைத் தாங்கியவரும் மூன்று கண்களையும் நான்கு முகங்களையும் உடையவரும், மிகப்பெருமை பெற்றவருமாகிய சத்யோஜாதர் மேற்குத்திசையில் என்னைக் காக்கட்டும் என்பது இச்சுலோகத்தின் பொருள். இது காரண ஆகம ஸ்லோகம்).

மேலும் அம்ருத ம்ருத்யுஞ்ஜயர்[3] ருத்ரமூர்த்தி,[4] உமாமகேஸ்வரர்[5] தத்புருஷ மூர்த்தி[6] ஆகிய வடிவங்களும் வெண்மையானவை என ஸ்ரீதத்வநிதி கூறுகிறது. இந்நூலாசிரியரும் திருப்

---

1 திருவாசகம்–சிவபுராணம் 49

2 ஸ்ரீதத்வநிதி பாகம் 1 பக்கம் 241

3 ,, ,, 234

4 ,, ,, 239

5 ,, ,, 240

6 ,, ,, 243

புகலூர் அக்னீஸ்வரப்பெருமான்மீது திருமேனி வெளுப்பு என ஒரு நூல் பாடியுள்ளார்.[1]

இவ்வாறே சுப்பிரமணியர் வடிவங்களில் ஞானசக்திதரர் வெண்மைநிறம் உடையவர் என ஸ்ரீதத்துவநிதி கூறுகிறது.[2]

திருமால் வடிவங்களில் சிம்சுமார மூர்த்தி,[3] ஹயக்ரீவ மூர்த்தி,[4] ஹம்ஸ மூர்த்தி,[5] ததிவாமன மூர்த்தி,[6] அஸ்வத்த நாராயண மூர்த்தி[7], கோவிந்தமூர்த்தி[8] ஆகியன வெண்மை நிறமுடையனவாகத் தியானிக்கப்படும். ஸ்ரீதர வடிவத்தின் தியானஸ்லோகம் வருமாறு:-

ஸ்ரீதர: புண்டரீகாப: சக்ரஸங்க கதாப்ஜப்ருத் |
ரக்தாரவிந்த நயனோ முக்தாதாம விபூஷித: ||[9]

(வெண்தாமரை போன்ற நிறத்தை உடையவரும், சக்கரம்' சங்கு, கதை, தாமரை ஆகியவைகளை ஏந்தியவரும், செந்தாமரையைப் போன்ற கண்களை உடையவரும், முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவரும் ஆவார் ஸ்ரீதரர் என்பது இதன் பொருள்.)

விநாயகர் வடிவங்களில் உச்சிஷ்ட கணபதி, ஏக தந்த கணபதி ஆகிய இரண்டும் கரிய நிறத்தனவாகக் கொள்ளப் படும்.[10] ஒளவையாரும் தன் விநாயகர் அகவலில், "நெஞ்சிற்

1 இந்நூல் அச்சாகவில்லை. திருவாமாத்தூர் கௌமார மடாலய ஏட்டுச்சுவடி எண்: 42

2 ஸ்ரீதத்வநிதி பாகம் 1 பக். 320

3 ,, 173

4 ,, 175

5 ,, 179

6 ,, 180

7 ,, 181

8 ,, 184

9 ,, 187

10 ,, 305,318

குடிகொண்ட நீல மேனியும்[1] என்று கூறியுள்ளார்.

உமாதேவியைச் சிவபெருமானின் மனைவி என்ற புராண வழியில் அல்லாமல் முதற்பரம்பொருளாக வழிபடும் சாக்தர்கள் சக்தியைச் செந்நிறமாகவே கொள்வர். அபிராமி பட்டர் தேவியின் நிறத்தை, "உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத் துணையே"[2] எனவே குறிப்பிடுகிறார். சாக்தேயர்கள் மிகப் போற்றும் ஸ்ரீலலிதா சகஸ்ரநாமமும், சிந்தூராருணவிக்ரஹாம்[3] என்றும், தாடிமீ குசுமப் பிரபா[4] என்றும் கூறுகிறது.

இறைவனின் ஒரு வடிவத்தை உபாசித்து அவ்வடிவத்தைத் தம் மனவெளியிலே கண்டவர்களாலேயே இந்த வடிவ வர்ணனைகள் கூறப்பட்டுள்ளன. ஆதலின் இவை வெறும் கற்பனைகள் அல்ல என்னும் தம் கொள்கையை வற்புறுத்தச் சிற்சிலர் உரைத்தனர் உணர்ந்தே என்றார். (540)

**8. வெள்ளி மால்வரை விடைஅயி ராவணம்**
**பொன்னூர் வேழம் குகன்கொடி அயன்பரி**
**ஆதிக்கு இணைஎன்று அறையத் தகுமே.**

சிவபெருமானுடைய ஊர்தியாகிய இடபம், அயிராவணம் எனும் யானை, தேவருலகத்தின் அரசனாகிய இந்திரனின் வாகனமாகிய அயிராவதம் என்னும் களிறு, முருகப்பெருமானின் கொடியாகிய சேவல், பிரமன் ஊர்கின்ற அன்னப் பறவை முதலியனவற்றிற்கு வெண்மையான பெரிய மலையாகிய கயிலாயத்தை உவமையாகக் கூறலாம் என்றவாறு. (541)

**9. வேலொடு மின்னலை ஆழியோடு இரவியைச்**
**சங்கொடு மதியைச் சாற்றுதல் இயல்பே.**

---

1 விநாயகர் அகவல்–அடி 8

2 அபிராமி அந்தாதி 1

3 லலிதா சஹஸ்ரநாமம்–தியானம்

4 ,, ,, நாமாவளி

முருகப்பெருமானின் வேலாயுதத்திற்கு மின்னற்கீற்றையும், திருமாலின் சக்கரத்திற்குச் சூரியனையும், சங்கிற்குச் சந்திரனையும் உவமையாகக் கூறுதல் மரபாகும்என்றவாறு. (542)

**10. மயிலினை மரகதம் என்கை ஆதிய**
**தெய்வச் சின்னத்து உவமைச் சிறப்புஎலாம்**
**தொண்டர்தம் மொழிவழி சொல்வது முறையே.**

முருகப்பெருமானின் ஊர்தியாகிய மயிலை மரகதம் என்று உவமித்துக் கூறுதல் போன்ற கடவுளர்களின் அடையாளங்களுக்குரிய உவமை நலன்களையெல்லாம் அடியார்களின் வாக்கிற்கொப்பவே சொல்லுதல் மரபாகும் என்றவாறு.

புனிதமானவையெனக் கருதப்படுவனவற்றிற்குக் கவிஞன் தன் மனம் போல உவமை கூறக்கூடாது. மலைமகளைக் கரிய நிறத்தாள் எனக்கூற எருமை போன்ற நிறத்தினள் என்னலாகாது. இது பற்றியே தொல்காப்பியரும் "உவமைப் பொருளை உணருங் காலை மரீஇய மரபின் வழக்கொடு வருமே",[1] என்றார். இவர் அடியார்கள் தெய்வீகச் சின்னங்களை எப்படிக் கூறியுள்ளனரோ அவ்வாறே கூறுக என்கிறார். (543)

**11. வசிட்டனை அகத்திய மாமுனி ஆதியர்**
**தம்மைத் தவத்தோர்க்கு இணைசொலில் தகுமே.**

வசிஷ்டர், அகத்தியர் போன்ற சிறந்த முனிவர்கள் தவசிகளோடு உவமிக்கத் தக்கவர்கள் என்றவாறு. (544)

**12. உம்பர்ஊர்க் குரவன், நான்முகன் ஆதியர்**
**அந்தணர் புகழ்ச்சிக்கு அணிகலம் ஆவரே.**

அமரர் உலகத்தின் ஆசானாகிய வியாழன், பிரமன் போன்றோர் வேதியர்களின் சிறப்பைக் கூறுங்கால் உவமிக்கத் தக்கவர்கள் என்றவாறு. (545)

---

1 தொல். பொருள். 292.

**13. இராகவன் தருமன் முதலினர் தம்மை**
**நீதிமன் னவர்க்கு நிகர்சொலல் இயல்பே.**

இராமபிரான், தருமபுத்திரர் போன்றவர்களைச் செங்கோல் வழுவாமல் ஆட்சிசெய்யும் அரசர்களுக்கு ஒப்பாகக் கூறலாம் என்றவாறு. (546)

**14. வீமன் வென்றிவில் விசயன் ஆதியரை**
**வீரருக்கு உவமை விளம்பிடல் இனிதே.**

வீமன், காண்டீபத்தை உடைய அருச்சுனன் போன்றவர்கள் வீரர்களுடன் இணையாக்கத் தக்கவர்கள் என்றவாறு.

**15. வணிகர்க்கு அளகைக் காவலன் தன்னை**
**உவமை கூறிடல் உத்தமம் ஆமே.**

பெரிய வியாபாரிகளுக்கு அளகாபுரியின் வேந்தனாகிய குபேரனை ஒப்பிட்டுக்கூறுதல் சிறப்பாம் என்றவாறு. (548)

**16. முளைகொணர்ந்து அடிசில் இட்டோன் மூர்த்தி**
**சடையன் ஆதியர் சதுர்த்தர்க்கு உவமையே.**

வித்திய முளைவாரி இரவில் விருந்து படைத்த இளையான்குடி மாற நாயனார், மூர்த்தி நாயனார், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் போன்றவர்களை வேளாளர்களுக்கு உவமை கூறுதல் மரபாம் என்றவாறு.

வணிகர் குலத்தே தோன்றி மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனாரை வேளாளர்களுக்கு உவமையாகக் கூறுவதன் காரணம் விளங்கவில்லை. (549)

**17. மிடிஅறக் கொடுக்கும் வீறுஉடை ஒருவனைக்**
**கன்னன்ஆ தியர்க்குஇணை கழறலும், அன்றி**
**அரன், அரி குகவேள் அனையான் எனினும்**
**முத்தமிழ்ப் புலவோர் முனியார் அன்றே.**

இரவலரின் வறுமை முற்றிலும் அழியும்படியாகப் பெரு நிதியம் வழங்கும் வள்ளல் ஒருவனைத் துரியோதனின் நண்பனாகிய கன்னனுக்கு நிகராகக் கூறுவதுடன் அவனைச் சிவ பெருமான், திருமால், முருகப்பெருமான் ஆகியோரை ஒத்தவன் என்று கூறினாலும் தமிழ் மரபு அறிந்த நாவலர்கள் தள்ள மாட்டார்கள் என்றவாறு.

மிடி அறக்கொடுத்தல் பேரருள் ஆதலின் அத்தன்மை உடையானைக் கடவுளுடன் ஒப்பிட்டுக் கூறினாலும் தவறு இல்லை என்பது கருத்து. இதையே, "புகழ்வேண்டிச் சிறிதே பொருள் கொடுப்பவர்களை மகிழ்விக்க அவர்களைத் தெய்வமாகக் கூறிப் போற்ற வேண்டாம்" என விலக்குவதாகவும் கொள்க. (550)

**18.** **கார்மணல் ஓட்டமும், பாசிக் கொத்தும்,**
**மேகமும் இருளும் விரிமலர்ச் சோலையும்,**
**வண்டுக் கூட்டமும், மற்றோர் விதப்பனை**
**காய்த்துள கொத்தும் கருங்குழற்கு இணை; அது**
**பின்னுறில் கொன்றைக் காய்எனப் பிறங்கும்;**
**அவிழ்ப்புறில் அகத்திக் காய்க்கொத்து அனையதாம்;**
**இன்னமும் பலவாறு இயம்புவர் புலவோர்.**

ஆற்றோரத்தே படிந்துள்ள கருமணலும், கடற்பாசிக்கூட்டமும், முகிலும், இருட்டும், மலர்கள் நிறைந்த காவும், வண்டின் ஒழுங்கும், கூந்தற் பனங்காய்க் கொத்தும் மகளிரின் கரிய கூந்தலுக்கு உவமையாகும். அக்கூந்தல் சடையாகப் பின்னப் பட்டால் கொன்றைக்காயைப்போல் தோற்றமளிக்கும். அப் பின்னல் அவிழ்த்து விடப்படின் அகத்திக்காய்க்கொத்துப் போன்றிருக்கும். இவைகளே அன்றி வேறு உவமைகளையும் கவிஞர் மகளிரின் கூந்தலுக்கு நிகராகக் கூறுவர் என்றவாறு.

இந்நூல் பொருள் இலக்கணம் உறுப்பியல்பில் மகளிரின் அங்கங்களின் இயற்கைப் பண்பும் செயற்கைப் புனைவுகளும் கூறப்பட்டன. அங்கும் சில உவமைகள் பெறப்பட்டன. இங்குத் தனியாக உவமைகளையே கூறுகிறார். கார்மணல் ஓட்டம் என்றது ஆற்றறலை,

''கொன்றைக் கனி,கல் லார்மனமும்,
கூந்தற் கமுகும் பொதுமாது
தன்றன் இதயம் சூல்மேகம்
சவரி கருமை யடர்கங்குல்
மன்றல் கமழும் அஞ்சனிப்பூ,
வயங்குஞ் சிறைவண் டினம் சோலை,
துன்றல் வரும்பைம் புனல்கொழிக்கும்
தூய அறல், இந்திரநீலம்''
''இருள்சை வலம்ஆம் மூவைந்தும்
...தகரக் குழலுக்கு இணையாமே.''[1]
என்பது இங்கு ஒப்பிடத்தக்கது.

இவ்வுவமைஇயல்பில் மகளிரின் உறுப்புகளுக்கு மட்டு மன்றி ஆடவர்களின் அங்கங்களுக்கும் உவமை கூறப்படுகிறது.

**19. நெடுமால் அனையான் நெற்றி நிமிர்பிறை**
**செந்திரு அன்னாள் சிறுநுதல் ஏனையே.**

திருமாலைப் போன்று சிறந்து விளங்குகின்ற ஆண்மகனின் நுதல் நேராகஉள்ள பிறைச்சந்திரன்போல் விளங்கும். எழிலிற் சிறந்து திருமகளை நிகர்த்த பெண்ணின் நெற்றி வடிவில் சிறுத்தும், வளைந்த பிறைமதியைப் போன்றும் தோன்றும் என்றவாறு.

இதனாலேயே ஆடவரிற் சிறந்தாருக்குத் திருமாலும், பெண்களிற் பெருமையுடையார்க்குத் திருவும் உவமை ஆவர் என்பதும் பெறப்பட்டது. இதில் நிமிர்பிறை என்பது இல் பொருளுவமையின் பாற்படும். மகளிர்க்குச் சிறுநுதல் என்றதால் அருத்தாபத்தியாக ஆடவர்க்கு அகன்ற நெற்றியே சிறப்பு என்பதுவும் பெறப்பட்டது. (552)

**20. விற்பொரு புருவமும், விதுவொடு கமலமும்**
**அன்னமா முகமும் அவன்அவள் பொதுவே.**

1 உவமா. சங்கிரஹம் (செந்தமிழ்) 25,26.

வில்லைப்போன்று வளைந்த புருவங்கள், சந்திரனையும் தாமரையையும் நிகர்த்த அழகிய வதனம் என்னும் இரண்டும் ஆடவர் மகளிர் என்னும் இருபாலார்க்கும் பொதுவானவை யாம் என்றவாறு.

இங்கு விது என்றது முழுத்திங்களை. (553)

**21. காகமுக்கு என்னக் கவின்தரு புருவமும்**
**போர்விடைக் கண்ணும் புருடர்க்கு உரியவே.**

காக்கையின் அலகைப்போன்று விளங்கும் புருவங்களும், போர்க்குணமுடையகாளையின் கண்களைப் போன்ற விழிகளும் ஆடவர்க்குச் சிறப்பாக உரியனவாகும் என்றவாறு.

முன் நூற்பாவில் வில்லைப் புருவத்திற்கு உவமை கூறியது வளைவுபற்றி, இந் நூற்பாவில் பருமை, நுனியிற் செல்லச் செல்லச் சிறுத்தல், ஒளி ஆகியவை பற்றிக் காகத்தின் அலகு டன் நிகராக்கப்படுகிறது. (554)

**22. கரும்பொடு வாள்எனக் கவின்தரு புருவமும்**
**கணைவேல், உற்பலம், கயல்பொரு கண்ணும்**
**கோதையர்க்கு அன்றிக் கூறஒண் ணாதே.**

மாரனின் கரும்புவில்லைப்போன்றும், வாளைப்போன்றும் விளங்குகின்ற புருவங்கள் எனவும், அம்பு, வேலாயுதம், குவளைமலர், மீன் இவைகளைப் போன்ற விழிகள் எனவும் பெண்களுக்குத்தான் கூறலாமேயன்றி ஆடவர்க்குக் கூறலா காது என்றவாறு.

கரும்பு ஆகுபெயராக மன்மதனின் வில்லை உணர்த் திற்று. முன்னே 20 ஆம் நூற்பாவில் பொதுவாக வில்லை இருபாலார்க்கும் கூறிய ஆசிரியர் இங்கு மெலிந்த கரும்பு வில்லை மகளிர் புருவத்திற்குச் சிறப்புவமையாகக் கூறுகிறார். (555)

**23. பெண்கொடி நாசியின் பேர்எழிற்கு இணைஎனச்**
**சண்பக மலரையும் சாற்றுநர் சிலரே.**

கொடியைப் போன்ற மங்கையின் மூக்கினுடைய நல்ல அழகிற்கு நிகர்த்ததாகச் சில புலவர் சண்பக மலரையும் கூறுவர் என்றவாறு.

மலரையும் என்றதிலுள்ள உம்மை இந்நூல் 287ஆம் நூற்பாவில் கூறப்பட்ட எட்பூவைத் தழுவியது. (556)

**24. கன்னிதன் கவுட்குஇணை ஆடியும், காதிற்கு**
**ஊசல்கத் திரிக்கோல் வள்ளைக் கொடியும்**
**கூறுநர் பற்பலர் குவலயத்து உளரே.**

மங்கையரின் கன்னத்திற்குக் கண்ணாடியையும், செவிகளுக்கு ஊசல், கத்திரி, வள்ளைக்கொடி ஆகியனவற்றையும் உவமையாகக் கூறும் பாவலர் பற்பலர் என்றவாறு.

வள்ளைக்கொடியும் என்பதிலுள்ள உம்மையை ஊசல் கத்தரிக்கோல் ஆகிய இரண்டுடனும் கூட்டுக. இம் மூன்று உவமைகளையே இரத்தினச் சுருக்கம், "தழைகாது கத்தரிகை பொற்புவள்ளை ஊசல் புகல்"[1] எனக் கூறுகிறது. (557)

**25. கொவ்வையில் வீழியில் குலவுசெங் கனிகளும்**
**பவளமும் இதழ்க்குஇணை பகர்ந்தனர் பாவலர்.**

கொவ்வைப்பழம், விழுதிக்கனி, பவளம் ஆகியனவற்றை உதடுகளுக்கு உவமையாகக் கூறுவார்கள் என்றவாறு.

இந்நூற்பா ஆடவர், மகளிர் எனப் பிரித்துக் கூறாததால் இருவருக்கும் பொதுவாகக் கொள்க. ஆடவர்களின் இதழ்களுக்கும், "திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ"[2], "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்"[3] என இவை உவமை ஆனமை காண்க. (558)

**26. முருந்தும் மாதளை அரிசியும் முல்லை**
**அரும்பும் நகைக்குஇணை ஆவது முறையே.**

---

1 இரத்தினச் சுருக்கம் 25

2 நாச்சியார் திருமொழி 7 – 1

3 தேவாரம் IV – கோயில் திருவிருத்தம் 4

மயிலிறகின் அடிப்பாகமும் மாதுளம் விதையும் முல்லை அரும்பும் பற்களுக்கு உவமை கூறத்தக்கனவாம் என்றவாறு.

இதனையும் இருபாலார்க்கும் பொதுவாகக் கொள்ளலாம்.

**27. பண்ணும், கிள்ளையும், பாலும், அமிழ்தும்**
**குயிலும், தேனும் கோதைசொற்கு இணையே.**

இசை, கிளிமொழி, பால், அமுதம், குயிலோசை, தேன் ஆகியன மங்கையரின் சொல்லினிமைக்கு உவமையாகும் என்றவாறு.

கிள்ளை, குயில் – ஆகுபெயர்கள். (560)

**28. சிறுமாங் கனியுடன் ஆடிக் காம்பும்**
**நங்கையர் நாடிக்கு இணைசொலல் நலமே.**

சிறிய மாம்பழத்தையும், கையிலேந்தி முகம் பார்க்கும் வட்டக் கண்ணாடியின் கைப்பிடியையும் பெண்களினுடைய முகவாய்க்கு நிகர் எனக்கூறுதல் சிறப்பாம் என்றவாறு. (561)

**29. கமுகும் சங்கமும் கன்னியர் மிடற்றுக்கு**
**உவமை ஆகும்என்று உரைத்தனர் புலவோர்.**

பாக்கு மரத்தின் மேற்பகுதியையும், சங்கையும் காரிகையர் கழுத்திற்கு உவமையாக்கத் தக்கன என்று பாலவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு. (562)

**30. குடமும், குன்றமும், குஞ்சரக் கோடும்**
**முடியும், தாளமும், மொக்குளும், பந்தும்,**
**பம்பரம், இளநீர், கூவிளம் பழம்முதல்**
**பிறவும் பாவைதன் பெருமுலைக்கு இணையே.**

பொற்குடம், சிறுமலை, யானை மருப்பு, மகுடம், தாளக் கருவி, நீர்க்குமிழி, பந்து, பம்பரம், இளநீர், வில்வப்பழம் ஆகியனவற்றையும் இவைபோல்வன பிறவற்றையும் பதுமை போன்ற மங்கையின் பருத்த நகில்களுக்கு உவமையாகக் கூறலாம் என்றவாறு.

பிற என்றது,

"வல்லுச் சக்ர வாகம்மதன்
மகுடம் எலுமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய்
விளவின் கனிகோ புரத்தூபி
சொல்வெற்பு இளநீர் கதலிப்பூச்
சொர்ணத் தாளஞ் சிவலிங்கம்
தெல்லுக் கரகம் கோங்கரும்பு
சிமிழ்பம் பரம்பொற் குடம்கிண்ணம்"

"செண்டு குமிழ்வார் கூடாரம்
சேவின் சிமிழ்பொற் கரண்டகம்மென்
புண்ட ரீகம் முகிழ்பந்து
புன்னைக் காய்மா துளங்கனி மேற்
கொண்ட மொக்குள் பிடிசெம்பு
கொட்டைப் பாக்குப் பரிதிமதி
மிண்டும் இபமத் தகம்மருப்பு
மெழுகின் உருண்டை பசும்பொற்றேர்
"படர்ந்த செப்பு மாவிலிங்கம்
பழம்ஆறு ஏழும்"[1]

எனக் கூறப்பெற்றனவற்றை. (563)

**31. எறும்புஒழுக்கு இருப்புச் சலாகை போலும்
உரோமத்து அணிஉறும்; உந்திநீர்ச் சுழி; ஆல்
இலைவயிறு என்றிடல் ஏந்திழைக்கு இசைவே.**

எறும்புகள் ஊர்ந்து செல்லும் வரிசையையும், இரும்புச் சங்கிலியையும் மகளிரின் உதரத்தில் உள்ள மயிரொழுங்கிற்கும், நீர்ச்சுழியைக் கொப்பூழிற்கும், ஆலிலையை வயிற்றிற்கும் உவமையாகக் கூறினால் பொருத்தமாக இருக்கும் என்றவாறு

"மயிர்வரி யோலமிடும் வண்டொழுகு எறும்பொழுகு சங்கிலி உறும்கரி பிணித்ததறியே நீலமணி சைவலம் அனுத்திரள்

1 உவமா. சங்கிரகம். (செந்தமிழ்) 11,12,13.

வெளிச்சமலர் நாளமும் நிலைபெறுமரோ"[1] என்பது பிரபந்தத் திரட்டு. (564)

**32. மென்தோட் பேதைதன் முதுகினை வெருகந்
தளிர்எனச் சாற்றலும் தக்க இயல்பே.**

மிருதுவான தோள்களையுடைய மங்கையின் முதுகிற்கு வெண்கிடைச் செடியின் தளிரை உவமை கூறுதல் சரியான மரபாம் என்றவாறு. (565)

**33. மலைஎன, எழுஎன வழங்கும் தோள்களும்
பாயல் ஆம்எனப் படர்தரு மார்பமும்
காளையர்க்கு உரித்துஎனக் கழறினர் கற்றோர்.**

கற்றறிந்த பாவலர்கள் குன்றுகள் எனவும், எஃகு எனவும் சொல்லப்படுகின்ற புயங்களும், படுக்கையைப் போன்று பரந்து அகன்றுள்ள மார்பும் வாலிபர்களுக்கு உரியன என்று கூறி யுள்ளனர் என்றவாறு. (566)

**34. யாழ்எனும் முன்கையும், கெளிறொடு பயற்றங்
காய்பொரு விரல்களும், காந்தள் மலர்நிகர்
அங்கையும், கிளிமூக்கு அன்னகூர் உகிரும்
நங்கையர்க்கு உரித்துஎன நவின்றனர் நாவலர்.**

யாழைப்போன்ற முன்கரமும், கெளிற்றுமீன் மற்றும் பயற் றங்காய் போன்ற கைவிரல்களும், காந்தள் பூவைப்போன்ற உள்ளங்கைகளும், கிளியின் அலகை நிகர்த்த கூரிய நகங்களும் கன்னியர்க்கு உரியன என்பர் புலவர் என்றவாறு. (567)

**35. மேகமும், நிதிகளும், விண்ணூர்த் தருவும்,
சிந்தா மணியும், தேனுவும் தெய்வமும்
தினந்தொறுங் கொடுப்போன் செங்கைக்கு இணையே.**

முகிலும், சங்கம் பதுமம் முதலிய நிதிகளும், வானுலகில் உள்ள கற்பக மரமும், வேண்டியதை எல்லாம் கொடுக்கும்

1 பிரப. திரட்டு, உவமாரூட வியப்பு சார்வியல் 18.

கல்லாகிய சிந்தாமணியும், தெய்வலோகப் பசுவாகிய காமதேனுவும், கடவுளும் அன்றாடம் இரவலர்க்கு மறுக்காமல் வழங்கும் வள்ளல்களுடைய சிவந்த கரங்களுக்கு உவமை கூறத் தக்கன என்றவாறு.

முன் 17ஆம் நூற்பாவில் கூறப்பட்டது வள்ளலுக்கு உவமை. இது அவன் கைகளுக்கு உவமை. இந்நூற்பாவில் தெய்வம் என்பதற்கு ஆகூழ் என்றும் பொருள் கொள்வதற் கேற்பக் கடவுள் என்றுரைக்கப்பட்டது. (568)

36. சிறுகீரை வித்துஉறு செம்பொற் றட்டமும்,
தேர்த்தட்டும் வாவியும் தேன்கூடும் மின்னார்
கடிதடத்து உவமையாக் கழறினர் முன்னோர்.

சிறுகீரை விதைகள் பரப்பப்பெற்ற பொன்னாலாகிய தட்டத்தையும், தேரின் பீடத்தையும், குளத்தையும், தேன் கூட்டையும் பருவப் பெண்களின் நிதம்பத்திற்கு நிகராகப் பழங்காலப் புலவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

இந்நூற்பாவில் மின்னார் என விதந்து கூறியது இளம் பெண் குழவிகளையும் முதுமகளிரையும் நீக்கிப் பருவமகளிரை மட்டும் சுட்டிக்காட்டவாம். (569)

37. சீயம், நூல், உடுக்கை ஆம்எனத் திகழ்இடைக்
காரிகை இருக்கை களிற்றின் கும்பம்
போலும் என்றும் புகன்றனர் புலவோர்.

சிங்கத்தின் இடுப்பு, நூலின் இழை, உடுக்கையின் நடுப் பகுதி ஆகியனவற்றை நிகர்த்த இடையினை உடையாளாகிய மங்கையின் புட்டங்கள் யானையின் மத்தகங்களைப் போன்று இருக்கும் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

இந்நூற்பாவில் இடை, புட்டம் ஆகிய இரண்டிற்கும் உவமை கூறப்பட்டது. என்றும் என்பதிலுள்ள உம்மையை இருக்கையோடு கூட்டுக. நகில்களே அன்றி இருக்கையும் என்பது பொருள். (570)

38. துதிக்கையும், வாழையும் போலும் துடைகளும்,
அலவன் ஆம்என்று அவிர்முழந் தாள்களும்,
காகளம், மகரம் பொருகணைக் கால்களும்,
தராசுத் தட்டொடு தெங்கிளங் குரும்பை
எனத்திகழ் கறண்டையும், எலுமிச் சம்பழம்
புரையும் குதிக்கால் பொற்பும், ஆமையும்
செம்பஞ்சும் அன்ன சீர்அடித் துணைகளும்,
மஞ்சட் கொம்புஎன வயங்கும் விரல்களும்,
சிப்பி நிரைபோல் திகழ்நகப் பந்தியும்
மான்உறழ் கண்ணார் மாந்தளிர் மேனியில்
பாதி ஆம்எனப் பகர்ந்தனர் பாவலர்.

யானைத் துதிக்கையையும் வாழைத்தண்டையும் நிகர்த்த துடைகள், நண்டினையொத்த முழங்கால்கள், எக்காளம் வரால்மீன் போன்ற முழந்தாளின் கீழ்ப்பகுதி, தராசுத்தட்டும் தென்னங்குரும்பையும்அன்ன கணுக்கால், எலுமிச்சங்கனி மானும் குதிக்கால், ஆமையின் வடிவத்தையும் செம்பஞ்சின் மென்மையையும் பெற்ற அழகிய பாதங்கள், மஞ்சள் கொம்பு களைப்போல் விளங்குகின்ற கால் விரல்கள், முத்துச் சிப்பியின் வரிசையென ஒளிவீசும் நகங்களின்கூட்டம் ஆகிய இவையாவும் மானைப்போன்று மருண்ட பார்வையைஉடைய மகளிரின் மாந்தளிர்போல் மென்மையான உடம்பின் கீழ் அரைப்பாகம் ஆம் எனக் கவிஞர் உரைத்துள்ளனர் என்றவாறு.

இந்நூற்பாவில் இடைக்குக்கீழ் உள்ள உறுப்புகள் யாவும் தொகுத்துக் கூறப்பட்டன. மகரம் என்புழி மீன் எனப் பொதுவாகக் கூறாமல், "தூணி விரவு தேன்பூ விரிபாளை வேணு காளம் வரால்ஐந்தும் உரவுக் கணைக்காலுக்கு இணங்கு உவமை ஆம்என்று உரைப்பாரே"[1] என்பது பற்றி வரால் எனப்பட்டது.

இவ்வியல்பில் பெண்களின் உறுப்புகளே மிகுதியாக இடம் பெற்றதால் அவர்களைக் கேசாதிபாதமாகவே வருணிக்கும்

1 உவமா. சங்கிரஹம் (செந்தமிழ்) 4

மரபு பற்றி அவ்வாறே கூறினார். முன்னர் அகப்பொருள் உறுப்பியல்பிலும் இந்த முறையே பின்பற்றப்பட்டது. (571)

**39. ஒளிர்இழை மடவார் உவமையிற் சிற்சில**
**அகப்பொருட் பகுதியில் அறைந்தனம் அன்றே.**

ஒளிவீசுகின்ற அணிகலன்களை அணிந்த மகளிருக்குரிய உவமைகளில் சிலவற்றை முன்னால் அகப்பொருள் பற்றிய பகுதியிலும் கூறியுள்ளோம் என்றவாறு. (572)

**40. செந்தா மரைஎன்று அடிகளைச் செப்பலும்**
**கால்உகிர் மதிஎனக் கழறலும் தெய்வத்**
**தன்மைக்கு உரித்துஎனத் தழுவுநர் சிலரே.**

பாதங்களைச் செந்தாமரைகளாகவும், கால் நகங்களைச் சந்திரனாகவும் உவமித்துக் கூறுதல் கடவுள் தன்மைக்குப் பொருந்துவதாகும் என்று சிற்சில புலவர்கள் மேற்கொள்வர் என்றவாறு.

எனவே மனிதர்க்கு இவ்வுவமை கூடாதென விலக்கப் பட்டது. (573)

**41. ஓந்தி போலும் ஒள்வளை மூக்குஎன்று**
**உரைத்தல்ஆதிய ஒருவலும், உணர்வால்**
**அட்டமிச் சந்திரன் அகத்திப் பூஇணை**
**ஆம்எனல் ஆதிய சேர்த்தலும் அழகே.**

ஒளிவீசுகின்ற வளையல்களை அணிந்த கன்னியின் நாசி ஓணானைப்போல் இருக்கிறது என்பதைப் போன்றவற்றை ஆளாமல் அகற்றுதலும், கவிஞன் தான் பார்த்து உணர்ந்த பட்டறிவால் அவள் நெற்றிக்கு எட்டாம் பக்கத் திங்களையும், அகத்திமலரையும் உவமையாகக் கூறுவது போன்ற-இவ் வியல்பில் இதுவரை கூறப்படாத பிறவற்றையும்-சேர்த்துக் கொள்ளலும் சிறப்பாம் என்றவாறு.

உவமானமாகிய அட்டமிச்சந்திரன், அகத்திப்பூ என்பன வற்றைக் கொண்டு உவமேயமாகிய நுதல் வருவிக்கப்பட்டது.

அறுவகையிலக்கணம்

என்னை?

"அகத்தி அரும்பு வாசிகையும்
அணுகக் குனிக்கும் பூஞ்சிலையும்
பகுத்த பிறையும் கொக்கிறகும்
பகரும் நுதலுக்கு இணையாகும்"[1]

ஆதலின், உவமையாக உயர்ந்த பொருள்களே கூறப்பட வேண்டும் என்பது மரபு. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"[2] என்ற பண்டையோர் கண்ட நெறி இங்கு மீண்டும் வற்புறுத்தப்பட்டது. (574)

**42. பொருந்தக் கூறிய புத்துவ மைச்சொல்**
**தழுவும்நா வலரும் தமர்ஆம் எமக்கே.**

எக் கவிஞராலும் கையாளப்படாமல் உள்ள ஒரு புதிய உவமையானாலும் அது பொருளுக்கும் இலக்கிய மரபிற்கும் இசைந்ததாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளும் புலவர்கள் எம் இனத்தவர் ஆவர் என்றவாறு.

மரபு வழு இன்றிப் புதிய உவமைகளைப் படைப்பவர்கள் எமக்கினியர் என்கிறார். இதனால் படைப்பாளியின் மனோ தர்மத்தைச் சிறைப்படுத்தும் தளைகள் வேண்டா என்றா ராயிற்று. (575)

**43. நிகழ்த்தரும் கடவுள் நீதியும் கருணையும்**
**இரவியும் மதியும் போலும் என்றும்,**
**இயல்உமை இசைதிரு நாடகம் நாமகள்**
**அனையன என்றும், அம்பரப் பெயர்கொடு**
**கருநிறம் உடைத்தாய் மீனொடு காண்டலில்**
**புணரியும் வானும் புரையும் என்றும்,**
**பற்பல் விதமாப் பகராது உவமை**
**இயல்பினைப் பகர்தரும் இந்தமட்டு அடக்கி**
**உடைமை இயல்பும் உரைக்குதும் சிறிதே.**

---

1 உவமா. சங்கிரஹம் (செந்தமிழ்) 4

2 தொல். பொருள். 278

"சொற்களால் இத்தன்மைத்து என விளக்கிக்கூற முடியாத படி விளங்கும் இறைவனின் நீதி சூரியனைப் போன்றது; அவர் தண்ணளி சந்திரனைப் போன்றது. இயல் இசை நாடகமாகிய மூன்றும் முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் அனை யன. அம்பரம் (கடல், வானம்) என்ற பெயருடைமையாலும், கரிய நிறத்தாலும், மீன்களைப்பெற்று (கயலினம், உடுக் கூட்டம்) விளங்குதலானும் சமுத்திரமும் ஆகாயமும் ஒன்றை யொன்று ஒக்கும்.'' என்றெல்லாம் மிகப் பலவிதமாக விரித்துக் கூறாமல் உவமை இயல்பை இதுகாறும் கூறிய இத்துடன் முடித்துக் கொண்டு அடுத்த இயல்பாகிய உடைமை இயல்பை உரைக்கத் தொடங்குவாம் என்றவாறு.

இவ்வுவமை இயல்பில் இதுவரை நடந்த நாற்பத்திரண்டு நூற்பாக்களால் கூறப்பட்டவை அனைத்தும் ஒருவன் தன் ஐம்பொறிகளால் உணர முடியும் பருப் பொருள்களாம். ஆனால் நுட்பமான-பொறியுணர்ச்சியைக் கடந்த-உபமான உபமேயங்களும் உள.

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்,
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி,
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப''[1]

என்பன போன்றவை அவை. அவற்றை உணர்த்தத் தெய்வ நீதி, கருணை என்பனவற்றிற்கு முறையே கதிர் மதிகளையும், முத்தமிழிற்கு முத்தேவியரையும் உவமை கூறிக்காட்டினார். இவற்றின் பொதுத்தன்மையைக் கண் முதலிய பொறிகளால் அறியமுடியாது. உள்ளத்தால் உணர்ந்தே புரிந்துகொள்ள முடியும். விரிப்பிற் பெருகும்.

இனி இவ்வுவமை சிலேடையணியோடு சேர்ந்தும் வரும் என்பதுவும் கடல் வான் உவமையால் காட்டப்பட்டது. சிலே டையைக் கூறவே உபலக்கணமாக, "அற்புதம், சிலேடை, அதி சயம், விரோதம், ஒப்புமைக் கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கே, ஏதுஎன வேண்டவும் படுமே''[41] என உவமை கூடி வரும் அனைத்து அலங்காரங்களையும் கொள்க.

---

1 கலித்தொகை 10 அடி 1 – 4

2 தண்டி. பொருள். 5

இந் நூற்பாவால் இவ் வியல்பு நிறைவு செய்யப்பட்டு அடுத்த உடைமை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப் படுகிறது. (576)

உவமை இயல்பு முற்றிற்று.

## II. உடைமை இயல்பு

இவ்விலக்கணத்தின் இப்பிரிவில் உடைமைகள் கூறப்படு கின்றன. ஒன்றைச் சிறப்பித்து அணிநலன் விளங்கக் கூறு வதற்கு அதன் உடைமைகள் யாவை என அறிதலின் இன்றி யமையாமைபற்றி இஃதோர் தனி இயல்பாக உரைக்கப்பட்டது. இப்பகுதி தேவருடைமை, மாந்தருடைமை, பனுவலு டைமை என்னும் மூன்று உட்பிரிவுகளை உடையது. இவ் வியல்பின் மொத்த நூற்பாத்தொகை இருபத்தொன்பது ஆகும்.

### 1. தேவர் உடைமை இயல்

பனிரெண்டு நூற்பாக்களால்ஆகிய இப் பிரிவில் சில கடவுளரின் உடைமைகள் இன்னின்னவை எனச் சொல்லப் படுகின்றன.

**44.** **வேலும், குலிசமும், சூலமும், வில்லும்**
**அம்பு,வாள், கேடகம், அங்குசம், பாசம்**
**தண்டமும், ஆழியும், தவளவா ரணமும்,**
**தகரும், மஞ்ஞையும், சேவலும், கிளியும்,**
**குன்றமும் கடம்பும் குல்லையும் கூதளம்**
**புனலி அன்னபன் மாலையும் புலவோர்**
**பகர்ந்துள பிறவும் பரம குருபரன்**
**ஆகிய முருகனுக்கு அறையத் தகுமே.**

வேலாயுதம், வச்சிரப்படை, சூலம், வில், கணை, உடை வாள், தோல், துறட்டு, பாசக்கயறு, தண்டாயுதம், சக்கரம் ஆகிய படைக் கலங்களும், பிணிமுகம் என்னும் வெள்ளை யானை, ஆட்டுக்கடா, மயில் ஆகிய மூன்று ஊர்திகளும்,

சேவற்கொடியும். (அருணகிரிநாதர் ஆகிய) கிளியும், குன்றுகளாகிய வசிப்பிடமும், நீபம், வெட்சி, கூதாளி, காட்டு மல்லிகை போன்ற பற்பல பூமாலைகளும், மேலும் கவிஞர்களால் கூறப்பட்டுள்ள மற்றவை அனைத்தும் பரமாசாரிய மூர்த்தியாகிய முருகப்பெருமானுக்கு உரிய உடைமைகள் ஆம் எனக் கூறலாம் என்றவாறு.

புலவோர் பகர்ந்துள பிற என்றது செந்நிற ஆடை, அக்கமணி, திருநீற்றுப்பூச்சு, பற்பல பொன்னாபரணங்கள் போன்றனவற்றை. (577)

**45.** **வானவர் தருமகள் வலக்கையில் நீலமும்,**
**குறமகள் இடக்கையில் குளிர்தா மரையும்**
**வீர வாகு முதற்பகர் விறலோர்க்கு**
**அம்பு,வில், உடைவாள், ஆதியும் உரித்தே.**

தேவருலக மகளாகிய தெய்வயானையின் வலக் கரத்தில் குவளை மலரும், வள்ளி நாயகியின் இடக்கரத்தில் தாமரையும், வீரவாகு முதலிய நவவீரர்களின் கைகளில் கணை, வில், வாள் முதலிய படைக்கலங்களும் விளங்கும் என்றவாறு. (578)

**46.** **அறுகும், கொன்றையும், அங்குச பாசமும்,**
**அம்புலிச் சடையும், கொம்பும், கனியும்,**
**ஆகுவும், மயிலும், ஆனையும், சிங்கமும்**
**ஆய பரிகளும், அளவில்பே ருண்டியும்,**
**மருங்கில் தோய்வுறும் வல்லவைச் சத்தியும்,**
**பின்னும் பெரியோர் பேசிய பிறவும்**
**களிற்று மாமுகக் கணபதிக்கு உரித்தே.**

அறுகு, கொன்றை ஆகியவற்றைத் தொடுத்த மாலைகள், துறட்டி, பாசக் கயறு ஆகிய படைக்கலங்கள், ஒரு கையில் உடைந்த தந்தம், மற்றொரு கையில் மாம்பழம், பெருச்சாளி, மயில், யானை, சிங்கம் ஆகிய நான்கு வாகனங்கள், கணக்கற்ற வகைகளில் நிரம்பிய உணவு, மடியில் அமர்ந்துள்ள வல்லவை ஆகிய தேவி ஆகியவற்றோடு ஆன்றோர்களால்

கூறப்பட்ட பல்வேறு உடைமைகளும் யானைமுகப் பெம்மானுக்கு உரியன என்றவாறு.

ஸ்ரீதத்வநிதி திரியக்ஷர கணபதி தியானத்தில் பாசம் அங்குசம் கொம்பு மாம்பழம் எனக் கூறப்பட்டதுகொண்டு கனி என்பதற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது.[1] சில கணபதி வடிவங்களில் மாதுளங்கனியும் இடம்பெறும். விநாயகரின் மூர்த்தி பேதங்களில் பல வாகனங்கள் கூறப்பட்டுள்ளன. பெரியோர் பேசிய பிற என்றது அரவுக்கச்சு, நெற்றிக்கண், வெள்ளெருக்க மாலை, திருநீற்றுப்பூச்சு, ஒன்றிற்கு மேற்பட்ட முகங்கள் முதலியனவற்றை. (579)

**47. கொன்றையும், தும்பையும், கொக்குஇறகு, இளமதி**
**கங்கை ஆதிய கவின்தரு சடிலமும்,**
**வெண்டலை, என்பு, விடப்பணி, ஏனக்**
**கொம்பு, கூர்மத்து ஒடுஇவை குலவிய**
**மார்பும், மழுமான், வளர்கனல், சூலம்,**
**கபாலம் தோய்தரு கைகளும், கரித்தோல்,**
**புலித்தோல் ஆதியும், பொலிந்தவெண் ணீறும்**
**முக்கணும், குயில்பொரு மொய்குழல் பாகமும்,**
**இடபமும், களிறும் இவர்தல் ஆதிய**
**பிறவும் பொன்மலைப் பிஞ்ஞகற்கு உரித்தே.**

கொன்றைமலர், தும்பைப்பூ, கொக்கிறகு, பிறைச்சந்திரன், கங்கை முதலியன விளங்குகின்ற சடைமுடி - மண்டையோட்டு மாலை, எலும்புகளின் சரம், நஞ்சுள்ள பாம்புகளாகிய அணிகலன்கள், பன்றியின் கொம்பு, ஆமை ஓடு ஆகிய இவைகள் நிலைபெற்ற மார்பு-பரசு, மான், எரிசுடர், முத்தலைச் சூலம், பிரமனின் தலையோடு ஆகியன பொருந்திய கைகள் - யானை உரி, புலித்தோல் ஆகிய உடை - ஒளிவீசுகின்ற திருவெண்ணீற்று முழுக்கு - மூன்று கண்கள் - குயில் போன்ற இனிய மொழியை உடைய உமாதேவியார் பொருந்தியுள்ள இடப்பாகம் - விடை, அயிராவணம் என்னும் யானை ஆகிய ஊர்திகள்

1 ஸ்ரீதத்துவநிதி பாகம் 1 பக்கம் 312.

ஆகிய இவையும் இன்னமும் கூறப்படுகின்ற பிறவும் கயிலை மலைச் சிவபெருமானுக்கு உரியனவாம் என்றவாறு. (580)

**48. அங்குசம், பாசம், அகல்வாய்ப் பாம்பு**
**சூலம், கபாலம், சுடர்மணிப் பைம்பூண்,**
**கரும்பொடு பூங்கணை, கனற்கட் சீயம்,**
**ஏறுஇவை முதலாம் எண்ணில்பல் பெருஞ்சீர்**
**வெள்ளிவெற் பினன்பால் மேவினட்கு உரித்தே.**

அங்குசம், பாசக்கயறு, பிளந்த வாயை உடைய அரவு, முத்தலைச்சூலம், தலையோடு, ஒலிகாலும் இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பசும்பொன் அணிகலன்கள், கரும்புவில், மலர்க் கணைகள், தீயைக் கக்குகின்ற சிங்கம், இடபம் ஆகிய வாகனங்கள் என்னும் இவையும் மேலும் கூறப்படுகின்ற எண்ணற்ற பெரிய சிறப்புகளும் கயிலையங்கிரியை இடமாகக்கொண்ட சிவபிரானின் இடப்பாகத்தே பொருந்திய உமாதேவிக்கு உரியனவாம் என்றவாறு.

சாக்தேயர் கூறுகின்ற நாம ரூப பேதங்கள் மிகமிகப்பல ஆதலின் "எண்ணில் பல் பெருஞ்சீர்" என்றார். (581)

**49. பொன்னால் ஆடையும் பூணும், பொறிஅராப்**
**பள்ளியும், கலுழப் பரியும், பார்மகள்**
**பூமகள் சேர்க்கையும், பொருவில் ஆழியும்,**
**சங்கமும், தண்டும், தனுவும், கட்கமும்,**
**கவுத்துவ மணியும், கடிமலர் துளவமும்**
**மற்றும் பாவலர் வகுத்தபல் சிறப்பும்**
**முதுலகு அளிக்கும் முகுந்தனுக்கு உரித்தே.**

தங்கத்தாலாகிய ஆடை அணிகலன்கள், புள்ளிகளை உடைய பாம்புப் படுக்கை, கருட வாகனம், நிலமகள் மலர் மகள் ஆகியோர் கூட்டம், இணையற்ற சுதர்சனம் என்னும் சக்கரம், பாஞ்சசன்னியம் என்னும் சங்கு, கௌமேதகீ என்னும் கதாயுதம், சார்ங்கம் என்னும் வில், நந்தகம் என்னும் உடைவாள் ஆகிய ஐந்து படைக்கலங்கள், மார்பில் கௌஸ்துபம் என்னும் மணி, மணம் வீசுகின்ற திருத்துழாய் மாலை

ஆகியனவும் மேலும் புலவர்களால் கூறப்பட்டுள்ள பல சிறப்புகளும் தொன்மையான உலகத்தைப் பாதுகாத்து அருளும் திருமாலுக்கு உரியனவாம் என்றவாறு.

பாவலர் வகுத்த பல சிறப்பில் அவதார விசேஷங்கள் மூர்த்தி பேதங்கள் முதலியன அடங்கும். (582)

**50. விரிகடல் தானையும் வெற்பாம் முலைகளும்**
**சோலை ஆய சுரிகுழற் பெருக்கும்**
**நீதி குன்றா நெடுவேல் மன்னன்**
**ஊராம் முகமும் உயர்புவி மகட்கே.**

பரந்த கடலாகிய புடவையும், மலைகளாகிய நகில்களும் மலர்ச் சோலைகளாகிய சுருண்ட கூந்தற்காடும், செங்கோல் தவறாது வலிமையுடன் ஆட்சி புரியும் அரசனுடைய தலைநகராகிய முகமும் சிறந்த பண்புகளை உடைய நிலமடந்தைக்கு உரியனவாம் என்றவாறு.

உரியன என்ற சொல் அவாய் நிலையால் பெறப்பட்டது. (583)

**51. பொன்னொடு நவமணிப் பொலிவும்நெற் போரும்**
**அன்னமும் பாலும் அடலும் ஆக்கமும்**
**செந்தா மரைமுதற் செப்புவ பிறவும்**
**திருமால் மார்புடைச் செய்யவட்கு உரித்தே.**

பொன், நவரத்தினம் ஆகியவற்றின் விளக்கமும், நெல் முதலிய தானியக் களஞ்சியமும், பலவகை உணவுப்பொருள்களும், பசுக்கூட்டங்களும், வலிமையும், நாளுக்கு நாள் ஏற்படும் முன்னேற்றமும், செங்கமலம் ஆகிய இருக்கையும் இதுபோல் கூறப்படுவன பிறவும் திருமாலின் மார்பில் விளங்குகின்ற திருமகளுக்கு உரியனவாம் என்றவாறு.

நெற்போர் உபலட்சணமாகப் பலவகைத் தானியங்களையும், அன்னம் உபலட்சணமாக இன்றியமையாத்தேவைகளான உடை, உறையுள் ஆகிய மற்ற இரண்டினையும், பால் ஆகு பெயராகப் பசுவையும் குறித்து வந்தன. (584)

52. கமலப் பூவும், கடத்தொடு மறைம்,
ஓதிமப் பரியும், உயர்ந்தோர் கூட்டமும்
நாமகள் சேர்க்கையும் நான்கு முகமும்
அன்னசீர் பிறவும் அயன்தனக்கு உரித்தே.

தாமரை மலர் இருக்கை, நீர்க்குண்டிகை, வேதச்சுவடி, அன்னப்புள் ஊர்தி, உயர்ந்தவர்களின் சூழல், கலைமகளின் கூட்டம், நான்கு முகங்கள் ஆகியனவும் இத்தகைய வேறு சிறப்புகளும் பிரமதேவனுக்கு உரியன என்றவாறு.

அன்னசீர் பிற என்றதில் ஜபமாலை, சிருக்கு, தருப்பைப்புல், அபயவரதம் போன்றவை அடங்கும். (585)

53. புலவோர் நாவும், பூத்தவெண் கமலமும்
பளிங்கு வடமும், படிக்கும் சுவடியும்
கலசம் ஆதியும் கலைமகட்கு உரித்தே.

புலவர்களின் நாக்கு, மலர்ந்த வெண்டாமரை ஆகிய இருக்கையும், கரங்களில் படிகமாலை, ஏட்டுச்சுவடி, அமுத கலசம் ஆகியனவற்றை ஏந்தலும், இன்ன பிறவும் சரஸ்வதிக்கு உரியனவாம் என்றவாறு.

ஆதி என்பதனுள் அபயவரதம், வீணை, வெள்ளைப்புடவை, அன்னப்பறவை, பூரான் என்னும் ஊர்திகள் போன்றவை அடங்கும். (586)

54. மதியும், கிள்ளையும், வசந்தனும், குயிலும்,
கடலும், அன்றிலும், கார்இருட் பெருக்கும்,
வண்டும், கரும்பும், மலர்க்கணை ஐந்தும்,
வகுள மாலையும், மங்கையர் கூட்டமும்,
கேதகைப் பூவும், கிளத்துவ பிறவும்,
அன்னத்து இவரும் அணங்கும் அங்கசற்கு
உரியன வாம்என்று உரைத்தனர் உணர்ந்தோர்.

சந்திரனாகிய குடை, கிளி ஆகிய வாகனம், வசந்தன் ஆகிய தோழன், குயில் ஆகிய திருச்சின்னம், கடல் ஆகியமுரசு, அன்றில் ஆகிய காளம், கார் இருள் ஆகிய யானை, வில் நாண்

ஆகிய வண்டுகளின் வரிசை, கரும்புவில், முல்லை, அசோகு, மா, தாமரை, நீலம் ஆகிய ஐந்து மலர்களாகிய அம்புகள், மகிழம்பூ மாலை, மகளிர் கூட்டம் ஆகிய படை, தாழம்பூ ஆகிய வாள் ஆகிய இவையும், இன்னும் சொல்லப்படுபவை பிறவும், அன்னப்புள்ளில் பவனிவரும் இரதியும் மன்மதனுக்கு உரியன என்று புலவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

பிறவும் என்றதால் வசந்தகாலமாகிய தேர், பூஞ்சோலையாகிய படைவீடு, மகரக்கொடி போன்றனவற்றையும் கொள்க.

**55. இன்னபல் தேவர் எழில்எலாம் விரிக்கில்**
**சிற்பம் ஆகும்; செயல்எலாம் செப்பில்**
**புராணம் ஆகும்; ஆதலில் பூவின்**
**மாந்தர்க்கு உரிமை வகுக்குதும் சிறிதே.**

இவ்வாறாகப் பல தேவர்களின் திருவுருவச் சிறப்புகளை எல்லாம் விளக்கமாகக் கூறினால் இது சிற்ப நூல் ஆகிவிடும். அவ்வாறே அவர்களின் செய்கைகளை எல்லாம் உரைத்தால் புராணமாகப் பெருகிவிடும். எனவே இவைகளை இத்துடன் நிறுத்திக்கொண்டு மண்ணுலக மனிதர்களுக்கு உரியனவற்றை உரைக்கத் தொடங்குவாம் என்றவாறு.

இந்நூற்பாவில் இவைகளை இத்துடன் முடித்துக் கொண்டு என்பது வருவித்து உரைக்கப்பட்டது. இதனால் இவ்வியல் நிறைவு செய்யப்பட்டு அடுத்த இயலுக்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படுகிறது. (588)

## 2. மாந்தர் உடைமை இயல்

ஒன்பது நூற்பாக்களானியன்ற இப்பிரிவில் மனிதர்களில் சிற்சிலர்க்கு இவைஇவை உரியன எனக் கூறப்பட்டுள்ளது.

**56. காவிக் கொடியும், கவிகையும், கைக்கொளும்**
**நெறிக்குஉள மணிகளை நிறையக் கோத்த**
**மாலையும், அன்றி வழிபடும் கடவுட்கு**
**உரியசின் னங்களுள் கொளத்தகும் பாற்றும்**
**மாதவர்க்கு ஆம்என வகுத்தனர் வல்லோர்.**

காவிநிறக் கொடி, குடை, தம் சமயநெறிக்கேற்ற மணி மாலை, தம்மால் வணங்கப்படும் 'தெய்வத்திற்குரிய சின்னங் களுள் ஏற்கத்தக்கன ஆகியன துறவறத்தோர்க்கு உரியன என்றவாறு.

சைவத்துறவியர்க்கு அக்கமணிமாலையும், வைணவருக்குத் துளசிமணி மாலையும், சாக்தேயர்களுக்குப் படிகமாலையும் உரியன. சைவர்கள் திருநீற்றையும், வைணவர்கள் திருமண் காப்பையும் சின்னமாகக் கொள்வர். சிவசின்னம் என்று கூறிப் பாம்புகளையும் மண்டையோடுகளையும் அணிதல் போன்றவைகளை விலக்குவதற்காகச் சின்னங்களுள் கொளத் தகும் பாற்றும் என்றார். (589)

**57.** **அரும்மறைக் கொடியும், அம்புய மாலையும்,**
**பொன்னிறக் கவிகையும் பூசுரர்க்கு ஆமே.**

ஓதுதற்கரிய வேதங்களாகிய கொடியும், தாமரைப்பூ மாலையும், பொன்வண்ணத் தமைந்த குடையும் அந்தணர்க் குரியன என்றவாறு. (590)

**58.** **செந்நிறக் குடையும், செச்சைமா லிகையும்**
**சரபக் கொடியும் தரைஎலாம் புரந்து**
**பொரும்அவர்க்கு எமன்ஆம் புரவலர்க்கு உரித்தே.**

சிகப்புவண்ணக் கவிகையும், வெட்சிப்பூ மாலையும், சரபப் பறவையின் வடிவம் எழுதப்பட்ட கொடியும் உலகமக்கள் அனைவரையும் பாதுகாத்துத் தம்மோடு போர்புரிபவரை அழிக்கும் வேந்தர்களுக்கு உரியனவாம் என்றவாறு. (591)

**59.** **முல்லையங் தாரொடு முத்துக் கவிகையும்**
**துலைஎனப் பொறித்துள தூசுக் கொடியும்**
**வணிகருக்கு ஆம்என வகுப்பது முறையே.**

முல்லை மாலை, முத்துக்குடை, தராசின் சின்னம் வரையப் பட்ட துணிக்கொடி ஆகியன வணிகர்களுக்கு உரியன் என்று கூறுதல் மரபாகும் என்றவாறு. (592)

**60. மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும்
காவி மாலையும் கங்கைசே யினர்க்கே.**

கங்கையின் மைந்தர்கள் எனப்படும் வேளாளர்களுக்கு ஏர் வரையப்பட்ட கொடியும் வெள்ளைக் குடையும் குவளைத் தாரும் உரியனவாகும் என்றவாறு. (593)

**61. கருநிறக் குடையொடு காக்கலம் பூவும்
பன்றிநாய் எழுதிய பதாகையும் பச்சூன்
சேல்பிணம் ஆதிய தின்பார்க்கு ஆமே.**

கருந்துணிக்குடை, கருவிளமலர்மாலை பன்றி நாய் இவைகள் எழுதப்பட்ட கொடி ஆகியன பச்சை இறைச்சி, மீன், இறந்த விலங்குகள் முதலியனவற்றைத் தின்னும் இழிந்தவர்களுக்கு உரியனவாம் என்றவாறு. (594)

**62. வேப்பந் தாரொடு மீன்கொடி வழுதியர்
கொண்ட முறையே தனித்தனி கொள்வார்க்கு
அம்முறை கூறுதல் அழகாம் அன்றே.**

பாண்டிய மன்னர் வேம்பு மாலையையும், கயற்கொடியையும் சிறப்புச் சின்னங்களாக ஏற்றமைபோலத் தமக்கெனத் தனித்தனிச் சின்னங்களைப் பெற்றவர்களுக்கு அவற்றையே எடுத்துரைப்பது நலமாகும் என்றவாறு.

இம்முறையில் சோழர்களுக்கு ஆத்திமாலை, புலிக்கொடியும், சேரர்களுக்குப் பனைமாலை, விற்கொடியும் கூறுக. பல்லவர்க்கு விடைக்கொடி, சாளுக்கியருக்குப் பன்றிக்கொடி போன்றவையும் இவற்றுள் அடங்கும். (595)

**63. தனிவேல், சக்கரம், தவளப் பெருங்குடை
மன்னருக்கு எல்லாம் வகுப்பதும் தகுமே.**

எல்லா வேந்தர்களுக்கும் இணையற்ற வேலாயுதம், ஆணைத்திகிரி, வெண்கொற்றக்குடை என்னும் இம்மூன்றையும் பொதுவாகக் கூறினாலும் அமையும் என்றவாறு. (596)

**64. மாந்தர் உடைமைஇம் மட்டில் சுருக்கிப்
பனுவல் உடைமையும் பகருதும் சிறிதே.**

மனிதர்களில் சிற்சிலர்க்கு உரியனபற்றிய பகுதியை இத்துடன் சுருக்கமாக முடித்துக்கொண்டு நூல்களுக்கு உடைமைப் பொருள்கள் ஆவன பற்றியும் ஒரு சிறிது கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவோடு இப்பிரிவு தலைக்கட்டப்பட்டு அடுத்த இயலிற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படுகிறது. (597)

## 3. பனுவல் உடைமை இயல்

நூல்களின் பாடுபொருள்களைப் பற்றிய சில செய்திகளைக் கூறும் இப்பிரிவு ஒன்பது நூற்பாக்களை உடையது. இஃது உடைமை இயல்பின் கடைசிப் பிரிவாகும்.

**65. குலம்நிலை அருத்தம் என்னும் மூவகைத்
தாய்அந்த ணன்பிர்ம சாரி அறம்முதல்
பகரும்முந் நான்கும் நூல்களுக்கு உரித்தே.**

அந்தணர், அரசர், வணிகர்,வேளாளர் ஆகக்குலம் நான்கு; பிரம்மசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவு என நிலை நான்கு; அறம், பொருள், இன்பம், வீடு என உறுதிப்பொருள் நான்கு என்னும் இப்பன்னிரு பொருள்களும் நூல்களுக்குப் பாடுபொருள்களாம் என்றவாறு.

நிலை - ஆஸ்ரமம்; அருத்தம் - புருஷார்த்தம்; வர்ணாஸ்ரம தர்மத்தையும் நால்வகை உறுதிப் பொருள்களையும் தெரிவிப்பதே நூல் என்று இந்நூலாசிரியர் தாம் வாழ்ந்த காலநிலைக்கேற்பக் கூறினார். (598)

**66. பல்வகை நெறிகளும், தொழிலும் பண்பும்
நூற்குஉரித்து என்று நுவன்றனர் பெரியோர்.**

இறைவனை அடைவதற்குரிய சரியை முதலிய பற்பல வழிகளும், மனைகோலுதல், சிற்பம், மருத்துவம், சோதிடம் போன்ற தொழில்களுக்குத் தேவையான செய்திகளும்,

இயற்கை செயற்கைப் பொருள்களின் குணங்களும் நூல்களில் கூறத்தகுந்தன என்று கல்வியிற் சிறந்தவர்கள் உரைத்துள்ளனர் என்றவாறு.

நெறி என்றதனால் சரியை போன்றவற்றையே அன்றிச் சைவம் முதலான சமயநெறிகள் எனினும் அமையும். அல்லது வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நீதிநெறிகள் என்றும் ஆம். யானைநூல், குதிரைநூல், நவமணிகளைப்பற்றிக் கூறும் நூல் போன்றவை பண்பு என்றதில் அடங்கும். (599)

**67.** **மலை,நதி, நாடு, நகரம், வாரணம்**
**பரி,கொடி, மாலை, ஆணை, தொழில்இவை**
**பத்தும் தசாங்கம்; படை,குடை, முரசம்,**
**பெயர்முதற் சிற்சில பிறழலும் வாய்பாடு;**
**ஆயினும் அத்தொகைக்கு அதிகம் ஆகா;**
**பிரபந்த முகப்பில் பேசப் படுபவே.**

மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, கொடி, தார், ஆக்கினை, தொழில் ஆகிய பத்தும் தசாங்கம் எனப்படும். இவற்றுள் சிலவற்றை நீக்கிப் படை, குடை, முரசு, பெயர் என்பனவற்றுள் சிலவற்றைச் சேர்த்துக் கூறும் நடைமுறையும் உண்டு. எப்படிக் கூறினாலும் பத்து அங்கங்களுக்குமேல் கூற லாகாது. இத் தசாங்கம் சில பிரபந்தங்களின் முற்பகுதியில் இடம் பெறும் என்றவாறு.

இந்நூற்பா தசாங்கம் யாவை என்பதையும், அவை எங்கு கூறப்படும் என்பதையும் உணர்த்துகிறது. ''வரை, ஆறு, நாடு, நகர், ஊர் துரகம், மதகரியே, விரை ஆரும் மாலை, முரசம், பதாகை, மெய்தானை எனும் உரையார் தசாங்கத்தின்''[1] என்பது இரத்தினச்சுருக்கம். இதில் இவர் முற்கூறிய பத்துள் ஆக்கினை, தொழில் என்பனவற்றிற்குப் பதிலாகப் படையும், முரசும் இடம்பெற்றன.

1 இரத்தினச் சுருக்கம் 51

"மறையே யாறே நாடே ஊரே பறையே பரியே களிறே தாரே பெயரே கொடியே என்றிவை தசாங்கம்"[1] என்பது பன்னிருபாட்டியல். இதில் இவர் முற்கூறிய பத்துள் ஆணை, தொழில் என்பனவற்றிற்குப் பதிலாகப் பெயரும் முரசும் இடம் பெற்றன. "புல்லும் மலையாறு நாடுஊர், புனைதார்மா கொல்லுங் களிறு கொடிமுரசம் வல்லகோல்...நின்ற தசாங்கம் என நேர்"[2] என்பது வெண்பாப்பாட்டியல். இதில் ஆணை, கோல் எனப்பட்டதுடன், தொழிலுக்குப் பதிலாக முரசம் கூறப்பட்டது. "பத்து இயல்வெண் பாவின்மலை நதி நாடு ஊர்தார் பரிகளிறு கொடி முரசு செங்கோல் பாடின் மெத்து தசாங்கப் பத்து ஆம்"[3] என்பது சிதம்பரப்பாட்டியல். இப்பாட்டியல் நூல்கள் எவற்றிலும் இந்நூலாசிரியர் பிறழ்ந்து வருவதாகக் கூறிய குடை இடம்பெறவில்லை என்பது கருதத் தக்கது.

இந்நூலாசிரியராலேயே இயற்றப்பட்ட திருச்செந்தூர்த் தசாங்க வகுப்பு என்ற நூலில் நாடு, ஊர், மலை, ஆறு, யானை பரி (மயில்), படை, தார், கொடி, ஆணை என்ற பத்து அங் கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூற்பாவில் முற்கூறப்பட்ட பத்தனுள் தொழிலுக்குப்பதில் படை இடம்பெற்றுள்ளது. இவருடைய திருச்செந்தில் உலாவில் நாடு, ஊர், மலை, நதி, முரசு, வாகனம் (யானை, மயில், தகர்), கொடி, படை, தார், ஆணை ஆகப் பத்தினைக் குறித்துள்ளார். இதில் யானை, பரி என்ற இரண்டும் ஊர்தி எனப் பொதுவாகக் கொள்ளப்பட்டதுடன் தொழிலுக்குப் பதில் முரசு இடம் பெற்றுள்ளது.

இந்நூற்பா மிக அதிகமாகப் பழக்கத்தில் உள்ள உலா, தூது ஆகிய இரு சிற்றிலக்கியங்களைக் கருத்தில்கொண்டு, "பிரபந்த முகப்பில் பேசப்படுபவே" எனக்கூறினும் சின்னப் பூ, தசாங்கம், தசாங்கத்தயல் என்னும் பிரபந்த வகைகள் தலைவனின் தசாங்கத்தை வருணித்துக் கூறுவதையே தம் பாடுபொருளாகக் கொண்டவை என்பது அறியத்தக்கது. (600)

---

1 பன்னிரு பாட்டியல்-இனம் 56

2 வெண்பாப்பாட்டியல் – செய்யுள் 19

3 சிதம்பரப்பாட்டியல்-மரபு 5

68. மனம்தாய் தோழி வண்டுகிளி அன்னம்
ஆதிய மதவேட்கு ஆற்றார் அனுப்பும்
தூதினுக்கு இசைவாம்; தோலா வீரமும்
ஊக்கமும் உணர்ச்சியும் உடையான் ஒன்னலர்
ஊரிடை போய்த்தூது உரைத்தற்கு இசைவே.

(தலைவியினுடைய) உள்ளம், அன்னை, தோழி, வண்டு, கிளி,அன்னம் முதலியன காமவேதனை தாங்காத மங்கையர் செலுத்துவதாக இயற்றப்படும் தூதுப் பிரபந்தத்திற்குப் பொருந்துவன ஆகும். குறையாத வீரமும், மன எழுச்சியும், அரசியல் அறிவும் உடைய ஒருவன் பகைவரின் நகரத்திற்குள் தூதனாகச் செல்லத் தகுதி உடையவன் ஆவான் என்றவாறு.

இவர் அகம், புறம் பற்றிய இருவகைத் தூதுகளையும் இங்கு குறித்தார். நெஞ்சு முதலாக இவர் பட்டியலிட்ட தூதுக் குரியன ஆறனுள் தாயைத் தூதாகச் செலுத்தியதாக இலக் கியம் இருப்பதாகத் தெரியவில்லை. "எகினம் மயில் கிள்ளை எழிலியொடு பூவை சகிகுயில்நெஞ்சு ஆர்தென்றல் வண்டு - தொகைபத்தை"[1]ப் பிரபந்தத் திரட்டும், "இயம்புகின்ற காலத்து எகினம்மயில் கிள்ளை பயன்பெறுமே கம்பூவை பாங்கி - நயந்த குயில் பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம்ஈர் ஐந்துமே"[2] என இவற்றையே வரிசை கூட மாறாமல் இரத் தினச் சுருக்கமும் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. இவையே யன்றித் துகில், மான், கண்ணாடி, விளக்கு, தமிழ் போன்ற மற்றவைகளை விடுத்த தூது இலக்கியங்களும் காணப்படுகின் றன. பொதுவாக விறலிவிடுதூது ஒன்றைத் தவிர மற்றதெல் லாம் தலைவி தலைவன்பால் அனுப்புவதாக அமைதலின் உரையில் "மதவேட்கு ஆற்றார்" என்புழிக் "காமவேதனை தாங்காத மங்கையர்" எனப்பட்டது. இது அகப் பொருள் தூது.

புறப்பொருள் தூது தனி இலக்கியமாக இடம்பெறா விட்டாலும் பெருங் காப்பியத்தின் ஓர் அங்கமாக அமைதலின்

---

1 பிரபந்தத் திரட்டு 30

2 இரத்தினச் சுருக்கம் 7

இங்கே கூறப்பட்டது. தூதுவனுக்குரிய பண்புகளாக இங்கே இடம்பெற்றவை திருக்குறளின் 69 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டனவாகும். அநுமன், அங்கதன், கண்ணன், கடோத்கஜன், வீரபாகு ஆகியோர் தூதுசென்ற பகுதிகள் இதற்கு இலக்கியம் ஆகும். (601)

**69. மங்கையர் ஆடலை மழையைச் சோலையை**
**வெய்யிலை நிலவை விளம்பும் மற்றைய**
**நலங்களைக் காவிய நாப்பண் விரித்துப்**
**பேசுதல் பெருமை ஆதல் போலக்**
**காளி யூட்டைக் கள்ளுக் குடியைச்**
**சேரி யாதியின் செயல்களை விரித்துக்**
**கூறுதல் இழிவாம் என்பது குறிப்பே.**

மகளிரின் பல்வகையான ஆடல்களையும், மழையின் மாண்பையும், சோலை வளத்தையும், வெய்யிலின் கடுமையையும், நிலவின் குளிர்ச்சியையும், இன்னமும் இவ்வாறு வருணித்துக் கூறப்படுகின்ற பிற சிறப்புகளையும் காவியத்தின் நடுவில் வருணித்துக்கூறுதல் பெருமைதரும். இவ்வாறே காளி வழிபாட்டில் ஊன் படைப்பதையும், மது அருந்துவதையும் புலையர் வாழிடத்து நிகழ்ச்சிகளையும் விரிவாகப் புனைதல் சிறுமையாகும் என்பது குறிப்பாக அறியப்படவேண்டும் என்றவாறு.

கற்பவர்களின் தரத்தை உயர்த்துவதாக இலக்கியம் இருக்க வேண்டும். இதை விட்டுப் பொதுமக்கள் இலக்கியம் என்னும் பேரால் தான் தரமிழந்து விடக்கூடாது என்பது கருத்து. இந் நூற்பாவில் மங்கையர் ஆடல் என்றது விறலிவிடுதூது போன்ற நூல்களில் இடம்பெறும் பொதுமகளிரின் கற்பிகந்த கேளிக்கைகளையன்று. மகடூஉக் குணங்கள் பொலிந்துள்ள குலமகளிரின் சிறந்த ஆடல்களே நல்ல இலக்கியத்தில் இடம்பெறத்தக்கனவாம்.

இங்கு சேரி என்றது இழிந்த சாதியினர் வாழும் பகுதி என்ற பொருளில் ஆளப்படவில்லை. இவரே இந்நூலில் ''என்பு, ஊன் வேண்டுநர் யாவரும் பாலைக்கு உரியார்; அன்னவர்

ஊர்ப்பெயர் சேரி; அவர் தெய்வம் அனைத்தும் அலகைத் திரளே''[1] எனவும், அங்குள்ள பொருள்களாக, ''கள் அரக்கு என்பு ஊன் கடிநாய் பன்றி ஆதிய கடைப்படும்''[2] பொருள் களையும் கூறியுள்ளார்.

இந் நூற்பாவின் கருத்தையே இவ் வாசிரியர் புலவர் புராணத்தில் ''பரஞ்சோதி முனியாம் சைவ தேசிகன்தான் தாம்பற்று நெறியால் விரித்து அதிற் கம்பன்றனை நம்பிக் கள்ளுண்டாட்டு உரைத்ததாம் பட்சம் அன்று என்று அருவருக்கின்றோர் அகிலமீது ஒருசிலர் உளரே''[3] எனவும், திருவாமாத்தூர்த் தலபுராணத்தில், ''காளி யூட்டமும் அலகை யின் ஆட்டமும் கள்வர் வாளின் வன்மையும் பகர்வதாற் புண்ணி யம் வருமோ?''[4] எனவும் இலக்கியமாக்கிக் காட்டுகிறார். (602)

**70. மெய்யிடை பொய்யும் பொய்யிடை மெய்யும்**
**விரவக் கூறுதல் மேதகு பனுவற்கு**
**உரிமை யல்லஎன்று உரைப்பது வழக்கே.**

உண்மையான செய்திகளைச் சொல்லிக்கொண்டு வரும் போது இடையில் கற்பனைகளை நுழைத்தலும், அவ்வாறே கற்பனைகளையே கூறுங்காலை இடையில் சில உண்மைகளை நுழைத்தலும் நல்ல தரமுடைய நூல்களுக்குஉரிய பண்பு ஆகாது என்பது மரபாம் என்றவாறு.

இங்குப் பொய் என்றது தற்குறிப்பேற்றம், உயர்வுநவிற்சி போன்ற அணிகளாகக் கற்பித்துப் புனைந்துரைத்தலை. உண் மையான செய்திகளைத் தரவேண்டிய இடத்தில் கற்பனைகள் கலந்துவிட்டால் மெய்யான நிகழ்ச்சி எது, புனைந்துரை எது எனத்தெரியாமல் குழப்பம் ஏற்படும். இங்கு மேதகு பனுவல் என்று (வரலாறு, தத்துவம், மருத்துவம், இலக்கணம்போன்ற)

---

1 அறுவகை. 342.
2 அறுவகை. 352.
3 புலவர். அறிவுத்தன்மை 50.
4 திருவாமாத்தூர்ப். நாட்டுச்சிறப்பு 22.

செய்திகளுக்கு முதன்மையளிக்கக்கூடிய நூல்கள் குறிப்பிடப் படுகின்றன. இக்கருத்து அடுத்த நூற்பாவால் மேலும் தெளிவாகிறது. (603)

**71. பொய்யே கூறினும் பொருந்தக் கூறலும்**
**மெய்யே கூறினும் விளங்கக் கூறலும்**
**காவியப் பகுதி ஆம்எனல் கணக்கே.**

(புலவன் இல்லது கூறலாகப்) புனைந்துரையாகக் கூறினாலும் அது இடம் பொருள் காலத்திற்குப் பொருந்துமாறு சொல்லப்படுதலும், (உள்ளது கிளத்தலாக) உண்மையை அப்படியே உரைத்தால் அது நன்கு விளக்கமுறும் வண்ணம் சொல்லப் படுதலும் இலக்கியத்தன்மை வாய்ந்த நூல்களுக்கு உரியபண்பு ஆகும் என்றவாறு.

இங்கும் பொய் என்றது இலக்கியப் புனைந்துரை என்ற பொருளில் வந்தது. கற்பனை அறிவுக்குப் பொருத்தமாக அமையவேண்டும் என்பதும் உண்மைகள் மயக்கமின்றித் தெளிவாக்கப்படவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன. (604)

**72. உடைமை இயல்பை உரைத்தமட்டு ஒடுக்கிக்**
**கற்பனை இயல்பைக் கழறுதும் சிறிதே.**

உடைமை இயல்பாகிய இப்பிரிவை இதுவரை சொல்லப்பட்ட அளவில் நிறுத்திக்கொண்டு அடுத்துக் கற்பனையின் இலக்கணத்தைச் சற்று கூறுவாம் என்றவாறு.

இந் நூற்பாவால் இவ்வியல்பு நிறைவு செய்யப்பட்டு அடுத்த கற்பனை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (605)

## III. கற்பனை இயல்பு

இப் பிரிவில் கற்பனை பற்றிய சில செய்திகள் இடம் பெறுகின்றன. 12 நூற்பாக்களாலாகிய இப்பிரிவைக் கூர்ந்து நோக்கினால் கற்பனையின் அடிப்படையாக உவமையே அமைவதைக் காணலாம். இக்கருத்து முதல் நூற்பாவிலேயே

கூறப்பட்டுள்ளது. அணிஇலக்கணங்கள் உவமையின் வகைகளாகக் காட்டும் சிலவற்றையே இவர் இங்கு கற்பனை என்ற பெயரில் தருகிறார் என்பதும் கவனிக்கத்தக்கது.

**73. உவமையின் சார்ப தாகித் தொழிலுடன்**
**திகழ்வது கற்பனை என்பது சிறப்பே.**

உவமையணியின் சார்புடையதாகிக் கவிஞனின் சிந்தனா சக்தியுடன் சேர்ந்து விளங்குவது கற்பனை எனப்படும் என வரையறுத்தல் சிறப்பாகும் என்றவாறு.

இரு பொருள்களுக்கிடையே உள்ள ஓர் ஒற்றுமை பற்றியே கற்பனை தோன்றுகிறது. தத்துவ நூல்களிலும், "ஆரோபம் அத்தியாசம் கற்பனை ஆவது எல்லாம் ஒரோர்வத் துவினை வேறே ஒரோர்வத் துவென ஓர்தல்"[1] என்றே கூறப்படுகிறது மயக்கத்தால் பிறழ உணரப்படுவதனைச் சமயம் கற்பனை எனக்கூறுகிறது. இரு பொருள்கள் வேறுவேறானவை என ஐயமின்றித் தெரிந்திருந்தும் இலக்கியச் சுவை கருதி அவற்றினிடையில் ஒருமைப்பாடு காண்டலை அணிநூல் கற்பனை என்கிறது. இரண்டிற்கும் அடிப்படை ஒன்றேயாகும். கற்பனைக்குப் பெரும்பாலும் இரு பொருள்களுக்கிடையே அமைந்த பொதுப் பண்பு இன்றியமையாத தாகின்றது. எனவேதான் எடுத்த உடனே உவமையின் சார்பதாகி எனத் தொடங்குகிறார்.

இங்கு தொழில், என்றது மனத்தின் தொழிலை. இது கவிஞனின் படைப்பாற்றலால் (Creative Power) நிகழ்வது. பி.பெர்ரி என்னும் அறிஞரின் கீழ்க்கண்ட வரிகள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கவை. "The energy of the mind or the soul-for it welds all physical activities - which is the agent of our world winnings and the procreator of our growing life, we term imagination"[2] இப் படைப்பாற்றல் அழகை அதன்வழி இன்பத்தை உண்டாக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாசிரியர்

---

1. கைவல்யம். தத். விளக்கம்
2. இலக்கியக்கலை. அ.ச.ஞா.பக்.67 மேற்கோள்

இவ் வியல்பிலேயே, "வியனுற விளம்பிடல் அனைத்தும் கற்பனை என்னும் புலவோர் எமக்கு இனியோரே"[1] என்பதைப் பெர்ரியின், "It (imagination) is the full functioning of the whole mind. Through beauty the world grows and it is the business of the imagination to create the beautiful"[2] என்னும் கருத்தோடு பொருத்திச் சிந்திக்கலாம். (606)

**74. எவ்வகைச் செயலையும் பொறுக்கும் எழில்தரை**
**ஒவ்வோர் காலத்து ஒள்ளிய வெயிலோடு**
**கூடித் தீயெனக் கொதித்துக் கொல்வது**
**பேதையர் வைதுஇடும் பிச்சைஊண் உண்பார்**
**மன்னரை வீரரை மலரோன் ஆதிய**
**தேவரை அருள்கொடு சினம்வரிற் செகுத்தல்**
**போலும்என்று உரைப்பது பொருந்துகற் பனையே.**

அனைத்து நிகழ்ச்சிகளையும் பொறுமையோடு தாங்கிக் கொள்வதைத் தனக்கே உரிய அழகிய பண்பாகப் பெற்ற நிலம் சிற்சில சமயங்களில் பிரகாசிக்கின்ற வெயிலுடன் சேர்ந்து நெருப்பைப்போல் பெருஞ்சூடுற்று உயிர்களைக் கொல்வது போல் துன்புறுத்துதல் (ஞானிகளின் உண்மைநிலை அறியாத) அறிவிலிகள் வசைச்சொற்களோடு கொடுக்கும் பிச்சைச் சோற்றை இரந்து உண்பவர்கள் (ஞானிகள்) அரசர், வீரர் பிரமன் முதலிய வானவர் ஆகியோருக்குப் பெரும்பாலும் அருள்புரிவதையும், சில காலையில் கோபங்கொண்டு தண்டித் தலையும் நிகர்க்கும் என்று கூறுவது நன்றாகப் பொருந்துகின்ற கற்பனையாம் என்றவாறு.

நிலம்-ஞானி:- அகழ்வாரைத் தாங்கும் பொறையும் இகழ்வாரைப் பொறுக்கும் பொறையும் இயல்பான பொதுக் குணங்கள். நிலம் மன்னர் வீரருக்கு உணவும் அதன்மூலம் தேவருக்கு அவியும் வழங்குதல் போலவே ஞானியும் அம்மூவருக்கும் அருள்புரிகிறார். இது பொதுப்பயன். நிலம் கோடைக்காலத்தில்

---

1 அறுவகை. 616

2 இலக்கியக்கலை. அ.ச.ஞா. பக். 67 மேற்கோள்

சூரியனின் வெப்பத்தினால் கொதிக்கிறது. ஞானியின் உள்ளம் சினத்தீ சேர்வதால் கொதிப்படைகிறது. இவை வேற்றுப் பொருள் சேர்க்கையாலான மாற்றம். சூடுண்ட நிலம் உயிர்களை வருத்துகிறது. கோபத்தால் ஞானி குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கிறார். நிலத்தின் சூடு, ஞானியின்சினம் ஆகிய இரண்டுமே நீடித்து நில்லாதவை. நிலம் கொதித்துத் துன்புறுத்தின பிறகு அதே உயிர்களுக்கு உதவுவதைப் போன்றே ஞானி ஒரு சமயத்தில் தண்டித்தாலும் உடனே மறந்து மீண்டும் நன்மை செய்கிறார். இவ்வாறு இயற்கைப்பண்பு, இடையில் நேரும் மாற்றம், பயன் ஆகியவற்றால் நிலத்தை வேண்டுதல் வேண்டாமை இல்லாத ஞானியாகக் கற்பனை செய்வது முற்றிலும் பொருத்தமாகும்.

நிலத்தையும் ஞானியரையும் ஒன்றாகக் கூறும் இதனைச் சொல் மாற்றங்களால் உவமையாகவும் உருவகமாகவும் கூறலாம். இக் கற்பனை நிலம், ஞானி என்னும் இரண்டிற்கும் உள்ள பொதுத் தன்மை பற்றியே பிறந்தது. இதுபற்றியே முன் நூற்பாவில் "உவமையின் சார்பதாகி" எனப்பட்டது. (607)

**75. வரவுகொண்டு யாதும் மற்றையர்க்கு ஈயார்**
**மனையிடை திருடர் வந்துவந்து உழக்கிப்**
**பொருள்எலாம் கவர்தல் பொருப்புநீர் புகப்பெற்று**
**ஒருபயி ரேனும் வளரா உவரியை**
**எழுமுகில் உண்கைக்கு இணைஆம் என்றலும்**
**கற்பனை ஆம்எனக் கழறுதல் இயல்பே.**

பல வகைகளிலும் பொருளை ஈட்டிப் பிறர்க்குக் கொஞ்சமும் கொடுக்காத உலோபியின் வீட்டில் கள்ளர்கள் புகுந்து தேடித் தேடி அங்குள்ள பொருள்கள் அனைத்தையும் திருடிச் செல்வதற்கு மலையிலிருந்து தோன்றுகின்ற ஆறுகள் எல்லாம் தன்பால் சேரப் பெற்றும் தன் நீரால் ஒரு பயிரையும் வளர்க்காத கடல் நீரை ஏழு மேகங்களும் சேர்ந்து பருகுதலை உவமையாக்கிக் கூறலும் கற்பனையே என்று கூறப்படும் என்றவாறு.

உலோபியரின் பல்வகை வரவு—கடலில் கலக்கும் பல வகைத் தண்ணீர்.

உலோபியர் ஈயாத்தன்மை—கடல் தன் பரப்பினும் பயிர் வளர்க்காமல் தன் நீராலும் நேரடியாகப் பயன்தராமை. கள்வர் கவர்தல் -மேகங்கள் கவர்தல். இப்படி ஒற்றுமை காணப்பட்டது.

இந்நூற்பா கற்பனை உயர்ந்த செயல்களுக்குத்தான் பயன் படுமோ? களவு போன்ற இழிசெயல்களில் வாராதோ என்னும் ஐயமறுத்தது. உவமை "கிழக்கிடு பொருளோ டைந்தும் ஆகும்"[1] என வருதல் கற்பனைக்கும் பொருந்தும்.

நூற்பாவில் எழுமுகில் என்பதனை வினைத்தொகையாக்கி வானில் எழும்புகின்ற மேகக்கூட்டம் எனினுமமையும். (608)

**76. நற்பொருள் பொல்லார் நடுமனை புகுங்கால்**
**தீயது ஆதலும் தீப்பொருள் நல்லா**
**ரிடம்படில் பலர்கொண்டு ஏற்ற மாதலும்**
**கடல்கொளும் நதிப்புனல் கார்கொளும் உவர்ப்புனல்**
**போலும் என்கையும் பொருவில்கற் பனையே.**

"பயன்படுவதற்குரிய நல்ல பொருளாக இருப்பினும் அது தீயவர்களின் வீட்டை அடைந்தால் பிறருக்குப் பயன்படாத காரணத்தால் தீயபொருளுக்கு இணையாவதும், பயனற்ற பொருள்களும் நல்லோர் கைப்பட்டால் ஏதோ ஒரு வகையில் பலருக்கும் பயன்படுவதும் ஆகிய இவை முறையே கடலில் சென்று கலக்கும் நல்ல ஆற்றுநீர் உவர்நீராக ஆதலும் மேகத் தால் முகக்கப்பெறும் கடல்நீர் தன் உவர்ப்புத்தன்மை நீங்கி உண்ணீராகி மழை வடிவம் பெறுதலும் போன்றவை ஆம்" எனினும் சிறந்த கற்பனையாகும் என்றவாறு.

சிறப்பையும், இழிவையும் தனித்தனியாகக் கற்பனை மூலம் காட்டுவதேயன்றி அவற்றை இணைத்தும் கூறலாம் என்பது இந் நூற்பாவால் பெறப்பட்டது. (609)

**77. மலைக்கே வான்முகில் வரல்போல் பெரியோ**
**ரிடத்தே மெய்ப்பொருள் இணங்கும் எனலும்**
**கற்பனை ஆம்எனக் கழறத் தகுமே.**

---

1 தொல். பொருள். 280

மலையை நாடி மேகங்கள் வருவதைப் போலச் சான்றோர் களிடத்தைத் தேடி மெய்யறிவு வந்தடையும் என்று கூறலும் கற்பனை என்றே சொல்லப்படும் என்றவாறு.

இந்நூற்பா பருப்பொருட்களுக்கேயன்றிக் கட்புலனாகாத நுண்பொருள்கட்கும் கற்பனையில் இடமுண்டு என்கிறது. மெய்ப்பொருள் என்றது ஆகுபெயராக மெய்ப் பொருளைப் பற்றிய ஞானத்தைச் சுட்டி நின்றது. (610)

**78. மறுஉறா மதியம் ஆறு போலும்**
**முகம்உறு குகவேள் என்கையும் ஒருவகைக்**
**கற்பனை ஆம்எனக் கருதுநர் சிலரே.**

களங்கம் இல்லாத முழுமதி ஆறு வரிசையாக இருப்பதைப் போன்ற ஆறு திருமுகங்கள் உடையவர் முருகப்பெருமான் என்று கூறினாலும் அதுவும் ஒருவகைக் கற்பனையே என்பார் சிலர் என்றவாறு.

களங்கம் இல்லாத திங்கள் இல்லாததொன்று. அவ்வாறே ஆறு மதிகளும் கிடையா. இல்லாதனவற்றை உள்ளதாகப் பாவித்து இங்கே உவமை கூறப்பட்டது. அணிநூலார் இதனை 'இல்பொருள் உவமை' என்பர். வடமொழியில் இது அபூத உவமை எனப்படும். (611)

**79. கீழ்த்திசை வடதிசை ஆகிக் கிளரொளி**
**இரவியும் உதிப்பினும் இயற்றமிழ்ப் பொதுமறை**
**ஆயவள் ளுவன்சொல் அறிந்த மேலோர்**
**கொலைபுலை நலம்எனக் கூறார் என்கையும்**
**ஒருசிறப்பு ஆகும்என்று உரைப்பார் உணர்ந்தோர்.**

"கிழக்குத்திசை வடக்காக மாறி அங்கே சுடர் பரப்புகின்ற சூரியன் தோன்றினாலும் இயற்றமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறளை நன்குணர்ந்த பெரியோர் பிற உயிர்களைக் கொல்வதையும் ஊன் உண்ணலையும் ஏற்கத்தக்கது எனக் கூற மாட்டார்கள்" என்பதுபோலச் சொல்வதையும் புலவர் ஒரு சிறப்பான கற்பனைவகையாகக் கொள்வர் என்றவாறு.

இக் கற்பனையில் உவமை இடம்பெறவில்லை. திசை மாறலும் ஆதவன் வடக்கே உதித்தலும் எங்கும் என்றும் நடைபெற இயலாத நிகழ்ச்சி. இத்தகையதோர் அசம்பாவிதம் நேர்ந்தாலும் எனக் கற்பனை செய்யப்படுகிறது. இதனை ஒரு வகையால் அசம்பாவித உபமா என்னும் கூடாஉவமை அணிக்கு இனமாக்கலாம். "கூடாததனைக் கூடுவதாகக் கொண்டதன் ஒன்றற்கு உவமை யாக்கி உரைப்பது கூடா உவமை ஆகும்"[1] என்றவாறு இங்கு உவமை இடம்பெற வில்லை. இதுவே வேறுபாடு. (612)

**80. கற்பனை புலவோர் கருத்தின் அளவாம்**
**அஃதையும் விரித்திடில் அனந்தம் ஆமே.**

கற்பனை ஒரு கவிஞனுடைய அறிவு எவ்வளவு பரந்து பட்டுள்ளதோ அவ்வளவும் விரியக்கூடியதாகும். எனவே அக் கற்பனையைப் பலவகையாக விரித்துரைக்கத் தொடங்கினால் கணக்கற்றுப் பெருகும் என்றவாறு.

இங்குக் கருத்து என்றது ஒரு புலவனின் கல்வியறிவு, படைப்பாற்றல் ஆகிய இரண்டையும் அடக்கி நின்றது. இந்நூற்பாப் பொருளே இவரால் பிறிதோரிடத்தில், "அணிஎனல் புலவோன் அறிவு அளவு ஆமே"[2] என்றும் கூறப்படுகிறது.

**81. இவ்வணம் பகர்ந்திடல் இன்ன கற்பனை**
**என்றன ராம்சிலர்; யாம்உணர் காலைஅப்**
**பெயரும் கற்பனை எனப்பிறங் கினவே.**

இன்னின்ன விதமாகச் செய்யுள் இயற்றினால் அவை இன்னின்ன அணிகள் ஆகும் என்று அணிநூலார் கூறியுள்ளனர். நாம் அதனைச் சிந்தித்துப் பார்த்தபோது அந் நூலாசிரியர் இட்ட பெயர்களும் அவர்கள் கற்பனையில் தோன்றி எழுந்தன வேயாகும் என்பது தெளிவாகப் புலப்பட்டது என்றவாறு.

---

1 முத்துவீரியம்—பொருளணிஇயல் 20

2 ஏழாம் இலக். 283

இந் நூற்பாவில் கற்பனை என்ற சொல், அணி என்ற பொருளிலேயே ஆளப்பட்டது. சிலர் என்றது அணி நூலாசிரியர்களை. ஒரு புலவன் தன் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளியீடாகக் கவிதை புனைகிறான். இன்னஇன்ன அணிகள் அமைய வேண்டும் எனச் சிந்தித்துக் கவிபாடுவதில்லை. கவிஞர்களின் இலக்கியங்களைத் தொகுத்து ஏதோ ஒரு வகையாற் பாகுபடுத்தி அணியிலக்கணம் கூறப்படுகிறது. இத்தொகுப்பும் பாகுபாடும் அவ்விலக்கண ஆசிரியனின் சொந்தக் கண்ணோட்டத்தோடேதான் நடைபெறுகிறது. பெயர்க்குறியீடும் அவனுடையதே. இவை அனைத்தையும் உள்ளடக்கி "அப்பெயரும் கற்பனை" என்றார். பெயரும் என்பதிலுள்ள எச்சஉம்மை அணிகளின் பாகுபாட்டைத் தழுவியது. (614)

**82. கற்பனை மீதொரு கற்பனை கூறுதல்**
**இயல்புஎனக் காண்கிலம்; எங்ஙனம் அவற்றிற்கு**
**இசைய லாகும்என்று எண்ணுநர் சிலரே.**

ஒருவகையாகக் கற்பனை செய்துவிட்டு அதன்மீது பிறிதொரு கற்பனையை ஏற்றிக் கூறுதல் பொருந்துவதாகத் தெரியவில்லை. இத்தகைய இலக்கிய உத்தியை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுவது எனத் தயங்கும் புலவரும் சிலர் உளர் என்றவாறு.

ஒரு கற்பனையோடு வேறான மற்றொன்றை இணைக்கும் பொழுது அவற்றிடையே பொதுத்தன்மையைவிட வேற்றுத் தன்மையே மிகுதிப்பட்டு, ஒருமுகப்பட்ட காவிய ஈடுபாட்டைக் கெடுத்துவிட வாய்ப்புண்டு. இதுபற்றியே போலும் உவமைக்கு உவமை கூறக்கூடாதென்ற விதியும், ("உவமைக்கு உவமை வழுஎன மொழிப"[1]) ஓரிடத்தில் காணப்படுகிறது. (615)

**83. வியனுற விளம்பிடல் அனைத்தும் கற்பனை**
**என்னும் புலவோர் எமக்குஇனி யாரே.**

---

1 வீரசோழியம் 96 உரை மேற்கோள்

படிப்பவர்கள் ஆச்சரியப்படும் வண்ணம் கூறப்படுவன யாவும் கற்பனையேயாகும் எனக் கருதுகின்ற அறிஞர்கள் எம்மால் பாராட்டத்தக்கவராவர் என்றவாறு.

கற்பனையின் பயன் கற்பவர்க்கு வியப்பு அளிப்பதாகும். இவ்வியப்பே காவியச்சுவையாம். இப்பயனைத் தருவன அனைத்தையும் கற்பனையாகவே கருதலாம் என்ற கருத்து இங்கு கூறப்பட்டது. (616)

**84. கற்பனை நிலைஇவண் கழறினம்; அடுத்துஇனி**
**நிகழ்ச்சி இயல்பினை நிகழ்த்துதும் சிறிதே.**

கற்பனையின் நிலையை இவ்வாறு கூறிமுடித்தோம். இனித் தொடர்ந்து நிகழ்ச்சிகளின் இயல்புகளைக் கொஞ்சம் கூறுவாம் என்றவாறு.

இந் நூற்பாவால் இப் பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்ததற்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படுகிறது. (617)

## IV. நிகழ்ச்சி இயல்பு

இப் பிரிவில் எந்தஎந்தக் காலத்தில் என்னென்ன இயற்கைச் செயல்கள் நடைபெறும் என்பன தொகுத்துரைக்கப் படுகின்றன. சிறுபொழுது, பெரும்பொழுது ஆகிய இரண்டும் இடம்பெறுவதுடன் நல்லாட்சிக்காலம், கொடுங்கோன்மைக் காலம் பற்றியும் கூறப்படுகிறது. இவ்வியல்பு 13 நூற்பாக்களை உடையது.

### அதிகாலை

**85. வைகறை நிகழ்வன சேவற் றொனியும்,**
**காகம் ஆந்தைக் கதறலும், வலியான்**
**இசையும், கூகையும் கள்வரும் இருப்பிடம்**
**தேடலும், காளையர் சிறுமியர் எனும்இவர்**
**பிரிவது கருதிப் பெருமுச் செறிதலும்**
**வைதிக நெறியினர் மகிழ்ச்சியும் பிறவுமே.**

கோழி கூவுதலும், காகம் ஆந்தை முதலிய பறவைகளின் தொனியும், கரிக்குருவியின் ஓசையும், கோட்டானும் திருடரும் தம் இருப்பிடத்திற்குச் செல்லலும், வாலிபரும் மங்கையரும் பிரிவை எண்ணிக் கலக்க முறுதலும், மறைநூல்வழி ஒழுகு கின்றவர்கள் உள்ளம் உவத்தலும் அதிகாலையாகிய சிறு பொழுதுக்குரியனவாம் என்றவாறு.

கதிரவன் உதிப்பதற்கு முன்பே எழுந்து காலைக்கடன்களை முடித்துச் சூரியனை நமஸ்காரத்திற்காக வைதிகர் எதிர்பார்த் திருப்பர். இறைவழிபாட்டால் அவர் களிப்படைவர். எனவே இது இந் நூற்பாவில் இடம்பெற்றது. (618)

### காலை நேரம்

86. கதிரவன் உதித்துள காலையில் நிகழ்வன
தாமரை மலர்தலும்; சற்குரு பரன்அருள்
குறிப்பார் தம்கரம் குவிதலும்; அவரவர்
தம்தொழில் முயல்வதும்; சலதியும், குறைமதி
ஒளியும், காமமும் ஒடுங்கலும்; உடுஇனம்
அனைத்தும் மறைதலும் அன்னசீர் பலவுமே.

தாமரைப்பூ விரிதல், ஞான பண்டிதனாகிய முருகப் பெருமான் அருளை நாடும் அடியார்கள் கைகூப்பி வணங்குதல், தொழிலாளர்கள் அனைவரும் தத்தம் பணிகளில் ஊக்கத் துடன் ஈடுபடுதல்; கடலின் ஆர்ப்பும் பிறைச் சந்திரனின் பிரகாசமும் காமஉணர்வும் குறைதல்; நட்சத்திரக் கூட்டங்கள் யாவும் முற்றிலும் மறைதல் ஆகிய நிகழ்ச்சிகளும் இன்ன சிறப்புகள் பலவும் சூரியன் தோன்றுகின்ற காலையில் நிகழ் வனவாம் என்றவாறு.

சற்குருபரன் என்பதற்குப் பொதுவாக ஞானாசிரியன் எனப் பொருள்கொண்டு மாணவர்கள் தத்தம் குருநாதருக்குப் பணிவிடை செய்து வணங்குதல் எனினும் ஆம். சூரியன் உதித்த

பிறகும் சந்திரன் ஒளி இழந்து காட்சிதரும் ஆதலின் மதி மறையும் என்னாது ஒளிஒடுங்கும் என்றார். "காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலர்தல்"[1] காமத்தின் பண்பு. (619)

நண்பகல்

87. அதன்அதன் நிழல்அதன் அடியில்ஆம் பொழுது
அருந்திறல் வீரருக்கு ஆண்மை மிகலும்,
துறவிகள் வீதிகள் தோறும் ஏற்கையும்,
வழிநடப் பவர்எலாம் மரநிழல் சார்தலும்,
அங்காடி வணிகருக்கு அரைத்துயில்வு அணுகலும்,
சிற்றில்விட்டு எழுந்து சிறார்நுதல் வெயர்ப்பத்
தாயர்முற் போய்அவர் தரும்பால் அருந்தலும்
உழவர்ஏர் அவிழ்த்தல் ஆதியும் ஒளிருமே.

அரிய வலிமையை உடைய வீரர்களின் வீரம் அதிகமாதல், துறவிகள் தெருக்களில் சென்று உணவு இரந்து ஏற்றல், வழிப் போக்கர்கள் அனைவரும் (வெய்யில் தாளாமல் ஓய்வெடுக்கவும் பகலுணவிற்காகவும்) மரங்களின் நிழலிற் சென்றடைதல், கடையில் உட்கார்ந்தபடி பணியாற்றும் வியாபாரிகளுக்குச் சற்றே தூக்கம் வருதல், தாம் இழைத்து விளையாடிக் கொண்டிருக்கும் சிற்றிலை நீத்துக் குழந்தைகள் நெற்றி வியர்வையுடன் தத்தம் தாயரையடைந்து அவர்தரும் பாலைக் குடித்தல், விவசாயிகள் காலையில் பூட்டிய ஏரை அவிழ்த்து விட்டுவிட்டு உணவருந்தச் செல்லல் ஆகிய நிகழ்ச்சிகளும் பிறவும் ஒரு பொருளின் நிழல் அதன் காலடியிலேயே விழுகின்ற உச்சிப் போதுக்குரியன ஆகும் என்றவாறு.

சிற்றில் இழைத்தும் சிதைத்தும் விளையாடும் குழந்தைகள் தாய்ப்பால் அருந்தும் நிலையிலும் திட உணவு கொள்ளும் நிலையிலும் இருப்பர் ஆதலின் இங்கு 'அவர் தரும் பால்' என்பதை உணவுக்கு உபலக்ஷணமாகக் கொள்க. (620)

---

1 திருக்குறள் 1227

மாலைப்பொழுது

88. மாலையில் செக்கர் மதிஉடுத் தோற்றமும்,
காவி மலர்தலும், கமலம் குவிதலும்,
கள்வரும் காமனும் களித்தலும், கற்றா
மேய்ந்துதன் கன்றினை விரும்பிச் சேறலும்,
பாலரொடு கலைமகள் பள்ளிக் கூடம்
விட்டு நீங்கலும், வேலைமிக்கு ஆர்த்தலும்,
வாவலும் கூகையும் வல்லியம் ஆதியும்
திரிதரத் துவக்கலும், சீதரன் போலும்
இருள்வரல் ஆதியும் இயங்கும் அன்றே.

செவ்வானம், சந்திரன், நட்சத்திரம் ஆகிய இவற்றின் தோற்றம், குமுதம் மலர்தல், தாமரை குவிதல், திருடர்களும் மன்மதனும் உவகையோடு சுறுசுறுப்படைதல், இளங் கன்றினை உடைய பசு புல்மேய்ந்து முடிந்தபின் தன் கன்றை அடைய விரும்பித் தொழுவத்திற்கு வந்தடைதல், மாணவரும் சரஸ்வதியும் பள்ளிக்கூடத்தைவிட்டு நீங்குதல், கடல்பெரு முழக்கம் செய்தல், வௌவால், கோட்டான் போன்ற பறவைகளும் புலிபோன்ற காட்டு விலங்குகளும் இரை தேடி அலைய ஆரம்பித்தல், திருமாலைப் போன்ற கரிய நிற இருள் சூழ்தல் முதலிய செயல்கள் மாலைக்காலத்தில் நிகழும் என்றவாறு.

பள்ளிக்கூடமாகிய வெறும் கட்டிடத்தில் கலைமகள் குடியிருப்பதில்லை. கற்றலும் கற்பித்தலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வரைதான் அவள் அங்கிருப்பாள். இந்நூற்பா கலைமகள் நீங்கல் என்றது கற்பிக்கும் பணி முடிவுறுதலை. (621)

நள்ளிரவு

89. பாதி இரவில் பசாசரும் அரக்கரும்
உரகரும் களித்தலும், உரைக்கரும் உயிர்பல
கண்துயின்று அயர்கையும், அன்றிக் காயாம்
பூமலர்ந்து நொச்சிப் பூஉதிர் வுறுமே.

பேயர், அரக்கர், நாகர் முதலியவர்கள் மகிழ்ச்சியோடு திரிதல், இத்துணை என்று கணக்கிட்டுச் சொல்லமுடியாத உயிரினங்கள் அனைத்தும் துயிலில் தம்மை மறத்தல், காசாம்பூ விரிதல், நொச்சிப்பூ உதிர்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நள்ளிரவுக்கு உரியனவாகும் என்றவாறு.

ஒரு நாளின் 5 சிறுபொழுது நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறிய இவர் அடுத்து நான்கு பெரும் பொழுதுக்குரியன வற்றைக் கூறத் தொடங்குகிறார். (622)

இளவேனிற்காலம்

**90.** **தென்றல் உலவலும், தேமா வகுளம்**
**ஆதிய பூத்தலும், அன்றிலும் குயிலும்**
**கூவலும், கொங்கை குளிர்தலும், கலவ**
**மயிலினம் வாடலும், வாவியும் நதியும்**
**வறத்தலும் பிறவும் வசந்த காலத்**
**தன்மை யாம்எனச் சாற்றினர் புலவோர்.**

தென்றல் வீசுதல், இனிய மா மரங்களிலும் மகிழ மரங் களிலும் மலர்கள் நிறைதல், அன்றிற்பறவைகளும் குயில்களும் கூவுதல், மங்கையர்களின் நகில்கள் குளிர்ச்சியைத் தருதல், தோகை மயில்கள் வெப்பந்தாங்காது வருந்துதல், குளம் யாறு முதலிய நீர்நிலைகள் வறண்டு போதல் ஆகியனவும் மற்றும் வேறுபலவும் இளவேனிற் காலத்திற்குரிய பண்புகள் என்று அறிஞர் சொல்வர் என்றவாறு.

இளவேனில் என்பது சித்திரை வைகாசி மாதங்கள். "வாவிஉறை நீரும் வடநிழலும் பாவு அகமும் ஏஅனைய கண் ணார் இளமுகையும் – ஓவியமே மென்சீத காலத்து வெம்மை தரும்; வெம்மைதனில் என்புஆரும் சீதளம்ஆ மே"[1] என்பதை நினைந்து கொங்கை குளிர்தலும் என்றார்.

மன்னுயிர் அறியாத் துன்னரும் பொதியில் சூருடை அடுக் கத்து ஆரம் கடுப்ப வேனிலானே தண்ணியள்; பனியே வாங்கு

1 தனிப்பாடல்

கதிர் தொகுப்பக் கூம்பி ஐயென அலங்குவெயிற் பொதிந்த தாமரை உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே''[1] என்றது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. (623)

முதிர்வேனிற்காலம்

**91.** **நவ்வலும் தாழையும் நலங்கொடு குலவலும்,**
**பட்டமும் கறங்கும் பரவலும், பஞ்சென**
**வெளிறிய முகிலினம் வெருவி ஓடலும்,**
**காகம் ஆதிய கடலிடை வருந்தலும்,**
**கொட்டிலும் சோலையும் குடையும் குன்றலும்,**
**மாழை உலகமும் மண்ணுலகு ஆதலும்**
**ஆதிய காற்றுக் காலத்து அணிகளே.**

நாவற்பழமும் தாழம்பூவும் சிறப்பாக விளங்குதல், சிறுவர் விளையாட்டாகிய காற்றாடி, பம்பரம் ஆகிய இரண்டும் அதிகமாதல், பருத்தியைப் போன்று வெண்மைநிறம் பெற்ற மேகக்கூட்டங்கள் பயந்து ஓடுவதைப்போன்று வேகமாக இயங்குதல், காகம் முதலிய பறவைகள் பெருங் காற்றால் கடற் பக்கமாக அடித்துச் செல்லப்பட்டு வருந்துதல், பால்வளம் குறைதல், சோலைகள் சூறாவளியில் சீரழிதல், காளான்கள் பறித்தெறியப்படுதல், பொன்னுலகு எனப்படும் வானுலகமும் பூமியிலிருந்து மேலெழும்பும் மண் படிந்து, அதனால் மண்ணுலகாகத் தோற்றமளித்தல் போன்றவை காற்றுக்காலமாகிய முதுவேனிலில் நிகழ்வனவாம் என்றவாறு.

கொட்டில் பசுக்களை உணர்த்தி மறுபடியும் பாலை உணர்த்தி மீட்டும் அதனால் பெறப்படும் வருவாயை உணர்த்தலின் மும்மடி ஆகுபெயர். காற்றுக் காலத்தில் பசுக்களின் பால் குறைதல் வெளிப்படை. குடை என்ற ஒரு காளானின் பெயர் உபலட்சணமாக அவ்வினம் முழுவதற்கும் கொள்ளப்பட்டது.

---

1 குறுந்தொகை 376

முதிர்வேனில் அல்லது முதுவேனிற்பருவம் என்பது ஆனி ஆடி மாதங்கள். (624)

கார்காலம்

92. தாய்வயிற் சேய்எனத் தழைபயிர் மிளிர்தலும்,
மண்டுகம் ஆர்த்தலும், மயிலினம் ஆடலும்,
குயிலும் குரங்கும் கொடுவிடப் பாம்பும்
மெலிதலும், புனல்வளம் மிகுத்தலும், மின்னார்
தனந்தொறும் வெப்பம் தழைத்தலும், தனுஎனக்
காணும் முதுகினர் கனற்றுணைக் கொளலும்,
சிற்றுயி ரினம்பல சிதைதலும், பெருகலும்,
வெய்யிலும் நிலவும் மிகுத்தலும் கெடுதலும்,
அன்னசீர் அனந்தம் ஆகும் அணிமழைக்
காலத்து என்னக் கழறினர் கற்றோர்.

வளர்ந்துள்ள பயிர்கள் அனைத்தும் தம் தாயாரின் அரவணைப்பிலுள்ள குழந்தைகளைப்போன்று செழிப்புடன் திகழ்தல், தவளைகள் ஒலித்தல், மயில்கள் தோகை விரித்து ஆடுதல், குரங்கு, கொடிய நஞ்சுள்ள அரவு ஆகியவை வருந்தல், எல்லா இடங்களிலும் நீர் நிறைந்திருத்தல், மங்கையரின் நகில்கள் வெப்பமடைதல், குளிரால் குறுகி வில் போன்ற முதுகினை உடைய மக்கள் குளிர் காய்வதற்குத் தீயைப் பயன் படுத்தல், (வெள்ளத்தால் புற்றுகள் அழிவதால்) எறும்பு கறையான் போன்ற பல சிற்றுயிர்கள் இறத்தல், ஈசல், தட்டான்பூச்சி, வெட்டுக்கிளி போன்ற பல சிற்றுயிரினங்கள் பெருகுதல், மேகமூட்டம் இல்லாதபோது வெய்யிலின் கடுமை அதிகரித்தல், மேகம் அதிகமாக இருக்கும்போது வெய்யில் குறைதல், இவ்வாறே திங்களும் ஒளிமிக்கும் குறைந்தும் காணப் படல் என்பவை போன்ற பற்பல சிறப்பு நிகழ்ச்சிகள் மழைக் காலத்திற்குரியன என்று புலவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

மயிலினம் ஆடல் - ''கார்காண் மஞ்ஞையிற் களிப்ப''[1]

---

1 கந்த. உற்பத்தி. 10-87

குயில் மெலிதல் - ''காரினங்கள் துன்னும் பொழுதிற் குயில் போல் துனுக்குற்று''[1]

''கருங்குயில் கையற மாமயில் ஆல பெருங்கலி வானம் உரறும்''[2] என இவை இரண்டும் சேர்த்துக் கூறப்பட்டது.

குரங்கு மெலிதல் - ''மாமேயல் மறப்ப, மந்தி கூர, பறவை படிவன வீழ, கறவை கன்றுகோளொழியக் கூடிய வீசி குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்''[3]

பாம்பு மெலிதல் - ''மாரிநாட் புற்றுறை அரவெனப் புழுங்குநெஞ்சினான்''[4]

தனம்தொறும் வெப்பம் தழைத்தல் - முன்னால் 623ஆம் நூற்பா உரை காண்க.

குளிர்காய்தல்-''யாவரும் தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார் பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர''[5]

காா்காலம் என்பது ஆவணி புரட்டாசி மாதங்கள். (625)

**பனிக்காலம்**

**93. கமலம் ஆதிய கருகலும், அறுகொடு**
**மூங்கில் ஆதிய முத்துஅணி காட்டலும்,**
**வெண்சுடர் இகழ்ச்சியும் வெய்யோன் புகழ்ச்சியும்**
**காமக் கடலும் கரைபிறழ்ந் திடலும்,**
**முயலினம் மகிழ்தலும், மொழிவன பிறவும்**
**பனியால் நிகழ்வன என்றனர் பாவலர்.**

---

1 கந்த. அசுர. 3 – 21

2 கார் நாற்பது 16

3 நெடுநல்வாடை 9 – 12

4 கந்த.யுத்த. 7 – 6

5 நெடுநல்வாடை 64—66

தாமரை முதலிய நீர்ப்பூக்கள் கருகிப்போதல், அறுகு முதலிய புல்லினங்கள் மற்றும் மூங்கில் இலைகளின்மீது முத்துகளைப் போன்று (காலை நேரத்தில்) பனித்துளிகள் காட்சியளித்தல், (குளிரின் மிகுதி பற்றி) நிலவைப்பழித்து ஒதுக்குதல், (இதமாக இருப்பதால்) வெய்யிலைப் போற்றுதல், காம உணர்ச்சி மிகுதல், முயல்கள் உவகையை அடைதல் ஆகியனவும் இக்காலத்தில் நிகழ்வதாகச் சொல்லப்படும் இன்னபிறவும் பனியால் நேர்வனவாம் என்று புலவர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

தாமரை வாடுதல்-நல்லதோர் தாமரைப் பொய்கை நாண் மலர் மேற்பனி சோர அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு அழகு அழிந்தால் ஒத்ததாலோ''[1]

அறுகொடு மூங்கிலில் முத்து – "நூல் அறு முத்தின் தண் சிதர் உறைப்பத் தாளித்தண்பவர் நாள் ஆமேயும் பனிபடு நாளே''[2] (626)

**94. செங்கோல் மன்னனும் சீரிய குரவனும்**
**வளர்நாள் உலகிடை வண்மை யாவும்**
**பெருகும்என்று உணர்ந்தோர் பேசினர் அன்றே.**

அறநெறி பிறழாமல் ஆட்சி புரியும் அரசனும் கல்வி, அநுபவஞானம், ஒழுக்கம், அருள் ஆகியவைகளாற் சிறந்த ஆசானும் வாழும் காலத்தில் உலகத்தில் எல்லா வகையான வளங்களும் பெருகும் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

"ஆர்க்கும்மணி முற்றத்தான் ஆளும்நாள் அம்புவியில் யார்க்கும்ஒரு தீங்கும் இரா''[3] என்று இவர் செங்கோற் சிறப்பைப் பிறிதோரிடத்திலும் கூறியுள்ளார்.

---

1 திவ்யப். முதலா. 3-8-1
2 குறுந்தொகை 104
3 மநுநெறித் திருநூல் 666.

ஞானாசிரியனுக்குச் சொந்த அநுபூதியும், ஒழுக்கமும், பிற உயிர்களிடத்துக் கருணையும் இன்றியமையாதனவாகும். எனவே தான் சீரிய என்னும் அடைமொழிக்கு அவ்வாறு விரிவாக உரைக்கப்பட்டது. (627)

**95. கொடுங்கோல் வேந்தனும் கொலைத்தொழிற் குரவனும்
மகிழ்வில் புவியொடு மன்பதை அழுமே.**

கொடுங்கோல் மன்னனும், உயிர்க்கொலையை உடைய ஆசிரியனும் உவகைமிக்குச் சிறந்து விளங்கும்போது நிலமும், அதிலுள்ள மக்கட்கூட்டமும் வருந்திக் கண்ணீர் பொழியும் என்றவாறு.

இதனையே இவர் வேறொரு நூலில், "கொலைமுதலாம் தீமைக் குலம் வளர்க்கும் மன்னால் அலையுடுத்த பார்மாது அழும்"[1] எனக் கூறியுள்ளார். (628)

**96. தெய்வக் குறிப்பில் திரள்தோள் மன்னனும்
மன்னவன் மொழிவழி மாந்தரும் நிகழ்கை
பழமை ஆம்எனல் பழுதில் வழக்கே.**

திரண்ட தோள்களை உடைய அரசர்கள் ஊழ்வினைக்கு ஏற்பவும், உலகமக்கள் வேந்தனின் ஆணைப்படியும் இயங்குவார்கள் என்பது தொன்றுதொட்ட மரபாகும் என்றவாறு.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்"[2] என்புழிப்போல இந்நூற்பாவில் தெய்வம் என்ற சொல் ஊழ்வினையைக் குறித்து நின்றது. "மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி" என்பது பழமொழி.

மேலும், "ஆன்ற ஒழுக்கத்து அரசு அமைந்தா லன்றி உலகு ஏன்று அதனை மேற்கொண் டிடா" என்பது[3] இவர் கருத்து. (629)

---

1 மநுநெறித் திருநால் 678
2 திருக்குறள் 619
3 மநுநெறித் திருநால் – 681

**97. இவ்வகைத்து ஆகும் இயல்பாம் நிகழ்ச்சியின்**
**பகுதியும் கோடையிற் கல்மழை பெய்தல்**
**ஆதி ஆய மாறுபடும் நிகழ்ச்சியும்**
**அறிவது புலவோர்க்கு ஆன முறையே.**

அவ்வக் காலத்தில் இயல்பாக நடைபெறவேண்டிய நிகழ்ச்சிகள் இவைஇவை என்பதனையும், கோடைக்காலத்தில் ஆலங்கட்டி மழை பொழிதல் போன்ற விதிவிலக்கான சிற்சில மாறுபாடுகளையும் தக்கவாறு அறிந்து கோடல் அறிஞர்களுக்குக் கடமை ஆகும் என்றவாறு.

நிகழ்ச்சி இயல் இத்துடன் முற்றுப்பெறுகிறது. இந் நூலாசிரியர் வழக்கப்படி "இவ்வியல்பு முற்றிற்று; அடுத்த இயல்பு உரைப்பாம்'' எனக்கூறும் நூற்பா இங்கு இடம் பெறவில்லை. (630)

## V. ஆக்க இயல்பு

யார்யார்க்கு அல்லது எதெதற்கு எதனால்சிறப்புண்டாகும் என இவ்வியல்பில் கூறப்படுகிறது. இப்பிரிவு பன்னிரண்டு நூற்பாக்களை உடையது.

முன் இயல்பின் இறுதி நூற்பாவில் இவ் வியல்புக்குத் தோற்றுவாய் செய்துகொள்ளப்படாமையின் இங்கு முதல் சூத்திரம் அவ்வாறு அமைகிறது.

**98. அணியினுக்கு அணியாம் ஆக்கம் கூறுதற்கு**
**அமையா; ஆயினும் அறைகுதும் சிறிதே.**

செய்யுள் அலங்காரத்திற்கு அழகு தருவதாகிய சிறப்பியல்புகள் இன்னின்னவை என முற்றிலும் சொல்ல முடியாது. (இதனை நன்கு உணர்ந்திருந்தும் உதாரணம் காட்டுதல் போலச்) சிலவற்றின் சிறப்பியல்புகளைக் கூறுவாம் என்றவாறு.

ஒரு பொருளின் சிறப்பு யாது என நன்குணர்ந்த பிறகே அப் பொருளை உவமையாகவும் கற்பனையாகவும் ஆள முடியும். எனவே இந்நூற்பாவில் "அணியினுக்கு அணியாம் ஆக்கம்" என்றார். முதலது செய்யுளணியியல்; மற்றது அழகு.

**99. அடிதொழும் தொண்டர் அட்டமா சித்தியும்
முத்தியும் பெறச்செயல் முதல்வற்கு ஆக்கமே.**

தன்னைப் பணியும் அடியார்கள் எண்வகையான சித்தி களையும் பேரின்ப வீட்டையும் அடையுமாறு அருள்பாலித்தல் பரம்பொருளுக்குச் சிறப்பாம் என்றவாறு.

"ஒருவன் இலட்சாதிகாரியாவதன்முன் கோடீசுரன் ஆகான் என்பதுபோல எப்படிப்பட்ட தவசியும் சித்தன் ஆவதன்முன் முத்தன் ஆவதில்லை" என்பது[1] இவர் கொள்கை. அதற் கேற்பச் சித்தியை முற்கூறி யடுத்து முத்தியை வைத்தார்.

ஈசன் கொடுக்குமவை எல்லாவற் றும்பெரியது ஆசுஅகன்ற முத்திஅதே [2] ஆதலின் முதல்வற்கு ஆக்கம் எனப்பட்டது. (632)

**100. இரக்கமும் சுத்தமும், இறைவனை மறவாத்
தொண்டும் தூய்மையும் துறவோர்க்கு ஆக்கமே.**

பிற உயிர்களிடத்துக் கருணை உடையவன் ஆதல், உள்ளத் தூய்மை, கடவுளை எக்கணத்திலும் மறந்துவிடாமல் இறை பணியாற்றுதல், தன் உடலைத் தூய்மையாக வைத்திருத்தல் என்பன துறவிகளுக்குச் சிறப்பாகும் என்றவாறு.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு"[3] ஆதலின் இரக்கம் முன்கூறப்பட்டது. "முதலில் சொல்லப்பட்ட சுத்தம் உள்ளத்தூய்மையும், பிறகு வந்தது உடற்றூய்மையும் ஆம். "புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்"[4] என்ற மையால் சுத்தம் என்பதற்கு வாய்மை எனினும் அமையும்.

**101. சுவைமிகச் சொல்லலும் சொற்படி முடித்தலும்
புலவருக்கு ஆக்கம் என்னும் புவியே.**

---

1 சத்திய வாசகம் 41
2 மநுநெறித் திருநூல் 1271
3 திருக்குறள் 261
4 " 298

கேட்பவருக்கு இனிமை பயக்குமாறு ஒரு செய்தியை எடுத்துக் கூறுதலும், கேட்பவர்கள் விரும்பிய வண்ணம் பொருளை முற்றுவித்துக் காட்டலும் கவிஞர்க்குச் சிறப்பாகும் என்று உலகினர் உரைப்பர் என்றவாறு.

“செத்தார் உய்யினும் தீஞ்சுவை இல்லாப் பாடலின் மருளாப் பான்மையர் சிலர்”[1] உளராகலின் சுவைமிகச் சொல்லல் இன்றியமையாததாம். கொடுத்த பொருளைக் கொடுத்த யாப்பு, நேரம் அல்லது சொற்றொடர் கொண்டு முடித்துக் காட்டுதலைச் சொற்படி முடித்தல் என்றார். இனி புலவன் தெய்வ உபாசனையால் வாக்குப்பலிதம் பெற்றுத் தான் சொன்னவற்றை நிகழ்த்திக்காட்டுதல் எனினும் அமையும். இவர் இக்கொள்கையினரே. “கால மழையெனப் புதுக்கவி கழறலும் சொற்படி நடக்கக் காண்டலும் பிறவும் தெய்வத் தன்மைப் புலமை யாமே”[2] “உன்னிய கருமம் உடனே முடிக்கும் புலமை உடையான் புயங்க மன்அனையான் என்ன மூதுலகே இயம்பு மன்றே”[3] “வண்ணக் கவிப்புலவன் ஆனாலும் வாக்குவலி நண்ணப் பெறினே நலம்”[4] என்பன போலப் பல இடங்களில் இக்கருத்தை இவர் வலியுறுத்தியுள்ளார். (634)

**102.** உலகெலாம் புரக்கும் ஒருவன் உந்திஅம்
தாமரை பயந்த சதுமுகன் பகர்நூல்
பைம்புல் தின்றும் பசுமுதல் பல்உயிர்க்
கொன்றுவெந்து அருந்தக் கூறாது என்னும்
உண்மைநன்கு உணர்கை உயர்குலத்து உள்ளார்க்கு
ஆக்கம் ஆகும்என்று அறிவது கடனே.

திருமால் உலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் காத்தருள்பவர். அவருடைய கொப்பூழிலிருந்து வந்த தாமரை மலரில் தோன்றியவன் பிரமதேவன். (இவ்வாறு உயிர்களைக் காக்கும் கடவுளின் மகனாகத் தோன்றிய) பிரமன் தான் இயற்றிய நூலாகிய வேதத்தில் பசிய புல்லைத் தின்று வாழும் பசு

---

1 அறுவகை இலக். 675 3 அறுவகை இலக். 751
2 ,, 667 4 மநுநெறித் திருநூல் 1124

முதலிய தீமையற்ற பல உயிர்களை வேள்வி என்ற பெயரால் கொலை செய்து வேகவைத்து உண்பதை விதிக்கமாட்டான் என்னும் புத்திபூர்வமான சத்தியத்தைச் சற்றும் ஐயத்திற்கே இடமில்லாமல் உளங்கொள்ளுதல் அந்தணர்க்குச் சிறப்பாகும் என அறிதல் கடமையாகும் என்றவாறு.

வேள்விக்கொலை பற்றிய இவர் கொள்கை முன்னால் 347ஆம் நூற்பா உரையில் காட்டப்பட்டது. "அரு நோன்பு கொன்றுஅருந்தி டாமைஎனச் சொன்ன திருநூலை விட்டுச் சிலர்தாம் – தருநாடு கொள்வேம் என்று எண்ணிக் கொலை முயன்று ஊன் உண்கின்றார் எள்வேம் அவரைநித்தம்யாம்"[1] "வேதம் கொல்வேள்வி விதிக்கும்என நம்பும்அவர் போதங்கள் அத்தனையும் பொய்"[2] என்றெல்லாம் இக் கொள்கை இவரால் மிகப்பல இடங்களில் அழுத்தமாக வலியுறுத்தப் பட்டுள்ளது. (635)

**103.** **சிட்டரைச் சேர்த்தலும், துட்டரைச் செகுத்தலும்,**
**மற்றோர் வேந்தனை வணங்காக் கொற்றமும்,**
**அச்ச மின்றி அனைவரும் காண்டற்கு**
**எளியன் ஆகி, இறுமாப்பு ஒழித்து,**
**நெறிவழாஅது ஒழுகல் ஆதியும் நெடுவேல்**
**மன்னருக்கு ஆக்கம் என்றனர் வல்லோர்.**

சான்றோர்களைத் தன்னோடு இணைத்துக்கொள்ளுதல், தீயவர்களைத் தண்டித்தல், பிற அரசர்களைப் பணிந்து திறை செலுத்தாத தனி ஆட்சி, தன் குடிமக்கள் அனைவருக்கும் சுலப மாகவும் அஞ்சாதும் நேரில் காண வாய்ப்பளித்தல், அகந்தை இல்லாதிருத்தல், செங்கோன் முறைக்கு மாறுபடாது பொது வாழ்விலும் தனி வாழ்க்கையிலும் ஒழுகுதல் முதலியன நெடிய போர்ப்படைகளை உடைய மன்னர்களுக்குச் சிறப்பான வையாம் என்று கல்வியிற் சிறந்தவர்கள் கூறியுள்ளனர் என்ற வாறு.

"தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை"[3] "கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல்

1 அருளாட்சி 6 2 மநுநெறித். 44 3 திருக்குறள் 444

பைங்கூழ் களைகட்டதனொடு நேர்"[1] "அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை பொச்சாப்பு உடையார்க்கு நன்கு"[2] "காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்"[3] "செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் பெருமித நீர்த்து"[4] "ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை"[5] ஆகிய திருக்குறட் கருத்துகள் இதில் தொகுத்துக் கூறப் பட்டன. (636)

**104. தேனீ யாம்எனச் சேர்த்த பொருளைக்
காரியம் அறிந்து களிறுஎனச் சிதறல்
வணிகர்ஏறு அன்னான் மாண்புஎனல் வழக்கே.**

தேனீ எப்படி ஒவ்வொரு மலரிலிருந்தும் சிறிது சிறிதாகத் தேனைச் சேகரித்து மிகுதியாகச் சேமித்து வைக்கிறதோ அவ்வாறு கொஞ்சங்கொஞ்சமாக ஈட்டி மிக அதிகமாகப் பொருளைச் சேர்த்து, அதனைத் தக்க நற்பணிகளுக்கு யானை தன் துதிக்கையால் நீரைப் பீச்சியடிப்பதுபோலச் செலவழிப்பது தான் வணிகர்களுக்குள் தலைசிறந்தவனுக்குச் சிறப்பு ஆகும் எனல் தொன்மையான வழக்காறு என்றவாறு.

சிறு அளவு பொருளாயினும் ஈட்டுங்கால் இகழ்ச்சியின்றி ஊக்கத்துடன் சேர்க்கவேண்டும் என்பதும் அது நன்கு சேமிக்கப் படவும் வேண்டும் என்பதும் தேனீயின் உவமையால் தெளிவா கிறது. வழங்கும் முறையை விளக்க இவ்வாசிரியர் கூறும் புத்துவமை ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

வள்ளல்கள் சிலர் தங்கள் மனதிற்குப் பிடித்த கலைஞர்கள் அல்லது நிறுவனங்களுக்குத் தாராளமாகப் பொருளை வழங்கிக்கொண்டே இருப்பர். அவர்களுக்கு உண்மையாகத் தேவைகளே இல்லாதபோதும் கொடுத்து அவர்களை மேலும் செல்வர்களாக்குவர். ஆனால் அதே துறைகளில்

---

1 திருக்குறள் 550 2 திருக்குறள் 534 3 திருக்குறள் 386
4 திருக்குறள் 431 5 திருக்குறள் 541

ஈடுபட்டு நன்கு உழைக்கின்ற பிற கலைஞர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். அங்ஙனம் செய்யாமல் பொருளைக் கலைஞர்கள் பலர்க்கும் பயன்படுமாறு பரவலாக வழங்க வேண்டும் என்ற அறிவுரை "களிறு எனச் சிதைதல்" என்ற சிறந்த உவமையால் பெறப்படுகிறது. "காரியம் அறிந்து" என்றதால் செல்வர்கள் வெறும் முகஸ்துதியால் மயங்கிவிடக் கூடாது என்பதும், தாம் வழங்கும் பொருள் உண்மையாகவே தகுந்த பாத்திரத்தைச் சென்று அடைகிறதா எனத்தெரிந்து கொள்ளவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

(637)

**105. ஊக்கமும் முன்பின் உறுவன உணர்தலும்**
**பகிர்ந்துஇனிது அருந்தலும் பைங்கூழ் விளைத்தலும்**
**வேளாளர்க்கு ஆக்கம் என்பது துணிவே.**

தொழில்முயற்சியில் சுறுசுறுப்புடன் தொடர்ந்து ஈடுபடும் மனஎழுச்சி, ஒரு காரியத்தின் தொடக்கத்தையும் பின் விளைவுகளையும் சிந்தித்துஅறிதல், தம்மிடம் உள்ள பொருள்களை பலரோடுங் கூடித் தான் நன்கு நுகர்தல், பசிய பயிர்களை அதிகமாக உற்பத்தி செய்தல் ஆகியன வேளாளர்களுக்குச் சிறப்புத் தருவதாகும் என்பது உறுதி என்றவாறு.

(638)

**106. கழிஊன் வேண்டிக் கடைபடு குலத்துள்**
**அஃதுஇழிவு ஆம்என்று அறிந்துஅற வெறுப்போன்**
**ஆக்க வான்என்று அறைந்தனர் அறவோர்.**

மேலோர்களால் இழிந்தது என்று ஒதுக்கப்பட்ட மாமிச உணவை விரும்பி அதன் காரணமாகவே இழிந்தவர்கள் என்று கூறப்படுகின்ற இனத்தாருள் ஒருவன் அவ்வூன் இகழத்தக்கது ஆகும் என உணர்ந்து அதனை முற்றிலும் வெறுத்து ஒதுக்குவான் ஆகில் அவனை அறநெறியில் நிற்கும் சான்றோர்கள் சிறந்தவன் என்பர் என்றவாறு.

கழிஊன் வேண்டிக் கடைபடு குலம் என்ற சொற்றொடர் இவர் கருத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. அவர்கள்

பிறவியால் இழிந்தவர் அல்லர். ஊன் உணவால் கடைபட்டனர். அவரிடையே தோன்றிய ஒருவன் அக் குற்றத்தினின்று விடுபட்டுவிட்டால் அவனை இழிந்தவனாகக் கருதக் கூடாது. இழிவிற்குக் காரணமாகிய ஊன் ஒழிந்ததால் காரியமாகிய இழிவும் நீங்கிவிடுகிறது. இக் கருத்தையே மேலும் தெளிவாக இவர் பிறிதோரிடத்தில் "ஊன்உண்டு விற்பான் உதரத்துச் சேய் ஒருவன் தான் உண்ணாவிட்டால் தவறன்றே-மான் உண்கண் வேசி மகள் ஒருத்தி மெய்க் கற்பினள் ஆகில் ஏசிமறுக்கவொண்ணா தே"[1] எனக் கூறியுள்ளார். இதனால் ஒருவருக்குப் பிறப்பால் இழிவு பெருமைகள் வருவதில்லை என்பதுவும் அவை முற்றிலும் பண்புகளாலேயே உண்டா கின்றன என்பதுவும் வலியுறுத்தப்பட்டன. (639)

**107. புகர்மலிந்து இருகோடு ஏந்திப் பொறுப்புஎனப்**
**பொலிந்துஎழு கால்எனப் புழைக்கையும் குறியும்**
**வாலும் தரைதொடல் மதகரிக்கு உயர்வே.**

மத்தகத்தில் புள்ளிகள் மிக்கிருத்தல், மேல்நோக்கி வளைந்த இரு பெரிய தந்தங்களை உடைத்தாதல், மலையைப்போல் பெருமையையும் கருமையும் பெற்றிருத்தல், உட்டுளை பெற்ற துதிக்கை, ஆண்குறி, வால் ஆகிய மூன்று உறுப்புகளும் நிலத்தைத் தோய்வதாலே அவைகள் கால்களோடிணைந்து ஏழுகால்கள் உள்ளமைபோல் காட்சியளித்தல் ஆகியவை மதம் மிக்க ஆண்யானைக்குச் சிறப்புகளாம் என்றவாறு.

"அடிக்கை கனத்து மதம்பொழி ஆழியின் அளவும் புகரால் அழகு எய்தி மடிக்கினும் மண்உறு கையது; செந்நிற வாயது; தேயா மதிதன்னை ஒடித்து இரு பக்கமும் வைத்தென மகரிகை ஒன்றிஒன்றி ஒன்னார்மெய் இடிக்கும் மருப்பது"[2] எனத் துதிக்கை நிலந்தீண்டல், புகர்மலிதல், இருகோடுடைமை பிறராலும் கூறப்பட்டன.

"கால்கோசம் கைவால்ஏழ் நிலம்தோய்ந்து"[3] எனப் பிரபந்தத் திரட்டு கூறும். (640)

---

1 அருளாட்சி 47 2 வில்லி. 16ஆம் போர்ச்.7

3 பிரபந்தத் திரட்டு 382

**108. வாவிக்கு ஆக்கம் வனசமும் குவளையும்;**
**கோவிற்கு ஆக்கம் குலவு கோபுரம்;**
**நாவிற்கு ஆக்கம் நன்மொழி உரைத்தல்;**
**பூவிற்கு ஆக்கம் பொலிநறை வண்டுஎன**
**விரியாது அடக்கினம் ஆயினும் வியன்தமிழ்**
**உரிமை யாளர் உணர்வது கடனே.**

"குளத்திற்குச் சிறப்புத்தருவது தாமரையும் நீலமும் ஆகும்; ஆலயத்திற்குப் பெருமை சேர்ப்பது இராசகோபுரம் ஆகும்; நலத்தைத் தருகின்ற இனிய மொழிகளைப் பேசுதல் நாவிற்குச் சிறப்பாம்; மலர்களுக்குத் தேனின் நிறைவும் வண்டு களின் சேர்க்கையும் எழில் தருவனவாம்" என்றெல்லாம் மிக விரித்துப் பெருக்காமல் இவ்வியல்பை இத்துடன் முடித்துக் கொள்கிறோம். எனினும் பெருமை மிக்க தமிழுக்கு உரிய மாணவர்கள் இவற்றை எல்லாம் வல்லார்வாய்க் கேட்டறிவது இன்றியமையாததாம் என்றவாறு.

"குளத்துக்கு அணிஎன்ப தாமரை"[1] நாவை உடையவனின் சிறப்பு நாவின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. "பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி"[2] என்பது தமிழ்மறை. பொலிநறை-வினைத்தொகை. நறைவண்டு-உம்மைத்தொகை.

தமிழ் உரிமையாளர் என்றது அம்மொழியை எடுத்து ஆள விரும்புபவர்களை. (641)

**109. ஐந்தாம் இலக்கணம் ஆகும் அணிமுடித்து**
**ஆறாம் இலக்கணத்து ஆவல்கூர்ந் தனமே.**

ஐந்தாவது இலக்கணம் ஆகிய அணியை இத்துடன் நிறைவு செய்து அடுத்து ஆறாவதாகிய புலமை இலக்கணத்தை எடுத்துக்கூற விழைகின்றோம் என்றவாறு.

இந் நூற்பாவுடன் அணி இலக்கணம் நிறைவு செய்யப் படுகிறது. (642)

ஆக்க இயல்பு முற்றிற்று

அணியிலக்கணம் முற்றிற்று

ஆகச்சூத்திரம் 642.

---

1 நான்மணிக். 9 2 திருக்குறள் 95

# 6. புலமை இலக்கணம்

அணியிலக்கணத்தை நூற்றொன்பது நூற்பாக்களால் நிறைவுசெய்த இவ் வாசிரியர் நிறுத்த முறையானே அடுத்துப் புலமை இலக்கணம் கூறத் தொடங்குகின்றார். இவ்விலக்கணம் தேற்ற இயல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு என்னும் நான்கு உட்பிரிவுகளை உடையது. இப் பகுதி மொத்தம் நூற்று நாற்பத்து நான்கு நூற்பாக்களை உடையது.

இந்நூலாசிரியர் பொதுப்பாயிரத்திலேயே, 'எழுத்துச் சொற் பொருள் யாப்பணி யெனத்திகழ் இவைதம்மாற் பழுத்து மாமணம் கமழ்தரு புலமையும் பகர்வது குறித்துள்ளேன்''[1] எனக் கூறியுள்ளதால் எழுத்து முதலாகிய ஐவகை இலக்கணங் களையும் துறைபோகக் கற்பதனால் பெறப்படுவதே புலமை ஆகும் எனத் தெளிவாகிறது. அத்தகைய சிறந்த புலமை பெறுவதற்குரிய வழிகளுட் சிலவும், பெற்றபின் கைக்கொள்ள வேண்டிய சில ஒழுகலாறுகளும் இவ்விலக்கணத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும் இவ்விலக்கணத்தின் மரபியல் சற்றேறக் குறையத் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதி போலவே அமைந்துள்ளது. திரு மு. சண்முகம்பிள்ளை அவர்கள் "சுவாமிகள் தரும் புலமை இலக்கணம் தமிழ்ப் புலவர் வரலாற்றுக் கருவூலம் ஆகும்''[2] என்றது மிகையாகாது.

பொதுவாக இலக்கண நூல்களின் பாயிரப்பகுதியில் ஆசிரியர் இலக்கணம் கூறப்படுகிறது. அஃதும் ஒருவகையான் புலமை இலக்கணமே எனினும் முந்துநூல் ஆசிரியர் எவரும் இதனைத் தனியொரு இலக்கணமாக விரித்துக் கூறவில்லை. இந்த வகையில் இதுவே முதல் நூலாகும்.

இப் பெரும்பிரிவின் தலைச்சூத்திரம் வழிபடு கடவுள் வாழ்த்தும் செயப்படுபொருளும் கூறிப் புலமை இலக்கணத்தின் தற்சிறப்புப் பாயிரமாக அமைகிறது.

---

1 அறுவகை. பொதுப். 4

2 அறுவகை, பேரூர்ப் பதிப்பு 1978 முன்னுரை பக். 20

**1. அலகுஇலா மறைகட்கு அன்னை ஆகி**
**இலகு பாரதிக்கு இலக்கணம் இசைத்துஅவள்**
**கொழுந னார்தலை குலுங்கக் குட்டிய**
**கடவுள் இணையடிக் கமலம் போற்றிப்**
**புலமை இலக்கணம் புகலுதும் சிறிதே.**

கணக்கற்ற அறிவுநூல்களுக்குத் தாயாக விளங்கும் கலைமகளுக்கு இலக்கணத்தைப் போதித்தவரும், அவளுடைய கணவனாகிய பிரமனின் தலைகள் நடுங்குமாறு குட்டியவருமாகிய முருகப்பெருமானின் இரண்டு திருவடித் தாமரைகளைப் புகழ்ந்து புலமை இலக்கணத்தை ஓரளவு கூறுவாம் என்றவாறு.

''எண்எண் கலைமான் உணர்த்திய வேதமுமே''[1] என்றான் கம்பநாடன். அதுபற்றி அலகிலா மறைகட்கு அன்னை என்றார். ஈண்டு மறை, என்றது அறிவுநூல்களை. இதனை வடமொழியில் சாத்திரம் என்பர்.

''கற்றதுகைம் மண்ணளவு கல்லாதது உலகளவுஎன்று உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்''[2] என அவ்வையார் கூறியவாறு முழுப்புலமையும் கல்விச் செருக்கின்மையும் கொண்ட நாமகளுக்கு நன்மையையும் குறையறிவும் அகந்தையும் கொண்ட பிரமனுக்குத் தண்டனையையும் தந்த முருகப்பெருமான் என்று கூறியதாலேயே புலவர்கள் அறிவின் நிறைவைப் பெற முயலவேண்டும் என்பதுவும், அவர்களுக்கு எந்த நிலையிலும் செருக்கு வரக்கூடாதென்பதுவும் இங்கேயே வலியுறுத்தப் பட்டன. (643)

**2. அறியும் தன்மையைப் புலமை ஆம்எனப்**
**பற்பல பெரியோர் பகர்ந்தனர் அன்றே.**

இந்நூற்பா புலமை என்றால் என்ன எனக் கூறுகிறது.

ஐம்புலன்களின் உதவிகொண்டு ஒருவன் ஒன்றைப்பற்றிய அறிவைப் பெறும் பான்மை புலமை எனப்படும் என்று பல அறிஞர்கள் முன்பே கூறியுள்ளனர் என்றவாறு.

---

1 சரசுவதி அந்தாதி 13

2 தனிப்பாடல்

புலம் என்ற சொல் பொறிகளால் ஒரு பொருளை நுகரும் தன்மையைக் குறிக்கும். ''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை'' என்னும் குறளின் விசேடவுரையில் பரிமேலழகர், ''புலம் என்றது அவற்றை நுகர்தலை''[1] என்பதால் இதுதெளிவாகிறது. இப் புலம் என்ற சொல் 'ஐ' என்ற பண்புப்பெயர் விகுதி பெற்றுப் புலமை என வழங்கும். இதுவே இந் நூற்பாவில் கூறப்பட்டது.

நூலறிவளவில் மட்டுமன்றிக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனாலும் ஒரு பொருளை அறிதலே புலமை என்பதைத் தெளிவாக்கவே ''அறியும் தன்மை'' எனப் பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. (644)

**3. தேற்றம் தவறு மரபு செயல்வகை**
**எனும்நால் வகைத்தாய் இயம்புதும் புலமையே.**

இப்புலமை இலக்கணத்தைத் தேற்றவியல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு என்னும் நான்கு பிரிவுகளை உடையதாய்க் கூறுவோம் என்றவாறு.

இவ் விலக்கணத்தின் தலைச்சூத்திரத்தால் தற்சிறப்புப் பாயிரம் கூறி, அடுத்த சூத்திரத்தால் புலமையாவது யாது என விளக்கி, மூன்றாவதாகிய இந்நூற்பாவால் இவ்விலக்கணம் இத்துணைப் பகுதிகளால் பிரித்து உரைக்கப்படும் என்றார். எனவே இம்மூன்று நூற்பாக்களும் புலமை இலக்கணத்தின் தோற்றுவாயாக அமைகின்றன. (645)

## I. தேற்ற இயல்பு

தேற்றம் என்றால் தெளிவு எனப் பொருள்படும். அறிகருவிகளின் உதவியால் அறிந்தபொருளின் தன்மையை ஐயம் திரிபற இன்னதெனத் துணிந்து தெளிதலே தேற்றம் எனப்படும். இத் தெளிவு பருப்பொருள், நுண்பொருள் என்பனவற்றுள் எதைப் பற்றியும் இருக்கலாம். புலமை என்பதுவும் இதுவே. இது பற்றியே புலவர்கள் தெளிந்தோர் எனப்படுகின்றனர்.

---

1 திருக்குறள் பரிமே.343

இவ்வாறு தெளிவான அறிவைப் பெறுவதற்குரிய வழி முறைகள் இப்பிரிவில் கூறப்படுவதால் இது தேற்ற இயல்பு எனப்பட்டது. இப்பிரிவு 31 நூற்பாக்களை உடையது. இதன் தலைச்சூத்திரம் தேற்றம் என்பதனை விளக்குவதுடன் இவ்வியல்பை முதலில் வைத்ததற்கான காரணத்தையும் கூறுகிறது.

**4. தேற்றம் என்பது புலவன் ஆம்ஆறு;**
**ஆதலின் அம்முறை முதற்கூ றுதுமே.**

தேற்றம் என்பது ஒருவன் புலமையுடையவனாக ஆவதற்குரிய வழி ஆகும். இக் காரணத்தால் அறிவுத் தெளிவைப் பெறுவதற்குரிய வழியை முதற்கண் சொல்வாம் என்றவாறு.

அறிவில் மயக்கமற்ற தெளிவே புலமை. அதனை உடையவரே புலவர். எனவே தெளிவுபெறலே புலவனாதலாம். இது தான் இச்சூத்திரத்தில் விளக்கப்பட்டது. இதுவே அடிப்படையாதலால் இது இவ்விலக்கணத்தின் முதலில் வைக்கப்பட்டது என முறைவைப்பிற்கும் காரணம் கூறுகிறார். (646)

**5. புலமையின் ஆசை பொலிந்தோன் ஒருவன்**
**அத்தொழிற் பெரியோர்க்கு ஆட்படல் நலமே.**

புலமை பெறவேண்டும் என்னும் பெருவிருப்புடையவன் பெரும்புலமை பெற்றுள்ள அறிஞர்களைப் பணிந்தொழுகுதல் சிறப்பாகும் என்றவாறு.

பெரியோர்க்கு ஆட்படல் என்பதை நன்னூல், "பொழுதொடு சென்று வழிபடன் முனியான் குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து, இருஎன இருந்து சொல்எனச் சொல்லிப் பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச் சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச் செவிவா யாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்துப் போ எனப் போதல் என்மனார் புலவர்"[1]என்றும், "அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு

1. நன்னூல் 40

எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம் அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே'' என்றும் விளக்குகிறது[1]. (647)

6. அக்கரம் முதற்கொண்டு அணிஈறு ஆகப்
பகரும் நூலும் பாவலர் முன்பில்
கற்கை நலம்எனக் காண்பது கடனே.

எழுத்து முதல் அணி முடியச் சொல்லப்படும் ஐவகை இலக்கணங்களையும் கவிதை இயற்றும் வன்மையையுடைய புலவர்களிடத்தே பாடங்கேட்டறிதல் அஃதில்லாதவரிடத்தே கேட்டலைவிடச் சிறந்ததாகும் என்னும் உண்மையை உணர்வது மாணவர்களுக்குக் கடமையாகும் என்றவாறு.

படைப்பாற்றல் பெற்றவரே எழுத்து முதலானவற்றைத் தாமே கையாண்டுச் சொந்த அநுபவம் பெறுகின்றனர். குறிப்பாக யாப்பில் அவர்கட்கே ஓசை தெள்ளிதின் விளங்கும். கவிதை இயற்றுபவனின் பொருள்கோளும் சிறப்பாக இருக்கும். நூலும் என்பதிலுள்ள எச்சவும்மை இலக்கணங்களை மட்டுமன்றி இலக்கியங்களையும் என்பதனை உணர்த்த வந்தது.

இலக்கியத்தைப் படைப்பாற்றல் மிக்கவரிடத்தும், இலக்கணத்தை அஃதற்ற மொழிவல்லாரிடமும் கற்கலாமோ என ஓர் ஐயத்தைத் தாமே எழுப்பிக்கொண்டு இரண்டையுமே கவிஞனிடத்திற் கற்றலே சிறப்பு என விடையளிப்பதாக அமைந்தது இந்நூற்பா. இவ்வியல்பு மாணவனைத் தானே நூல்களை இயற்றவல்ல ஆசிரியனாகப் பயிற்றுவிக்க வழி கூறுதலின் அதற்கு உறுதுணையாக முதலிலேயே கவிஞரிடம் கல்வி பயிலுக என்றார். (648)

7. நூலின் துணையினும் நூறுபங்கு அதிகம்
தெய்வத் துணையாம் செழுந்தமிழ்க் கவிக்கே.

---

1 நன்னூல் 40

வளப்பம் மிக்க தமிழ்மொழியில் கவிதைகளை இயற்ற விழைவோருக்கு இலக்கண நூல்கள் நல்ல துணைதான்; ஆனால் கடவுளின் அருளை நாடிப் பெறுதல் அதனைவிடப் பலமடங்கு உதவியானது என்றவாறு.

எடுத்த காரியம் எதுவானாலும் முட்டின்றிச் சிறப்பாக நிறைவேற இறையருள் வேண்டும். பொதுவான இந்த உண்மை கவிதை இயற்றுதலுக்கு மிகச்சிறப்பாகப் பொருந்தும் என்பது இவர் கொள்கை. இதுபற்றியே இவ்வாசிரியர் ''மற்றோர் உடலிற் புகுவல் லமையும் கற்றோர் புகழ்கல் விமுதற் பிறவும் பெற்றோர் வலியன்று; பிறங்குமணிப் பொற்றோகைமயிற் புனிதன் தரலே''[1] எனவும், ''யாப்பு இயல்பு உணரினும் எடுத்த வண்ணம் பாடுமாறு அருள்வது பாரதி கடனே''[2] எனவும் கூறியுள்ளார். (649)

8. கணபதி முருகன் கலைமகள் உமையவள்
பரமன் பரிமுகப் பகவன் என்னும்
அறுவகைத் தெய்வமும் அருந்தமிழ்ப் புலமைக்கு
உரிய வாம்என்று உரைத்தனர் உணர்ந்தோர்.

விநாயகர், செவ்வேள், சரசுவதி, பார்வதி, சிவபெருமான் குதிரை முகத்தோடு ஹயக்ரீவ அவதாரம் எடுத்த திருமால் ஆகிய ஆறு தெய்வ வடிவங்களும் எளிதிற் பெறலரிதாகிய தமிழ்ப் புலமையைப் பெறவிரும்பும் ஒரு மாணவனால் உபாசிக்கத் தக்க உருவங்கள் ஆகும் என்று அநுபவபூர்வமாக அறிந்த பெரியோர்கள் கூறுவர் என்றவாறு.

முன் நூற்பாவில் தெய்வத்துணை வேண்டும் எனக்கூறிய ஆசிரியர் இச்சூத்திரத்தில் அதற்கு எவ்வடிவ வழிபாடு சிறந்தது என அறிவுறுத்துகிறார். அறுசமயக் கடவுளரில் சூரியனை நீக்கிவிட்டுக் கலைமகளைச் சேர்த்துக் கூறி யுள்ளார். சூரியனை உபாசித்துத் தமிழ்ப்புலமை பெற்றதாக

---

1 முருகதாசர் அநுபூதி 56

2 ஏழாம். இலக். 282

நாளதுவரையில் வரலாறின்மையின் அது நீக்கப்பட்டது போலும்.

கணபதியை வழிபட்டு நம்பியாண்டார் நம்பி, ஔவையார் முதலியோரும், முருக வழிபாட்டால் கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர் முதலியோரும், கலைமகள் கருணையால் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியவர்களும், உமையம்மை யாருடைய திருவருளால் காளமேகப்புலவர், அபிராமிபட்டர் முதலியோரும் சிவானுக்ரஹத்தால் நால்வர், சேக்கிழார் முதலியவர்களும் திருமால் பக்தியால் ஆழ்வார்கள், பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் முதலியோரும் இணையற்ற தமிழ்ப் பெரும்புலமை பெற்றதை அன்னோர் வரலாறுகளால் அறியலாம். (650)

**9. நூற்பகை கொள்ளினும் நுண்ணிய புலமைச்**
**சீரியர் தம்பகை சிறிதும்ஆ காதே.**

(அரிய நூல்களை ஐயந்திரிபற முழுமையாகக் கற்று உணர்ந்துகொள்ளும் ஆற்றல் தம்பால் இன்மையால் அத்தகைய) நூல்கள் எளிதிற் புரியாதவை, அளவால் பெரியவை எனக்கருதி அவற்றை வெறுத்தாலும், நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களை வெறுக்கும் பண்பு தமிழ்ப்புலமை வேட்கை உடையவர்க்குக் கொஞ்சமும் கூடாது என்றவாறு.

இங்கு பகை என்றது வெறுப்பை. வெறுப்பின் அடிப்படைக் காரணம் உரையில் பெய்து கூறப்பட்டது. பவணந்தியார் நூற்பகைவனை, ''தொன்னூற்கு அஞ்சித் தடுமாறு உளத்தன்'' என்பார். கொள்ளினும் என்ற உம்மையான் ''நூற்பகை கொள்ளற்க'' என்றே விலக்கப்பட்டது. அறிஞர்கள்பால் விருப்பம்இருப்பின் அவர் துணையால் அரிய நூற்கருத்துகளைச் சிறிதுசிறிதாகவேனும் அறிந்து நாளடைவில் முழுப்புலமை பெற வாய்ப்புண்டு. மெய்ப்புலவர்களின் தொடர்பு இல்லா விட்டால் செல்வத்துட் செல்வமும், ஒற்கத்துக்கு ஊற்றாம் துணையும் ஆகிய கேள்வியும் தடைபட்டுவிடுமாதலின் அறிவு வேட்கையர்க்குப் புலவர் பகை சற்றும் ஆகாது என

1 நன்னூல் 39

வலியுறுத்தப்பட்டது. "வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க; சொல்லேர் உழவர் பகை"[1] என்ற தமிழ்மறை ஈண்டு ஓரளவு ஒப்புநோக்கற்பாலது. (651)

10. சோம்பலும், துயிலும், சுரிகுழல் மடவார்
மோகமும், கலியும் முன்வந்து அடுப்பினும்
அஞ்சார் செந்தமிழ் ஆணிப் பொன்னே.

மடி, பேருறக்கம், பெண்ணாசை, வறுமை ஆகிய கல்விப் பகைகள் மிகுந்து இடர்செய்தாலும் அவற்றாற் சோர்வடையாமல் ஊக்கத்தோடு கல்வியில் கவனம் செலுத்தும் மாணவர் தமிழ்க்கல்விக்கு மாசற்ற தங்கத்தைப் போன்றவர்கள் ஆவர் என்றவாறு.

"களி, மடி, மானி, காமி, கள்வன், பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன், துயில்வோன், மந்தன், தொல்நூற்கு அஞ்சித்தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி, படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே"[2] என்றார் நன்னூலார். இவருள் நூற்பகை கொள்வோரை முன் நூற்பாவில் கூறிய இவர் இதில் மடி, காமி, ஏழை, துயில்வோன் ஆகிய நால்வரைக் கூறினார். பவணந்தியார் இவர் ஐவரும் மாணாக்கராகத் தகாதவர்கள் என முற்றிலும் ஒதுக்க, இவர் நூற்பகையைக் கேள்வியாலும் சோம்பல், துயில், காமம்,வறுமை ஆகியவற்றை விடாமுயற்சியாலும் வெல்ல வல்லவர் உளரேல் அவர்களும் புலமை பெறத் தக்கவரே எனத் தழீஇக் கொண்டார். அவ்வாறு கொள்ளவே கட்குடியன், அகந்தை உடையவன், திருடன், நீங்காத நோய் உள்ளவன், விதண்டாவாதம் செய்பவன், முன்கோபி இயல்பாகவே அறிவுக் கூர்மை இல்லாதவன், அஞ்சுவதற்கு அஞ்சாதவன், தீவினையாளன், வஞ்சகன் போன்றவர்கள் மாணாக்கராதற்குச் சிறந்தவர் அல்லர் என்க. இந் நூல் நன்னூலுக்கு நேரான வழிநூல் ஆகாமையின் இவ்வாறு கொள்ளலாமோ எனின் அடிப்பட்ட ஆன்றோர் மரபிற்கு முரணாதாயின் கொள்ளலாம் என்க. "கையறி யாமை

1 திருக்குறள் 873 2 நன்னூல் 39

யுடைத்தே பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்''[1] ''கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றில் நுழைந்து''[2] ''அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கட் கன்றிய காத லவர்''[3] ''வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு''[4] அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சு வது அஞ்சல் அறிவார் தொழில்''[5] ''அறிவினுள் எல்லாம். தலைஎன்ப தீய செறுவார்க்கும் செய்யாவிடல்'''[6] ''நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் உண்மை அறிவே மிகும்''[7] என்பனபோன்ற மெய்ம்மொழிகள் முற்கூறிய குற்றங்களை உடையாரையும் அறிவையும் தொடர்புறுத்துக் கூறுதல்காண்க.

**11. குறைபடும் புலவோர் கூறும் குற்றம்**
**அஞ்சிப் பாடாது அயப்பது பிழையே.**

முழுப்புலமை பெறாதவர்கள் (தம் பொறாமையால்) பாடல்களைக் குறைகூறுவதால் பயமடைந்து கவிதைகளைப் புனையச் சோர்வடைவது தவறாகும் என்றவாறு.

''உண்டு குணம்இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ் கொண்டு புகல்வதவர் குற்றமே''[8] என்பதற் கேற்பப் புல்லறிவாளர் ஒரு மாணவனின் படைப்பு முயற்சியைப் பாராட்டி ஊக்குவித்து முன்னேறச் செய்யாமல் அம் மாணவனின் படைப்பிலுள்ள பிழைகளை மிகைப்படுத்தியும், இல்லாதனவற்றை வலியக் கூறியும் அச்சுறுத்துவர். அதனால் மனம் சோர்வடையாமல் மாணவர் தொடர்ந்து ஊக்கத்துடன் பாடலியற்றிப் பழக வேண்டும் என்பது கருத்து. இந்நூலாசிரியரின் காலநிலைக் கேற்ப இவர் கவிதையைக் கூறினும் இக்கருத்து சிறுகதை, புதினம், கட்டுரை, நாடகம் போன்ற படைப்புத்துறை அனைத்திற்கும் முற்றிலும் பொருந்தும்.

---

1 திருக்குறள் 930 — 2 திருக்குறள் 129
3 ,, 288 — 4 ,, 841
5 ,, 427 — 6 ,, 210
7 ,, 373 — 8 நன்னெறி 24

குறைபடும் புலவோர் குற்றம் கூறுவர் என்றதனாலேயே நிறைமதிப் பாவலர் அங்ஙனம் செய்யார் என்பது பெறப் பட்டது. அவர் செயல் அடுத்துக் கூறப்படும். (653)

**12. உண்மைப் புலவோர் உரைசெயும் உபாயம்
நண்ணிக் கொள்வது நலம்மிகத் தருமே.**

மெய்யாகவே கல்வியும் அறிவும் வாய்க்கப் பெற்றவர்கள் ஒரு மாணவனின் முன்னேற்றத்தைக் கருதிப் போதிக்கின்ற வழிமுறைகளை அவன் கைக்கொள்வது மிகுந்த சிறப்பைத் தரும் என்றவாறு.

புலமையும் சான்றாண்மையும் பெற்ற பெரியோர் ஒரு மாணவனின் எழுத்தில் பிழைகளைக் கண்டால் அவற்றை எடுத்துக் காட்டுவதோடமையாமல் மீண்டும் அத்தகைய பிழைகள் நேராமல் இருப்பதற்குரிய வழிகளையும் சொல்லித் தருவர். அப்பிழைகளைப் பெரிதுபடுத்தி மனச்சோர்வடையச் செய்யமாட்டார்கள். ஆதலால் அத்தகையோர் கூறும் யோசனைகளைக் கடைப்பிடித்தல் சாலச்சிறந்தது என்கிறார்.

செல்வ மிகுதி, அரசியல் அதிகாரம், பதவியில் உள்ளவர் துணை, மலிவான விளம்பரம் ஆகியனவற்றுள் ஒன்றிரண்டின் துணையால் புலமை வாசனையே இல்லாத சிலரும் பெரும் புலவராகக் காட்சியளிப்பர். அத்தகைய போலிப் புலவர்களி லிருந்து முறையாக பயின்று, தெளிவான அறிவு பெற்றோரைப் பிரித்துக் காட்டவே உண்மைப்புலவோன் என்றார். (654)

**13. தெய்வத் துதிவழித் தேறாப் புலமை
நைவும் சிறுமையும் நாணமும் தருமே.**

இறைவனின் பொருள்சேர் புகழைப் பாடுவதன் வழியாகத் தேர்ச்சிபெறாத கவிதை புனையும் ஆற்றல் தளர்ச்சியையும் பழியையும் அவமதிப்பையும் உண்டாக்கும் என்றவாறு.

தெய்வத்துதி எத்தனை கூறினும் முடிவுபெறாது ஆகலானும் அத்தெய்வத்தைப் பற்றிய பல வரலாறுகள் பாடுபொருளாக

அமைந்து நிறையப் பாடுதற்கு நல்ல வாய்ப்பளித்தலானும், அத் தெய்வத்தைப் பாடிய முன்னோர் மரபுகள் சிறந்த வழிகாட்டியாக அமைந்திருத்தலானும் தோத்திரங்கள் பாடுதல் கவிதைக்கலையைக் கையகப்படுத்தச் சிறந்த அணுகுமுறையாக உள்ளது. மேலும் தோத்திரங்களை யாரும் எளிதில் பழிக்கவும் மாட்டார்கள். இவ்வாறன்றி நிறைய விரித்துக் கூற இடம் இல்லாததும், தெளிவான நெறிமுறைகள் அமையாததும் ஆகிய எதையாவது ஒன்றை எடுத்துப் பாடத் தொடங்கினால் சொல் பொருள் கிடைக்காத தளர்ச்சி, ஆரம்பித்ததைச் செவ்வனே நடத்திச் சென்று முடிக்காததால் ஏற்படும் சிறுமை, தோல்வியால் வரும் நாணம் ஆகியன வந்தெய்தும். எனவேதான் தெய்வத்துதிவழிப் புலமை தேறவேண்டும் என்றார்.

மற்றொன்று. இந் நூலாசிரியர் காலத்திலும் அதற்குச் சற்று முன்னதாகவும் இருந்த புலவர்களில் சிலர் குறுநில மன்னர்கள், செல்வர்கள் ஆகியோர் மீது அகத்துறை என்ற பெயரால் காமச்சுவையை மிக அதிகமாகவும் ஆபாசமாகவும் நிறைத்துக் கவிபாடி வயிறு வளர்த்து வந்தனர். பாரதியாரின் "சின்னச் சங்கரன் கதை" யில் இவ்விழிநிலை நன்கு காட்டப் பட்டுள்ளது. அப்போக்கு ஒழுக்கத் தளர்ச்சியையும் (நைவு), சமுதாயத்தில் சிறுமையையும், சான்றோர் முன்னே நாணத்தையும் தருதல் ஒருதலை. ஆதலின் அதனை நீக்குக என்பார் தெய்வத்துதிவழி கடைப்பிடிக்க என்றார்.

கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழலே யாதலின் இலட்சியமாகிய இறையன்பே கல்விக்குச் சாதனமாகவும் அமையவேண்டும் என்றபடி. இவ்வாசிரியர் தம் ஏழாமிலக்கணத்தில் இதுபற்றியே, "தெய்வப் பத்தியிற் றிளையா வொருவன் கல்வி நலம் எணில் கள்ளிப் பாலே"[1] எனவும் அறிவுறுத்தியுள்ளார். (655)

**14. சிந்தையின் மயக்கம் தெளியா முன்னம்**
**சித்திரம் பாடில் அஃதும் தீதாய்**
**மற்றைய கவிகளின் வனப்பும் குன்றுமே.**

1 ஏழாம் இலக். 302

(எழுத்துச்சொற் புணர்ச்சி, சொற்களின் தெளிவான பொருள், பொருள் கோள் முறைகள், யாப்பின் ஓசை நயம், இலக்கிய மரபு, அணிகளின் அமைப்பு ஆகிய இன்றியமையாத விஷயங்களில்) சற்றும் ஐயமில்லாத தெளிவு பிறப்பதற்கு முன்னாலேயே யமகம், திரிபு போன்ற மிறைக்கவிகளை இயற்றத் தொடங்கினால் அவை செவ்வனே அமையாததோடு இயல்பான பாடல்களையும் எழிலுற யாக்க முடியாமற் போய்விடும் என்றவாறு.

முதலில் ஆற்றொழுக்கான பாடல்களைப் பாடிப்பாடி நன்கு தேர்ச்சியடைந்த பிறகே சித்திரகவிகளில் சிந்தை செலுத்தவேண்டும் என்கிறார். அங்ஙனம் செய்யாவிடின் மிறைக்கவிகளில் வேறு வழியின்றிக் கைக்கொள்ள வேண்டியுள்ள விகாரம், போலி, வலியப்பொருள்கோள் போன்றனவற்றை இயல்பான செய்யுளிடத்தும் புகுத்தி அதன் பொலிவை அழித்துவிட நேரும்.

இந் நூற்பா தொடங்கி 11 நூற்பாக்களால் கவிஞனாக விரும்பும் ஒரு மாணவன் கைக்கொள்ளவேண்டிய நெறிமுறைகள் வகுத்துக் கூறப்படுகின்றன. (656)

**15. குரவன் கடைவரி கொடுக்க வாங்கி**
**மற்றைய மூன்று வரிகளும் பாடி**
**அவன்எழுத் தாணி அவற்றைத் திருத்தல்(க்)**
**கண்டு தேறுநன் கவிநயம் உறுமே.**

போதகாசிரியன் ஈற்றடியைக் கொடுக்க மாணவன் மற்ற மூன்று அடிகளையும் நிறைவுசெய்ய வேண்டும். இவ்வாறு முற்றுப்பெற்ற பாடலை ஆசிரியன் மாணவனின் எதிரில் திருத்த வேண்டும். இம்முறையிலேயே தேர்ச்சி பெறுபவனின் செய்யுள் குற்றமற்றதாகவும் அழகுடையதாகவும் அமையும் என்றவாறு.

ஆசிரியன் மாணவனின் அறிவுநிலை அறிந்து ஈற்றடி தருவார். எனவே மாணவன் அதனை முற்றுவித்தல் எளிதாகும் (பிறர் தரும் ஈற்றடி சமுத்தி எனப்படும்) மாணவனின் பாடல்களை ஆசிரியர் திருத்தும்போது அவற்றிலுள்ள வழுக்களை

எடுத்துக் காட்டித் திருத்துவதால் சரியான கவிமரபு சிந்தையிற் பதியும். இவ்வாறு படிப்படியாகக் குற்றங்களைந்து குணம் பொலிய எழுதிப் பழகப்பழகத் தானே இனிய கவிதைகளை எளிதாகவும் விரைவாகவும் இயற்றும் திறமை உண்டாதல் உறுதி. (657)

**16. நாடகம் கொச்சகம் ஆதிய தொட்டுப்**
**பாடல் இனிதுஎனப் பகர்வது முறையே.**

பதம் கீர்த்தனை எனப்படும் நாடகத்தமிழ்ப் பாடல்கள், நான்கு காய்ச்சீர்களானியன்ற கொச்சகக்கலிப்பா என்னும் இரண்டையும் முதலில் இயற்றத்தொடங்கிப் பழகுவது சிறப்பாகும் என்பது மரபு என்றவாறு.

நாடகப் பாடல்களில் பெரும்பாலும் உரைநடையே நீண்டு வருவதாலும், உலக வழக்கிலுள்ள வெண்சொற்களே பயில்வதாலும், பொருள்கோள் நேராக இருப்பதாலும், தளை முதலிய கட்டுப்பாடின்மையாலும் முதலில் அதனை இயற்றுக என்கிறார். இது கைவந்தபின் அடுத்து முழுச்சொற்களை அப்படியே அடுக்க வாய்ப்பாக அமைந்ததும், ஓரளவே திரிசொற்கள் தேவைப்படுவனவும், தளைக் கட்டுப்பாடற்றதும், எதுகை மோனை வரையறையும் எளிதாக அமைந்ததும் ஆகிய கொச்சகக் கலிப்பா பரிந்துரை செய்யப்படுகிறது. காய்ச்சீர்களால் இப்பா நடைபெறுதலின் தொகைகளின்றி விரிவாகவே எளிதில் பாடலாம். இந்த யாப்பில் கொண்டுகூட்டு போன்ற சிக்கலான பொருள்கோள்கள் இடம்பெறாமல், ஆற்றொழுக்கே பெரும்பாலும் கைக்கொள்ளப்படும். எனவே, தொடக்கநிலைப் பயிற்சிக்கு இது சாலச் சிறந்ததாம்.

நாடகம் என்பதற்கு, "பல்லவத்து இருபங்கு அநுபல்லவமும், அதன்இரு பங்காம் சரணமும் தாளம் பிழையாது அமைத்து அதில் பேரின்பம்சொலிற் கீர்த்தனை என்றும்மற்று ஏனைய கிளத்தில் பதம்என வும்சொலல் பாவலர் வழக்கே" என்னும் இவர் மதம் பற்றிப் பொருள் கூறப்பட்டது.

---

1 அறுவகை இலக். 449

இவ்வகைப் பாடல்களுக்கு முழுமையான இராக, தாள அறிவு இன்றியமையாது வேண்டப்படும். இல்லையெனில் வேறொரு இசையாசிரியர் உதவி தேவைப்படும். இந்நூற்பா மொழி நிலையில் கூறப்பட்டதாதலின் யாப்பியற் கண்ணோட்டத்தில் அவை மிக எளியன எனப்பட்டனவேயன்றி வேறன்று. (658)

**17. விருத்தப் பாநிலை தேறுமுன் கட்டளைக்**
**கலித்துறை ஆதிய கழறுதல் பிழையே.**

(ஒரே வகையான சீர்கள் அடுக்கப்படுவதால் உண்டாகும் ஆசிரிய விருத்தங்களின் யாப்பமைதியில் நன்கு தேர்ச்சி பெறுவதற்குமுன் கட்டளைக்கலித்துறை முதலிய பாவினங்களைப் பாட முற்படுதல் தவறாகும் என்றவாறு.

மா, விளம், காய் முதலிய சீர்கள் அனைத்தடிகளிலும் ஒரே மாதிரி வருதல் வேண்டும் என்பதுவும், எதுகை மோனை சரியாக அமையவேண்டும் என்பதுவும்தான் ஆசிரிய விருத்தங்களுக்கு விதி. இதற்குத் தளைபற்றிய கட்டுப்பாடு இல்லை. ஈரசைச் சீர்களை நிரம்பப் பெற்ற விருத்தங்களில் தொகுநிலைத் தொடர்களும் திரிசொற்களும் ஓரளவு அதிகமாகவே இடம்பெறும். எனவேதான் இது கொச்சகத்தை அடுத்துக் கூறப்படுகிறது.

கட்டளைக்கலித்துறை ஆதிய என்றது ஓரடிக்கு இத்துணை எழுத்துகளே அமையப் பெறவேண்டும் என்னும் கட்டளையமைந்த கலிவிருத்தம், கட்டளைக்கலிப்பா என்பனவற்றை. ஆசிரிய விருத்தங்களை இயற்றுவதைவிட இவை சற்றுக் கடினமானவை என்பதை அநுபவத்தால் அறியலாம். (659)

**18. ஆசிரி யப்பா வதன்நிலை அறிந்துபின்**
**கலிப்பா வெண்பா கழறத் தகுமே.**

(பெரும்பாலும் ஈரசைச்சீர்களே நிறைந்தும் தன்தளையே மிகுந்தும் நடக்கும்) அகவற்பாக்களின் யாப்பமைதி நன்கு கைவந்தபின்பே (வெண்டளையன்றிப் பிறதளை சற்றும்

பயிலக் கூடாதன வாகிய) வெண்பா, வெண்டளைக் கலிப்பா போன்றனவற்றை இயற்ற முயல வேண்டும் என்றவாறு.

இதற்கான காரணம் உரையிலேயே பெய்து கூறப்பட்டது. ஆசிரியப்பாவில் வெண்டளையும், ஒரோவழிக் கலித்தளையும் வரலாம். (''ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து''[1] என்னும் அகவலடியில் தோற்றாது நிமிர்ந்து எனக் கலித்தளை பயின்றது காண்க) ஆனால், வெண்டளையால் வரும் பாக்களில் பிற தளைகள் மயங்கா. இதனை இவர் ''சுத்தம்பொலிந்து தோம்அற ஒழுகலின் வெண்பா விற்குஇணை வேதியப் பெண்ணே''[2] என்றார் பிறிதோரிடத்தில். எனவே, வெண்பாப் பாடுதல் சற்றுக் கடினமே. இதுபற்றியே ஔவை மூதாட்டியும் ''எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி'' என்றார்.[3] இவரும் ஏழாமிலக்கணத்தின், ''இளமைப் புலவோர்க்கு இசையாது இகலி முதியோர் சிலர்க்கு முன்னும்முன் உதவல் வெண்பாப் போலும் வேறுஒன்று இன்றே''[4] என்னும் நூற்பாவில் ஆரம்ப நிலையினர்க்கு வெண்பா யாப்புக் கடினமானது என்கிறார். (660)

19. வெண்பா அதன்நிலை விளங்கும் முன்னம்
வண்ணம் பாடுதல் வழக்கம் அன்றே.

வெண்பா யாப்பு விரைவாகவும் இயல்பாகவும் பிழையற ஒருவருக்கு வருவதற்கு முன்னால் அவர் சந்தக்கவிகளை இயற்றத் தொடங்குதல் மரபன்று என்றவாறு.

வண்ணம் என்பது இவர் வாக்கில் சந்தக்கவிகளுக்கே உரிய பெயர். (இதனைத் தொல்காப்பியம், காரிகை கூறும் வண்ணத்தோடு குழப்பிக் கொள்ளலாகாது) வெண்பாவிற்கு வெண்டளை மட்டுமே பயில வேண்டும் என்ற ஒன்றே விதி. ஆனால், சந்தப்பாடல்களில் நான்கடிகளிலும் குறில்வந்த இடத்துக்

1 திருவிடை. மும்மணிக்.1 – 6
2 ஏழா. இலக். 271
3 தனிப்பாடல்
4 ஏழா. இலக். 270

குறிலும், நெடில்வந்த இடத்து நெடிலுமே வரும். ஓர் எழுத்து மாறினாலும் குழிப்புச் சிதைவு ஏற்படும். மெய்யெழுத்துகளிலும் மெல்லொற்று வந்த இடத்தில் மெல்லொற்றும், வல்லொற்று வந்த இடத்தில் வல்லொற்றுமே பயிலும். மேலும் அனைத்தடிகளிலும் எழுத்துகளின் எண்ணிக்கையும் குழிப்பிற் கேற்பக் கட்டளை பெற்றுவிடுகிறது. இத்தனைக் கட்டுப்பாடுகளுடன் எதுகை மோனை வழுவாமலும், பொருள் தொடர்பு சிதையாமலும் சந்தக்கவிதை இயற்றுதல் அரிய சாதனையே. அதன் அருமை பற்றியே பொதுவாக வெண்பா புலி என்ற ஔவைப்பிராட்டி எக்கவியையும் நொடியில் பாடவல்ல. "ஆசுவலவர்க்கும் வண்ணம்புலிஆம்"[1] என்று உம்மை கொடுத்துக் கூறினார். சேது சமசுதானப்புலவர்களிடம் இவர் "குலவ வெண்டளையின் மாண்பு எல்லாம் தேறுசீர் வண்ணம் கழித்த ஆபாசம் என்பது தெரிகிலீர் போலும்"[2] எனக்கூறியதும் இதனாலேயே ஆகும். வண்ணத்தின் சிறப்பு இவரால் பிறிதோரிடத்தில், "உடுஇனத்து அரசுஎன மதியைக் கூறலும், கவி இனத்து அரசுஇன வண்ணச் செந்தமிழ் அதனைக் கூறலும் புரையும் அன்றே"[3] என விளக்கப்பட்டுள்ளது. வண்ணம் பாடலே கவிதை இயற்றலின் நிறைநிலை என்பதை இவர் பல இடங்களில் கூறியுள்ளார்.

இதுவரையில் தனிப்பாடல்களை இயற்ற எவ்வாறு பயில வேண்டும் எனப் படிப்படியாகக் கூறிவந்தவர் அடுத்த இரு நூற்பாக்களால் பனுவல்களைப்பற்றி அறிவுறுத்துகிறார். (661)

**20. பிரபந் தத்தொகை பேசித் தேறிக்**
**காவியம் பாடிற் கழிவு படாதே.**

மாலை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம் போன்ற சிற்றிலக்கிய வகைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற பிறகு பெரிய காப்பியங்களை இயற்றத் தொடங்கினால் அவை சுவை குன்றாமலும் குற்றமற்றும் விளங்கும் என்றவாறு.

---

1 தனிப்பாடல்

2 குருபர. நாட்டுக். சரு. 7

3 வண்ணத்தியல்பு 98

சிற்றிலக்கியங்கள் யாவும் முத்தகம் எனப்படும் தனிக்கவி களானியன்றவை. ஒரு பாடலின் எழுவாய், பயனிலை அதன் கண்ணேயே அமைந்து பொருள் முற்றுப் பெற்றுவிடுகிறது. மேலும், அவ்வகைப் பிரபந்தத்திற்கு என்று விதிக்கப்பட்ட மிகச் சிலவகை யாப்புகள் மட்டுமே பயின்று வருபவை. (கலம் பகம் மட்டும் இதற்கு விதிவிலக்கு)

ஆனால், காவியங்களில் பல பாடல்கள் தொடர்ந்து நடந்து ஒரு வினைமுடிபு பெறுகின்ற குளகச் செய்யுள் மிக்குவரும். இதனால் பால், திணை, எண், காலம் முதலியனவற்றில் வழுக்கள் தோன்றாமலும், எச்சங்கள் உரிய முடிபுகளைச் சரி யாகப் பெறுமாறும், மிகவும் கவனமாக இயற்றப்பெறுதல் வேண்டும். அத்துடன் காவியத்தில் பல சுவைகளும் விரவி வரு தலால் இடத்திற்கேற்ற யாப்பு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும், காவியங்களில் கதைமாந்தர், நிகழிடம் போன்ற இயற்பெயர்கள் அடிக்கடி வரும். இவற்றை அந்தந்த யாப்பில் திறமையுடன் அமைக்கவேண்டும். காவியத்தில் விரித்துக் கூறு மிடங்களில் விரித்தும், சுருக்கிக் கூறுமிடங்களில் சுருக்கியும் பாட வேண்டும். வருணனைப் பகுதிகளில் ஓரளவு திரிசொற் களையும் மிறைக்கவிகளையும் பயன்படுத்தினாலும், கதை யோட்டம் நிறைந்த இடங்களிலும், மெய்ப்பாடு வெளியாகும் இடங்களிலும் நடை இயல்பாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும். காவியங்களில் கவிக்கூற்றும், கதைமாந்தர் கூற்றும் விரவி வரும். அக்கூற்றில் கையாளப்படும் நடை அவர் அறிவு, தகுதிகட்கேற்ப அமைவதோடு அப்பாத்திரத்தின் மனநிலைக் கேற்பவும் அமைதல் வேண்டும். இத்துணைக் கட்டுப்பாடுகள் இருப்பதால்தான்சிற்றிலக்கியம்பாடிப் பழகிய பிறகே காவியம் இயற்றவேண்டும் என்றாரேஅன்றி வெறும் பாடற்றொகை யைக் மாத்திரம் கருதி அன்று. ஏறத்தாழ நானூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைந்த ஒரு கோவையைப்பாடுவதைவிடச் ஏறத்தாழ முந்நூறு பாடல்களைக் கொண்டதொரு காவியம் பாட அதிகமான சிந்தனையும் உழைப்பும் தேவைப்படும். (662)

**21. காவிய நிலைகளும் கண்டு தேறி**
**நூலினம் பகர்வது நுண்ணிமை யாமே.**

நல்ல காவியப் புலமை கைவந்த பிறகே இலக்கணம் தத்துவம், சோதிடம், மருத்துவம் போன்ற அறிவுநூல்களை இயற்றத் தொடங்குதல் அறிவுடைமையாகும் என்றவாறு.

காவியம், சிற்றிலக்கியம் போன்றனவற்றுள் கற்பனை இலக்கியச்சுவை முதலியவைகளுக்கு நல்ல வாய்ப்பிருப்பதால் கற்பவர்களுக்குச் சோர்வு தோன்றாதவாறு கொண்டுசெல்ல முடியும். ஆனால், அறிவு நூல்களில் கற்பனைக்கோ, சொல் விளையாட்டிற்கோ, உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் போன்ற அணிகளுக்கோ சற்றும் இடமில்லை. காவியத்தின் பொருள் உணர்ச்சியில் சற்று மயக்கம் ஏற்பட்டாலும் பெரிய இழப்பு இல்லை. ஆனால், சாத்திரங்கள் எனப்படும் அறிவுநூல்கள் மிகத் தெளிவாகவும் ஐயத்திற்குச் சற்றும் இடமில்லாமலும் அமையவேண்டும். நூல் நுதலிய பொருள் இவற்றில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டால் விபரீதம் ஏற்பட்டுவிடும். எனவே, ஒரு புலவர் தாம் சொல்லக் கருதும் பொருளைத் தெள்ளத் தெளிவாகவும், கற்போருக்குச் சற்றும் அலுப்புத் தோன்றாத வாறும், அறிவு வளர்ச்சியால் உண்டாகும் இன்பத்தைத் தருமாறும் கூறும் ஆற்றல் பெற்றபிறகே அறிவுநூல்களை இயற்றத் தலைப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறையில் பேரறிவு படைத்த பெருமக்கள் சிலர் அத்துறையில் இயற்றிய அரிய நூல்கள் சுவையற்றனவாக இருப்பதற்கு அவர்கள் தமிழ்ப்புலமையை இவ்வழியில் வளர்த்துக் கொள்ளாததே காரணமாகலாம். (663)

**22. சொல்நிறம் தன்நெஞ்சு அறியத் தோன்றும்**
**அளவும் புலமையின் அவாஅடங் காதே.**

சொற்களின் நிறத்தைத் தம் உள்ளம் உணரும்படியான மொழித்தெளிவு பிறக்கும்வரை இனியும் புலமையைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்னும் வேட்கை தீராது என்றவாறு.

இந்நூலாசிரியர் புதியன புகுத்தலாக எளிமை, அருமை நோக்கிச் சொற்களுக்கு வெண்மை, பளிங்கு, கருமை, செம்மை, பொன்னிறம் என ஐவகை நிறங்களை வகுத்து அவற்றை வெண்மை, செம்மை, கருமையில் அடக்கிக் காட்டுகிறார். (அறுவகை இலக்கணம்-சொல் 171 முதல் 179 வரையான நூற்பா) சொற்களைப் பற்றிய அத்தகைய தெளிவு பிறக்கும் வரையில் புலமை வேட்கை அடங்காது என்கிறார். அடங்காது என்ற வாய்பாட்டால் கூறப்பட்டிருந்தாலும், ஒரு மாணவனுக்கு அத்தகுதியைப் பெறும்வரைக் கல்வி வேட்கை இருந்துகொண்டே இருத்தல்வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்தாம். என்னை? கல்வித்துறையில் "தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்து அழிக; கற்றது எல்லாம் எற்றே இவர்க்கு நாம் என்று"[1] என்பதே விதியாதலின். (664)

**23. எவ்விதக் கவிகளும் பாடும் இரும்திறல்**
**வரினும் பனுவலை மறுத்தும் தானே**
**எழுதா நலம்நினைத்து ஏங்கல் இயல்பே.**

அனைத்து வகையான நூல்களையும் இயற்றுகின்ற அரிய வல்லமை ஏற்பட்டாலும், தம்மாலியற்றப்பட்டதைத் தாமே மீண்டுமோர்முறை பரிசீலித்துத் திருத்தவேண்டிய நிலைமை தோன்றாத சிறப்பை விழைந்து, அதனைப் பெறுவதற்காக முயலல் நன்மாணாக்கர்களின் இயல்பாகும் என்றவாறு.

இந்நூற்பாவில் கவிகள் என்றது ஆகுபெயராகப் பனுவலை உணர்த்திற்று. ஒரு முறை இயற்றப்பெற்ற பிறகு மீட்டும் பரிசோதிக்கப்பெற்றுச் செப்பம் பெறவேண்டிய அவசியமே இல்லாமல் முதன்முறையிலேயே திருத்தமாக அமைந்து விடுதலே சிறப்பாகும். இந் நலத்தை நாடி ஏங்கல் இயல்பே என நூற்பா நுவலினும் வெறும் ஏக்கத்தால் பயனின்மை கருதி முயலல் என உரை காணப்பட்டது. "என்னொருவன்

1 நீதிநெறி விளக்கம் 14

சாந்துணையும் கல்லாத வாறு"[1] என்னும் மறைமொழிக் கிணங்க, "எவ்விதக் கவிகளும் பாடும் இருந்திறல்" வந்தவரும் நன்மாணாக்கர் எனப்பட்டனர். (665)

**24. பாடம் எழுதலிற் பட்டோலை வாய்ப்பினும்**
**தடையற ஒருவன் எழுதச் சாற்றல்**
**அரிதாம்; அதுவரை அறிவுத் தன்மைப்**
**புலமை ஆம்எனப் புகல்வது துணிவே.**

ஒரு கவிஞர் தம் படைப்பைத் தாமே வரிவடிவில் எழுது வதைவிட மற்றொருவர் எழுதும்படி தாம் இடையீடில்லாமல் கூறிக்கொண்டே செல்வது மிகவும் செயற்கரிய செயல் ஆகும். இந் நிலையை அடையும்வரை இவர் புலமை அறிவுத் தன்மையைச் சார்ந்தது என்று கொள்ளப்படும். (பிறகு அப் புலமை தெய்வத்தன்மை கொண்டது எனப்படும்)

தாமே எழுதும்பொழுது வரிவடிவைக் கண்களாலும் பார்ப் பதால் எதுகை, மோனை, அடியின் முடிவு முதலியனவற்றை எளிதில் அறியலாம். தாம் சொல்லச்சொல்ல மற்றவர் எழுதும் பொழுது ஆசிரியர் முழுப் பாடலையும் தம் நினைவிலேயே கருதி இயற்ற வேண்டும். இதற்கு மிக அதிகமான நினை வாற்றல் தேவைப்படுவதால் இது அரியது எனல் திண்ணம். அவ் வாற்றல் இறையருளாலேதான் வாய்க்கும் என்பது இந்நூலா சிரியரின் அழுத்தமான கொள்கை. எனவேதான், கடும்பயிற்சி யாலும் ஊக்கத்தாலும் உழைத்துத் தமது படைப்பைத் தாமே எழுதுவது வரையான நிலையை அறிவுத்தன்மை உடையது எனவும், பொருளெச்சத்தால் பட்டோலை எழுதக்கூறுதல் தெய்வத்தன்மைத்து எனவும் கூறுகிறார். இது அடுத்த நூற் பாவில் விளக்கப்படும்.

ஒரு கவிஞர் சொல்லச்சொல்ல ஏட்டில் எழுதிக்கொள் வதையும், அவையில் ஒரு புலவர் விளக்கஉரை கூறக்கூற மூல பாடத்தை மட்டும் படிப்பதையும் "பட்டோலை பிடித்தல்" என்பர். புதிய கவிதைகளைக் கவனம் செய்து சொல்லச்

---

1 திருக்குறள் 397

சொல்ல அவற்றைப் பிழையற எழுதத் தக்க வல்லமையுடையார் கிடைத்தலின் அருமை நோக்கி "பட்டோலை வாய்ப்பினும்" என உம்மை கொடுத்தார்.

இவ்வியல்பின் 14-ஆம் நூற்பாவிலிருந்து இதுவரையான 11 நூற்பாக்களில் ஒரு மாணவர் சிறந்த கவிஞராக மிளிர்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டன. நல்ல படைப்பாற்றல் மிக்கவரே இங்குக் கூறப்பட்டுள்ள நுட்பங்களை எடுத்துக்காட்டியும், மாணவரின் படைப்புகளைத் திருத்திக் கொடுத்தும் அவரை உயர்த்த முடியும். இக்காரணம் பற்றியே இவ்வியல்பின் 6-ஆம் நூற்பா "அக்கரம் முதற்கொண்டு அணிஈறு ஆகப் பகரும் நூலும் பாவலர் முன்பில் கற்கை நலம்எனக் காண்பது கடனே' என விதிக்கிறது. (666)

**25. கால மழைஎனப் புதுக்கவி கழறலும்**
**சொற்படி நடக்கக் காண்டலும் பிறவும்**
**தெய்வத் தன்மைப் புலமை ஆமே.**

கார்காலத்தே பெய்யும் பெருமழை போலப் புதிய செய்யுட்களை வரி வடிவத்தின் துணையுமின்றிக் கவனம் செய்து வாயாலேயே பொழிந்து தள்ளும் ஆற்றலும், வாக்குப் பலிதமும், இம்மை மறுமைப் பயன்களை அடைதலும் (தன்னுடைய அறிவினால் மட்டும் அன்றி) இறைவனின் திருவருளாலேயேகைவரப் பெறும். அதனால் இந்நிலை தெய்வத் தன்மைப் புலமை எனப்படும் என்றவாறு.

மடைதிறந்த வெள்ளமெனக் கவிமழை பொழிதல், வாக்குப் பலிதம் இவை தவத்தால் எய்தப்பெறும் சித்திகளாம். 'சித்தியொடு கல்விஉற்றோர் களைத்தெய்வப் புலவர்என்பார்; நத்தியவாறு இயற்றும்வலி நண்ணினரைத் தவர் என்பார்; புத்திமலிந்து எக்கவியும் புகல்வாரைப் புலவர்என்பார் அத்தி வளைந்து உடுத்துஇலகும் அம்புவியில் அமர்ந்தோரே"[1] என்னும் இவர் வாக்கால் அறிவுத்தன்மை, தெய்வத்தன்மை பற்றிய இக் கொள்கை நன்கு விளக்கமாகிறது. (667)

---

1 புலவர். அறிவுத். 1

**26. கருதிய தெய்வம் கண்முன் தோன்றிப்**
**பேசின் அல்லது பெருந்தகைப் புலமை**
**எய்தாது என்றிடல் இயல்பாம் அன்றே.**

தம்மால் தியானிக்கப்படுகின்ற கடவுளின் திருவடிவம் ஊனக்கண் காண எதிரே காட்சியளித்தும், தம் செவிப்புலன் கேட்குமாறு உரையாடியும் ஆட்கொண்டாலன்றி முழுப்புலமை அடைந்ததாகக் கூறமுடியாது எனல் மரபு என்றவாறு.

எதை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாக ஆகுமோ அதை அறிதலே மெய்யறிவு என்பதுவும், அது பரம்பொருளே என்பதும் இந்து சமய நெறிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட அடிப்படைக் கருத்தாம். ''ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பய மின்றே; மெய்யுணர்வு இல்லா தவர்க்கு''[1] என்றதூஉம் இதுவே. தெய்வம் உபாசகன்முன் நிச்சயம் தோன்றும் என்பதை இவ் வாசிரியர் ''தெய்வம் கண்எதிர் திகழாது என்னும் புன்மைத் தவத்தோர் புராணம் பலவற்று எண்ணில் பலர்கண் டிட்ட தாகச் சொல்லல்முற்று இகழ்ந்த தோடம் எய்திக் கீழ் மையர் ஆகிக் கெடுவார் அன்றே''[2] ''தெய்வத்தை மனத்தாலும் நேத்திரத்தாலும் கண்டு பேசத்தகும்''[3] ''தெய்வம் சருவ வல்லபம் உடையது என்று ஒப்பியும் அது கண்ணாற் காணப் படாதது என்பவர் விவேக சூனியரே ஆவர்'[4] எனப் பலவிடங் களில் பலவாறு கூறியுள்ளார். (668)

**27. தெய்வம் தோன்றியும் சிறுநலம் துய்த்து**
**மறுத்தும் நல்லார் வயிற்றுட் புகுவது**
**பேதமை என்பார் பெரும்புல வோரே.**

ஊனக்கண்முன் தெய்வம் தோற்றமளித்தும் அதனிடம் அளவால் சிறியதும் அழியக்கூடியதுமான உலகியல் போகப் பொருள்களை வேண்டிப்பெற்று இறந்து மறுபடியும் இன்னு மோர் தாய் வயிற்றில் பிறவியெடுப்பது அறியாமையாகும் என உணர்பவர்களே மெய்யறிவினர் ஆவர் என்றவாறு.

---

1 திருக்குறள் 351
2 சத்திய வாசகம் 10
3 சத்திய சூத்திரம் 99
4 சத்திய வாசகம் 13

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற் றீண்டு வாரா நெறி"[1] "இன்னும் ஒருக்கால் எழுத்துஉரு ஒருவர் காட்ட உணராக் கதிபெற நாடி முயலவல் லாரே முழுப்புல மையரே"[2] என்பனவும் இதே கருத்தமைந்தன ஆம். (669)

**28. அருள்வலிப் புலவ ராம்என விளங்கியும்
பொருளுடைச் சிலர்பால் போவது இழிவே.**

திருவருளைப் பெற்றவர்களாக இருந்தும் புலவர்கள் சிலர் பொருளை நாடிச் செல்வர்களிடம் செல்வது உயர்ந்தது ஆகாது என்றவாறு.

செத்துப் பிறக்கின்ற மனிதர்களைப் புகழ்ந்து பாடி ஒரு புலவர் செல்வராக இருப்பதைவிட இறைவனைப் போற்றிப் பரவிக்கொண்டு இரந்துண்டு வாழ்தல் ஏற்றமானது என்னும் இவர் கொள்கை இந்நூலின் அடுத்த பகுதியாகிய தவறியல்பில் வலியுறுத்தப்படும். (670)

**29. சொற்சுவை உணரான் தோள்வலிச் சுடர்வாள்
மன்னன் ஆயினும் அஃதுஉணர் மாந்தரில்
தாழ்வுஎன உணர்வான் தக்க புலவனே.**

இலக்கியச் சுவை உணர்வு இல்லாதவன் பேரரசன் ஆயினும் அதனை உடைய சாமானியனைவிட இழிந்தவனே ஆவான் எனத் தெளிபவர்தாம் சிறந்த அறிஞர் ஆவார் என்றவாறு

இதே கருத்து எதிர்மறை வாய்பாட்டால் அடுத்த தவறியல்பிலும் கூறப்படும். (671)

**30. தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதுஎனில்
அஃதுஉணர் அலகையில் தாழ்வுஎனல் அறமே.**

ஒரு தெய்வம் தமிழினினிமையைத் துய்க்க அறியாது இருக்கிறது என்றால் அது தமிழ்ச்சுவையை உணரும் ஆற்றல் பெற்றதொரு பேயைவிடக் கீழானதே என்று கூறுதலே நீதியாம் என்றவாறு.

---

1 திருக்குறள் 358 2 ஏழா. இலக்.310

தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் இலது என்பதே உண்மை. அதனால்தான் உளதுஎனில் என்றார். முன் நூற்பாவில் தமிழறிவற்ற வேந்தனைத் தாழ்த்திக் கூறிய இவர் இதில் தெய்வத்திற்கே தமிழுணர்ச்சி இல்லாதிருக்குமானால் அது பேயைவிட இழிந்ததே எனக் கூறுகிறார். இந் நூலாசிரியரின் தாய்மொழிப்பற்று இவற்றால் குன்றிலிட்ட விளக்காய் வெளிப் படுகிறது.

தமிழ்மொழி தன்னை நன்கு கற்றால் மனிதர்களையே தேவர்களின் தேவராகச் செய்துவிடும் என்பார் இவர். "அத்தனை யொத்துத் தவத்தோர் பலர்க்கும் அரசன் என்னும் வித்தகப் பேர்பெற்று வீறார் பொதியையில் மேயமுனி முத்தம் ஒப்பாள்அரு ளாற்செய்ததுஆம் தமிழ் மூதுலகத்து எத்தக வோரையும் தேவர்தம் தேவர் எனச்செய்யுமே."[3] இவ்வாறு கூறுவதாலேயே தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் இருக்க முடியாது எனத் தெளிவாகிறது.

31. வண்ணப் பனுவலும் வகுக்கும் பாவலன்
சொல்லில் அருள்வலித் தோற்றம் இலையேற்
பல்வகைத் துயரால் பரதவிப் பானே.

முழுவதும் சந்தக்கவிகளாலேயே இயலும் ஒலியலந்தாதி போன்ற அரிய நூல்களை இயற்றும் திறமை படைத்திருந்த போதிலும் ஒரு கவிஞரின் வாக்கில் அருள்வலிமை இல்லா விட்டால் அவர் பலவாறு வருந்துவார் என்றவாறு.

தமிழர் பொதுவாகக் கவிஞர் தம் பாடலால் பல அதிசயங்களை நிகழ்த்தமுடியும் எனநம்புகிறார்கள். பண்டைய தமிழ்ப் புலவர்களைப் பற்றி வழிவழியாக வழங்கிவரும் பற்பல சரிதங்களே இதற்குக் காரணம். இராம காதையை உலகப் பெருங்காப்பியமாக இயற்றித்தந்த கல்வியிற் பெரிய கம்பரைக் கூட அதற்காக மதிப்பதைவிட அரவந் தீண்டிய தில்லைவாழ் அந்தணச் சிறுவனை எழுப்பியதாகவும், கலைமகளையே ஓர் இடைச்சியாக வந்து திமுதம் என்ற சொல்லைப் பயன்படுத்தச்

---

1 தமிழ் அலங். 96

செய்ததாகவும் வழங்கியே அதிகமாகப் போற்றுகின்றனர். இறந்தவரைக் கவிபாடி எழுப்புதல், மழை பெய்வித்தல், அறம் பாடிச் சபித்தல் பற்றிய செவிவழி வரலாறுகள் இந்நூலா சிரியரின் காலத்தே மிகப் பல்கி இருந்ததைப் புலவர்புராணத் தால் தெள்ளத்தெளிய உணரலாம்.

இதே கருத்தை இவர் ஏழாமிலக்கணத்தும், "வண்ணப் பாநுவல் வாயின னேனும் சொற்படி நடவும் தொழில்இலன் ஆயிற் பல்இல் பாம்புஎனப் பரிதவிப் பானே"[1] என மீட்டும் கூறியுள்ளார். அடுத்த நூற்பா உலகினரின் இவ்வியல்பைக் கூறுகிறது. (673)

**32. சிறுகவி ஒன்றும் சிறக்கச் செப்பான்**
**அலகைத் துணைக்கொண் டாயினும் அருமைச்**
**செயல்ஒன்று இயற்றில் தெய்வம்என்று அவனைப்**
**பற்பலர் இறைஞ்சல் பாருலகு இயல்பே.**

அளவாலும் முயற்சியாலும் சிறியதாக அமைந்த ஒரு பாடலைக் கூடச் செப்பமாக இயற்றத் தெரியாதவனும் ஏதாவது ஒரு பேயையாவது துணையாகக் கொண்டு ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டிவிட்டால் இவ்வுலகில் பெரும் பான்மையராகிய மக்கள் அவனைத் தெய்வமாகக் கருதிப் போற்றுவர் என்றவாறு.

கவிதை ஆற்றலும் இல்லாமல், தூய கடவுள் வழிபாடும் இல்லாமல் எப்படியாவது செப்பிடுவித்தை செய்பவரையே பெரும்பான்மையோர் மதிப்பர் என்பது கருத்து. இத்தகை யோரை ஏழாமிலக்கணம், "மூடர் போற்ற முத்தமிழ்ப் புலவோர் பீடிலன் என்னப் பிழைக்குநர் பலரே"[2] என இனம் காட்டுகிறது.

இந் நூற்பாவில் பாருலகு என இரு சொற்புணர்த்துக் கூறியதால் உயர்ந்தோரைச் சுட்டாமல் எண்ணிக்கையில்

---

1 ஏழா. இலக். 303
2 ,, ,, 308

பெரும்பான்மையோராகிய பாமரர்களைக் குறித்தார். உயர்ந்தோர் நிலை அடுத்த நூற்பாவில் கூறப்படும்.

**33. செத்தார் உய்யினும் தீஞ்சுவை இல்லாப்**
**பாடலின் மருளாப் பான்மையர் சிலரே.**

ஒரு பாடலைப் பாடி ஒருவன் இறந்தவரையே எழுப்பிக் காட்டினாலும் அது இலக்கியநயம் மிக்கதாக இல்லாமல் இருப்பின் சற்றும் மயங்காத தன்மையை உடையவர்கள் எண்ணிக்கையில் மிகச்சிலரே ஆவர் என்றவாறு.

கவிதையின் இலக்கியத்தரத்தைச் சரியாக மதிப்பிடும் சுவைஞர்கள் சிலரே என்று இங்கு கூறியவர் ஏழாமிலக்கணத்தில் தகுதிவாய்ந்த கவிஞர்களின் எண்ணிக்கையும் குறைவானதே என்னும் உண்மையை, "பாவலர் புகழ்ந்தும் பாமரர் இகழக் கண்டு வாடுறும் கவிஞர்சிற் சிலரே" [1] என வெளிப்படுத்தி யுள்ளார்.

"செத்தவர்மீண்டு எழச்செய்யும் திறலுடைப்பாட்டு ஆனாலும், கைத்தசுவை யினதாகில் பழிப்பாரும் சிலர் இருப் பார்; சுத்தமில்பாட்டு ஆனாலும் சொன்னபடி யேநடவில் இத் தரையில் புகழ்கின்றோர் எண்ணரும்பற் பலர்தாமே.[2]" என்ற துவும் இது.

**34. வாக்குச் சுவையுடன் அருள்திறம் மன்னும்**
**புலமைத் தேற்றம் பொதிய மால்வரைக்**
**கடவுள்மா முனிவனைக் கைதொழில் வருமே.**

பொதியமலையில் என்றும் விளங்குபவராகிய தெய்வத் தன்மை பொருந்திய அகத்தியரை வணங்கினால் கவிதை யினிமை, அருள்தன்மை ஆகிய இரண்டாலும் சிறந்து விளங்கும் புலமையை அடையலாம் என்றவாறு.

பழைய தொல்காப்பியப் பதிப்புகளில் காப்புச் செய்யு ளாகக் கொடுக்கப்பட்டுள்ள, "சந்தனப் பொதியத் தடவரைச்

---

1 ஏழா. இலக். 307

2 புலவர். அறிவுத் – 4

செந்தமிழ்ப் பரமாசாரியன் பதங்கள் சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே'' என்ற பழம் பாடலையும், இவர் தம் புலவர் புராணத்தில், ''எண்ணில் பல்பவத்து இயற்றமிழ்க் குறுமுனி தம்மை நண்ணி மாதவம் முயன்றுள நாவலர் தமக்கே விண்ணில் வாழ்கலை வாணிதன் மெய்யருள் விளங் கும்; புண்ணி லாமுதற் கதியினுட் புகுதலெய் திடுமே''[1] எனக் கூறியுள்ளதையும் இங்கு இணைத்துப் பார்க்கலாம். (676)

**தேற்ற இயல்பு முற்றிற்று.**

## II. தவறு இயல்பு

தமிழ் மாணவர்களிடமும், புலவர்களிடமும் இருக்கக் கூடாதன ஆகிய பண்புகளை இவ்வியல்பின் 34 நூற்பாக்கள் தெரிவிக்கின்றன. இன்னின்னவை விலக்க வேண்டுவன என விதித்தல் இவ்வியல்பின் குறிக்கோள். இதன் இன்றியமையாமை முதற் நூற்பா உரையில் கூறப்படும்.

**35. சாராது ஒழிப்பரன் தவறுஇயல்பு உரைக்குதும்;**
**பேரா நலம்எனப் பிணங்கவொண் ணாதே.**

தம்பால் எத்தகைய குற்றங்கள் அமைந்துவிடக் கூடாது என அறிந்து அவற்றை நீக்கிக் கொள்வதற்காகத் தவறு இயல்பு ஆகிய இப்பகுதியைக் கூறுகிறார். இக் குற்றங்கள் ஒரு புலவரை விட்டு நீங்காமல் இருக்கின்ற பண்புகள் ஆகும் எனக் கருதி எம்மோடு மாறுபாடு கொள்ளல் சரியன்று என்றவாறு.

''இவை இவை நலம் பயப்பன; ஆகவே கொள்ளத்தக்கன என்று மட்டும் உரைத்தால் போதாதோ? தீமைகளைப் பட்டிய லிட்டுக் காட்ட வேண்டுமா?'' என்னும் ஐயத்தை அறுப்பதற்காக இவை தீமை எனத் தெரிந்துகொண்டால் தானே அவற்றை ஒழிக்கலாம்? அவ்வாறு எவ்வெவற்றைத் தள்ள வேண்டும் எனக் கூறவே இவ்வியல்பைத் தொடங்குகிறேன் என்கிறார். இது பற்றி யன்றே வள்ளுவனாரும் அழுக்காறாமை

1 புலவர். அகத். 13

வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை. தீவினையச்சம் என்பன போலத் தள்ளத் தக்கனவற்றையும் தனித்தனியே விரித்துரைத்தார்.

புலவர்கள்பால் தற்பெருமை, புலமைக்காய்ச்சல் என்னும் பொறாமை போன்ற சில தீய பண்புகள் இயல்பாகவே இருக்கும் என்ற ஒரு நம்பிக்கை சரியாகவோ தவறாகவோ சமுதாயத்திலே நிலவி வருகிறது. இவைகள் புலவர்களிடத்தில் இருக்க வேண்டியனவும் அன்று; நீக்க முடியாதனவும் அன்று என்பதற்காகப் பேரா நலம்எனப் பிணங்க ஒண்ணாது என்கிறார். பேரா - பெயர்க்கமுடியாத, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**36. ''நவின்றும் அங்ஙனம் நடக்கக் காணாப்**
**புலமைத் தன்மையும் பொருவில் மெய்யருள்**
**ஆம்'' எனக் கருதும் அஃதும்ஓர் பிழையே.**

''ஒரு கவிஞனிடம் வாக்குப்பலிதம் இல்லாவிடினும் அவனிடமுள்ள கல்வி மற்றும் மொழிப்புலமையே இணையற்ற இறையருள் ஆகும்'' என எண்ணுதல் தவறாகும் என்றவாறு.

முன் இயல்பில், ''நூலின் துணையினும் நூறுபங்கு அதிகம் தெய்வத் துணைஆம் செழுந்தமிழ்க் கவிக்கே''[1] எனவும், ''கால மழைஎனப் புதுக்கவி கழறலும், சொற்படி நடக்கக் காண்டலும், பிறவும் தெய்வத் தன்மைப் புலமை யாமே[2]'' எனவும், ஏழாமிலக்கணத்தில், ''யாப்பியல்பு உணரினும் எடுத்த வண்ணம் பாடுமாறு அருள்வது பாரதி கடனே'' எனவும் கூறிய இவர் கூற்றுகளுக்கே இது முரணாகாதோ எனின் ஆகாது.

மொழியறிவின் முடிந்த முடிபு-அதாவது கற்றதனாலாய பயன் - வாலறிவன் நற்றாளடைவதே. இதை இவர் தெள்ளத்

1 அறுவகை இலக். 649 3 ஏழா. இலக். 282

2 ,, ,, 667

தெளிவாக, ''புலமைத் தொழிலாற் பொருந்தும் மெய்ப்பயன் மலம்அறக் களையும் மாதவ நிலையே''[1] எனக் கூறுவார். எனவே, புலமை குறிக்கோளை அடைவதற்குரிய ஒருகருவியே; அதுவே குறிக்கோளன்று. (சாதனமே; இலட்சியம் அன்று.) இச் சாதனம் இறையருளால்தான் கிடைக்கிறது என்பது உண்மைதான். ஆனால், சாதனத்தைப் பெற்றதாலேயே இலட்சியத்தை அடைந்து விட்டதாகக் கூறமுடியுமா? ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி''[2] என்றார் மணிவாசகர். இறைவன் தாளை வணங்குவதற்கே இறையருள் வேண்டும். அவ்வருள் பெற்று அவனை வணங்கிப் பிறகு வீடடைய வேண்டும். முதலில் குறிக்கப்பட்ட அருள் இலட்சியத்திற்கு உதவிபுரியும் சாதனத்தை வழங்கும் அருள்; கருவி கைகூடிய அளவிலே குறிக்கோளை எட்டிவிட்டதாகக் கூறக் கூடாது. இலட்சியம் பிறகுதான் நிறைவேறும். அதேபோல இவரால் பிற இடங்களில் குறிக்கப்பெற்ற தெய்வத்தன்மை, தெய்வத்துணை பாரதிகடன் போன்றவை கருவியாகிய புலமையை வழங்குகின்ற தெய்வானுக்கிரகம் பற்றியது. இக்கருத்து ஆன்மா உணர்விக்க உணரும் தன்மையுள்ள சதசித்துப் பொருள் என்னும் சாத்திரத்தின் அடிப்படையில் அமைந்தது.

இவ்வியல்பிலுள்ள இந்நூற்பா குறிப்பிடுவது சாதனத்தைத் தருவதாகிய இடைநிலை அருளை அன்று; தன் முழுக் கருணையையும் காட்டி ஆண்டுகொள்ளும் பேரருளை. எனவே தாம் பொருஇல் அருள், மெய் அருள் என இரண்டு அடைகள் புணர்த்தார். இறையருள்விலாசம் ஒரு சிறிதுபெற்ற உடனே முழுத்திருப்தி பெற்று நாம் குறிக்கோளை எட்டிவிட்டோம் என எண்ணி ஏமாந்துவிடக் கூடாது என்பது கருத்து. இந்நூலாசிரியர் புலமையையும், சமயத்தையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகப் பார்ப்பவர். இவர் தம் கௌமார முறைமை என்னும் சாத்திர நூலில், ''தொட்டஉபா சனைநலத்தது ஆகில் கல்வித் தோற்றம்உண்டாய்ப் பலபல்கவி சொலும்சீர் எய்தி அட்டதிக்கில் தெய்வங்கள் பலவும் ஒன்று என்று அறிகின்ற பேரறிவும் அமையும்; அப்பால் இட்டம்உற்ற

---

1 ஏழா. இலக். 312 2 திருவாசகம், சிவபுராணம்

படிஆடும் சித்தி எட்டும்; இயம்பரிய தனிவீடும் இலங்கும்; இன்றேல் துட்டன் எனும் பெயர்கொடுத்துத் துன்பம் ஊட்டிச் சுடுகனலாம் நரகினிலும் தோய்க்கும் அன்றே."[1] எனக் கூறுவதை இங்கு அவசியம் இந்நூற்பாவுடன் இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

சமயக் கருத்துடன், ஆன்ம நோக்கத்தோடு, ஆழமான சிந்தனைக்காகக் கூறப்பட்ட இந்நூற்பாப் பொருளே பொதுவான உலகியல் நெறியில் எளிதாக அடுத்த நூற்பாவில் கூறப்படுகிறது.

37. எள்ளிடைப் புலமை இசையும் முன்னம்
நெல்லிடை யாண்மை நிலவல்ஓர் தவறே.

எள்ளளவு கல்வியறிவு பெறுவதற்கு முன்பாகவே நெல் லளவு செருக்கடைவது தவிர்க்கப்பட வேண்டியதோர் தவறு ஆகும் என்றவாறு.

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்று உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்"[2] எனத் தமிழ் மூதாட்டி கூறியது மாணவரின் மன்த்திருக்க வேண்டும் என்கிறார். செருக்குத் தோன்றினால் கல்வி வேட்கைக்கு இடமில்லை; எனவே வளர்ச்சியுமில்லை. உண்மையாகக் கல்வியை விரும்புபவர் சாந்துணையும் செருக்கின்றிக் கற்பார். (679)

38. காகப் புள்ளென இனத்தொடு கலவாது
ஞாளிபோற் பகைக்கும் நாவலர் பலரே.

காகம் தன் இனத்தோடு கலந்து வாழ்வதைப் போலன்றித் தன் இனமாகிய பிற நாய்களையே வெறுத்துத் துரத்தும் நாய்க்குணம் படைத்த புலவர்கள் பலராவர் என்றவாறு.

ஒரு புலவர் ஒரு புலவரை மதிப்பதில்லை. இது கல்வியால்

---

1 கௌமார முறைமை 17 2 தனிப்பாடல்

உண்டான பெருமிதம் எனத் தவறாகவும் ஓரளவு ஏற்றுக் கொள்ளப்பட்டும் விட்டது. ஆனால், இது தவறு என்கிறார் ஆசிரியர். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலே புலவர் தொழிலாக வேண்டும். இதனை இவர், ''மிலைந்த கடம்பன்ன வியன் தமிழ்ப் பாவாணர் கலைந்து அலையாது ஒன்றுபடக் காட்டாய்''[1] என முருகப்பெருமானிடம் ஒரு வரமாகவே யாசிக்கிறார். (680)

**39. தமிழ்அறி புலவோர் தங்கள் உறவினும்**
**பொருளுடை மன்னர் ஆதியர் பொய்உறவு**
**உயர்வுஎனக் காண்பான் ஒள்ளிய பனுவற்**
**காரன் எனினும் கடைப்படும் அன்றே.**

தமிழ்ச்சுவையை உணரவல்ல அறிஞர்களின் நிலையான நட்பைக் காட்டிலும், பொருட்செல்வம் மட்டுமே பெற்று விளங்கும் அரசர், அமைச்சர், பெருஞ்செல்வர் போன்றவரின் நிலையற்ற நட்பு சிறப்புடையது எனக் கருதும் ஒருவர் சிறந்த நூலாசிரியராக விளங்கினாலும் அவர் புலவரில் இழிந்தவரே ஆவார் என்றவாறு.

மன்னர் ஆதியர் உறவு பொய்உறவு என்றதால் மற்றது மெய்உறவு என்பது பெறப்பட்டது. பொருளுடை மன்னர் ஆதியர் என்றது அறிவு வேட்கையற்ற செல்வர்களைக் குறித்தது. ''பழமை கடைப்பிடியார், கேண்மையும் பாரார் கிழமை பிறிதொன்றும் கொள்ளார் வெகுளின்மன் காதன்மை உண்டே இறைமாண்டார்க்கு? ஏதிலரும் ஆர்வலரும்இல்லை அவர்க்கு''[2] என்றபடி செல்வர்களின் செயல்கள் யாவும் தம் நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே செய்யப்படுவனவாம்.

இந்நூல் 671-ஆம் நூற்பாவில் இதே கருத்து வேறு வாய் பாட்டான் கூறப்பட்டது. (681)

1 பழனித்திருவாயிரம்-வெ. அந்தாதி 75

2 நீதிநெறி விளக்கம் 46

**40. தேறாப் புலவனைச் சிந்தை நோவப்
படுத்தும் பாவலர் பதர்அனை யாரே.**

ஓரளவு கற்றும் கல்வி நுட்பத்தை உணராத இளம்புலவர்களை மனச்சோர்வும் துன்பமும் அடையும்படித் தம் புலமையையும் செல்வாக்கையும் காட்டிவருத்துகின்றபெரும்புலவர்கள் உள்ளீடற்ற வெற்றுத் தானியம் போன்று பயனற்றவரே ஆவர் என்றவாறு.

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர்; கோகநகப் பூக்கண்டு கொட்டியும் பூவாது ஒழிந்தில"[1] என்பதற்கேற்ப நாவலர்களிலும் பல படிநிலைகளில் உள்ளவர்கள் இருக்கின்றனர். மேல்நிலையில் இருப்பவர்கள் கீழ்நிலையில் உள்ளவர்களை எந்த விதத்திலும் துன்புறுத்தக் கூடாது என்பது வற்புறுத்தப் பட்டது. (682)

**41. சீரிய புலவர்தம் செஞ்சொல் திருடிப்
பாழ்த்த புன்கவி பகர்வோர் பலரே.**

செவ்வையாக அமைந்த சிறந்த புலவர்களின் சொற்றொடர்களை அப்படியே தாம் எடுத்தாண்டு இழிவான கவியாகப் பாடுகின்ற புலவர்கள் பலர் உள்ளனர் என்றவாறு. இச் செயல் பெருந்தவறாகையால் தள்ளத்தக்கது என்பது குறிப்பு.

செஞ்சொல் என்றது செம்மையான சொற்றொடர்களைக் குறித்தது. என்னை?சொற்கள் பொதுவானவை; தொடர்களே தொடுத்தவனுக்குரியவை ஆதலின், வெண் சொல்லைத் திருடவேண்டிய அவசியமின்மையாலும், கருஞ் சொற்களைத் திருட ஆற்றலின்மையாலும் பெரும்பாலும் செஞ்சொற்களே திருடப்படும். ஒரு பெருங் கவிஞரின் சொல்லாட்சி அவர் அமைத்துள்ள இடத்தில் காரணகாரியத் தொடர்பு, ஓசை இனிமை, பொருட் சிறப்பு முதலியவற்றால் சிறந்து விளங்கும். அச் சொற்றொடரைத் திருடிப் பாடப்படும் செய்யுளில் அச்

1 தனிப்பாடல்

சிறப்புகள் அமையா. எனவே, பாழ்த்த புன்கவி எனப்பட்டது. ஒருகால் அது சிறந்த கவிதையாகவே இருப்பினும் அதன்உயிர் நிலை மற்றவன் படைப்பாக இருந்து இவரால் திருடப்பட்ட தாதலால் செய்தவரின் தன்மையைச் செயப்படுபொருளின் மேலேற்றிப் பாழ்த்த புன்கவி என்றார் எனினும் ஆம்.

இந் நூற்பாவால் விலக்கப்படுவது, ''முன்னோர் மொழி பொருளேயன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றும்''[1] நன்மரபை யன்று. பிறர் சொற்களையும் கருத்தையும் தன் னுடையனவ எனப் பொய்யாகக் கூறும் இலக்கியக்களவே இங்கு இடம்பெற்றது. (683)

42. துட்டப் புலவரைச் சோழன் வழுதி
அன்ன மன்னர்தம் அவையிடைக் கொடுபோய்
முறைப்படி வென்று மூளி ஆக்கான்
செவ்விய புலமைத் திறம்பாழ் படுமே.

தம் கல்விச் செருக்கால் இளம் புலவர்களையும் பொது மக்களையும் துன்புறுத்துகின்ற கொடிய இயல்புடைய புலவர் களைச் சோழன், பாண்டியன் போன்ற தமிழறிவும் நீதி வழு வாமையும் ஒருங்கே பெற்ற அரசர்முன் நிறுத்தி அப் புலவர் களுடன் முறைப்படி வாதிட்டு வென்று அவர்களுடைய ஆண வத்தை ஒடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாதவருடைய சிறந்த புலமையாற்றலும் குறையுடையதாகவே கருதப்படும் என்றவாறு.

இந்நூலாசிரியர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர். எனினும் தமிழ்நாட்டைத் தமிழ் மன்னர்களே ஆளவேண்டும் என்ற தன் விருப்பால் அன்றைய ஆட்சியாளர்களை மன்னர்களாகவே மதிக்கவில்லை. இது ஆங்கிலியரந்தாதி என்ற சிற்றிலக்கியத்திலும், வேறு பல இடங்களிலும் இவரால் தெளிவாக்கப்பட்டுள்ளது. பொன்முடி தரித்தவர் ஆளவேண் டிய நாட்டைத் தோல் முடி (தொப்பி) அணிந்தவர்கள் ஆட்சி

---

1 நன்னூல்

செய்வதா என நையாண்டி செய்கிறார். அவர்களுக்குத் தமிழ் அபிமானமோ, மரபைப்போற்றும் நேர்மையோ இருக்காது என்பது இவர் துணிபு. எனவேதான் சோழன் வழுதி அன்ன மன்னர் என்றார். காலவேற்றுமையால் இவர் காலத்திற்கு முன்னமேயே சேரநாட்டில் தமிழ் வழக்கொழிந்து விட்டதால் சேரமன்னரைக் கூறவில்லை.

மூளி ஆக்கான் என்பதற்குக் காதுகொய்தல் முதலாகக் கூறப்படும் உறுப்புக் குறைத்தலைப் பொருளாகக் கூறாமல் அத் துட்டப்புலவனின் அகந்தையை அழித்தல் எனப்பொருள் கூறியது இந் நூலாசிரியரின் தலைமையான தனிமுதற் கொள்கையாகிய சீவ காருணியம் பற்றியாகும். "கல்விப் பெரும் பயன் கருணை என்னும் நல்விற் பனனே நாவலர்க்கு இறையே"[1] என்பது இவர் வாக்கு. ஆணவத்தின் மொத்த வடிவமாகத் தருக்கித் திரியும் ஒருவனை முறைப்படித் தோற் கடித்து அவர் அகந்தையைக் குறைத்துவிட்டால் அது அவரை மூளியாக்கியதற்குச் சமம்தான். இது அடுத்த நூற்பாவில் கூறப்படும்.

**43. தோல்வி ஏற்றுத் தொழும்ஒரு புலவன்**
**காது கொய்தலும் காரியம் அன்றே.**

இலக்கியப் போட்டியில் தம் தோல்வியை ஒப்புக்கொண்ட ஒருவர் வணக்கம் செலுத்தியபிறகுவென்றவர் தம் வெற்றிக்கு அறிகுறியாகத் தோற்றவரின் செவியை அறுப்பதால் பயன் ஒன்றும் இல்லை என்றவாறு.

"வெண்பாத் தோல்வியில் விருதுஇழப் பதுவும் வண்ணத் தோல்வியில் வார்செவி இழப்பதும் பழமை யாம்எனல் பல்லோர் வழக்கே"[2] "பாடும் திறமையிற் பழுதுபட் டோரை மற்றவர் புடைக்கச் செய்து புகழ்வது தக்க பான்மை என்று உரைப்பது தரமே"[3] என்றெல்லாம் இவர் கூறுவதால் புலமை

1 ஏழா. இலக் 301
2 அறுவகை இலக். 763
3 அறுவகை இலக். 762

வாதத்தில் தோற்ற புலவருக்கு வென்றவர் உடல்ஊறு விளைத்தல் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபாக இருந்தது எனத் தெளிவாகிறது. இம்மரபைச் சும்மா வாயால் மட்டும் சொல்லித் திரியாமல் தாமே ஆட்படவும் துணிந்திருந்தார் என்பதனை இவர் வரலாற்றின் ஒரு நிகழ்ச்சி காட்டுகிறது. அது வருமாறு:

இவரால் இயற்றப்பட்ட சென்னை முருகன் பிள்ளைத் தமிழ் அவ்வூரில் மிகப் பெரும்புலவர்கள் கூடிய அவையில் அரங்கேற்றப்பட்டது. அந் நூலின் சப்பாணிப் பருவ ஈற்றுச் சந்தக் கவியில் "சென்னையில் வைகினை கொட்டுக சப்பாணி' என்று வருகிறது. தய்யன என்ற சந்தத்திற்கு வைகினை என்ற சொல் ஏற்புடையதன்று எனப் புலவர் ஒருவரால் மறுக்கப் பட்டது. உடனே இவர் என் சந்தம் தவறானால் என் செவிகள் போகட்டும் என்றார். "வைகி என் சொல் சந்தம் என்னை மொழிதி என்று அம் முதியோர் கேட்டார்; கடிது தய்ய என்றேன்; அன்று என்றார்; அன்று ஆகில் முன்னாள் கலசம் ஈன்ற அடிகள் விதிப்படி பல்லோர் அநுட்டானப்படி செவிபோம் அன்றோ?"[1] என இவரே தம் சுயசரிதை யாகிய குருபர தத்துவத்தில் இந் நிகழ்ச்சியைக் காட்டுகிறார். இவ்வாதத்தின் விரிவையும் முடிவையும் அந்நூல் சென்னைச் சருக்கத்தில் காணலாம்.

"காதுகொய்தலும் காரியமன்றே" என்றகருத்து இவரால் இயற்றப் பெற்ற அருணகிரிநாதர் புராணத்தில் அவர் வில்லி புத்தூராழ்வாருடன் வாதிட்டபின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுங்கால், "மன்னன்முதற் பலரும், 'இவன் காதுகொய்தல் வழக்கு' என்றார்; அருணகிரி வண்பேர் வாய்ந்தோன், 'என்னபயன் கொய்ததனால்? 'கொய்யா விட்டால் யான் கொடுத்த காதுஎனப்பேர் இருக்கும்' என்றார்"[2] என்று அருணகிரிநாதர் கூற்றாக விளக்கப்படுகிறது. (685)

1 குருபர. சென்னைச். 16 2 அருணகிரி. வில்லி.37

**44. முற்றும் பொறுத்தலும், மூக்கிற் கோபம்
வைத்துத் திரிதலும் வண்டமிழ்ப் புலவர்க்கு
ஆய தன்மைஎன்று அறையஒண் ணாதே.**

மற்றவர்களின் பழிச்சொற்கள் அனைத்தையும், எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் சற்றும் வெகுளியின்றித் தாங்கிக் கொள்வதுதான் தமிழ்ப்புலவர்களின் இயல்பு எனலாகாது. அவ்வாறே அடுத்தவர் அனைவர்பாலும் எப்போதும் சினத்தைக் காட்டுகின்ற முன்கோபத்தன்மையும் பண்பன்று என்றவாறு.

புலவர்கள் தம் சினத்தை இடம், பொருள், ஏவல் அறிந்து காட்டவேண்டும் என்பது கருத்து. சினம் தவறுகண்ட இடத்தில் இயல்பாகத் தோன்றும். பிறகுதான் அது சான்றாண்மையால் பொறுக்கப்படும். இந்நூற்பாவில் அம்முறையில் கூறாமல் முறைமாற்றிப் பொறுத்தலை முன்னும், சினத்தலை அடுத்தும் கூறினார். இதனால், பொறுத்தலே சிறந்தது; ஆனாலும் அனைத்தையும் வரையறையின்றித் தாங்கிக் கொண்டே இருக்கவேண்டியதில்லை என்ற கருத்து பெறப்படுகிறது. (686)

**45. காமக் கடலே கதிஎனக் கருதிப்
போவார் புலமையிற் புண்ணியம் இன்றே.**

தம் தமிழ்ப் புலமையை வெளிக்காட்டக் காமச்சுவையை மிக விரித்தும், பச்சையாகவும் கொச்சையாகவும் பாடுதலே சிறந்த நெறியாகும் என நம்பி, அவ்வழியில் ஈடுபடுவோரின் புலமையால் அவர்களுக்கோ, நாட்டுக்கோ, மொழிக்கோசற்றும் ஆக்கபூர்வமான பயன் இல்லவே இல்லை என்றவாறு.

ஈற்றிலுள்ள ஏகாரத்தைப் புண்ணியத்துடன் கூட்டிப் புண்ணியமே இன்று எனப் பொருள்கொள்க. இவ்வேகாரம் ஈற்றசை அன்று.

இந் நூலாசிரியர் காலத்தும் அதற்குச் சற்று முன்னும் பின்னும் குறுநில மன்னர், நிலக்கிழார்கள், பெருஞ்செல்வர்கள்

ஆகியோர்மீது எழுந்த-அகத்துறை என்னும் போர்வையில் அமைந்த - சிற்றிலக்கியங்களையும் தனிப்பாடல்களையும் பார்த்தால் இந் நூற்பாவின் இன்றியமையாமை தெற்றென விளங்கும். விரித்திலேன். மகாகவி பாரதியாரும் தன் சின்னச் சங்கரன் கதையில் இவ் வவல நிலையைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். (687)

**46. தெய்வப் புகழும் சிறப்பும் செந்தமிழ்**
**பொருத்தும்என்று உணராப் புலவர்புல் லியரே.**

அழிவற்றதும் புனிதமானதும் ஆகிய கீர்த்தியையும், பெறுதற்கரிய வீட்டின்பத்தையும் தமிழ்ப் புலமையால் பெறலாகும் என்பதைப் புரிந்துகொள்ளாத நாவலர்கள் இழிந்தவரே ஆவர் என்றவாறு.

"இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாக இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி"[1] எனப் புகழுக்கு விளக்கம் கூறுவார் பரிமேலழகர். எனவே, புகழ் என்ற சொல் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கி நின்றது. அப்புகழ் வீடடைவதற்குரிய முயற்சியையும் உடையதாயிருப்பதைக் காட்டத் தெய்வப்புகழ் என்றார். எனவே, வீடும் அடங்கிய நான்கையும் உள்ளடக்கியவாறாயிற்று. சிறப்பு என்றது வீடுபேற்றைக் குறித்தது- "சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு"[2] என்புழிப் போல. எனவே, தமிழ்க்கல்வி அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களையும் அளிக்கும் சிறந்த சாதனம் என்பது பெறப்பட்டது.

இதனை உணராமல் பொருளீட்டவும், அதனால் இன்பந் துய்க்கவும் மாத்திரம் தமிழைப் பயன்படுத்துவோர் புல்லியர் என இகழப்பட்டனர். கல்வியால் வீடு பெறுதலை, "எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான் மொழித்திறத்தின்

---

1 திருக்குறள். பரிமே. புகழ் அதிகாரத்தோற்றுவாய்
2 திருக்குறள் 31

முட்டறுப்பான் ஆகும்; மொழித்திறத்தின் முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருள்உணர்ந்து கட்டறுத்து வீடு பெறும்''[1] என்றதனாலும் அறியலாம். (688)

**47. மாய்வார்ப் போற்றி மகிழும் பாவலோர்
வன்னச் சிவிகையில், வையகம் படைத்தோற்
கழறும் பாவலர் கையோடு உயர்வே.**

சின்னாள்இருந்து இறந்தொழிகின்ற மனிதர்களை அவர் தரும் பரிசில்களுக்காகப் புகழ்ந்து பாடி, அதனால் பெரும் வரிசைகளைப் பெற்றுக் களிக்கின்ற கவிஞர்களின் செல்வச் செழிப்பைக் காட்டிலும், தனு, கரண, புவன, போகங்களைப் படைத்தளித்த பரம்பொருளின் வள்ளன்மையைப் போற்றும் புலவரின் வறுமைநிலையே பாராட்டிற்குரியது என்றவாறு.

வன்னச் சிவிகையும், இரக்கும் கலமாகிய கையோடும் முறையே செல்வ, வறுமை நிலைகளைக் குறித்தன. மாய்வாரைப் போற்றுதலின் காரணமும், மகிழ்ச்சியின் காரணமும் உரையிற் பெய்து கூறப்பட்டன. வையகம்என்றது தனு, கரண, புவன,போகங்களுக்கும் உபலக்கணம்.

''பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்''[2] ''தருக்காவலா என்று புல்லரைப்பாடி தனவிலை மாதருக்கு ஆவலாய் மயிலே குயிலே என்று தாமதர் ஆய் தருக்கா அலாநெறிக்கே திரிவீர் கவி சாற்றுமின்-பத் தருக்கா அலாயுதன் பின்தோன்று அரங்கர் பொற்றாள் இணைக்கே''[3] என்பன போன்ற ஆன்றோர் மொழிகளை நினைந்து கூறப்பட்டது இந்நூற்பா. மனிதர்களைப் புகழ்ந்து பாடாமையையே பல புலவர்கள் சிறப்புத் தன்மையாகக் கருதினர் என்பதை,

---

1 தொல். பாயிரவிருத்தி மேற்கோள் முனிவர்

2 தேவா. சுந்தரர். திருப்புகலூர்-1

3 திருவரங்கத்தந்தாதி 6

"மனிதக் கவிமொழி யாமங்கை வாழ்மண வாளவள்ளல்புனிதக் கவிகொண்டு மாலை செய்தான்"[1] என்னும் ஒரு சிறப்புப் பாயிரத்தாலும் அறியலாம். (689)

48. கொல்லல்,ஊன் சமைத்தல் ஆதிய விரித்துக்
கழறுங் துணிவுடைக் கவிப்புல வோரைப்
பேயர்என்று உலகம் பெரிதுஇகழ்ந் திடுமே.

உயிர்களைக் கொலை செய்தல், மாமிசத்தை உணவாகத் தயாரித்தல் போன்ற இழிசெயல்களை மிகவும் பெருக்கிப் பாடுகின்ற, இரக்கம் இல்லாத புலவர்களை மேலோர் பேய்க் குணம் வாய்ந்தவர்கள் எனப் பழிப்பர் என்றவாறு.

நூல்களின் தலையான நோக்கம் மக்களுக்கு நன்னெறி காட்டுதலேயாம். அங்ஙனமிருக்க "ஒன்றாக நல்லது கொல் லாமை" [2] "செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார் உயிரிற் றலைப்பிரிந்த ஊன்"[3] என்னும் மறைமொழிகளைப் புறக்கணித்து நூல்செய்வோரை உயர்ந்தவர்கள் இழித்துக் கூறுவது இயல்பே. "கொலைவினையர் ஆகிய மாக்கள் புலை வினையர்"[4] என்றார் வள்ளுவப் பெருந்தகை. இவர் அப்புலை வினையைச் சிறப்பாக வருணித்துப் பாடுபவர்களைப் பேயர் என்கிறார். அடிப்படை ஒன்றே.

இந் நூற்பா பரணிப்பிரபந்தத்தை எண்ணிச் செய்திருக்க லாம் எனத் தோன்றுகிறது. ஏனெனில் அதில் தான் பேய்கள் போர்க்களத்தில் ஊன் சமைத்தல் ஓர் உறுப்பாகவே இடம் பெற்றுள்ளது. பலவகையான பிரபந்தங்களையும் இயற்றியுள்ள இவ்வாசிரியர் ஒரு பரணி கூட இயற்றவில்லை என்பதையும் இங்கு இணைத்துப் பார்க்கவேண்டும்.

திருமுருகாற்றுப்படையில், "மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக் குருதியொடு விரைஇய தூவெள் அரிசி சில்பலிச்

---

1 திருவரங்கத்து மாலை சிறப்புப்பாயிரம் 3 திருக்குறள் 257
2 திருக்குறள் 323 4 ,, 329

செய்து"[1] எனக் கூறியதையே இவர் "பொன்சொர்க்க நாடு புரந்தோய்! செந்நீர்ப்புலைப் பூசைபுகல் வன்சொற் கவிக்கும் மலையிடித்தாய்"[2] என்பது போல நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் சற்று இழிவாகக் கூறியுள்ளார். கந்தபுராணத்தைப் பற்றியும் பிறர் கூற்றாக, "ஈரமிலர் ஊன் சமைக்கும் இழிவைப் பெருக்கி இசைத்தான்" என்கிறார். (690)

**49. புகலரும் பனுவற் பொற்பணம் கருதி**
**விற்கத் துணிவது மேம்பாடு அன்றே.**

இயற்றுதற்கரியநூலைஇயற்றி அதைப் பணத்திற்குவிலைப் பொருளாக்குதல் சிறப்புடைய செயல் ஆகாது என்றவாறு.

இந் நூற்பாவும் செல்வர்கள் தரும் பரிசிலை உத்தேசித்து, "கல்லாத வொருவனைநான் கற்றாய் என்றேன்; காடறியும் மறவனை நாடு ஆள்வாய் என்றேன்; பொல்லாத வொருவனை நான் நல்லாய் என்றேன்; போர்முகத்தை அறியானைப் புலி யேறு என்றேன்; மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை; வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்" என்றது போல மாய்வார்ப் போற்றும்செயலை விலக்கியதாகும். புலமை விலை மதிப்பற்றது. ஆதலால், அதை விலை பேசலாகாது. (691)

**50. அருமை அறியான் அவையிடைப் புகுந்து**
**பெருமை பாராட்டலும் ஏனையும் பிழையே.**

கல்வியின் அருமையையும், கசடறக்கற்ற தம் அருமையையும் உணரமாட்டாத ஒரு செல்வன் முன்சென்று தம் பெருமையைக் கூறுவதும், அவன் அறிந்து பாராட்டிப் பரிசில் வழங்குவான் என எதிர்பார்த்தலும் தவறாகும் என்றவாறு.

---

1 முருகு 232 - 234

2 பழனித்திருவாயிரம் - அலங்.58

"கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம் குற்றம் தமதே; பிறிது அன்று"[1] கல்லா அறிவின் கயவர்பால், கற்றுணர்ந்த நல்லார் தமதுகனம் நண்ணாரே"[2] என்றெல்லாம் ஆன்றோர் கூறியதுமிது.

தமிழ்ப் புலவர்கள் செல்வர்களைப் புகழ்ந்து பாடி அவர்களிடம் கைநீட்டிப் பரிசில் பெறுவதை இவர் இழிவாகக் கருதுகிறார். எனவேதான், அதனை விரித்துக் கூறாமல் ஏனையும் என்றார். சேக்கிழார் பெருமான் முத்தநாதன் செயலைக் கூறுமிடத்து, "பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்தவப் பரிசே செய்ய"[3] – என்பதைப் போன்ற மரபு இது.

இவருடைய இக்கொள்கை புலவர் புராணத்தில் படிக்காசுப் புலவரைப் பற்றிக் கூறுமிடத்து, "தில்லை யம்பதிச் சிவன்படிக் காசளித் திட்டதாச் சிலர்சொல்வார்; எல்லை இன்றிய வூர் தொறும் அஃதுஇரந்தனன் என்பார் சிலர்; இன்னோன் சொல்லை வேட்டு அரன் அளித்திடில் காயலூர்த் துலுக்கன் ஆதியர்ப்பாடும் தொல்லை யன்னவற் றொடர்வுறாது எனத் தெளி தூயவர் சிலர்தாமே"[4] என்றதாலும் வேறு பற்பல பாடல்களாலும் விளங்குகிறது. (692)

**51. கால வேற்றுமை கருதாப் புலவன்**
**சீலனே எனினும் சிறுமை யினனே.**

மாறிவருகின்ற காலப்போக்கின் இயல்பைச் சிந்தித்துப் பார்க்காத கவிஞர் சிறப்புடையவனாகவே இருந்த போதிலும் உலகின் அன்றைய சிந்தனையை உணராதவர் என்னும் குறையை உடையவர் ஆகிறார் என்றவாறு.

உலகில் காலம் செல்லச்செல்ல புதிய கருத்துகள் தோன்று கின்றன. இதன் விளைவாகப் பழைய மரபுகள் தாமே மாறு கின்றன. அல்லது வலிய மாற்றப் பெறுகின்றன. இத்தன்மை

---

1 நீதிநெறி விளக்கம் 24
2 நன்னெறி 25
3 பெரிய. மெய்ப்பொருள். 15
4 புலவர். குமரகுரு. 39

தவிர்க்க முடியாத இயற்கை நியதி. இதனைப் புலவர் உணர வேண்டும். எனவேதான் நன்னூலாரும், "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுஅல; கால வகையினான" [1] என்றார். இவரும் யாப்பைப்பற்றி ஓரிடத்தில், "பழையயாப்பு எனினும், பண்பு இலது ஆயிற் களையவும் புதிய கட்டே ஆயினும் இனியது ஆயின் ஏற்கவும் துணியும் கல்வி யாளர்என் கண்அனை யாரே"[2] என்கிறார். இதனை இலக்கண இலக்கிய மரபு பற்றிய அனைத்திற்கும் பொதுவாகவே கொள்ளலாம். (693)

52. காரணம் காரியம் காணாப் புலமையைப்
பூரணம் என்னப் புகலவொண் ணாதே.

(உலகில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் சங்கிலித் தொடர் போலக் காரண, காரியத் தொடர்புடையவை. பல சமயங்களில் அவை எளிதில் விளங்காது எனினும்) நிகழ்ச்சி களினுடைய காரண, காரியத்தொடர்பை அறியாவொருவ ரின் கல்வியாற்றலை முழுமை பெற்றதாகக் கூற முடியாது என்றவாறு.

பொதுவாக நிகழ்ச்சிகளின் பருப்பொருளான காரணங் களை அனைவரும் எளிதில் உணர்வர்; ஓரளவு நுட்பமான காரணங்களை அறிஞர்கள் அறிவர். மிகமிக நுட்பமான காரணங்களையும் அறிவதே முழுப்புலமையாகும் என்கிறார். அத்தன்மை கைகூடும்வரையில் கல்வியில் திருப்தி ஏற்பட்டு விடக்கூடாது என்பது கருத்து.

இந் நூற்பாவிற்கு வேறொரு வகையாகவும் பொருள் உரைக்கப்படும். இவ்வுலகில் உள்ள பருப்பொருள்கள் யாவும் காரியங்கள் என்றும், இவற்றின் அமைப்பிற்கான காரணங்கள் மண், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐம் பூதங்களேயாம் எனவும் அறியாதவருடைய புலமையை முழுமை பெற்றதாகக் கூறமுடியாது என்றவாறு. இவ்வுரை இவருடைய "காரணமாம்

1 நன்னூல் 462 2 ஏழாம் இலக். 281

பூதமைந்தும் காரியமாம் பௌதிகமும் சீர்அருள்சித்து ஆடும் தினம்''[1] என்னும் கொள்கைக் கிணங்கக் கூறப்பட்டது.

பருப்பொருள்கள் பூதங்களின் சேர்க்கைகளால் ஆனவை எனில் அவை பகுதிகளை உடையன - அதாவது கண்டப் பொருள் என்பது ஒருதலை. எந்த ஒன்றுபகுதிகளால் ஆயதோ அது நிலையற்றது; ஒரு நாளின்றேனும் ஒரு நாள் அழிந்து விடும் என்பது தத்துவநூற் கொள்கை.

நிலையாமையை உணராதவருடைய புலமை முழுப் புலமையன்று என்பது இந்த இரண்டாவது பொருள்கோளின் கருத்து. (694)

**53. கொண்ட துறையினைக் கோதுபடக் கூறின்**
**மண்டலத் தாரும் மதியார் அன்றே.**

தாம் பாடத் தொடங்கிய துறையைத் தவறாகப் பாடு வாராகில் இவ்வுலகில் யாருமே அவரைப் போற்ற மாட்டார் என்றவாறு.

அகத்துறையோ புறத்துறையோ எதுவாக இருப்பினும் அல்லது இலக்கணம், தத்துவம் முதலிய அறிவுத்துறைகளில் எதுவாக இருப்பினும் சொல்ல வந்ததைக் குற்றமில்லாமலும் தெளிவாகவும் சொல்லவேண்டும். அதில் தவறு இருந்தால் அறிஞர்கள் மட்டுமல்ல - பாமரர்களும் மதிக்கமாட்டார்கள் என்பது கருத்து. மண்டலத்து ஆரும் மதியார் எனவும், மண்டலத்தாரும் மதியார் எனவும் இரட்டுற மொழிதலாகக் கொள்க. பின்னது ஆகுபெயராகி மிகுதிபற்றிப் பாமரரை உணர்த்திற்று. அன்றே- ஈற்றசை. (695)

**54. அருட்பே ராளருக்கு அஞ்சாப் புலமை**
**மருட்சி யினதுஎன வையப் படுமே.**

திருவருள் வலிமை பெற்றுள்ள பெரியவர்களுக்குக் கூட

---

1 மநுநெறித். 1145

பயப்படாத புலமைச்செருக்கு அறிவுமயக்கத்தின் விளைவாகக் கருதப்பட்டு நல்லோரால் பழிக்கப்படும் என்றவாறு.

கல்வியும், வாக்கு வன்மையும் சற்றும் சந்தேகமில்லாமல் மிக உயர்ந்த செல்வங்களே ஆகும் என்றாலும் திருவருளை மாதவத்தால் பெற்றவர்களின் ஏற்றம் இவரினும் மேம்பட்டதாகும். எனவே, அருளாளரிடத்தில் புலமையோர் பயப்படுதலே முறையாகும். அவர்பால் அச்சமின்மை "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்"[1] என்பதற்கேற்ப அறிவின்மையேயாகும். அதுவே மருட்சி எனப்பட்டது. வசைகவி யாண்டானைப்பற்றிக் கூறும்போது இவர், "வாக்குவலி வெகுவாகப் பெற்றுஅரிய வண்ணம்எட்டும் வழங்கு வார்க்கும் ஆக்குவதும் அழிப்பதுவும் பெறல்அரிது என்று உணர்ந்தோரே ஆண்டான் சொல்போய்த் தாக்கும்அதிசயம்அறிவார்; தவம்சிறிதும் முயலாராய்த் தருக்கம் கற்றுப் போக்குவரவு உணராமல் புலம்பும்இளங் கவிஞர் உளம் புகுந்தி டாதே"[2] என்றுரைப்பது இவண் நினைக்கற்பாலதாம்.
(696)

**55. தவ்வா மெய்ப்புகழ் தலைக்கொளும் புலமைக்கு ஒவ்வா நெறியினை உறுத்தல்ஓர் தவறே.**

குறைவின்றி அனைவராலும் போற்றப்படுதலைப் பெற விரும்பும் புலவன் ஒருவனுக்கு இடத்தாலும், காலத்தாலும் பொருந்தாததும், பலராலும் ஏற்றுக் கொள்ளமுடியாததும் ஆகிய வழிகளை மிகவும் வற்புறுத்திக் கூறுவது பெரிய தவறாக முடியும் என்றவாறு.

ஒவ்வாநெறி என்பது விரித்துரைக்கப்பட்டது. புலவனின் செயலைப் புலமையின் மேலேற்றிக் கூறியது உபசார வழக்கு. ஒருவனின் அறிவுரைகளைக் கடைப்பிடித்தல் இயலாததாயின் யாரும் அவன் மொழிகளுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். அவன் உரைகள் பயனில் கூற்றாக முடியும். எனவே, புகழ்பெற விரும்புமொருவன் மக்களால் எளிதில் கடைப்பிடிக்கக் கூடியன வற்றையே அவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு

1 குறள் 427 2. புலவர்.வசை.69

இனிமையாகக் கூறவேண்டும் என்பது கருத்து. இனிமையை உறுத்தல் என்னும் சொல்லாற்றலாற் பெற்றாம்.

இனி ஒவ்வாநெறி என்பதற்கு நம் பண்பாட்டிற் கியையாத நெறிஎனில் அமையாதோ எனில் பண்பாட்டிற்குப் பொருந்தா தனவற்றைக் கூறுவது புலமையே அன்மையின் அமையாதென்க.

(697)

56. வீணே விரிப்பினும் விரித்தலைச் சுருக்கினும்
மாணார் புலவோர் மதியார் அன்றே.

சுருக்கமாகச் சொல்லத் தக்கனவற்றைப் பயனின்றி மிக நீட்டி விரித்துக் கூறினாலும், விளக்கமாகக் கூறவேண்டிய இடங்களில் தெளிவு ஏற்படாத வண்ணம் மிகவும் சுருக்கமாகக் கூறினாலும் கல்விச் சிறப்பையுடைய அறிஞர்கள் போற்ற மாட்டார்கள் என்றவாறு.

வீணே விரிப்பின் மிகைபடக் கூறல், வெற்றெனத் தொடுத்தல், நின்று பயனின்மை ஆகிய குற்றங்களுக்கு இடமாகும். விரித்தலைச் சுருக்கின் குன்றக் கூறல், மயங்கவைத்தல் என்ற குற்றங்கள் நேரும். எனவே, இக் குற்றங்களை நீக்கிச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், விழுமியது பயத்தல் என்னும் குணங்களை உடையனவாக ஏற்ற அளவறிந்து உரைக்க வேண்டும் என்பது கருத்து.

கீழ்க்கண்ட இவர் வாக்குகள் இங்கே ஒப்பிட்டுப்பார்த்தற் குரியனவாம். "இருந்ததற்கு ஒருபாட்டு அப்பால் எழுந்ததற்கு ஒருபாட்டு ஓதிப் பெருந்தொகைப் படுத்து வாரைப் பேதையர் வியந்து கொள்வார்; மருந்துறழ் கவியொன் றாற்பல வான் பொருள் தெளிவாச் சொல்லும் திருந்தியற் பாரதச்சீர் தெரிப வர் சிலர் தாம் அன்றே."1 "தாரகன் தான் கந்தன் தன்பால் உரைத்தற்றுறைத்தான்; வாரம்உடையாள் ஒரு பெண்மகளுக்கு அழுகை வளர்த்தான்; ஈரம்இலர் ஊன்சமைக்கும் இழிவைப் பெருக்கி இசைத்தான்: ஆரமலையோன் அருள்பெற்றதனைக்

1 புலவர். வில்லி. 17

குறுக்கியறைந்தான்"[1] "சுருக்கிடில் விளங்கி டாது; துணிவொடு செல்லு மட்டும் பெருக்கிடில் இந்நூல் சூடும் பெயரினுக்கு இசைவுறாது ஆங்கு இருக்கவும் இடையிற் காதை யீரிரண்டு அடக்கிச் சொற்றேம் செருக்குறு புலவர் பல்லோர் தெளிவுறச் செப்ப லாலே"[2] "கற்பனை மொழிந்தனர்கள் கவிப்புலவர் பல்லோர் அம்முறை விரித்திடல் அடுத்தது அல என்றே இம் முறை சுருக்கினம்"[3]. இதுவரை எடுத்துக் காட்டப்பெற்ற மேற் கோள்களால் இவ்வாசிரியர் எத்தகைய செய்திகளை விரித்துக் கூறவேண்டும்; எத்தகையனவற்றை விரிக்கக்கூடாது எனக் கருதுகிறார் என்பதை ஓரளவு அறிந்து கொள்ளலாம். (698)

**57. வெளிறப் பாடலும் வேறுஒரு கலையென**
**இருளக் கூறலும் இடத்தால் இசையுமே.**

மிக வெள்ளையான வழக்குமொழிச் சொற்களைப் பயன் படுத்தி எளிமை மிக்க கவிதைகளை இயற்றுதல், கேட்பவர் இது தமிழ்தானா அல்லது வேற்று மொழியா எனச் சந்தேகப் படுமளவு கருஞ்சொற்களால் பாப்புனைதல் ஆகிய இரண்டுமே சூழ்நிலைக்கு ஏற்பப் பொருத்த மானவையே யாகும் என்றவாறு.

"என்னால் இனிச்சகிப்பது எப்படியப் பாவருத்தம்; உன்னால் விலக்குவதற்கு ஒண்ணாதோ? - பொன்னாடு காத்தாயே! தென்பழனிக் கந்தா அடியர் இடர் நீத்தாயே நெஞ்சகத்தில் நின்று"[4] இது மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் வெண்பாக்களுள் ஒன்று. இது ஓர் அந்தாதியைச் சேர்ந்த தாயினும் தன்னுணர்ச்சிப்பாடலாக அமைந்ததால் மிகவெள்ளை யாகஅமைந்துள்ளது. இதே கவிஞர் ஒரு சீட்டுக்கவியைக் கீழ்க் கண்டவாறு தொடங்குகிறார். "சருவபரி பூர்ணதண் டாயுதக் குமரகுரு சாமிகருணாவிலாசம் சரசுவதி கடாட்சப்ரசன்ன

1 புலவர். கச்சியப்பர். 6

2 அருணகிரிநாதர் புராணம் 93

3 அருணகிரிநாதர் புராணம் 20, 21

4 பழனி வெண்பாவந்தாதி 36

வித்யாப்ரபல சாமர்த்ய வித்வசரபம் தர்க்கமிடு வோர்பற்க ளைப்பொடிப் பொடியாத் தகர்க்கின்ற வஜ்ராயுதம் சண்டாள ரைப்பிளக் குங்கண்ட கோடாலி சார்ந்தவர்க் கொருகற்பகம் ஷட்சாஸ்த்ர பொக்கிஷம் காவ்யக் களஞ்சியம் தவவிஸ்வகுல சிரேஷ்டம் சம்ப்ரம வளம்பரவு தென்பழனி யம்பதித ழைக்கவரு சந்த்ரோதயம் தளசேது பதிசமஸ் தானமுதல் எங்குஞ் சபாஷென மதித்த ரத்னம் சற்சனர்கள் புகழ் மாம்பழக்கவிச் சிங்கத் தமிழ்ச்சக்கர வர்த்திநிருபம்''[1] இது ஒரு பெருநிலக் கிழாருக்குத் தம் கல்விப் பெருமையைக் காட்டி வரைந்த கடிதப் பாடலின் முதலடியாகும். இதில் மிகப்பயின்று வந்துள்ள வடமொழிச் சொற்களால் இது தமிழ்ச் செய்யுளா அல்லது சமஸ்கிருத ஸ்லோகமா என்ற ஐயத்தை உண்டாக்குகிறது. எனினும், இது இவர் தம் இருமொழிப் புலமையையும் வெளிப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தால் இடமறிந்து இயற்றி யதால் கொள்ளப்பட வேண்டியதே ஆகும் எனலாம்.

பொதுவாகக் கூறுமிடத்து உணர்ச்சிக்கு முதன்மை தரும் கவிதைகள் சற்று எளிய நடையை உடையனவாகவும், புலமைத் திறத்தைக் காட்ட எழும் செய்யுள்கள் பிறரால் எளிதில் புரிந்துகொள்ள முடியாதவாறும் இருக்கலாம் என்று கொள்ள லாம். (699)

**58. தன்னுடைச் சமயத் தலைவனைப் பரவா**
**நூல்வழிப் புலமை நுவல்கையும் தவறே.**

ஒரு புலவன் தன் மாணவனுக்குக் கல்வி கற்பிக்கும்போது தாம் சார்ந்துள்ள சமயத்தின் தெய்வத்தையும் குருவையும் போற்றாத பிற சமய நூல்களைக் கருவியாகக் கொண்டு கற்பித்தல் பிழையாகும் என்றவாறு.

சமயத்தலைவன் என்பது அச் சமயத்தின் முதன்மைத் தெய்வம்,சமயாசாரியர் என்னும் இருபொருளையும் தருகிறது. வேற்றுச் சமய நூலில் சில இடங்களில் இப்புலவரின் வழிபடு கடவுளோ அல்லது சமயாசாரியர்களோ அந்நூல் முறைக்கேற்ப

1 தனிப்பாடல் 89

இழித்துக் கூறப்பட்டிருக்கலாம். அம்மொழிகள் இவர் உள்ளத்தில் அந் நூலாசிரியரின்மீது சினத்தை உண்டாக்க லாம். இதன் விளைவாகத் தம் மாணவனுக்கு அந்நூலை ஆழமாகக் கற்பிக்கமாட்டார். அந்நூலில் குற்றமுங் காண்பார். எனவே பிறசமய நூல்வழித் தமிழ் கற்பித்தால் உள்ளார்ந்த ஈடுபாடு உண்டாகாமையின் அதனை விலக்குக என்றார்.

இந்நூலாசிரியருக்குச் சமயக்காழ்ப்புணர்ச்சி சற்றும் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே. ஆனால், ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்த உயர்நிலை எய்துதல் மிக மிக அரிது. சிவப்பிரகாசரையும், பிள்ளைப் பெருமாளையங்காரையுமே பழித்துப் பேசும் வைணவ சைவப் பெரும்புலவர்களை இன்றும் காண்கிறோம். தமிழ்க் கல்வியில் சமயக்காழ்ப்பு புகுந்து அதனைக் கெடுத்துவிடக் கூடாது என்னும் கருத்தில் எழுந்தது இந் நூற்பா. (700)

**59. பொதுநூற் சொல்லையும் போற்றுநர் மொழியையும்
சதுரல வேஎனச் சாற்றலோர் தவறே.**

எல்லோராலும் சிறப்புடையதாக ஒருமித்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நூலின் கருத்துகளையும், அந் நூலின் சிறப்பை யெடுத்துப் பாராட்டுபவர்களின் கூற்றுகளையும் அறிவற்றவை எனக்கூறுவது பெரும் தவறாகும் என்றவாறு.

எடுத்துக்காட்டாகத் திருக்குறள் அனைவராலும் மிகச் சிறந்த அறிவு நூலாகக் காலங்காலமாக ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒன்று. ஒரு புலவன் ஏதோ ஓர் காரணத்தால் தனக்கு அதுபிடிக்கவில்லை என்பதால் அந்நூற் கருத்துகள் தவறானவை என்றும், அதனைப் புகழ்ந்துள்ளவர்கள் அறிவிலிகள் என்றும் கூறினால் எப்படி இருக்கும்? அச்செயல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே இந் நூற்பாக் கருத்து. "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப் படும்"[1] ஆதலின் இங்ஙனம் அறிவுறுத்தப்படுகிறது. (701)

1 திருக்குறள் 580

**60. பொருள்நயம் தோன்றும் பொருட்டில் பொதுநூல்
கலைஉணர் மாக்கள் கழறும் காதை
பற்றிப் பேசப் படாதுஎனல் பழுதே.**

(குறித்த ஒரு சமயம் அல்லது நாடு என அமையாது) அனைவருக்கும் பொதுவாகப் பயன்படவேண்டும் என்கின்ற கருத்துடன் இயற்றப்படுகின்ற நூலில் மொழியறிவுள்ள பாமரர்களும் கூறுகின்ற பழைய வரலாறுகள் இடம்பெறக் கூடாது என்பது ஒரு தவறான கருத்தாகும் என்றவாறு.

மாக்கள் என்புழிச் சிறப்பும்மை தொக்கது. ஏதாவதோர் கதையைக் கூறினால் அந் நூல் சமயத்தாலும் இடத்தாலும் ஒரு சாராருக்கே உரியதாக ஆகித் தன் பொதுத்தன்மையை இழந்துவிடும் என்னும் கருத்துக்கு மறுப்பாக எழுந்தது இந் நூற்பா. பொருள் விளக்கத்திற்காக அனைவரும் நன்கு அறிந்த செய்திகளை எடுத்துக் காட்டுவதாலேயே ஒரு நூல் நடுநிலைமையற்று ஒரு சார்புடையதாக ஆகிவிடாது. எடுத்துக்காட்டாகச் செங்கோன்மைக்கு மநுநீதிச் சோழனை எடுத்துக்காட்டும் ஒரு நூல் சேர நாட்டில் பயன்தராமற் போய்விடுமா? அடியார்கள் இறைவனின் திருநாமத்தை நாத் தழும்பேறச் சொல்லிச்சொல்லி மகிழ்வார்கள் என்னும் பொதுக் கருத்தை ஏதாவது ஓரடியாரின் நிலையைக் காட்டி விளக்கினால் பிற சமயத்தார் மறுத்தல் சரியா? மாறாக அனைவரும் அறிந்த கதையைக் கொண்டு பொருள்விளக்கம் செய்யப்பட்டிருப்பதாலேயே அது அனைவராலும் எளிதில் உணரப்பட்டுச் சிறந்த பொதுநூலாக மிளிரும். (702)

**61. சேவித்து ஒருவர்பின் செல்வார் புலமையில்
பாடல்விற்று அலைவார் பரிசுகேடு இனிதே.**

ஒரு செல்வனுக்கே சற்றேறக்குறைய அடிமைப்பட்டு அவன் கருத்தின் வண்ணமே ஒழுகுகின்ற ஒரு கவிஞனின் புலமையை விடப் பற்பல தலைவர்களின்மீது பாடல்களைப் புனைந்து அவர்கள் தரும் பரிசில்களால் வாழ்க்கை நடத்தும் இரவலரின் இழிவும் உயர்ந்ததே ஆகும் என்றவாறு.

முன் பதினைந்தாம் நூற்பாவில் "புகலரும் பனுவற் பொற்பணங் கருதி விற்கத் துணிவது மேம்பாடு அன்றே" என்றவர் இங்கு அதனினும் இழிந்ததாக மற்றோர் நிலையைச் சுட்டுகிறார். ஓர் அரசன், சிற்றரசன் அல்லது செல்வனையே எப்போதும் சார்ந்திருந்து அவன் விருப்பு, வெறுப்புகளையே தம்முடையவை யாக்கிக் கொண்டும், அவன் செயல்களுக் கெல்லாம் எவ்வாறேனும் நியாயம் கற்பித்துக்கொண்டும் சிலர் இருப்பர். இந் நிலையையே "சேவித்து ஒருவர்பின் செல்வார்" என்றார். இவர்களை அச் செல்வரின் உடைமைகளில் ஒன்றாகக் கூறினும் தவறாகாது. இவர்களுக்குச் சுயசிந்தனை, சுயமரியாதை எதுவுமே இல்லை. தமக்கு உணவளிப்பவனை மகிழ்விப்பது ஒன்றே இவர்களது தலையான குறிக்கோள். இவர் களுக்குப் பெரும்பாலும் விடுதலையே இல்லை.

இதற்கு மாறாகப் புலமை வியாபாரிகள் எந்நாளும் ஒரு செல்வனுக்கே ஆட்பட்டிருப்பதில்லை. தம் சரக்கிற்கு மதிப்பு இருக்கும்வரையில் ஓரிடத்தில் இருப்பர்; சற்று மதிப்புக் குறைந்தால் அங்காடியை மாற்றிவிடுவர். எனவே, இவர் களுக்குச் சற்றுப் பரந்த கண்ணோட்டமும், சுயமரியாதையும் இருக்கும். இந்நிலையில் சுதந்திரம் மிகுதி.

புலவர்களின் அடிமைநிலை, வணிகர்நிலை என்னும் இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டி அறிஞன் அடிமையாதலை விட வணிகனாக இருப்பதே மேல் என்கிறார். புலமையை விற்பது தவறுதான். எனினும், புலமையை அடிமையாக்குவதி அதைவிடப் பெருந்தவறு என்பது கருத்து. இனிதே என்பது லுள்ள ஏகாரத்தைக் கேடு என்ற சொல்லிற்கு மாற்றுக.

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம் பாழின்
உடம்பை வயிற்றின் கொடுமையால் நாழி அரிசிக்கே நாம்"[1]

என்றதில் முதலில் வந்த இரண்டும் இவை. (703)

1 நல்வழி 19

**62. பலவகை நயங்களும் பாராது ஒருவிதக்
குற்றம் கருதிக் குதிப்பதும் புலமைக்கு
இழிந்த பான்மைஎன்று இயம்பிடல் இசைவே.**

ஒரு நூல் அல்லது செய்யுளில் இடம்பெற்றுள்ள பல சொல் நயம், பொருள் நயங்களைப் பொருட்படுத்தாமல் ஏதோ ஒரு குற்றத்தை நினைத்து அந் நூல் அல்லது பாடல் முற்றுமே பிழையென்று வாதிடுதல் சிறந்த அறிவுடைமைக்கு ஏற்ற செயலாகாது எனக் கூறுதல் பொருந்தும் என்றவாறு.

குற்றம் கருதி என்ற சொல்லாற்றலானே அழுக்காறு அல்லது வேறு காரணம்பற்றிக் குற்றம் கூறவேண்டும் என நினைந்து குறைகூறுஞ் செயல் பெறப்பட்டது. இச்செயல் "இலக்கணக் கவிஞர்சொல் இன்பந் தேடுவர் மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்"[1] என முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது. சிவப்பிரகாசர், "உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ் கொண்டு புகல்வதுஅவர் குற்றமே"[2] என்பதைச் செய்யுட்கும் கொள்ளலாம். (704)

**63. தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதுஎனில்
வெகுளியற்று இருப்போன் வெறும்புல வோனே.**

தமிழைவிட எல்லாவகையாலும் சிறப்புப்பெற்றதாகிய வேறு ஒரு மொழி இவ்வுலகத்திலே இருக்கிறது என யாராவது ஒருவர் கூறக்கேட்டும் சற்றும் சினங்கொள்ளாமல் ஒரு புலவன் இருப்பின் அவன் பெயரளவில் புலவனே அன்றி உண்மையில் வெறும் சதைப்பிண்டமே என்றவாறு.

இந் நூலாசிரியர் தமிழைத் தம் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானின் அருள்வடிவமாகவே போற்றுபவர். "தமிழின் 18 மெய்யெழுத்துகள் அக்கடவுளின் கண்கள்; 12 உயிரெழுத்துகள் அவன் தோள்கள்; ஆய்த எழுத்து அவன் வேலாயுதம்; நாள், மலர், தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்

1 தனிப்பாடல்

2 நன்னெறி 24

ஆகிய அடிப்படைச்சீர்கள் ஆறும் அவனுடைய ஆறு தலைகள்; இவைகளை அமைத்த அகத்திய முனிவர் முருகனடியார்'' என்பார். ''கண்நிகர் மெய்யும் சென்னிக் கணம்உறழ் சேர்க்கைச் சீரும் திண்ணிய புயங்க ளேபோல் திகழ்தரும் உயிரும் வேறு ஒன்று எண்ணிடற்கு அரியது ஆகும் எஃகமும் இயலிற்காட்டும் புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத் தடிமைதானே''[1] என்றது அது. இவர் இத் தமிழ்மொழி தன்னை அன்புடன் பயில்பவரை தேவர்களுக்கும் தேவராக ஆக்கும் எனவை இந் நூல் 672-ஆம் நூற்பா உரையிற் காட்டினாம். இவ்விலக்கணத் தின் ஈற்றிலே அமைந்துள்ள ஒரு வண்ணக்கவியில் தமிழை, ''உலகேழும் மெச்சும் உம்பர் நாட்டும் ஓங்கு துய்ய வண்மை தமிழதாமே''[2] எனப் போற்றுகிறார். இவர் தமிழைப் பற்றிக் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்து ஒரு பெரிய நூலாகவே வெளியிடலாம். விரிவஞ்சி அனைத்தையும் கூறி விரிக்காமல் இவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் சுருக்கமாகக் காட்டி அமைவேன்.

இந்நூலாசியர் தம் யாத்திரைகளின் இடையில் ஒருசமயம் இராயவேலூரில் தங்கியிருந்தபோது வடமொழிப்புலமை மிக்க இருவர் இவரிடம் தமிழைவிட வடமொழியே உயர்ந்தது என்றனர். பேச்சு முறையான வாதமாக வளர்ந்தது. முன்னிர வில் தொடங்கி மறுநாள் விடியும்வரை வாக்குவாதம் நீடித்தும் முடிவுகாண முடியவில்லை. இறுதியில் திருவுளச் சீட்டுப்போட்டு எடுப்பது என முடிவாயிற்று. அவ்வாறே செய்தனர். தமிழே உயர்ச்சி என்ற சீட்டு வந்தது. உடனே, ''தமிழே உயர்ச்சி என்று சீட்டுக் கொடுத்த பெருமாளே'' என்ற திருப்புகழ்ப்பா ஒன்றும், தமிழ்த் துதிப்பதிகம் ஒன்றும், 100 கட்டளைக் கலித் துறைகளால் தமிழ் அலங்காரமும் பாடினார். இந்நிகழ்ச்சியின் விரிவை இவர் சுயசரிதையாகிய ''குருபரதத்துவம்'' என்னும் நூலில் புதுவைச் சருக்கத்திற் காணலாம்.

தமிழ் வடமொழியிலிருந்து தோன்றியது என்பாரை எண்ணி

1 புலவர். அகத். 32

2 அறுவகை. இறுதி விருத்தம்

இவர் முற்கூறிய தமிழலங்காரத்தில், ''தமிழ்உணர் பாவலன் போல்வான் ஒருவன் தனதுகலை அமிழ்தினும் ஏற்றம்என்று ஏமாப்பு உறாமல் அயற்கலையால் உமிழ்வதுஎன்று ஒப்பிடில் மற்றோர் மடந்தைக்கு உரியகொண்கற் குமிழ்மலர் நாசியி னால்மணந் தாள்நிகர் கோதினனே''[1] என்கிறார். இந் நூற் பாவில் ''வெறும் புலவோன்'' என்றதே அங்கு ''தமிழ்உணர் பாவலன் போல்வான் ஒருவன்'' எனக் கூறப்பட்டது.

64. எண்ணப் படும்அவற்று எவ்வகைக் கவிகளும்
வண்ணக் கவிபொரு மாண்பினது அன்றுஎன்று
இசையார் புலமைக்கு இழுக்கு மிகுமே.

சிறந்த யாப்பாகக் கருதப்படும் அனைத்துவகைக் கவியினும் எண்வகைச் சந்தக் குழிப்பிற் கமையப் பாடப் படுகின்றவண்ணக் கவியே மிக உயர்வானது என ஒப்புக்கொள்ளாதவர்களின் அறிவுத்திறமை குறையுடையதாகக் கருதப்படும் என்றவாறு.

பொருள்தெளிவு கருதிப் பொழிப்புரை இம்முறையில் கூறப் பட்டது. வண்ணக்கவி பற்றிய இவருடைய கருத்துகள் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. இவருடைய வண்ணத்தியல்பு என்னும் இலக்கண நூலின் பதிப்புரையில் அவை விரிவாகத் தொகுத்து ஆராயப்பெறும். (706)

65. மற்றோர் புலவன் வாய்த்தமிழ் மனத்திற்கு
இனித்தும் அவன்எதிர் இகழும் பொல்லான்
கொடுமையைத் தெய்வம் குறிக்கும் அன்றே.

ஒருவனின் இலக்கியப்படைப்பு தம் உள்ளத்திற்குப் பிடித்த தாக இருந்தும் அப்படைப்பாளிக்குப் பெருமை சேர்ந்துவிடுமே என்ற அழுக்காறு அல்லது வேறு சில காரணங்களால் அப் படைப்பைக் குறை கூறுகின்ற தீய குணம் படைத்தவர்களின் பொல்லாங்கை உடனே தெய்வம் குறித்துவைத்துக் கொள்ளும் என்றவாறு.

---

1 தமிழலங்காரம் 97

குறை கூறுபவனின் உள்ளமும் உரையும் தம்முள் மாறு படுதலின் அவர் பொல்லார் எனவும், அவர்செயல் கொடுமை யானது எனவும் கூறப்பட்டது. அவர்செயல் சத்தியத்திற்கு மாறுபட்டதாதலின் செய்யும் நாளிலேயே அது தெய்வத்தால் குறித்துக் கொள்ளப்படும் என்கிறார். கூறவே இதனால் தெய்வதண்டனை நேரும் என்பது பெறப்பட்டது.

(707)

66. பொருட்குவை குலத்துஉயர்வு அரசு பூண்உடை
பட்டம் ஆதிய பற்றிப் புலமைக்கு
உயர்ச்சி கூறலும் ஒவ்வா முறையே.

ஒருவன் பெற்றுள்ள செல்வவளம், தோன்றிய குடும்பத்தின் சிறப்பு, வகிக்கும் அதிகாரமுள்ள பதவி, அணிந்துள்ள ஆடை யணிகளின் ஆடம்பரம், பெற்றுள்ள விருதுகள் முதலியனவற்றில் ஒன்றையோ அல்லதுசிலவற்றையோ மட்டுங்கருதி அவனுடைய புலமையைத் தகுதியற்றபோதும் புகழ்ந்துரைத்தல் உண்மைப் புலவனுக்குப் பொருந்தாத செயலாம் என்றவாறு.

முதல் நூற்பாவில் சிறந்த புலமை பழிக்கப்படுவதைத் தவறு என எடுத்துக்காட்டியவர் இதில் இழிந்த புலமை வேறு பற்பல காரணம் பற்றி வானளாவப் புகழப்படுவதையும்விளக்குகிறார். பூண்உடை உம்மைத்தொகை. இந் நிகழ்ச்சியை நாடோறும் கண்டுவருதலின் விரித்தல் மிகை.

''விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்; விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்; அரையதனில்பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை நஞ்சேனும் வேம்பேனும் நன்று'' என்னும் பழம்பாடல்[1] இங்கு நினைவுகூரத் தக்கது.

67. கோங்குஅரும்பு அன்ன குவிமுலைக் கோதையர்
தீஞ்சுவைச் சொல்லினும் செந்தமிழ் இனிதுஎன
மனமும் தெய்வமும் அறிய வாழ்த்தும்
புலவர்க்கு ஆகா தனஎலாம் புலமைக்கு
உதவா தனஎன்று உணர்வது முறையே.

---

1 தனிப்பாடல்

செம்மையான தமிழ்மொழியைக் கோங்கரும்பைப் போன்ற அழகிய நகில்களைப் பெற்ற மங்கையரின் கொஞ்சுமொழிகளை விட இனியதாகச் சில மெய்யறிஞர் தம் மனச்சாட்சியும் கடவுளும் அறியப் போற்றுவர். அத்தகையோருக்கு எவை யெவை ஆகாதனவோ அவையனைத்தும் நற்புலமைக்கும் ஏலாதன ஆகும். இந்த அடிப்படையிலேயே ஒவ்வொன்றையும் இது புலமைக்குத் தக்கதா அன்றா என முடிவு செய்யவேண்டும் என்றவாறு.

நகிற்குறிப்பால் மங்கைப் பருவமும், தீஞ்சுவைச் சொல் என்றதால் கொஞ்சுமொழியும் பெறப்பட்டன. அரசியல் ஆதாயம், பொருள் வருவாய், எளிதில் செல்வாக்கடைதல் முதலியன கருதிப் போலியாகத் தம் தமிழ்ப்பற்றை மிகைப் படுத்திக் காட்டிக்கொள்ளும் காரியவாதிகளினின்றும் சத்திய மான தமிழன்பர்களைப் பிரித்துக் காட்ட ''மனமும் தெய்வ மும் அறிய வாழ்த்தும் புலவர்'' என்றார்.

புலமை என்பது இத்தன்மைத்து இவ்வளவினது எனத் தூலமாகக் கூற இயலாதவாறு புலவர்களைச் சார்ந்தே அறியப்படுதலின் அவர்களுக்கு ஆகாதன யாவும் புலமைக்கும் ஆகாதன ஆயிற்று. தமிழ் இனிமைக்கு இவர் இதே உவமையை வேறோர் இடத்தில், ''சிமிழலங்கார முலையார் மொழியினும் தித்திப்பதாம் தமிழ்''[1] என்பார். (709)

**68. புலமையிற் கரவுதீர் நலம்பு கன்றனம்;**
**மரபியல்பு அதனையும் வகுக்குதும் அன்றே.**

புலமையில் எந்தெந்தத் தீமைகள் களையப்பட்டுச் சிறப்பு உண்டாக வேண்டும் என இதுவரை கூறினாம். இனி அடுத்து மரபியல்பையும் வகுத்துச் சொல்வாம் என்றவாறு.

குற்றங்களைக் காட்டிக் குறைகூறுவது தம் நோக்கமன்று என்பதைத் தெளிவு படுத்துவதற்காக இவ் வியல்பின் முதலில் 'சாராது ஒழிப்பான் தவறு இயல்பு உரைக்குதும்'' எனவும் இங்குக் ''கரவுதீர் நலம்'' என்றும் கூறினார்.

---

1 தமிழலங்காரம் காப்பு

அடுத்துவரும் மரபியல்பு பெரும்பாலும் செவிவழிச் செய்திகளை ஆதாரமாகக்கொண்ட தமிழ் இலக்கிய வரலாறாகவே அமைந்துள்ளது. மொழி இலக்கணத்தின் ஒரு பிரிவாக அம் மொழி இலக்கிய வரலாற்றை எம்மொழியாளரும் எங்கும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. இவரே புதுமையாக இவ் வாறு கூறுகிறார். எனவே தான் வகுக்குதும் என்றார்.

இந்நூற்பாவுடன் தவறியல்பு என்னும் இப்பகுதி நிறைவு செய்யப்பட்டு அடுத்த பிரிவாகிய மரபியல்பிற்குத் தோற்று வாய் செய்துகொள்ளப்பட்டது. (710)

**தவறு இயல்பு முற்றிற்று.**

## III. மரபியல்பு

முன்பே கூறப்பட்டது போல இவ் வியல்பு செவிவழிச் செய்திகளை ஆதாரமாகக் கொண்ட தமிழ் இலக்கிய வரலாறு ஆகும். இன்றைய இலக்கிய ஆராய்ச்சியாளர்களில் மிகப்பலர் இவ்வியல்பில் இடம்பெற்றுள்ள பல நிகழ்ச்சிகளை உண்மையாக நடந்த சம்பவங்களாக ஒப்பமாட்டார்கள். எனினும், சென்ற நூற்றாண்டில் தமிழகத்தே புலவர்கள் நடுவே வழக்கிலிருந்த பல செவிவழிச் செய்திகளை அறிய இவ்வியல்பு துணைசெய்யும். இவ் வியல்பின் ஒவ்வொரு நூற்பாவும் ஒவ்வொரு கதையைத் தன்னுள் அடக்கி இருத்தலின் ஒவ்வொன்றையும் விரித்து எழுதினால் இவ்வுரை மிகப் பெருத்துவிடும். எனவே, இதற்குச் சுருக்கமாகவே உரை வரையப்படும். இதில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒரே நூலில் பார்க்க விரும்பும் அன்பர்கள் இந் நூலாசிரியரால் இயற்றப்பட்டதாகிய புலவர் புராணத்தைப் பார்க்கவும்.

இவ் விலக்கண நூலில் இக் கதைகள் ஒரு தனி அதிகார மாகக் கூறப்படுவதன் காரணம் இதே இயல்பின் முப்பதாம் நூற்பா உரையிலும் இறுதி நூற்பாவிலும் கூறப்படும்.

இவ் வியல்பு முப்பத்தைந்து நூற்பாக்களை உடையது.

**69. தெய்வமும் புலமைத் திருஉரு வாம்என்று**
**அறியும் பெரியோர்க்கு அவர்தாம் இணையே.**

இறைவனும் அறிவு வடிவானவனே எனும் உண்மையை உணரும் பெரியவர்கள் தம் சிறப்பில் இணையற்றவர் ஆவர் என்றவாறு.

இறைவன் முற்றறிவன் அல்லது அறிவுமயமானவன் என்பது அனைத்துச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். வாலறிவன் என்றார் வள்ளுவரும். (711)

**70.** **பாணனும் தருமியும் பெத்தானும் உய்யப்**
**பாடியது அன்றிப் பைந்தமிழ்க் கழகத்**
**தலைவனைப் பழித்தும் தனிக்கவி பகர்ந்த**
**பரமனும் புலவன் என்பது பண்பே.**

பாணபத்திரருக்காக "மதிமலி புரிசை" என்னும் திருமுகப் பாசுரத்தையும், தருமிக்காகக் "கொங்குதேர் வாழ்க்கை" என்ற அகவற் பாவையும், பெத்தான் சாம்பானுக்காக "அடியார்க் கெளியன்" எனத்தொடங்கும் வெண்பாவையும், நக்கீரனை இகழ்வதாக, "அங்கம் குலுங்க" என்னும் ஒரு வெண்பாவை யும் பாடியதால் சிவபெருமானையும் ஒரு தமிழ்ப்புலவர் என்பதே முறையாகும் என்றவாறு.

இவ் வரலாறுகள் திருவிளையாடற் புராணம், புலவர் புராணம் ஆகியவற்றுள் உள்ளன. சிவபெருமானும் தமிழ்ப் புலவனே என்னும் இதே கருத்து இவரால் வேறிடத்தே "அரன்முனாள் தருமி பாணன் அன்புறு பெத்தான் கீரன் தரம்உலகு அறியப் பாடித் தமிழ்க்கவிப் புலவன் ஆனான்"[1]. எனக் கூறப்பட்டுள்ளது. (712)

**71.** **கண்டா யோஎன மீனவற் கருதிப்**
**பாடிஓர் தொண்டன் பருவரல் ஒழித்த**
**பனிவரைக் குமரியும் பாவலி யினளே.**

பாண்டியனிடம் செல்லும் ஓர் இரவலனுக்காக உமாதேவி யாரும் "கண்டாயோ மீனவா" என்ற பாடலை இயற்றிய தால் புலவருள் ஒருத்தி ஆனாள் என்றவாறு.

1 புலவர் சி.பாயிரம் 8

"கண்டாயோ மீனவா கானகத்துக் கள்ளியின்கீழ் வெண்டாமை பூத்து விளக்கெரிய - ஒண்டொடியாள் வாழ்க்கைப் படுமுன்னே மைந்தனையும் பெற்றெடுத்தாள் காக்கைகளை ஓட்டுகின்ற கை"[1] என்பது அப்பாடல். (713)

72. விழுந்த துளிஎனப் பூமாது எனஇரு
தொண்டர்முற் பாடியது அன்றி யொருவற்கு
அறிவே நனவுஎன்று அறைந்துஎன் கனவினும்
பற்பல பாடல் பகர்ந்துஇனிது ஆண்ட
முருகப் பெருமான் முழுதுணர் புலவனே.

பொய்யாமொழிப் புலவர்முன் வேடனாகச் சென்று "விழுந்ததுளி அந்தரத்தே" எனத் தொடங்கும் பாடலையும் பகழிக்கூத்தருக்கு அடியெடுத்துக் கொடுக்கப் "பூமாது" எனவும் பாடியதோடு அருணகிரி நாதருக்கு 'அறிவை அறிவது அறிவு' என உபதேசித்தும், என் கனவில் தோன்றிப் பல பாடல்கள் கூறியும் ஆண்டுகொண்டதால் முருகப் பெருமானும் முழுதறி புலவன் ஆகிறார் என்றவாறு. (714)

73. வெண்மலர்க் கமல மீதுவீற் றிருந்து
எவர்எவர் கவிகளும் என்னது என்னும்
நாவின் கிழத்தியும் "நாடா முதல்"என
வெண்பா வொன்று விளம்பினள் அன்றே.

வெள்ளைத்தாமரையில் இருந்துகொண்டு இவ்வுலகில் யாரெல்லாம் கவிதை புனைந்தாலும் அவை யாவும் என்னுடையதே எனக்கூறும் கலைமகளும், "நாடா முதல்" எனத் தொடங்கும் வெண்பாவைப் பாடினாள் என்றவாறு.

"நாடா முதல்நான் மறைநான் முகன்நாவிற் பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன் கூடாரை எள்ளுவன் மீன்உயர்த்த ஏந்துஇலைவேல் வேந்தனே வள்ளுவன் வாயதுஎன் வாக்கு"[2] எனும் வெண்பாவை நினைந்து கூறியது இது. இதில் வேதம், பாரதம், திருக்குறள் யாவும் யான் பாடினேன் என வாணி கூறுவதாக அமைந்துள்ளமை காண்க. (715)

1 தனிப்பாடல்
2 திருவள்ளுவ மாலை

**74. பொருவரும் தமிழ்ப்பாப் புகலாப் புத்தே-**
**ளினரும் புலவோர் எனும்பெயர்க்கு இச்சித்து**
**அணிந்து கொண்டமை அறியும்அம் புவியே.**

இணையற்ற தமிழ்க்கவிகளை இயற்றாத தேவர்களும் தாங்களும் புலவர்கள் என அழைக்கப்பட வேண்டும் என்னும் விருப்பத்தால் அப்பெயரைப் புனைந்து கொண்டார்கள் என்று அறிஞர்கள் அறிவார்கள் என்றவாறு.

புலம் என்ற சொல் அறிவு, ஐம்புலன் முதலிய பலவற்றை உணர்த்தும் ஒரு பலபொருள் ஒரு சொல் ஆகும். புலவர் என்ற சொல் அறிவை உடையவர்கள் என்ற பொருளில் கவிஞர்களையும், ஐம்புல இன்பங்களையும் ஆரத் துய்ப்பவர்கள் என்ற பொருளில் தேவர்களையும் சுட்டும். பாப் புனைதலாகிய புலமை இல்லாதபோதும் அவர்கள் அப் பெயரை அணிந்து கொண்டனர்; இது அத்தொழிலின் சிறப்பைக் காட்டுகிறது என்பது இவர் கருத்து. இது யுத்தி வாதம். (716)

**75. முத்தமிழ்ப் புலமை முனிக்கோன் பாடலிற்**
**பெய்வளைத் திருமகள் பின்தொடர்ந் தனளே.**

அகத்தியர் பாடலுக்காக இலக்குமி அவரைப் பின் தொடர்ந்தாள் என்றவாறு.

இதில் குறிக்கப்பெற்ற வரலாறு இடம் விளங்கவில்லை.

**76. செந்நாப் புலவன் செப்பிய பாடலில்**
**மாயவன் குடிபோய் வந்தனன் அன்றே.**

முன்னொரு நாளில் திருமழிசையாழ்வார் பாடல்களுக்காகக் காஞ்சிபுரத்தில் திருக்கோயில் கொண்டுள்ள திருமால் ஊரைவிட்டு வெளியேறியும் பிறகு மீண்டும் குடியேறியும் சொன்னவண்ணம் செய்தார் என்றவாறு.

இது ''கணிகண்ணன் போகின்றான்'' ''கணிகண்ணன் போக்கொழிந்தான்'' எனத் தொடங்கும் இரு தனிவெண்பாக்களை நினைந்து கூறியது. தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ள இவ் வரலாறு புலவர் புராணத்தில் மாற்றி உரைக்கப்பட்டுள்ளது. (718)

**77. என்பு பெண்ணாகவும், ஈனச் சமணர்
வன்கழு ஏறவும், மறைக்கதவு அடைக்கவும்
காழியூர்ப் புலவன் கழறினன் தமிழே.**

சீகாழியில் தோன்றிய திருஞான சம்பந்தப் பெருமான் மயிலாப்பூரில் பூம்பாவையின் எலும்புகளை மீட்டும் உயிருள்ள பெண்ணாகுமாறும், மதுரையில் எண்ணாயிரம் சமணர்கள் கழுவேறுமாறும், திருமறைக்காட்டில் ஆலயக்கதவு அடைபடு மாறும் தேவாரப் பதிகங்களை அருளினார் என்றவாறு. (719)

**78. நீற்றறை குளிரவும், நெடுங்கை வேழம்
அஞ்சவும், கற்றூண் ஆழியில் மிதப்பவும்
பைந்தமிழ்ப் பாடல் பகர்ந்தான் ஒருவனே.**

ஒப்பற்றவராகிய திருநாவுக்கரசர் பல்லவன் தம்மை அடைத்த சுண்ணாம்புக்காளவாய் குளிர்ந்திருக்கவும், கொல் லும் பொருட்டு ஏவப்பட்ட யானை அஞ்சும்படியாகவும், தம்மைக் கட்டிக் கடலில் இட்ட கல் தெப்பமாக மிதக்கு மாறும் இனிய தமிழ்த் தேவாரப் பதிகங்களை அருளினார் என்றவாறு. (720)

**79. பரமன் பாங்கன் ஆகவும், முதலை
உண்ட பிள்ளை உயர்ச்சியொடு ஒளிரவும்
நாவலூர்ப் புலவன் நவின்றனன் நன்றே.**

திருநாவலூரராகிய சுந்தரர் சிவபெருமானே தம்முடன் தோழமை கொள்ளுமாறும், அவிநாசியில் சில ஆண்டுகளுக்கு முன்பு முதலைக்கு இரையாகிய ஓர் அந்தணச் சிறுவன் உரிய வளர்ச்சியோடு மீண்டும் மீளுமாறும் மிக நன்றாகத் தமிழ்த் தேவாரப் பதிகங்களை அருளினார் என்றவாறு.

சிவப்பிரகாசர் சுந்தரர்பற்றிக் கூறுகையில் "படியிலா நின்பாட்டில் பரமன் நனிவிருப்பன்" என்றும், 'செல்வத்திற் சிறந்த குபேரன் தோழனாயிருப்பதுபோல் கல்வியிற் சிறந்த

1 நால். நான். மாலை.

நின்னை விரும்பி இறைவன் தோழனாக்கிக் கொண்டனன்'[1] என்றும் கூறுவதை நினைந்து நவின்றனன் நன்றே என்றார். அன்றே என ஈற்றசையாக்கின் பொருட் சிறப்பின்று. (721)

**80.** பல்நாடு உடையவன் பாண்டி நாடே
உடையேன் என்னவந்து உரிமையோடு எழுதவும்
வாதவூர்ப் புலவன் வழங்கினன் தமிழே.

திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் எந்நாட்டவர்க்கும் இறைவராகிய சிவபெருமானே தென்னாடுடையவராக வந்து தாமே உரிமையோடு ஓலையில் எழுதும்படித் திருவாசகத்தை யும் திருக்கோவையாரையும் அருளிச் செய்தார் என்றவாறு. (722)

**81.** பைந்துழாய் போலப் பத்துப் பாவலர்
செப்பிய தமிழ்நூல் தேறிப் பற்பலர்
விரசைக்கு அப்பால் மேவினர் அன்றே.

ஆழ்வார்கள் பதின்மர் திருமால் விரும்பிப் புனையும் துளசி மாலையையொத்து இயற்றிய நாலாயிர திவ்வியப் பிரபந்த மாகிய பாமாலைகளின் துணையால் கணக்கற்ற பாகவதர்கள் வைகுந்தப்பதவி அடைந்தனர் என்றவாறு.

"பத்துப் பாவலர் பைந்துழாய் போலச் செப்பிய" என இயைக்க. விரசை என்பது வைகுந்தத்திற்குச் செல்லும் வழி யில் குறுக்கிடுவதோர் ஆறு. (723)

**82.** மூவகைக் கழகத்து ஐயா யிரத்து
நானூற்று முப்பத் தொன்பது புலவோர்
வாழ்ந்தனர் எனப்பகர் மாந்தர் பலரே.

தலைச்சங்கத்தில் 4900 புலவர்களும் இடைச்சங்கத்தில் 490 புலவர்களும் கடைச்சங்கத்தில் 49 புலவர்களும் ஆக மொத்தம் 5439 சங்கப் புலவர்கள் முன்னாளில் தமிழாய்ந்தனர் என்று பலர் கூறுவார்கள் என்றவாறு.

---

1 நால். நான். மாலை.

சங்கப் புலவர்களின் தொகை, "நாற்பத் தொன்பது நான்கு நூறு அணைந்த தொண்ணூறு மேற்பத் தோடிவை பெருக்கிய தொகையராய் விளங்கி சூற்பட் டார்த்தெழு முகில்உறழ் சொற்றொனிப் புலவோர் ஏற்பட் டார்கண்முச் சங்கமு டென்னுமிவ் வுலகே"[1] என்னும் இவர் கருத்தேபற்றி உரைக்கப்பட்டது. இறையனார் அகப்பொருள் உரையின்படி இத்தொகை முறையே 549,59,49 ஆக மொத்தம் 657 ஆகும்.[2]

இந்நூலாசிரியர் தாம் இதைக் கூறும் இரு இடங்களிலும், "எனப்பகர் மாந்தர் பலர்" எனவும், "என்னும் இவ்வுலகே" எனவும் பிறர் கூற்றாகவே கூறுகிறார். களவியல் உரையாசிரியரும் இச்செய்திகளைக் கூறுமிடத்து 'என்ப' 'என்ப' என்றே கூறிச் செல்கிறார். இதனால் தொல்லாசிரியர்களுக்கே முச்சங்க வரலாற்றைப்பற்றிய உறுதியானதொரு கொள்கை-தன் கூற்றாகவே ஆணித்தரமாகக் கூறுமளவில்-இல்லை என்பதை உய்த்துணரலாம். பெருந்தொகையின் 1384, 1385, 1386 ஆகிய மூன்று தனிப்பாடல்களையும் காண்க. (724)

**83. பொற்றா மரையிற் பொருவரும் பொதுநூல்**
**வைத்துவென்று அளிகூர் வள்ளுவன் புலமை**
**தமிழுடைப் பலர்க்கும் தாய்எனத் தகுமே.**

இணையற்றதும் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் எச்சமயத்துக்கும் ஒப்ப ஏற்றுக் கொள்ளத் தக்கதுமாகிய திருக்குறளை மதுரைப் பொற்றாமரைக் குளத்திலுள்ள சங்கப் பலகையில் வைத்துச் சங்கப் புலவர்களை வென்று மனமகிழ்ந்த திருவள்ளுவரின் புலமை தமிழ்வாணர்கள் அனைவருக்கும் அன்னையைப்போல் போற்றிப் பேணத்தக்கதாம் என்றவாறு. (725)

**84. படுபலா உருள்பனை பழம்தரப் பைந்தமிழ்**
**பாடிய கிழவியும் பழுதுஇலா தவளே.**

வெட்டப்பட்ட பலா மரமும், துண்டிக்கப்பட்டு உருளும்

1 புலவர். அகத்தியர். 8

2 இறை. களவியல் 1

பனங்கட்டையும் தளிர்த்துக் கனி தருமாறு தமிழிசைத்த ஔவையாரும் குற்றமற்ற புலமைச் சிறப்புடையவள் ஆவாள் என்றவாறு.

இந் நூற்பா ஔவையார் பாடல்களாக வழங்கப்படும், "கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா", "கூழைப் பலாத் தழைக்க", "திங்கட்குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்" என்னும் தனிப்பாடல்களைப் பற்றிய வரலாறுகளை ஒட்டி எழுந்தது. (726)

**85. மதுரைஊர்க் கடவுள் வையைக்கு அப்புறம்**
**போய்வரப் படித்தான் புலவன் ஒருவனே.**

குலேச பாண்டியன் தன் பனுவலைப் போற்றாததால் சினங்கொண்டு சொக்கநாதப் பெருமான் ஆலவாயைவிட்டு நீங்கி வையையின் தென்கரையிலே கோயில்கொள்ளவும், பிறகு தன் சினம் தணிந்ததும் மீண்டும் ஆங்கு எழுந்தருளவும் இடைக்காடர் தமிழ்ப்பாப் புனைந்தார் என்றவாறு.

இவ் வரலாறு திருவிளையாடற்புராணம் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தில் இடம்பெற்றுள்ளது. (727)

**86. தொள்ளா யிரத்துத் தொண்ணூற் றொன்பது**
**மாதவர் தன்னொடு மாளா வண்ணம்**
**ஒருதமிழ்ப் புலவன் உரைபயின் றானே.**

திருப்பரங்குன்றக் குகையில் கற்கிமுகி எனப்பெயரிய பூதம் தான் உண்பதற்காக அடைத்து வைத்திருந்த 999 பேர்களுடன் தாமும் இறந்துவிடாதவாறு நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடினார் என்றவாறு. (728)

**87. வேறுஇடத்து ஆறு விலகி ஓடவும்**
**கல்உரு மகிழவும் கவிதை பாடினர்**
**இருபுல வோர்என்று இயம்புநர் பலரே.**

தாம் பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகக் கவிக்கேற்ப அவ்வூரில் பம்பையாறு வழிமாறிச் செல்லும்படியும், ஒரு குளக்

கரையில் இருந்த விநாயகரின் கற்சிலை தம் பாடலால் மகிழும் படியும் இரட்டைப் புலவர்கள் பாடினர் என்றவாறு.

இவ் வரலாற்றைப் புலவர் புராணம் இரட்டைப் புலவர் சருக்கத்தில் காணலாம். கல்லுரு மகிழப் பாடியது "தம்பியோ பெண்திருடி" எனத் தொடங்கும் தனிப்பாடல். (729)

**88. அம்பிகை அடிசில் ஆக்கி இடவொரு**
**தண்டமிழ்க் கவிஞன் சாற்றினன் துதியே.**

கவிராஜ பண்டிதர் தான் காசிக்குச் சென்று மீளும் வரை ஆறுமாத காலம் தன் மகளின் உருவத்தோடு உமாதேவியார் உடன்வந்து சமைத்து உண்பிக்கும்படி ஒரு துதிப்பனுவலை இயற்றினார் என்றவாறு.

ஆதிசங்கரரின் சவுந்தரியலகரியை இவர் தமிழ்ப்பாவாக மொழி பெயர்த்தார். இவர் வரலாறும் புலவர் புராணத்தில் இவர் பெயரில் அமைந்த சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது. (730)

**89. மலைமகள் வசம்அற மயிலுடன் அயில்வேள்**
**கருதிய வயின்வரக் கவிதை கூறினன்**
**ஒருபுல வோன்என்று உரைக்கும் உலகே.**

(அருணகிரிநாதர் பிரபுடதேவராயரின் விழிமுன் முருகப் பெருமானைத் திருவண்ணாமலை ஆலயத்தின் ஒரு தூணில் காட்டக் கருதினார். சம்பந்தாண்டான் என்பவனின் விருப்பத் திற்கேற்ப உமாதேவியார் முருகனை அவ்விடம் தோன்றாது, தடுக்க முயன்றார்.) அருணகிரிநாதர் 'அதலசேட னாராட' என்னும் திருப்புகழால் பார்வதி தன் நிலை மறக்கவும் முருகப் பெருமான் தான் கருதிய இடத்தில் காட்சி தரவும் செய்தார் என்று உலகினர் உரைப்பர் என்றவாறு.

இவர் இயற்றிய அருணகிரிநாதர் புராணத்தில் விரிவாக வும், புலவர் புராணத்தில் சுருக்கமாகவும் இந்த வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. (731)

**90. செழியன் மனையொடு சிவிகை தாங்கவும்**
**கழகப் பலகை கண்டு மறையவும்**

சிலைத்தலை அசையவும் செப்பும் புலமை
பொய்யா மொழியினது என்னும் புவியே.

பொய்யாமொழிப் புலவரின் கவிதையாற்றல் தன்னைப் பல்லக்கிலேற்றிப் பாண்டியன் அவன் மனைவியோடு சுமக்கச் செய்தல், பொற்றாமரையிலே தோன்றாதிருந்த பழைய சங்கப்பலகை வெளிப்பட்டு மீண்டும் மறைதல், மண்டபத் திருந்த சங்கப் புலவரின் கற்சிலைகள் தம்மோடு இவர் ஒத்தவர் என்று ஒப்பித் தலையசைத்தல் போன்ற அதிசயங்களைச் செய்யவல்லது என்று மக்கள் மொழிவர் என்றவாறு.

இவ் வரலாறுகளும் புலவர் புராணத்திலும் தனிப்பாடல் களிலும் உள்ளன. (732)

91. செவ்வேற் குருபரன் செம்பொற் பதக்கம்
தருமாறு ஒருவன் சாற்றினன் தமிழே.

திருச்செந்திற்பெருமான் தான் அணிந்திருந்த பொற்பதக் கத்தைப் பரிசிலாக அருளும்படிப் பகழிக்கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடினார் என்றவாறு. (733)

92. வம்பன் ஒருவன்ஊர் மண்மழை அதனால்
அழியஓர் புலவன் அறைந்தான் தமிழே.

திருமலைராயன் என்னும் மன்னனின் தலைநகரம் மண் மாரியால் நாசமடையும்படிக் காளமேகப் புலவர் தமிழ்க்கவி பாடினார் என்றவாறு.

இதன் விரிவைப் புலவர் புராணத்தில் காண்க. (734)

93. மாங்கனி நிமித்தம் மடிபிடித்து இழுத்தோன்
சாம்படி ஒருத்தன் தமிழ்படித் தானே.

வழியில் கிடந்தெடுத்த மாம்பழத்தைத் திருடியதாகக் கூறித் தோட்டக் காவலன் இடுப்பாடையைப்பற்றி இழுத்த தால் அவன் புரட்டாசி மாதத்தில் இறக்கக் கடவன் என்று சிவப்பிரகாசர் ஒரு வெண்பாவாற் சபித்தார் என்றவாறு.

"அடுத்துவரும் தொண்டனுக்கா" எனத் தொடங்கும் வெண்பா இதில் கூறப்பெற்றது. (735)

**94. வெள்ளியால் சமைத்த விலங்கு முறிபடத்
தெள்ளிய பனுவல் செப்பினன் ஒருவனே.**

வடமலையப்ப மன்னனால் இடப்பெற்ற வெள்ளிக் கைவிலங்கு தறித்துப்போகுமாறு சிறைவிடந்தாதி என்னும் திருச்செந்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதியைத் தென்குருகை யூரைச் சேர்ந்த ஒரு வைணவர் பாடினார் என்றவாறு.

இவ்வரலாறு புலவர் புராணம் இருவயிணவர் சருக்கத்தில் முதல் 29 கவிகளில் கூறப்பட்டுள்ளது. இச்சிறைவிடந்தாதி அண்மையில் அச்சாகியுள்ளது. (736)

**95. சூரன்ஊர் நடுங்கும் தூதுஉடை ஒருவனைச்
சேரன்ஊர்க்கு அனுப்பிச் செம்பொன் பெற்றுக்
களிகூர்ந் தனன்ஒரு கவிப்புல வோனே.**

சூரபதுமனின் தலைநகரமாகிய வீரமயேந்திரப் பட்டினத் தையே அச்சமுறச் செய்யும் தூதுவராம் வீரவாகு தேவரைத் தன் இளையவனாகப் பெற்றுள்ள முருகப் பெருமானைக் கந்தசாமிப் புலவர் என்னும் ஒரு பாண்டிநாட்டுக் கவிஞர் சேர மன்னனின் கனவில் பொருள் வேண்டித் தூது விடுத்துப் பயன்பெற்று மகிழ்ந்தார் என்றவாறு.

இவ்வரலாறு தமிழலங்காரத்தில், "ஈரம் பொருந்தத் தமி ழாற் றுதிக்கும் எழிற்புலமைக் காரன் கலியறச் செய்வது நாடிக்கதிர்அயிற்கை வீரன் தனது பெருமைஎல் லாம்விட்டு விட்டொருக்கால் சேரன் கனவி னிடைதூதன் ஆம்எனச் சென்றனனே"[1] எனச் சுருக்கமாகவும் புலவர்புராணம் கந்த சாமிப்புலவர் சருக்கத்தில் ஓரளவு விரிவாகவும் கூறப்பட் டுள்ளது. (737)

**96. தில்லையூர்ப் பார்ப்பார் சேரும் இடத்துஒரு
சொல்லைநன்று ஆக்கும் பொருட்டில் சூர்ப்பகை
கவிஞ னாவரக் கண்டான் ஒருவனே,**

---

1 தமிழலங். 92

இந்நூற்பாவில் கூறப்பட்ட வரலாறு எதுவென விளங்க வில்லை.

கந்தபுராண அரங்கேற்றத்தில் முருகப்பெருமான் ஒரு கவிஞனாகத் தோன்றித் ''திகடசக்கர'' என்னும் சொற் றொடருக்கு வீரசோழிய விதியால் அமைதி கூறியதாக ஒரு வரலாறு உண்டு. ஆனால் அந்நிகழ்ச்சி தில்லையிலன்றிக் கச்சி யில் நடந்தது. தில்லைவாழந்தணர்கள் ஒரு சாவு வீட்டில் குழுமி இருந்த சமயத்தில் கம்பர் நாகபாசப் படலத்திலிருந்து ஒரு கவி கூறி இறந்தவனை உயிர்ப்பித்துத் தம் இராமகாதைக் குச் சாற்றுக்கவி பெற்றதாகக் கூறுவர். இந்நிகழ்ச்சியில் வேறு கவிஞன் வருவதில்லை. மேலும் ''ஒரு சொல்லை நன்றாக்கும் பொருட்டு'' என்பதுவும் இதற்குப் பொருந்துவதில்லை. (738)

97. மணிநா வொடுதிரை மறைவுஅற ஒருவன்
கவிதை பாடிக் களித்திருந் தனனே.

திருமந்திரத்தூர் எனப்படும் தூத்துக்குடிக் கோயிலின் கொடிக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த மணியின் நாக்கும், திருச்செந்தூர்ச்சந்நிதானத்தை மறைத்திருந்த திரைச்சீலையின் கயறும் அற்று விழும்படி வீரபாண்டியப் புலவர் செந்தமிழ் பாடி மகிழ்ந்திருந்தார் என்றவாறு.

இந்நிகழ்ச்சிகள் புலவர் புராணம் வீரபாண்டியப்புலவர் சருக்கத்தில் உள்ளன. (739)

98. கோடி கோடி கொடியார் தலைபொடி
யாகப் பாடினன் அந்தணன் ஒருவனே.

பற்பல தீயவர்கள் மாயும்படி வசைகவியாண்டான் என்னும் ஒரு பார்ப்பான் கவிகளியற்றினான் என்றவாறு.

வசைகவியாண்டான் வரலாறு புலவர் புராணத்தில் அவன் பெயருடைய சருக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அச்சருக் கத்தின் ஈற்றில், 'அன்னவன்நா வினில்இருந்து விளையாடி னாள்செயல்என்று அறிவார் சில்லோர்; இன்னவன்இக் கொடுமையெலாம் இயற்றினன்என் றேதுணிவுற்று இகழ்வார் பல்லார், என்னபயன் இதனால்உண் டாயஎனில் தமிழ்ப்புலவர்

ஏற்றம் தானும் மன்னர்முத லோர்அவரிற் றாழ்ந்தவரே எனும்நிசமும் வயங்கல் தானே"[1] எனக் கூறப்பட்டிருப்பது இவண் சிந்திக்கத்தக்கது.

இலக்கண நூலாகிய இதன்கண் தாம் புதுவதாகப் படைத்து மொழியும் புலமையிலக்கணத்தில் பல புலவர்களின் வரலாறுகளைக் கூறி வருகிறார். இலக்கணமாக அமையாது இலக்கிய வரலாறு போன்று விளங்குகின்ற இம் மரபியல்பில் இடம்பெற்ற கவிஞர்கள் அனைவரும் மன்னர் முதலோரிற் சிறந்தவர்கள் என்றும், தாமும் அத்தகைய அருட்புலமையையே தம் குறிக்கோளாகக் கொண்டு சோர்வின்றி முயலல் சிறப்பு என்றும் மாணவர்கள் உணரவேண்டுமென்பதே ஆசிரியரின் நோக்கம். அது இவ்வியல்பின் இறுதி நூற்பாவில் கூறப் படுகிறது. (740)

**99. வைவார் பற்பலர் வணங்கலின் மகிழ்ந்தொரு**
**பாவலன் மழைவரப் படித்தனன் தமிழே.**

(சீநிவாசப் புலவர் என்னும் ஓர் அந்தணர் ஒரு முகமதியப் பெண்ணை மணஞ்செய்து வாழ்ந்திருந்தார். அதனால் மற்ற வேதியர்கள் அவரை வெறுத்து ஒதுக்கினர். இவ்வாறு இருக்கும்போது ஒரு சமயம் மழைவளம் குறைந்தது. அந் நாட்டை ஆண்டுவந்த இசுலாமிய மன்னன் அந்தணர்களுக்கு நூறாயிரம் பொன்னளித்து, "நீங்கள் எப்படியாவது மழை பொழியச் செய்யவேண்டும். இல்லையேல் உம்மனைவரின் கண்களையும் தோண்டுவதுடன் ஊன் உண்ணவும் வைப்பேன்" என்று ஆணையிட்டான். மறையவர்கள் பலநாள் வருணசபம் செய்தும் மழை பெய்யவில்லை. தன்னிச்சையாக அங்குவந்த சீநிவாசப் புலவரின் உதவியை நாடினர்.) முன் தன்னைப் பழித்தொதுக்கிய பல அந்தணர்களே தாம் ஒரு இக்கட்டில் சிக்கிக் கொண்டபோது பணிந்து உதவிவேண்டியதால் பழம் பகைமை பாராட்டாது சீநிவாசப்புலவர், "மழை பெய்ய வேண்டும் வடிவே இரங்கி அருள்வாய்" என்ற கீர்த்தனையைப் பாடி மழைவரச்செய்தார் என்றவாறு.

---

1 புலவர். வசைகவி. 67

இவ்வரலாறு,"வெங்கனற் கோப மிலேச்சர்தம் ஆணையில் மேவிநொந்து தங்கள்கண் வாழ்வது நாடிப் பெரிது தவித்த வருக்கு அங்கயற் கண்ணி அருளால் ஒருவன் அறைந்ததமிழ் சங்கடம் தீர்த்தது அறியும்நெல் வேலித் தடாகம்ஒன்றே"[1] என்ற கவியாலும் புலவர் புராணம் சீநிவாசப்புலவர் சருக்கத் தாலும் அறியப்படுகிறது. (741)

**100. செந்தூர்த் திருஉரு திரும்பிப் பார்க்க**
**அன்றொரு நாவலன் அறைந்தான் தமிழே.**

(இழிகுலம் எனப்படும் ஈளுவராகப் பிறந்ததால் ஆறுமுகப் புலவர் என்பவரைத் திருச்செந்தூரின் ஏழாந் திருவிழாவன்று இறைவன் திருவுலா வரும்போது முன்னே வரவொட்டாமல் தடுத்தனர். புலவர் வருந்தித் திருவுருவத்தின் பின்னால் போய் நின்று ஒரு கீர்த்தனை பாடினார்.)

திருஉலாவாக எழுந்தருளும் திருச்செந்தூர்ப்பெருமானின் திருவுருவம் தன்னை நோக்கிப் பின்புறமாகத் திரும்பும்படி ஆறுமுகப்புலவர் என்னும் ஒரு கவிஞர் தமிழ்க் கீர்த்தனை பாடினார் என்றவாறு.

"எப்புவ னத்துளக் குலத்தோர்க ளேனும் இசைக்கரிய மெய்ப்புகழ்ச் சாதனம் பெற்றால் அமரரில் மேல்எனும்சொல் ஒப்புகி லார்நிந்தை ஆற்றாதுஅந் நாளில்ஒருபுலவன் செப்புசெஞ் சொற்றமி ழாற்செந்தில் வேலன் திரும்பினனே"[2] எனத் தமிழலங்காரத்திலும் புலவர் புராணம் ஆறுமுகப்புலவர் சருக்கத்திலும் இவ் வரலாறு இடம்பெற்றுள்ளது. (742)

**101. பட்ட புரசினில் பச்சிலை பறித்தும்**
**நட்டதோர் வயலின் நடுமழை பெய்வித்தும்**
**ஒருகவிப் புலவன் உய்ந்தான் அன்றே.**

தன்வீட்டின் அருகே இருந்து பட்டுப்போன புரசமரம் தழைத்து இலைகளைத் தருமாறும், மழைபொய்த்த ஒரு

---

1 தமிழலங். 95
2 ,, 94

காலத்தில் நடவு முடிந்திருந்த சில வயல்களின் அளவில் மழை பொழியுமாறும் பாபநாசம் உலகம்மையின் அருள்பெற்ற நமசிவாயப்புலவர் தமிழ்க்கவிபாடிச்சிறந்திருந்தார் என்றவாறு.

புலவர் புராணம் நமசிவாயப்புலவர் சருக்கத்தில் இந் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. (743)

**122.** **தூக்கிய மாலையைத் துண்டுதுண்டு ஆக**
**வாக்கினால் தறித்தோன் ஆதிய புலவோர்**
**புகழ்எலாம் அறிந்த மட்டில் புகலினும்**
**அஃதோர் காவியம் ஆகும் அன்றே.**

தொங்கவிடப்பட்ட மலர்மாலையைத் தன் கவிதையால் பல துண்டுகளாக அற்றுவிழும்படி செய்த கவிஞன் முதலாகப் பற்பல தமிழ்க் கவிஞர்களின் பெருமைகளை எல்லாம் நான் அறிந்த அளவில் கூறினாலும் அது ஒரு பெரிய காவியம் ஆகி விடும் என்றவாறு.

பூமாலையைத் தறித்த புலவர் யார் என்பது விளக்கமாக விளங்கவில்லை. புலவர் புராணத்தில், "வாக்கு இயலும் ஒரு குருட்டுக் கிழவன் ஓர்ஊர்ச் சிவகாமவல்லி வாயில் தூக்கிய மாலையைக் கவியால் துண்டுதுண்டா விழத்தறித்துச் சொலிச் செய்வித்தோன் நோக்கிஅடி பணிந்துஇறைஞ்சி அரசு உதவும் இறுமாப்பும் நூறி வேண்டும் பாக்கியங்கள் இடப்பெற்றான் ஆதலினால் அருள்போலும் பயன்ஒன்றுஇன்றே"[1] என்னும் ஒரு குறிப்புமட்டும் இடம்பெற்றுள்ளது. பிற செய்திகள் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை.

தமிழ்க் கவிஞர்களின் புகழ் எல்லாவற்றையும் முற்றுத் தேடித் தொகுத்துச் சொல்வது ஒருபுறமிருக்க, எனக்குத் தெரிந்தஅளவு கூறினாலே ஒரு காவியம் ஆகிவிடும் என்பார், 'அறிந்தமட்டில் புகலினும்' என்றார். இவ்வாறு இவர் இயற்றிய காவியமே விருத்தங்களாலான "புலவர் புராணம்" என்னும் நூல்.இத்தகையஒரு நூலைப் படைக்க வேண்டும் என்ற விழைவு

1 புலவர். பலதெய்வப். 16

அவர் உள்ளத்தில் நீண்ட நாட்களாகவே இருந்தது என்பதும், பல ஆண்டுகளுக்குப் பிறகே அவ்வெண்ணம் முற்றுப்பெற்றது என்பதும் அந்நூலில், "நூற்பெயர் யாது என்னில் உண்மைப் புலவர் புராணம் அது ஆம்; நுவலும் இடம் திருநெல்லைநகர்"[1] எனச் சிறப்புப் பாயிரம் கூறப் பிறிதோர் இடத்தில், "நெல்லை யினில் துவக்கும்இது நெடுநாள்என் மனக்கருவில் நின்று என்றும் எல்லைஇல்பா மாலையினம் பிறந்ததற்பின் மாதைநக ரிடத்துஇந் நாளில் குல்லைமலர்க் குகன்கடவ நடைதரும்" என்பதாலும் அறியமுடிகிறது. அறுவகை இலக்கணம் பாடிய பிறகே இவர் புலவர் புராணத்தைப் பாடத் தொடங்கினார்[2] (காண்க. புலவர் புராணம், பொதுப் பாயிரம் 10). எனவே இம் மரபியல்பே அவருக்கு இத்தகைய ஒரு காவியத்தை நாமே பாடவேண்டும் என்ற உணர்ச்சியை ஊட்டியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. பெரியபுராணத்திற்குத் திருத்தொண்டத் தொகை போன்று இப்பகுதி புலவர் புராணத்திற்கு அடிப் படையாகிறது எனலாம். (744)

**103.** **புலமையை இழிவுஎனப் புகல்வார் புந்தி**
**நாணுறும் பொருட்டும், நண்ணுவார் நெஞ்சம்**
**களித்துக் காரியம் கைக்கொள முயலும்**
**பொருட்டும் மரபியல் இவ்வணம் புகன்றுஇனிச்**
**செயல்வகை இயல்பினைச் செப்புதுந் தெளிந்தே.**

தமிழ்ப் புலமை நடைமுறை வாழ்விற்குப் பயன்படாத ஒன்று எனக் கூறுவார் வெட்கமடைந்து அவ்வாறு கூறுதலை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும், அப் புலமையை விரும்பு பவர்கள் மனஊக்கங்கொண்டு அத்துறையில் வெற்றி பெறுவ தற்குரிய பணிகளில் முழுமூச்சுடன் ஈடுபடுவதற்காகவும் தமிழ்ப் புலமையால் பண்டைய புலவர்கள் செய்த செயற்கரிய செயல் களைத் தொகுத்துக்கூறிய "மரபியல்பு" என்னும் இப்பகுதியை இத்துடன் நிறைவு செய்து அடுத்ததாகச் செயல்வகை இயல்பு என்னும் பகுதியைத் தொடங்குவோம் என்றவாறு.

---

1 புலவர். சிற. பா. 6
2 " பொதியா. 51

இலக்கண நூலில் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்ற காரணத்தை இந்நூற்பா விளக்குகிறது. அது முன்பே இவ்வியல்பின் முப்பதாம் சூத்திர உரையில் கூறப்பட்டது. மொழிப் புலமை சமுதாய வளர்ச்சிக்கோ அன்றித் தனிப்பட்டவர்களின் உயர்வுக்கோ சற்றும் பயன் தராது என்பவர்கள் இன்றும் உளர். அத்தகையோரைக் குறித்து எழுந்ததுவே இந் நூற்பா.

இச் சூத்திரத்தால் இவ் வியல்பு நிறைவேற்றப்பட்டு அடுத்த செயல்வகை இயல்பிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (745)

## IV. செயல்வகை இயல்பு

புலமை இலக்கணத்தின் முதல் இயல்பாகிய "தேற்ற இயல்பில்" ஒரு புலவன் தெளிய வேண்டிய செய்திகளும், அடுத்த "தவறியல்பில்" அவன் தவிர்க்க வேண்டிய குற்றங்களும் சுட்டிக்காட்டப்பட்டன. மூன்றாவதாகிய "மரபியல்பில்" இவ்வாறு தெளிந்து குறை நீங்கிய புலவர்களின் சிறப்பு இடம் பெற்றது. இம்முறையில் இவற்றை அறிந்துகொண்ட ஒரு தமிழ் மாணவன் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை இவ் வியல்பு எடுத்துக் காட்டுகிறது. இதனானே இவற்றின் முறைவைப்பும் தெற்றென விளங்கும்.

இவ்வாசிரியர் புலவர்களின் செயற்பாட்டைத் தொழில் நிலை, நடு நிலை, எதிர் நிலை, அருள்நிலை என நான்காகப் பகுத்துக் கொண்டு 41 நூற்பாக்களால் கூறுகிறார். இவற்றின் விளக்கம் அவ்வப்பகுதியின் தோற்றுவாய்களில் வரையப்படும்.

புலமை இலக்கணத்தின் இறுதி இயல்பாகிய செயல்வகை இயல்பின் தலைச்சூத்திரம் இப்பிரிவு நான்கு உட்பிரிவுகளை உடையது என்று கூறி அமைகிறது.

**104. தொழில்நிலை நடுநிலை எதிர்நிலை அருள்நிலை
என்னும் நால்விதம் செயல்வகைப் பாற்றே.**

ஒரு புலவனின் செயல்முறை தொழில்நிலை, நடுநிலை எதிர்நிலை, அருள்நிலை என நால்வகைப்படும் என்றவாறு. (746)

## 1. தொழில்நிலை

புலமையையே பொருளீட்டுதற் குரிய தொழிலாகக் கொள்ளக் கருதுவோர் சிறப்பாகவும், பிறர் பொதுவாகவும் கைக்கொள்ள வேண்டிய சில நெறிகள் இப்பிரிவில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சிலவற்றைத் தேற்றம், தவறு என்னும் இரண்டு இயல்புகளில் இடம்பெற்ற நூற்பாக்களாலேயே பெற முடியும். எனினும் மாணவர் ஐயமின்றித் தெளிவுபெறவும், இவை புலமைத்தொழிலுக்கு இன்றியமையாதன என்பதை வலியுறுத்தும் பொருட்டும் இங்கு அநுவதிக்கப்படுகின்றன. இப்பிரிவில் 9 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

**105. தமிழ்க்கும், தனக்கும், சார்தரு நெறிக்கும்**
**தன்இனத் தினர்க்கும் தவறுஉறா வண்ணம்**
**முயல்வோன் புலமை முதன்மைத்து ஆமே.**

தமிழ் மொழிக்கும், பாடும் தொழிலில் ஈடுபட்டுள்ள தனக்கும், தான் சார்ந்துள்ள சமயத்திற்கும், தமிழர்களாகிய தன் இனத்தினர்களுக்கும் எத்தகைய தீமையும் நேர்ந்து விடாதபடி விழிப்புடன் தொழில் புரிபவனின் அறிவாற்றல் தலைசிறந்தது ஆகும் என்றவாறு.

தமிழ்ப் புலவனுக்கு மொழிப்பற்று முக்கியமாக இருக்க வேண்டுமாதலின் முதலில் தமிழைக் கூறினார். தன் சுயநலத்தைக் கருதி ஒரு புலவன் தன் மொழி, சமயம், தமிழினம் ஆகியனவற்றிற்குத் தீமை பயக்கும் செயல்களில் ஈடுபடக்கூடாது என்கிறார். சார்தரு நெறி என்புழி, "தெய்வத் துதிவழித் தேறாப் புலமை நைவும் சிறுமையும் நாணமும் தருமே"[1] "தன்னுடைச் சமயத் தலைவனைப் பரவா நூல்வழிப் புலமை நுவல்கையும் தவறே"[2] என்னும் இவர் கொள்கைகள்பற்றிச் சமயம் எனப் பொருள் உரைக்கப்பட்டது.

---

1 அறுவகை. 655
2 ,, 700

"காகப் புள்ளன இனத்தொடு கலவாது ஞாளிபோற் பகைக்கும் நாவலர் பலரே"[1] என முன்பே கூறிவிட்டமையின் இங்கு இனம் என்பதற்குத் தமிழினம் என விரிந்த பொருள் கொள்ளப்பட்டது. தனக்குத் தீமை நேர்ந்தாலும் பரவாயில்லை; தன் மொழி, சமயம், இனம் இவற்றிற்குத் தீங்கு நேரலாகாது என்பது மிக உயர்ந்த இலட்சியம். அந்த அளவு இல்லாவிடினும் தன்னலம் எந்த அளவு பேணப்படுகிறதோ அந்த அளவாவது இவைகளும் கட்டாயம் பேணப்படவேண்டும் என்பதற்காகத் தனக்கும் என்றார்.

இம் முதல் நூற்பாவால் ஒரு புலவன் தன் செயல்களால் மற்றவற்றிற்குத் தீங்கு நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (747)

**106. உலகர்தம் வாய்பாடு ஒருங்கு நீத்தலும்
சேர்த்தலும் புலமைச் சீர்க்குஇழிவு ஆமே.**

பொதுமக்களின் சொற்களையும், அவர்கள் கூறும் செவிவழிச் செய்தி முதலியவற்றையும் தன்படைப்பில் சற்றும்சேர்க்காமல் முற்றிலுமாக ஒதுக்கி விடுதல், அவை அனைத்தையும் அப்படியே முழுமையாகப் பயன்படுத்தல் ஆகிய இரண்டும் புலமைத் தன்மைக்குத் தாழ்வை உண்டாக்கும் என்றவாறு.

இங்கு உலகர் என்றது தலைமைபற்றி உயர்ந்தவர்களைக் குறிக்காமல் பன்மைபற்றிப் பெரும்பாலாரைச் சுட்டியது. பெரும்பான்மையோரின் கருத்துகளுக்கும் சொற்களுக்கும் ஒரு நூலில் சற்றும் இடம் இல்லாவிட்டால் அது பாமரரிடையே பரவாது. மாறாக முற்றிலும் அத்தகையோர் சொற்களையும் கொள்கைகளையுமே நிறைத்து எழுதினால் நூல் மிகக் கொச்சையாய் முடிவதுடன் மிக விரைவில் இறந்து படும். எனவே ஓர் இலக்கியப் புலவன் ஆன்றோர் வழக்கு பரவை வழக்கு என்னும் இரண்டிலும் கொள்வனகொண்டு, தள்ளுவன தள்ளி நூல் செய்ய வேண்டும் என்கிறார். (748)

---

1 அறுவகை. 680

**107. அட்டாவ தானம் எமகண்டம் மற்றோன்**
**கண்டதைப் பாடல் ஆதியில் கருதும்**
**தவம்முடி வதன்முன் சருவவொண் ணாதே.**

ஒரு புலவன் தன் அறிவு வன்மையை மட்டுமே பெரிதாக எண்ணித் தனக்கு இறையருள் முற்றிலும் எப்போதும் துணை செய்யும் என்னும் நிச்சயமான துணிவு ஏற்படுவதற்குமுன்ன மேயே அட்டாவதானம், எமகண்டம், கண்டசுத்தி போன்ற ஆபத்தான துறைகளில் விளையாட்டாக ஈடுபடக் கூடாது என்றவாறு.

தவம் முடிவதன்முன் என்னும் சொற்றொடர் விரித்து உரைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் எட்டு வெவ்வேறு செயல் களில் ஒருவன் ஈடுபடுவது அட்டாவதானம் எனப்படும்.

"16 அடி நீள அகலம் உள்ள குழி ஒன்று வெட்டி அக்குழி யின் நான்கு மூலைகளிலும் இருப்புக்கம்பங்கள் நாட்டி அதன் மேல் நான்கு இருப்புச் சட்டங்கள் பரப்பி நடுவினும் சட்ட மிட்டு நடுச்சட்டத்தில் உறிகட்டிக் குழியில் புளியந் தணலிட்டு இருப்புக் கொப்பரையில் அரக்கு, மெழுகு, குங்கிலியம் கந்தகம் சாம்பிராணி நிரப்பி அவை கொதித்திருக்கையில் யானை யைப் பாகருடன் நான்கு மூலையில் நிறுத்திப் பின்புறத்தில் வளையத்திற் சங்கிலி கோத்து எட்டுக் கத்திகளை இடுப்பில் நாலும் கழுத்தில் நாலும் கட்டிக்கொண்டு வளையத்திற் பொருத்திச் சங்கிலிகளை யானைத் துதிக்கையிற் கொடுத்து வைத்துக் கொப்பரைக்கு நடுவாகத் தொங்கும் உறியில் புலவன் இருந்து பல வித்வான்கள் கொடுத்த சமுசையைப் பாடுவது. அவ்வகை பாடானாயின் யானையைத் தூண்ட யானை சங்கிலிகளை இழுக்கப் புலவன் உடல் அறுப்புண்டு கொதிக்கும் தீயில் விழுந்திறப்பன். இதுவே யமகண்டம்" என்பது அபிதான சிந்தாமணி.இவர் சற்று வேறுவிதமாகக் கூறுவார். அது "குன்ற நேர் மதவே ழத்தின் கோட்டினில் கூர்வாள் கட்டி இன்றமிழ்ப் புலவன் கண்டம் அதனிடை இலங்கச் சேர்த்து" "பலகை மேல் நிறுத்தித் தாளில் பருக்கை தோய் சிலம்பு பூட்டிக் குலவும் இராகம் தாளம் கோதிலா அபிநயங்கள் விலகுறாது ஆடச்சொல்லி வேழமீ திருந்து கொண்டு புலவர்பற் பலர்க்கும்

(முன்தான் பூட்டிய விலங்கு நீத்தே) ஒவ்வொரு வரும்ஒவ் வோர்பாட்டு உரத்துடன் வினவ ஏவி''[1]எனக் கூறப்படுகிறது.

எதிரில் உள்ளவரின் கருத்தில் அச்சமயத்தில் இடம்பெற்றுள்ள செய்தியை அவர் கூறாமல் தானே அறிந்துகொண்டு அதனையோ அல்லது அவ்வையத்தின் விடையையோ கவிதையாகக் கூறுவது கண்டசுத்தி எனப்படும். இதனைக் கண்ட சித்தி என்பாரும் உளர். இறையனார் தருமிக்காகப் பாடிய 'கொங்குதேர் வாழ்க்கை'' கண்ட சுத்தியாகும் எனத் திரு 'விளையாடற்புராணம் கூறுகிறது.

ஆதி என்றதால் தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம் போன்ற அவதான வகைகளையும் மழை பொழியப் பாடுதல், ஒரு பொருள் பல துண்டுகளாகும்படிப் பாடுதல் போன்றனவற்றையும் கொள்க.

''நூலின் துணையிலும் நூறு பங்கு அதிகம் தெய்வத் துணை ஆம் செழுந்தமிழ்க் கவிக்கே''[2] என முன்னரே கூறினார். அத் தெய்வத்துணை கைகூடுமுன் ஆபத்தான செயல்களில் ஈடுபட்டால் (இப் பிரிவின் முதல் நூற்பாவில் கூறியவாறு) தனக்குத் தவறு நேர்ந்துவிடும். தவறியல்பில், ''எள்ளிடைப் புலமை இசையும் முன்னம் நெல்லிடை யாண்மை நிலவல் ஓர் தவறே''[3] என்றதுவும் இதுபற்றியே. (749)

108. கல்லார் மகிழ்வுறக் கவித்திறல் காட்டலில்
வல்லார் மகிழ்தரும் வாசகம் பயில்தல்
எண்மடங்கு உயர்ச்சி எனத்தகும் தகுமே.

கல்வியறிவற்ற பாமரர்கள் மட்டும் மிகவும் சுவைத்துப் பாராட்டும்படியாகக் கவிதைகளை இயற்றும் புலமையைவிட அறிஞர்கள் போற்றுமாறு சாதாரண உரைநடையைக் கையாண்டு இலக்கியம் படைப்பவனின் ஆற்றல் பல மடங்கு உயர்வானது என்பது தேற்றம் என்றவாறு.

---

1 புலவர். காளமேக. 49,50,51

2 அறுவகை. 649

3 ,, 679

மக்கள் இலக்கியம், சமுதாய இலக்கியம், எளியோர்க்கும் பயன் தரும் இலக்கியம் என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டு சொற்சுவை, பொருட்சுவை, மொழி மரபு முதலிய எதனைப்பற்றியும் எள்ளளவு அறிவும் இல்லாமல் சில கவிஞர் முறையான மற்றும் ஆழமான கல்வியற்ற பாமரர்களால் பாராட்டப்பெற்றுத் தாம் பெரும் கவிஞர்கள் என்று தருக்கித் திரிவர். இவர்களில் பெரும்பான்மையோர் உண்மையான அறிஞர்களை இகழ்ந்து கொண்டும் இருப்பர். இத்தகையோ ரின் புலமையைக் காட்டிலும் கவிதையே இயற்றாமல் நல்ல அறிஞர்கள் மெச்சும்படியாக உரைநடை எழுதும் ஒருவனு டைய அறிவாற்றல் பலமடங்கு உயர்ந்தது என்கிறார். இக் கருத்தை இவர் வேறொரு நூலிலும் தெளிவாக, ''கல்லார் பலர்புகழும் காட்சியிலும் கற்றுணர்ந்த வல்லார் சிலர்புகழ்தல் மாட்சியாம்''[1] என்கிறார்.

எண்மடங்கு என்றது பல மடங்கு என்ற பொருளில். தகும் தகும் என்றது உறுதிபற்றி. உரைநடை எழுத்தாளனைவிடக் கவிஞன் உயர்ந்தவன் எனக் கருதப்பட்ட இவர் வாழ்ந்த காலத்திய இலக்கியக் கண்ணோட்டம் இந்நூற்பாவால் அறியக் கிடக்கிறது. (750)

**109.** **உன்னிய கருமம் உடனே முடிக்கும்**
**புலமை உடையான் புயங்கமன் அனையான்**
**என்னமு துலகே இயம்பும் அன்றே.**

தான் நினைத்த செயலைத் தன்வாக்குப் பலிதத்தாலேயே உடனே செய்து முடிக்கின்ற ஆற்றல் உடைய புலவனை ஆதி சேடனுக்கு இணையானவன் என்று உலகத்தவர் கூறுவர் என்றவாறு.

புலமை என்பது இலக்கிய அறிவுமட்டுமன்று; அதன் துணை கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்துமுடிப்பதே என்னும் இவர் கொள்கை இங்கும் கூறப்பட்டது. இது அடுத்த நூற்பாவிலும் இடம்பெறுகிறது. (751)

---

1 சிறப்பு நூல் 80.

110. புலமையின் ஆண்மையும் புகழ்ச்சியும் கருதிப்
பெறலே பயன்எனப் பெரிதுநெஞ்சு அயர்வோன்
பரிதிமுன் ஆடும் பாம்புக் குருளை
அனையவன் தான்என்று அறிவார் சிலரே.

தான் கற்ற கல்விக்குக் கல்வி, செல்வம் இவற்றால் உண்டாகும் பெருமிதமும், பலராலும் பாராட்டப்படும் சிறப்புமே பயன்கள் எனவும், அதனால் அவற்றை எப்படியாவது பாடு பட்டுப் பெறவேண்டும் எனவும் கருதி வருந்தி உழைப்பவன் சூரியனுக்கு முன்னால் நெளிந்து ஆடுகின்ற பாம்புக்குட்டி போன்றவனே ஆவான். ஆனால் இந்த உண்மையை அறிந்தவர் மிகச்சிலரே ஆவர் என்றவாறு.

ஆண்மையும் புகழ்ச்சியும் கருதிப்பெறலே புலமையின் பயன் எனக்கொண்டு கூட்டுக. அன்றிப் புலமையினால் என மூன்றன் உருபை விரித்துரைப்பினும் அமையும். ஆண்மை என்றது கல்வியாற் பதவியும் பொருளும் பெற்று அடையும் பெருமிதத்தை.

கல்வியாற் பெறும் பயன்கள் இவையே என எண்ணி முயல் பவன் வெய்யில் தாங்காமல் நெளியும் பாம்புக் குட்டியைப் போன்றவன் என்கிறார். பாம்பு எத்தகையதாயிருப்பினும் காண்போருக்கு அச்சத்தை விளைவிக்கும். அவ்வாறு இப்புலவனும் பிறர் உள்ளத்தில் மதிப்பை உண்டாக்குவான். ஆனால் அந்த அச்சம் ஏதாவது ஒரு வகையில் நீங்குவது போலவே இவன் பெறும் மதிப்பும் நீங்கிவிட வாய்ப்புண்டு. எனவே இப் பயன்கள் போதா என்கிறார்.

முன் நூற்பாவில் செயற்கரிய செயல்களைத் தம் வாக்கு வன்மையால் செய்து காட்டுகிறவர்கள் ஆயிரம் நாவுடையவனும், இவ்வுலகத்தையே தாங்குபவனும், பெரும் பேரறிவு வாய்ந்தவனுமாகிய ஆதிசேடனுக்கு இணை என்றுகூறி இந் நூற்பாவில் அவ்வாற்றல் இல்லாதவன் ஒரு சாதாரணப் பாம்பு போன்றவன் என்கிறார். இலக்கண இலக்கிய நூலாசிரியர்களில் பலர் இக்கருத்தைக் கூறாததாலும், கற்றவர்கள் அனைவரும் அருஞ்செயல்களை நிகழ்த்திக் காட்டவேண்டுமென எதிர்

பார்க்க முடியாததாலும் அறிவார் சிலரே என்றார். இதன் அருமை இவர் கொண்ட உவமையாலும் விளங்குகிறது. ஆதி சேடன் ஒருவன்தான். பாம்புகள் பலவாகும். பல அரவுகள் இருந்தால்தான் ஒருவன் அரவரசனாகத் திகழமுடியும். பாம்புவமை அடுத்த நூற்பாவிலும் தொடர்கிறது. (752)

**111. அந்நாட் புலவருக்கு ஆகிய பெரும்பேறு**
**இந்நாட் புலவர்க்கு இலைஎனும் கவிஞன்**
**பாம்புஉறழ் தோற்றம் படைத்துள மீனே.**

''முற்காலக் கவிஞர்களுக்கு இயல்பாகவே மிகுதியான நல்லூழ் இருந்தது. அத்தகைய அதிர்ஷ்டம் இன்றைய புலவர்களுக்கு இல்லை. எனவே இக்காலத்தில் எம்போன்றவர்கள் செயற்கரியனவற்றைச் செய்ய இயலாது'' என்று படித்தவன் ஒருவன் கூறுவானாகில் அவன் பார்வைக்கு மட்டிலும் பாம்பைப் போலக் காட்சிதரும் ஒரு மீன்போன்றவனே ஆவான் என்றவாறு.

பாம்பைப்போல் காட்சிதரும் மீனுக்கு எவ்வாறு கொத்தும் ஆற்றலும் அதனால் பிறருக்கு அச்சம் விளைவிக்கும் பண்பும் இல்லையோ அவ்வாறே இத்தகையோர்பாலும் பிறர்நெஞ்சில் பயத்தோடு கூடிய மதிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வல்லமை இராது என்பது கருத்து. பாம்புறழ் மீனே என்றதால் போலிப்புலவன் என்க.

சிலர் ''கலி முற்றிவிட்டது. இப்போது அறம் இல்லை. சத்தியம் இல்லை. எனவே திருவருட்செயல்கள் எதுவுமே நடைபெறா'' என்பர். அப்படியானால் இறைவனின் திருவருள் குறைந்துவிட்டதா? பரம்பொருள் பழமையாகிப் போய்த் தன் ஆற்றலை இழந்துவிட்டதா? கலியின் ஆற்றல் இறைவனின் ஆற்றலுக்கு மேற்பட்டதா? என்றெல்லாம் வினாக்கள் தோன்றும். இக்கூற்று சாத்திரங்கள் பரம்பொருளுக்குக் கூறும் இலக்கணத்தையே பொய்யாக்கிவிடும். எனவே இவ்வாறு காலம், இடம் என்று சமாதானங்களைத் தேடிக்கொண்டிராமல் இறையருளைத் திண்மையான பற்றாகப் பற்றி முயலவேண்டும் கருத்து என்பது. ''கலிபுருடன் வயது ஒருநூறுஆய போதும்

சுற்கிமுகத் துடன்ஒருவன் கைவாள் ஏந்தி வலிமலிபாதகர்குல வேர் அறுப்பான் என்கை வருகாலம் நுவல்பனுவல் வார்த்தை அன்றோ"[1] என இவர் ஓரிடத்தில் வினவுகிறார்.

கல்வியின் முடிந்த முடிவு வீட்டின்பமே என்பது சமய நூற் றுணிபு. "கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன் நற் றாள் தொழாஅர் எனின்" என்னுங்குறளுரையில் மணக்குடவர், "சொல்லினானே பொருள் அறியப்படுமாதலின் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாகும்" என்றதும் இது பற்றியே. இந்நூலாசிரியர் ஓர் உயிர் முக்தி பெறுவதன் முன்னம் திண்ணமாகச் சித்தியை-அதாவது செயற்கரிய அதிசயங்களை இயற்றும் வல்லமையைப் பெறும் என்ற உறுதியை உடையவர். இதனை, "சித்தியொன் றேனும் தெரியப் புரிந்திடான் முத்தி யும் சாவேஎன்று உந்தீபற';[3] "தேன்நேர்செந் தமிழ்ச்சுவை உண்டு அணிமா ஆதிச் சித்திமிகச் செய்துமனத் திருப்தி எய்தி மான்நேர்கண் ணார்கலவிச் சுகமும் கைத்து மறுபிறப்பில் லாதொழிந்தால் மாண்பினோரே'[4] மங்கலம்இல் லாவிடினும் புருடற் சேர்ந்தால் மகப்பெறலாம் எனக்கருதும் மடநல் லாள் போல் சிங்கம்ஒல்கும் சரபம்நிகர் ஆண்மைச் சித்திச் செய லிழந்து முத்திபெறச் சிந்திக் கின்றோன் பங்கம் அறான்"[5] "ஒருவன் இலட்சாதிகாரியாவதன்முன் கோடீசுவரன் ஆகான் என்பது போல எப்படிப்பட்ட தவசியும் சித்தன் ஆவதன்முன் முத்தன் ஆவதில்லை"[6] என்பனபோல மிகப்பல இடங்களில் வற்புறுத்துகிறார். எனவேதான் சமய நூல்கள் அனைத்தும் வீட்டின்பத்தைக் கல்வியின் பயனாகக் கூற இவர் சித்தியை வலியுறுத்துகிறார். (753)

---

1 கௌமார முறைமை 287

2 குறள். மணக்குடவர் 2

3 சதக உந்தி 80

4 தியானாநுபூதி 11

5 நானிலைச். 51

6 சத்தியவாசகம் 41

**112. யாவரும் புலமையின் ஏற்றம் தோய்வுறின்
தேவ ரேயெனச் சிறப்பது திறமே.**

யாராக இருந்தாலும் வாக்குப்பலிதமுடைய புலமையின் சிறப்பை அடையப் பெற்றால் அவர் கடவுளர்களுக்கு இணை யாகப் போற்றப்படுதல் ஒருதலை என்றவாறு.

இவ்வாசிரியர் கல்வியையும் - அஃது இறையுணர்வோடு கூடியதாயின் - ஒரு தவம் என்றே கொள்பவர். எனவேதான் கல்வியால் சித்தி முத்திகளைப் பெறவேண்டும் என்கிறார். இக் கல்விக்கு ஏழை பணக்காரன், உயர்குலம் இழிகுலம்,பதவி-உள்ளவன் இல்லாதவன், ஆண் பெண் என்ற எந்தப் பாகு-பாடும் இல்லை. சாதாரண உலகியற் கல்வியாற் சிறப்படைந் தவனே, "களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர் விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்; கடைநிலத் தோர் ஆயினும் கற்றறிந் தோரைத் தலைநிலத்து வைக்கப் படும்"[1] எனப்படும்போது எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணிய தெய்வப்புலவன் தெய்வமாகவே போற்றப்படுதல் உறுதி. இதே கருத்தை இவர் வேறோரிடத்தில், "எக்குலத்து எவர்ஆ னாலும் ஏன்றமா தவம்செய் வாரேல் திக்குணர் புகழ்ச்சி தோய்வார்" [2] என்கிறார். இம் மேற்கோளில் திக்கு என்பது திக்குப் பாலகர்களுக்கு ஆகுபெயர். (754)

**113. புலமைத் தொழிலின் புகழ்எலாம் புலவோர்
தாமே அறிவது சரதம் ஆமே.**

புலமையின் சிறப்பையெல்லாம் மற்றொரு புலவனால் தான் முற்றிலுமாக உணர முடியும் என்பது உண்மையாகும் என்றவாறு.

"புலம்மிக் கவரைப் புலமை தெரிதல் புலம்மிக் கவர்க்கே புலனாம்-நலம்மிக்க பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே:

1 நாலடி. 133.
2 புலவர்.கந்தசாமிப். 2.

பாம்புஅறியும் பாம்பின கால்"[1] என்று முன்றுறை அரைய னார் கூறியதும் இது.

இந் நூற்பாவுடன் தொழில்நிலை என்னும் இப்பிரிவு நிறைவு பெறுகிறது. (755)

## 2. நடுநிலை

இப்பிரிவில் தவிர்க்க முடியாத காரணங்களால் புலவர் இருவர்க்கிடையே போட்டி ஏற்பட்டுவிட்டால் அப்போட்டிக்கு நடுவராக இருப்பவர் எப்படி ஒழுக வேண்டும் என்பது சிறப் பாகவும், போட்டியாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பொதுவாகவும் கூறப்பட்டுள்ளது. நடுநிலை பற்றிய ஓரிரு பொதுக் கருத்துகளும் இதில் இடம்பெற் றுள்ளன. இப்பிரிவில் பத்து நூற்பாக்கள் உள்ளன.

**114. சுருதியும் புலவோர் சொல்லே என்றிடல்**
**நடுநிலை ஆம்என நவில்வார் பெரியோர்.**

பிறரால் இயற்றப்படாமல் தாமே உண்டானவையாகக் கூறப்பெறும் மறைகளும் புலவர்களால் வெளியாக்கப்பட்டனவே ஆகும் என்று தெளிந்து கூறுபவர்கள் சான்றோராவர் என்ற வாறு.

இனி "நடுநிலை ஆம்எனப் பெரியோர் நவில்வார்" எனக் கூட்டினும் அமையும்.

மறைகள் மனிதர்களால் இயற்றப்படாமல் தாமே தோன் றின என்பர். இதுபற்றியே வடமொழியில் அவை 'அபௌருஷே யம்' என வழங்கப்படும். இதற்கு மனிதர்களால் செய்யப்படா தவை என்று பொருள்.

மறைகள் எப்படியோ ஒரு மனிதன் மூலமாகத்தான் மக்க ளினத்தை அடைந்திருக்கவேண்டும். அல்லது ஒரு கடவுளின் வழியாக என்றேனும் கொள்க. ஒரு வாய் கூற அதனைப் பல செவிகள் கேட்டுத்தான் நூலோ செய்தியோ பரவ முடியும்.

---

1 பழமொழி. 5.

பரம்பொருள் ஒரு மனிதனை-அல்லது கடவுளரில் ஒருவரைக் கருவியாகக் கொண்டு உள்நின்று உணர்த்துகிறார் என்றே வைத்துக் கொள்வோம். இப்படி இறைவனால் உள்நின்று உணர்த்தப்பட்டதாலேயே'கருவியாகிய அவர் முதலில் புலமை பெற்றுப் புலவர் ஆகிவிடுகிறார். உலகத்திற்கு எட்டுவது இறைவனின் செய்தியே எனினும் புலவரின் வாய்மொழியே. இதுபற்றியே இவர் ஏழாமிலக்கணத்திலும் "வேதாமோ டாகமம் விரித்துஉரைத் தானும் புலவன்என்று உணராப் புல்லியர் பலரே"[1] என்றார். "நாடா முதல்நான் மறைநான் முகன் நாவிற் பாடா'' என்னும் தனிப்பாடல் கலைமகள் பிரமனின் நாவில் இருந்து மறைகளைக் கூறியதாக அமைந்திருத்தல் காண்க. (756)

**115. நன்றிடை தீதும் தீதிடை நன்மையும்**
**ஒன்றுமாறு உணர்வோன் ஒவ்வோர் புலவனே.**

எந்த ஒரு நல்ல பொருளிடத்தும் சில தீய பண்புகளும், எத்தகைய தீய பொருளிடத்தும் சில நல்ல குணங்களும் இயல்பாக விரவியே இருக்கும். ஆனால் இதை உள்ளபடி உணர்வோர் ஒரு சில அறிஞரே என்றவாறு.

முற்றிலும் நல்ல பொருள் அல்லது மனிதர் என்றோ, அவ்வாறே அனைத்து வகையாலும் தீயபொருள் அல்லது மனிதர் என்றோ இல்லை. எங்கும் இரண்டும் விரவியே காணப்படும். இது பற்றியே, "குணம்நாடிக் குற்றமும் நாடிஅவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்"[2] என்றார் வள்ளுவப் பெருந்தகை.

**116. இன்பமும் தெய்வமும் இடைநிலைப் பொருள்எனல்**
**வன்புடைப் புலவர்தம் வாய்மொழி யாதே.**

இந்நூற்பாவின் பொருள் ஐயமற விளங்கவில்லை. (758)

**117. தன்வழக்கு எதிர்த்தோன் தன்னாற் சிதையினும்**
**ஆம்எனப் பகர்வான் அறிவுடைப் புலவனே.**

---

1 ஏழாம் இலக். 311
2 குறள் 504

ஒரு புலவன் மற்றொருவனோடு வாதம் புரியுங்கால் தன்னுடைய கருத்து தவறானது என மற்றோனால் ஐயமற நிருபிக்கப்பட்டுவிட்டால் தன் தோல்வியை ஏற்றுக்கொள்பவனே நல்லறிஞனாவான் என்றவாறு.

வாதத்தில் தோற்றபிறகும்-தன்கொள்கையைச் சரியானது எனநிலைநாட்ட முடியாத நிலையிலும் - போலித் தன்மானம் கருதி வீண்வாதம் செய்யாமல் பெருந்தன்மையோடு தோல்வியை ஒப்புக்கொள்வதே அறிவுடைமை என்கிறார். (759)

**118.** **இகலிய புலவோர் இடைநிலைக் காரன்**
**வஞ்சகம் பேசின் மதியமும் இரவியும்**
**உள்ள காறும் நிரயத்து உழலுமே.**

வாதமிடுகின்ற இரு புலவர்களின் சொற்போருக்கு நடுவராக அமைந்த ஒருவன் இருதரப்பு வாதங்களையும் நடுநிலையில் நின்று சீர் தூக்கி வன்மை மென்மைகளை உணர்ந்து நியாயமான தீர்ப்பை வழங்காமல் தன் சொந்த வெறுப்பு விருப்புகளின் காரணமாக ஒருவனுக்குச் சாதகமாகச் சார்ந்து நின்றால் அவன் சூரியனும் சந்திரனும் நிலைபெற்று நிற்கும் நாள் வரையில் மீளா நரகத்து உழல்வான் என்றவாறு.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி",[1] "வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே பாதாள மூலி படருமே - மூதேவி சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே மன்றோரம் சொன்னார் மனை"[2] என்றெல்லாம் ஆன்றோர் கூறியவை இதுவே.

**119.** **பாட அறியார் படிப்பின் களிப்பால்**
**நாவலர் புகழ்வது நண்ணிப் பொருங்கால்**
**இடைவரும் புலவோன் இடியேறு என்ன**
**நக்குமிக்கு இகழ்வது நலம்ஆம் அன்றே.**

சொந்தமாகக் கவிதை புனையும் ஆற்றல் இல்லாத இருவர்

---

1 குறள் 118

2 நல்வழி 23

தாம் பழைய செய்யுட்களை நிறைய மனப்பாடம் செய்து வைத்திருக்கும் கருவத்தால், நாட்டில் உள்ள மக்களிடம் பாராட்டுப் பெறவேண்டும் என்னும் ஒரே காரணம் பற்றி வாதிடப் புகுந்தால் நடுவர்-அவர் படைப்பாற்றல் மிக்கவராக இருப்பதால்-அவ்விருவரையும் பரிகசித்து ஏளனம் செய்வதே சரி என்றவாறு.

படைப்பாற்றல் அற்றவர்களுக்கு வாதம் தேவையற்றது என்கிறார். இது இலக்கியப்புலமை ஒன்றற்கே பொருந்துமாக லின் தத்துவம், சோதிடம் போன்ற பிற துறைகளுக்காக இது கூறப்படவில்லை. இக்கருத்து மேல்வரும் நூற்பாக்களாலும் தெளிவாகிறது. (761)

**120.** **வாதுக்கு ஆதரம் ஆகிய வண்ணமும்**
**விருதுக்கு ஆதரம் ஆயவெண் பாவும்**
**அறியாப் புலவருக்கு அமர்விளைந் திடுங்கால்**
**அவ்விரு புலவரும் அறிந்த பாடல்**
**தொகையில்ஒன்று உயர்வது குறித்துக் காட்டிப்**
**பாடும் திறமையில் பழுதுபட் டோனை**
**மற்றவன் புடைக்கச் செயது மகிழ்வது**
**தக்க பான்மைஎன்று உரைப்பது தரமே.**

இரு புலவர்கள் வாதிட்டால் தோற்றவர் தம் காதை இழப்பதற்குச் சித்தமாக இருப்பது வண்ணத்தில் எழும் வாதம் ஆகும். தோற்றவன் தான் அதுவரை பெற்றுள்ள சிறப்புப் பட்டங்கள் அனைத்தையும் விட்டுவிடவேண்டியது வெண்பாத் தோல்வியிலாம். வாதிடும் இருவரும் வண்ணமோ, வெண்பாவோ இயற்றத் தெரியாதவர்களாக இருப்பின், அவ்விருவருக்கும் புனையத் தெரிந்த ஒரு யாப்பில் பாடல்களை இயற்றச் சொல்லி, அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து எது சிறந்தது என்பதைக் காரணங்களோடு விளக்கித் தீர்ப்பு வழங்கிய பிறகு தோற்றவனை வென்றவன் அடிக்க வைத்து மனநிறைவைப் பெறுவது சரியான பண்பே என்றவாறு.

இரு புலவர்கள் வாதஞ்செய்தால் அப்போர் இருவராலும் நன்கு கையாளக்கூடிய யாப்பின்அடிப்படையிலேயே இருத்தல்

வேண்டும். வெண்பா மிகக் கடினமானது; வண்ணம் மிகப் பலருக்கு அரிதினும் அரியது. இவை கைவந்த மேலோர் தம்முள் வாதிடும்போதுதான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மற்ற சமயத்தில் வாதிடுவோர் இருவரும் நன்கு அறிந்த ஒரு செய்யுள் வகையே தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் வாதம் சமமாக அமையும்.

நடுவர் தன் விருப்பம் போலத் தீர்ப்பு வழங்கிவிடாமல் காரணத்தை விளக்கித் தெளிவுபடுத்த வேண்டும் என்பதை ஒன்று உயர்வது குறித்துக் காட்டி என்றார்.

15 முதல் 18 – ஆம் நூற்றாண்டு வரையில் கவிஞர்களுக்குள் போட்டிகள் ஏற்பட்டபோது அவர்களில் வென்றவர் தோற்றவருக்கு உடலால் ஊறுசெய்தார் எனப்பல செவிவழிச் செய்திகள் உலவுகின்றன. இது படித்த புலவர்களுக்கு ஏற் புடைய செயலாகத் தோன்றவில்லை, எனினும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் முறையில் அச்செயலிலும் எந்த அளவு நடுநிலை தவறாத அறத்தைப் புகுத்த முடியுமோ அந்த அளவு கூறி இந்நூற்பாச் செய்தார். மற்றவர்களுக்கு எந்த நிலையிலும் எந்தக் காரணத்தாலும் தீமை செய்யக் கூடாது என்பதே இவர் சொந்தக் கருத்து. (762)

**121. வெண்பாத் தோல்வியில் விருது இழப்பதுவும்**
**வண்ணத் தோல்வியில் வார்செவி இழப்பதும்**
**பழமை யாம்எனல் பல்லோர் வழக்கே.**

வெண்பாவின் அடிப்படையில் ஏற்பட்ட போட்டியில் தோல்வியடைந்த புலவன் தான் அதுவரை பெற்றிருந்த சிறப் புப் பட்டங்கள், பல்லக்கு முதலிய விருதுகள் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். அதேபோல வண்ணப் போட்டியில் ஒரு வன் தோல்வியுற்றால் அவன் காதுகள் அரியப்பட்டுவிடும். இது பண்டைய மரபு எனப் பலர் கூறுவர் என்றவாறு.

காது கொய்தல் பற்றி இந்நூல் 684, 685 நூற்பா உரை களில் கூறப்பட்ட செய்திகளை இங்கும் இணைத்துக் காண்க.

**122. தேமாங் கனிஉறழ் செழுந்தமிழ்ப் புலமையைச்**
**சுண்டைக் காய்நிகர் சுவையுடைப் புலமையும்**
**வெல்லும்; நடுநிலை விளக்கம் காணாப்**
**புல்லிய புலவோர் பொருந்துஅவை யிடத்தே.**

உண்மையான நடுநிலையில் நில்லாது இழிகுணம் மிக்க புலவர்கள் தீர்ப்பு வழங்குபவர்களாக அமைந்துள்ள ஒரு மன்றத்தில் இனிய மாம்பழம் போன்று சிறந்து விளங்கும் நற்றமிழ்க் கல்வியை அளவால் மிகச் சிறியதும் சுவையால் கசந்ததுமாகிய சுண்டைக் காயைப் போன்ற புல்லறிவும் வென்றதாகப் பெயர் பெற்றுவிட முடியும் என்றவாறு.

"பொருட்குவை, குலத்து உயர்வு, அரசு, பூண், உடை, பட்டம் ஆகியபற்றிப் புலமைக்கு உயர்ச்சி கூறலும் ஒவ்வா மறையே[1]" "இகவிய புலவோர் இடைநிலைக்காரன் வஞ்சகம் பேசின் மதியமும் இரவியும் உள்ளகாறும் நிரயத்து உழலுமே"[2] என நடுவருக்கு நேர்மை எவ்வளவு இன்றியமையாதது என முற்கூறப்பட்டது. என்றாலும் சில சமயங்களில் நடுவர் களிடத்தில் நேர்மை இருப்பதில்லை. இந்நிலையின் விளைவை இந்நூற்பா சுட்டிக்காட்டுகிறது.

திருவிளையாடற் புராணம் இசைவாது வென்ற படலத்தில் இத்தகைய ஒரு நிலையைக் காண்கிறோம். பத்திரனின் மனை விக்கும் இலங்கைப்பாடினிக்கும் இடையே வாதம் ஏற்பட்ட போது, அரசன் இலங்கைப்பாடினியின் சார்பாக இருக்கிறான் என்பதை உணராத அவையினர் நடுநிலையில் நின்று பத்திரன் மனைவியின் பாட்டைப் புகழ்கின்றனர். பிறகு அரசனின் கருத் தறிந்து கட்சி மாறுகின்றனர். "அரசன் உட்கிடை அறிந்திலர் அவைக்களத்து உள்ளார் விரைசெய் வார்குழல் பாடினி பாடலை வியந்தார்; புரைசை மானிரைப் பூழியன் இலங்கை யிற் போந்த வரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலை மகிழ்ந்தான்."[3] "தென்னவன் உட்கோள் எல்லை தெரிந்தனர்

---

1 அறுவகை. 708
2 ,, 760
3 திருவிளை.இசைவாது 17

அவையத் துள்ளோர் அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தனர் அவளைத் தானே'' "மன்னவன் வழுதி வார வழிவழக்கு உரைப்பது ஆனான்; அன்னவன் கருத்திற்கு ஏற்ப அவையரும் அனையர் ஆனார்; பின்நடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவர் ஐயா''[2] என இது கூறப்படுகிறது. அன்று அச்சபையில் பொய்மையே வென்றது. (764)

**123. நடுநிலை அனைத்தும் நாமகள் போலும்**
**கவிஞர்தம் உளத்தில் கவின்தரும் அன்றே.**

ஒருபாற் கோடாமையாகிய நடுநிலையின் மாண்புகள் யாவும் முற்றிலுமாகக் கலைமகளுக்கு இணையான உண்மைப் புலவர்களின் மனத்தகத்தே தாமே தோன்றி நிலைபெற்று விளங்கும் என்றவாறு.

மெய்ப் புலவர்கள் உளத்தில் கவின்தரும் என்றதனானே அருத்தாபத்தியாகப் போலிப் புலவர் நடுநிலைச் சிறப்பை உணரார் என்பது பெறப்பட்டது. உளத்தில் கவின்தரும் என்றதால் அதை வார்த்தைகளால் விரித்துக் கூறவேண்டா என்பதாயிற்று.

இத்துடன் இப்பிரிவு நிறைவு பெறுகிறது. (765)

## 3. எதிர்நிலை

எதிர்நிலை என்பதற்குத் தன்முன் வந்துள்ள புலவன் அல்லது ஒரு காரியத்தைப் பற்றிய செய்திகளைக் கூறும் நூற்பிரிவு என ஒரு பொருள் கொள்ளவேண்டும். இப்பிரிவின் முதல் நூற்பாவும், பத்தாம் நூற்பாவும் முறையே இதுபற்றியன. எதிர்நிலை என்பது எதிர்காலத்தைப் பற்றிய செய்திகளைக் கூறும் நூற்பிரிவு எனப் பொருள் கொண்டு இரண்டு முதல் ஒன்பது முடிய உள்ள சூத்திரங்களைப் பார்க்க வேண்டும். எதிர் என்பது இங்குத் தற்காலத்திய இடமுன், வருங்காலம் என்னும் இரண்டையும் உணர்த்த நின்றது.

---

1 திருவிளை. இசைவாது. 18
2 ,, ,, 22

இப்பிரிவும் பத்து நூற்பாக்களால் ஆயது.

**124. தன்எதிர் நிலவிய புலவன்நற் றமிழ்நடை**
**அன்னவன் இரட்டை ஆசிரி யத்தால்**
**துலங்கும் எனவும் சொல்வார் பலரே.**

தனக்கு எதிர்ப்பட்ட ஒரு கவிஞன் எந்த அளவிற்குத் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கையாள வல்லவன் என்பதை அவன் இயற்றும் இரட்டை ஆசிரிய விருத்தத்தைக் கொண்டும் அறியலாம் என்று கூறுபவர்களும் பலர் உளர் என்றவாறு.

இந்நூற்பா பிறன்கோள்கூறல். இவர் வெண்பாவையே ஒரு கவிஞனின் ஆற்றலைச் சரியாக அளக்கும் கருவி என வேண்டுவார். இதனை "இளமைப் புலவோர்க்கு இசையாது இகலி முதியோர் சிலர்க்கு முன்னும்முன் உதவல் வெண்பாப் போலும் வேறு ஒன்று இன்றே"[1] எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

"ஐந்துயிர்க் காயொடும் ஐந்துயிர் விளத்தொடும் ஐந்திடத்தே ஐந்தினோ டிரண்டுபெறு காய்கனிச் சீரோடும் ஆகுமன்றே"[2] என இலக்கணம் பெற்ற அறுசீர் விருத்தத்தை இரட்டித்துப் பாடும் ஆசிரியவிருத்தம் இரட்டையாசிரிய விருத்தம் எனப்படும். ஐந்து மாத்திரை கொண்ட சீர்கள் ஐந்தும் ஏழு மாத்திரைச் சீர் ஒன்றும் இணைந்து அரையடி ஆவது இந்த யாப்பு. புலவனின் நடைவளத்தை இது நன்கு விளக்கும் என்ற கருத்தால்தான் மிகப் பெரும்பாலான சீட்டுக்கவிகள் இந்த யாப்பில் எழுந்தனபோலும்.

தமிழ் இலக்கிய உலகிற்குத் தெரிந்தும் – சற்றும் பெயரளவில் கூடத் தெரியாமலும்-அழிந்துபட்ட நூல்கள் அனைத்தும் என்றாவது ஒருநாள் இறைவன் திருவருளால் வெளிப்படும் என்ற நம்பிக்கையும், எதிர்காலத்தில் பலவகையான நூல்கள் இயற்றப்படல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பின்வரும் நூற்பாக்களால் தெரிய வருகின்றன.

---

1 ஏழாம் இலக். 270 2 விருத்தப்பாவியல் 55

125. அளப்பரும் பனுவல் அகண்டம் ஆய
நாத சத்தியின் நனந்தலை கிடந்து
பகர்வார் வரவு பார்க்கின் றனஎனப்
பெரியோர் பற்பலர் பேசினர் அன்றே.

இதுவரையில் தமிழில் இயற்றப்பெற்ற கணக்கற்ற சிறந்த நூல்கள் பகுக்கப்பட முடியாததாகிய நாத தத்துவத்தின் நடுவில் தங்கியிருந்து எவரேனும் தம்மை மறுபடியும் வெளிப் படுத்துவர் என எதிர்நோக்கி உள்ளன என்பதாகப் பல சான்றோர்கள் கூறியுள்ளனர் என்றவாறு.

பழைய தமிழ் உரைகளாலும் இலக்கியங்களாலும் எத்த னையோ தமிழ் நூல்கள் அழிந்துவிட்டன என அறிவதோடு அவற்றில் பலவற்றின் பெயர்களையும், சிலவற்றின் சிறு சிறு பகுதிகளையும் அறிகிறோம். இவ்வாறு அறியப்படாமல் போன நூல்கள் ஆயிரக்கணக்கில் இருக்கலாம். அவையாவும் அழியவில்லை. பரவெளியில் நாத தத்துவத்தில் உள்ளன. முயல்வார் முயலின் இறையருளால் வெளிப்படும் என்கிறார்.

இவ்வாறு மறைந்த நூல்களைப்பற்றி அடுத்த நான்கு நூற்பாக்கள் கூறுகின்றன. (767)

126. தில்லைக் கோயிற் றிருமதிற் செல்லால்
சொல்லைமிக்கு இழந்துள தூய பாடல்
கறைமிடற்று அண்ணல் கழறக் கேட்டுஅவண்
நிறைவுஉறச் செய்தல் நீதி அன்றுஎனப்
பகர்வார் சைவருள் பதராம் அன்றே.

சிதம்பரத்துக் கோயிலில் தேவாரச் சுவடிகள் அனைத் தும் வைக்கப்பட்டிருந்தபோது ஏற்பட்ட கறையான் அரிப்பால் பெரும்பகுதியை இழந்துவிட்டுள்ள புனிதமான தேவாரப் பாடல்களில் இப்போது கிடைக்காதனவற்றை எல்லாம் சிவ பெருமானிடம் இறைஞ்சிக் கேட்டு அவர்வழியாகப் பெற முயலல் முறையாகாது எனக் கூறுவார் சைவருள் இழிந்தவரே என்றவாறு.

தேவாரத்தின் பெரும்பகுதி அழிந்துவிட்டமை திருமுறை கண்ட புராணத்தால் தெரிய வருகிறது. இறைவனே, "வேதச் சைவநெறித் தலைவர்எனும் மூவர் பாடல் வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே இன்று வேண்டுவன வைத்தோம் என்று உலகில் உள்ள மாந்தரொடு மன்னவரும் கேட்கு மாற்றால்"[1] கூறி விட்டதால் மறுபடியும் அவரைத் தேவாரப் பதிகங்களை முழுவதும் தந்தருள்க என இறைஞ்சுவது முறையாகாது எனக் கருதல் வேண்டா என்கிறார். (768)

**127. அருணை யூரன் அன்று ஆழியிற் சிதறும்**
**பனுவலை முற்றும் பார்ப்போன் யாமும்**
**குகவேள் அடிமை என்று கூறித்**
**திருத்தகு புலமை செய்வார் தம்மில்**
**சீரி யோர்எனச் செப்பிடல் இசைவே.**

முற்காலத்தில் அருணகிரிநாதர் கடலில் எறிந்துவிட்ட சுவடிகளில் இடம்பெற்ற திருப்புகழ்ப் பாக்களையும் சேர்த்து அதனை முழுமையாகக் காண்பவனே முருகனடியார்கள் என்ற பெயர் தாங்கிப் புலமையோடு திகழ்பவர்களுக்குள் சிறந்தவர் ஆவர் எனக் கூறுதல் பொருத்தமுடைத்தாம் என்றவாறு.

அருணகிரிநாதர் மொத்தம் "ஆறுஆறுஆ யிரம்திருப்பு கழும்வகுப்புஎண் நான்குடன்அந் தாதி ஒன்றும் வீறார்வேல் சேவன்மயில் களைப்புகழ்ந்த விருத்தமுமுன் விளம்பி மேனி வேறாய பின்கந்தன் அலங்காரம் அநுபூதி விளக்கிச் சில் பாட்டு"[2] இயற்றியதாகக் கூறுவர். திருப்புகழ் முழுவதையும் ஒருமுறை பாடம் செய்தவருக்கும் தன்னைப்போலவே அருள் புரிய வேண்டுமென அருணகிரிநாதர் வேண்டச் செவ்வேள் இசையாததால், "சிந்துஎனும் கடலில் தன்கைத் திருப்புகழ் முழுதும் சிந்தி நொந்துஎரி மனத்தன் ஆகி நுவலும்மேற் றிசையை நோக்கி இந்துஎனும் தவள நீற்றான் இலஞ்சியம் பதியில் சேர்ந்தான் நந்துஎறி அலைபல் வாறா நல்கிட உலகர்

---

1 திருமுறை கண்ட புராணம் 22

2 புலவர். அருணகிரி. 72

கொண்டார்."[1] எனவேதான் அருணகிரிநாதரின் பாடல்கள் அனைத்தும் தற்போது கிடைப்பதில்லை என்பது வரலாறு.

**128. குலவுதென் மதுரைக் கோவில் வாவிப்**
**பலகைஓர் புலவன் பார்க்கவந் தமையால்**
**கொள்ளத் தக்கவர் கொளத்தகும் அன்றே.**

மதுரை ஆலயத்தில்உள்ள பொற்றாமரைக் குளத்தில் மிகத் தொன்மையான சங்கப் பலகை பொய்யாமொழிப் புலவர் கண்காண நெடுநாள் கழித்து மிதந்து வந்ததுண்டு. எனவே தகுதி உடையவர்கள் தோன்றினால் இதேபோல முன் னாளில் அழிந்து விட்டதாகக் கூறப்படும் நூல்களும் மீண்டும் தோன்றலாம் என்றவாறு.

ஒரு நூல் இயற்றப்பட்டுவிட்டால் அதன் ஏட்டுப் பிரதி அழிந்தாலும் ஒலிவடிவம் நாத தத்துவத்திலே நிலைத்திருக்கும் என்பது இவர் நம்பிக்கை. சங்க காலத்துச் சங்கப் பலகை பல காலம் கழித்து மீண்டும் பொய்யாமொழிப் புலவருக்குக் காட்சியளித்ததைப்போல இந்நூல்களும் தகுதி மிக்க அடியார் வழியாகத் தோன்றக்கூடும் என்கிறார். பாண்டியன் எதிரில் பொய்யாமொழிப் புலவர், "பூவேந்தர் முன்போல் புரப்பார் இலைஎனினும் பாவேந்தர் உண்டுஎன்னும் பான்மையால் கோவேந்தன் மாறன் அறிய மதுரா புரித்தமிழோர் வீறு அணையே சற்றே மித"[2] என்னும் வெண்பாப் பாடினார். 'அதுவிளம்பலும் அனைவரும் காண அம்மணை மிதந்திட்டது"[3] என்பது ஒரு வரலாறு. (770)

**129. புணரி ஆதிய புனலினும் கனலினும்**
**யான்ஓர் நிமித்தத்து இட்ட பாடல்**
**தரத்தகும் புலவன் யாவன் எனினும்**
**அவன்பத மலர்த்துணை அமரும் என் சிரத்தே-**

---

1 அருணகிரி. அருட். 31

2 தனிப்பாடல்

3 புலவர். பொய்யா. 31

(இந்நூலாசிரியனாகிய) யான் முருகப்பெருமான்மீது கொண்ட ஊடல் காரணமாகக் கடல் முதலிய நீர்நிலைகளிலும் தீயிலும் இட்டழித்த என்னுடைய படைப்புகளையும் மீட்டுத் தரவல்ல புலவர் யாரோ அவர் என் வணக்கத்திற்கு உரியவர் என்றவாறு.

இவர் தாம் இயற்றிய கவிதைகள் அடங்கிய சுவடிகள் பலவற்றைத் தாமே அழித்து விட்டதை இந்நூற் சிறப்புப் பாயிரத்தும் (செய்யுள் 5) கூறினார். தேவாரம், திருப்புகழ்ப் பாக்களைப் போலவே தன்னாலேயே அழிந்த தன் நூல்களும் மீளவேண்டும் என விழைகிறார். இந்த நூல்களை இவர் குறிப்பிடுவதை மறைந்துபோன ஆயிரக்கணக்கான மற்ற நூல்களுக்கும் உபலட்சணமாகக் கொள்ளலாம். (771)

**130. கொலைபுலை எனும்இரு கோதும் கொதுகுறழ்**
**சிறிதும் இன்றித் தீர்தரப் புலமை**
**நடவு வானை நரன்எனற்கு இசையாப்**
**புந்தி யாளரும் பூதலத்து உளரே.**

பிற உயிர்களைக் கொல்லல், புலால் உண்ணல் எனப்படும் இரு பெரிய பாவங்களும் இந்நிலவுலகில் ஒரு கொசுவளவு கூட மீதமில்லாமல் முற்றிலும் அழிந்தொழியும்படித் தன் புலமை ஆற்றலால் செய்பவனைக் கடவுளுக்கு இணையானவன் எனக்கூறும் கருணைமிக்க அறிஞர்களும் இருப்பர் என்றவாறு.

''நரன் எனற்கு இசையா'' என்றதால் கடவுள் என்பது பெறப்பட்டது. ''கல்விப் பெரும்பயன் கருணை என்னும் நல்விற் பனனே நாவலர்க்கு இறையே''[1] என்பார் இவர். எதிர்காலத்தில் இத்தகையதோர் புலவன் தோன்றவேண்டும் என்னும் தம் ஆழமான ஆசையை இந் நூற்பாவில் வெளியிடுகிறார். இக்கருத்து இவரால் ''எந்தநலம் இல்லார் எனினும் இரக்கம் என்னும் செந்தகைஒன்று எய்தில்அவர் தேவர்க்கும் முந்தறிஞர் என்னத் தெளிந்தோன் எவனோ அவன்கொடுங்கோன்

1 ஏழா. இலக். 301

மன்னர்க்கு எமன்ஆகு வான்"[1] என வேறோரிடத்தும் கூறப் பட்டுள்ளது. (772)

131. கருதிய தெய்வமும் கருமமும் கண்எதிர்
காணார் புலமையைக் கண்டும் கயவர்
அஞ்சத் திகழ்நலத்து அவாவுறல் உயர்வே.

தான் தரிசிக்க விழையும் கடவுள் விழிமுன் தோன்றிக் காட்சி அளிக்காததையும், தான் சாதிக்க விரும்பிய செயலை அவ்வாறே செய்து முடிக்க இயலாமையையும் உடைய பேரறிஞர்களின் புலமையைக் கண்கூடாகக் கண்டுவருகின்ற போதிலும், இறையருளைப் பெற்றுத் தீயவர்களை ஒடுக்குவதற் கேற்ற புலமையைப் பெற விழைதல் சிறப்பானதே யாகும் என்றவாறு.

பெரும் புலமை பெற்ற எவரும் தம் வழிபடு கடவுளைத் தம் ஊனக்கண்ணால் கண்டு பேசியதாகவோ அல்லது தம் வாக்குப் பலிதத்தால் செயற்கரிய செயல்களைச் சாதித்துக் காட்டியதாகவோ நாம் நம் காட்சி அளவையால் கண்டிலோம். எனவே இத்தகைய முயற்சி பயனுடையதாக முடியுமா என்னும் ஐயம் தோன்றுதல் இயல்பே. இத்தகைய ஐயமுற்றோர்க்கு அறிவுறுத்துவான் வேண்டி எழுந்தது இச்சூத்திரம்.

நாம் இத்தகைய செயல்களைக் காட்சி அளவையால் நேரில் அறிய முடியாவிடினும் ஆன்றோர் சொல்லாம் ஆகமப் பிரமாணம் இத்தகைய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன எனக் கூறுகிறது. அதனைப் பொய்யென வெறுத்து உதறாமல் உண்மையென நம்பி உறுதியுடன் முயல்வதே அறிஞர்க்குச் சிறப்பு என்கிறார். (773)

132. எதிரிடுங் கருமத்து இயல்புஅறிந்து அதற்குத்
தக்கவாறு இயற்றத் தகும்பே ரறிவுடைப்
புலவரை அநுதினம் புகழ்வது கடனே.

1 அருளாட்சி 5

தனக்கு நேரிட்டுள்ள ஒரு காரியத்தின் தன்மையைத் தெளிவாக உணர்ந்து அச்செயலில் வெற்றி பெறுவதற்கு ஏற்றவண்ணம் சரியாகச் செயல்படுகின்ற பேரறிஞர்களை எப்போதும் போற்றவேண்டும் என்றவாறு.

தனக்குத் தோன்றியுள்ள பிரச்சினை, இடம், பொருள் ஏவல், காலம், தன்வலி, மாற்றான்வலி ஆகியவற்றை முதலில் ஐயந்திரிபறத் தெரிந்து கொள்ளவேண்டும். அடுத்ததாக அப் பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தகைய அணுகுமுறையைக் கையாளவேண்டும் எனவும் அதன் பின்விளைவுகள் எதுவாக இருக்கக்கூடும் எனவும், சிந்தித்து முடிவு செய்து கொள்ள வேண்டும். இத்தனைக்கும் பிறகு சரியான இடத்தில், சரியான காலத்தில், சரியான முறையில் தவறின்றித் துணிந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் உறுதியாக வெற்றிகிட்டும். இவற்றைத் தெளிவாக உணரப் பேரறிவின் துணை இன்றி யமையாதது. இத்தனையையும் உள்ளடக்கி, ''கருமத்து இயல் பறிந்து அதற்குத் தக்கவாறியற்றத் தகும் பேரறிவு'' என்றார். திருக்குறள் இவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விரித்து உரைக்கும். (774)

**133. மூன்றாம் நிலைஇவண் மொழிந்தனம்; முதல்வன்**
**அருள்நிலை கூறுதும் அறிவுறும் பொருட்டே.**

செயல்வகை இயல்பின் மூன்றாம் பிரிவாகிய எதிர்நிலையை இவ்வாறு கூறிமுடித்தோம். மாணவர்கள் நல்லறிவு பெறுவதற் காக அடுத்துப் பரம்பொருளின் அருள்நிலையைக் கூறுவாம் என்றவாறு.

இந்நூற்பாவோடு இப்பிரிவு நிறைவேற்றப்பட்டு அடுத்த பிரிவிற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளப்படுகிறது. (775)

## 4. அருள்நிலை

முற்காலத்தில் புலவர்களிடையே திருவருள் எவ்வாறு விளையாடியுள்ளது என்று இப்பிரிவில் கூறுகிறார். இங்கும் மரபியல்பில் கூறப்பட்டவாறே பல வரலாற்றுச் செய்திகள்

இடம் பெற்றுள்ளன. ஆனால் அதற்கும் இதற்கும் அடிப்படையான ஒரு வேற்றுமை உண்டு. ஒரு புலவன் தன் வாக்குப் பலிதத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்குச் சான்றாகக் கவிஞர் பெற்ற வெற்றிகள் மட்டுமே மரபியல்பில் பட்டியலிட்டுக் காட்டப்பெற்றன. ஆனால் எத்தகையவனாயினும் இறைவன் திருவருள் துணைசெய்யாவிட்டால் தோல்வியடைய நேரும் என விளக்கிச் செருக்கை ஒடுக்குவதற்காகப் பெரும் புலவர்களின் தோல்விகள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

புலவர்கள் ஓரிருமுறை திருவருள் துணையால் பெரும் வெற்றிகளைக் கண்ட அளவில் தாமே பெரியோர் என்னும் இறுமாப்புற்றுத் தெய்வத் துணையை மறந்து வழிபாட்டில் ஊக்கம் குன்றிவிடக் கூடாது என உணர்த்துவதற்காக இப் பிரிவு இடம் பெறுகிறது. இதனைத்தான் முன் தோற்றுவாயில் அறிவு உறும் பொருட்டே என்றார்.

புலமையிலக்கணத்தின் இறுதிப் பிரிவாகிய இது பதினொரு நூற்பாக்களை உடையது.

**134.** **பற்பலர் செவிகவர் பாவலன் தன்கைக்**
**கொடுவாள் அருணைக் கோபுரத்து இழந்து**
**தன்செவி ஒருவன் தரப்பெற் றானே.**

பல புலவர்களை வாதத்தில் வென்று அவர் காதுகளை அரிந்த வில்லிபுத்தூராழ்வார், பின் திருவண்ணாமலையில் அருணகிரிநாதரிடம் தோல்வியுற்றுத் தம் வாளையும் இழந்து மாற்றானின் கருணையினால் தம் செவிகளை இழக்காமல் தப்பினார் என்றவாறு.

இவ் வரலாறு 508ஆம் நூற்பா உரையில் கூறப்பட்டது. இங்கு வில்லிபுத்தூராரின் தோல்வியைச் சுட்டிக் கூறுவதைக் கொண்டு இவ் வாசிரியருக்கு அருணகிரிநாதரிடமுள்ள அபிமான மிகுதியால் மற்றவரை இழிவாகக் கருதுகிறார்

என எண்ணலாகாது. இவரைப்பற்றிப் புலவர் புராணத்தில் கூறுங்கால், “வரைதொறும் நடம்செய் வானை வழிபடும் அருணை நாதன் கரையில்சித் திரமாச் சொல்லும் கந்தன்அந் தாதிப் பாடற்கு உரைஉடன் அவன்சொல் மாட்சி ஒண்டமிழ்ப் புலவர் ஓர்வார்; திரைஉறு கரிய சிந்தைச் சிறியவர் தேறி டாரே”[1] எனவே கூறுகின்றார்.

அருணகிரியாரிடத்தில் வில்லிபுத்தூரார் தோற்றது தம் புலமைக் குறையாலன்று; ஆனால் சற்றும் கருணையின்றிப் பல புலவர்களின் செவிகளை அறுத்த பாவத்தால்தான் என்ற கருத்தை, “அந்தகன்போற் பற்பலர்காது அறுத்த பாவம் அமைந்ததுஇந்நாள் எனக்குஎனச்சொற்று ஆண்மை தீர்ந்தான்”[2] எனவும் விளக்குகிறார்.

திருவருள் துணை இல்லாதபோது எவ்வளவு பெரியவர் களுக்கும் துன்பம் நேரலாம் என்பதற்குச் சான்றாகவே இந் நிகழ்ச்சியும் இப் பிரிவில் இடம்பெறும் வேறு சிலவும் கூறப்படு கின்றன. (776)

**135. அன்னம் கொடுத்தோன் அருமைக் குருந்தினைக்**
**குத்திய கவிஞனுள் கோல்பாய்ந் ததுவே.**

தனக்கு உணவு, உடை, உறையுள் முதலியவற்றை அளித்து அரசவையில் சிறப்பும் கொடுத்திருந்த சோழ மன்னனின் ஒரே ஆண்மகவை, அக்குழந்தை ஒரு யானைக்கு அஞ்சி அருகில் நெருங்கும்போது தன் எழுத்தாணியால் குத்திக் கொன்ற கம்பநாடன் தன்னுடைய மார்பில் அம்பு பாய்ந்து இறந்தான் என்றவாறு.

கம்பனுடைய மகன் அம்பிகாபதி. சோழன் மகள் அமராவதி. இவர்களுக்கிடையே மலர்ந்த காதல் காரணமாக மன்னனால் அம்பிகாபதி கழுவேற்றப்பட்டான். இதனால் சினந்த கம்பர், “மத்தகவே ழத்தினுக்குப் பயந்துதன்பால் வரும்அரசன்

1 புலவர். வில்லி. 31
2 அருணகிரி. வில்லி. 36

மகனைக் கையில் வைத்தவெழுத் தாணியினால் கவியானைச் செயல்இதுஎன வதைத்திட் டானே".[1] இதற்குப் பழிவாங்க, "பின்னும்மன்னன் தனக்கினிய சிற்பன்ஒரு வனைக்கொடுஒரு பெட்டி செய்து மின்னும்அம்பும் வில்லும்அதன் உள்ளமைத்துத் திறந்தாரை விரைந்து கொல்லும் என்னும்இயல் பினதுஆக்கித் திறத்திஎன்றான்; நடந்தஎலாம் எளிது தேற முன்நுவன்ற வாணிஎங்கோ மறைந்திட்டாள் வினைப்பயன்முற் றியதால் அந்தோ".[2] "திறத்தலும் மார்பகத்தை உருவிப்போயது".[3] என வழங்கும் கதையை நினைந்து கூறியது இந் நூற்பா.

கம்பநாடன், சோழன் இருவருக்கும் உண்மையாகவே பைத்தியம் பிடித்தால்கூட இவ்வளவு மோசமாக நடந்து கொள்ள மாட்டார்கள். பாமரர்கள் தத்தம் தகுதிக்கும் சுவைக்கும் ஏற்ப எப்படியெப்படியெல்லாம் பெரியோர்களின் வரலாற்றைத் திரிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இந்நூற்பாவில் நாம் கருதவேண்டியது, "வாணிஎங்கோ மறைந்திட்டாள்; வினைப்பயன் முற்றியதால்" என்பது மட்டுமே. இங்குக் கம்பனின் தோல்வி கூறப்பட்டது. (777)

**136. மன்னவன் ஆணையை மறுத்துஓர் பாடல்**
**சொன்னவன் கழுவில் துடித்துஇறந் தானே.**

இன்பச்சுவை கலக்காமல் இறைவன்மீது நூறு பாடல் பாடுக என ஆணையிட்ட சோழன் கட்டளைக்கிணங்கப்பாடி வரும்போது அம்பிகாபதி நூறாவது பாடலாகச் "சற்றே பருத்த" எனத்தொடங்கும் சிற்றின்பப் பாடலைப் பாடியதால் அவன் கழுவேற்றப்பட்டு மாண்டொழிந்தான் என்றவாறு.

அம்பிகாபதி பற்றிய செவிவழிச் செய்திகளைப் புலவர் புராணம் கம்பர் சருக்கம் 112 முதல் 140 வரை அமைந்த கவிகளிற் காண்க. இந்த அம்பிகாபதிக்காக வாணி தெருவில்

1 புலவர். கம்பர் 142
2 " " 148
3 " " 149

கொட்டிக் கிழங்கு விற்றாள்; பூவரச மரத்தடியில் பயறு அவிப்பவளாகக் காட்சி தந்தாள் என்பர். ஆனால் அருள் விளக்கம் குன்றியபோது அதே அம்பிகாபதி கொல்லப்பட்டான். அத் திருவருள்நிலையைக் காட்டவே இந் நூற்பா இங்கு இடம் பெறுகிறது. (778)

**137. கவிதை ஒன்றால் கதிரவன் குலத்து**
**மன்னவர் அனைவரும் மாண்டனர் அன்றே.**

(சோழனின் பொறிப்பெட்டியிலிருந்து அம்பு பாய்ந்து இறக்கும் தருவாயிலிருந்த) கம்பநாடன் பாடிய 'வில்லம்பு சொல்லம்பு' என்ற வெண்பாவால் சூரியன் மரபாகிய சோழ மன்னர் அனைவரும் மாய்ந்தனர் என்றவாறு.

இவ்வரலாறு முன் காட்டப்பட்டது. இதில் இடம்பெற்ற கவிதை "வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரெண்டுண்டு; வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம் - வில்லம்பு பட்டதடா என்மார்பில்; பார்வேந்தா நின்குலத்தைச் சுட்டதடா என்வாயிற் சொல்"[1] என்னும் வெண்பாவாகும்.

கம்பனுக்கு வாய்த்திருந்த தெய்வீக அருள் அச்சமயத்தில் அவன் உயிரைக் காக்காமல் கைவிட்டுவிட்டது; ஆனால் அதேசமயத்தில் அவன் இட்ட சாபம் நிசமாகியது. இதனால் திருவருளின் இயக்கம் எப்போது எப்படி இருக்குமென யாராலும் அறியமுடியாது என்பதை உணர்த்துவதே இந் நூற்பாவின் நோக்கம். இங்குக் கம்பன் பெற்றது முழுவெற்றி அன்று. (779)

**138. செத்து நாறிய சினைஆடு எழுந்து**
**குட்டி ஈனிய கொள்கையும் பிறவும்**
**ஆய அருள்நிலை அடைவதற்கு அரிதே.**

ஓர் இடையனிடமிருந்து வந்த சினை ஆட்டின் பிணம் ஒன்று உயிர்பெற்றெழுந்து இரு குட்டிகளைப் பெறுமாறு செய்த பேரருளும், தீமை கலவாத அதிசயச் செயல்களாகிய

1. தனிப்பாடல்

மற்றவையும் போன்ற திருவருள் விளக்கம் யாருக்கும் எளிதில் பெற முடியாததாகும் என்றவாறு.

குகை நமச்சிவாயர் இவ்வாறு செய்தார் என்பர். புலவர் புராணத்தில் இவர் பெயரமைந்த சருக்கத்தின் 47 முதல் 52 முடிய உள்ள கவிகளில் இந்நிகழ்ச்சி கூறப்படுகிறது. இதற்கு முன் கூறப்பட்ட நான்கு நூற்பா நிகழ்ச்சிகளிலும் ஒருவனின் வெற்றி மற்றவனுக்குத் தோல்வியாயமைந்தது. தோற்றவன் துன்பமுற்றான். ஆனால் இந் நிகழ்ச்சியால் யாருக்கும் எந்த வகையான துன்பமும் இல்லை; மாறாகத் தன் ஆட்டை இழந்த பொதுவன் குட்டிகளோடு திரும்பப் பெற்று மகிழ்ந்தான். இவ்வாறு தன் வெற்றியாலும் பிறருக்குத் தீமை செய்யாத கருணைமிக்க அருள் தன்மை எளிதில் அடைய முடியாதது ஆகும் என்பது கருத்து. (780)

**139.** **சீறி இகழ்வார் தெருத்தலை வாயில்**
**தோறும் அலைவுறீஇச் சுழலும் பாவலன்**
**செக்குஒரு கவியால் செம்பொன் ஆகப்**
**பாடவும் செய்யும் பழுதுஇலா அருளே.**

இந்நூற்பாவில் இடம்பெற்ற வரலாறு விளங்கவில்லை.

**140.** **மன்னரும் வியப்ப மணிமுரசு அதிர்தரப்**
**பொன்நெடும் சிவிகை ஏறிப் போய்வரும்**
**நாவலன் நடந்து நாழிநெற் கூலி**
**கருதி வாடிய காதைஒன்று உளதே.**

அரசர்களும் கண்டு அதிசயிக்கும்படி இன்னியங்கள் முழங்கப் பல்லக்கில் பவனிவரும் இயல்புள்ள கம்பநாடன் ஒருசமயத்தில் கால்தேய நடந்து சென்று ஒரு நாழிநெல்லைக் கூலியாகப் பெறுவதற்காகச் சுவர் வைக்கும் பணியில் ஈடுபட்டான் என வழங்கிவரும் கதையும் உண்டு என்றவாறு.

“மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்;
சொற்கொண்ட பாவின் சுவைஅறிவார் ஈங்கிலையே;

விற்கொண்ட வாள்நுதலாள் வேலி தருங்கூலி நெற்கொண்டு போம்அளவும் நில்லாய் நெடுஞ்சுவரே''[1] என்ற தனிப் பாடலை நினைந்து கூறியது இந்நூற்பா. இங்குத் திருவருள் துணையின்மை கூறப்படுகிறது. (782)

**141. மூகை ஆய முருந்துஇள நகைச்சேய்**
**பாகை நேர்தமிழ் படித்ததும் உளதே.**

ஊமையாகப் பிறந்தவரும் மிக்க இளமையானவரும், புன்முறுவலுடையவரும் ஆகிய குமரகுருபரர் தம் முயற்சியே சற்றும் இல்லாமல் செந்திலாண்டவன் அருளால் தேன்பாகைப் போன்ற இனிய தமிழ்மழை பொழிந்ததும் உண்டு என்றவாறு.

குமரகுருபரர் வரலாறு அனைவரும் அறிந்த ஒன்று.

ஐந்தாண்டினர் என்பதற்காக முருந்து எனவும், ஊமையாக இருப்பது எத்தனை பெரிய துன்பம் என்பதைக்கூட அறியா தவராக இருந்தார் என்பதற்காக இளநகைச் சேய் எனவும் கூறினார். முன்னால் மரபியல்பிலும் இங்கு அருள்நிலையிலும் இடம்பெற்ற புலவர்களிடமெல்லாம் தம் முயற்சி, இறைவன் அருள் என்ற இரண்டையும்காண்கிறோம். சொந்த முயற்சியே-ஏன் எண்ணமே - இல்லாத சிலர்கூட அருளின் துணையால் மட்டுமே பெரும் புலமை பெற்றுள்ளனர் எனக் கூறித் தான் முன்கூறிய, ''நூலின் துணையினும் நூறுபங்கு அதிகம் தெய்வத் துணையாம் செழுந்தமிழ்க் கவிக்கே''[2] என்பதனை வலியுறுத்துவதுதான் இந்நூற்பாவின் நோக்கம். ''நற்குஞ் சரக்கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்குஅன்று காண்''[3] என்றார் பிறரும். (783)

**142. வாதிடத் தேடி வரும்எழு மூவரும்**
**பேசும்நா இன்றிப் பிணம்போல் இருக்கக்**
**கண்டது அருள்எனக் கழறுதல் றையே.**

---

1 தனிப்பாடல்
2 அறுவகை. 649
3 திருவருட்பயன் காப்பு

இலங்கையில் இருந்து தில்லைக்கு வந்து அங்குள்ள சைவர் களை வாதத்தில் வென்று, திருக்கோயிலைத் தமதாக்கிக் கொள்ள விரும்பிய 21 புத்தபிக்குகளைத் தோற்கடித்து ஊமை களாக்கிய மாணிக்கவாசகரின் வெற்றியையும் இறையருள் எனக் கொள்வதே சிறந்தது என்றவாறு. (784)

**143.** **தாய்வயிற்று இருந்து தரணியிற் பிறந்த**
**உடன்சிலர் பாடிய வொள்ளிய தமிழும்**
**பாரொடு வானில் பரந்தது அன்றே.**

(பகவன் ஆதி என்னும் கணவன் மனைவியருக்குப் பிறந்த அவ்வை, உப்பை, அதிகன், உறுவை, கபிலர், வள்ளி, வள்ளுவர் என்ற எழுவரும்) தம் தாயின் அகட்டிலிருந்து வெளியேறி உலகில் தோன்றிய உடனே பாடிய சில கவிகளும் உலகிலும் வானிலும் பரவி உள்ளன என்றவாறு.

இச்சமயத்தில் இவ்வெழுவர் பாடியனவாக ஏழு கவிகள் தனிப்பாடல்களாக வழங்குகின்றன. "அளப்பரும் பனுவல் அகண்டம் ஆய நாத சத்தியின் நனந்தலை கிடந்து பகர்வார் வரவு பார்க்கின்றன"[1] எனும் தம் கொள்கைக்கேற்ப வானில் பரந்தது என்றார். இதுவும் சொந்த முயற்சியின்றித் தானே வலிய வந்த திருவருட்புலமையைக் குறித்து நின்றது.

**144.** **அருள்நிலை முடித்தற்கு ஆரால் ஆகும்என்று**
**அஞ்சி இந்தமட்டு அடக்கிச் செயல்வகைக்**
**குறிப்பொடு புலமை இலக்கணம் கூறிக்**
**கருதிய பயனில் கருத்துஅமைந் ததுவே.**

திருவருளின் செயலை இத்தன்மைத்து என அறுதியிட்டுக் கூறி முடித்தற்கு எளியேன் போன்ற யாரால் இயலும் என்னும் அச்சத்துடன் இப்பிரிவை இத்துடன் நிறுத்திக் கொள்வதுடன் செயல்வகை இயல்பு எனப் பெயர்பெற்ற இப்பெரும்பகுதியுடன் புலமை இலக்கணத்தை முடித்துக் கொண்டேன். என் பணி

---

1 அறுவகை. 767

முடிந்தது. இதனைக் கற்பார் இதன்வழி ஒழுகிக் கருணை மிகப்பெற்று மாதவம் முயன்று உலகிற்கு நலம் பயப்பதாகிய அருஞ்செயல்களைப் புரிந்து, பின் பிறவியின் முழுப்பயனாகிய வீட்டின்பத்தையும் அடைதல் வேண்டும் என்னும் எண்ணம் மேலோங்குகிறது என்றவாறு.

கருதிய பயன் என்பது இந்நூலாசிரியர் கொள்கைகட்கேற்ப விரித்துரைக்கப்பட்டது. இந் நூற்பயன் இவராலேயே முன்னர் பொதுப் பாயிரத்தின் ஆறாங்கவியில் கூறப்பட்டது. இந் நூற்பாவுடன் இப்பிரிவும், செயல்வகை இயல்பும், அறுவகை இலக்கண நூலும் நிறைவுபெறுகின்றன. (786)

**செயல்வகை இயல்பு முற்றும்.**

**புலமை இலக்கணம் முற்றும்.**

ஆகச் சூத்திரம் 786

**வண்ணச் சரபம். தண்டபாணி சுவாமிகள்**

இயற்றிய

**அறுவகை இலக்கணம் மூலமும்**

**புலவர். ப.வெ. நாகராசன் அவர்களின்**

உரையும் நிறைவேறின.

### கலிவிருத்தம்

பெறுவது பெறக்கருது பெட்புஉதவும் ஒன்றே?
அறுவகை இலக்கணம் அறைந்ததுஅறி வாரை
மறுஅறு தமிழ்க்கடலும், வானொடுகலந்தே
உறுவதுஎன் அருட்கடலும் உண்டுகொளும் அன்றே.

பொதுவாக ஓர் இலக்கண நூலால் ஒரு மாணவன் பெற விழைவதாகிய மொழித்திறத்தின் முட்டறுத்தலாகிய ஒன்றை மட்டுமோ இந்நூலைக் கற்பவன் அடைவான்? அன்று. இந் நூலை ஐயந்திரிபறக் கற்று நூல் நுதலிய பொருளை அறிந் தொழுகுவாரைக் குற்றமற்ற செந்தமிழாகிய கடலோடு, சிதாகாசப் பெருவெளியில் கலந்திருக்கக்கூடிய திருவருளாகிய கடலும் தம்முள் ஆழ்த்திக் கொள்ளும்.

தேடிச்சோறு நிதந்தின்று சில சின்னஞ் சிறுகதைகள் பேசித் திரிவதற்குத் தேவையான மிகச் சாதாரண மொழியறிவை ஊட்டி அமைவதோடு தம் நூல் நின்றுவிடாது. ஆயிரங் காலம் அகங்குவிந்து கற்றாலும் பாயிரமும் தீர்வரிய தொன்னூற் பரப்பினையுடைய தமிழ்க்கடலிலேயே முக்குளிக்க வைத்து விடும் என்கிறார். மேலும் கல்விப் பயனாகிய தவத்தில் ஈடு படுத்தி வீட்டின்பத்தையும் நல்கும் என்றும் கூறுகிறார். இதனால் இந்நூல் ஒரு மாணவனைச் சாதாரணமான நிலையில் புலவன் என்ற அளவில் நிறுத்திவிடாமல் இம்மை, மறுமை, அம்மை என்னும் மும்மை இன்பங்களையும் அவனுக்குப் பெற்றுத்தரும் என்பது கருத்து.

### வண்ண விருத்தம்

(தனதானதத்ததந்த தாத்ததாந்ததய்யதன்ன தனனதானா)

மலைதோறும்நிற்கும்எந்தை வேற்கைவேந்தன் வள்ளிமின்னை
மருவுதோள்வேள்
மயிலேறிவெற்றிகொண்டு பூட்கைஈந்த செய்யகன்னி
கணவன்ஆன்றான்
இலையூடுவைத்திலங்கு நீற்றைவேண்டும்மெய்யர்தம்மை
எளிதில்ஆள்சேய்
எனைஆறிலக்கணங்கள் சாற்றஆண்டுகொள்ளுநன்மை
திகழ்கையாலே

அலைநீர்முடித்தவன்பி ராட்டிநீண்டமையைஅன்ன
பகவன்நேர்வார்
அடிசேரும்நட்புயர்ந்து ளார்க்குஎலாம்தமுள்ளம் உன்னி
மகிழும்வாழ்வுஆம்
உலைபாயல்கட்டும்வம்பர் வார்த்தைதாங்குகள்வர்இன்னல்
அதனின்மாய்வுஆம்
உலகுஏழும்மெச்சும்உம்பர் நாட்டும்ஒங்குதுய்யவண்மை
தமிழதுஆமே.

முருகப்பெருமான் எல்லா மலைகளின்மீதும் குடிகொண்டு விளங்குபவர். வேலாயுதத்தைத் தாங்கியுள்ள தலைவர். வள்ளி நாயகியாரை அணைகின்ற புயங்களைப் பெற்ற அழகர். மயில் வடிவாகி வந்த சூரனை வாகனமாகச் செலுத்தி அடக்கி வெற்றி கொண்டதன் விளைவாக அயிராவத்ததால் வளர்க்கப் பெற்ற தெய்வயானையின் மணவாளர் ஆனவர். பன்னீர் இலையில் வைத்து அளிக்கப்படும் திருநீற்றுப் பிரசாதத்தை விழையும் மெய்யன்பர்களைத் தன் கருணையால் பெருமுயற்சி யின்றி ஆட்கொள்ளுகின்ற இளமைப் பருவத்தை உடையவர்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற அவர் அடியேனை ஆட் கொண்டு அறுவகை இலக்கணமாகிய இந்நூலைச் செய்விக்கும் திருவருள் இப்போது நன்கு விளக்கமாகி உள்ளது. இதனால் தலையில் கங்கையை அணிந்தவராகிய சிவபெருமான், அவர் தேவியாகிய உமையம்மை, நீலமேனி நெடியோன் ஆகிய திருமால் போன்ற அறுசமயத் தலைவர்களின் திருவடிகளை வணங்கி வாழும் அன்பர்கள் அனைவர்க்கும் எண்ணியவை யாவும் கைகூடி மகிழ்வளிக்கும். கேட்பாரை வருத்துகின்ற இயல்புடையனவாகிய பாய்ச்சீலை உடுத்தும் சமணர்களின் வார்த்தைகளாகிய இலக்கண நூல்களை மலைஇலக்காக நம்பிப் பின்பற்றும் கள்வர்கள் துன்புறுவர். தமிழ்மொழியின் தூய சிறப்பு இனிமேல் ஏழு உலகங்களிலும் சிறந்ததாகப் போற்றப்படும். அமரர் உலகிலும் நன்கு போற்றப்படும்.

பாயல் கட்டும் வம்பர் உலைவார்த்தை எனவும் தமிழது துய்ய வண்மை உம்பர் நாட்டும் ஓங்குமாமே எனவும் இயைக்க.

# பிற்சேர்க்கை-I

## முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு இரண்டிலும் உள்ள சாத்துகவிகள்

(பதிப்பாசிரியர் குறிப்பு:- இப்பதிப்பின் பிற்சேர்க்கை I மற்றும் பிற்சேர்க்கை II-இல் உள்ள சாத்துகவிகள் அறுவகை இலக்கணத்தின் ஏட்டுச் சுவடியில் இல்லை. முற் பதிப்புகளின் அடிப்படையிலேயே இவை இங்குத் தரப்படுகின்றன.)

சோழவந்தானூர் அருளானந்த சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்
அருளிச் செய்தன

### நிலைமண்டில ஆசிரியப்பா

தொடுகடல் உடுத்த தொல்நில மகள்மலைப்
படுகலன் நாப்பண் பதித்தநன் மணியில்
பொலிதரு பல்வளப் புகலிமா நகர்வயின்
கவிமறை பயில்தரு கவுணியர் குலத்தில்
நலன்உறத் தோன்றிய ஞானசம் பந்தன்
பலமுரண் மரீஇய பறிதலை அமணரைப்
போக்கிய ஞான்றில் புறநெறிக் கூற்றை
நீக்கி உய்வான் நிறுவிய முறையில்
திறம்பினர் தமையும் தெருட்டும் பொருட்டுஈண்டு
அறம்பிழை படாவிதத்து அறுவகை இலக்கணம்
சிறக்க இயற்றுஎனச் செந்தில்எம் பெருமான்
திறத்தகை உலவாச் சிந்தையில் தெரிப்ப
மறக்கொணா அவன்இரு மலர்அடி வழுத்தித்
துறக்கொணா விதிகளைத் துகள்அறக் கூறித்
திருவுரு மாமலைச் சினகரத் தின்கண்
அருமைசால் புலவோர் அனைவரும் வியப்ப
உவமைஇல் பெரியோர் உளம்நனி உவப்ப
நுவலிய தமிழ்ப்புது நூல்அரங் கேற்றினன்;
திருவளர் பொதியைச் செழுந்தமிழ்த் தீஞ்சுவை
பெருகியது என்வரு பீடுஉறு பொருநையும்

கோட்டுஉறு பூந்துணர்க் குலவிய கொழும்தேன்
கூட்டுஉண அளிமுரல் குளிர்நிழல் பொதும்பரும்
உளபல உயிரையும் ஓம்புவார் தவம்என
வளர்தரு செந்நெல் வயங்கிய வயல்களும்
கறைமிடற்று அண்ணல் ஆதிய கடவுளர்
உறைதரற்கு அமைத்த உயர்ஆ லயங்களும்
அந்தணர் சைவர் ஆதியர் வாழும்
சுந்தர மாளிகை தொக்கபல் வீதியும்
திருமகள் கலைமகள் திறம்பா வாழ்க்கையும்
மருவிய நெல்லை வளநகர் அதனில்

சைவக் குலத்தில் தழைத்துஇனிது அமர்ந்தோன்;
மெய்வைத்த நாவினன்; மேதகு மனத்தோன்;
செந்தினா யகன்எனத் திருப்பெயர் புனைந்தோன்
புந்திநைந்து இயற்றும் பொருவறு தவத்தால்
தேவரும் வியப்பத் தெருள்மிகு மகவுஆய்
யாவரும் காண இருநிலத்து அவதரித்து
அண்டர் சேனைக்கு அதிபன்ஆ ணையினால்
தண்ட பாணிஎனத் தனிப்பெயர் தரித்துப்
பிறந்தநாள் முதலாப் பேசரும் அற்புதத்
திறங்கள்பற் பலவாச் சிறந்துஉறத் திகழ்ந்து

சிற்றெரும்பு ஒன்றைச் செகுத்தியேல் அதற்கும்
மற்றுஎலா உயிர்க்கும் வணங்கும்உன் றனக்கும்
நம்திரு வடிநிழல் நன்குஅளிக் குதும்என
முந்திய முதல்வனே முன்வந்து உரைப்பினும்
''ஐய!அம் முத்தி அடியேற்கு ஆகாது;
உய்யநன்கு அருள்''என உரைக்கும் உரன்உற்று
அகத்தியன் ஆதிமெய் யடியவர் அடித்துகள்
மகத்துவம் தெரிந்துதன் மணிச்சிரத்து அணிந்து
மாயா வாத மருளினர் வெருள்உற
ஓயாப் பத்தி உயர்நெறி ஒழுகி
அலைவுறு மனத்தினர் அறியாத்
தலைவன்ஆம் முருக தாசதே சிகனே,

அஷ்டாவதானம்

## பூவை. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் இயற்றியது

போற்றுமின்! புலவீர்! போற்றுமின் புலவீர்!
போற்றுமின்! இந்நூற் புகழினைப் போற்றுமின்!
ஏற்றரும் பெரியோர் இறும்பூது எய்தச்
சாற்றிய இந்நூல் தன்மையைப் போற்றுமின்!
முகத்தல் செய்யா முந்நீர் உண்ட
அகத்திய னாரும் அருந்தமிழ்க் குரவனும்
ஒல்காச் சொற்சுவை ஓங்கச் செய்த
தொல்காப் பியன்ஆம் தூய்மை யாளனும்
அறைந்த இலக்கணம் ஐவகை தம்முள்
மறைந்தன குறைந்தன மாநிலத்து இந்நாட்கு
இன்றி யமையாது இருக்க வேண்டுந
ஒன்றிய அறிவால் ஊகித்து உணர்ந்தே
உறும்இயல் பலவாய் உற்றசூத் திரத்தால்
அறுவகை இலக்கணம் அருளிச்செய்தனன்:
ஆழா அரிய அநேக விதிநிறீஇ
ஏழாம் இலக்கணம் எனவும்ஒன்று இயம்பினன்;
எல்லைஇல் மகிமை இனிதுஅங்கு எழூஉம்
நெல்லைப் பதிஆம் நீள்படை வீட்டினன்;
நீதிசேர் ஞானம் நிகழும் மனத்தினன்;
பூதி நிறைந்து பொலியும் மேனியன்;
புண்புழு ஆதியும் புண்பட்ச் சகியான்;
அன்பே உருவாய் அமைந்த பொற்பினன்;
பண்அமை திருப்புகழ்ப் பாக்கள் தமக்கு
வண்ணத் தியல்பு வகுத்த பெரியோன்;
வேற்படைப் பெருமான் வியன்அருள் பெறீஇ
நாற்கவிப் பாவலர் நடுக்கம் கொள்ளச்
சிந்தையில் சிறிதும் கருதல் இன்றிச்
சந்தக் கவிசொலும் சரபம் ஆனோன்;
அறுமுகக் கடவுள் ஆறு முகம்என
அறுவகைச் சமயமும் ஆதரித் திடுவோன்;

அண்ணல் அபர அருண கிரினா
நண்ணி வாழும் நலம்பல உள்ளான்;
தொண்ட னேனையும் சுதந்தரித்து ஆண்ட
**தண்ட பாணிஎன் சாமி தானே.**

## பிற்சேர்க்கை II

### முதல் பதிப்பில்மட்டும் காணப்படும் சாத்துகவிகள்

சோழவந்தானூர் அருளானந்த சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்
அருளிச்செய்தன

### விருத்தங்கள்

இருட்கடல்ஆழ்ந்து அயர்உயிர்கட்கு இறைவன்அறு
வகைக்கரணம் ஈந்த தேபோல்
பொருள்கடல்ஆர்ந் துள்ளஅறு வகைஇயலைப்
புவிஉணரப் புனைதல் செய்தான்;
அருட்கடல்ஆர்ந்து அம்புவியைச் சுகப்படுத்தும்
பெருநினைவுஒன்று அகத்தில் பூண்ட
தெருட்கடலாம் திருப்புகழோன் திருநெல்லைப்
பதியில்வரும் சிறப்புஉள் ளோனே.

கூறுபடும் அகச்சமயக் குழப்பமொடு
புறச்சமயக் குதர்க்கம் நீத்தோன்;
ஊறுதவிர் பொதுத்திறம்தான் முழுப்புகழ்தோய்
தனிக்கதிஎன்று உறுதி கொண்டோன்;
வீறுஉதவு குகக்கடவுள் விளக்கமுழுது
உணர்நிபுணன் விரும்பி னோர்க்குஎன்று
ஆறுவகை இலக்கணநூல் அருளியதுஓர்
வியப்போநல் அறிவுள் ளோரே.

(குறிப்பு: பிற்சேர்க்கை 1இல் உள்ள அகவலைஅடுத்து இவ்விரு
விருத்தங்களும் முதல் பதிப்பில் இடம்பெற்றுள்ளன).

இந்நூலாசிரியர் மாணாக்கரில் ஒருவர்ஆகிய
திரு.சித்திரப்புத்திர பிள்ளையவர்கள் பாடியன.

### நேரிசை வெண்பா

ஆறு திசையும் அணிமுகமாக் கொண்டவனைத்
தேறுமவர் எல்லாம் தினந்தினமும் - மீறும்அன்பால்
வந்தனம் செய்து மகிழ்கூறும் வண்மையினது
இந்த இலக்கணநூ லே.

### நேரிசை ஆசிரியப்பா

பூவுல கினரும் புனைந்து போற்றும்
சேவடிக் குமரன் திருவருள் அதனால்
நெல்லைமா நகரில் ஓர் நிமித்தத்து உதித்துத்
தொல்லைஊழ் வினையைத் தொலைத்துத் தூய
சிந்தையர் மகிழும் சீரொடு விளங்கிச்
செந்தமிழ்ச் சுவையால் தெவ்வரும் புகழப்
பெற்றுஉயர் பெரியோர் பேரவை இடத்தும்
கற்றவர் அவையினும் கண்மணி எனத்திகழ்ந்து
அன்பரை வெறுக்கா ஆர்அமுது ஆகி
இன்பமே உயிர்கட்கு இயற்றி எங்களை
ஆண்டசற் குருபரன் ஆகித் தீயவை
மாண்டுஅறம் நிலைபெற மாதவம் புரியும்
முருக தாசனும், முத்தமிழ்ப் புலவனும்,
திருவுரு வாளனும், திருப்புகழ்க் காரனும்,
தண்ட பாணியும், சமரசப் புனிதனும்,
கொண்டல்போல் வழங்கும் கோலா கலனும்
ஆனவன்; மற்றும் அளப்பறு பேர்புனை
ஞான வாரிதி நறுந்தமிழ்க்கு உரிய
எழுத்து சொல்பொருள் யாப்புஅணி புலமை
வழுத்திய ஆறு வகைஇலக் கணமும்,
திருப்புகழ்ப் பனுவலும் செந்தமிழ்ப் புலவோர்
விருப்புறு வண்ண விதங்களும் பொருநை
மாநதி உருமா மலைப்பெரும் கோயில்
தூநகை இருவர்தம் தோள்புணர்ந்து உவக்கும்
முருக வேள்திரு முன்பின் முதிர்சீர்
அருள்வலித் துணைக்கொண்டு அரங்கேற் றினனே.

## கட்டளைக் கலித்துறை

இலங்கிய ஐந்து முகன்அடி
யார்ஐந்து இலக்கணங்கள்
துலங்கவைத் தார்என்று அறியாமல்
நான்முகன் தொண்டு கொண்டு
கலங்குறு சாரணர் ஒத்துஉரைத்
தார்; அயிற் கந்தன் அன்புஆம்
நலம்கொள்எங் கோன்முறை கோடாதுஇவ்
வாறு நவின்றனனே.

## வண்ண விருத்தம்

தனதனாதந்த தனதனதனத்தன தன்னதானா
தொழுதுவேலன்பொன் அடிமலர்களைத்தினம்
நண்ணும்மேலோர்
துகள்இலாஐந்து கரமுறுகளிற்றினை
எண்ணிவாழ்வோர்
மழுவுளான்அன்பு பெருகியமனத்தினர்
கன்னியாயே
வளரும்மாதங்கி முதலினர்தமைத்துதி
பண்ணும்வாயோர்
குழுவெலாம்நம்பும் அறநெறிஎனத்திகழ்
தன்மையாலே
குருஎனநின்ற பெரியவர்திருப்புகழ்
உண்மையாலே
முழுநிலாவென்ற பொடியணிஉடற்கொளும்
வண்மையோனாம்
முருகதாசன்றன் அறுவகைஇலக்கணம்
நன்மையாமே.

கோபாலசமுத்திரம் வித்துவான் சண்முகதாசப்பிள்ளை
அவர்கள் இயற்றியது

தனதன தனத்ததன.........தனனதன தானனா
சிறுதடி பிடித்துடலம் முழுவதும் வெளுத்தபொடி
திகழ்தரு சிறப்புடைய செழியகுரு நாதனே
மறுவரு சகத்தில்ஒரு முரகரி எனப்பெரிய
வளமது பெறக்கருணை வழியிலுறு மாதவா

குறுமுனி மிகப்பரவு குகனும்அ யனைத்தழுவு
குலஅன மும்மெச்சுபுகழ் குலவுநடம் நீடவே
அறுவகை இலக்கணமொ டெழுவகை இலக்கணமும்
அருளிஉ வகைக்கடலில் அமிழ்முருக தாசனே.

இந்நூலாசிரியர் மாணாக்கர்
கழுகுமலை வித்துவான் இராமகிருஷ்ணபிள்ளை அவர்கள்
இயற்றியது

ஐந்தாய் அரன்முகங்கள் ஆகமுனிக் கோன்இசைத்தான்
கொந்தார் கடம்பன் குளிர்முகமாத் – தந்தான்
அறுவகைஇ லக்கணநூல் அம்முனிதாட்கு அன்பு
பெரும்உரிமை யால்நம் பிரான்.

தந்தத்தனத்தன தனனதன தத்தன ... தனதானனா
அன்பர்க்குமுத்திதரு பரசிவனை ஒத்துஇலகு
தென்றற்பொருப்பில்உறை தமிழ்முனி வளர்த்தருளும்
அன்றுஎட்டுவித்தைவரும் ஒருவலிய சித்தனைவெல்
வழிவீறுதோய்
அந்தப்படிப்பில்உயர் ஏமலிவிதி யிற்பழகு
பின்பற்றுஎழிற்பிறவி எழுவகை கழித்துநவில்
அந்தத்தில்விட்டகுறை முடிவுற உதித்தபழ
முறைவாய்மையான்
முன்பக்குவப்புலவர் மகிழ்வொடு வியப்பஅறிவு
இன்றிச்சிவத்தைமுனம் இகழ்பறி தலைச்சமணர்
மொய்ம்பைத்துதிக்குநர்சொல் இகல்கெடஎழுத்து
உருவம் முதல்ஈறதுஆம்
முந்துற்றமெய்ப்புலமை இயல்பொடு சிறப்புஅளவை
துன்றக்குறித்துஉணர்சண் முகன்அருள்விளக்கம்உற
முந்தைக்கருத்துஇசையும் அறுவகை இலக்கணநல்
விதிகூறினான்;
இன்பத்தமிழ்க்கடலும் இணையில்கரு ணைக்கடலும்
ஒன்றுஎத்தகைப்புகழும் ஒருவடிவு 'எனப்பொருவில்
எண்சித்திமுற்குலவு நிலைபெறு கதிக்குஉரிய
தவவாழ்வினான்

இந்தத்தரைக்குள்அடர் பரமதர் செருக்குஅறவீ
ளங்குஅற்புதச்சமய நெறிகள்நிலை நிற்கமுயல்
என்சற்குருக்கள்சம ரசவிரத முத்தன்வழி
படுபான்மைசேர்
தன்பத்தர்வெற்றிபெற நயமதுரி தப்பணிகொள்
சந்தத்திருப்புகழொடு அளவில்பனு வற்றொகுதி
சந்திக்கும்எப்பதிகள் தொறும்மழை எனப்பொழியும்
நிறைபோதன்மா
சண்பைப்பதிக்கண்வரு தவன்என மதித்துஅறிஞர்
கும்பிட்டுஉயத்திகிரி வளையவர் கரத்தில்அணி
தண்டத்திருப்பொலிவி னொடுகழை வனப்பதியில்
வருநாதனே.

மகாவித்துவான் வேங்கடசுப்புப்பிள்ளை சோதரர்
அரன்வாயல் தங்கவேற்பிள்ளை அவர்கள் இயற்றியது

வேள்துதிஇராப் பகல்பழிச்சும் தமிழ்ப்புலவர்க்கு
இருகண்மணி விளக்கம் போலக்
கூடுதிருஆம் இலக்கியம்நல் இலக்கணம்; ஆங்கு
இலக்கண நூற் கூறுஐந்து இங்ஙன்
ஈடுதிர்[1]ஆ வியைப்புரையும் புலமையும்சேர்த்து
ஆறுவகை இலக்க ணத்தைப்
பாடுதிரா விடம்[2] சிறப்பத் தவமுருக
தாசமுனி பகர்ந்தது அம்மா.

அஷ்டாவதானம் பூவை.கல்யாணசுந்தரமுதலியார்மாணாக்கர்
வல்லை. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் இயற்றியது.

உயிர்வரின்உக் குறள்மெய்விட்டு ஓடுதல்போல்
உலகஇலக் கணங்கள் ஓட
பயிர்களதுஊ தியம்கருதாது உயஅருளும்
கனமழைபோல் பரிந்து மண்மேல்

---

1 தீர் என்பதன் குறுக்கல் விகாரம். 2. தமிழ்மொழி

செயிர்அகன்ற அறுவகைஎ ழாவதுவாம்
இலக்கணங்கள் தெளிவாய்ச் சொற்றான்;
உயிர்கள்துயர் ஒழித்துஓம்பும் எழில்தண்ட
பாணிஎனும் உயர்சீ மானே.

திருவுருமாமலைத் தலத்து வித்துவான்
முத்துவீரக் கவிராயர் அவர்கள் இயற்றியது

**ஆசிரியப்பா**

திருமலி கமலச் செல்வர்கள் படைக்கும்
உருமலி உயிர்வாழ் அண்டகோ டிகளும்
ஆயிரத்து எட்டுஎனும் அண்டம் அனைத்தும்
காய்இரும் திகிரி உருட்டியே கஞ்சன்
முன்ஆம் தேவர்கள் முதல்பணி கொண்ட
மன்ஆம் சூரவன் மாவிரு கூறா
விழவடி வேல்விடு விமலன் சேந்தன்
அழல்அவிர் பொறிஆறு ஆகிய செவ்வேள்
கந்தன் காங்கையன் கடம்பணி தோளன்
எந்தமது இறைகும ரேசன் மீதினில்
சொற்சுவை பொருட்சுவை துலங்கவும் சந்தம்
பற்பல பகுப்பில் பண்கனிந்து ஒழுகும்
திருப்புகழ் முதல்ஆம் செந்தமிழ்த் தொகுதியும்
மருப்பொலி ஆறு வகையிலக் கணமும்
வண்ணத் தமிழ்க்கு வகைவிவ ரம்சொலும்
பண்அமை இலக்கணப் பைந்தமிழ் எனவும்
நாவலர் தமக்கு நலம்பெற மாட்சியால்
தாவிலா வகையால் சாற்றினன் எழிலார்
திருநெல் வேலியெனும் சிவபுரத்து அமர்ந்தோன்
தருஎன வழிபடும் தன்மையர்க்கு அருள்வோன்
கடன்மடை திறந்தெனக் கவிக்குஉரை புகல்வோன்
மடமட எனக்கவி மழைசொரி மேகம்
புலக்குறும்பு அடக்கிய புனிதன் திரிவித
மலக்கட்டு அறுக்கும் வகைஉணர் விவேகன்
இருவகை ஆச்சிரமத்து எம்செந்தி னாயகத்து
அருமைசேர் புதல்வன் ஆகிய புகழோன்

மழுக்கரன் அருள்குகன் மலர்ச்சரண் பணிவோன்
அழுக்காறு உடையபா வலர்க்குஇடி யேறுஅனான்
அருண கிரிஇவண் அவதரித் தான் எனும்
பெருமைசேர் புகழ்பெறு பேர்அரு ளாளன்
வருக தாசர்கள் எனவழி பார்த்தருள்
முருக தாச முனிமுழு மணியே.

குட்டந்தீர்த்ததுறை இராமாநுஜ கவிராயர் அவர்கள் இயற்றியவை.

### நேரிசை வெண்பா

போற்றும் தமிழால் புதிதாம் திருப்புகழ்நூல்
சாற்றும்இந்த உண்மைத் தவத்தோனை-வேற்றுமைசேர்
வெங்கட் கொடியவர்தாம் வேறுஎன்ன சொன்னாலும்
எங்கட்கு அருணகிரி யே.

### நிலைமண்டில ஆசிரியப்பா

பூதலம் புகழும் பொதிய மால்வரைச்
சீதவார் பொழிலில் செழுமுகில் பொழிந்த
தெண்ணீர்ப் பெருக்கம் தேனொடு கலந்து
வெண்ணீற்று அணிதிகழ் மேலோர் பலரும்
பரவுசீர்க் குறுமுனி பயந்தமுத் தமிழ்என
உரமொடு தொனித்துஆங்கு உறுபொருள் பலகவர்ந்து
அம்மலைக்கு அணிந்த அணிஎன அவிர்வுற்று
எம்மனோர் வழுத்தும் இயல்புடன் உலகில்
பல்லுயிர் வளர்க்கும் பண்புறீஇ நடந்து
தொல்லைமா கடலில் தோய்தரு பொருநைத்
திருநதி நடுவில் செம்பொற் கோவில்
மருவிய உருமா மலைஅமர்ந்து அருளிய
முழுதுணர் புலவன் மூவிரு முகத்தும்
விழுமிய குறுநகை விளங்க விற்பனர்
பெறுநலம் பலவும் பேணும் பெற்றியின்
அறுவகை இலக்கணம் அருணை யூரன்
அன்னோர் தேறும் அருந்திறல் திருப்புகழ்
ஒன்னார் வெருளும் ஒண்பொருள் வண்ணம்

இனிதுஅரங் கேற்றி இமையா தாரும்
மனிதரும் பிறரும் மகிழச் செய்தனன்;
கயல்வளை உகளக் காவி மலர்தரும்
வயல்மலி நெல்லை மாநகர் வாழ்அக்
கங்கைதன் குலத்தோர் களிப்புறக் கரவாச்
செங்கைவான் முகில்நேர் செந்தினா யகவேள்
செய்தவப் பயன்எனத் திருஉருக் கொண்டு
கைதவம் முழுதும் கனன்றுமெய்த் துறவுஉற்று
எண்ணரும் பெயர்பெற்று எவ்வகை உயிர்க்கும்
தண்ணருள் விளைக்கும் தகைமிகப் பெருக்கி
அன்பர்கள் அறியும் ஆடல்கள் அனந்தம்
முன்புரிந்து இன்னும் முறைப்படி முயன்று
பாவால் திருவருட் பரவும்
மூவா நலம்புனை முருக தாசனே.

திருநெல்வேலி போற்றிமுத்துப்பிள்ளை அவர்கள்
இயற்றியவை

**எண்சீர் விருத்தம்**

செவ்வைஉறும் அருணகிரி நீதான் என்றே
திருமுருகன் இவன்கனவில் அருள்வ தாலும்
எவ்வுயிரும் தன்உயிர்போல் எண்ண லாலும்
எமக்கும்இவன் குருவாகி வசிப்ப தாலும்
தெவ்வம்இலார் தொன்னூல்போல் செய்வ தாலும்
திருப்புகழும் விருப்பமொடு மொழிவ தாலும்
இவ்விதமாய் இருக்கின்ற நன்மை யாலும்
ஏத்துவேன் இவன்மகிமை சாற்று வேனே.

**கீர்த்தனம்**

இராகம்: ஆனந்த பைரவி தாளம்:சாப்பு

பல்லவி

அருணகிரியேயிந்த முருகதாசனாவந்த
ஆனந்தம்பாருங்கள் புலவோரே (அருண)

அநுபல்லவி

அருணஉதயம்போலே கருணைதுலங்கலாலே
அருமறைபுகழ்பாலன் உருமலைவடிவேலன்
அருட்குணக்கடலாகிமுந்த அகத்தியர்க்கு அருளேபுரிந்த
கருத்தினுக்குஇசைவாயுகந்த திருப்புகழ்க்கவிபாடும்அந்த
(அருண)

சரணங்கள்

தொல்லைவினையோ அல்லது என்னதவமோ தொண்டர்
தொழுநெல்லை நகர்வந்து பிறந்தானே பிறந்து
அல்லல்உலகவாழ்க்கை எள்ளளவும் ஆகாதுஎன்று
அறிவாலேசுகர்போலும் துறந்தானே துறந்து
எல்லையில்லாக்கவிகள் சொல்லியே அறுவகை
இலக்கணமும்செய்து சிறந்தானே இது
அல்லாமல்திருப்புகழ் சொன்னது அனந்தம்சைவ
ஆகமப்பயிர்கட்குஈது அறம்தானே நிந்தை
சொல்லிவாழ்கிற புல்லருக்குஇடர் நீட்சியே அன்றி
நல்லஉத்தம வல்லவர்க்குஉயர் காட்சியே ஆகும்
வெல்லும்வேள்புகழ் சொல்லிவாழ்கிற மாட்சியே பெற்றுச்
செல்வரைப்புகழாத சீர்ஒரு சாட்சியே நாளும்
சீதமானகுணாலமாதவன் வாதமேசெயும் வாணர்நேர்வரின்
நீதியாய்விதிபேசிவாதுஅறம் ஓதுவான்நிசம் ஆகையால் இவன்
(அருண)

அவளவுஇல்லாமற்போனால் கனவினில்முருகன்வந்து
அருள்வானோஇவன்உண்மைதெருள்வானோதெருண்டு
எவளவோஉயர்வான திருமலைமீதுஏறி
இவனைப்போல்ஒருவன்தான் உருள்வானோ உருண்டு
அவமாய்உயிர்விடாமல் பிழைப்பானோபிழைத்தும்வந்து
அடிமைத்திறமும்சிலர்க்கு அருள்வானோ அருள்
இவளவுஇல்லையேயாகில் குதர்க்கவாதம்செய்வோன்
எவனேனும்எதிர்நிற்க மருள்வானோ இன்னம்

விவரமாய்ச்சொல நாவும்ஆயிரம்வேணுமே இது
தவிரவும்அநுபூதி வேணதுகாணுமே அட
சிவசிவாஇது அநுபவத்திலேதோணுமே நன்றாய்
எவரும்இன்பொடு கருதில்அன்பதுபூணுமே ஐயோ
ஈனமாய்க்குறை சொல்லிவிட்டால்
மானவேற்படை கொல்லும்அப்பால்
ஆனதால்துதி செய்யும்இப்போது
ஆனையைப்பார்க்கவும் வெள்ளெழுத்தோ
(அருண)

கந்தசாமியைச்சிறு மைந்தன்என்று அவுணர்கூடிக்
கடியநண்ணியதுபோல நண்ணலாமோ நல்லது
அந்தநாளிலே ராமச்சந்திரனை மனிதன்என்று
அரக்கன்எண்ணியதுபோல் எண்ணலாமோ யாரும்
வந்தனைசெயும் ஞானசம்பந்தனைச் சமணர்எல்லாம்
வாதுபண்ணியதுபோல் பண்ணலாமோ நாமும்
இந்தமாதவனைக்கண்டு சிந்தைமகிழாமல்அமுது
இருக்கவிஷத்தைவாரி உண்ணலாமோ யார்க்கும்
முந்தவேயருள் கும்பமாமுனி வாக்யமே போலும்
எந்தையாய்இவன் விண்டநூல்வெகு சிலாக்யமேஆகும்
புந்தியால்இது அறிந்தபேர்பெரும் யோக்யமே வெகு
அந்தமாக விளங்கும்ஈதுஅதி பாக்யமே அன்பால்
ஆயிரக்கவி யாவதுஇட்சண மேஉரைப்பவர் யாவர் இப்படி)
நேயம்வைத்திடும்ஈதுஅருட்செயலாயிருப்பதினாலுநிச்சயம்
(அருண)

### எண்சீர் விருத்தம்

கஞ்சமலர் முகக்குமரன் சைவம் ஓங்கக்
கவுணியனாப் புவியில்வந்த தன்மை யேபோல்
நெஞ்சம்மகிழ்ந்து அருணகிரி நாதன் தானே
நிகழ்முருக தாசன்என நெல்லை மேவி
எஞ்சல்இலாத் திருப்புகழ்மற்று எவையும் பாடி
எழிற்செவிகட்கு அமுதூட்டி யாங்கள் பார்க்க
அஞ்சுவகை இலக்கணமாய் இருப்பதாலே
ஆறுவகை இலக்கணங்கள் அருள்செய் தானே

திருநெல்வேலி ஒளிமுத்துத்தொண்டமான் குமாரர்
அருணாசலத்தொண்டமான் இயற்றியன.

வெண்பா

செய்ய தமிழால் சிறந்தபா மாலைசெய்யும்
மெய்யடியார்க்கு எந்நாளும் வேண்டுதுணை - உய்யஅருட்
பேறு கருதிப் பெறும்முருக தாசன்அருள்
ஆறு வகையிலக்க ணம்.

சுந்தரநி றைந்திலகு சண்முகக் கடவுளே
தூயபரம் எனஉரைத்தும்
சுருதிகட்கு உரியசட் சமயங்க ளிற்பெருகு
தொண்டருக் கினியதுஆன
செந்தமிழ்இ லக்கணம்ஓர் ஐந்தும்அவை தரலான
திருவருட் புலமையொன்றும்
திகழாறு வகையிலக் கணம்எனவு ரைத்தன்பர்
சிந்தைமகிழ் வுறஉதவினான்
சந்தமொரு கோடியா னாலும்தொ டுக்கச்ச-
லிப்புறாக் கவிஞர்வேந்தன்
சகலஉயிர் களின்மீதும் நீங்காத கருணைமிகு
தன்மைபெறு தண்டபாணி*

திருநெல்வேலி அருணாசல முதலியார் அவர்கள்
இயற்றியவை

நேரிசை வெண்பா

வேதத்தின் உட்பொருளும் மெய்ஞ்ஞான மும்பெறலாம்
கோதற்ற செந்தமிழ்ப்பாக் கூறலாம்-போதம்
பெறுமுருக தாசப் பிரான்அருளிச் செய்த
அறுவகைஇ லக்கணநூ லால்.

சந்தமுத லாயபா மாலிகைதொ டுத்திடத்
தக்ககவி வாணருக்கும்
தன்மைகுடி கொண்டமெய் அடியவர்கள் பாதமே
தஞ்சம்என வாழ்பவர்க்கும்

*குறிப்பு: இவ் விரட்டையாசிரிய விருத்தத்தில் மூன்று அடிகளே காணப்படுகின்றன. ஈற்றடி முதல் பதிப்பிலேயே விட்டுப்போயிருக்கக்கூடும்.

சுந்தரச் சைவசமை யப்புனிதர் ஆதிநல்
தூயர்க்கும் மற்றுளவர்க்கும்
சுகஞான அமுதம்என அறுவகைஇ லக்கணச்
சூத்திரம்உ ரைத்துஅருளினான்;
பந்தபா சம்சிறிதும் மருவாது திருவருட்
பத்தியில்உ யர்ந்தசீலன்
பகரரிய சித்திமுத் திகள்உதவும் மாதவப்
பணியிற்சி றந்தமேலோன்
செந்தமிழ்க் குறுமுனிவர் வாழ்பொதியை தனில்எழுஞ்
செம்பொருநை நதியின்மேவும்
செழுமலர்ச் சோலைசூழ் திருநெல்லை நகரினில்
திகழ்முருக தாசன்மாதோ.

சிவனணைந்தபெருமாள் முதலியார் அவர்கள் இயற்றியன

## நேரிசை வெண்பா

கற்றோர்க்குத் தெள்ளமுதம் கற்போர்க்குக்கோடிவிழி
மற்றோர் மருள்கெடுக்கும் மாமருந்து - கொற்ற
முருகதா சச்குரவன் மூதறிவாற் சொன்ன
இருமூன்று இலக்கணநூ லே.

வேதமுத லாயபல நூல்களும்இ யம்பும்ஒரு
மெய்ப்பொருளை நாடும்அன்பர்
வேண்டுசெந் தமிழிலக் கணம்ஓர்ஐந்து எனவேவி-
ளங்கலால் யாவருக்கும்
மாதவப் பேறுதந் திடுபுலமை யுடன்ஆறு
வகையிலக் கணம்உரைத்து
மலர்வாணி அனையபல கவிவாணர் துதிசெய்உரு
மலைமீதுஅ ரங்கேற்றினான்
தாதுஅவிழ்க டம்பினைச் சேவலங் கொடியினைத்
தனிவேலை மயிலைநிதமும்
சந்தம்ஆ தியபனுவ லாற்புகழ வல்லவன்
சமரசநி றைந்தஞான
சாதகர்வ ணங்குதிரு நெல்லைநகர் தனில்முருக
தாசன்என வந்துஉதித்தோன்
சங்கரே சற்குஇனிய கந்தவே ளைப்பரவு
தண்டபா ணிக்குரவனே.

தனனதன தத்தன தனனதானா

திருவடிக ளைத்தினம் மனதினூடே
திடமுறநி னைத்திடு தவம்உளோர்பால்
வருகுருப ரத்தனி முதல்வன்மீதே
வலியதமி ழைப்புனை புலமையோரே
கருணையொடு சற்குணம் மருவுசால்போர்
கருதுவரம் முற்றிலும் உதவுசீர்சேர்
அருண்மலிதி ருப்புகழ் முனிவன்ஓதுஓர்
அறுவகைஇ லக்கணம் இனியதாமே.

புராணப்பிரசங்கம் நெல்லை அங்கப்பமுதலியார்
அவர்கள் இயற்றியது.

சுந்தரம் பெருகுமுத் தமிழ்வலோர் உவகையில்
தோய்ந்துஅளவில் சுகிர்தம்உறவும்
சொல்லரிய மறையைநெறி முறைஓதும் வேதியர்கள்
சுபசோப னம்சொல்லவும்
அந்தரத் தோர்வியப்பு உறவும்மகு டாதிபர்உள்
அன்புடன் போற்றிசெயவும்
அறுவகைஇ லக்கணப் பனுவல்ஒன்று அன்பருக்கு
அருமருந்து எனஉதவினான்
கந்தரம் தவழ்சோலை நெல்லைமா நகரினன்
கருணையே வடிவம்ஆனோன்
கவிவாணர் நெஞ்சம்தி டுக்கிடச் சந்தங்கள்
கழறிடுங் கரடகொம்பன்
இந்திரன் துயர்கெடச் சூர்வென்ற கந்தவேள்
இணையடிவி ரும்பும்இயல்போன்
இணையிலா அநுபூதி உறுமுருக தாசன்என்று
இலகும்எம் குருநாதனே.

சென்னைநகர் பண்டிதை

ஸ்ரீமதி ம. மனோன்மணியம்மாள் இயற்றியது

ஓங்குபுகழ் அருணகிரி நாதர்அவ தாரமாய்
உலகுஅதனில் வந்துஉதித்தே
ஒருகோடி சந்தம்ஆ னாலும்ஒரு நொடியினில்உ –
ரைத்துஅருளும் மாட்சிமேவிப்
பாங்குபெரு சீவகா ருணியம்எங் கணும்உறப்
பகர்சித்தி நோன்புஉஞற்றிப்
பயில்தண்ட பாணிமுனி வரன்ஆகும் ஞானமணி
பலநயமும் இலகஓதும்
சாங்கம்உறும் அறுவகையொடு ஏழாமி லக்கணம்
சார்ந்துஒளிர் சிறப்பைஓர்ந்தே
தமிழ்வலார் யாவரும் வியந்துரைத் திடல்மகிமை
தான்எனம திக்கவேண்டாம்
வாங்கரிய எட்டாவ தோடுஒன்ப தாம்அவைவ –
குத்துஇனிது உரைக்கும்வண்ணம்
வருங்காலம் ஒன்றுளது சேடன்அநு மன்பரிதி
வாணிமுத லோர்மெச்சவே.

சாத்துகவிகள் முற்றுப்பெற்றன.

இந்நூலுக்குச் சாத்துகவிகள் வழங்கிய புலவர்களின் தொகை - 15

சிறப்புக் கவிகளின் மொத்த எண்ணிக்கை – 28.

# நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை

(எண்—நூற்பா எண்)


அக்கரமுதற்கொண்டு 648
அகப்புறச்சமயம் 393
அகப்புறப்பொருள் 399
அகப்பொருள் 279
அகப்பொருளிலக்கணம் 280
அகம்புறம் இரண்டும் 394
அகமெனும் அகமும் 398
அகர ஆகாரத்து 96
அகர ஆகாரம் 158
அகர உகரம் 162
அகர ஒகரம் 48
அகரக்குறில் நெடில் 486
அகரத்து ஈரேழாவது 70
அகரத் தீறுதொட்டு 42
அகரப் பிறப்பே 66
அகரம் செய்மைப் 103
அகரம் பதினெட்டு 73
அகரமும் இகரமும் அணைவுறின் 67
அகரமும் இகரமும் உகர 60
அகரமும் உகரமும் 68
அகரமும் யகரமும் 491
அகரவுயிர்மெய்யோடு 159
அகவலிற் சூத்திர 407
அகவற் பாசுரத்து 411
அங்குசம் பாசம் 581
அங்ஙனம் அந்த 191
அசைகளிற் சிற்சில 228
அட்டாவதானம் 749
அடல்மிகு மடங்கல் 233
அடிகளினீற்று 475
அடிதொடை கூடியும் 444
அடிதொழுந்தொண்டர் 632
அடுக்கிய அண்டமும் 385
அணிநிலை அளப்பரிது 535
அணியிழை செந்நிறத்து 288
அணியினுக்கணி 631
அணிற்றொனி 369
அதனதன் நிழல் 620
அதுஇது என்று 396
அந்நாட் புலவருக்கு 753
அந்நூல் ஒப்பாக்குற்றம் 479
அம்பிகை அடிசில் ஆக்கி 730
அம்மா அந்தோ மாதோ 229
அம்மானையீற்றின் 427
அயல்படு கலையுடை 248
அரன்குகன் திருமால் 540
அருட் பேராளருக்கு 699
அருணையூரனன்று 769
அரும்பொருள் 404
அருமகள் நெற்றியில் 282
அருமறைக்கொடி 590
அருமையறியான் 692
அருள்நிலை முடித்தற்கு 786
அருள்வலிப் புலவர் 670
அருளும் பொறுமையும் 378
அலகாதி மூன்றும் 93
அலகிலா மறைகட்கு 643

அலகினத்து இம்மி 53
அலகுறுப்புரைத்தனம் 41
அவர்கள் என்றிடல் 188
அவர்இவர் உவர் எவர் 187
அவன்அவள் இசைதலும் 313
அவன்இவள் எஃதுஎன்ற 184
அவன்இவன் எவன் 182
அளப்பரும் பனுவல் 767
அறம் பொருள் இன்பம் 515
அறியும் தன்மையை 644
அறிவிடத்து இருந்தும் 392
அறுகுங் கொன்றையும் 579
அறுசீர் எழுசீர் 441
அன்னங் கலைமகள் 539
அன்னங் கொடுத்தோன் 777
அன்னமென்றிருப்பார் 310
அன்னமென் னடையே 298
அனுபல்லவமும் 450
அஃறிணை போலும் 200
அஃறிணைப் பன்மை 266
ஆ ஊ ஒ எனும் 117
ஆ எழுத்து ஒற்றினத்து 74
ஆ ஒ இரண்டும் 157
ஆ ஒ எண்றிடல் 224
ஆக்கியோன் 521
ஆகா அளபெடை 478
ஆகின்ற அழிகிற 211
ஆசிரியப்பா வதன்நிலை 660
ஆசுகவியின் அமைதியும் 510
ஆடும்பரிவேலணி 503
ஆண்டுதோறும் 362
ஆண்பால் பெண்பால் 185
ஆண்பால் போலும் 203
ஆண்பெண் எனும்உரு 314
ஆய்தத்து அருக்கன் ஆதி 98
ஆய்தம் இடையினத்து 92
ஆய்தமும் ஒற்றும் அறிந்த 17
ஆய்தமும் ஒற்றும் நகரமும் 112
ஆய்தமோ டொற்றும் 72
ஆயிரம் சூகாரம் 55
ஆலுடைக் கடவுளை 253
ஆலெனல் ஆதலின் 275
ஆவியீராறு 4
ஆவெனல் வினாவாம் 104
ஆழியும் அம்பும் 373
ஆள்அள் இரண்டும் 271
ஆறசை ஆதிய 247
ஆறுதிங்களில் 364
ஆன்அன் ஆள்அள் 226
ஆன்அன் ஒன்எனும் 264
இகரத்தீற்றொரு 44
இகரம் அணித்தாம் 105
இகரம் ஒற்றினத்து 75
இகரமும் உகரமும் 199
இகரமும் எகரமும் 487
இகலிய புலவோர் 760
இடுகுறி காரணம் 193
இணைநேர் தேமா 241
இணையசைச் சொல்லே 244
இம்முறை யாவும் 481
இயங்கு நிலையிவண் 86
இயல்முதலாகிய 456

இயலிசை நாடகமென்னும் பகுதியில் 484
இயலிசை நாடகமென்னும் முத்தமிழ் 171
இயலிசையென்னும் 448
இயற்கையில் 282
இரக்கமும் சுத்தமும் 633
இரண்டு நாலைந்தெனும் 428
இராகவன் தருமன் 546
இருசுழி எழுதா 18
இருநிலத்து யாம்உணர் 3
இருபால் விகுதிகள் 116
இருவகைச் சந்தமும் 460
இருவகைப் பல்லவம் 452
இருவகை யகவலும் 406
இருவகை வண்ணம் 467
இல்லெனல்உடைமையை 267
இல்லே இன்என 268
இலக்கணம் இலக்கியம் 516
இவ்வகை எதுகையில் 504
இவ்வகைத்தாகும் 630
இவ்வகை நிலங்களோர் 340
இவ்வணம் கருவி 381
இவ்வணம் பகர்ந்திடல் 614
இவ்விதத் திரிவெலாம் 262
இவற்றைத் தளையென்று 246
இவைபுணர்ந்தொலிக்கும் 63
இவையெனலாதியும் 189
இழிநூல் பாயிரத்தால் 523
இளமையோடெழில்நலம் 321
இன்பமும் தெய்வமும் 758
இன்ப வெள்ளத்து 325
இன்ன பஃறேவர் 588
இன்னான் இன்னாள் 190
இன்னிசை வெண்பா 424
இன்னும் சிற்சில 421
இனநிலை கூறினம் 95
இனிப்பு புளிப்பு 218
ஈஏ எனும் இருபொறி 118
ஈகாரம் ஒற்றுத்தொறும் 76
ஈகை ஆதிய நல்வினை 214
ஈரசைச்சீர் மூன்று 436
ஈரசைச் சொல்லுடன் 243
ஈரசைச் சொற்கள் 438
ஈரசை மூன்றசை கலந்து 403
ஈரசை மூன்றசைச் சொற்கள் 432
ஈரடி பேதித்து 443
ஈரெட்டு ஒருபதிற்று 304
ஈற்றில் நேர்வரும் 412
ஈற்றி விடையின 469
ஈற்றி லோரசை 440
ஈற்றின் வளைவு 20
ஈற்றுறும் அடிக்கு 405
உகரத் துறுசுழி 51
உகரம் ஒற்றினத்து 77
உகரம் ஓர்பொருளின் 106
உகரம் சார்தர 50
உகரமும் ஒகரமும் 488
உடலகத்து என்பும் 389
உடைமை யியல்பை 605
உண்டல் உறங்கல் 206
உண்மைப் புலவோர் 654
உந்தியு முரோமத்து 299
உம்பரூர்க் குரவன் 545
உம்மெனல் ஒன்றோடு 269

உயர்திணைப் பன்மை 201
உயிர் ஈராறும் 87
உயிர்எழுத்துரைத்தனம் 14
உயிர் என்று ஆய்தம் என்று 2
உயிர்ப்பொறி 489
உயிர்மெய் ஆதியில் 100
உயிர்மெய் இகரத்து 160
உயிர்மெய் உகரம் 154
உயிர்மெய்த் தகரம் 142
உயிர்மெய்ப்பொறி 115
உயிர்மெய்யெழுத்தும் 36
உயிர்மெய் வருக்கத்து 52
உயிரெழுத் துரைத்தனம் 14
உயிரெழுத் ததனையே 492
உரிய சொல் நான்கால் 416
உரிய மூன்றசை 414
உருவும் ஓசையும் 6
உரைப்பொருள் மிகலால் 511
உலகமெங்கணும் 277
உலகர்தம் வாய்பாடு 748
உலகினர் உணவினத்து 178
உலகெலாம் புரக்கும் 635
உலவாப் பெருநலம் 397
உவன் உவள்உது 183
உவமையின் சார்பு 606
உழியியல்பு இவ்வாறு 356
உள்ளெனப் புறம்பென 395
உறுப்பியல்பு இவ்வாறு 300
உறுமிடத்துற்று 493
உன்னிய கருமம் 751
உன்னெனல் ஆதிய 219
ஊஒற்றினத்துறின் 78
ஊக்கமும் முன்பின் 638
ஊகாரத்து இரண்டாம் 11
எகர ஒகர உயிர்மிசை 49
எகரத்து ஈற்றினில் 21
எகரப்பொறி ஒற்றினத்து 79
எகரம் முதல்நின்று 107
எட்டுப் பதினாறு 483
எண்கால் இருசிறை 357
எண்ணப் படுமவற்று 706
எதிரிடுங் கருமத்து 774
எதுகை இயல்பினை 505
எவ்வகை எழுத்தும் 235
எவ்வகைச் செயலையும் 607
எவ்வழி எவரெவர் 465
எவ்விதக் கவிகளும் 665
எவ்விதச் சொற்களும் 261
எவ்விதச் சுருதியும் 324
எழுத்தின் புணர்ச்சியும் 166
எழுத்துரு அறியா 172
எழுத்தெனல் வடிவுடன் 5
எள்ளிடைப் புலமை 679
எறும்பொழுக்கு 564
என்புஊன் வேண்டுநர் 342
என்புபெண்ணாகவும் 719
ஏ ஒற்றிடையுறில் 80
ஏகாரம் ஒருவர்க்கு 108
ஏதொரு நிமித்தத் 316
ஏயெனல் ஆதிய 221
ஏன்ஏம் ஓம்ஆம் 270
ஏனைய எழுத்தின் 113
ஐஔ இரண்டும் 119
ஐகாரத்தில் 97
ஐகாரம் ஒருபெயர் 109
ஐஞ்சீர் மேல்வரும் 442

ஐந்தாமிலக்கணம் 642
ஐயோ என்றிடல் 222
ஒகரமும் ஊகாரத்து 13
ஒகரத்துடனுயிர் 120
ஒத்தல் உறழ்தல் 230
ஒருசொல் நால்வகை 258
ஒருதுறை பற்றிப் 332
ஒருநிலத் துறுவன 344
ஒருபெயர்க் குரியார் 530
ஒருபொருட் பெயரே 255
ஒருபொருளுடனதன் 274
ஒருபொறிப் பின்னே 121
ஒருமா எழுதி 43
ஒருமைப் பன்மையும் 186
ஒருமொழி ஒருவாறு 170
ஒருவன் சொல்லொடு 260
ஒலிநிலை யளவாம் 64
ஒவ்வோர் பொருளை 163
ஒவ்வோர் வண்ணமும் 472
ஒளிரிழை மடவார் 572
ஒற்றிற்கு ஒருசுழி 16
ஒற்றின் சிரந்தொறும் 15
ஒற்றினந்தோறும் 99
ஒற்றினம் உயிர்மெய் 88
ஒற்றினை இரட்டித்து 164
ஒற்றுத்தொறும்போய் 82
ஒற்றோடுயிர் கலந்து 62
ஒற்றோடையெழுத்தை 81
ஒன்பதாண்டுடைப் 302
ஒன்பது பத்தை 54
ஒன்றற் கொருவன் 532
ஒன்றன் பெயர் 204
ஓசையும் கனமும் 480
ஓந்தி போலும் 574
ஓமெனல் ஆமெனல் 220
ஓரசை யீரசை 245
ஓரசைதொட்டு 496
ஓராயிரமுதல் 509
ஓரொலி கலைதொறும் 47
ஓவெனல் வினாவொடு 110
ஔஎனும் உயிர்தான் 84
ஔஎனும் எழுத்து 33
ஔகாரத்தின் கடைக்குறி 71
ககரமும் உகரமும் 39
கசடதப என்று 89
கசதபவ மெய்யைந்தும் 122
கட்டளைக் கலித்துறை 435
கடலும் மேகமும் 537
கண்களால் இசையா 315
கண்களின் சோர்வும் 311
கண்டாயோ என 713
கணபதி முருகன் 650
கணவற் காண்டொறும் 297
கணியுரு வாகிய 534
கதிர்மதி உடல்தொறும் 390
கதிர்மதி உடுமுகில் 382
கதிரவன் உதித்துள 619
கப்பணம் உம்மணி 254
கமலப்பூவும் 585
கமலமாதிய கருகலும் 626
கமலையை மலைஎன 259
கமுகும் சங்கமும் 562
கரியவார் குழலிற் 283
கருதிய தெய்வங்கண்முன் 668
கருதிய தெய்வமும் 773
கருநிறக் குடையொடு 594
கரும்பொடு வாள்என 555

கருணைக் கடல்என 482
கல்லார் மகிழ்வுற 750
கலிப்பா அரையரை 430
கலிவிருத்தம் சில 439
கலை முதல் எழுத்தே 58
கவந்தமும் காளியும் 353
கவிதை யொன்றால் 779
கவின்திகழ் அகன்முக 291
கழியூன் வேண்டி 639
கள் அரக்கு என்புஊன் 352
களம்வரை அகரம் 8
களிறே புரையும் 457
கற்பனை நிலையிவண் 617
கற்பனை புலவோர் 613
கற்பனை மீதொரு 615
கற்றூணிடத்தொரு 175
கன்னிதன் கவுட்கிணை 558
கனிச்சீர் இரட்டிய 409
காகப் புள்ளன 680
காகமூக்கென்ன 554
காண்டல் ஐயுறல் 326
காண்டம் சருக்கம் 527
காப்புறு பச்சிலை 400
காமக்கடலே 687
காமியம் கருதி 386
காய்வரு மூன்றசை 434
கார்மணல் ஒட்டமும் 551
காரணங் காரியம் 694
காரெதிர் நடமிடு 366
கால மழைஎன 667
கால வேற்றுமை 693
காவிக் கொடியும் 589
காவிய நிலைகளும் 663
கிளிமுகம்போல 7

கின்னமென்று 249
கீழ்திசை வடதிசையாகி 612
கீழ்நோக்கி இருவளைவு 34
கீழ்முக்காலொடு 38
குகரம் தனித்தும் 272
குகரமும் கைஎனும் 111
குடமும் குன்றமும் 563
குயில்தரும் சினையை 367
குரவன் கடைவரி 657
குலம்நிலை அருத்தம் 597
குலவுதென் மதுரை 770
குளிர்பொழில் பாண்டி 507
குற்றெழுத்திணைந்தும் 238
குறள்வெண்பா இரண்டு 417
குறிஞ்சி யாதியில் 343
குறிஞ்சியூர் குறிச்சி 341
குறிப்பியல் பிவ்வணம் 312
குறில்தனி வரும்அசை 423
குறில்நெடில் தனித்தும் 237
குறிலிற் பாதி போலும் 61
குறுகிய இரட்டைக் கொம்பு 23
குறுகிய ஒற்றைக் கொம்பு 35
குறைபடும் புலவோர் 653
கூகூ எனல் 223
கூட்டெழுத்தொருவா 45
கையொடும் இன்றியும் 358
கொங்குவாழ் மன்னன் 508
கொச்சகச் சீர்கொடு 431
கொச்சகத்தடி சில 445
கொடுங்கோல் வேந்தனும் 628
கொடுந்தமிழ்ப் புணர்ச்சி 476

கொண்ட துறையினை 695
கொல்லலுான் சமைத்தல் 690
கொல்லா விரதக் 173
கொலைபுலைமறுத்திடல் 524
கொலைபுலையெனுமிரு 772
கொவ்வையில் வீழியில் 558
கொற்றியும் செற்றமும் 499
கொன்றுயிர் தரும் 292
கொன்றையும்
தும்பையும் 580
கோஎனும் எழுத்தின் 19
கோங்கரும்பன்ன 709
கோடிகோடி கொடியார் 740
ஙகர ஒற்றின்பின் 126
ஙகரத்திற்று 25
ஙஞணநமன 90
சகரத்து ஈற்று 24
சகரமும் தகரமும் 490
சவலை வெண்பா 418
சார்பெலாம் மொழிய 250
சாரா தொழிப்பான் 677
சிங்கமென்றெழும் 497
சிட்டரைச் சேர்த்தலும் 636
சிந்தையின் மயக்கம் 656
சிற்சில விகுதிகள் 229
சிற்றிலிற் சிறாரெரொடு 301
சிறுகவி ஒன்றும் 674
சிறுகீரை வித்துஉறு 569
சிறுமாங் கனியுடன் 561
சீயம்நூல் உடுக்கை 570
சீயெனும்வெறுப்புச்சொல் 225
சீரிய புலவர்தம் 683
சீருற்ற நீருற்ற 502
சீறியிகழ்வார் 781
சுட்டுச் சொல்விதம் 192
சுட்டெழுத்திடை 114
சுருதியும் புலவோர் 756
சுவைமிகச் சொல்லலும் 634
சுழித்து மேற்கொடு 12
சுழியில் வலம் கீழ்ப்பற்றி 9
சுழியிலா ஒற்றும் 56
சூரனூர் நடுங்கும் 737
செங்கோல் மன்னனும் 627
செத்தாருய்யினும் 675
செத்துநாறிய சினையாடு 780
செந்தாமரை என்று 573
செந்தூர்த் திருவுரு 742
செந்நாப் புலவன் 718
செந்நிறக் குடையும் 591
செம்பொடு வெள்ளியும் 376
செம்பொற் குன்றமும் 536
செய்கை தர்மம் 239
செய்போ நில்எனல் 216
செய்யுட்களின் நிலை 236
செவ்வேற் குருபரன் 733
செழியன் மனையொடு 732
சேயிழைப் பூங்கொடி 290
சேர்வான் மகிழ்வுறும் 296
சேவித்தொருவர்பின் 703
சொல்நிறம் தன்நெஞ்சு 664
சொல்லி நின்று வந்து 213
சொல்லின் சார்பியல்பு 401
சொல்லின் பொதுவியல்பு 181
சொல்லீற்றைத்திரித்தும் 263
சொல்லெனல் எழுத்து 167
சொற்கடல் அமிழ்தென 513

சொற்சுவை உணரான் 671
சோம்பலும் துயிலும் 652
ஞகர மெய்ப்பின் 127
ஞகர வுயிர்மெய்யும் 152
டகரத்து ஈற்றுவரை 26
டற ஒற்றின்பின் 125
ணகர உடற்பின் 128
ணகர ஒற்று 146
ணமனய ரலழள மெய் 138
ணமனலள ஒற்றொடு 144
ணமனலள ஒற்றோடு 145
ணவ்வே முந்திரி 37
தகர உயிர்மெய் 141
தசாங்கம் பவனி 526
தத்தவில் தாத்தவும் 471
தத்தவும் தந்தவும் 461
தத்தவும் தன்னவும் 459
தத்தன எனலும் 470
தத்தா எனவரல் 464
தமிழ்க்கவி அனைத்தினும் 485
தமிழ்க்குந் தனக்கும் 747
தமிழ்ச்சுவை அறியா 672
தமிழ்ச்சொற் பெருக்கை 169
தமிழ்ப்பெயர் முதுகலை 1
தமிழ்மொழிக்
குயர்மொழி 705
தமிழறி புலவோர் 681
தல்லார் அல்லர் 276
தலைவன் மாலுடை 307
தலைவனுந் தலைவியும் 327
தவ்வா மெய்ப்புகழ் 697
தவத்தோர் உறையுளில் 346
தவமும் சமயமும் 322
தவறிய மோனை 495
தளைப்பிழை யின்றி 422
தளை பிறழ்ந்துள்ள 426
தன்கருத்தல்லா 257
தன்வழக்குஎதிர்த்தோன் 759
தன்னவுந் தய்யவும்
தனவும் 624
தன்னவுந் தய்யவும்
தனவென 466
தன்னுடைக் கேள்வனை 319
தன்னுடைச் சமயத் 700
தன்னெதிர் நிலவிய 766
தனவும் தானவும் 473
தனிச்சீர் ஆதிய 410
தனிவேல் சக்கரம் 599
தாய்வயிற் சேயென 625
தாய்வயிற்றிருந்து 785
தாயைத் தல்லி என்று 180
தானவும் தய்யவும் 463
தில்லைக் கோயில்
திருமதில் 768
தில்லையூர்ப் பார்ப்பார் 738
துட்டப் புலவரை 684
துணிவொடு செட்டும் 349
துதிக்கையும் வாழையும் 571
துய்ப்பார் சொல்என 331
துலையொடு குன்றியும் 375
துழாயொடு பிறவும் 336
துறைத்தொகை
ஒருவிதம் 328
துறைபகர் வண்ணப்பா 474
துறையியல்பு இவ்வணம் 333
தூக்கிய மாலையை 744
தெய்வக் குறிப்பில் 629
தெய்வத் துதிவழி 655
தெய்வந் தோன்றியும் 669

தெய்வநிலை இவண் 102
தெய்வப் புகழும் 688
தெய்வப் பெயரின் 101
தெய்வம் அரையன் 517
தெய்வமும் புலமைத் 711
தெருளிலக்கணம் உணர் 278
தென்றலுலவலும் 623
தேமா புளிமா 242
தேமாங்கனியுறழ் 764
தேற்றந் தவறு 645
தேற்ற மென்பது 646
தேறாப்புலவனை 682
தேனீயாமென 637
தொய்வே நல்லாள் 295
தொழில்நிலை நடுநிலை 746
தொள்ளாயிரத்துத் 728
தோல்வியேற்றுத் 685
நகர ஒற்றுடன் 129
நடுநிலையனைத்தும் 765
நண்டு தன் துணையை 370
நல்லாள் நாசியில் 287
நவ்வலும் தாழையும் 624
நவின்றும் அங்ஙனம் 678
நற்பொருள் பொல்லார் 609
நன்றிடை தீதும் 757
நாடகங் கொச்சகங் 658
நாடகந்தொட்டு 329
நால்வகை எழுத்தின் 59
நால்வகைக் குலங்களை 351
நால்வகைப் பயனையும் 354
நால்வரும் பதின்மரும் 176
நாவின்றி வாய்நிறை 368
நாழிபோலும் 46
நாளென மலரென 415
நாற்சீர் ஓரடி 437
நிகழ்த்தரும் கடவுள் 576
நிலத்தியல்பு இவ்வணம் 345
நிலைவரை அடிதொட்டு 22
நிறத்தின் பகுதியை 177
நீற்றறை குளிரவும் 720
நூல்களின் பகுதிகட்கு 525
நூல் பிரபந்தம் 514
நூலின் துணையிலும் 649
நூற்பகை கொள்ளினும் 651
நூற்பா என்பது 408
நூற்பா என்ன 404
நூற்பெயர்முதல்மொழி 234
நெடுமாலனையான் 552
நெல் முதல் விளைவன 377
நேர் நாள் நிரைமலர் 240
நேரிசை வெண்பா தனிச் சொல்வரை 427
நேரிசை வெண்பாவேண மட்டு 420
நேரிழை கண்களின் 286
நேரெனத் துவக்கலும் 433
நேரெனத்தொடுத்தலும் 425
பகர எழுத்தின் 28
பகரத்தலை நிலைவரை 31
பகரத் தீற்றுவரை 27
பகாப்பதம் இடுகுறி 194
பசும்புல் பற்றாப்பாலை 337
பட்ட புரசினில் 743
பட்டினத்தடிகள் 506
படுபலா உருள்பனை 726
பண்ணும் கிள்ளையும் 560

| | |
|---|---|
| பதினோராவதொற்று | 69 |
| பரமன் பாங்கனாகவும் | 721 |
| பருவ மடவரல் | 285 |
| பல்லவத்து இருபங்கு | 449 |
| பல்லவம் போன்றே | 451 |
| பல்லெனும்மொழியொடு | 165 |
| பல்வகை நெறிகளும் | 599 |
| பலவகை நயங்களும் | 704 |
| பழகிய கொழுநர் | 309 |
| பளிங்கு நிறமும் | 179 |
| பற்பலர் செவிகவர் | 776 |
| பன்னாடுடையவன் | 722 |
| பன்னிரண்டாண்டுடை | 303 |
| பனுவலின் முகத்து | 519 |
| பனுவற்காரன் | 520 |
| பாசுரத்தியல்பிவண் | 512 |
| பாடம் எழுதலில் | 666 |
| பாட வறியார் | 761 |
| பாணனுந் தருமியும் | 712 |
| பாதி யிரவிற் | 622 |
| பாநிலை தெரிதற் | 446 |
| பாம்பு நா வகிர்ந்த | 347 |
| பாயிரத் துறுவதில் | 522 |
| பார்த்திபன் காய்த்தமா | 500 |
| பார்வையிற் பரிவில் | 306 |
| பால்நுகர் குருளையை | 361 |
| பாலுக்குக் கூழுக்கு | 501 |
| பாழியந் தடக்கை | 383 |
| பிரபந்தத்தொகை | 662 |
| பிழையாதொழுகிய | 323 |
| பிறக்கும் பேசும் | 212 |
| பிறமொழித் தேயமும் | 384 |
| பிறவா வீடே | 387 |
| பின்னர்ஓர் உயிர்மெய் | 137 |
| புகர்மலிந்து இருகோடு | 640 |
| புகலரும் பனுவல் | 691 |
| புணரியாதிய | 771 |
| புலமைக் காள்எனப் | 455 |
| புலமைத் தொழிலின் | 755 |
| புலமையிற் கரவுதீர் | 710 |
| புலமையின் ஆசை | 647 |
| புலமையின் ஆண்மை | 752 |
| புலமையை இழிவென | 745 |
| புலவோர் நாவும் | 586 |
| புறப்பொருட் பகுதியில் | 334 |
| புறப்பொரு ளிவ்வணம் | 388 |
| புனல்பிரித்து ஆன்பால் | 365 |
| புனையிழைப் பசுங்கிளி | 289 |
| பூவில்மணமெனப் | 281 |
| பெண்கொடி நாசியின் | 556 |
| பெண்மைக்குஅலகையும் | 320 |
| பெயர்ச்சொல் ஒருவாறு | 205 |
| பேசலும் கலவியில் | 305 |
| பேயொடு குன்றம் | 174 |
| பைந்தமிழ்ப் புலவோர் | 528 |
| பைந்துழாய் போல | 723 |
| பொதுநூற்சொல்லையும் | 701 |
| பொய்யினும் தீரா | 318 |
| பொய்யே கூறினும் | 604 |
| பொருட்குவை | 708 |
| பொருந்தக்கூறிய | 575 |
| பொருவருந் தமிழ்ப்பா | 716 |
| பொருள் நயந்தோன்றும் | 702 |
| பொற்றாமரையில் | 725 |
| பொறியும் சந்தமும் | 391 |

பொன்னாலாடையும் 582
பொன்னிறம் பிரமன் 538
பொன்னொடு நவமணி 584
போயினன் என்றிடல் 209
போன செய்த வைத்த 210
மகரத்து ஈற்றை 32
மகர மெய்ப்பின் 156
மகரவொற்றுடன் 130
மகரவொற்றதன்பின் 149
மகரவொற்றுத்
தன்னொடு 147
மகர வொற்றொடு 143
மகிதலம் புகழ்மொழி 231
மங்கலச் சொல்லின் 232
மங்கையராடலை 602
மணிநாவொடு 739
மதியுங் கிள்ளையும் 587
மதுரங் குன்றி 477
மதுரையூர்க் கடவுள் 727
மயிலினை மரகதம் 543
மருவுறா மதியம் 611
மலர்தலும் குவிதலும் 294
மலைக்கே வான்முகில் 610
மலைநதி நாடுநகரம் 600
மலைமகள் வசமற 731
மலையிடைப் புணர்ந்த 360
மலையென எழுவென 566
மழலையங் குழவியை 529
மழையுங் கூழும் 379
மற்றொரு கலையென 57
மற்றொரு நல்லாள் 317
மற்றோர் புலவன் 707
மற்றை மூவகை 85
மற்றையர்க் காகா 531
மன்னரும் வியப்ப 782
மன்னவன் ஆணையை 778
மனம் தாய் தோழி 601
மாங்கனி நிமித்தம் 735
மாந்தருடைமை 597
மாய்வார்ப் போற்றி 689
மாலை கண்டுவப்பதும் 308
மாலையிற் செக்கர் 621
மாற்றத் தீற்றில் 139
மிடியறக் கொடுக்கும் 550
முத்தமிழ்ப் புலமை 717
முருந்தும் மாதளை 559
முல்லையந் தாரொடு 592
முளைகொணர்ந்து
அடிசில் 549
முப்பாற் பொதுப்பெயர் 202
முற்றியலுகரம் 155
முற்றும் பொறுத்தலும் 686
முன்வரும் இயல்பில் 251
மூகையாய 783
மூவகைக் கழகத்து 724
மூவகை முரசமும் 348
மூன்றடி நன்னாற்சீர் 419
மூன்றாம் நிலையிவண் 775
மெய்களில் ஓஉறில் 83
மெய்யிடை பொய்யும் 603
மெல்லின மெய்யீற்று 468
மென்தோட் பேதைதன் 565
மென்மையும் வேய்முளை 293
மேகமும் நிதிகளும் 568
மேலுறச் சுழித்த 10
மேழிக் கொடியொடு 593

மேழிச் சீரும் 350
மொழியற் றவிர்தரும் 140
மொழியீற்று மெய்யும் 153
மொழியீற்றைவரில் 265
மோனை இல்லா 494
யகர ஒற்றொடு 132
யகரமெய் யதன்பின் 150
யரல வழள என் எழுத்து 91
யரழ ஒற்றுக்கள் 124
யா எனும் எழுத்தின் 29
யாப்பியற் துணை 447
யாப்பிலக்கணத்தினை 533
யாவரும் புலமையின் 754
யாழெனும் முன்கையும் 567
ரகர அகரம் 161
ரகர ஒற்றீற்றுறு 198
ரகர மெய்யுடன் 133
ரழ ஒற்றுத்தம் 123
ரௌ எனும் பொறியின் 30
லகர மெய்யுடன் 134
ளள மெய்ப்பின்னர் 151
வகரம் சத்தி 195
வசிட்டனை அகத்திய 544
வண்ணச் சீர்கொடு 454
வண்ணப் பனுவலும் 673
வண்ணம் புகுபவும் 330
வண்ணம் வெண்பா 380
வணிகர்க்கு அளகைக் 548
வந்தேன் இருந்தேன் 207
வம்ப னொருவனூர் 734
வரவுகொண்டு 608
வருவித்துரைசெயும் 256
வரைநதி நகர் நாடு 518
வல்லினம் ஆணே 94
வல்லினம் பற்றித் 458
வள்ளையும் புன்னையும் 339
வளர்ச்சி தளர்ச்சி 217
வாக்குச் சுவையுடன் 676
வாதிடத் தேடிவரும் 784
வாதுக் காதரம் 762
வாய்திற என்கைக்கு 65
வாலிய நிறமுதல் 359
வாவிக் காக்கம் 641
வாழ்நனை வாணன் 252
வாழையும் தென்னையும் 338
வாளொடு வில்லும் 374
வான்தவழ் குடுமி 335
வானவர் தருமகள் 578
வியனுற விளம்பிடல் 616
விரிகடற் றானையும் 583
விருத்தப் பாநிலை 659
விழுந்த துளிஎன 714
விற்பொரு புருவமும் 553
வினைச்சொல் இவ்வணம் 215
வீமன் வென்றிவில் 547
வீணே விரிப்பினும் 698
வீணையிற்றேர்ந்தோன் 453
வெண்பாத் தோல்வியில் 763
வெண்பா வதனிலை 661
வெண்பா வீற்றே 413
வெண்மலர்க்கமல 715
வெள்ளிமால்வரை 541
வெள்ளியாற் சமைத்த 736
வெளிறப் பாடலும் 699
வெறிக்களம் நெற்களம் 355
வேப்பந் தாரொடு 595

| | |
|---|---|
| வேலியுட் போதலும் | 363 |
| வேலுங் குலிசமும் | 577 |
| வேலுஞ் சூலமும் | 372 |
| வேலொடு மின்னலை | 542 |
| வேற்றுயிர் இயல்பு | 371 |
| வேறிடத்தாறு | 729 |
| வைகறை நிகழ்வன | 618 |
| வைதான் என்பதும் | 208 |
| வைவார் பற்பலர் | 741 |
| ழகர ஒற்றும் | 135 |
| ளகர ஒற்று | 197 |
| ளகரத்திறு | 40 |
| ளகர மெய்யும் | 136 |
| றகரமும் ரகரமும் | 168 |
| னகர உடலுடன் | 131 |
| னகர ஒற்றுஈற்றுறும் | 196 |
| னகர மெய்யும் | 148 |
| னள மெய்யீற்றுடை | 273 |

## மேற்கோள் இலக்கண நூற்பா அகராதி

(முழுச் சூத்திரங்களாக ஆளப்பட்டவை மட்டும்)

(எண்: நூற்பா எண்)


1. அமுத சாகரம்

அகரமோடாகாரம் ஐகாரம் 486

கட்டளை கலம்பகம் சமநடை 421

2. அவிநயம்

ஒன்று இரண்டு ஒரு மூன்று 60

3. இரத்தினச் சுருக்கம்

இயம்புகின்ற காலத்தெகினம் மயில் 601

வரையாறு நாடு நகர் ஊர்துரகம் 600

வாரிமணிவெய்யோன் மதபாரதம் 304

4. இலக்கணவிளக்கம்

அவற்றுள், தொடர்நிலை விகற்பம் 509

எழுத்துச்சொற்பொருள் அணியாப்பு 506

எழுத்தே தனித்தும் இணைந்தும் 167

கூறிய இலக்கணம் குறைபாடின்றி 248

சொல்லும்பொருளும் சுவைபட நிறீஇ 507

பன்னீருயிரும் கதநபம எனும் 112

மூன்றடி முதலா ஏழடிகாறும் 443

வித்தார கவியை விளம்புங் காலை 509

5. உவமான சங்கிரஹம்

எள்ளும் குமிழும் இலவு அலர் காம்பும் 287

6. உவமான சங்கிரஹம் (செந்தமிழ்)

கொன்றைக்கனி கல்லார் மனமும் 551

செண்டு குமிழ்வார் கூடாரம் 563

தூணி விரவு தேன் பூவிரிபாளை 571

வல்லுச் சக்ரவாகம் மதன் 563

7. ஏழாமிலக்கணம்


| | |
|---|---|
| அகப்பொருள் காமம் புறப்பொருள்சமர் | 278 |
| அணியெனல் புலவோன் அறிவளவாமே | 613 |
| அறிந்த காரணம் மறைந்து மற்றவற்றை | 193 |
| ஆண்பெண் பலர்என ஒன்றுபல என | 182 |
| இளமைப் புலவோர்க்கிசையாதிகலி | 380, 660, 766 |
| இன்னம் ஒருக்கால் எழுத்துரு ஒருவன் | 465, 669 |
| உரிஞ்செனு மொழியை உரிஞ்ஞெனக் | 138 |
| உவமை அதனில் உள்ளபல் விகற்பம் அணிஇலக்கணத் தோற்றுவாய். | |
| எவ்வகைப் பெயரும் இலங்குதென் பொதியை | 193 |
| ஒருபொருளினுக்கே உள்ள பெயரை | 254 |
| ஒன்றலா மொழியில் பின்மொழி தொகுவது | 253 |
| கல்விப் பெரும்பயன் கருணை என்னும் | 684, 722 |
| குற்றெழுத்ததன்பின் குலவிய லகரந் | 151 |
| குற்றெழுத்தொன்றை முற்கொடு திகழ்ப | 139 |
| சுத்தம்பொலிந்து தோமற ஒழுகலின் | 660 |
| ணகர மீற்றுறு மொழிப்பின் கசப | 141 |
| தெய்வப் பத்தியிற் றிளையா வொருவன் | 655 |
| பழைய யாப்பெனினும் பண்பில தாயின் | 693 |
| பாவலர் புகழ்ந்தும் பாமரர் இகழ | 675 |
| புலமைத் தொழிலாற் பொருந்து மெய்ப்பயன் | 399,678 |
| மகரங் கசத வருங்கால் ஙஞந | 143 |
| மப்பின் வகரம் வரிலுரு விருந்துங் | 156 |
| மூடர் போற்ற முத்தமிழ்ப் புலவோர் | 674 |
| மெய்பதி னெட்டிடை ணமன யரல | 138 |
| யகரமொழிந்த வீற்றொற்றெதனொடும் | 128, 130 |
| யாப்பியல்பு உணரினும் எடுத்த வண்ணம் | 649, 678 |
| வகர வீற்றிற் கசதப ஞநவரின் | 122 |
| வண்ணப் பாநுவல் வாயின னேனும் | 354, 673 |
| வெண்பாக் கட்டளைக் கலித்துறை என்னும் | 433 |
| வேதமோடாகமம் விரித்துரைத்தானும் | 756 |

ழகர வீற்றொடு வல்லுயிர் புணர்கால் 135
ளகர வொற்றொடு தநவந்தொன்றின் 151

8. **சிதம்பரப் பாட்டியல்**

வான்இலகுநேர் குருவே நிரையாம் 248

9. **தண்டியலங்காரம்**

அற்புதம் சிலேடை யதிசயம் விரோதம் 576
குளகம் பலபாட்டொருவினை கொள்ளும் 511
மலைகடல் நாடு வளநகர் பருவம் 509
முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும் 511

10. **தொல்காப்பியம்**

அகர இகரம் ஐகாரம் ஆகும் 67
அகர உகரம் ஔகாரம் ஆகும் 67
அகரத் திம்பர் யகரப் புள்ளியும் 67
அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை 28
அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின் 25
அவற்றுள், கரமும் கானும் நெட்டெழுத்திலவே 60
இகர யகரம் இறுதி விரவும் 28
உஊ ஒஓ ஔஎன இசைக்கும் 9
உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை 574
உவமப் பொருளை உணருங் காலை 543
ஐகார ஔகாரம் கானொடுந் தோன்றும் 60
ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் 188
ககார ஙகாரம் முதல்நா அண்ணம் 18
கடிசொல் லில்லை காலத்துப் படினே 112
கிழக்கிடு பொருளோ டைந்தும் ஆகும் 608
சகர ஞகாரம் இடைநா அண்ணம் 20, 21
டகர ணகாரம் நுனிநா அண்ணம் 22, 23
நுனிநா அணரி அண்ணம் வருட 23
மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் 318
மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே 15
யரழ என்னும் மூன்று முன்னொற்ற 124

11. தொன்னூல் விளக்கம்
பால்எனக்கூறில் நெடில்பெண் மற்றுயிர் 94

12. நன்னூல்
அஆ எஒவ்வோடாகு ஞம்முதல் 21
அடிநா வடியண முறயத் தோன்றும் 28
அண்ண நுனிநா வருட ரழவரும் 23
அம்மு னிகரம் யகர மென்றிவை 119
அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி 647
அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே 575
ஆயிர முகத்தா னகன்ற தாயினும் 523
ஆவி ஞணநமன யரலவ ழளமெய் 138
இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும் 158
எதிர்மறை சிறப்பையம் எச்சம் முற்றளவை 269
களிமடி மானி காமி கள்வன் 652
குறிலணை வில்லா ணனக்கள் வந்த 146
குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம் 165
ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும் 127, 128
ணனமுன் இனம்கச ஞபமய வவ்வரும் 128, 131
ணனமுன்னும் வஃகான் மிசையுமக்குறுகும் 156
தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந் 122
தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும் 139
தானம் முயற்சி அளவு பொருள்வடிவு 14
தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும் 521
நுந்தம், எம்நம் மீறா மவ்வரு ஞநவே 147
பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி 194
பழையன கழிதலும் புதியன புகுதலும் 693
பொருளிடங் காலம் சினைகுணந் தொழிலின் 194
பொழுதொடு சென்று வழிபடன் முனியான் 647
மம்முன் பயவ மயங்கும் என்ப 130
மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும் 143, 149
மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும் 519
யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும் 132,133,135
ளமுன் கசப வயவொன்றும்மே 134
வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் 261
வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே 266

னலமுன் றனவும் ணளமுன் டணவும் 141

13. பன்னிரு பாட்டியல்

மலையே யாறே நாடே ஊரே 600
மூவசை எண்சீர் கணம்என மொழிந்தனர் 248

14. பொருத்த விளக்கம்

ஆவி யீராறும் அடங்கன் மெய்யும் 94

15. முத்து வீரியம்

அ ஆ இறுதிமுன் அஆ வரினே 158
அ ஆ இறுதிமுன் இஈ வரினே 159
அ ஆ இறுதிமுன் உஊ வரினே 159
இ ஈ இறுதிமுன் இஈ வரினே 158
உ ஊ இறுதிமுன் உஊ வரினே 158
உயிர்முதல் முப்பதும் ஒன்றுஒன் றற்கினம் 87
கூடா ததனைக் கூடுவ தாகக் 612
யரலழ இடையுறின் ஆசெனப் படுமே 500

16. யாப்பருங்கலக் காரிகை

பண்பார் புறநிலை பாங்குடைக்
கைக்கிளை வாயுறை வாழ்த்து 427

17. யாப்பருங்கலம்

குறிப்பே ஏவல் தற்சுட்டு அல்வழி 423
சிந்தடி நான்காய் வருவது வஞ்சியது 436
தளைசீர் வண்ணம் தாம்கெட வரினே 423
தனிநிலை ஒற்றிவை தாமல கிலவே 92
நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை 438
பாதம் பலவரின் பஃறொடை வெண்பா 420

18. யாப்பருங்கல விருத்தி மேற்கோள்

ஆய்தம் தானே குறியதன் கீழ்த்தாய் 121
ஙஞண நமன வயலள ஆய்தம் 92

19. வண்ணத் தியல்பு

அருந்தமிழ்ச் சந்தத்து ஐயும் ஔவும் 13,60
இடையினத் தொற்றொடு உறழும் ஆய்தமே 14
உடுஇனத் தரசென மதியைக் கூறலும் 661
குறிலுடன் இடையினத்து ஒற்றும் மெல்லினத்து 460
தமது வேட்கையும் தன்மையும் விரும்பும் 465
தன்னவுந் தய்யவுஞ் சாற்றுஞ் சொற்களில் 463,466
நெடிலும் மெல்லினத் தொற்றுமவ் வினத்தொடு 471
நெடிலோ டிடையின மெய்யுங் குறிலுங் 471
பொய்மை என்பதும் வர்மம் என்பதும் 460
முந்திய பகுப்பின் கலையோர் நான்கில் 474
மூவினத் தெழுத்தினும் முழுமையைக் குறிக்கும் 469
வண்ணத் தளவில் வடமொழி மரூஉச் சொல் 163,476

20. விருத்தப்பாவியல்

நீளாத உயிரீற்றின் ஒரைந்து மாங்காய்பின் 434
முக்குறிலினிற்றளவு பத்தரைய தாகிவரு 434

21. வீரசோழியம் – உரை மேற்கோள்

உவமைக் குவமை வழுஎன மொழிப 615

22. வெண்பாப் பாட்டியல்

பகருங் காலைந்தேழ் பதினொன்று பன்மூன்று 304
புல்லும் மலையாறு நாடுஊர் புனைதார்மா 600

தொல்காப்பிய உரையாசிரியர்கள்

இளம்பூரணர் – தொல். எழுத்து. 7,10,14,15,28,154
நச்சினார்க்கினியர் – தொல். எழுத்து
7,10,14,15,28,92,154

நன்னூல் உரையாசிரியர்கள்

நாவலர் காண்டிகை – 10
சிவஞான முனிவர் விருத்தி – 10

## அறுவகை இலக்கண உரை

### மேற்கோள் இலக்கியப் பாக்களின் அகராதி

(முழுப் பாடல்களாகக் காட்டப்பெற்றவை மட்டும்)

(எண்: நூற்பா எண்)


1. **அபிராமி அந்தாதி**

உதிக்கின்ற செங்கதிர் 540

2. **அருணகிரிநாதர் புராணம்**

சிந்தெனும் கடலில் 769
சுருக்கிடில் விளங்கிடாது 698

3. **அருளாட்சி**

அருநோன்பு 635
ஊனுண்டு விற்பான் 639
எந்த நலம் இல்லார் 772

4. **கந்தநாயகமாலை**

குராங்கழல் சூட்டி 503

5. **கந்தரநுபூதி**

ஆடும் பரிவேல் 437

6. **கம்பராமாயணம்**

அம்மா ணகருக் 438
உலகம் யாவையும் 437
குமுத னிட்ட 249

7. **காஞ்சிப்புராணம்**

விதி வழாத 439

8. **குமாரபுரி மும்மணிக் கோவை**

குருவென உலகில் 404

9. குறுந்தொகை

மன்னுயிர் அறியாத் 623

10. குன்றக்குடிக் கலம்பகம்

உண்டுண்டு துயின்றெழு 439
என்றற்கனை முதலாம் 429
யாமெமதெனும் 410

11. கொக்கோகம்

எல்லா உலகும் 280

12. கௌமார முறைமை

தொட்டஉபாசனை 678

13. சதக உந்தி

தற்சமயம் ஒன்று 395

14. சத்திய சூத்திரம்

சீரருள் விழைவோன் 347
சுத்த பூசை 342
தெய்வம் கண்ணெதிர் 668
வேதம் சொல்லினும் 347

15. சிவஞான தீபம்

ஓடல் நடந்திடல் 389
தோல் எலும்பு 389

16. சிவப்பிரகாச விகாசம்

இயங்கும் உயிர் 7

17. சென்னைக் கலம்பகம்

அரிய சமயங்கள் 419
மன்னவர் முதற் 409

18. ஞாயிறு ஆயிரம்

குந்தியங் கொருதினம் 439
தவளவாரண 439
பொற்றுயரால் 425

19. ஞானவந்தாதி

உத்தமத் துத்தம 395

20. தமிழலங்காரம்

அத்தனை யொத்துத் 672
ஈரம் பொருந்தத் 737
எப்புவனத் தெக்குலத் 742
தமிழ்உணர் பாவலன் 705
வெங்கனற் கோப 741

21. தனிப்பாடல்

ஆற்றங்கரையின் 225
கண்டாயோ மீனவா 713
சுந்தரஞ்சேர் 292,428
பூவேந்தர் முன்போல் 770
மற்கொண்ட திண்புயத்தான் 782
மன்றலங்கோதை 225
வாவி உறைநீரும் 623
விரகரிருவர் 708
வில்லம்பு சொல்லம்பு 779
வேதாளஞ் சேருமே 760

22. திருக்குறள்

அகரமுதல 423
அச்சம் உடையார்க் 636
அஞ்சுவது அஞ்சாமை 652,695
அணங்குகொல் 275
அருளல்லதியா தெனில் 423

அவிசொரிந்து ஆயிரம் 268,347
அளவின்கண் நின்றொழுகல் 652
அறிவினா லாகுவதுண்டோ 524
அறிவினுள் எல்லாம் 652
உலகத்தா ருண்டென்பது 701
உற்றநோய் நோன்றல் 633
ஐயுணர் வெய்தியக் கண்ணும் 668
ஒன்றாக நல்லது 342
ஓர்ந்து கண்ணோடாது 636
கதங்காத்துக் 652
கற்றதனாலாய 753
கற்றீண்டு 639
காட்சிக் கெளியன் 636
குணம் நாடிக் 757
கையறி யாமை யுடைத்தே 652
கொலையின் கொடியாரை 636
சமன்செய்து சீர்தூக்கும் 760
சிறப்பீனும் 688
செயிரிற் றலைப்பிரிந்த 690
செருக்கும் சினமும் 636
தம்மின் பெரியாரை 636
தெய்வத்தான் ஆகாதெனினும் 629
தொட்டனைத்தூறும் 261
நுண்ணிய நூல்பல 652
புறந்தூய்மை 633
மற்றும் தொடர்ப்பாடு 387
மேலிருந்தும் மேலல்லார் 354
வில்லேருழவர் பகை 651
வெண்மை யெனப்படுவது 652

23. திருநாகைக் காரோணப்புராணம்

விடரும் பழியும் 493

24. திருப்புகழ்

தீராப் பிணிதீர 475

25. திருப்பேரூர்க் கலம்பகம்

ஆரமைந்தவிர் 436

தாதிமாரை 441

பொறைமதி 440

வாய்ந்த பேரையூர் 436

26. திருமால் ஆயிரம்

கோணாமலீபவர் 432

மஞ்சாரும் நெடுங்கோல 426

27. திருவரங்கத்தந்தாதி

தருக்காவலா என்று 689

28. திருவருட்பயன்

இறைசக்தி பாசம் 195

நற்குஞ்சரக்கன்று 783

29. திருவள்ளுவ மாலை

நாடா முதல்நாள் 715

30. திருவாமாத்தூர்ப் புராணம்

கள்ளமின்றிய திருவருட் 438

31. திருவிளையாடற்புராணம்

அரசன் உட்கிடை அறிந்திலர் 764

32. திருவெண்பா

சொல்விற்பனமுடைய தொண்டர் 447

33. தொல். பாயிர விருத்தி. முனிவர்

எழுத்தறியத் தீரும் 688

34. **நல்வழி**
சேவித்தும் சென்றிரந்தும் 703
35. **நாலடியார்**
களர்நிலத்துப் பிறந்த 754
36. **நீதிநெறிவிளக்கம்**
பழமை கடைப்பிடியார் 681
37. **பதிக உந்தி**
ஓங்கார வித்தாம் 395
38. **பழமொழி நானூறு**
புலம்மிக் கவரைப் 755
39. **பழனித் திருவாயிரம்**
அயில்வேலெடுத் 434
அரியும் சிவனும் 335
அவமிருத் தோராயிரம் 417
சரவணத் தடத்து 440
சற்குருவா 443
செந்தமிழ்ப் பாடற் 432
சென்னியாறுடைச் 439
மாயன் புகழ 429
வானமங்கை 427
40. **பழனி வெண்பாவந்தாதி (மாம்பழம்)**
என்னாலினிச் 698
41. **பாரதியார் கவிதைகள்**
சின்னஞ்சிறுகிளியே 452
சுட்டும் விழிச் சுடர்தான் 452
தீராத விளையாட்டுப்பிள்ளை 452
பக்தியினாலே 452
42. **புலவர் புராணம்**
அன்னவன் நாவினிலிருந்து 740
ஆன்ற முப்பொறி 234
இருந்ததற்கொருபாட்டு 510,698
எண்ணில்பல் பவத்து 676

கண்ணிகர் மெய்யும் 705
கருநாடதேய 440
கோவையுமுலாவு 437
சித்தியொடு கல்வி 667
செத்தவர்மீண்டெழச் 675
தில்லையம்பதிச் 692
நாற்பத்தொன்பது 724
பொருத்தமாதிய 234
மற்றவெற்பின் 346
வரைதொறும் நடம் 776
வாக்கியலுமொரு 744
வாக்குவலி வெகுவாகப் 696
வேம்பத்தூர்ப் பனவர் 509

43. பெரிய திருமொழி
தாந்தம்பெருமை 437

44. பேரானந்த சித்தியார்
நன்மை தீமை 396

45. மயிலாசலக் கலம்பகம்
மலியுங் கருணை 441
வஞ்சமெலாந் 429

46. மனுநெறித் திருநூல்
ஆர்க்கும் மணி 627
ஆன்ற ஒழுக்கத்து 629
ஈசன் கொடுக்கு 632
காரணமாம் 694
கொலைமுதலாந் 628
வண்ணக்கவிப் 634
வேதம் கொல்வேள்வி 635

47. மாறன் பா. பாவினம்
இவ்வுலகத்தின்பம் 419
கண்ணனருள் பெற்றார் 419

48. முசுகுந்த நாடகம்
சித்திரவல்லி வந்தாள் 451

49. முத்தமிழ்ப்பாமாலை
ஆளாம் அவருள் 404

50. முருகதாசரநுபூதி
மற்றோ ருடலிற் 649

51. யாப்பருங்கலக்காரிகை உரை
வந்துநீசேரின் 423

52. வண்ணமஞ்சரி
சக்திவேல்புனை 482

53. விநாயக புராணம்
மாடக முறுக்கி 434

54. வில்லி பாரதம்
நீதியிலா நெறி 437

உரை நடை இலக்கியம்

1. சத்திய வாசகம்
எல்லாச் சமயமும் 393
ஒருவன் இலட்சாதிகாரி 632,753
ஓர் அரசனுக்குப் 393
கல்வி என்பது 465
சகலலோகங்களிலும்உள்ள 393
தெய்வத்தை மனத்தாலும் 668
தெய்வம் சருவவல்லபம் 668

வடமொழி மேற்கோள்கள்

1. யோக சிகோபநிஷத்
அகாராதி 7
அக்ஷரம் 7
தஸ்யாம் 7
ப்ராணேனச 7
ஹ்ருதயே 7

2. ஸ்ரீதத்வ நிதி
குந்தேந்து ஸங்க 540
ஸ்ரீதர: புண்டரீகாப: 540

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 10 | 22 | நலிலும் | நலிலும் |
| 12 | 15 – 16 | தெரிந்தவர்ளாகிய | தெரிந்தவர்களாகிய |
| 19 | 13 | அறி | அறிஞர் |
| 20 | 19 | வலம்து | வலத்து |
| 20 | 21 | அமைத்ல் | அமைத்தல் |
| 32 | 15 | திற் | அதிற் |
| 34 | 21 | நதன் | அதன் |
| 35 | 2 | டுவிலுள்ள | நடுவிலுள்ள |
| 44 | 19 | வனளத்திடல் | வளைத்திடல் |
| 55 | 32 | சுழியறற் | சுழியற்ற |
| 58 | 6 | அவ்வலருக்கு | அளவலகுக்கு |
| 59 | 16 | ங்குவழகின்றன் | வழங்குகின்றன |
| 60 | 26 | என்றும் | என்னும் |
| 68 | 28 | றில் | குறில் |
| 71 | 1 | சுட்டெழுத்து | கூட்டெழுத்து |
| 80 | 16 | யாகபுறத் | யாப்புறத் |
| 85 | 5 | புகும்எனம் | புகும்எனச் |
| 88 | 1 | ஒருவர்க் | ஒருவர்க்கு |
| 88 | 28 | தாரணம் | உதாரணம் |
| 95 | 4 | துடனஉயிர் | துடன்உயிர் |
| 97 | 1 | துணிந்தவன் | துணிந்தவண் |
| 101 | 19 | பெய்தாள் | பெய்தான் |
| 137 | 26 | கண்டுள | கூண்டுள |
| 161 | 19 | அனணந்தும் | அணைந்தும் |
| 168 | 26 | அலல்ன | அல்லன |
| 182 | 7 | அவற்றன் | அவற்றின் |
| 235 | 18 | காண்டல் காண் | காண்டல் |
| 235 | 24 | எடுத்த | எடுத்து |
| 239 | 27 | பில்புலிங்க. | பிரபுலிங்க. |
| 243 | 2 | சிவபெருமனை | சிவபெருமானை |

| | | | |
|---|---|---|---|
| 249 | 19 | மாணக்கருக்கன்றி | மாணாக்கருக்கன்றி |
| 261 | 1 | நிறுத் | நிறுத்த |
| 261 | 7 | உணர்வாய் | உணர்வார் |
| 263 | 28 | அடிமை | அடியை |
| 268 | 23 | ஆவ்துமுன் | ஆவதுமுன |
| 269 | 12 | பயமின்றிதலானு | பயமின்றாதலானும் |
| 270 | 3 | சில்பரனே | சிற்பரனே |
| 270 | [illegible] | சீர்களாளியன்ற | சீர்களானியன்ற |
| 271 | 22 | நிறையசை | நிரையசை |
| 276 | 28 | சிதம்பரம் | சிதம்பரப் |
| 277 | 1 | குழுபலினாய் | குழலினாய் |
| 288 | 21 | நிலை பிறழ்வ | நிலை பிறழ்வு |
| 289 | 2 | ஜந்து | ஐந்து |
| 295 | 12 | மிக்கதாரு | மிக்கதாகு |
| 308 | 29 | சரணம் | சரணமும் |
| 313 | 23 | இக்சூத்திரத்தில் | இச்சூத்திரத்தில் |
| 319 | 21 | முற்கூறி | முற்கூறிய |
| 336 | 14 | என்றதார்ல் பல | என்றதால் பலர் |
| 358 | 28 | மதுக்கஅ | மதுக்களி |
| 372 | 6 | டம் நிலாவிய | திடம் நிலாவிய |
| 391 | 28 | வியப்பு | வியல்பு |
| 420 | 18 | சிறுபொமுது | சிறுபொழுது |
| 422 | 30 | திருக்ருறள் | திருக்குறள் |
| 440 | 9 | ஜம்புலனாலும் | ஐம்புலனாலும் |
| 453 | 12 | சிமசுதானப் | சமத்தானப் |
| 464 | 19 | கூறுகிறார் | கூறுகிறோம் |
| 471 | 14 | ஒருவனை | ஒருவரை |
| 475 | 16 – 17 | கரண புவன போகங்களுக்கும் | கரண போகங்களுக்கும் |
| 478 | 22 | சிறப்புடையவனாகவே | சிறப்புடையவராகவே |
| 487 | 23 | அடிமையாக்குவதி | அடிமையாக்குவது |
| 487 | 24 | என்பதுலுள்ள | என்பதிலுள்ள |
| 516 | 32 | கருத்து என்பது. | என்பது கருத்து. |
| 538 | 27 | கழறுதல் றையே. | கழறுதல் முறையே. |